THE HON. SRI V. RAMAIAH : Sir, now the details are not with me. But I am sure that that certificate will definitely give some sort of a clearance certificate on the applicant's eye-sight, whether it is good enough for the purpose of granting him the licence.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : கார், லாரி, பஸ் டிரைவர்களுக்கு கண் கோளாருக இருப்பதால் மாத்திரம்தான் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று அரசாங்கம் கருது கிறதா? அல்லது திருட்டுத்தனமாக மதுவைக் குடிப்பதாலும் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று கருதுகிறதா?

THE HON. SRI V. RAMAIAH : கண் கோளாறினல் விபத்துக் கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா என்று மூலக் கேள்வியில் கேட்கப்பட்டிருக் கிறது. கண் கோளாறினல் மட்டுமன்றி எத்தனையோ வேறு பல கோளாறுகளினலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : சில டிரைவர்களுக்கு, பின்னல் வரும் வாகனங்கள் அடிக்கும் ஹார்ன் சத்தம் கேட்ப தில்லை. ஆகவே இவர்களுடைய காதுகளையும் பரிசோதனை செய்ய அரசாங்கம் உத்தேசிக்குமா?

THE HON. SRI V. RAMAIAH : கண், காது, கை, கால் இவை களையெல்லாம் பரிசோதித்துத்தான் இந்த சர்டிபிகேட் கொடுக் கப்படுகிறது என்று ஏற்கனவே சொன்னேன்.



7th December 1959]

SRI R. KRISHNASAMI REDDIAR : சம்பந்தப்பட்ட அப்ளி கேஷன் பாரத்திலேயே கண், காது, ஆகியவைகள் பற்றிய கேள்வி களுக்கு பதிலளிக்க வேண்டியிருக்கிறது என்ருலும், பீரியாடிகல் டெஸ்டாக, ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு ஒரு முறை பரிசோதனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI V. RAMAIAH : இந்தப் பிரச்னையை நன்ருகப் பரிசீலித்திருக்கிரோம். டிரைவர்கள் கட்டாயமாக ஒரு வருடத் திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையோ பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்று முடிவு செய்தால், அதனல் பல கஷ்டங்கள் ஏற்படக்கூடும். இப்போதுள்ள முறைப்படியே, எந்த ஒரு டிரைவரையோ கண்டக்டரையோ பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் இருந்தால், சம்பந்தப் பட்ட அதிகாரிகள் அதைத் தெரிவித்ததன் பேரில் கட்டாயப் பரிசோதனை செய்யமுடியும். இப்போதுள்ள முறையை மாற்றி யமைத்தால் பல கஷ்டங்கள் ஏற்படும் என்று கருதுகிறேன்.

SRI A. VEDARATHNAM : இந்த டிரைவர்கள் பர்ஸ்ட் எய்ட் பரீட்சை பாஸ் பண்ண வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறதா? அதற்காக அவர்களிடமிருந்து ஏதாவது கட்டணம் வசூலிக்கப் படுகிறதா? இது அவசியம்தாஞ என்று அரசாங்கம் ஆலோசிக்குமா?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் இதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI A. GOVINDASAMY : சம்பளத்திற்குக் கார் ஓட்டும் டிரை வர்களுக்கு மட்டும் இந்தச் சட்டம் அமல் நடத்தப்படுகிறதா, அல்லது இது சொந்த கார்களை ஓட்டுபவர்களுக்கும் அமல் நடத்தப்படுகிறதா?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது என்னிடமுள்ள தகவலிலிருந்து, இது ப்ரொபெஷனல் டிரைவர்களுக்கு மட்டும் தான் என்று தெரியவருகிறது. மற்றவர்களுக்கும் இந்த விதி அமல் நடத்தப்படுகிறதா என்பதை, கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி யாக போட்டால், கவனித்து பதில் சொல்ல முடியும்.

*Deep-sea fishing station*

* 20 *Q*.—SRI M. P. SARATHI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் ஆழ்கடல் மீன் பிடித்துறை (Deep-sea fishing station) ஏற்படுத்துவதுபற்றி மத்திய அரசாங்கத்திடம் உதவி கோரப்பட்டதா?

(ஆ) அந்தக் கோரிக்கை எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

[7th December 1959

SRI M. P. SARATHI : இத்துடன் நான் இன்று நான்கு கேள்விகள் போட்டிருக்கிறேன். ஒவ்வொரு கேள்வியின்பதிலும் ஆங்கிலத்திலேயே இருப்பதால் என்னால் ஒரு உப கேள்வி கூட போட முடியவில்லை. எனவே இனிமேல் மூலக் கேள்விகளுக்கு தமிழிலேயே பதிலளித்தால் உப கேள்விகள் போட முடியும். இதை சர்க்கார் ஆலோசிக்குமா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் என்னிடம் கேட்கிறாரா கனம் அமைச்சரிடம் கேட்கிறாரா என்று தெரியவில்லை. இதை கனம் அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

*Cases of murder in Tiruppattur taluk*

* 22 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of cases of murders reported in the Tirupattur taluk, North Arcot district, in 1958;

(b) the number of persons who have been charge-sheeted; and

(c) the number of murderers still undetected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 19.

(b) 34.

(c) Two cases were referred as undetectable after investigation and no information could be had regarding the number of murderers in these cases.

SRI A. A. RASHEED : Sir, for how long these murders remain undetected and may I know the reason for not apprehending the culprits?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, if the crimes are not detected for a time, they are undetected for ever.

*Cultivation of rubber trees*

* 23 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் ரப்பர் மரங்கள் மேலும் அதிகமாக உற்பத்தி செய்ய உத்தேசம் உண்டா ?

(ஆ) எங்கெங்கே ?

(இ) தனியார் துறையிலா அல்லது சர்க்காராலா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) In Kanyakumari District.

(c) Will be done departmentally by the State Forest Departmen



7th December 1959]

*Renovation of Srirangam temple*

* 28 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any amount has been allotted for renovation of Srirangam temple; and

(b) if so, the amount allotted for the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

* 29 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the total amount spent on the renovation of Srirangam temple?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Rupees two lakhs, seventy-three thousand eight hundred and sixty-seven and fifty naye Paise only.

SRI A. A. RASHEED : Sir, may I know the total amount collected from the public for the renovation of this temple?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, under various heads, the collections amounted to Rs. 1,65, 849·23 nP.

SRI A. A. RASHEED : Sir, is it the policy of the Government to renovate old temples only with public funds and not from the funds available with the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is so, Sir.

SRI A. GOVINDASAMY : அரசாங்கம், ஸ்ரீரங்கம் கோவிலில் ஏற்பட்ட விபத்திற்கு யார் காரணஸ்தர்கள் என்று கண்டுபிடித்து ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *அது ஒன்றும் சரியாகக் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை.

MR. SPEAKER : Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

IV.—ANNOUNCEMENTS

(i) NOMINATION OF MEMBERS TO THE COMMITTEE ON RULES.

MR. SPEAKER : Under rule 229 (1) of the Madras Legislative Assembly Rules, I nominate the following members to be members of the Committee on Rules :—

1. The Hon. Sri C. Subramaniam.
2. The Hon. Sri M. Bhaktavatsalam.
3. Sri B. Bhaktavatsalu Naidu.

[Mr. Speaker] [7th December 1959

4. Sri V. K. Ramaswamy Mudaliyar.
5. Sri M. Kalyanasundaram.
6. Sri M. P. Subramaniam.
7. Sri S. Pakkirisami Pillai.
8. Sri P. S. Chinnadurai.
9. Sri R. Srinivasa Iyer.
10. Sri T. S. Ramaswamy.
11. Sri M. Jagannathan.
12. Sri S. Lazar.
13. Sri T. Sampath.
14. Smt. T. N. Anandanayaki.

The Speaker will be the ex-officio Chairman of the Committee.

## V.—CALLING ATTENTION TO THE SEA EROSION AT MANAPAD IN TIRUCHENDU TALUK

MR. SPEAKER: Now we will take up motion under rule 41 given notice of by the hon. Member, Sri M. S. Selvarajan, who will call the attention of the Hon. Minister for works to a matter of urgent public importance, viz., the sea erosion at Manapad in Tiruchendur taluk.

*SRI M. S. SELVARAJAN: கனம் சபாநாயகர் அவர்களே, மணப்பாடு என்பது திருநெல்வேலி ஜில்லாவிலே கடற்கரை ஓரமாக இருக்கக் கூடிய ஒரு சிறு பட்டணம். ஒரு அழகிய ஊர். மீனவர்கள் அதிகமாக வாழக் கூடிய பகுதி. கடல் கடந்து வர்த்தகம் செய்யக் கூடிய பலர் இருக்கும் இடம். புனிதமான தேவாலயங்களும், கடற்கரை ஓரமாக இருப்பதால் தீபஸ்தம்பமும் இருக்கக்கூடிய இடம். கூட கோபுரங்களும், மாட மாளிகைகளும் உள்ள இந்த ஊரில் கடந்த ஆறு வருஷங்களுக்கு முன்பு கடலரிப்பால் உபத்திரவம் ஏற்பட்டது. அதன் காரணமாக சில பெரிய வீடுகள் இடிந்து தரை மட்டமாயின. அப்போது தாற்காலிகமாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் பின்னர் நுணுக்க அறிவாளிகளைக் கொண்டு பரிசிலனை செய்யப்போவதாக தெரிவிக்கப்பட்டது. மணப்பாடு மாத்திரமல்லாமல், தனுஷ்கோடி, திருச்செந்தூர், உவரி போன்ற இடங்களிலும் கூட நிரந்தரமாக கடலரிப்பைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க எண்ணியதுண்டு. கடலோரமாக உள்ள இடங்களில் சேதம் விளைவதைத் தடுத்து அங்குள்ளவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் அபிலாஷையாக, கடமையாக, இருக்கிறது. அதன் பின்னர் வருஷாவருஷம் குறிப்பிட்ட மாதங்களில் இந்த கடலரிப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதன் காரணமாக ஆரம்பத்தில் மூன்று வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம், இப்போது 20



7th December 1959] [Sri M. S. Selvarajan]

வீடுகள் அழிந்து போகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் இந்த கடலரிப்பால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்து உத்திரவு பிறப்பித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இது நிச்சயமாக நிரந்தரப் பரிகாரமாக இருக்க முடியாது. ஏனென்றால் ஒரு பர்லாங் தூரம் அல்லது இரண்டு பர்லாங் தூரம் கடல் தண்ணீர் ஊருக்குள் அரித்துக் கொண்டு வந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே பயத்தோடு ஜீவித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள மக்களை அந்த இடத்திலிருந்து அகற்றி வேறு மேடான இடத்தில் குடியமர்த்தி விடுவதென்பது பரிகாரமாக இருக்க முடியாது. நாளாவட்டத்திலும் ஊர் முழுவதையுமே விழுங்கிவிடக்கூடிய அபாய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் தேவை. வருஷாவருஷம் இருந்து வருவது போன்று இரண்டு மாதங்களுக்கு முன்பு இருந்தது. அவசரம் காரணமாகத்தான் இந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் விக்டோரியா அவர்கள் பெயரால் ஒரு டன் நிறை உள்ள சுமார் 200 இரும்பு உத்தரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பாலம் உடைந்து விட்டதன் காரணமாக, அந்த உத்தரங்களெல்லாம் வீணாக, பிரயோசன மற்று இருக்கின்றன. இந்த உத்தரங்களையும் பயன்படுத்தி நிரந்தரமாக ஒரு நல்ல ஏற்பாடு செய்து கடலரிப்பு உபத்திரவத்தைத் தவிர்க்க அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இதற்கு ஒரு பரிகாரம் காண்போம் என்ற நம்பிக்கையோடு உரையை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: Mr. Speaker, Sir, in October 1954, there was sea erosion in Manapad village, Tiruchendur taluk, Tirunelveli district, and it damaged certain dwelling houses. Representations were received requesting Government to take immediate steps for preventing the erosion. An expenditure of Rs. 1,130 was sanctioned for preventing sea erosion and carrying out emergent repairs to the coast in Manapad village. It was reported then, that the danger of sea erosion had definitely receded and that, there was no imminent danger from sea erosion. In September 1955, the Kulasekarapattinam Panchayat Board reported that sea erosion had started again in Manapad in the monsoon season. The matter was examined and an expenditure of Rs. 6,330 was sanctioned for the protection of a stretch of 600 feet of coast line in Manapad village. Again in 1956 and 1957, an expenditure of Rs. 8,825 was sanctioned to carry out protective measures. It was reported that waves were just nearing the locking arrangements on 19th September 1958, that there was not likely to be immediate danger and that all steps were being taken to solve the problem in a permanent way.

As sea erosion had taken place also at Dhanushkodi, Tiruchendur, etc., a view was taken that the question of tackling sea erosion effectively at all places including Manapad might be considered after the results of investigation at Dhanushkodi carried

[Sri P. Kakkan] [7th December 1959

out by the Government of India had become available. The Government of India were also requested in December 1958 to state whether any final decision on the question of tackling sea erosion at Dhanushkodi was taken. Their final decision in the matter is awaited.

In December 1958, the Chief Engineer, Public Works Department (General) was requested to report very urgently whether any repairs could be carried out to the temporary barriers provided to prevent sea erosion, if there was to be delay in the execution of the scheme for the provision of permanent protective measures. He submitted in March 1959 an estimate for Rs. 1,120 for protecting a distance of 300 feet of the coast line and it was also sanctioned. The Collector of Tirunelveli also considered that if further sea erosion was not prevented, the houses would collapse and that protective measures were necessary to safeguard the interests of the fishermen community. He, therefore, submitted an estimate for Rs. 68,530 for undertaking protective works. This included repairs to existing temporary barriers and provided new protective row of piles. A view was taken that there will be no guarantee that the present outlay will arrest sea erosion permanently and that it will be cheaper to shift the village-sites of the fishermen. Thereupon the Collector has reported that the Chief Minister visited Manapad in September 1959 during his tour. It has been suggested that even if the sites of the fishermen were shifted inland, there will be no guarantee that the sea will not erode further and that it is better to execute suitable protective works of lasting nature even though the initial cost is high, so that the sea erosion is stopped to the extent that the waves will not damage the houses. The exact nature of protective works has to be decided by high technical experts. In view of the above, the estimate for Rs. 68,530 was considered insufficient for the purpose and that it has to be revised to suit the changed circumstances. The Chief Engineer (General) was, therefore, asked to take up the matter immediately. He has now reported that in view of the double rows of protective piles (provision of new ones along water front for 15 feet further into the sea for a length of 1,700 feet and repairs to old ones) now proposed in the estimate for Rs. 68,530 the present protective works will serve the purpose till permanent remedial measures are provided. The permanent protective works will have to be in the form of a sea wall which will cost a few lakhs of rupees. He has recommended that the above interim protective measures may be carried out.

The Kulasekarapattinam Panchayat Board has reported in October 1959 that two more houses have collapsed due to sea erosion at Manapad. With a view to rehabilitate the families already affected the Chief Engineer has recommended the Collector's proposal to acquire land and constructed 9 houses at a total cost of Rs. 7,550. The question of providing protective measures to prevent sea erosion at Manapad is seriously engaging the attention of the Government and they will take suitable action in the matter.



IV.—ANNOUNCEMENTS—*cont.*

(2) PANEL OF CHAIRMEN

MR. SPEAKER : I nominate the following hon. Members to be the Panel of Chairmen for the current session :—

Srimathi Hemalatha Devi.

Sri T. Karia Gounder.

Sri A. V. P. Periavalaguruva Reddi.

Sri P. S. Santhanam.

Sri K. R. Nallasivam.

Sri T. S. Ramaswamy.

VI.—PRESENTATION OF STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1956-57.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I rise to present the statement of Demands for Grants for Excess Expenditure in the year 1956–57. The appropriations originally provided for in the Budget Estimates cannot in the nature of things be expected to tally entirely with the actuals, and excesses under some grants are inevitable. The total of the excesses of expenditure under voted grants which is now sought to be covered by legislative approval is Rs. 238 lakhs roundly against a total final appropriation of rupees 17,712 lakhs. The explanatory note and the annexure appended to the statement of demands give in full the reasons for the excess in each case. The Public Accounts Committee constituted for the year 1958–59 at its meetings held during the course of the year examined the reasons for the excesses and have recommended in their Report published in April 1959 that demands for grants to cover the excess expenditure over the final sanctioned appropriation under each grant might be presented to the Legislature.

Sir, I commend for the acceptance of the House the statement of Demands for grants for excess expenditure in the year 1956–57.

VII. PRESENTATION OF SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1959-60.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I rise to present the Second Supplementary Statement of Demand for Grant for further expenditure for 1959–60. The detailed explanatory statement of demand for grant is placed on the table of the House.

As Members are aware, this Government have undertaken a substantial programme of expansion of co-operative credit during the period of the Second Plan. Already over 90 per cent of the villages in the State and 40 per cent of the rural population have been covered by co-operatives which are supplying well over Rs. 16 crores of agricultural credit. The State Co-operative Bank and the Sentral Banks have been experiencing difficulties arising out of lack of borrowing power necessary to implement such a substantial programme of credit expansion. To strengthen the share capital

[Sri C. Subramaniam] [7th December 1959

of the Co-operative financing institutions, the Government have participated in their share capital to the tune of Rs. 46 lakhs by obtaining loans from the National Agricultural Credit (Long-term Operations Fund) of the Reserve Bank of India. This year, the State Co-operative Bank and the District Central Banks have applied to this Government for share-capital investment to the tune of Rs. 120 lakhs. Having regard to the additional borrowing power needed for financing the credit expansion programme undertaken by this Government, the State Government have applied to the Reserve Bank of India for a loan of Rs. 120 lakhs for the purpose of participation in the share capital. The Reserve Bank of India has sanctioned this amount. It is proposed to utilise this in the following manner :

(1) *Rs. 40 lakhs* :

Rupees 25 lakhs out of Rs. 40 lakhs would be utilised to purchase share capital held by State Co-operative Bank in the Central Banks. The remaining Rs. 15 lakhs will be invested as fresh shares in the State Co-operative Bank. Once the transaction is put through, the State Government would hold shares worth Rs. 61 lakhs in the State Co-operative Bank.

(2) *Rs. 80 lakhs* :

Rupees 8 lakhs out of this amount will be utilised to purchase shares worth Rs. 8 lakhs held by the Central Banks in 80 large-sized banks. The remaining Rs. 72 lakhs will be invested as fresh share capital in the Central Co-operative Banks.

There is no provision in the budget to accommodate the expenditure to be incurred in this regard during 1959–60. Out of the total amount of Rs. 150 lakhs in the Contingency Fund, advances to the extent of Rs. 35 lakhs have so far been sanctioned for 'New Services' leaving a balance of only Rs. 115 lakhs. It will not, therefore, be possible to sanction an advance of Rs. 120 lakhs for this scheme from the Contingency Fund. Hence this Supplementary Estimate.

**With these few words, Sir, I commend the Supplementary Estimate for favour of acceptance by the House.**

## VIII.—POINT OF ORDER *RE* TRANSACTION OF OTHER BUSINESS AFTER THE GOVERNOR'S ADDRESS AND BEFORE THE DISCUSSION THEREON.

**SRI M. KALYANASUNDARAM : On a point of order, Sir. I am sorry I came a few minutes late. The debate on the Governor's address must have precedence over any other subject and this subject, viz. statement of demands for grants for excess expenditure in 1956–57 and second supplementary statement of expenditure for 1959–60, is not so urgent as to be included in to-day's agenda and that too before the discussion on the Governor's address has begun. The debate on Governor's address should have precedence and this subject could have waited.**



7th December 1959]

MR. SPEAKER : I have examined this question thoroughly. I have looked into the proceedings of both Houses of Parliament as well as those of Lok Sabha. I have myself anticipated this objection. It has been found from all proceedings that a mere introduction will in no way spoil the sanctity of Governor's Adddess. In the Lok Sabha the Prime Minister has once said that the whole country cannot wait for a discussion on the Governor's Address. Even in Lok Sabha this sort of motion has been allowed. I rule that this is in order. There is nothing wrong in it. The Hon. Minister has just introduced it. I myself wanted to say this. If only the hon. Member had waited for some time, I would have satisfied him.

Now we shall proceed with the Governor's Address. An hon. Member, Mr. R. Subramaniam will move that an humble address be presented to the Governor that the Members of the Madras Legislative Assembly thank him for the Address delivered to the Members of the Legislature on the 5th December 1959. That motion will have to be seconded. I give 15 minutes each for the mover and the seconder and 10 minutes each for every subsequent speaker. If later on any leader of a party wants to intervene, I will give him the customary 20 minutes. Many ledaers have told me that it is not desirable that they shoud speak on the last day. It is a laudable suggestion. Each party leader will have 20 minutes whenever they intervene and speak. Now Mr. R. Subramaniam will move his motion.

## IX.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

*SRI R. SUBRAMANIAM : *கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுக்கு வாழ்த்தை வழங்கும் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்—*

"That an humble address be presented to the Governor that the Members of the Madras Legislative Assembly thank him for the Address [a] delivered to the Members of the Legislature on the 5th December 1959."

*கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரை மிகச் சுருக்கமாக இருந்தபோதிலும் அதில் பல முக்கியமான விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. பருவ மழை, உணவுப் பிரச்னை, அதிக உணவு உற்பத்தி, கூட்டுறவு முறை, திட்ட வேலைகள், மின்சாரம், தொழில் உற்பத்தி, அடுத்த திட்டத்தில் நாம் முக்கியமாக எடுத்துக்கொள்ள வேண்டிய வேலைகள் ஆகியவைகளெல்லாம்பற்றி அவர்கள் குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றார்கள். இம்மாதிரி சில வேலைகளைப்பற்றி மட்டும் குறிப்பிட்டிருப்பதனால் மற்ற அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லையென்று அர்த்தம் அல்ல. கவர்னர் பெருமானுடைய உரையானது "பாலிசி ஸ்டேட்மெண்ட்" ஆக இருப்பதால் அந்த அளவுக்குத்தான் அவர்கள் எடுத்துச் சொல்லக் கூடும். அத்துடன் சபையில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லக்கூடிய வாதங்களுக்குக் கடைசியாக நமது நிதியமைச்சர் அவர்கள் பதில் அளிக்கப் போகிறார்கள்.*

[a] Printed as Appendix II on pages 115–118 infra.

அடுத்தபடியாக, கவர்னர் பெருமான் அவர்கள், நிர்வாகத்தை மேன்மேலும் முற்போக்குப் பாதையில் நடத்திச் செல்வதற்கு நமது ஒத்துழைப்பைத் தரும்படி ஆரம்பத்திலும் கடைசியிலும் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிறார்கள். நமது சபையிலே பலதரப்பட்ட கட்சிகள் இருக்கின்றன. பல கருத்து வேற்றுமைகளும் அவர்களுக்குள் உண்டு என்ற போதிலும், முக்கியமாக எந்த வித கருத்து வேற்றுமை இருந்த போதிலும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற கருத்தில் யாருக்கும் வேற்றுமை கிடையாது. சர்க்கார், மக்களுடைய நன்மைக்காக அவ்வப்போது பல திட்டங்களையும், கொள்கைகளையும் வகுத்து நம் முன் வைத்து அதை மக்களுடைய நன்மைக்காக பயன்படுத்துவதற்கு வழி வகைகளைச் செய்து வருகின்றது. அம்மாதிரி கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்கக் கூடிய காலங்களில் அந்தக் கொள்கைகளிலும் திட்டங்களிலும் எந்த விதமான குறைபாடும் இல்லையென்று சொல்லுவதற்கில்லை. குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும்போது நமது சர்க்கார் அவைகளை நீக்குவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறதென்பது நம் எல்லோராலும் வரவேற்கவேண்டிய விஷயம்.

12 noon. கடந்த ஆண்டில், பொதுவாக, நம்முடைய மாநிலம் முழுவதிலும் சட்டமும் ஒழுங்கும் நன்கு பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது என்று கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய திட்டங்களையும் கொள்கைகளையும் நல்ல முறையில் நடத்திச் செல்ல அமைதியான சூழ்நிலை வேண்டும். அராஜகம் இருந்தால் நம்முடைய திட்டங்களும் கொள்கைகளும் நாம் எப்படி வகுக்கின்றோமோ அந்த இடத்திலேயே நின்றுவிடுமே தவிர, நாம் முன்னேறிச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படாது. எனவே, நம்முடைய திட்டங்களையும் கொள்கைகளையும் வகுப்பது மட்டுமல்லாமல், நல்ல முறையிலே அவைகளை நடத்திச் செல்ல நல்லதொரு சூழ்நிலை நமக்குத் தேவையாக இருக்கிறது. அம்மாதிரியான சூழ்நிலை நமக்கு அமைந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதொரு விஷயமாகும். எனவே, இம்மாதிரியான சூழ்நிலையில் நம்முடைய வேலைகள் நல்ல முறையிலே முன்னேறி வருகின்றன என்பதை நான் சபையில் உள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்,

சாதாரணமாக மற்ற ராஜ்யங்களோடு நம்முடைய ராஜ்யத்தை ஒப்பிட்டுப் பார்ப்போமானால், திட்ட வேலைகளைப் பொறுத்தவரையில் நல்ல முறையில் முன்னேறி வந்திருக்கின்றன. நாம் திட்டத்திற்காக எவ்வளவு ரூபாய் செலவழிக்க வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தோமோ அதைவிட இப்பொழுது அதிகமாகவே நாம் செலவழிப்பதற்கு நமக்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு காரணம்—அன்னிய நாட்டுச் செலாவணி நெருக்கடியினால் மற்ற ராஜ்யங்கள் நல்ல முறையிலே வேலை செய்ய முடியவில்லை.—என்ற போதிலுங்கூட, நம்முடைய ராஜ்ய சர்க்கார் முன்யோசனையுடன் அன்னிய நாட்டுச் செலாவணி நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னதாகவே நம்முடைய பெரிய திட்டங்களுக்கெல்லாம்



வெளிநாட்டிலிருந்து மெஷின்கள் வரவழைப்பதற்கு ஆர்டர் கொடுத்திருந்தது. அவைகள் வரவழைக்கப்பட்டு, இப்பொழுது பெரியார் மின்சாரத் திட்டம், நமது சென்னை அனல் விஸ்தரிப்புத் திட்டம் இவைகள் நல்ல முறையிலே வேலை செய்துவருகின்றன என்பது நாம் எல்லோரும் சந்தோஷப்படவேண்டிய ஓர் விஷயம்.

கவர்னர் அவர்கள் தம்முடைய உரையை நல்லதொரு சூழ்நிலையில் ஆற்றியிருக்கிறார்கள். பருவ மழை நன்றாகப் பெய்திருக்கிறது. ஆனால், இந்த மழையைப் பொறுத்தவரையில் என்னவென்றால், எப்பொழுதும் சாதாரணமாக மழை இல்லாமல் இருக்கும்; ஆனால், பயிர்களெல்லாம் விளைந்து அறுவடைக்குத் தயாராக இருக்கும் தருணத்தில் மழை பெய்து விளைவைக் கெடுத்துவிடும். நாம் கணக்குப் போடும்போது, பொதுவாக வருஷம் பூராவிலும் சேர்த்து இந்த வருஷத்தில் இவ்வளவு மழை இருந்தது, நல்ல மழை இருந்தது என்று கணக்குப் போட்டுக்கொண்டு விடுவோம். ஆனால், இந்த வருஷத்தைப் பொறுத்தவரையில் அம்மாதிரியாக இல்லை. மழை பெய்ததோடு அல்லாமல், காலா காலத்தில், வேண்டிய அளவு, பயிர்கள் நன்றாக வளரக்கூடிய தருணத்தில், இந்த மழை பெய்திருக்கிறது என்பதுதான் மிக முக்கியமானது. இப்பொழுது பயிர்கள் எல்லாம் நல்ல முறையில் கதிர்கள் விட ஆரம்பித்திருக்கின்றன. ஆனால், இதே மழை இன்னும் தொடர்ந்து 15, 20 நாட்களுக்கப்பால் பெய்தால் விளைச்சல் கெட்டுவிடும். தற்போது மழையின் காரணமாக பயிர்கள் மிகவும் நன்றாக இருக்கின்றன. அத்துடன்கூட எந்த வருஷத்திலும் இல்லாத இந்த வருஷத்தில் நமக்குத் தண்ணீர் சப்ளை நிறைய கிடைத்துக்கொண்டிருக்கிறது. மேட்டூர் அணை கட்டிய காலத்திலிருந்து இதுவரையில் அது எப்பொழுதுமே நிரம்பியிருந்தது கிடையாது. ஆனால், இந்த வருஷத்தைப் பொறுத்தமட்டில் மேட்டூர் அணையில் தண்ணீர்த் தட்டு என்பதே இல்லாமல், திறந்துவிட்டபோது எவ்வளவு நிரம்பி இருந்ததோ அதே அளவு எப்பொழுதும் இருந்துகொண்டு வருவது வரவேற்கத்தக்க ஒரு அம்சம் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அமைதியான சூழ்நிலையில் பல நல்ல காரியங்களெல்லாம் நாம் செய்துகொண்டு வருகிறோம் என்று கவர்னர் பெருமான் தெரிவித்திருக்கிறார். நமது பிரதான தொழில்களான ஜவுளி, சிமெண்ட், சர்க்கரை, இலகு இன்ஜினீரிங் ஆகியவைகளில் நாம் நல்ல விதமாக முன்னேறியிருக்கிறோம் என்று அவர் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு அம்சம்.

இப்பொழுது நல்ல பருவ மழை பெய்து பயிர்களெல்லாம் நன்றாக இருக்கிறபடியால், இன்னும் சிறிது காலத்தில், சம்பா அறுவடை காலத்தில் விலை குறையும் என்று நாம் எதிர்பார்க்கலாம். பதினைந்து தினங்களுக்கு முன்னதாக தஞ்சை ஜில்லாவிலே ஒன்றரை மணங்கு நெல் கொண்ட மூட்டை ஒன்று ரூ. 22 ஆக இருந்தது. சமீபத்தில் நான் சென்னை வரக்கூடிய சமயத்தில்

ரூ. 19-க்கு இறங்கிவிட்டது. இப்பொழுது ரூ. 18½ ஆகியிருக்கும் என்று நான் நினைக்கிறேன். எனவே, விலையானது ஒரு சமயத்தில் இதற்கு முன்னதாக ஏறுமுகமாக இருந்தாலுங்கூட, இப்பொழுது இறங்குமுகமாகவே இருக்கிறதென்பதை நான் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உணவுப் பொருள்களின் விலை ஏற்றம் யாரும் விரும்பத்தக்கது அல்ல. சாதாரணமாக, பட்டணங்களில் வசிக்கக்கூடியவர்களுக்கு விலை ஏற்றம் என்பது மிகவும் கஷ்டமாக இருக்கும். விலை ஏற்றத்தைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நம்முடைய சர்க்கார் சென்ற ஆண்டில் உடனடியாக எடுத்துக்கொண்டார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. விலை ஏற்றம் அதிகமாக இருக்கும் காலங்களில், ஒரு லட்சம் டன் நெல் கொள்முதல் செய்து, அத்துடன் மத்திய சர்க்காரிடமிருந்தும் உணவுத் தானியம் வாங்கி, இரண்டாயிரம் நியாய விலைக் கடைகள் வரையில் ஏற்படுத்தி, நல்ல முறையிலே இப்பொழுது விலை இறங்குமுகமாகச் செய்திருப்பதற்காக நாம் நமது அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டியது கடமையாகும்.

விலை ஏறுமுகமாக இருக்கிறதென்று சொல்லக்கூடிய சமயத்தில், விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மக்களுடைய தொகை, அவர்களுடைய நிலைமை என்ன என்பதையும் நாம் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். சாதாரணமாக, விவசாயிகள் எல்லோருமே பெரிய தனக்காரர்கள், பெரிய நிலச்சுவாந்தார்கள், அவர்களுக்கு ஏராளமான வருமானம் வருகின்றது என்ற எண்ணம் அனேக மக்களுடைய மனதில் இருந்துவருகிறது. நான் சொல்கிறேன்—விவசாயிகளில் 75 சதவிகிதத்தினர் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே போதுமான அளவு வருமானம் கிடைக்காமல், எந்தவித மிச்சமும் இல்லாமல் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். விலை ஏற்றம் இருக்கக்கூடாது என்று நாம் பொதுவாகச் சொல்லும்போது, உணவுப் பொருள்களில் விலை ஏற்றம் இருக்கக்கூடாது என்பதை மனதில் கொண்டு தான் சொல்லுகிறோமேயொழிய, மற்ற பொருள்களின் விலை ஏற்றத்தைப்பற்றி நாம் கவனிப்பதே கிடையாது. உணவுப் பொருள் என்றால் முக்கியமாக நெல்லைத்தான் நாம் எடுத்துக்கொள்ளுகிறோம். மற்ற எத்தனையோ உணவுப் பொருள்கள் இருக்கின்றன. அதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லை. நெல்லின் விலை ஏற்றத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது, மற்ற உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அத்துடன்கூட, நம்முடைய விவசாய உற்பத்திக்குத் தேவையான பொருள்களின் விலையெல்லாம் ஏறிக்கொண்டே போகிறது. சாதாரணமாக, பிண்ணாக்கு, சல்பேட், சூபர்பாஸ்பேட் முதலியவைகளை எடுத்துக்கொண்டால், பிண்ணாக்கு மூட்டையொன்று ரூ. 27-க்கு விற்கிறது. அதேமாதிரி, சல்பேட்டின் விலை ரூ. 40 ஆக இருந்தாலுங்கூட, கிடைக்கவில்லை. இந்தத் தருணத்தில் முக்கியமாக சல்பேட் வேண்டும். ஆனால்





சல்பேட் கிடைக்கவில்லை. அதேமாதிரி சூபர்பாஸ்பேட் விலையும் அதிகமாக ஏறிக்கொண்டே போய்விட்டது. ஆகையால், இம்மாதிரியாக நம்முடைய உணவுப் பொருள் உற்பத்திக்கு வேண்டிய சாதனப் பொருள்களின் விலையெல்லாம் ஏறிக்கொண்டே போவதால் விவசாயிகளுக்கு ஓரளவு கஷ்டம் இருக்கிறதென்பதையும் அரசாங்கம் உணரவேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, சென்ற ஆண்டு நமக்கு உணவு விலை அதிகமாக இருந்ததால் சர்க்கார் உடனடியாக விலையை நிர்ணயம் செய்து, கொள்முதலையும் ஆரம்பித்து, நமக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்து வந்தது. ஆனால், அண்டை ராஜ்யங்களுடைய ஒத்துழைப்பு இல்லாததன் காரணமாகவும், நமக்கு வேண்டிய அளவுக்கு இப்பொழுது உணவுத் தானியம் கிடைக்கின்றது என்ற காரணத்தாலும், இப்பொழுது அதை நீக்கிவிட்டார்கள். ஆனால், சம்பா அறுவடை காலத்தில் நெல் கொள்முதல் கொள்கை எப்படி இருக்கும் என்று சொல்வதற்கில்லை. அநேகமாக கொள்முதல் செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாது என்று நினைக்கிறேன். ஆனால், அப்படிக் கொள்முதல் செய்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டால் நான் சொல்லும் சில கருத்துக்களை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நெல் கொள்முதல் செய்வதாக இருந்தால், அறுவடைக்கு ஒரு மாதத்திற்கு முன்னால், நம்முடைய நெல் கொள்முதல் கொள்கை என்ன என்பதைப்பற்றி அரசாங்கம் ஓர் அறிக்கை விடவேண்டும். சாதாரணமாக நாம் என்ன செய்கின்றோம் என்றால், சென்ற வருஷம் கூட நாம் என்ன செய்தோம் என்றால், குறிப்பாக தஞ்சை ஜில்லாவில் பாதி நெல் அறுவடையாகிவிட்ட சமயத்தில் நெல் கொள்முதல் கொள்கையை அமுலுக்குக்கொண்டு வந்தோம்; விலை நிர்ணயமும் செய்தோம். ஆனால், அது நாம் எதிர்பார்த்த அளவுக்குப் பிரயோஜனம் இல்லாமல் போய்விட்டது. ஆகையால், நாம் நெல் கொள்முதல் செய்வதாயிருந்தால், ஒரு மாதத்திற்கு முன்னதாகவே நம்முடைய நெல் கொள்முதல் கொள்கை என்ன என்பதை நிர்ணயித்து அதைப்பற்றிய அறிக்கை விடவேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டில் நாம் விலை நிர்ணயம் செய்ததைப்போல் இல்லாமல் இப்பொழுது ஏதாவது விலை நிர்ணயம் செய்தால், உயர்ந்தபட்ச விலை, குறைந்தபட்ச விலை ஆகிய இரண்டையும் நாம் நிர்ணயிக்கவேண்டும். சாதாரணமாக ஒரே விலையை நிர்ணயிப்பதால் அநேக கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அத்துடன்கூட, இம்மாதிரியாக நாம் ப்ரொக்யூர் செய்வதால் பல கஷ்டங்கள் ஏற்படுவதால், 'லெவி' மூலமாக நாம் நமக்கு வேண்டிய நெல்லைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்று ஆலோசனை செய்து, லெவி மூலமாக அந்த நெல்லைப் பெற்றுக்கொள்ளவேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri R. Subramaniam] [7th December 1959

அடுத்தபடியாக இப்பொழுது நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் உணவுப் பற்றுக்குறை கிடையாது என்றே சொல்லலாம். ஆனால், அண்டை ராஜ்யமான கேரள ராஜ்யம் எப்பொழுதுமே உணவுப் பற்றுக்குறையாக இருக்குமானால், அவர்கள் எப்பொழுதுமே தங்களுடைய உணவுக்காக நம்முடைய ராஜ்யத்தை எதிர்பார்ப்பதால், ஓரளவுக்கு அவர்களுடைய பற்றுக் குறையையும் சேர்த்து நாம் இங்கு உற்பத்தி செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். முதல் திட்ட ஆரம்பத்தில் நமது உணவு உற்பத்தி 38 லட்சம் டன்னாகத்தான் இருந்தது. ஆனால் முதல் திட்ட முடிவில் நாம் அப்பொழுது எடுத்துக்கொண்ட பிரயாசையின் காரணமாக 6 லட்சம் டன் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது. இரண்டாவது திட்ட முடிவில் கூடுதலாக நாம் 12·79 லட்சம் டன் விளைவிக்கவேண்டும் என்ற திட்டம் இருந்தால்கூட, நமக்கு போதுமான உர வசதி கிடைக்காததினால் இப்பொழுது அதிகப்படியாக 9 லட்சம் டன் தான் நம்மால் இப்பொழுது உற்பத்தி செய்ய முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தாலும் கூட திட்டகால இறுதியில் நமக்கு 53 லட்சம் டன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சாதாரணமாக நல்ல மழை பெய்யக்கூடிய காலங்களில் உபரியாக 3 லட்சம் டன் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

இதுபற்றி நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தஞ்சாவூர் ஜில்லாவைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது 14 லட்சம் ஏக்கர் நிலங்களில் அங்கு நெல் விளைவிக்கப்படுகிறது. அதில் சுமார் 2½ லட்சம் ஏக்கர் நிலங்கள் இருபோக சாகுபடியில் இருந்துவருகின்றன. அங்கு தண்ணீர் கிடைக்கிறது. அம்மாதிரியாக கிடைக்கும் தண்ணீரை நல்லவிதமாக உபயோகப்படுத்தி இருபோக சாகுபடிக்குக் கொண்டுவருவதற்கு எல்லாவிதமான வசதிகளும் இருக்கின்றன. அதில் இருக்கும் நஷ்டமும் இல்லை என்று நினைக்கிறேன். சாதாரணமாக இரண்டு வருஷங்கள் வரையில் அந்த நிலம் நல்ல விதமாக விளைவதற்கு இல்லை. எனவே இருபோக சாகுபடி செய்வதற்கு பயப்படுகிறார்கள். அத்துடன்கூட இருபோக சாகுபடி செய்தால் உடனடியாக அதிகமான கிஸ்தியை கொடுக்கவேண்டியிருக்கிறது. இதுபற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதில் எந்தவிதமான நஷ்டமும் இல்லை என்று நினைக்கிறேன். சாதாரணமாக இரண்டு வருஷங்களுக்கு இருபோக சாகுபடி செய்தால், இரண்டு வருஷங்களுக்கு அதற்கான அதிகப்படியான கிஸ்தியை வசூலிக்காமல் அவர்களுக்கு ஒரு 'இன்ஸெண்டிவ்' கொடுத்தால், அநேகமாக அதிகமான பேர்கள் இருபோக சாகுபடி செய்வார்கள். அதனால் அதிகமான விளைச்சல் கிடைக்கும் என்பதை நான் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாம் உணவுப் பொருள்களை அதிகமாக விளைவிக்க வேண்டுமென்றால், முதலாவதாக நமக்கு விதை தேவை. இரண்டாவதாக உரம் தேவை. விதை விஷயத்தில் நமது சர்க்கார் நல்ல அக்கறை எடுத்துக்கொண்டு விதைப் பண்ணைகளை



7th December 1959] [Sri R. Subramaniam]

ஆரம்பித்து வருகிறார்கள். ஏற்கனவே 119 விதைப் பண்ணைகள் சர்க்காரால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இந்த வருஷத்தில் 40 விதைப் பண்ணைகள் ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், ஆரம்பித்துவிடுவார்கள். இந்தத் திட்டத்தின் முடிவுக்குள்ளாக 210 விதைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்படும் பொழுது நமது ராஜ்யத்திலுள்ள எல்லா நிலங்களுக்கும் நல்ல விதை இந்த விதைப்பண்ணைகளின் மூலம் கிடைக்கும் என்று அறிய நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நல்ல விதை போடுவதன் மூலமாக ஏக்கர் ஒன்றுக்கு 10-ல் ஒரு பங்கு டன், அதாவது 224 பவுண்டு அதிகமாக விளைவிக்க முடியும் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். ஆகவே, இந்த அளவில் சர்க்கார் மிக்க கவனம் எடுத்துக்கொண்டு, இதில் சிரத்தை காட்டி விதைப்பண்ணைகளை ஆரம்பிக்க முன்வந்திருப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன். இதைத் தொடர்ந்து சீக்கிரமாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக உரத்தைப் பொறுத்த வரையிலே, நமது ராஜ்யத்தில் உரம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதில் முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நமக்கு கிடைத்ததைவிட இப்பொழுது ஒன்றும் அதிகமாகக் கிடைக்கவில்லை. இந்த வருஷத்தில் நமக்கு ரசாயன உரம் 61,000 டன் தான் கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் ஒரு காலத்தில் ரசாயன உரத்தை வயல்களுக்குப் போடும்படியாக எல்லா மக்களிடத்திலும் சொன்னோம். அதன் பலனாக அவர்கள் எல்லா நிலங்களுக்கும் கூடுமான வரையில் ரசாயன உரத்தை உபயோகப்படுத்தினார்கள். இப்பொழுது ரசாயன உரத்தை உபயோகப்படுத்தாமல் இருந்து மற்ற எரு, தழை போட்டாலும் கூட, அதில் உள்ள தரம் கெட்டுப்போய்விட்டால் அதிக விளைச்சல் இல்லை. அப்பொழுது ரசாயன உரத்தை அதிகமாக உபயோகப்படுத்திவிட்டோம். அதே சமயத்தில் நிலங்களின் தரம் கெட்டுவிட்டது. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் ரசாயன உரம் சப்ளை செய்யமுடியாத நிலைமையில் இருக்கிறபடியால் ஓரளவுக்கு விவசாயத்தில் விளைச்சல் குறைய ஆரம்பித்துவருகிறது. நெய்வேலியில் 1961-62-ல் ரசாயன உரம் உற்பத்தி செய்ய முடியும். அதுவும் 70,000 டன் வரை நைட்ரஜன் நமக்கு கிடைக்கும் என்று அறிய நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனவே, நைட்ரஜன் ரசாயன உர விஷயத்தில் இன்னும் கொஞ்சம் சிரத்தை எடுத்துக் கொண்டு வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கம்போஸ்டு உரம் தயாரிப்பதற்கு இப்பொழுது நாம் முனிசிபாலிட்டிகளுக்கும் பெரிய பஞ்சாயத்துக்களுக்கும் தான் கடன் உதவி கொடுத்து வருகிறோம். இந்த உதவியைச் சிறிய பஞ்சாயத்துகளுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்வாறு செய்வதில் இரண்டுவித அநுகூலங்கள் உண்டு. முதலாவது, பரவலாகச் செய்ய முடியும். இரண்டாவது, வாகனங்களுக்காக பணம் செலவழிக்க வேண்டிய அவசியமில்லை.

கிராமத்திலிருக்கக்கூடிய வண்டிகளைக் கொண்டே எருவை விநியோகம் செய்யலாம். ஆகவே, கம்போஸ்ட் உரத்தைப் பொறுத்தவரையில் சிறிய பஞ்சாயத்துக்கும் கூட பண உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலம் கடன் கொடுத்து உதவுகிறார்கள். இதுவிஷயமாக அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைபற்றி நான் மிகவும் சர்க்காரைப் பாராட்டுகிறேன். ஆனால், இதில் ஒன்று கவனிக்க வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதிக் காலத்தில் 49 சதவிகிதம் கிராமங்களில் கூட்டுறவு சொஸைடிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் அவைகளின் மூலம் பலன் அடைந்தது 21 சதவிகித மக்கள் தான். அப்பொழுது செலவழிக்கப்பட்ட பணம் 6 கோடி ரூபாய். ஆனால், இரண்டாவது திட்ட காலத்தில் 80 சதவிகித கிராமங்களுக்கு கூட்டுறவு இயக்கத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதனால் 50 சதவிகிதம் மக்கள் பயன் அடையவேண்டுமென்பது திட்டம். ஆனால் இப்பொழுது பார்ப்பீர்களானால், இப்பொழுது 90 சதவிகித கிராமங்களுக்கு விஸ்தரித்துவிட்டோம். பலன் அடைந்துள்ள மக்கள் எவ்வளவு என்று பார்த்தால் 40 சதவிகிதம். இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப் போகிறோம். அப்படியிருந்தும் கூட அதனால் பலன் அடைந்துள்ள மக்கள் 40 சதவிகிதம் தான் என்று பார்க்கும்பொழுது, ஓரளவுக்கு இது வருந்தக்கூடிய விஷயம்தான். கிராமங்களிலுள்ள சாதாரணமாக ஏழை விவசாய மக்களுக்கு இந்தக் கடன் வசதிகள் சரியாகப் போய்ச் சேருவதில்லை. இதனால் கஷ்டமாக இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் கடன் வாங்குவதற்கு சாதாரணமாக செக்யூரிட்டி வேண்டும் என்று சொல்லுகிறோம். அதனால் 'கிரெடிட் வொர்த்தி பெர்ஸனுக்குத்' தான் கடன் கிடைக்கிறது. இதை மாற்றி 'கிரெடிட் வொர்த்தி ஆகுபேஷன்' பேரில் கடன் கிடைக்க வசதி செய்ய வேண்டும். அப்படியிருந்தால்தான் சாதாரணமாக எல்லா ஏழை விவசாய மக்களுக்கும் பலன் கிடைக்குமே தவிர, 'கிரெடிட் வொர்த்தி பெர்ஸனுக்கு' மட்டும் கடன் கொடுப்பதென்றால் அதனால் பயனடைவது பெரியதனக்காரர்களும், நிலச்சுவான்தார்களும்தான். சாதாரண ஏழை விவசாயிகள் அதனால் பலன் அடைவதற்கில்லை. அதோடு கூட கொடுக்கக்கூடிய கடனை காலாகாலத்தில் கொடுக்கவேண்டும். ஏதோ ஒரு சமயத்தில் ரசாயன உரம் வாங்கிப் போட வேண்டுமென்றால், அந்த சமயத்தைத் தவிர்த்து, இன்னும் 3 மாத காலம் சென்று பணம் கிடைத்தால், அதனால் எந்த விதமான பிரயோஜனமும் கிடையாது. நாம் கொடுக்கக்கூடிய பணத்தை காலாகாலத்தில் சரியாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** கனம் அங்கத்தினர் 20 நிமிஷங்களுக்கு மேல் பேசியாகிவிட்டது. தயவு செய்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





**Sri R. SUBRAMANIAM :** அடுத்தபடியாக, 'போர்டு பவுண்டேஷன்' திட்டப்படி விவசாயப்பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்தியாவில் 25 ஜில்லாக்களை எடுத்துக்கொள்ளப் போவதாகத் தெரிகிறது. அதில் நமது ராஜ்யத்தில் ஒரு ஜில்லாவை எடுத்துக்கொள்ளப்போவதாகத் தெரிகிறது. ஆனால் இதை . . .

**Sri T. SAMPATH :** தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக் கொள்ளப்போவதாக 'அநௌன்ஸ்மெண்டு' வந்திருக்கிறது.

**Sri R. SUBRAMANIAM :** அதுபற்றி 'அநௌன்ஸ்மெண்டு' வந்திருப்பதாக கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து சட்டத்தை 1961-ம் ஆண்டு, அக்டோபர் இரண்டாம் தேதிக்குள் நிறைவேற்ற உத்தேசித்து இருக்கிறோம். நாம் இந்த பஞ்சாயத்து சட்டத்தை விஸ்தரிப்பதில் பின் தங்கிவிட்ட போதிலும்; இந்தியாவிலேயே ராஜஸ்தான் தான் முதலில் செய்து இருக்கிறது. இருந்தபோதிலும், பின் தங்கி ஆரம்பித்தாலும் கூட, இதனால் பலன்களை நாம் அதிகமாகவே அடைவோம் என்ற நம்பிக்கை இல்லாமல் இல்லை. ஏனென்றால், நம் அதிகாரிகளும், மக்களும் பஞ்சாயத்து விஷயத்தில் பழக்கப்பட்டவர்கள்; மற்ற இராஜ்யங்களில் பஞ்சாயத்து நிர்வாகம் தெரியாத காலத்திலேயே, நம் இராஜ்யத்தில், பஞ்சாயத்து முறையில் நிர்வாகம் நடந்து, நமக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. எனவே இந்த பஞ்சாயத்து சட்டத்தை கொண்டுவரும்போது, நாம் அதன் பலன் முழுமையும் அடைவோம் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

அடுத்தபடியாக நெய்வேலி சுரங்க வேலை இருக்கிறது. சாதாரணமாக, நமக்கு பால் வேண்டியிருந்தால், முதலில் பசுவைத் தேடவேண்டும். பசுவைத் தேடிக் கொண்டால், பால் கிடைக்கும், அதன் மூலமாக, நமக்கு, தயிர், வெண்ணெய் முதலியவை கிடைக்கும். அதேபோன்று, இந்தச் சுரங்க வேலை பசுவாக அமைந்து, அதன் மூலமாகக் கிடைக்கும் நிலக்கரியைக் கொண்டு, நமக்குவேண்டிய மற்ற தொழில்களையெல்லாம் அபிவிருத்தி செய்யக்கூடிய ஒரு ஆதாரம் கிடைத்திருக்கிறது. 1962-ம் வருஷ ஆரம்பத்திலே, நமக்கு 3½ லட்சம் டன் வருஷம் ஒன்றுக்கு பழுப்பு நிலக்கரி கிடைக்கும் என்று கூறுகிறார்கள். அதைக்கொண்டு மற்ற வேலைகளை ஆரம்பிக்க வசதி ஏற்படுகிறது. அம்மாதிரி கிடைக்கும் நிலக்கரியைக் கொண்டும் சேலத்தில் இரும்புக் கனியிலிருந்தும் கிடைக்கும் பொருள்களைக் கொண்டும் நாம் ஒரு இரும்பு உருக்கு தொழிற்சாலையை ஏற்படுத்த நமக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே நிறைவேற்றுவார்கள் என்று பூரண நம்பிக்கை உண்டு. அம்மாதிரி, சுரங்க வேலை மூலமாக பல பொருள்கள், ரசாயனம், மின்சாரம், கார்பனைசிங் யூனிட், சிராமிக் இன்டஸ்ட்ரி போன்ற பல

[Sri R. Subramaniam] [7th December 1959

தொழில்கள் பரவ ஏதுவாக இருக்கிறது. இம்மாதிரி பல தொழில்கள் நமது இராஜ்யத்தில் பரவுவதனால், மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு நீங்குகிறது; மேலும், இம்மாதிரி தொழில் நடக்கும் இடங்களுக்கு மக்கள் சென்று விடுவதால், கிராமங்களிலுள்ள நெருக்கடியும் ஓரளவு குறைவதற்கு ஏதுவாகிறது.

குடிசைத் தொழில் சம்பந்தமாக நல்ல முறையில் வேலை நடந்து வருவதால், கிராமங்களிலுள்ள விவசாய மக்களுக்கு அவர்களுக்கு வேலையில்லாத மூன்று, நான்கு மாதங்களுக்கு, அவர்கள் வெறுமனே இருக்கும் காலங்களில், அவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்தி இந்தக் குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதால், மக்கள் நல்ல பலன் அடைகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, சொல்ல வேண்டியது அதிகமாக இருக்கிறது. இரண்டு, மூன்றுதரம் தாங்கள் குறிப்பிட்டு விட்டதால் நான் இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRI M. A. MUTHIAH CHETTIAR:** சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரேரணையை ஆமோதித்துப் பேசும்போது சர்க்காரை நடத்தி வருகிறவர்கள் கூடுமான வரையில், செவ்வனே செய்து வருகிறார்கள் என்று நாம் எண்ணுகிறோம் என்ற சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சப்ளிமெண்டரி பட்ஜட்டும் கொண்டு வந்திருக்கிறார்கள். புது வரி என்று சொல்லாததால், இதைப் பாராட்டவேண்டும். இந்தக் காலத்தில், வரி புதிதாகப் போடவில்லையென்றால், அந்த மட்டில் ஜனங்களுக்கு உதவி என்று வைத்துக் கொள்ளலாம்.

இப்பொழுது, கவர்னர் உரையைப் பற்றிப் பேசும்போது, நம் நாட்டின் வருங்காலத் திட்டம் பற்றியும், அதிலும், இன்றைய நிலைமை பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கிறது.

(Deputy Speaker in the Chair.)

கவர்னர் உரையில் இன்னும் சில விஷயங்களையும் சொல்லியிருந்தால் திருப்தியாக இருந்திருக்கும். ஒருக்கால், பட்ஜட் வரும்போது சொல்லலாம் என்று மந்திரியவர்கள் நினைத்து இருப்பார்களோ என்னவோ. இப்பொழுது பேசிய கனம் அங்கத்தினரும், இன்னும் பேச இருப்பவர்களும் உணவைப் பற்றிப் பேசுவார்கள். இருந்தாலும் நம் திட்டங்களெல்லாம் இந்தியாவின் நிலைமையால் வரும் வருஷங்களில் பாதிக்கப் படலாம். சைனா 'வார்' மூண்டால் நம் இந்திய சர்க்கார் திட்டம் மட்டுமல்ல, எல்லா ஸ்டேட்டுகளிலும் மாறப் போகிறது என்பதில் சந்தேகம் கிடையாது. இதுதான் நிலை என்று, ஐந்து வருஷங்களுக்கு, பத்து வருஷங்களுக்கு நிச்சயமாகச் சொல்லலாம். (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம்: யுத்தம் இன்னும் வரவில்லை.) யுத்தம் வரவில்லை என்று மந்திரியவர்கள் சொல்லுகிறார்கள். யுத்தம் என்று முன் ஏற்பாடு செய்தால், எல்லாச்



[7th December 1959 [Sri M. A. Muthiah Chettiar]

செலவுகளும் ஏற்படும். அது மிலிட்டரி பழக்கம். கொஞ்சம் சொல்லிவிட்டால், ஆயிரம் ஆயிரமாக ஏற்பாடு செய்வார்கள். சிலருக்குத் தெரியும்; 1939, 1946-ம் வருஷங்களில் நாம் பார்த்தவர்கள். அதாவது, ராணுவ ஏற்பாடுகள் என்றால், மூட்டைக் கணக்காக, பெரிய கணக்காகச் செய்து விடுவார்கள். அதிகக் கணக்குக்கு மூட்டைக் கணக்கு என்று பெயர். சொல்ல வந்தது என்னவென்றால், யுத்த முஸ்தீப்பு என்று வந்தால் எல்லாமே மாறிவிடும்.

இப்பொழுது, உணவு சம்பந்தமாகப் பேசும்போது, பெர்ட்டிலைசர், விலை, ப்ரொக்யூர்மெண்டு, கண்ட்ரோல், கோளாவுக்குப் போகிறது என்றெல்லாம் சொல்லுகிறோம். எல்லோரும் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறோம். புதிதாக ஒன்றையும் நாம் சொல்லிவிடவில்லை. மந்திரிகளுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்ல இப்பொழுது சந்தர்ப்பம் இல்லை. இப்பொழுது, "பிராண்டியர்" சம்பந்தமாக சொல்லப் போகிறது. நமது சுதந்தரத்தைக் காப்பாற்ற வேறு வழி கிடையாது. அதற்கு நிச்சயமாக, மத்திய சர்க்காரிலும், இந்த சட்டசபையிலும் ஆமோதிக்க வேண்டும். வருங்காலத்தில் தேசம் இருக்கும் கெடுபிடிக்கு என்ன ஏற்பாடு? **Nothing will deter us from providing all the money required for the war effort. In addition to that, all that is intended under the Third Plan will go through** என்று **Sri. Desai** சொல்லுகிறார். மேலும், ஸ்ரீ படேல் சொல்லுகிறார்: It is a Food Plan "Third" பிளானுக்கு "three" பிளான் என்று பெயர். இவ்வளவு பெரிய கெடுபிடி நிலையிலே இருக்கிறோம். இரண்டாவது திட்டத்தைப் பாராட்டிப் பேசுகிறோம். அது முடிய இருக்கிறது. இப்பொழுது, மூன்றாவது திட்டத்தைப் பற்றிப் பேசுகிறோம். அதில் சர்க்காருக்குத் தெரியாததை நாம் ஒன்றும் சொல்லவில்லை. அதில் முக்கிய திட்டங்களுக்கு ப்ரயாரிடி கொடுக்க வேண்டும். பல துறைகளைப் பற்றிக் கூறியிருக்கும் கவர்னர் உரையில் கிருஷ்ணா-கோதாவரி பற்றிய பேச்சே காணோம். கிருஷ்ணா கோதாவரிக்கு என்ன ஏற்பாடு? சென்னை குடிதண்ணீருக்கும், வட ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களுக்கும் கிருஷ்ணா-பெண்ணார் தண்ணீரைத் திருப்பி விட்டால்தான் பலன் பெறலாம். கோதாவரி ஜலம் வீணாக சமுத்திரத்தில் போய்க்கொண்டு இருக்கிறது. அது மூன்றாவது திட்டத்தில் முடிந்து விடும் என்று சொல்லவில்லை. இப்பொழுதே பிளான் போட்டால் போதும். பெரிய என்ஜினியர்கள், 70, 75 வயதில் மறிக்கிறார்கள் என்று கேட்கிறோம். ஆகவே, சீக்கிரமாக அவர்களை வைத்து, பிளானையாவது போட வேண்டும். பிளான் போடவே இரண்டு, மூன்று கோடி ரூபாய் செலவாகும்.

இப்பொழுது சொன்னார்கள், மழையெல்லாம் சரியாகத்தான் பெய்கிறது என்று. அவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவைப் பற்றிப் பேசினார்கள். சமீபத்தில் திருநெல்வேலிக்குப் போயிருந்தேன். அங்கெல்லாம் மழையே கிடையாது. பட்டுக்கோட்டைக்

கப்புறம் மழையே கிடையாது. திருச்சி முதல், சிவகங்கை வரை இதே நிலைதான். ஆகையினால், அந்தப் பக்கத்துக்கு அவசியமான, 'அப்பர்' பெரியார் பிராஜக்டைப் பற்றி இங்கு ஒன்றும் காணோம். இப்பொழுது, கனம் கக்கன் இருக்கிறார்கள்; கனம் ராமையா இருக்கிறார்கள்; கனம் காமராஜ்கூட இருக்கிறார்கள். இவர்கள் மூன்று பேரும் இருந்தே அந்த பாகத்திற்கு மோட்சம் இல்லையென்றால், எப்பொழுது அது நடைபெறும்? வேறு யாராவதாக இருந்தால், "அந்த ஊரே, அந்த பாகமே தெரியாது என்று

12-30 p.m. சொல்லி விடுவார்கள். அப்பர் பெரியாறு திட்டத்தினால் மதுரை, இராமநாதபுரம், திருச்சியில் சில இடங்கள், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்று சொன்னார்கள். அங்கேயெல்லாம் தண்ணீர் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். காரைக்குடிக்கு கனம் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோதுகூட அப்பர் பெரியாறு திட்டம் இல்லாததால் அந்த மூன்று ஜில்லாக்களுக்கும் தண்ணீர் இல்லாமல் போய் விட்டது என்று தெரிவித்தார்கள். இப்பொழுதுள்ள திட்டம் வந்தாலும் அங்கு தண்ணீர் வருமோ என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகவே, இதற்கு முன்னதாக இது சம்பந்தமாக ப்ளான் எழுதியபோது 100 அல்லது 120 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லப்பட்டது. இன்னும் இது சம்பந்தமாக முதல் அமைச்சர் குமாரசாமி ராஜா அவர்கள் காலத்தில் பரிசீலனை செய்யப்பட்டு 100 கோடி ரூபாய் செலவாகும் என்று கைவிடப்பட்டது. ஸர். சி. பி. ராமசாமி அய்யர் காலத்தில் கூட இதைப்பற்றி பேசப்பட்டு அவர் கிர்ரண்ட் கொடுத்தால் போதும் என்று சொன்னார். கிர்ரண்ட் மட்டும் அப்போது கொடுத்திருந்தால் அந்தத் திட்டம் அப்பொழுதே பூர்த்தியாகி இருந்திருக்கும். கிர்ரண்ட் கொடுக்காமல் இருந்ததால்தான் அந்தத் திட்டம் இது வரையிலும் கைவிடப்பட்டிருந்தது. அப்பொழுது அதை எடுத்து நிறைவேற்றியிருந்திருந்தால் தண்ணீர் இல்லாத திருப்பத்தூர் முதலிய இடங்களுக்கும் தண்ணீர் வசதி கிடைத்திருக்கும். அது இல்லாமல் போய் விட்டது. இனி அந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிர்ரண்ட் கொடுத்திருந்தால் அந்த அணை கட்டி முடிக்கப்பட்டிருந்திருக்கும். இதைப்பற்றி நான் அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அதைப்பற்றி எந்தக் குறிப்பும் கவர்னர் அவர்களுடைய உரையில் இல்லை. கவர்னர் உரை இப்பொழுதாவது வந்ததே என்று ஒரு சந்தோஷம் இருக்கிறது. ஏனென்றால் இப்பொழுது அங்குள்ள குறைகளையெல்லாம் எடுத்துச் சொன்னால் வரப்போகும் பட்ஜெட்டிற்குள்ளாகவாவது அவைகளைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் என்ற காரணத்தால் இப்பொழுது கவர்னர் உரை வந்ததைப்பற்றி சந்தோஷப்பட வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் வருவதற்குள்ளாகவாவது இதைப்பற்றி பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்த பட்ஜெட் வருவதற்குள் டெவலப்மெண்ட் கவுன்சில் இதைப்பற்றி விவாதித்து





ஒரு முடிவு எடுத்துக்கொள்ள வேண்டும். வரப்போகும் ஏப்ரல், மே மாதங்களில் டில்லியில் கூடக்கூடிய மகாநாட்டில் இதைப்பற்றி அமைச்சர்கள் எடுத்துச் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: "அண்டை மாநிலங்களில் உள்ள உபரி நீரை இந்த மாநிலத்திற்குத் திருப்புவதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்தத் திட்டத்தில் வழி வகைகள் செய்யலாம்" என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

* **SRI M. A. MUTHIAH CHETTIAR**: அதையேதான் நானும் குறித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். . . . and by exploring all possibilities of diverting to this State some of the surplus waters of adjacent States." என்று குறித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். அதைப்பற்றியும் மூன்றாவது திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றுதான் நான் சொல்லிக்கொள்ளுகிறேன். பிளானிங் கமிட்டி ஒன்றையும் ஏற்படுத்தியிருப்பதாக பேப்பரிலும் பார்த்தேன். அதற்காக சட்ட மன்றத்தின் சர்வ கட்சி குழு ஒன்றை அமைத்திருப்பதாகவும் பேப்பரில் பார்த்தேன், அதைப் பற்றி கவர்னர் உரையிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் ரொம்பவும் வரவேற்கிறேன். அதன் ரிப்போர்ட் எப்பொழுது வரும் என்பது தெரியவில்லை. அந்த ரிப்போர்ட்டின் மீது பொது விவாதம் இந்த சட்டசபையில் நடக்குமா என்பது தெரியவில்லை. இது சம்பந்தமாகப் பேசுவதற்கு கனம் அமைச்சர்கள் டில்லிக்குப் போவதற்குள்ளாக அந்த ரிப்போர்ட்டை இந்த சட்டசபையில் ஒரு வாரத்திற்கு முன்னதாக வைத்து அதன் மீது பொது விவாதம் நடத்தி அதன் பிறகு அங்கத்தினர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு திட்டத்தில் சேர்க்க வேண்டியவைகளை சேர்த்தோ அல்லது நீக்க வேண்டியவைகளை நீக்கியோ டில்லிக்கு அனுப்பி வைத்து அதன் பிறகு முடிவு எடுத்துக்கொள்ளலாம். அப்படி அங்கத்தினர்களுடைய அபிப்பிராயங்களையும் அங்கே தெரிவித்தால் அது அமைச்சர்களுக்கு ஒரு பக்க பலமாகக்கூட இருக்கும் என்று தோன்றுவதால் அந்த ரிப்போர்ட்டைப்பற்றி இந்த சட்டசபையில் விவாதிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு நான்கு நாட்களாவது விவாதத்திற்கு என்று ஒதுக்க வேண்டும். அப்படி விவாதித்தால் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு மூன்றாவது திட்டத்தை எழுதுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கக்கூடியதாக இருக்கும்.

மற்றொரு விஷயத்தை நான் அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அப்படிச் சொல்லிச் சொல்லி தொண்டையெல்லாம்கூட கட்டிப்போய் விட்டது. இருந்தாலும் மறுபடியும் சொல்லும்படியாகத்தான் இருக்கிறது. வட ஆர்க்காட்டிலுள்ள பாலாற்றுத் தண்ணீரை கொஞ்சம் தெற்கே திருப்பினால் பல இடங்களுக்கு தண்ணீர் கிடைக்க வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். அப்படி தண்ணீரைத் திருப்பி மதுரை ராமநாதபுரம் வழியாக தோண்டிக்கொண்டு போனால் பல இடங்களுக்கு தண்ணீர் வசதி கிடைக்க சௌகர்யமாக இருக்கும். இது

சம்பந்தமாக கனம் அமைச்சர் கக்கன் அவர்களுக்கு எவ்வளவோ மனுக்கள் வந்திருக்கலாம். அதை எண்ணவே முடிந்திருக்காது. இதற்கு முன்பு இருந்த மராமத்து இலாகா அமைச்சர் ராமநாதபுரம் ராஜா அவர்களுக்கும் எவளவோ மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இருந்தும் இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அதைப் பற்றிக் கணக்குக்கூட இருப்பதாகத் தெரியவில்லை. இதைப் பற்றி இப்பொழுது குறிப்பிடுவதன் காரணம் ஒருக்கால் அடுத்து வரும் பட்ஜெட்டிலாவது அதற்கு என்று ஏதாவது ஒதுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இப்பொழுது தெரியப்படுத்துகிறேன். கவர்னர் உரையில் அதைப்பற்றி சொல்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தாலும் அடுத்துவரும் பட்ஜெட்டிலாவது அதைப்பற்றிக் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக காவேரி நீரைப்பற்றி பல தடவை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். கருடபாளையத்திலிருந்து அதை எடுத்து வந்து மதுரை, ராமனாதபுரம் ஜில்லாக்கள் வழியாக தொண்டிக்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (ஒரு குரல்: புதுக்கோட்டை வழியாகக் கொண்டு போக வேண்டாமா?) அதன் வழியாகத்தான் போக வேண்டும். புதுக்கோட்டைக்கு மேற்கு வழியாகத்தான் கொண்டு போகலாம், கிழக்கு வழியாகக் கொண்டு போக முடியாது. ஏனென்றால் அந்தப் பக்கம் பள்ளம். அதைவிட மேற்கு 650 அல்லது 700 அடி உயரமாக இருக்கிறது. கிழக்கே கொண்டு போனால் தண்ணீர் மேட்டில் ஏறாது என்பதனால் மேற்கு வழியாகக் கொண்டு போக வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். பேசுவதற்கு அவகாசம் குறைவாக இருப்பதால் சுருக்கமாகச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இல்லாவிட்டால் அது போகக்கூடிய இடங்கள் எல்லாவற்றையுமே எடுத்துச் சொல்லலாம். புதுக்கோட்டை வழியாக மானா மதுரைக்குத் திருப்பி திருப்பத்தூர் வழியாகக் கொண்டு போகலாம். கிழக்கே ஆலங்குடி வழியாகக் கோண்டு போக முடியாது.

அடுத்தபடியாக ஹைட்ரோ எலெக்ட்ரிக் ஸ்கீம். இதைப்பற்றி பாராட்ட வேண்டியதுதான். இப்படி பாராட்டக்கூடிய விஷயம் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளையெல்லாம் விட்டு விட்டு பாராட்டுதலுக்கு இல்லாதவைகளைப்பற்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் அவகாசம் குறைவாக இருப்பதால் அப்படி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. வட ஆற்காட்டிலிருந்து செங்கற்பட்டு வழியாகவும் வரவேண்டியதாகத்தான் இருக்கும்.

அடுத்தபடியாக, இப்பொழுது ரிவின்யூ அமைச்சர் அவர்கள் இருக்கிறார். சந்தோஷம்தான். அதனால் அவர் சம்பந்தப்பட்டதைச் சொல்லலாம். இதைப்பற்றி நான் பல தடவை சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன், அதாவது புதுக்கோட்டையை ஒரு தனி ஜில்லாவாக ஆக்க வேண்டும் என்று. ராமனாதபுரம், திருப்பத்தூர் முதலிய இடங்களிலிருந்து கொஞ்சம் எடுத்து புதுக்



கோட்டையில் சேர்த்து தனி ஜில்லாவாக பண்ண வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அதையே இப்பொழுதும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதையே நாலைந்து வருஷங்களாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு பதில் என்ன சொன்னார்கள் என்றால் எல்லா ஜில்லாக்களையுமே பிரிக்கப் போவதாயும், சில ஜில்லாக்களுக்கு அதிகப்படியாக கலெக்டர்களைப் போடப் போவதாகவும் அப்பொழுது இதைப்பற்றி யோசிக்கலாம் என்றும் பதில் சொல்லப்பட்டது. ஆனால் அப்படி ஜில்லாக்களைப் பிரிக்கப்போகும் விஷயம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. அது புதைந்து போய் விட்டது. ஆகவே இப்பொழுதாவது புதுக்கோட்டை விஷயமாக தனியாக எடுத்து ஒரு முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே புதுக்கோட்டைக்கு என்று தனியாக கலெக்டர் போட வேண்டும் என்றும், அதை ஒரு தனி ஜில்லாவாக ஆக்க வேண்டும் என்றும் அப்படிப் பண்ணி புதுக்கோட்டையிலேயே தலைமை ஆபீசை வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக லாண்ட் சீலிங். இது சம்பந்தமாக இப்பொழுது ஒரு மசோதாவைக் கொண்டு வரப்போவதில்லை என்று தெரிய வருகிறது. இது சம்பந்தமாக கணக்கு எடுத்தபோது 400 பேர்கள் இருப்பார்கள் என்று நினைத்து கணக்கு எடுத்தபோது 40 பேர்கள்தான் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, எப்படியும் இந்த மசோதாவைக் கொண்டுதான் வரப் போகிறார்கள். அப்படிக்கொண்டு வரும்போது நியாயமான முறையில் இருக்கும்படியாகக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். உணவு உற்பத்தியை அதிகப்படுத்தும் அடிப்படையில் சீலிங் கொண்டு வரப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் செய்யும்போது நியாயமான முறையில் கொண்டு வரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். லாண்ட் சீலிங்கை எந்த அளவு கொண்டு வந்தால் உணவு உற்பத்தி பெருகுமோ அந்த அளவிலும் நியாயமான முறையிலும் இருக்கும்படியாகக் கொண்டு வரவேண்டும். தரத்தைப்பற்றியும் கவனிக்க வேண்டும். எது முதல் தரமான ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை முதலில் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ன என்பதை முதலில் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். பெண்களுக்கு ஏற்கெனவே சொத்து உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி பெண்களுக்கு இப்பொழுது சொத்துக்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி சில பெண்கள் தங்களுடைய தகப்பனிடமிருந்து கொஞ்சம் நிலத்தை வாங்கிக் கொண்டிருக்கலாம். சிலருக்கு உயில் எழுதி வைத்திருக்கலாம். அதன்படி நிலம் கிடைத்திருக்கலாம். சமீபத்தில்கூட மத்திய அரசாங்கம் பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறார்கள். அதன்படியும் அவர்களுக்கு நிலங்கள் கிடைத்திருக்கலாம். இப்பொழுது நில உச்ச வரம்பு கட்டும் போது அப்படி அவர்கள் பெற்றிருக்கிற நிலங்களுக்கு உச்ச

[Sri M. A. Muthiah Chettiar] [7th December 1959

வரம்பு கட்டுவது என்பது சரியல்ல. அதைக் கவனித்துச் செய்ய வேண்டும். ஆகவே முப்பது ஏக்கருக்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்வதில் நியாயம் இல்லை. அப்படிச் செய்தால் பெண்களுக்குக் கிடைக்கக்கூடியது கிடைக்காமல் போய் விடலாம். பெண் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இது சம்பந்தமாக எடுத்துச் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். பெண்களுடைய உரிமை பறிபோகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இவைகளைப்பற்றியெல்லாம் ஆலோசனை செய்து நில உச்ச வரம்பு கட்டுவதில் நடவடிக்கை நியாயமான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சில மசோதாக்களில் செலெக்ட் கமிட்டியில் சாட்சிகளை விசாரித்தது போல் இதன் பொது விவாதத்திற்குப்பின் செலெக்ட் கமிட்டியில் சாட்சிகளை விசாரித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படி பலருடைய ஆலோசனைகளைக் கேட்டு நல்ல முறையில் கொண்டு வரவேண்டும். அதுதான் என்னுடைய அபிப்பிராயம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்போது விலைவாசிகளைப் பற்றிப் பேசினார்கள். அவர்கள் அதிகமாக பேசிவிட்டார்கள். நானும் அதிகம் பேச விரும்பவில்லை. இப்போது விலைகள் குறைந்துதான் வருகிறது. இரண்டாயிரம் கடைகளுக்கு மேல் திறந்திருக்கிறார்கள். பர்மா அரிசியும் வருகிறது. ப்ரொக்யூர்மெண்டு அவசியம் என்று எப்போதும் வைத்துக்கொண்டிருக்க வேண்டியது இல்லை. வேண்டாம் என்றே நினைப்பார்கள். ஆனால் ஒன்று முக்கியம். இப்போது ரைஸ் மில் ஸ்டாக் வைத்துக் கொள்ளக்கூடாது, அவர்களுக்கு பாங்குகள் பணம் கடன் கொடுக்கக் கூடாது என்பதாக மத்திய சர்க்கார் உத்தரவின் பேரில் ரிசர்வ் பாங்கு சொல்ல மற்ற எல்லா பாங்குகளும் கடன் கொடுப்பதில்லை. இவர்கள் பணம் கொடுக்கவில்லை என்பதற்காக அவர்கள் சும்மா இருப்பது இல்லை. மார்வாடிகளிடம் இருந்தாவது அதிக வட்டிக்குக் கடன் வாங்கி ஸ்டாக் பண்ணுகிறார்கள். அதனால் விலையும் அதிகமாக இருக்கிறது. பாங்க் மூலமாகக் கடன் கொடுப்பது என்றால் சல்லிசான வட்டிக்குப் பணம் கிடைக்கும். அதனால் விலையும் ஒரு அணா இரண்டணா சல்லிசாக இருக்கும். ஆகையால் இந்த ரைஸ் மில்காரர்களுக்கு ஸ்டாக் செய்ய பாங்குகள் கடன் கொடுக்கக் கூடாது என்கிற நிபந்தனையை எடுத்துவிடுவதற்கு நம் சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும். அதோடு இன்னொன்று. இவர்களிடம் எப்போதும் ஸ்டாக் எவ்வளவு இருக்கிறது என்பதற்கு கணக்கு இருக்கிறது. அதோடு போர்ட் ஆப் ரெவின்யூவுக்கு அவர்கள் அவ்வப்போது கணக்குக் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அமைச்சர்கூட ஆம் ஆம் என்கிறார்கள். திடீரென்று ப்ரொக்யூர்மெண்டு பண்ண வேண்டுமென்றாலும். 'No sale from tomorrow morning' என்பதாக இவர்கள் உடனடியாக உத்தரவு போடலாம். ஆகவே கவர்ன்மெண்டு ஆப் இந்தியா அந்தப் பாலிசியை மாற்றிக்கொள்ளும்படியாக வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விலைவாசிகள் ஓரேயடியாக ஏறிவிடாமல் கவனிக்கவேண்டியது



7th December 1959] [Sri M. A. Muthiah Chettiar]

அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரிசி கிடைப்பது தட்டுபடியாக இருக்கிறது என்று நினைப்பது தவறாகும். விலை இன்று ஓரளவில் நிற்கிறது. அதை கவனித்து வந்தால் நல்லது.

இன்னொன்று. மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட பே கமிஷன் ரிப்போர்ட் வந்துவிட்டது. அந்த ரிப்போர்ட்டின்படி மத்திய சர்க்கார் ஊழியர்கள் கொஞ்சம் ஊதிய உயர்வு பெறுவார்கள். அண்ணன் தம்பி இரண்டு பேரும் ஒரே வேலை செய்கிறார்கள், ஒருவர் சென்னை சர்க்காரில் வேலை செய்கிறார், இன்னொருவர் மத்திய சர்க்காரில் வேலை செய்கிறார் என்கிற ஒரு காரணத்தினால் மட்டும் அவர்களுக்குள் சம்பள வேறுபாடு இருப்பது நியாயமாகாது. ஒரே வேலைக்கு ஒரே மாதிரியாகவே எல்லோருக்கும் சம்பளம் கொடுக்கவேண்டும். இரண்டாவது பே கமிஷன் ரிப்போர்ட்டை ஒத்துக்கொண்டதன் மூலமாக மத்திய சர்க்காருக்கு 14 கோடி ரூபாய் செலவாகப் போகிறது. நாம் பணத்திற்கு எங்கே போவது என்று சொல்லக்கூடாது. நம்முடைய சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிற பே கமிஷன் ரிப்போர்ட்டும் சீக்கிரத்தில் வரும் என்று நினைக்கிறேன். நமது ராஜ்ய என்.ஜி.ஓ.க்களுடைய நிலைமை உடனடியாகக் கவனிக்கப்படவேண்டியது மிகவும் முக்கியமாகும். விலைவாசிகள் எல்லாம் கூடியிருக்கிறது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டது. ஆகவே இவர்களுடைய நிலைமையைக் கவனித்து இவர்களுடைய சம்பளத்தையும் கூட்டுவதற்கு சர்க்கார் முன் வரவேண்டும். ஆளை வேண்டுமானால் குறைத்துக் கொள்ளுங்கள். இப்போது நான்கு பேர் பார்க்கிற வேலையை ஆறு பேர்கள் பார்க்கிறார்கள். ஆள் குறைப்பினால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப்படுமோ என்று கவலைப்பட வேண்டாம். சர்க்கார் வேலை கிடைக்கவில்லையென்றால் படித்தவர்கள் திரும்ப நிலத்தில் வேலை செய்யப் போகிறார்கள். வேலையில் இருக்கிறவர்கள் திருப்தியாக வேலை செய்வதற்கு நியாயமான சம்பளம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

மூன்றாவது திட்டத்தைப் பற்றி அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். சேது சமுத்திர துறைமுக அபிவிருத்தித் திட்டத்தையும் மூன்றாவது திட்டத்தில் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்த்தால்தான் தமிழ் நாட்டுக்குப் பெரிய உபயோகம் இருக்கும். சேது சமுத்திரத்தை விட்டுவிட்டு தூத்துக்குடியே இப்போது போதும் என்று நினைத்து விட்டுவிடுவார்களோ என்கிற சந்தேகமும் உண்டு. அதற்காகத்தான் இதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று கம்யூனிடி டெவலெப்மெண்டு ப்ராஜெக்ட்ஸ், நாஷனல் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம் இவைகளைப்பற்றி பேச்சு இல்லை. இன்னும் பல இடங்களுக்கு இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் வரவில்லை. அந்த ஜாப்தாவைப் பற்றி பல அங்கத்தினர்கள் பல அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஆரம்பித்து ஐந்தாறு வருஷங்களாகிவிட்டது. உடனடியாக

எல்லா இடங்களுக்குமே அதை விஸ்தரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிரச்னை எவ்வித தகராறும் இல்லாமல் தீர்ந்துவிடும் என்று ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

தொழிற்சாலையைப் பற்றிப் பேசினார்கள். உதவி செய்வதாகச் சொன்னார்கள். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பிறர் பணமும் கொடுப்பார்கள். நஷ்டமும் ஏற்படலாம். சர்க்கார் க்ராண்டு திட்டம் ஏற்படுத்தவேண்டும் என்கிறார்கள். பண உதவி கொடுப்பதற்கு ஒரு வசதி செய்வதற்குச் சர்க்கார் ஓரளவு முன் வர வேண்டும். ஓர் அளவுக்குக் கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

ஓரே ஒரு விஷயத்தை மட்டும் திருப்பிச்சொல்லுகிறேன். கவர்னர் உரையின் மீது பேசும்போது பெரிய விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்பதில்லை. பட்ஜெட்டில் அவ்வாறு ஒவ்வொரு டிமாண்டைப் பற்றியும் சொல்லலாம். ஆனாலும் கவர்னர் உரையின் மீது விவாதம் செய்கிறபோது மூன்றாவது, ஐந்தாவது திட்டத்தைப் பற்றி நாம் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. நமது அமைச்சர் அவர்கள் டெல்லி போய் சரியான முறையில் வாதாடவேண்டும். நீர்ப்பாசன திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள், பல தொழில் திட்டங்கள் ஆகிய எல்லாவற்றையும் இங்கே ஏற்படுத்துவதற்கு வேண்டிய பண வசதியைப்பெறவேண்டும். ஏனோ தானோ என்று சொல்லிவிட்டு, அவர்கள் சொல்வதையும் எதிர்க்காது சும்மா வந்துவிட்டால் "After general discussion all are agreed." என்று ப்ரொஸீடிங்ஸ் எழுதுவதற்கு இடம் விட்டுவிடக்கூடாது. இவர்கள் தாங்கள் சொல்லவேண்டியதை வற்புறுத்திச் சொல்லிவிட்டு, இதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் டிசென்டிங் கொடுத்துவிட்டு வரவேண்டும். சென்னை சட்டசபையில் உள்ளவர்கள் கத்துகிறார்கள். ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்று இவர்கள் ப்ளானிங் கமிட்டி கூட்டத்தில் நன்றாகச் சொல்லலாம். ப்ளானிங் கமிட்டி ரிப்போர்ட்டையே சட்டசபையில் விவாதத்திற்கு ஒரு நான்கு நாட்கள் வைத்தால் ஒவ்வொரு ஜில்லாவைச் சேர்ந்தவர்களும் எப்படிப் பேசுகிறார்கள், என்ன என்ன சொல்கிறார்கள் என்பதைப் போய்ச் சொல்ல முடியும். நிதி மந்திரி அவர்கள் இங்கே இல்லை. இவர்கள் என்ன சொன்னாலும் "வார்" சமயம், பணம் இல்லை என்று அவர்கள் சொல்லப்போகிறார்கள். பேருக்காக 150 கோடி என்று போடலாம். 150 கோடி வராது. 100 கோடியாவது வரும் என்று திட்டம் போட்டால் நல்லது. இங்கே உள்ளவர்கள் எப்படி நம் மாகாணம் புறக்கணிக்கப்படுகிறது என்று பல சந்தர்ப்பங்களில் ஆவேசத்தோடு பேசியிருக்கிறார்கள். ஆகவே இவர்கள் டெல்லியில் போய் வற்புறுத்தி ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று கடுமையாக, கோபமாகக்கூட வந்துவிடலாம். இவர்கள் கோபித்துக்கொண்டு வந்துவிடுவதனால் ஒன்றும் மோசமாகிவிடாது. மந்திரிசபையைக் கலைத்துவிடமாட்டார்கள். கலைத்துவிட்டாலும் இவர்களைத் தவிர ஆள்வதற்கு வேறு யார் இருக்கிறார்கள். இவர்கள் இல்லாவிட்டால் காரியம் நடக்காது. அதோடு பிளானிங் கமிஷன் ஒவ்வொரு மூன்று



மாதமும் கூடி ஆலோசிக்கிறது. ஏப்ரல், மே மாதங்களுக்குள் ஒரேயடியாக முடிவு ஒன்றும் செய்துவிடமாட்டார்கள். ஒரு முறையாவது கூட்டத்தில் கோபித்துக்கொண்டு வந்தால்தான் அடுத்தக் கூட்டத்தில் "இவர்கள் ஏன் கோபித்துக்கொண்டு போனார்கள்?" என்பதையாவது அவர்கள் ஆலோசிப்பார்கள். அடிக்கடி ஆலோசித்து திட்டத்தை மாற்றத்தான் போகிறார்கள். வருஷாவருஷம் திட்டம் மாறும். ஆகவே நம்முடைய கருத்தை வற்புறுத்தி நம் ராஜ்ய நலனுக்குப் பெரிய திட்டங்களை இந்த மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் நிறைவேற்றிக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

DEPUTY SPEAKER : Motion moved—

'That an humble address be presented to the Governor that the Members of the Madras Legislative Assembly thank him for the Address delivered to the Members of the Legislature on the 5th December 1959.'

Now the motion is before the House for discussion.

* SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, நாட்டு மக்கள் இன்றைக்கு மிகவும் கவலை கொண்டு, நல்ல உறுதியுடனும், நம்பிக்கையுடனும் எதிர்த்து நின்று சமாளித்தாகவேண்டிய அதி முக்கியமான பிரச்சனையைக் குறித்து விவரமாக கவர்னர் அவர்கள் தம் உரையில் குறிப்பிடவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பிரச்னை என்ன என்பதைக் குறித்து, நாட்டுப் பற்று உள்ள எவருக்கும் எத்தகைய சந்தேகமும் எழாது. அந்தப் பிரச்னை நமது மண்ணில் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிற சீனப் படைகளின் செயல் என்பதைக் குறித்து நான் இங்கே உறுதியாகக் கூற விரும்புகிறேன். நமது நாட்டின் எல்லைப் பகுதியில் சீனப் படைகள், நண்பர்கள் என்று நாம் நம்பிக்கொண்டிருந்த சீனப் படைகள் இப்போது ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக நம் நாட்டில் பணியாற்றிய சிறந்த சில வீரர்களை நாம் உயிரிழக்கச் செய்யும்படி நேரிட்டிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான சதுர மைல் பிராந்தியம் இன்றைக்கு நம்முடைய எல்லையில் ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கிறது. அந்தப் பிரச்சனையைக் குறித்து நாட்டு மக்களுக்கு உணர்த்துவது மாத்திரம் அன்று; இந்த நாட்டு மக்கள் எந்த அளவுக்கு உறுதியுடன் நிற்கவேண்டும், ஆக்கிரமிப்பை உறுதியாகத் தடுத்து, தைரியத்துடன் நமது ஜனநாயகத்தை, சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள எவ்வளவு தீரத்துடன் இருந்தாகவேண்டும் என்பதை ராஜ்யத்தின் தலைவர் என்ற முறையில் குறிப்பிட்டிருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். மக்களை அப்படித் தைரியப்படுத்துவதற்குரிய எந்த வார்த்தையும் கவர்னரின் உரையில் இல்லை. ஒருக்கால் இதைப் பார்க்கிறபோது இந்தச் சர்க்காரின் கொள்கை அப்படித்தான் இருக்குமோ? அதாவது சில அமைச்சர்கள் பகிரங்கமாகவே சீனா ஆக்கிரமித்தால் அமெரிக்கா சும்மா பார்த்துக்கொண்டிருக்குமா என்று கேட்டார்களே அதுபோல சீனாவின் எதிர்ப்பைச் சமாளிக்க

அமெரிக்காவின் உதவி கிடைக்கும் என்று சும்மா இருக்கிறார்களோ என்றெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது. ஒருக்கால் அமெரிக்காவிடம் நம்பிக்கை வைத்து அமெரிக்கர்கள் நம்மைக் காப்பாற்றுவார்கள் அல்லது பிற நாட்டினர் நம்மைக் காப்பாற்றுவார்கள் என்றளவில் நம்பிக்கை வைத்து பேசாமல் இருக்கிறார்களோ என்று கருதவேண்டியிருக்கிறது, சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஒரு நாட்டின் பாதுகாப்பு ஓரிருவரின் பிரச்சனை அல்ல. அது ஒரு படையின் பிரச்சனை மாத்திரமல்ல. அந்த நாட்டிலுள்ள மக்களின் அத்தனை பேர் மனதிலும் எந்தளவு உறுதியிருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான், அவர்களின் உள்ளத்திலுள்ள நம்பிக்கையைப் பொறுத்துத்தான் அந்த நாட்டின் பாதுகாப்பும் இருக்கிறது. ஆகவே அதை தெளிவுபடுத்திக் கூற தவறிவிட்டார் கவர்னர் பெருமான் அவர்களது உரையில் என்று நான் மிகவும் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், மறுமுறையும். நாட்டு மக்களின் உள்ளத்தில் எப்படி தெம்பு உண்டாகும், எப்படி நம்பிக்கைப் பிறக்கும், எப்படி உறுதி உண்டாகும் என்பதை நாம் நன்கு ஆலோசிக்க வேண்டியவர்களாகயிருக்கிறோம். இன்றைய தினம் விலைவாசி ஏற்றம் காரணமாக நாட்டு மக்கள் அன்றாட வாழ்க்கைப் பண்டங்களைக் கூட வாங்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இதை, கவர்னர் பெருமானே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் விலைவாசி ஏற்றம் அடைந்திருக்கிறது என்பதை அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார். அத்தியாவசியமான உணவுப் பண்டங்களின் விலைவாசி ஏற்றம் அடைந்துவிட்டது என்பதை கவர்னர் பெருமான் அவர்கள் அவர்களது உரையிலேயே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இன்று நேற்று ஏற்பட்டதல்ல இந்தக் கொடுமை. பல ஆண்டுகளாக இந்தக் கொடுமை நீடித்து வருகிறது. இந்தக் கொடுமையை நீக்க நீங்கள் என்ன செய்தீர்கள் என்று அரசாங்கத்தைக் கேட்பதற்குள்ள உரிமை—பாத்தியதை—நாட்டு மக்களுக்கு இருக்கிறது என்பதை நான் இந்த சபையில் எடுத்துக்கூற விரும்புகிறேன். நிதியமைச்சர் அவர்கள் 1956-ம் ஆண்டிலேயே விலைவாசிகள் ஏறுமுகமாகத்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், கடந்த இரண்டு ஆண்டு காலமாக இந்த விலை ஏற்றத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது? அதுவும் அத்தியாவசியமான உணவுப் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது? அதனால் ஏற்பட்ட பலன்கள் என்ன? அதனால் மக்கள் நன்மை அடைந்திருக்கிறார்களா? என்பதைப் பற்றி எல்லாம் நாம் ஆழ்ந்து பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இப்பொழுது நிலைமை எப்படியிருக்கிறதென்றால், கவர்னர் பெருமானே தமது உரையில், நாட்டிலே இந்தக் கொடுமை நீடித்துக் கொண்டேயிருக்கிறது என்று வெளிப்படையாகக் கூறவேண்டிய நிர்ப்பந்தத்தைத்தான் நாம் இங்கு காண்கிறோம். அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்கள் தமது உரையில் இந்த நிலையிலிருந்து மக்களை விடுதலை செய்ய, மக்களுக்கு விமோசனம் அளிக்க ஏதாவது மார்க்கத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்களா என்று பார்த்தால் அதையும் காணோம். அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும், விலைவாசிகளைக் குறைப்பதற்கு நாம் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டோம் என்று மட்டும் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர அந்த நடவடிக்கைகளின் விளைவாக விலைவாசிகள் குறையவில்லை, ஏறித்தான் போயிருக்கிறது. இதற்கென்ன செய்வது என்று திட்டமாகக் கூறவில்லை. 1956-ல் இருந்து எடுத்துப் பார்த்தால் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து விலைவாசிகள் ஏறித்தான் போயிருக்கிறதே தவிர இறங்கவேயில்லை என்ற உண்மையைத்தான் நாம் காண்கிறோம். இந்த நிலைமையில் விலைவாசிகள் ஏறிக் கொண்டிருக்கிறது, நாங்கள் என்ன செய்வோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் அது சரியான பரிகாரம் ஆகுமா? மக்களுக்கு அது திருப்தி அளிக்குமா என்று சிந்திக்க வேண்டும். நாம் சர்க்கார் நடத்துகிறோமா, என்ன செய்கிறோம்? சர்க்கார் என்றால் என்ன என்பதுபற்றி முத்தையா செட்டியார் மிக நன்றாகக் குறிப்பிட்டார்கள். விலைவாசிகள் ஏறிக்கொண்டிருந்தால் அதைக் கட்டுப்படுத்தி மக்களுக்கு நன்மை அளிக்கும் கடமை சர்க்காரின் கடமையாகும், என்று சொன்னார்கள். நான் ஒரு சோஷியலிஸ அரசாங்கத்தைக் குறித்துச் சொல்லவில்லை. இந்த அரசாங்கத்தையே எடுத்துப் பார்ப்போம். ஒரு முதலாளித்துவ அரசாங்கமாக இருந்தால் கூட அவர்களின் கடமையாகும், இந்த விலைவாசிக் கொடுமையிலிருந்து மக்களைக் காப்பாற்றுவது. இது நம்மால் சமாளிக்க முடியாத ஒன்றா? இது, இயற்கைக்கு மீறிய ஒன்றா? செயற்கையால் ஏற்படுகிற இந்தத் தீமையை நீக்க நம்மால் முடியாது என்றால் நாம் எப்படிப் பெரிய அரும்பெரும் காரியங்களைச் சாதிக்கப் போகிறோமோ, தெரியவில்லை. எல்லோரும் சொல்கிறார்கள், விலைவாசிகள் ஏறிவிட்டதென்று. அமைச்சர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். கவர்னர் பெருமான் அவர்களும் சொல்கிறார்கள். ஆகவே, இதை யாரிடம் போய் சொல்வது? விலைவாசி ஏறிவிட்டதென்று எல்லோரும் சொல்வதினால் அதற்குப் பரிகாரம் கிடைத்துவிடுமா? அப்படிப் பரிகாரம் கிடைக்காது என்று நான் உறுதியாகச் சொல்லுகிறேன். விலைவாசிக் கொடுமையிலிருந்து மக்களை விடுவிக்க நியாயவிலைக் கடைகள் 2,000 ஏற்படுத்துவதற்கான ஏற்பாடு செய்தோம். இந்த ராஜ்யத்தை தனி உணவு மண்டலமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை பல தடவை இந்த சபையில் வற்புறுத்திய பின்னர் சர்க்கார் அதை மத்திய சர்க்காரினிடம் வலியுறுத்தப் போனார்கள். வெற்றி பெற்று வந்தார்களா? தனி உணவு மண்டலமாக்கவேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா? ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் விளைவு என்ன? வெறும் கையோடு திரும்பி வந்தார்கள். இங்கே கொள்முதல் செய்ய மாட்டோம் என்று சொன்னார்கள். நல்லதுதான். ஆனால் அதற்குப் பிற்பாடு நிலைமை சீரடைந்ததா? நியாயவிலைக் கடைகள் வேண்டும், வேண்டுமென்ற கோரிக்கைகள் ஒவ்வொரு நகரத்திலிருந்தும், கிராமத்திலிருந்தும் அன்றாடம் வந்து கொண்டிருக்கிறது, ஏராளமாக. இவைகளையெல்லாம் எப்படிச் சமாளிக்கப் போகிறோம், அதற்கு ஒரு வழியும் காணோம். மத்திய அரசாங்கம் கொடுக்குமென்று காத்திருக்கிறோம். 35,000 டன் கொடுத்திருக்கிறார்கள். இனியும் கொடுப்பார்களாம். நம் ராஜ்யத்திலிருந்து கேரளத்திற்கு தானியங்கள் போகாமல் தடுப்பதற்கு

நமக்கு அதிகாரமில்லை. அரிசிதான் போகட்டும். புளி, மிளகாய், வெங்காயம் போன்ற பண்டங்கள் கூட சரசமான விலைக்கு சாதாரண மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய நம்மால் முடிந்ததா? இவைகள் ஏற்றுமதியாவதை தடுப்பதற்கு நமக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்றால், அதற்கும் மத்திய அரசாங் கத்தினிடம்தான் ஓட வேண்டியிருக்கிறது. ஏன் இந்த நிலைமை என்று நான் கேட்கிறேன்? நமது ராஜ்யத்திற்கு இந்த அதிகாரம் கூடவா இல்லை? இது வெறும் பஞ்சாயத்து போர்டா? ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது? புளி, மிளகாய், வெங்காயம் இவை களின் விலையேற்றத்தைத் தடுப்பதற்கு அதன் ஏற்றுமதியைத் தடுங்கள் என்று முறையிட்டிருக்கிறோம். அதற்கு என்ன நட வடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள்? தலைக்கு மேல் வெள்ளம் போன பின்பு இதைப் பற்றிப் பேச முன் வருகிறோமே தவிர காலத்திலேயே எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுப்பதற்கு தவறி விடுகிறோம். புளி, மிளகாய், வெங்காயம் போன்ற சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியா வசியமான பண்டங்களின் விலை ஏறிப் போயிருக்கிறது. நாம், செய்வது என்னவென்று தெரியாமல் திகைத்து பேசிக் கொண் டிருக்கிறோம், விவாதம் செய்கிறோம். இந்த விவாதத்தினால் என்ன பலன்? உருப்படியான பலன் எதுவும் மக்களுக்குக் கிடைக்காத வரையில் இந்த விவாதம் நடத்துவதால் என்ன பிரயோஜனம் என்று விளங்கவில்லை. **The Hon. Sri C. Subramaniam** அப்படியானால் உட்காருங்களேன். அமைச்சர் அவர்கள் உட்காரும்படி சொல்கிறார்கள். அமைச்சர்கள் வெளியேற வேண்டு மென்று நான் சொல்கிறேன். அவர்கள் வெளியேறிவிட்டால் நான் உட்காருவதற்கு என்னைப் பொறுத்த வரையில் கொஞ்சம் கூட சந்தேகமே கிடையாது. ஒரு பக்கத்தில், மத்திய அரசாங் கத்தினிடம் எதற்கெடுத்தாலும் ஓடிக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை, அடுத்த பக்கத்தில் நமது ராஜ்யத்திற்குள்ள உண்மை யான அதிகாரத்தைக்கூட பயன்படுத்திக் கொண்டு சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை என்பதை முத்தையா செட்டியார் அவர் களின் பேச்சிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நமக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் இருக்கிற அதிகாரத்தை நாம் சரிவர பயன் படுத்திக் கொள்ளவில்லை. எதிர்த்து நின்று சொல்லவுமில்லை. அதற்கு தாட்சண்யம் குறுக்கே நிற்கிறது. இதன் காரணமாக மக்கள் இன்று அவதிப்படுகிறார்கள். இது சரியா? இது சரியல்ல என்பதை நான் மிக உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, தக்க நடவடிக்கைகள் எடுத்து அதைத் தொடர்ந்து உறுதியாகக் காரியங்களைச் செய்வதற்கு இந்தச் சர்க்கார் முன் வர வேண்டுமென்றுதான் நான் மறுமுறையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இன்னொரு பக்கம் நாம் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். பற்றாக்குறை இல்லையென்று அடிக்கடி சொல்லப்படுகிறது. பற்றாக்குறை இல்லையென்று சொன்னால், ஏன் இந்த நிலைமை? சரி, அரசாங்கத்தின் புள்ளி விவரங்களை அப்படியே சரி என்று எடுத்துக் கொள்வோம். உற்பத்தியை அதிகரிப்பதற்கு





வேண்டியது, முக்கியமானது என்ன? உற்பத்தியை பெருக்கு வதற்கு முக்கிய தடையாக இருப்பது என்னவென்று கவர்னர் பெருமான் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். போதுமான ரசாயன உரம் நம்மால் பெற முடியாதது ஒரு முக்கிய காரணம் என்று சொல்கிறார்கள். ரசாயன உரம் பெறுவது என்றால், எவ்வளவு கஷ்டம் தெரியுமா? மனைவிக்கு நகைகள் கூட சுலபமாக வாங்கி விடலாம், ஆனால் ரசாயன உரம் மட்டும் சுலப மாக வாங்கமுடியாது. அந்த அளவிற்கு ரசாயன உரம் கிடைப் பதற்கு விவசாயிகளின் கஷ்டமிருக்கிறது. விவசாயிகளின் இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு நம்மால் ஒன்றும் செய்ய முடியாமல் போகுமானால் நாம் விவசாயிகளிடம் போய் உற்பத்தியை அதிகப் படுத்துங்கள் அதிகப்படுத்துங்கள் என்று அவர்களிடம் சொல்லி, தீவிர சாகுபடி திட்டத்திற்கு ஊக்கம் கொடுங்கள் என்று அவர்க ளிடம் சொல்வதில் என்ன பிரயோஜனம்? விவசாயிகளுக்கு ரசாயன உரம் வழங்குவதற்கு நமக்கு அதிகாரமில்லை. எல்லா மாவட்டங்களுக்கும் வேண்டிய ரசாயன உரத்தைப் பெற்றுக் கொடுக்க நமக்கு அதிகாரம் இல்லை. இந்த ராஜ்ய சர்க்காருக்கு இந்த அதிகாரம் கூட இல்லாத நிலைமையா இருக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தினிடம் கேட்டு வேண்டியதை ஏன் பெற்று வரக் கூடாது? ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட் உரையின்போதும் நிதியமைச்சர் அவர்கள் இந்த ராஜ்யத்தின் தேவையைக் குறித்து என்ன சொல்கிறார்களோ அந்தத் தேவையே பூர்த்தி செய்யப் படுவதில்லை. நிதியமைச்சர் அவர்கள் சொல்கிற தேவை உண்மை யான தேவையின் கால் பங்குதான் இருக்கும். அது கூட பூர்த்தி செய்யப்படுவதில்லை என்ற குறையை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சங்கடம் இல்லாது விவசாயிகளுக்கு வேண்டிய ரசாயன உரம் கிடைப்பதற்கு வேண்டிய வழிவகையை செய்து கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

இது தவிர பூச்சி மருந்து கிடைப்பதிலும் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. பூச்சி மருந்து கிடைப்பது என்பது மிகவும் அரிதாக இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்கடிக்க வேண்டும், இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயி விவசாயம் செய்வதற்குப் போய்க் கொண்டிருப்பானா அல்லது பூச்சி மருந்துக்கு அலைந்து கொண் டிருப்பானா? என்ன செய்வான் என்று அரசாங்கம் எண்ணிக் கொண்டிருக்கிறது சரியான விதை கிடைப்பதில்லை, சரியானபடி விவசாய கருவிகள் கிடைப்பதில்லை, ரசாயன உரங்கள் கிடைப்ப தில்லை, பூச்சி மருந்துகள் போன்றவைகள் கிடைப்பதில்லை, இந்த நிலைமையில் விவசாயிகள் என்ன செய்வார்கள் என்று அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்கிறது என்று அரசாங்கத்தைக் கேட்க 1 p.m. விரும்புகிறேன். இந்தவிதமான பல தொல்லைகளுக்கிடையில் விவசாயி இருந்து கொண்டிருக்கிறான். இந்த நிலைமையில் அரசாங்கம் ஒரு பெரிய கைங்கரியம் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு சமீபத்தில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி இருக் கிறார்கள். இதைச் சர்க்கார் செய்யவில்லை, மின்சார போர்டு தான் செய்திருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட சர்க்கார்

[Sri P. S. Chinnadurai] [7th December 1959

தான் இதற்கு பொறுப்பாளி ஆவார்கள். விவசாயத்திற்கு உபயோகப்படுத்துகிற மின்சாரத்திற்கு ஏற்கனவே சர்சார்ஜ் எல்லாம் விதித்திருந்தும் இப்போது 20 சத விகிதம் கூடுதல் அதிகமாக்கியிருக்கிறார்கள். இந்த விதத்தில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? உதகையில் சட்டசபைக் கூட்டம் நடந்த போது மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் மின்சாரக் கட்டணத்தை எல்லாம் மாற்றி அமைக்கப் போகிறோம் என்று குறிப்பிட்டார்கள். உயர்த்தி அமைப்பது தான் மாற்றி அமைப்பது என்பதின் அர்த்தமா என்று நான் கேட்கிறேன். இது அரசாங்கம் விவசாயிக்கு செய்யும் உதவியா? இது தான் உணவு உற்பத்திக்கு அரசாங்கம் செய்யும் உதவியா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இவ்விதம் செய்து கொண்டிருந்தால் எவ்விதம் உணவு உற்பத்தி எப்படி பெருக முடியும்? இந்த ராஜ்யத்தில் உத்தேசம் 80 ஆயிரம் பம்பு செட்டுகள் இருக்கின்றன. இதன் மூலம் பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் விவசாயம் செய்யப்படுகின்றன. முன்பு இருந்த கட்டணமே தண்ணீர் வரியாக கொடுக்கப்படுவதைப் போன்று நான்கு மடங்கு இருந்தது. இது சர்க்கார் கணக்கு. இவ்விதம் விவசாயிகளுக்கு மிகவும் அவசியமாக இருக்கின்ற மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் எவ்விதம் விவசாயத்திற்கு ஊக்கம் கொடுப்பதாக இருக்கும்? இதன் மூலமாக கொஞ்சமாவது விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்படுமா என்று அரசாங்கம் யோசனை செய்து பார்த்ததுண்டா? இந்த நிலைமையில் விவசாயிகள் எப்படி உணவு உற்பத்தியை பெருக்குவார்கள்? ஏற்கனவே இருந்த மின்சாரக் கட்டணத்தைவிட அண்டை ராஜ்யமான மைசூர் ராஜ்யத்தில் மின்சாரக் கட்டணம் குறைவு. இந்த நிலைமையில் நமது ராஜ்யத்தில் ஏற்கனவே இருந்து வந்த மின்சாரக் கட்டணத்தை ஏன் உயர்த்த வேண்டும்? அதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? இதற்கு என்ன காரணமாக இருந்தாலும் கூட, அவைகளை எல்லாம் வேறு வழிகளில் தீர்த்து வைக்கவேண்டுமே தவிர இதில் சேர்ப்பது என்பது கூடாது. ஆகவே மிகவும் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை வழங்குவதற்கு வழிவகை செய்யவேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதியாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கவர்னர் பெருமான் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களைப் பார்த்து யாருக்கும் திருப்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டுப் பணிக்காக முன்வரவேண்டும் என்று சொல்லும் இந்த நேரத்தில் யாருக்கும் திருப்தி யளிக்காத வகையில் இருந்தால் அதை என்னவென்று சொல்லுவது? சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய காரியத்தை எடுத்துக் கொண்டால் இதன் மூலம் அவர்கள் மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். கனம் முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னது போல் மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும், ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் அதிகமான சம்பள வித்தியாசம் இருந்து கொண்டிருக்கிறது. இதை மாற்றவேண்டும் இப்போது இருக்கக்கூடிய வேறுபாடு நீடித்துக்கொண்டிருக்கக்கூடாது என்பதை நானும் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். மேலும் இதைப்பற்றி நான் அதிகமாக



7th December 1959] [Sri P. S. Chinnadurai]

எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். இந்த நிலைமையில் சர்க்கார் சிப்பந்திகளுடைய மனதில் திருப்தி கிடையாது. நாட்டு மக்களுடைய மனதில் திருப்தி கிடையாது. விவசாய மக்களுடைய மனதில் திருப்தி கிடையாது. நடுத்தர மக்களுடைய மனதில் திருப்தி கிடையாது. இவ்விதம் எங்கு பார்த்தாலும் திருப்தியில்லாத நிலைமைதான் இருந்துகொண்டிருப்பதைத்தான் நாம் பார்க்கின்றோம். பொதுவாக நாட்டிலுள்ள மக்களை திருப்தியுள்ள மக்களாக ஆக்குவதற்கு நாட்டை ஆளுகின்றவர்களுக்குத் திறமையில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. நாட்டிலுள்ள மக்களை திருப்தியுள்ளவர்களாக்கி நாட்டில் ஒரு சமதர்ம நிலையைக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் கண்டிப்பாக இந்த அதிருப்தியை எல்லாம் போக்கடிக்க வேண்டும். இதை ராஜ்ய சர்க்கார் திட்டவட்டமாக செய்தாக வேண்டும். இந்த ராஜ்ய சர்க்கார் தற்போது ஏதோ நினைத்துக் கொண்டிருக்கலாம், நமக்குப் போதுமான பலம் இருக்கின்றது. நமக்குப் போதுமான அளவுக்கு அங்கத்தினர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால் நமக்கு எந்தவிதமான கவலையுமில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் வெளியில் நாட்டு மக்கள் இந்த சர்க்காரின் பேரில் குமுறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் எண்ணங்களை எல்லாம், அவர்களின் உணர்ச்சிகளை எல்லாம் தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள் என்று அமைச்சர் அவையைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சர்க்காரின் பேரில் நம்பிக்கை இல்லை என்று சொன்னால், இங்கு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினால்தான் நம்பிக்கை இல்லை என்று அர்த்தமல்ல, வெளியில் நாட்டுமக்கள் இந்தச் சர்க்காரைப்பற்றி என்ன எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்? என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்? என்பதையும் நாம் பார்க்கவேண்டும். இன்றுள்ள நிலைமையில், நாட்டு மக்களுடைய தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்வதில் இந்தச் சர்க்கார் தோல்வியுற்றிருக்கிறது என்றுதான் மக்கள் நினைத்துக்கொண்டு, இந்தச் சர்க்கார் தேவையான காரியங்களைச் செய்யவில்லை, ஆகவே வேறு சர்க்கார் தான் வேண்டும் என்று மக்கள் கிளர்ந்தெழுந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையைப் போக்குவதற்கு வேலை செய்யாமல் இப்போது நடந்துகொண்டிருப்பது போன்றே நடந்துகொண்டிருந்தால் வெறும் பஞ்சாயத் ஆட்சியாக இந்த சர்க்கார் நடந்துகொண்டிருக்கிறது, இதைக்கொண்டு எந்த விதமான உபயோகமும் இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதற்கெல்லாம் சீக்கிரத்தில் மக்கள் சரியான பதிலை கொடுப்பார்கள் என்பதை தெரிவித்துக்கொண்டு, கவர்னர் பெருமான் அவர்களது உரையானது, அதில் கூறப்பட்டிருப்பவை எல்லாம், உபயோகமில்லாத சடங்குகளில் சொல்லப்படும் அர்த்தமற்ற மந்திரங்களைப் போன்றுதான் இருக்கின்றன என்பதையும் தெரிவிப்பதோடு, பொதுவாக இதனால் மக்கள் திருப்தி அடையவில்லை என்பதையும் கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

[7th December 1959

* SRI K. R. VISWANATHAN : கனம் உதவி அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி கூறும் முகத்தான் நான் சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் தம் உரையில் நாட்டில் நல்ல மழை பெய்திருக்கிறது என்றும், வடகிழக்கு பருவமழை மூலமாக நாட்டுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்றும் இதன் காரணமாக பயிர்கள் எல்லாம் செழிப்பாக வளர ஆரம்பித்திருக்கின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக நாட்டில் மழை நன்றாக பெய்திருக்கிறது என்றாலும் வள்ளுவர் பெருமான் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல் "கெடுப்பதற்கும், எடுப்பதற்கும்" மழை உதவுகிறது. எங்கள் தொகுதியை எடுத்துக் கொண்டால், பொன்னேரி என்கின்ற ஏரியில் சுமார் 40 வருடங்களாக அதில் தண்ணீர் நிரம்பியதே கிடையாது. இப்போது தான் அது நிரம்பி கரைபுரண்டு வழிந்தோடுகிறது. இந்த ஏரியின் உட்பக்கத்தில் இருந்த கிராமங்கள் எல்லாம், அதிலுள்ள மக்கள் எல்லாம், இதனால் மிகவும் பர்திக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மக்கள் எல்லாம் இப்போது மிகவும் கஷ்டமான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அந்த கிராமத்தில் சுமார் 100 குடிசைகள் வரை தண்ணீரினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குடிசைகள் எல்லாம் கீழே விழுந்து நிர்மூலமாயின. அங்கிருந்த ஏழை மக்கள் எல்லாம் வெளியேறினார்கள். இப்போது அவர்களுக்கு சர்க்காரிலிருந்து குடும்பம் ஒன்றுக்கு 30 ரூபாய் வீதம் உதவித் தொகை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொகையைக் கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்துவதா அல்லது குடிசைகளை கட்டுவதா என்பது தெரியாமல் அவர்கள் மிகவும் நஷ்டமான நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றார்கள். ஆகவே இப்போது கொடுக்கப்பட்டு வரும் இந்த 30 ரூபாய் மட்டும் போதாது. அதை அதிகப்படுத்தி கொடுப்பதோடு மட்டுமல்ல, அவர்களுக்கு உணவுக்கு ஏதாவது வழிவகை செய்து கொடுக்கவேண்டும். இது மிகவும் அவசியமான காரியம் என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மேலும் தற்சமயத்தில் இந்த பொன்னேரி ஏரியின் ஆயக்கட்டில் ஆமணக்கந்தோண்டி என்ற கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமமும் பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. இங்குள்ள மக்களுக்கு குடியிருப்புக்கு எந்தவிதமான வழியுமில்லாமல், அவர்கள் என்னசெய்வது என்று தெரியாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குடியிருப்புக்கு ஏதாவது வசதி செய்துகொடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடைமையாகும். இதைப்பற்றி பல ஆண்டுகளுக்கு முன்பே அங்குள்ள மக்கள் அரசாங்கத்தினிடத்தில் வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி வெள்ளச்சேதம் ஏற்படும் சமயத்தில் வேறிடத்தில் போயிருப்பதற்காக அரிஜனங்களுக்கு தனியாக இடம் ஒதுக்கி கொடுத்திருக்கிறார்கள். இதற்காக வேலை செய்த அதிகாரிகளை அந்த மக்கள் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறார்கள். அதேபோன்று அங்குள்ள பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும் தனியாக இடம் ஒதுக்கி அவர்களுக்கும் வேண்டிய வாழ்க்கை வசதிகளை செய்துகொடுக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



7th December 1959] [Sri K. R. Viswanathan]

அடுத்தபடியாக, இரண்டாவது ஐந்தாண்டு திட்டச்செலவுக்காக நமது மாநிலத்திற்கு 152 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருந்தது, தற்போது 176 கோடி ரூபாயாக செலவிடப்படும் என்று கவர்னர் பெருமான் அவர்களது உரையிலிருந்து தெரியவருகிறது. இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். மேலும் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படவேண்டிய திட்டங்களைப்பற்றி எல்லாம் ஆலோசனை கூறுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக நீர்ப்பாசன விஷயங்களைப்பற்றி கூறப்பட்டிருக்கின்றன. இப்போது நமக்கு இருக்கின்ற எல்லா ஆறுகளையும் நாம் பயன்படுத்திவிட்டோம். இனிமேல் மற்ற மாநிலங்களிலுள்ள ஆறுகளைத்தான் நாம் பயன்படுத்தவேண்டும் என்றும் அங்கு யோசனை சொல்லப்பட்டது. இதைப்பற்றி நாம் ஆலோசிக்கும்போது நம் மாநிலத்திலே இருக்கின்ற பல சிற்றாறுகளைப்பற்றியும் நாம் கவனிக்கவேண்டும். பல சிற்றாறுகள் நமக்கு இருக்கின்றன. அந்தச் சிற்றாறுகளைக் கட்டுவதன் மூலம் நம் நீர்ப்பாசன வசதியை அதிகரித்துக் கொள்ளலாம் என்ற நோக்கமும் நம்மிடையே இருந்துவருவது கனம் உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். மருதையாறு என்ற ஆறு, ரயில் பாலத்தை உடைப்பதும் ரயில்களைக் கவிழ்ப்பதுமாக இருந்துகொண்டிருக்கிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இந்த ஆற்றைக் கட்டி, உடையார்பாளையம் தாலூகாவில் 40,000 ஏக்கருக்கு மேல் பாசன வசதி செய்துகொடுக்கலாம். அரசாங்கத்தார் இத்திட்டத்தைப் பரிசீலிக்க ஆரம்பித்தார்கள். பரிசீலித்து இத்திட்டம் வெற்றிகரமாக இருக்கும் என்று அரசாங்கத்தார் அறிந்த பிறகு, அதனால் பாதிக்கப்படக்கூடிய சில கிராமவாசிகள் எதிர்ப்புக்காட்டியதன் காரணமாக இன்று அரசாங்கத்தார் "இத்திட்டத்தைக் கைவிட்டுவிடலாமா, அல்லது இதைக் கைவிட முடியாதா" என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். பெரிய வறண்ட பிரதேசத்தை வளப்படுத்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் இந்த மருதையாற்றுத் திட்டத்தை எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் கைவிடக்கூடாது என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கும்போது, பூமிக்கு மேலே இருக்கும் நீரையெல்லாம் பயன்படுத்திய பிறகு பூமிக்குள் இருக்கும் நீரைப் பயன்படுத்த வேண்டும். அதற்காக ஆழக் குழாய்க் கிணறுகளை பூமிக்குள் இறக்க வேண்டும் என்ற திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது. குழாய்களை பூமிக்குள் இறக்குவதற்குப் பயன்படும் 'பவர் ட்ரில்ஸ்' இல்லாதது இத்திட்டம் நிறைவேறுவதற்குத் தடையாக இருக்கிறது. அந்த இயந்திரங்களை அரசாங்கத்தார் மற்ற மாநிலங்களிலிருந்தாவது மத்திய அரசாங்கத்திடமிருந்தாவது பெற வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாவது அரசாங்கம் அவைகளைப் பெற்று நம் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க முயற்சி செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் ஜவுளித் தொழில் நல்ல முறையில் அபிவிருத்தியடைந்து வருவதாக கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஜவுளித் தொழிலில், நமது மாநிலத்தில் கைத்தறித் தொழில் மிகச் சிறந்த கைத்தொழிலாக இருக்கிறது. இத்தொழிலின் நிலைமையை அரசாங்கத்திற்கு ஓரளவு விளக்க விரும்புகிறேன். கைத்தறித் தொழிலாளர்களின் நிலைமை வரவரச் சீரழிந்து வருகிறது. கைத்தறித் துணிகள் இப்போதும் பெரிய அளவில் தேங்கியிருக்கின்றன. இதற்குக் காரணம் ரிபேட்டில் செய்யப்பட்டுள்ள மாறுதல்தான் முன்பு, ரிபேட் பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் ஒரே விகிதத்தில் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது இரண்டு ஆண்டுகளாக அதை பொது மக்களுக்கு 6 சதவிகிதத்திலும் வியாபாரிகளுக்கு 3 சதவிகிதத்திலும் கொடுப்பதன் காரணமாக சிறு கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கும் சரக்குகள் வியாபாரிகளால் வாங்கப்படாமல் தேங்க ஆரம்பித்திருக்கின்றன. வியாபாரிகள் வாங்க முன்வந்தாலும் மாஸ்டர் வீவர்கள் என்ற பெரிய விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுடன் போட்டியிடுகின்றனர். அவர்கள் கடனுக்குச் சரக்குகளை விற்றுப் போட்டியிடுகின்றனர். இதன் காரணமாகவும் கூட்டுறவுச் சங்கங்களில் சரக்குகள் மிகவும் தேங்கியிருக்கின்றன. அவ்வாறு தேங்கியிருக்கும் சரக்குகள் விற்பனையாக வேண்டுமென்றால், பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் ஒரே விகிதத்தில் 'ரிபேட்' கொடுக்கப்பட வேண்டும் என்பது கூட்டுறவுச் சங்கங்களின் வேண்டுகோள். அவ்வாறு செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கும் தறியாளர்களுடைய உயர்ந்தபட்சக் கூலி 1954-ல் நிர்ணயிக்கப்பட்டது. அந்த வரம்பைத் தளர்த்த வேண்டும் என்று கூட்டுறவுச் சங்கங்கள் பல தடவை கேட்டிருக்கின்றன. ஆனால் அதைத் தளர்த்த அரசாங்கம் இன்னும் முன்வரவில்லை. அதன் காரணமாக நல்ல முறையில் வேலை செய்துகொண்டிருக்கும் சங்கங்களில் கூட 20-ம் நெம்பர் நூல் நெசவு நெய்பவர்களுக்கு ஒரு முடிச்சுக்கு 6 அணு வீதமும், 60-ம் நெம்பர் நூல் நெசவு நெய்பவர்களுக்கு ஒரு முடிச்சுக்கு 7 அணு வீதமும், 100-ம் நெம்பர் நூல் நெசவு நெய்பவர்களுக்கு முடிச்சுக்கு 9 அணு வீதமும் இப்போதும் கூலி கொடுக்கப்பட்டு வருகிறது. 1945-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கூலிப்படி இப்போது அவ்வாறு கூலி கொடுக்கப்படுகிறது. இதற்கு மேல் கூலி கொடுக்க வகைசெய்வதற்கு விதியைத் தளர்த்த அரசாங்கம் முன்வரவில்லை. இதனால் கூட்டுறவு நெசவாளர்களின் நிலைமை படு மோசமாக இருக்கிறது. மேலும், கைத்தறி நெசவாளர்களின் குறைந்தபட்சக் கூலியையும் நிர்ணயம் செய்ய அரசாங்கம் முன்வர வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சங்கங்களின் சரக்குகளை வேறு இடங்களில் கொண்டுவந்து விற்கும் விஷயத்தில் மார்க்கெட்டிங் டெப்போக்களுக்கு உதவிசெய்ய அரசாங்கம் முன்வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் சர்க்காருடைய சட்டத்தின்படி, ஒரு கூட்டுறவுச் சங்கம் 500 வேலை செய்யும் தறிகளைக் கொண்டதாக இருந்தால் தான் அது இந்த உதவிக்கு அருகதையுடையதாகிறது.



இதன் காரணமாக இப்போது இந்த மாநிலத்தில் ஒரே ஒரு சங்கம் தான் இந்த உதவியைப் பெற முடிகிறது. அது சேலத்தில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஒரே ஒரு சங்கம் தான் இந்த உதவியால் பயனடைய வேண்டும் என்பது சர்க்காரின் நோக்கமல்ல. மாநிலம் பூராவிலுமுள்ள சங்கங்கள் எல்லாம் பயனடைய வேண்டும் என்பது தான் சர்க்காரின் நோக்கம். ஐந்நூறு தறிகள் இரண்டு, மூன்று சங்கங்கலாகச் சேர்ந்து இருந்தாலும் அவை கூட்டாகச் சேர்ந்து முன்வரும் பட்சத்தில் இந்த உதவி அளிக்கப்படலாம் என்று விதியைத் தளர்த்தினால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** சபை 1½ மணிக்குக் கலைந்து பிறகு 3 மணிக்குக் கூடி 3 மணியிலிருந்து கூடியதும் 5 மணி வரையில் விவாதம் நடக்கும். பிஸினெஸ் அட்வைஸரி கமிட்டியின் முடிவுகளை மத்தியான்னம் தெரிவிக்கிறேன்.

*** SRI P. K. MOOKIAH THEVAR :** கனம் சபாநாயகர் அவர்களே, நமது மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையில், "அரசாங்கம் அத்தனையும் சாதித்து விட்டதாகவும், அதற்காக அரசாங்கத்தார் தங்களையே தாங்கள் திருப்தி செய்துகொள்ளும் முறையில், குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த உரையில் அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் கோரப்பட்டிருக்கிறது. அரசாங்கம் முன்னேற்றகரமான காரியங்களைச் செய்திருக்கிறதாகவும் அதற்கு அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விலைவாசியையாவது குறைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அளவிற்கு அரசாங்கம் நல்ல திட்டங்களைப் போட்டிருந்து அதற்கு நமது ஒத்துழைப்பு வேண்டும் என்று சொல்லியிருந்தால், அதை நாம் வரவேற்றிருப்போம். நாம் பின்னேற்றத்தில் தான் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோமே தவிர உண்மையிலேயே முன்னேற்றத்தைக் கண்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதை நாங்கள் சொல்லிப் பிரயோஜனமில்லை. சமீபத்தில் நம் பிரதம மந்திரி அவர்களே, நம் நாட்டில் எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் செலவழிக்காத அளவுக்கு, உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காக 900 கோடி ரூபாயை செலவழித்திருந்தும் அதற்கான அளவிற்கு நன்மை ஏற்படவில்லை என்று கூறிவிட்டார்கள். அவ்வாறு கூறியவர், "நாம் திட்டம் போட்டோம். பணம் கொடுத்தோம். ஆனால் பணம் எந்த வழியில் போனது என்று சொல்வதற்கில்லை. அதற்காக கீழே உள்ளவர்கள் அத்தனை பேரும் பணத்தைச் சாப்பிட்டுவிட்டார்கள் என்று சொல்லவில்லை" என்று சொல்லியிருக்கிறார். சமீபத்தில் நமது கனம் முதல் மந்திரி அவர்களும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலுமாக 2,000 கோடி ரூபாய் செலவழித்தும் அதற்கான பலன் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் பார்க்கும்போது அரசாங்கத்தின் பணம் வீணாகிற காரியத்திற்கு, முன்னேற்றமல்லாத ஒரு காரியத்திற்கு, 'பின்னேற்றமான' ஒரு காரியத்திற்கு எப்படி ஒத்துழைப்பைக் கொடுப்பது? மேலும், சட்டமும் ஒழுங்கும் நல்ல முறையில் இருந்துவருவது மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[Sri P. K. Mookiah Thevar] [7th December 1959

அதைக் கண்டு நாம் மிகவும் ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. காரணம், உதாரணமாக எனது பகுதியில் சமீபத்தில் நமது மந்திரி கக்கன் அவர்களும், ராமையா அவர்களும் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். கிராமம் கிராமமாகப் போனார்கள். எங்கு பார்த்தாலும் ரோடு வசதி இல்லாமல், தண்ணீர் வசதியில்லாமல் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருப்பதைப் பார்த்தார்கள். அங்குள்ள வீடுகளைப் பார்த்து குட்டிச் சுவருகளாகவும் கூரை வீடுகளாகவும் இருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் சுற்றுப் பிரயானம் செய்தபோது அங்குள்ள மக்கள் அவர்களை வரவேற்று, வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்து மாலை போட்டு கௌரவித்த பிறகு, உங்கள் குறைகளையெல்லாம் கவனிக்கிறோம் என்று சொல்லிவிட்டு நேராக ஊருக்கு வந்தபிறகு, சில வாரத்திற்கெல்லாம், திடீரென்று, அதிசயிக்கத் தக்க வகையில், குற்ற பரம்பரைச் சட்டத்தை மீண்டும் மறைமுகமாகப் புகுத்தும் வகையில் கிராமம் கிராமமாகச் சென்று போலீஸார் புள்ளிவிவரம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். வேதனை தரக்கூடிய வகையில், நவநாகரீக காலத்தில் மனிதத் தன்மைக்ககுப் புறம்பான இந்தக் காரியத்தைச் செய்ய ஆரம்பத்திருப்பது மிகவும் ஆச்சரியத்தைத் தரக்கூடியதாக இருக்கிறது. குற்ற பரம்பரைச் சட்டம் என்றால் என்ன என்று பல அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்காது. கருவில் இருக்கிற, பிறக்கிற குழந்தைகளும், வயது வந்த ஆண்கள் அத்தனை பேரும் குற்றம் செய்யும் குணமுடையவர்கள் என்று அவர்களைத் தண்டித்துக் கண்டிக்க, நேரடிப் பார்வையில் வைத்துக்கொள்ள இரவு 6 மணியிலிருந்து காலை 6 மணி வரையில் போலீஸ் ஸ்டேஷனிலேயே எல்லோரும் படுத்துக்கொள்ள வேண்டும் என்ற முறையில் இருக்கக் கூடியது இந்தச் சட்டம். அவர்கள் வியாபாரம் முதலிய விவகாரங்களில் ஈடுபட முடியாது. இப்படி அன்னியர்கள் ஆண்ட காலத்தில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தார்கள். 1919-ம் ஆண்டில் வெள்ளையர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, இதே அரசாங்கத்தில் உள்ளவர்கள் இந்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார்கள். உதாரணமாக உசிலம்பட்டிக்குப் பக்கத்திலுள்ள பெருங்காமநல்லூர் கிராம மக்கள் இதை எதிர்த்த காலத்தில், 20 அல்லது 21 பேர்களைச் சுட்டுக் கொன்றார்கள். ஒரு கர்ப்பவதியும் கொல்லப்பட்டாள். கொன்றதோடு அத்தனை பேர்களையும் ஒரே குழியில் போட்டுப் புதைத்தார்கள். இன்றைக்கு அவர்களே ஆட்சிக்கு வந்த பிறகு மறைமுகமாக இந்தச் சட்டத்தைப் புகுத்தியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அங்குள்ள மக்கள், மந்திரிகளுக்கு வரவேற்புக் கொடுத்த காரணத்தினால்தான் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை என்று சொல்லிக் கொள்கிறார்கள். அங்குள்ள மக்கள் எதிர் கட்சிக்காரர்களுக்கு ஓட்டளித்தார்கள் என்ற காரணத்தினாலோ என்னவோ இம்மாதிரி மனித உரிமைகளைப் புறக்கணிக்கக் கூடிய முறையில் (suppression of civil rights காரியங்களைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் சட்டமும் ஒழுங்கும் நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு, மறைமுகமாக குற்ற பரம்பரைச் சட்டம் புகுத்தப்பட்டிருக்கிறது. இப்போது போலீஸார் கிராமம்



7th December 1959] [Sri P. K. Mookiah Thevar]

கிராமமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். எப்படி புள்ளிவிவரம் சேர்க்கிறார்கள் என்றால், வயது என்ன என்று பார்த்து, 12 முதல் 55-க்கு உட்பட்டு உள்ளவர்களைப் பார்த்து, குற்றம் செய்தவர்கள், குற்றம் செய்யத் தகுதியுள்ளவர்கள், குற்றம் செய்யும் குணம் உடையவர்கள், வாழ்க்கைக்கு வகை இல்லை அதனால் குற்றம் செய்யலாம், என்று எல்லாவற்றையும் சேர்த்து புள்ளிவிவரம் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அவர்களாகவே, ஒழுங்காக இருக்கும் மக்களை, சந்தேகம் கொண்டு, குற்றம் செய்யக் கூடிய முறையில் தூண்டிவிடக் கூடாது என்று வேண்டிக்கொள்கிறேன். இம்மாதிரி அரசாங்கத்தார் செய்யமாட்டார்கள், செய்யக் கூடிய நிலைமையில் இருக்க மாட்டார்கள், எல்லையிலே ஆபத்து ஏற்பட்டிருக்கிற சந்தர்ப்பத்தில் உள்நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படவேண்டும் என்ற எண்ணத்தோடு உள்ளவர்கள் இம்மாதிரி செய்ய மாட்டார்கள், ஆனால் கீழே உள்ள உத்தியோகஸ்தர்கள் இம்மாதிரி செய்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

அடுத்தபடியாக கவர்னர் அவர்கள் பிரசங்கத்தில் குறிப்பிடும் போது, தானியங்களின் விலை ஏறுமுகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். குறிப்பிட்டுவிட்டு, வளர்ச்சியடைந்த வரக் கூடிய ஒரு பொருளாதார அமைப்பில் விலை ஏற்றம் இருக்கத்தான் செய்யும் என்று கூறி, உடனடியாக விவசாயிகளுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் விலைவாசி உயர்வால் விவசாயிகள் முன்னேறி இருக்கிறார்களா, அவர்களுடைய வாங்கும் சக்தி அதிகமாகியிருக்கிறதா என்று பார்த்தால், கிடையாது. விவசாயம் செய்யக் கூடிய விவசாயி அறுவடை செய்யும் காலத்தில் அல்லது அறுவடைக்கு முன்னால், விவசாயத்திற்கு என்னென்ன செலவாகியது என்று பார்த்து விவசாயப் பொருளுக்கு விலை நிர்ணயிப்பது கிடையாது. விவசாயிகள் ஒன்று கூடி ஒரு சங்கம் வைத்து விலை நிர்ணயிப்பது இல்லை. அவர்கள் விற்கக் கூடிய விலை அறுவடை காலத்தில் குறைந்துதான் இருக்கிறது. அறுவடைக்குப் பிறகு, மார்க்கெட்டுக்கு வந்தபிறகு, வியாபாரிகளுடைய கைக்கு வந்தபிறகு, விலை உயர்த்தி வைக்கப்படுகிறது. இப்படி இருக்கும்போது எந்த விதத்தில் விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்தால் சந்தேகமாகத்தான் இருக்கிறது. எல்லாப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் என்ன? நமது அரசாங்கத்திற்கு முதலாவது ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று இந்தத் திட்டங்களின் காரணமாக இன்று பணம் தேவையாக இருக்கிறது. இந்தத் தேவைக்கு வரிகள் போடப்பட்டிருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்குகிறார்கள். இவைகள் எல்லாவற்றையும் சேர்த்துக் கூட பணம் தேவைப்படுவதால் நிறைய நோட்டு அடிக்கப்படுகிறது. அதனால்தான் இன்று விலைவாசிகள் கட்டுப்படாமல், செல்வப் பெருக்கு இல்லாமல், பொருள் பெருக்கு இல்லாமல், நோட்டுப் பெருக்கு மட்டும் இருப்பதால், விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போய்க்கொண்டிருக்கின்றன. அதை விட்டு விட்டு, நமது மாநில சர்க்கார் அல்லது அடுத்த மாகாணங்களிலுள்ளவர்கள் ஸ்டாக் வைத்துக் கட்டுப்படுத்தாததோ காரணமாக

[Sri P. K. Mookiah Thevar] [7th December 1959

ஆகாது. இது அகில இந்திய பிரச்சினையாக, மத்திய சர்க்காரைச் சேர்ந்ததாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக அதிகப்படியான நோட்டு அடிப்பதன் காரணமாக இந்த விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அமெரிக்க நாட்டை நாடி அந்நாட்டிலுள்ள ஒரு ஸ்தாபனம் அளிக்கக்கூடிய உரப்பொருள்களைக்கொண்டு ஒரு ஜில்லாவில் எல்லா குடியானவர்களுக்கும் பயன்படக் கூடிய முறையில் ஒரு திட்டம் அமுலாக்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். எனக்கு முன்னர் பேசியபோது சொன்னார்கள் இதற்காக தஞ்சை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்று. இப்படி தஞ்சை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையானால், இப்போது அங்கே நெல் பயிரிடுவதற்கு பதிலாக கரும்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இப்படி கரும்பு உற்பத்தி செய்வதில் இந்த உரப்பொருள்களை உபயோகித்தால் எப்படி நெல் உற்பத்தி அதிகமாக முடியும்? உணவுப் பஞ்சம் எப்படித் தீரும்? நிலச் சட்டம் வருகிற காரணத்தினால், நிலங்களையெல்லாம் கரும்பு உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்து ஆங்காங்கு சர்க்கரை மில்களைக்கட்டி அதற்காக காலனிகளை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். கரும்பு பயிரிடுவதால் உணவு உற்பத்தி எப்படி உயரும். இந்த உரப்பொருள்களைக் கொண்டு கரும்பு பயிர்களைப் பயிரிட உபயோகிப்பார்களே தவிர, நெல் பயிரிடுவதற்கு உபயோகிக்கமாட்டார்கள். வெளி நாட்டிலிருந்து நம் நாட்டில் விவசாயப் பொருள் உற்பத்திக்காக வேண்டிய உதவிகளைச் செய்துவரக்கூடிய நேரத்தில், நம் நாட்டில் என்ன செய்கிறார்கள் என்று குறிப்பிடுவதற்காக ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியில் ஒரு புதிய கால்வாய் வெட்டி கனம் கக்கன் அவர்கள் வந்து திறந்துவைத்தார்கள். திறந்துவைத்து ஆடி மாதக் கடைசியில் தண்ணீர் திறந்து விட்டார்கள். தண்ணீர் வந்ததும் கால்வாய் ஒரு இடத்தில் உடைந்து விட்டது. திறக்கும்போது நான்கு மாதப் பயிராகப் பயிரிடும்படி சொன்னார்கள். கால்வாய் உடைந்து போனதால் பல இடங்களில் தண்ணீர் சரியாகப் பாயவில்லை. காலா காலத்தில் நாற்று கூட போட முடியவில்லை. இப்போது நான்கு மாதங்கள் ஆகி விட்டன, நிறுத்தப் போகிறோம் என்று சொல்கிறார்கள். 3,500 ஏக்கர்களுக்கு மேல் பயிரிட்டிருக்கிறார்கள். இதை மந்திரி அவர்களே பார்த்தார்கள். பயிர் செய்யப்பட்டிருக்கும்போது கதிர் பரிந்து விளையப்போகிற இந்தக் கடைசி நேரத்தில் நிறுத்தப் போகிறார்கள். அங்குள்ளவர்கள் இன்னும் 40, 45 நாட்கள் தண்ணீர் விட்டால் நல்லதாக இருக்கும் என்று எண்ணுகிறார்கள். அதே சமயத்தில் என்ஜினியர்கள் 4 மாதங்கள்தான் சொன்னோம் அதற்குமேல் முடியாது என்று சொல்லுகிறார்கள். இப்போது தண்ணீர் பாயாவிட்டால் ஒரு நெல், இரண்டு நெல் கூட வர முடியாது, பயிர்தான் இருக்க முடியும். இந்த முறையில் செய்தால் நாம் உணவு உற்பத்தி பெருக்க முடியாது. விவசாயிகள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதிகப்படியாகச் செலவழித்திருக்கிறார்கள். இந்த நிலையில் விவசாயிகளுடைய கஷ்டங்



7th December 1959] [Sri P. K. Mookiah Thevar]

களை நிவர்த்தி செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நிபுணர்களுக்கு விவசாயிகளுடைய சங்கடங்கள் தெரியாது. உடனடியாக அரசாங்கம் இதற்கு ஆவன செய்ய வேண்டும்.

**THE HON. SRI P. KAKKAN:** ஏற்கனவே 4 மாதங்களுக்கு மட்டும் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்பது திட்டம். என்னிடம் சிலர் வந்து அந்தக் காலம் முடிந்து விட்டது என்றும் மேற்கொண்டு தண்ணீர் விட முடியாது என்று அதிகாரிகள் சொல்லி விட்டார்கள் என்றும் சொன்னார்கள். ஷார்ட் டெர்ம் கிராப்ஸ் போடவேண்டுமென்று திட்டமிட்டு தண்ணீர் கொடுத்தோம். என்னிடத்தில் விவசாயிகள் வந்து கேட்டார்கள். மேற்கொண்டு தண்ணீர் கொடுத்து பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நாங்கள் சொல்லி விட்டோம். இப்போது மழையும் நன்றாகப் பெய்திருக்கிறது. கண்மாய்களெல்லாம் நிறைந்திருக்கின்றன. அதனால் பயிர்களும் நன்றாக விளையும் என்று நினைக்கிறேன்.

*** SRI P. K. MOOKIAH THEVAR:** இதற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமை பட்டிருக்கிறேன். விவசாயிகள் நேரடியாகச் சொல்லியோ, அல்லது நாம் சொல்லியோ அல்லது மந்திரியாகயேயோ செய்தாலும் நாட்டுக்கு நன்மை பயப்பதாக இருந்தால் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.

நான் முன்னால் குறிப்பிட்டபடி குற்ற பரம்பரைச் சட்டத்தை எதிர்த்துப் போராடிய பாதிக்கப்பட்ட பெருங்காமநல்லூர் போன்ற கிராமங்களுக்குத் தண்ணீர் வசதி வேண்டுமென்று கோரி, அதற்காக திட்டம் போட்டு சர்வே செய்து கற்களை ஊன்றிய பிறகு அந்தப்பகுதி மக்களெல்லாம் கடந்த பத்து ஆண்டு காலமாய் எதிர்பார்த்து எல்லா ஏற்பாடுகளும் செய்த பிறகு திடீரென்று அந்த திட்டத்தை மாற்றப் போவதாகக் கேள்விப்படுகிறோம். இது கொடுமையானது, கண்டிக்கத் தக்கது. இதை அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனிக்க வேண்டுகிறேன்.

கடைசியாக, நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பற்றி ஒரு சில
வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு 1-30
கட்டுவதற்கான சட்டம் இந்தச் சட்டசபைக் கூட்டத்திலேயே p.m.
நிச்சயமாக வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்கு மாறாக, அந்தச் சட்டத்தைத் தயாரிப்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். கனம் முத்தையாச் செட்டியார் அவர்கள் சொன்னது போல் இந்த நில வரம்புச் சட்டம் வந்தாலும் கூட யாருக்கும் எந்த விதமான பிரயோஜனமும் இல்லாததாகத்தான் இருக்கும் என்று கூற விரும்புகிறேன். சமீபத்தில் அருப்புக்கோட்டை தேர்தல் கூட்டத்தில் நமது முதன் மந்திரி குறிப்பிட்டார்கள்—உச்ச வரம்பு கட்டுவதை முன் வைத்து தேர்தலில் நிற்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அங்கு தோற்றுவிட்ட காரணத்தினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அந்தச் சட்டமானது மறைமுகமாகக் கைவிடப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. அந்தச் சட்டம் என்ன காரணத்தினால் கொண்டுவரப்படவில்லை என்று தெரிய

[Sri P. K. Mookiah Thevar] [7th December 1959

வில்லை. இதையெல்லாம் மூடி மறைக்கத்தான் (குறுக்கீடு) கூட்டுறவு விவசாய முறை கொண்டுவரப்பட விருக்கிறதோ என்னவோ தெரியவில்லை.

MR. SPEAKER : The House will now adjourn for lunch and meet again at 3 p.m.

**(After lunch—3 p.m.)**

IV.—ANNOUNCEMENTS—*cont.*

(3) DECISIONS OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. SPEAKER : I want to announce the decisions of the Business Advisory Committee meeting held this morning. The Committee decided as follows :—

1. That the House will sit up to 1-30 p.m. to-day, rise for lunch and reassemble at 3 p.m. and continue till 5 p.m.

2. That from 8th December (to-morrow), the House will sit from 9 a.m. to 1-30 p.m.

3. That on the 7th, 8th, 9th, 10th and 11th there will be discussion on the Governor's Address, and that on the 11th two Opposition Leaders, the Hon. Sri V. K. Ramaswamy Mudaliar and Sri C. N. Annadurai will speak and that the Leader of the House and Government spokesman will reply to the Debate. After the discussion on Governor's Address, the House will take up the discussion and voting on Demands for excess expenditure in 1956–57 and Demand for grant for further expenditure in 1959–60. The House will meet in the afternoon also if necessary. There will be no meeting on the 12th and 13th December 1959.

The following will be the programme for the rest of the sittings :—

14th December 1959.—Consideration and passing of—

(1) Appropriation Bills in respect of the Excess and Supplementary Demands.

(2) The Madras Irrigation Works (Construction of Field Bothies) Bill, 1959.

(3) The Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Shencottah Taluk) Bill, 1959.

(4) The Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill, 1959.

15th December 1959.—Non-official business.

16th December 1959.—Constitution (Eighth Amendment) Bill, 1959—Consideration.

17th December 1959.—Other Government Bills, if any.

The House will adjourn on the 17th, if the business is over. A copy of these decisions will be circulated to hon. Members.

The House will now take up the discussion on the Governor's Address.



7th December 1959]

IX.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

* SRI V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய பேருரையின்மீது நன்றி செலுத்தும் பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் பேருரையில் இன்றைக்கு நாட்டிலுள்ள தற்கால நிலை விவரத்தையும், நிலவிவரும் நெருக்கடியை சமாளிக்க என்னென்ன காரியங்கள் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட விருக்கின்றன என்பதைப்பற்றியும், சுருக்கமாக குறிப்பிட்டிருக்கிறார். இன்றைக்கு ராஜ்யத்தில் இருக்கக்கூடிய முக்கிய பிரச்னையும் முதல் பிரச்னையுமான உணவுப் பொருள்களின் விலை யேற்றத்தை மறைக்காமல் தெளிவுபட சொல்லியிருக்கிறார். அதிலும், முக்கியமாக பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் நகரப்புற மக்கள் என்பதும் குறிப்பாக ஒத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதை சமாளிக்க என்ன திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன என்பதைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். முக்கியமாக மூன்று திட்டங்கள் குறிப் பிடப்பட்டிருக்கிறது. முதலாவதாக "போர்டு பவுண்டேஷன்" போன்ற ஸ்தாபனங்களின் உதவியையும் ஏற்றுக்கொண்டு அதன் மூலம் தீவிர சாகுபடி செய்து அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கலாம் என்பது. இரண்டாவதாக, நமது நாட்டின் அண்டைய மாநிலங்களில் உள்ள உபரி நீரை நம் ராஜ்யத்திற்குத் திருப்புவதன் மூலமாக அதிகப்படியான இடங்களுக்கு விவசாயத் தைப் பெருக்குவதாகவும், மூன்றாவதாக விவசாயிகளுக்கு அதிக கடன் வசதி செய்து கொடுக்க எல்லா கிராமங்களிலும் கடன் உதவியளிக்கும் கூட்டுறவு சங்கங்களை அமைப்பது. இப்போது இல்லாத கிராமங்களிலும் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அவை களின் மூலமாக கடன் வசதி செய்து கொடுக்கப்போவதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட முக்கியமான மூன்று திட்டங் கள் கவர்னருடைய பேருரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு கடன் வசதி செய்யும் விஷயத்தில் இப்பொழுது நடைமுறையில் இருப்பதைப் பார்த்தால் விவசாயிகளுக்கு தேவைப்படுகிற காலங்களில் கடன் கிடைப்பதாகவே இல்லை. பேருக்கு பல கிராமங்களில் கூட்டுறவு சங்கங்களை அமைத்திருப்ப தாகத்தான் சொல்லப்படுகிறது. அதுவும் 100-க்கு 90 கிராமங்களில் அமைத்திருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. அப்படியிருந்தும் விவசாயிகளுக்கு காலா காலத்தில் தேவைப்படுகின்ற கடன் தேவை யிருக்கும்போது கிடைப்பதாகவே இல்லை. கடன் வாங்குவதாக இருந்தால் அதைக் காலம் கடத்த பல சடங்குகள் போன்ற விதி களும் நடைமுறைகளும் குறுக்கிடுகின்றன. அதிகப்படியாக காலம் கடக்கிறது. கால தாமதம் ஆவதால் அவர்களுக்கு கடன் வாங்கும் வசதிகள் இல்லாமல் போய் விடுகிறது. அதைத் தவிர தகுந்த ஜாமீன் வேறு கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படு கிறது. போதிய ஜாமீன் கொடுக்க முடியாமல் பல விவசாயி களுக்கு கடன் பெற முடியாமல் போய் விடுகிறது. ஆகவே அவர் களுக்கு கடன் கொடுக்கும் விஷயத்தில் விதிகளில் முக்கியமான

மாறுதல்களைச் சட்டத்தில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். விவசாயிகள் உண்மையிலேயே கடனால் பயன் அடைய வேண்டும் என்று நினைத்தால் அவர்களுக்கு எளிதில் கடன் கொடுக்கக்கூடிய விதத்தில் சட்டத்தை திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இப்பொழுது தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்குவதாக இருந்தால், அவர்களுக்கு சௌகரியமாகக் கடன் கிடைக்கிறது. ஏனென்றால் தனிப்பட்டவர்கள் அவ்வளவாக ஜாமீன் கொடுக்க வேண்டும் என்று சொல்வது இல்லை. கேட்டவுடனே விரைவில் வேண்டிய தொகையை கடனாகக் கொடுத்து விடுகிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் ஏற்படுகின்றன. ஆகவே கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதாக இருந்தால் அவர்கள் பயன் அடையும் அளவில் கொடுக்க வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உண்மையிலேயே இந்த மூன்று திட்டங்களையும் எடுத்துக் கொண்டால் அதைப் பற்றி யாரும் குறை கூறவே முடியாது. இப்படி திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டாலும் அதனால் உணவு பொருள்களுடைய விலை உடனடியாக இறங்கி விடும் என்று சொல்வதற்கு இல்லை. மக்கள் எதிர் பார்ப்பது எல்லாம் உடனடியாக உணவு பொருள்களின் விலை இறங்க வேண்டும் என்பதுதான். இதுபோன்ற திட்டங்களின் மூலம் அதன் பலனை அடைவதற்கு பல வருஷங்களாகலாம். அப்படி இல்லாமல் உணவு விலை பிரச்னையை உடனடியாகத் தீர்ப்பதற்கு வேண்டிய உடனடி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதைவிட வேறு முக்கியமான பிரச்னை இல்லை. ஒரு சில வருடங்களில் உங்கள் பிரச்னை தீர்ந்துவிடும் என்று மக்களிடத்தில் போய் சொன்னால் அவர்கள் எந்தவிதத்திலும் ஆறுதல் அடைய மாட்டார்கள். விலை இறங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். விலை இறங்காவிட்டால் சர்தாரண மக்கள் எவ்வளவு முன்னேற்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், மக்களின் கண்களில் படாது. ஆகவே விலைவாசி இறங்குவதற்கு முக்கியமாக வழிவகை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட **Long Range** திட்டங்களைப்பற்றி சொன்னால் தற்போது அவதியில் ஆழ்ந்து இருக்கும் மக்கள் சந்தோஷமடைய மாட்டார்கள்.

இப்பொழுது மக்களுக்குத் தேவையான முக்கியமான உணவுப் பொருள்களாகிய புளி, மல்லி, மிளகாய் போன்றவைகளின் விலை ஒரேயடியாக ஏறிக்கொண்டிருக்கிறது. இவைகள் எல்லாம் இன்றைக்கு ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு மடங்கு விலை ஏறி இருக்கிறது. அதைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. புளி போன்றவைகள் இப்பொழுது வெளி ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அதனால் விலை உயர்ந்திருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. அதை உடனடியாகத் தடுக்க வேண்டும். வேண்டுமானால் அதிகமாக விளையும் வெளி ராஜ்யங்கள், வெளி நாடுகளிலிருந்தாவது நமது நாட்டிற்கு அவைகளை இறக்குமதி செய்து விலையைக் குறைக்க வேண்டிய நடவடிக்கை எடுத்துக்





கொள்ள வேண்டும். அப்படி வரவழைத்து விலையை இறக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். இதனால் பல கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை. எந்த விதத்திலாவது இன்றைக்கு உணவு பொருள்களுடைய விலை இறங்கவேண்டும். இதுதான் இப்போது மக்களிடத்திலுள்ள முக்கியமான பிரச்னை. இதை முக்கியமாக மனதில் வைத்துக்கொண்டு முன்னேற்ற திட்டங்களின் உத்தேசச் செலவிலிருந்தாவது இதற்கு என்று பல கோடி ரூபாயை செலவு செய்தாலும் கெடுதல் இல்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு ப்ரொக்யூர்மெண்டு பழையபடி வருவதற்கு ஏது இருக்காது. நல்ல முறையில் மழை பெய்து இருப்பதனால் விலைவாசிகள் இறங்கிக்கொண்டு வருகிறது. ப்ரொக்யூர்மெண்டு, ப்ரைஸ் கண்ட்ரோல் என்பதை எல்லாம் எடுத்துவிட்டதால் நெல், அரிசி போன்றவற்றின் விலை படிப்படியாகக் குறைந்து வருகின்றது. துரதிருஷ்டவசமாக அப்படிப்பட்டதொரு நிலைமை வருமானால், அவசியம் ஏற்பட்டால் லெவி ஸிஸ்டத்தைக் கொண்டு வருவது நன்றாக இருக்கும். ப்ரொக்யூர்மெண்டு என்றால் விவசாயிகளிடமிருந்து நகர மண்டிகளுக்கு நெல், அரிசி வருவது கடினமாகிவிடும். விலையும் மிகவும் அதிகரித்துவிடுகிறது. ஆகவே ப்ரொக்யூர்மெண்டு ஸிஸ்டத்தையே ஒழித்துவிட்டு, லெவி முறையை வைத்துக்கொண்டால் வாங்குவது எளிதாக இருக்கும். வசூல் செய்வதும் எளிதாக இருக்கும். ஆகவே அவசியம் ஏற்பட்டால் லெவி ஸிஸ்டத்தையே கொண்டுவர வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரசாயன உரம் நமக்குத் தேவையாக இருக்கிறது. போதியபடி கிடைக்காததினால்தான் சென்ற ஆண்டு உற்பத்தி பாதிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதுபற்றி ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போன்மீல் என்ற ரசாயன உரத்தைத் தயார் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படுகிற எலும்பு நம் நாட்டில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதிலிருந்து பல மடங்கு மதிப்புள்ள, கார்டுபோர்டுகளுக்கு ஒட்டும் வஜ்ரம் போன்ற பொருள்கள் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதைத் தடுத்து நம்நாட்டிலேயே போன்மீல் செய்ய பூர்ணமாக உபயோகப்படுத்திக்கொள்ள முன்வந்தால் ஓரளவு ரசாயன உரத் தட்டுப்பாட்டை நீக்கிக்கொள்ள முடியும்.

அடுத்தபடியாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் நகரங்களில் பல வீடுகள் கட்டப்படுகின்றன. மதுரை, கோயம்பத்தூர் போன்ற நகரங்களுக்கும் இதுபோன்ற திட்டங்கள் அவசியம் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு பால் டைரி இருக்கிறது. அதுவும் மொபசல் நகரங்களுக்கு அவசியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்று ராஜ்ய என்.ஜி.ஓக்கள் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். சம்பளத்தில் மத்திய சர்க்காரி லும், ராஜ்ய சர்க்காரிலும் தாரதம்மியம் இருப்பது உண்மையில் இவர்களை உற்சாகம் இழக்கச் செய்வதோடுகூட வேலையையும் பாதிக்கும். இரண்டு யோசனைகள் எனக்கு உருப்படியாகத் தோன்றுகிறது. ஒன்று இப்போதுள்ள இலாகாக்களை எடுத்துக் கொண்டு என்.ஜி.ஓ. பிரதிநிதிகள், இலாகா தலைவர்கள், நான் அபிஷியல் ஆகிய எல்லோரும் சேர்ந்து யோசனை பண்ணி எப்படி சிக்கனம் செய்யலாம் என்று ஆராய்வது. சிக்கன சீரமைப்பைக் கைக்கொண்டால் அதிலிருந்து பணம் இந்த பற்றுக்குறையை ஈடு கட்ட கணிசமாக மிச்சமாகும். போதாததற்கு மத்திய சர்க்கார் தான் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி நமது சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தை உயர்த்தவேண்டும். இன்று மத்திய சர்க்கார் ஒரு தனி என்டிடி அல்ல. தனியாக அவர்கள் இயங்க முடியாது. அவர்களுடைய நிதி நிலைமை சீராக இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எல்லா ராஜ்யங்களும் அவர்களுடைய வருவாயில் சீரான பங்கை அதற்கு அளிப்பதனால் நாம் கொடுக் கும் காண்டிரிப்யூஷனை வைத்துக் கொண்டு இன்றைக்கு அவர் களுடைய ஊழியர்களுக்கு அவர்கள் அதிகச் சம்பளம் கொடுக்கி றார்கள். மத்திய சர்க்கார் சிப்பந்திகளைப் பார்த்து நம்முடைய சிப்பந்திகள் பொருமக்கூடிய அளவில் இன்று இருக்கிறது. ஆகவே நம்முடைய சிப்பந்திகளின் சம்பளத்தையும் உயர்த்தி, அப்படி உயர்வு ஏற்படுவதனால் நமக்கு விழும் துண்டை மத்திய சர்க்காரே கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவது மிகவும் அவசியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சீலிங் என்று எடுத்துக்கொள்ளும்போது சீக்கிரத்தில் ஒரு பில் வரப் போவதாக இருக்கிறது. அந்த மசோதாவில் இருந்து கண்டிப்பாக ரிலிஜஸ் இன்ஸ்டிட்யூஷன்கள் பூர்ணமாக விலக்கு செய்யப்படவேண்டும். பல ராஜ்யங்களில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. நாமும் அதனுடைய சரியான நிர்வாகத்தைக் குறித்து விரிவானதொரு மசோதாவையும் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே சீலிங் என்பதற்காக மசோதா வருகிறபோது அதிலிருந்து ரிலிஜஸ் இன்ஸ்டிட்யூஷன்களுக்கு எக்ஸெம்ஷன் கொடுக்கப்படவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். ஏதோ பழமொழி சொல்வார்களே, "ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனையும் கடித்ததாம்" என்கிற கதையாக இல்லாமல் அதாவது அற நிலைய விஷயங்களில், மேலும் மேலும் குறிக்கிடாமல் இந்த மசோதாவில் அற நிலையங்களுக்குப் பூர்ண விலக்கு கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் இன்றைய தினம் ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படுகிறது. அதில் ஒரே ஒரு யோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன். கடும் கோடை காலத்தில் நம்முடைய மின்சார சக்தி எவ்வளவு இருக்கும் என்பதைக் கணக்கு எடுத்துக்கொண்டு, அதற்கு மேல் போகாமல் கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்





தரிக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அப்படி இல்லாது எல்லா கிராமங்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரித்துவிட்டு கடைசி யில் கோடை காலத்தில் பவர் கட் என்று கொண்டு வருவது சரி யல்ல. ஆகவே இதையும் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாவது திட்டத்தை வகுப்பது சம்பந்தமாக அமைக்கப்பட்ட கமிட்டியில் ஒரு சில ஜில்லாக்களுக்குத்தான் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. சில ஜில்லாக்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால் அந்த அந்த ஜில்லாக் களுடைய தேவை வசதி வளம் அவசியம் என்ன என்ன என்பது வற்புறுத்தப்படாமல் போகிறது. இந்தக் குறை பாட்டுக்கு இடம் இல்லாமல் எல்லா ஜில்லாக்களுடைய தேவை யும், வளமும், வசதியும் ஆராயப்பட்டு போதிய இடம் கொடுக்கப் பட வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். கனம் முத்தையா செட்டியார் சொன்னது போல அதற்குத் தக்க வழி வகைகளைச் செய்ய வேண்டும். அதுவும் பிற்போக்காகவுள்ள மாவட்டங்களுக்கு குடிசைத் தொழில், சிறு கைத்தொழில் போன்றவற்றில் அதிகச் சலுகை கொடுத்து, அங்கங்கே பல தொழில்கள் வளம்பெறும்படியாகச் செய்ய வேண்டும்.

கடைசியாக ஒரே ஒரு வார்த்தை. எங்கள் நகரத்தைப் பொறுத்த வரையில் இரண்டாவது பெரிய பாலம் வைகை நதியின் மேல் கட்டப்பட்டு முடிந்தாகி விட்டது. முன்பு ஆந்திராவில் துங்கபத்திரா அணைக்கட்டு கட்டியபோது அதைச் சுற்றியுள்ள ஒரு சில லட்சக்கணக்கான ஏக்கரா காடுகளாக இருந்தவையை முன் கூட்டி திருத்தி வயலாக ஆக்கிக் கொள்ளாத காரணத்தினால் அணைக்கட்டு கட்டி முடிந்த பிற்பாடு பல வருஷங்கள் அந்த நிலங்கள் விவசாயம் செய்ய வசதி இல்லாமலே கிடந்தது. அதனால் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. அதே மாதிரி இன்று இந்த வைகைப் பாலத்தைக் கட்டிவிட்டார்கள். ஆனால் முன்னேற்பாடாகவே இருபக்க access ஏற்படுத்தும் ரோட்டை கட்டி சேர்த்திருந்தார்களானால் இன்று பல ஆயிரக் கணக்கான ரூபாய் மிச்சமாவதற்கு வழி ஏற்பட்டு இருக்கும். அது இல்லாத காரணத்தினால் இப்போது ஐந்தாறு மைல்கள் சுற்றியே கார்கள் ஊருக்குள் வரவேண்டியிருக்கிறது. தினமும் நூற்றுக்கணக்கான மோட்டார்கள் செல்வதனால் அநேக ஆயிரம் மைல்கள் வீணாகி, ஏராளமான பெட்ரோலும் வீணாகிக் கொண் டிருக்கிறது. இன்னும் இந்த ரோடு போட பல மாதங்கள் ஆகும் என்பது வருந்தவேண்டிய விஷயம். இருந்தாலும் சீக்கிரத்தில் இந்த வேலையை முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன் றைக்கு வீடு கட்டும் திட்டப்படி அந்த சங்கங்கள் மூலம் பல முதலாளிகளும், தொழில் அதிபர்களும்தான் ஐம்பதாயிரம், அறு பதாயிரம் செலவில் வீடுகள் அதிகம் கட்டிக்கொள்ளுகிறார்கள். உண்மையில் வீடு அற்றவர்கள், வீடு தேவையுள்ளவர்கள் இவர் களுடைய தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை இன் றுள்ள வீடு கட்ட உதவி அளிக்கும் சங்கங்கள்.

[7th December 1959

* **SRI J. MATHA GOWDER :** கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கவர்னர் பெருமானது உரை மிகச் சுருக்கமாக யிருந்தாலும் கூட நல்ல அம்சங்கள் பல அதில் இருக்கின்றன. உதாரணமாக கழிந்த ஒரு வருட காலத்தில் இம்மாநிலம் முழுவதிலும் சட்டமும் ஒழுங்கும் பொதுவாக நன்கு பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்று காண்பித்திருக்கிறார்கள். சட்டமும் ஒழுங்கும் எந்த நாட்டிலாவது நல்லவிதமாக பாதுகாக்கப்படாமல் இருந்தால் அந்த நாடு முன்னேறியதாக நாம் எந்தச் சரித்திரத்திலும் பார்க்கவில்லை. அதே அடிப்படையில் இந்த மாநிலத்தில் சட்டமும், ஒழுங்கும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்றால் மக்கள் ஒழுங்காக இருந்திருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். நம் மக்களிடையே வித்தியாசமிருந்து, அவர்களுக்குள் உள்நாட்டுக் குழப்பங்களை ஏற்படுத்தி விட்டால்தான் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டக் கூடிய நேரத்தில் கூட சில விபரீத காரியங்கள் ஏற்பட்டு விடுகிறது. சில அரசியல் கட்சிகள் அதை வைத்துக் கொண்டு தங்களுக்கு சாதகமாக பேசுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆனால் அந்நிலை நம் மாநிலத்திற்கு ஏற்படாமல் இருந்தது மகிழ்ச்சிக்குரிய விஷயந்தான் என்று அவர்கள் சொல்வதை நாம் எல்லோரும் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று பட்டு இருக்குமானால் அங்கு சட்டத்தையும், ஒழுங்கையும் நன்கு பாதுகாக்க முடியும் என்பதை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும், நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டும், கவர்னர் பெருமான் அவர்களுக்கு கூட எல்லோரும் யோசனை கூறுவதற்கும் பக்கபலமாக இருப்பதற்கும் அவர்களும் எல்லோரையும் கூப்பிட்டிருக்கிறார்கள். எல்லோரும் அவருடன் ஒத்துழைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால் ஒற்றுமையுடன் இருந்தால்தான் எந்த நாடும் முன்னேற முடியும் என்று தெரிந்து கொண்டிருக்கிறோம். நண்பர் சின்னதுரை அவர்கள் குறிப்பிட்ட மாதிரி சீனா இந்த நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில் நாம் என்ன செய்கிறோம், நம் நாட்டின் பிரச்னைகளைப் பற்றியெல்லாம் கவனிக்க வேண்டும், மக்களின் பிரச்னைகளை எல்லாம் கவனிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதுவும் உண்மைதான். ஆனால் அதே நேரத்தில் இங்குள்ள அரசியல் கட்சிகளையும் நாம் பார்க்க வேண்டும். அந்நிய நாடு நம் தேசத்தில் ஊடுருவிக் கொண்டிருக்கும்போது இங்குள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு நாம் பலமாக இருக்கிறோமா? எல்லா அரசியல் கட்சிகளும் சர்க்காருக்கு பக்கபலமாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும், சிந்திக்க வேண்டும். நாம் ஒன்றுபட்டு இருக்க வேண்டும். எந்தப் பிரச்னையாக இருந்தாலும் கூட அவைகளை ஒத்தி வைத்து விட்டு இடைக் காலத்தில் நாம் நம் நாட்டைப் பாதுகாக்க அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்தால்தான்



7th December 1959] [Sri J. Matha Gowder]

முடியும் என்பதை அரசியல் கட்சிகள் எல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதை விட்டு விட்டு இதைச் சாக்காக வைத்துக்கொண்டு தங்கள் கட்சியை வளர்க்க, பிரசாரம் செய்வதற்கு இதை உபயோகிக்கக் கூடாது என்பதை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அடுத்தபடியாக கவர்னர் பெருமான் அவர்கள் அடுத்து வரக் கூடிய சட்டங்களில், 1959-ம் வருடம் ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து தேயிலைக்கு விதிக்கப்பட்ட ஒருமுனை விற்பனை வரியை பலமுனை வரியாக மாற்றியமைக்கக் கூடிய திருத்த மசோதா வரவிருக்கிறது என்று இங்கு குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து குறிப்பாக நீலகிரி ஜில்லாவில் இருக்கக் கூடிய சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்கள் சார்பில் நான் சென்னை மாநில சர்க்காருக்கு எனது நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன். குறிப்பாக இந்த மாநிலத்தில் நீலகிரி ஜில்லாவில்தான் சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட 15,000 பேர்கள் சிறிய தேயிலைத் தோட்ட உற்பத்தியாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒருமுனை விற்பனை வரியை நாம் புகுத்தும்போது, 10 ரூபாய்க்கு தேயிலை விற்றாலும் கூட ஒருமுனை வரிச் சட்டத்தின் கீழ் விற்பனை வரி செலுத்தவேண்டுமென்று ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், சர்க்காருக்கு குறைகளை எடுத்துச் சொல்லி சிறிய தேயிலை தோட்டக்காரர்களின் மாநாட்டின் தீர்மானத்தையொட்டி அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் நீலகிரிக்கு வந்தபோது சொன்ன பிறகுதான் இந்த ஒருமுனை வரியால் சிறிய தேயிலைத் தோட்டக்காரர்களுக்கு மிகவும் சிரமம் இருக்கிறது என்று அறிந்த பிறகுதான் பலமுனை வரியாகச் செய்யலாம் என்று அரசாங்கம் முடிவிற்கு வந்திருக்கிறார்கள். அது, மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, இந்த விற்பனை வரியை நாம் போடும்போது நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ட்ரல் எக்ஸைஸ் ட்யூட்டி, அதாவது மத்திய கலால் வரி எந்தெந்த பொருள்களுக்கு விதிக்கப் பட்டிருக்கிறதோ அதே போல் தேயிலைக்கு மத்திய கலால் வரி போடும்போது அதோடு இந்த விற்பனை வரியையும் சேர்த்தால் எந்த விதமான குழப்பமும் ஏற்படாது. விற்பனை வரி மூலம் பல லட்சக்கணக்கான ரூபாய் நமது சர்க்காருக்கு வர வேண்டியிருக்கிறது. பாக்கிகள் நின்று கொண்டேயிருக்கிறது. கோர்ட்டிற்கு நாம் ஏறிக் கொண்டிருக்கிறோம். ஆனால் மத்திய கலால் வரி என்று போடும்போது மத்திய கலால் வரி செலுத்தாமல் எந்தப் பொருளையும் விற்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருப்பதால், மத்திய கலால் வரியில் ஒரு பைசா கூட பாக்கிகூட ஏற்படாது. ஆகவே, நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடம் சொல்லி இந்த மத்திய கலால் வரியோடு கூட இதன் விற்பனை வரியையும் சேர்த்து வசூல் செய்யவேண்டுமென்று சொன்னால் விற்பனை வரி இலாகா அதிகாரிகளைக் கூட நாம் ஓரளவு குறைத்து விடலாம். அதனால் பணமும் மிச்சப்படும். அதோடு பல லட்சக்கணக்கான ரூபாய்

[Sri J. Matha Gowder] [7th December 1959

விற்பனை வரி வசூலாகாமல் இருக்கும் தொல்லையும் ஏற்படாது. அதோடு நமக்குள்ள வரியை முதலிலேயே வசூலிக்கும் சந்தர்ப்பம் ஏற்படுமென்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, சென்ற இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு இந்த மாதம் மூன்றாம் தேதி "தினமணி" என்ற பத்திரிகையில் நான் ஒன்று பார்த்தேன். அதாவது, பெரிய தேயிலை தோட்ட உற்பத்திக்கு மத்திய அரசாங்கம் உதவி அளிப்பதற்காக செஸ் வரியிலிருந்து உதவி அளிப்பதாக ஒரு குறிப்பு இருக்கிறது. அதைக் கண்டு ஆச்சரியப் பட்டேன். பெரிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு செஸ் நிதியிலிருந்து உதவி தருகிறோம் என்று சொன்னால் சிறிய தேயிலைத் தோட்ட சொந்தக்காரர்களின் கதி என்னவென்று புரியவில்லை. இந்த மன்றத்திலேயே நான் சொல்லியிருக்கிறேன். சிறிய தேயிலைத் தோட்ட சொந்தக்காரர்களுக்காக அவர்களின் அபிவிருத்திக்காக சர்க்கார் பாடுபடவேண்டுமென்று சொல்லும்போது நேர்மாறாக மத்திய சர்க்கார், பெரிய தேயிலைத் தோட்ட சொந்தக்காரர்களுக்கு என்று குறிப்பிட்டிருப்பது ஒருக்கால் பத்திரிகையில் பிழை ஏற்பட்டிருக்கிறதோ என்பது புரியவில்லை. பெரிய தேயிலைத் தோட்டக்காரர்களுக்கு அரசாங்க உதவி தேவையில்லை. சிறிய தேயிலைத் தோட்டக்காரர்கள் உற்பத்தி செய்வதற்குத்தான், அவர்களுக்குத்தான் அதிகமாக நாம் சலுகை கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் சிபார்சு செய்யவேண்டுமென்று இந்த சர்க்காரை நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இன்று மார்க்கட்டில் பவுண்டு ஒன்றுக்கு 2 ரூபாய் என்று விற்கக் கூடிய தேயிலை எங்கிருந்து வருகிறது என்றால் சிறிய தேயிலைத் தோட்டக்காரர்கள் உற்பத்தி செய்வதில் இருந்துதான் வருகிறது. பெரிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்கள் பல ஏக்கர்கள் வைத்துக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் எல்லாம் அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்து பவுண்ட் ஒன்றுக்கு 5 ரூபாய் என்று விற்கும்போது அதே நேரத்தில் அதே தேயிலையை உற்பத்தி செய்யக்கூடிய சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு கிடைப்பது ரூபாய் 1-50 லிருந்து 2 ரூபாய் வரையில்தான் கிடைக்கிறது. அதற்குள்ளாகத்தான் அவர்கள் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் அவர்கள் தேயிலையின் தரத்தை உயர்த்த முடியாமல் இருக்கிறார்கள். இதைப் பற்றி நான் சர்க்காரிடம் சொல்லியிருக்கிறேன். சிறிய தேயிலைத் தோட்ட சொந்தக்காரர்கள் சரியானபடி அபிவிருத்தி செய்ய அவர்களிடம் முதலீடு இல்லை. பணம் இல்லை. 18, 19 பேர்கள் சேர்ந்து கூட்டுறவு மாதிரி ஒன்று சேர்ந்து தேயிலை உற்பத்திச்சாலை வைத்திருக்கிறார்கள். அதை அபிவிருத்தி செய்ய அவர்களிடம் பணமில்லை என்று நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அதற்கு பரிகாரம் தேடுங்கள் என்று சொல்லும்போது நேர்மாறாக பெரிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு உதவி அளிக்கிறோம் என்று சொல்வது கண்டு ஆச்சரியப் பட்டு விட்டேன். இதைத் திருத்தும்படி மாகாண அரசாங்கம் உடனடியாக மத்திய அரசாங்கத்திற்கு



7th December 1959] [Sri J. Matha Gowder]

எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக சேலம் இரும்புக் கனி பற்றியும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் பற்றி உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதுபற்றி மிகவும் சந்தோஷம். ஆனால் சேலத்திலுள்ள இரும்புக் கனியைப்பற்றி குறிப்பிடும்போது அல்லது நெய்வேலியிலுள்ள பழுப்பு நிலக்கரியைப் பற்றி குறிப்பிடும்போது காவேரி தீரத்தின் எண்ணெய் வளச் சோதனைகள் பற்றி ஆராய்வது அவசியமாகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நீலகிரியில் உள்ள இரும்பைப் பற்றி இந்த சட்டமன்றத்தில் முதன் முதலாக பேசும்போது 1957-ம் வருடத்தில் நான் சொல்லியிருக்கிறேன், நீலகிரியில் இரும்பு இருக்கிறது என்று. அப்படி சொன்னபோது அங்கத்தினர்களுக்கே ஒரு சந்தேகம் ஏற்பட்டது. நீலகிரியில் இரும்பு கிடைக்குமா என்று. சென்ற நவம்பர் எட்டாம் தேதி அன்று "நவ இந்தியா" என்ற பத்திரிகையில் ஒரு பிரசுரம் வந்திருந்தது. நீலகிரியில் டைட்டானியம் என்ற பொருள் இருக்கிறது என்று வந்திருக்கிறது. அதோடு அலுமினியம் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய பாக்ஸைட் பத்து இடங்களில் இருக்கிறது. தற்போது 20 லட்சம் டன் டைட்டானியம் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தற்போதைக்கு இப்பொழுது ஆராய்ந்த முறையில் இவ்வளவு இருக்கிறது என்றால் மேற்கொண்டு ஆராயும்போது இன்னும் எத்தனை டன் கிடைக்கும் என்று தெரியவில்லை. சேலத்தில் கிடைக்கக் கூடிய இரும்பு சாதாரணமான இரும்பாயிருக்கலாம். ஆனால் நீலகிரியில் உள்ள இரும்பைப் பற்றி குறிப்பிடும்போது கேத்தி பக்கத்தில் கிடைக்கக் கூடிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், துரு பிடிக்காத உருக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. துருப் பிடிக்காத ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கிடைக்கிறது, இதை தெளிவாக கண்டு பிடித்தாய் விட்டது. 3.30 p.m.
இதைப்பற்றி ஒரு வார்த்தையாவது இதில் குறிப்பிட்டிருந்தால் உண்மையிலேயே நான் மகிழ்ச்சி யடைந்திருப்பேன். அதைப்பற்றி இதில் எழுதவே இல்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. நீலகிரி ஜில்லா என்றால் மாற்றாந்தாய் மனப்பான்மை தான் இந்த சர்க்காருக்கு இருந்து வருகிறதோ என்னவோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. நான் இதைப்பற்றி அடிக்கடி இந்த சபையிலேயே சொல்லியிருக்கிறேன். அதையெல்லாம் ஏன் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவில்லை என்று தெரியவில்லை. ஆகவே இந்த முக்கியமான விஷயத்தை சேர்க்காமல் விடப்பட்டிருப்பது மிகவும் வருந்தத் தக்க விஷயம் என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன். இவ்விதமான இரும்பு கிடைப்பதோடு மட்டுமல்ல, அலுமினியம் தயார் செய்வதற்கு உபயோகப்படக்கூடிய பாக்ஸைட் என்ற பொருள் கிடைக்கிறது. அது மட்டுமல்ல, பல தாதுப் பொருட்களும் அங்கே கிடைக்கின்றன. இவற்றை எல்லாம் நல்லமுறையில் ஆராய்ச்சி செய்யவேண்டும். நான் முன்னால் புத்தகத்தில் படித்திருக்கிறேன். மொகஞ்சதாரோ என்ற இடத்தில் ஊர் இருந்தது என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது அங்கு பச்சைக்கல் தென்பட்டதாகவும், அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்த்ததில், அந்த பச்சைக்கல் நீலகிரி மலைச்சாரலிலிருந்து

கிடைத்ததாகவும் அந்தப் புத்தகத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இம்மாதிரியெல்லாம் பல பொருட்கள் கிடைக்கக்கூடிய இடம் என்று தெரிந்தும் அந்த இடத்தில் வேண்டிய அளவு ஏன் ஆராய்ச்சி செய்யக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லை. அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் போன்றவர்கள் எங்கள் மீது அதிகமாக அன்பு இருப்பதாகச் சொல்லலாம். ஆனால் அந்த அன்பைக் காண்பிக்கும் முறையில், பல தாதுப்பொருட்கள் கிடைக்கக்கூடிய இந்த இடத்தில் நல்ல முறையில் பரிசோதனை செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப் பற்றி நான் இதே இடத்தில் திரும்ப திரும்ப பேசியிருக்கிறேன். இன்னும் இதைப்பற்றி பேசிக்கொண்டிருப்பேன். மேலும் இந்த உரையில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்துவதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக நீலகிரி ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கு இருக்கக்கூடிய சீதோஷ்ண நிலையின் காரணமாக அங்கு எந்தவிதமான மில்களையும் ஸ்தாபிக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது அங்கு இரும்பு கிடைக்கும் என்ற நிலை இருந்து கொண்டிருப்பதால் நிச்சயமாக இரும்புத் தொழிற்சாலையை நீலகிரி ஜில்லாவிலேயே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்பற்றி சொல்லும் போது நீலகிரி மலையின் மேல் எவ்விதம் இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த முடியும் என்ற சந்தேகம் ஏற்படலாம். நிச்சயமாக ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் இருந்தால், தாராளமாக ஏற்படுத்த முடியும். மனம் இருந்தால் வழி எந்தவிதத்திலாவது ஏற்படும்.

அடுத்ததாக நான் ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். பலவிதமான தாதுபொருட்கள், இரும்பு, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், அலுமினியத்திற்கு வேண்டிய பாக்ஸைட் இவைகள் எல்லாம் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நல்ல முறையில் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரை, சம்பிரதாயத்திற்கு தகுந்த மாதிரி, சாதாரணமாக வருடந் தோறும் சம்பிரதாயமாக நடக்கும் முறையில்தான் அவர்களது உரை அமைந்திருக்கிறதே ஒழிய, இந்த மாகாணத்தில் இருக்கும் கூடிய பொருளாதார நிலைமையைப்பற்றியோ, அல்லது மக்களுடைய இன்றைய நிலைமையைப் பற்றியோ, பொறுப்புணர்ச்சியுடன் பரிசீலித்து அவைகளுக்கு பரிகாரம் காண்பது எந்த விதத்தில் என்ற முறையில் வழிகாட்டுவதாகவோ அவர்களது உரை இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இந்த நாட்டில் பொதுவாக ஜனங்களுடைய வாழ்க்கைத்தரம் எந்த முறையில் பாதிக்கப்பட்டிருக்கிறது, மக்களிடத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் எந்த அளவுக்கு இருந்து கொண்டு இருக்கிறது





என்பதைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. நாட்டில் இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை எடுத்துப்பார்த்தால், முதல் ஐந்தாண்டு திட்டகாலத்தில் வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை மூன்றரை லட்சமாகவும், இரண்டாம் ஐந்தாண்டு திட்ட ஆரம்பகாலத்தில் ஏழு லட்சமாகவும் இருக்கிறது. இப்பொழுது 13 வருஷமாக நம் மாகாணத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், எவ்வளவோ பேர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸேஞ்சில் ஐந்து வருடம், ஆறு வருடம் என்று "ரினியூ" செய்து கொண்டிருக்கிறார்கள். வேலை கிடைப்பதில்லை. இந்தக் கொடுமையான நிலை தான். இருந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றி எல்லாம் கவர்னர் அவர்களது உரையில் ஒரு வார்த்தைகூட சொல்லப்படவில்லை என்பதைப் பார்த்து நான் வருந்துகிறேன்.

விலைவாசி உயர்வைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் விலைவாசி உயர்வு என்பது மிகவும் விரும்பத்தகாத நிலைதான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், உண்மையிலேயே சர்க்கார் கடைபிடித்த கொள்கை தவறான கொள்கையை நியமனப்படுத்துவதற்குத்தான் இதைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதைப்பார்த்தால் . . .

'The one dark spot in this picture is the persistent upward trend in the prices of essential articles, more particularly of food-grains . . . that the rise in agricultural prices is of immediate benefit to the tillers of the soil who form the bulk of the population'.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விலைவாசி ஏற்றத்தினால் விவசாயிகளுக்கு நன்மைதான் கிடைத்திருக்கிறது என்ற முறையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாட்டிலிருக்கின்ற விவசாயிகளை எடுத்துக்கொண்டால், 100-க்கு 55 சத விகிதம் பேர்கள் கூலிவிவசாயிகள் தான். இவர்களுக்கு எல்லாம் இந்த விலைவாசி ஏற்றத்தால் லாபம் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அவர்களுக்கு ஒருவிதத்திலும் லாபம் ஏற்படவில்லை. சிறு நில விவசாயிகளை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கும் இதனால் பெரும் லாபம் ஏற்படவில்லை என்று சொல்லலாம். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய தான்யம் அவர்களுக்கே போதாது. அவர்களுக்கு ஓரளவு தான் விற்பனை செய்ய முடியும். பெரும் நிலச்சுவான்தார்களுக்குத் தான் இந்த விலைவாசி ஏற்றத்தினால் லாபம் ஏற்பட முடியும். சாதாரண விவசாயிகளின் நிலைமையை எடுத்துக்கொண்டால், விவசாய கருவிகளின் விலை, துணிகளின் விலை, இன்னும் இவைப் போன்ற மற்ற சாமான்களுடைய விலையெல்லாம் பல மடங்கு அதிகமாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே தான் இன்றைய தினம் சாதாரண விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த விலைவாசி உயர்வினால் சாதாரண விவசாயிகளுக்கு எந்தவிதமான லாபமும் ஏற்படவில்லை. வேண்டுமானால் குத்தகைக்கு விட்டுக்கொண்டு, அதன் மூலம் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கும் பெரும் நிலச்சுவான்தார்களுக்கு இதனால் லாபம் ஏற்பட்டிருக்கும். சர்க்காரும் இவர்களுக்கு ஆதரவாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் நாம் பார்க்க முடிகிறது.

[Sri N. K. Palanisami] [7th December 1959

அதாவது இவர்களுக்கு ஆதரவான முறையில் சர்க்கார் நடத்தி வந்த கொள்முதலை (ப்ரொக்யூர்மென்ட்) ரத்து செய்திருக்கிறது. அதில் இன்னொரு வேடிக்கையான விஷயம் என்னவென்றால் பெரிய பெரிய வியாபாரிகள் எல்லாம் கொள்முதல் செய்து தரவேண்டிய கொள்முதல் பாக்கிகளை எல்லாம் அரசாங்கம் ரத்து செய்து விட்டது. இந்த அநியாயத்தை நாம் எங்கும் பார்க்க முடியாது. சாதாரண மில் ஓணர்களை எல்லாம் கொடுமைப்படுத்தினார்கள். ஆனால் பெரிய பெரிய வியாபாரிகளை எல்லாம் விட்டுவிட்டார்கள். இவர்கள் தான் அரசாங்கத்தை பெருமளவில் ஏமாற்றி வந்தார்கள். இதன் பேரில் சில கேஸ்களும் போடப்பட்டிருக்கிறது. இருந்தும் கூட அவர்களிடமிருந்து சரியான முறையில் கொள் முதல் செய்ய முடியவில்லை. அதோடு அவர்கள் கொள்முதல் செய்து தரவேண்டிய பாக்கியையும் ரத்து செய்துவிட்டார்கள் என்றும் தெரிகிறது. இதிலிருந்து இன்றைய அரசாங்கத்தின் கொள்கை யாருக்கு ஆதரவாக இருக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அஸெம்பிளி நடந்து கொண்டி டிருக்கும் இந்தச் சமயம் வரை கண்ட்ரோலும் கிடையாது, ப்ரொக்யூர்மென்ட்டும் கிடையாது. இந்த நிலைமையில் இரண்டா யிரம் நியாயவிலைக்கடைகளும் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு சுமார் ஒரு லட்சம் டன் தேவைப்படும் என்றும் இப்போது 35,000 டன் கொள்முதல் ஆகியிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி யானால் பாக்கி 65,000 டன் உணவுப்பொருட்களுக்கு எங்கே போவார்கள் என்று தெரியவில்லை. இவர்கள் திடீரென்று கண்ட் ரோலையும் ப்ரொக்யூர்மென்ட்டையும் எடுத்ததின் நோக்கம் குறுவை நெல் வந்துவிட்டது, இனிமேல் விலை இறங்கிவிடும், குறுவை நெல் தாராளமாக கிடைக்கும் என்று அரசாங்கம் எதிர் பார்த்திருக்கலாம். ஆனால் போன வருடம் இருந்த விலைக்கும் இப்போது இருக்கும் விலைக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? முன்பு இருந்த விலையைவிட இப்போது ஒரு மூட்டைக்கு மூன்று அல்லது நான்கு ரூபாய்தான் அதிகமாக இருக்கிறது. அதே சமயத்தில் பாக்கியுள்ள இடத்திலுள்ள விலையை எடுத்துக் கொண்டாலும் ஒரு ரூபாய் அல்லது ஒன்றரை ரூபாய்தான் விலை யேறியிருக்கிறது. ஆகவே எந்தக் காரணத்தைக்கொண்டு இந்தக் கொள்முதலை நிறுத்தினார்கள் என்று தெரியவில்லை. ஆகவே இதனால் யாருக்கு லாபம் என்பதை நாம் பார்க்கவேண்டும். அது மட்டுமல்ல, சர்க்காருக்கு ஒவ்வொரு வருடமும் இரண்டு லட்சம் கிடைத்தால் நமது உணவு நிலைமையை சமாளிக்க முடியும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது எங்கிருந்து கிடைக்கும் என்று பார்த்தால் அதற்கும் மத்திய சர்க்காரைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. அதல்லாமல் நாமே நமக்குவேண்டிய உணவுப் பொருட்களை தாராளமாக கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்றால், குறைந்தது நான்கு அல்லது ஐந்து லட்சம் டன் "பஃபர் ஸ்டாக்" செய்து வைத்திருக்கவேண்டும். சம்பா சீஸன் வரும் போது இந்த ஸ்டாக்கை போதிய அளவுக்கு வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். அது இன்று



7th December 1959] [Sri N. K. Palanisami]

பரிசீலனையில் இருக்கிறது. ப்ரொக்யூர்மென்ட் மூலமாக இருந் தாலும் சரி, லெவி மூலமாக இருந்தாலும் சரி, எப்படியும் 5 லட்சம் டன் பஃபர் ஸ்டாக் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். இப் போது 2,000 நியாய விலைக் கடைகள் திறந்திருக்கிறார்கள். நகரங் களில் சுமார் 1,200 நியாய விலைக் கடைகளும் மற்றப் பகுதிகளில் சுமார் 800 நியாய விலைக் கடைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. இவைகளால் விலையை எவ்வளவு குறைத்துவிட முடியும். ஒன்றும் முடியாது. இப்போது டி.யு.சி.எஸ்.-ஸில் 70 நயா பைசாவிற்கு அரிசி விற்கிறார்கள். பர்மா அரிசி 72 நயா பைசாவிற்கு விற்கப் படுகிறது. ஆனால் அது 76 நயா பைசாவிற்கு வாங்கப்படுகிறது. சர்க்கார் ப்ரொக்யூர்மென்ட் செய்வதை நிறுத்திவிட்டது. ஸென்ட்ரல் கோவாப்பரேடிவ் ஸ்டோர்ஸ்தான் அதற்குப் பொறுப் பாளி என்று சொல்லப்படுகிறது. சர்க்கார் 35 ரூபாய்க்கு வாங்கி 42 ரூபாய்க்கு விற்கும். இந்த வருஷம் ஜூன்-ஜூலை மாதத்தில் லிங்கிங் ஸ்கீம் என்ற திட்டத்தை சர்க்கார் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டம் ஆங்காங்கே தானியத்தை வாங்கி பக்கத்தில் இருக்கும் கிராமங்களுக்கு வினியோகம் செய்ய வகை செய்வது. ஆனால் அத்திட்டத்தை, ஒன்றிரண்டு மாதங்கள் நடந்த பிறகு நிறுத்திவிட்டனர். ஸெண்ட்ரல் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் மூட்டை ஒன்றுக்கு ஒரு படி அல்லது அரைப் படி எடுத்துவிடு கிறது. அவர்களுக்கு இவ்வளவு லாபம் இருக்கும்போது அவர் களுக்கு சர்க்கார் ஏன் 'ஷ்ரிங்கேஜ் அலவன்ஸ்' கொடுக்க வேண்டும்? ரேஷன் காலத்தில் அவர்கள் மூட்டைக்கு 3½ நயா பைசாவிற்கு மேல் லாபமடைய முடியவில்லை. இன்று அவர் களுக்கு மூட்டைக்கு 7½ நயா பைசா கொடுக்கப்படுகிறது. ஜனங் களின் கஷ்டத்தை அனுசரித்து குறைந்த விலையில் யாரும் விற்ப தில்லை. குறைந்த விலையில் விற்க சர்க்கார் ஏன் முயற்சி செய்யக் கூடாது? ஏன் நியாய விலைக் கடைகளை அதிகமாக வைத்து ஜனங்களுக்கு உணவு தானியங்களை வினியோகிக்கக் கூடாது? மேலும் உணவுப் பொருள்கள் வியாபாரத்தை சர்க்கார் ஏற்று நடத்தவேண்டும் என்று நாகபுரியில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது? அதைச் செய்ய சர்க் கார் ஏன் முன்வரவில்லை? இன்று சுதந்திராக் கட்சி, 'ஸ்டேட் ட்ரேடிங் கூடாது, கண்ட்ரோல் கூடாது" என்று சொல்கிறது. காங்கிரஸ் என்ன செய்கிறது? அதற்கு மாறான காரியத்தை காங்கிரஸ் நடைமுறையில் செய்யவில்லை. எனவே சுதந்திராக் கட்சி இருக்கும் இடத்திலேயே காங்கிரஸ் கட்சியும் இருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கும் சுதந்திராக் கட்சிக்கும் வித்தியாசம் இல்லை. கண்ட்ரோல் கூடாது என்று சுதந்திராக் கட்சி சொல்கிறது. காங்கிரஸ் கட்சி கண்ட்ரோலைக் கொண்டுவருவதேயில்லை.

விலைவாசி ஏற்றத்தை எடுத்துக்கொண்டால், பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்போது விலைவாசி ஏறுவது நல்லதுதான் என்று சொல்லப்படுகிறது. அப்படிப் பார்த்தால் அது குறிப்பிட்ட அளவுக்குத்தான் ஏறலாமே தவிர ஜனங்கள் பொருள்களை வாங்க முடியாத அளவிற்கு ஏறுவதை யாரும் ஏற்க முடியாது. விலை வாசி ஏற்றம் இருந்தால் தேச வருமானத்தை உயர்த்தவேண்டும்.

தனிப்பட்டவர்களின் வருமானத்தை உயர்த்த வேண்டும். தனிப் பட்டவர்களின் கல்வி, சுகாதார வசதி, பொருளாதாரம் இவை களில் முன்னேற்றம் இருக்கவேண்டும். மேலும் குறைந்த விலை யில் அதிகச் சாமான்கள் கிடைக்கக்கூடிய நிலைமை இருந்தால் தான் அது நல்ல முன்னேற்றம் ஆகும். அவர்கள் பொருளா தாரத்தை என்ன அடிப்படையில் விளக்குகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, அதில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் தீட்டப்போவதாகச் சொல்கிறார்கள். இப்போது இன்ப்ளேஷன் ஜனங்களை எந்த அள விற்குப் பாதித்திருக்கிறது என்பதை சர்க்கார் உணர வேண்டும். 1,200 கோடி ரூபாய்க்கு நோட்டு அடிப்பதற்கு பதிலாக சர்க்கார் 1,800 கோடி ரூபாய்க்கு நோட்டு அடித்திருக்கிறார்கள். அதன் காரணமாக விலைவாசிகள் மிகவும் ஏறியிருக்கின்றன. இன்று தனிப்பட்டவர்களின் லாபத்தை அதிகப்படுத்தும் முறைகள் நாள் கையாளப்படுகின்றன. விலைவாசி உயர்வை முதலில் கட்டுப்படுத்தி யாகவேண்டும். வாங்கிய விலையில் 10 சதவிகிதத்திற்கு மேல் லாபம் பெறக்கூடாத வகையிலும், மீறினால் கடுமையான தண்டனை விதிக்கும் வகையிலும் சட்டம் செய்ய வேண்டும். பெரிய பெரிய நகரங்களில் சர்க்காரே ஸ்டோர்ஸ் வைத்து அவைகள் மூலம் தகுந்த விலையில் பொருள்கள் கிடைக்கச் செய்யாவிட்டால் விலை வாசி உயர்வு நிற்கவே நிற்காது. முதல் ஐந்தாண்டுத் திட்டத் தின்போது அரிசி 10½ அணாவுக்கு விற்றது. அது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு உயர்ந்தது என்பதைப் பார்த் தோம். அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு உயருமோ, தெரியாது.

(Sri T. S. Ramaswamy in the Chair.)

நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டவேண்டும் என்று நாக புரியில் தீர்மானிக்கப்பட்டது. அது இப்போது இந்த மாநில சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கான சட்டம் இன்னும் இங்கு கொண்டுவரப்படவில்லை. காரணம் இந்த மாநிலத்தில் அதற்கு பெரிய எதிர்ப்பு இருக்கிறது. இங்கே நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டும் சட்டம் கொண்டுவந்தால், ஆளும் கட்சியிலுள்ள பலர் சுதந்திராக் கட்சிக்குப் போய்விடுவார்கள். தேசீய அபிவிருத்திக் கவுன்சிலின் முடிவை எடுத்துக்கொண் டாலும், அதன்படி 1959-ம் வருடத்திற்குள் அச்சட்டத்தைக் கொண்டுவந்திருக்கவேண்டும். அதை இன்னும் கொண்டுவராத தன் காரணம் எனக்குப் புரியவில்லை.

இன்றையதினம் என்.ஜி.ஓ.க்களின் பிரச்னையை எடுத்துக் கொண்டால், மத்திய சர்க்கார் என்.ஜி.ஓ.க்களைப் பொறுத்தவரை யில் மத்திய சர்க்காரின் ஸெகண்ட் பே கமிஷனின் சிபாரிசுகள் வெளியாகியிருக்கின்றன. அதில் பல குறைபாடுள்ள அம்சங்களும் நல்ல அம்சங்களும் இருக்கின்றன. எங்கள் கட்சியின் சார்பில் மகஜர் கொடுத்தபோது, மாநில என்.ஜி.ஓ.-க்களின் நிலைமையையும் அது கன்ஸிடர் பண்ணவேண்டும் என்று நாங்கள் சொல்லியிருந் தோம். ஆனால் மத்திய சர்க்கார் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அது இந்த சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சர்க்கா ருடைய தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் நன்றாக நிறை வேற வேண்டுமானால் என்.ஜி.ஓக்களுடைய ஒத்துழைப்பு தேவை. எனவே அவர்களுடைய பிரச்னையை சர்க்கார் தட்டிக்கழிக்கக் கூடாது. அவர்களுடைய பிரச்னையைப் பற்றி கவர்னர் அவர் களுடைய உரையில் எதுவும் குறிப்பிடப்படாததால் அந்த உரை 'இன்கம்ப்ளீட்' ஆக இருக்கிறது என்று சொல்வேன்.



அடுத்தபடியாக, 20 லட்சம் பேர்களாக இருக்கும் கைத்தறி நெசவாளர்களின் பிரச்னை படுமோசமாக ஆகியிருக்கிறது என்று அங்கத்தினர் ஸ்ரீ விஸ்வநாதன் கூறினார். இதற்கு இப்போது பெரும்பாலும் காரணமாக இருப்பது நூல் விலையேற்றம். அதன் காரணமாக கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்றன. மேலும் இந்நிலையில் அவர்களுக்கு ரிபேட்டை 6 நயா பைசாவிலிருந்து குறைக்கக் காரணம் என்ன ?

17-வது ஆல் இண்டியா லேபர் கான்பெரென்ஸில் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒவ்வொரு தொழிலுக்கும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்க வேண்டும் என்று அம்மகாநாடு கூறியது. அந்தக் கூலியை ஒரு 'நார்ம்'-ஐ அனுசரித்து நிர்ண யிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சாதாரணமாக குழந்தைகள் பெரியவர்கள் முதலியவர்களுடைய தேவைகளை நிர்ணயித்து அதை அனுசரித்து கூலியை நிர்ணயிக்க வேண்டும். எல்லாத் தொழில்களிலும் குறைந்தபட்சக் கூலியைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் எந்த இண்டஸ்ட்ரியாவது குறைந்தபட்சக் கூலித் திட்டத்தைக் கொண்டுவரவில்லையானால் அது ஏன் அதைக் கொண்டுவரவில்லை என்று பரிசீலிக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், அந்த மகாநாடு, சரியாக நடத்தப்படாத மில்களை சர்க்காரே எடுத்து, அன்எம்ப்லாய்மெண்ட் யூனிட் என்று ஒன்று வைத்து அந்த மில்களை நடத்த வேண்டும் என்றும் கூறியிருக்கிறது. ஆனால் அவ்வாறு நடத்தமுடியாது என்று கனம் அமைச்சர்கள் சொல்லிவிட்டார்கள். இப்போது மகா கணபதி மில்ஸும், பாக்கிய லக்ஷ்மி மில்ஸும் மூடப்பட்டிருக்கின்றன. மேலும், பீடித் தொழிலை எடுத்துக்கொண்டால், கோயம்புத்தூரிலுள்ள பீடி முதலாளி கொள்ளேகாலத்தில் கடை வைத்திருக்கிறார். பீடித் தொழிலாளர் களிடையே இன்று பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

ஹோட்டல் தொழிலாளர் சட்டம் 1958-ல் சட்டமாக்கப்பட்டது. இதுவரையில் அந்த சட்டம் அமுல் செய்யப்படவில்லை. இது வரையில் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் ஆயிரக்கணக்கான பேர்கள் வேலை நிறுத்தம் செய்வதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இப்படி பெரும்பகுதியான மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவைகளைப் பற்றி யெல்லாம் இந்த உரையில் குறிப்பிடாதது பற்றி வருத்தம் தெரிவித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

[7th December 1959

* SRI S. C. SADAYAPPA MUDALIAR : கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின் மீது சில வார்த்தைகள் பேச முன் வந்துள்ளேன். அவரது உரையிலே "இம்மாநிலத்தை எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்" என்று சொன்னதன் நோக்கம், இந்த அரசாங்கம் அமைதியான முறையில், முற்போக்குப் பாதையில் போகிறது என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான். இந்த முறையில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து நான் அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இப்படி அமைதியான முறையில், முற்போக்குப் பாதையில் அரசாங்கம் போகிறது என்றால் குறிப்பாக கிராமங்களிலே விவசாய மக்கள் பெரும்பாலும் சர்க்காருடைய திட்டங்களின் மூலமாக, விவசாயத்தை நல்ல முறையில் செய்து உற்பத்தியைப் பெருக்குவதில் ஈடுபட்டிருப்பதால்தான் நாட்டில் அமைதி ஏற்பட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கிராம மக்களுடைய நல்வாழ்வுக்காக எந்த அரசாங்கம் நல்ல திட்டங்களைப் போட்டு நடத்தி வருகிறதோ அந்த அரசாங்கம் முற்போக்குப் பாதையில் போகும், அந்த நாட்டில் அமைதி இருக்கும் என்பதை கவர்னர் பெருமான் அவர்களுடைய உரை திட்டமாகக் கூறுகிறது என்று பார்க்க நான் சந்தோஷப்படுகிறேன். கிராம மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர, விவசாயிகளுக்குள்ள குறைகள், தேவைகள் முதலியன பூர்த்தியடைய நல்ல அம்சங்களும் கவர்னர் பெருமான் உரையில் இருக்கின்றன. அவைகள் என்னவென்றால், போதுமான அளவு கடன் கொடுக்க, கூட்டுறவு முறையில் செய்ய சந்தர்ப்பம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களை ஆரம்பித்து விவசாயிகளுக்குள்ள குறைகளைப் போக்க சர்க்கார் பாடுபட்டு வருகிறது. அந்த முறையிலே பார்க்கும்போது, விலைவாசிகள் கூடியிருக்கும் இந்த நேரத்தில் உற்பத்திப் பெருக்கத்தின் மூலமாக இந்த விலைவாசி உயர்வைத் தடுத்து விலைவாசிகளைக் குறைக்க வேண்டுமென்றால், விவசாயிகளுடைய ஆதரவைப் பெற்று, நல்ல முறையில், கூட்டுறவு முறையில் சிறு சிறு நிலச்சுவாந்தார்கள் ஒன்றுகூடி கூட்டுறவுப் பண்ணை வைத்து உற்பத்தியைப் பெருக்கினால்தான் முடியுமே தவிர ஒரு சட்டத்தின் மூலமாக அல்லது கோஷத்தின் மூலமாக அல்லது பிரசங்கத்தின் மூலமாக நகர மக்களுக்கும் தொழிலாளர் மக்களுக்கும் நல்ல நிலைமை உண்டுபண்ண முடியாது என்று நான் நினைக்கிறேன். கிராம விவசாயிகளுக்கு சர்க்கார் போதுமான அளவு ஆதரவு கொடுத்து, அவர்களை உற்சாகப் படுத்தி, நிலங்களைப் பண்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கினால்தான் விலைவாசிகள் கூடுமான அளவுக்குக் குறையும் என்று நினைக்கிறேன். அந்த முறையில் விலைவாசி ஏறுகிறது என்ற நோக்கத்தோடு அதைக் கட்டுப்படுத்தப் போனால் கிராம மக்கள், விவசாய மக்கள், பெரும்பாலும் பாதிக்கப்படுவார்கள் என்று கவர்னர் பெருமான் உரையிலே கூறியிருப்பதைக் கேட்டு ஓரளவுக்குத் திருப்திகரமாக இருந்த போதிலும், இந்த அளவுக்கு ஒப்புக்கொள்ளாமல் போனாலும் கூட சர்க்காருக்கு என்ன நோக்கம் இருக்கிறது என்று பார்க்கும்போது, விவசாயிகள் பாதிக்கக் கூடிய அளவுக்கு இல்லாமல், இப்படியே இருக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை, கொஞ்சம் குறைய வேண்டியதுதான்,



7th December 1959] [Sri S. C. Sadayappa Mudaliar]

விவசாயிகள் உற்பத்தியில் நன்றாக ஈடுபட்டு, பெருக்கக் கூடிய முறையில், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்து நல்ல வாழ்க்கை நடத்தக் கூடிய ஒரு நிலைமையை உண்டுபண்ண வேண்டும். அதற்காக உடனடியாக சட்டம் மூலமாக உணவுப் பொருள்களின் விலை அதிகமாக விற்கிறது என்று நகர மக்களுக்காக எந்த நடவடிக்கையையும் சர்க்கார் எடுக்காது என்று நான் நம்புகிறேன். ஆனால் விலைவாசிகள் ஏறாமல் தடுக்க விவசாயிகளை இன்னும் உற்சாகப்படுத்தி, உற்பத்தியைப் பெருக்க சர்க்காரிலே முக்கியமாக மின்சார சக்தியை கோடைக்காலத்தில் வெட்டு இல்லாமல் நிரந்தரமாக விவசாயத்திற்குக் கொடுக்க சந்தர்ப்பம் இருக்கிறது என்பதைப் பார்த்து கிராம விவசாயிகளுக்கு பெரிய ஆதரவாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். குறிப்பாக எங்கள் ஜில்லாவில் நீர்த்தேக்கத் திட்டம் எதுவுமில்லாமல் மின்சாரத்தை நம்பியே விவசாயம் செய்வதால், வெட்டு இல்லாமலிருந்தால், தாராளமாக மின்சாரம் கிடைக்கும் சந்தர்ப்பம் இருந்தால் உற்பத்தி பெருக முடியும் என்று நான் நம்புகிறேன். இந்த முறையில், நமது மாநிலத்தில் பருவ மழை திருப்திகரமாக இருக்கிறது என்று கவர்னர் உரையில் இருந்தும், ஒன்றிரண்டு ஜில்லாக்களில் குறைவாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வட ஆற்காடு ஜில்லாவில் வட கிழக்குப் பருவ மழை குறைவாக இருக்கிறது. செய்யாறு, வந்தவாசி, அரக்கோணம் முதலிய தாலூக்காக்களில் கால்நடைகளுக்குத் தேவையான அளவுக்குத்தான் மழை பெய்திருக்கிறதே தவிர விவசாயத்திற்கு வேண்டிய அளவுக்கு பெரிய மழை இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகளுக்கு ஓரளவுக்கு உற்பத்தி பெருக்கக் கூடிய முறையில் மின்சாரத்தை அதிகப்படுத்தியோ அல்லது நீர்பாசனத் திட்டம் மூலமாகவோ, அல்லது கவர்னர் பெருமான் உரையிலே கண்டபடி மற்ற மாநிலங்களில் அதிகமாக இருந்து வீணாக சமுத்திரத்தில் விழக் கூடிய நீரை தமிழ்நாட்டுக்குப் பயன்படுத்தும் முறையிலே இந்திய சர்க்கார் மூலமாக வட ஆற்காடு ஜில்லா விவசாயிகளுடைய நன்மையை உத்தேசித்து உடனடியாக சர்க்கார் நீர்ப்பாசன வசதியை உண்டு பண்ணினால்தான் விவசாயிகளுக்கு நிரந்தரமாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள சந்தர்ப்பம் கொடுத்ததாக ஆகும். பல முறைகளில் கனம் முத்தையா செட்டியார் அவர்களும் வட ஆற்காடு பாலாறு சம்பந்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். நானும் சொல்லி வந்திருக்கிறேன். பாலாற்றில் தண்ணீர் வருமா வராதா என்ற முடிவு ஏற்படவில்லை, அதை நம்பி தண்ணீர் வரும் என்ற நோக்கத்தோடு இல்லாமல், மின்சாரத்தை நம்பி அல்லது பெரிய கிணறுகளை வெட்டி விவசாயம் செய்வதற்கு நம்பிக்கை ஏற்படும் என்று நினைக்கிறேன். சர்க்காரிலே பல தடவை யோசித்துப் பார்க்கிறோம், கவனித்துப் பார்க்கிறோம் என்று சொல்லி வருவதால், பாலாற்றில் தண்ணீர் வரும், அதனால் ஏரி, குளங்கள் நிறம்பும், அதைக்கொண்டு விவசாயம் செய்ய சந்தர்ப்பம் வரும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். முடிவான முறையில் சர்க்கார் தெரிவித்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் விவசாயப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தில் சர்க்கார் இப்போது செய்து வரும் நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்துக்கொண்டு

இருந்தால் உணவு உற்பத்தியை அதிகரிக்குமே தவிர, அவைகளின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் சர்க்கார் தலையிடாது என்று நினைக்கிறேன். இப்போது சர்க்கார் நடத்திக்கொண்டு வரும் நிவாரணக் கடைகளின் மூலமாக விலைவாசிகளின் ஏற்றம் தடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் இம்மாதிரிக் கடைகளை அதிகப்படியாகத் திறந்து நடத்திக்கொண்டு போனால் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே நிவாரணக் கடைகள் மூலமாக உணவுப் பொருள்கள் வழங்கி, நகர மக்களுடைய கஷ்டங்களைத் தவிர்க்க இன்னும் இம்மாதிரிக் கடைகளை அதிகப் படுத்த சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

4 பி.ப. அடுத்தபடியாக அரக்கோணத்தில் விமானநிலையம் ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள நிலமும் பல கட்டிடங்களும் இருக்கின்றன. ஆயிரம் ஏக்கர் உள்ள விமான நிலையம் இருக்கிறது. அந்த இடத்தில் சிறு தொழிற்சாலை வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வருகிறேன். அதிலே சர்க்காருக்கு அதிகப்படியான செலவு இருக்காது. ஏனென்றால் ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது பல கட்டிடங்கள் இருக்கின்றன. தொழிற்சாலை ஆரம்பிப்பதில் இடம் வாங்குவதற்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கும் செலவழிக்க வேண்டிய பணம் மிச்சமாக இருக்கும். உடனடியாக அந்த இடத்தில் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். அப்பேர்ப்பட்ட வசதியான ஒரு இடத்திலே ஒரு தொழிலை ஏற்படுத்த வேண்டுமென்று பல தடவை இந்தச் சபையிலே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதைப் பற்றிச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்த இடத்திலே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி மக்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தும் திட்டத்தை வரப்போகும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கோதாவரி, கிருஷ்ணை நீர்த் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து வட ஆற்காடு ஜில்லா விவசாயிகளுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்கக் கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

கூட்டுறவு முறையிலே விவசாயம் செய்யும் திட்டத்தைக் கொண்டு வரும்போது விவசாயிகளுக்கு எந்த வித சங்கடமும் இல்லாத முறையிலே அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். இந்த முறையை நல்ல முறையில் அமுல் செய்வதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI S. RAMASAMI THEVAR: கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் சென்ற ஆண்டில் நிகழ்த்திய உரையின் போது, நான் 'இலங்கையிலுள்ள நமது மக்கள் படும் கஷ்டங்களைப் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை' என்று குறை சொன்னேன். அதே மாதிரி இந்த ஆண்டிலும் அந்த இலங்கை வாழ் தமிழர்களைப் பற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்க விஷயமாகும். முன்பு





அந்நியர்கள் ஆட்சியில் இரண்டு நாடுகளும் இணைந்திருந்தன. இங்கிருந்து அங்கு போகவும் அங்கிருந்து இங்கு வரவும் அப்போது வசதி இருந்தது. எந்தவிதமான கஷ்டமும் அப்போது இருக்கவில்லை. ஆனால் இப்போது, இரு நாடுகளும் வெவ்வேறாகப் பிரிந்த பிற்பாடு போக்குவரத்துக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. இங்கிருந்து அங்கு போகக் கூடியவர்களும், அங்கிருந்து இங்கு வரக் கூடியவர்களும் பாஸ்போர்ட் வாங்கவேண்டுமென்று ஏற்பட்டது. அந்த பாஸ் போர்ட் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருப்பதன் பயனாக இங்கு தாயாரும் அங்கு பிள்ளையும், இங்கு மனைவியும் அங்கு புருஷனுமாக இருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த முறையில் அவர்கள் ஒருவரையொருவர் பார்ப்பதற்குக் கூடப் போய்வரமுடியாத நிலைமையில் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பாஸ் போர்ட் எடுக்க இங்குள்ள மக்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். சாதாரணமாக கிராம முன்சீபிடம் போய் சர்டிபிகேட் வாங்க முடியவில்லை. அதற்குக் கூட லஞ்சம் கேட்கப்படுகிறது. இது மாதிரி பல துயரங்கள், தொல்லைகள் மக்களுக்கு ஏற்படுகிறது. முக்கியமாக எனது பகுதியிலே பலர் இந்த மாதிரி கஷ்டங்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். இங்கிருந்து அங்கு போகவும் வசதி கிடைப்பதில்லை. அங்கிருந்து இங்கும் வர முடியவில்லை. இரண்டொரு மாதங்களுக்கு முன்பு என் பகுதியிலிருந்து இலங்கை போவதற்காக, கிராம முன்சீபிடம் சென்று சான்று கேட்டதற்கு, 50 ரூபாய் ரொக்கம் கேட்க்கப்பட்டது. இந்த மாதிரி பல உதாரணங்களை என்னால் எடுத்துச் சொல்ல முடியும். மேலும் இலங்கையில் வாழ விரும்பாமல் பலர் இங்கு வர ஆசைப்படுகிறார்கள். அங்குள்ள கஷ்டங்களையும் தொல்லைகளையும் தாங்க முடியாமல் தாய் நாடு திரும்பி வருகிறார்கள். சர்க்கார் அவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை. அங்கிருக்கிறவர்கள் இங்கு வரவேண்டுமென்றால் இங்கிருந்து சான்று கிடைக்கவேண்டியிருக்கிறது. அதுவும் கிடைப்பதில்லை. அத்தகைய கஷ்டங்கள் மக்களுக்கு இருப்பதைச் சர்க்கார் உடனடியாக கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அது நமது சர்க்காரைச் சேர்ந்த துறையில் வராவிட்டாலும் கூட அங்கு வாழ்கிறவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள், முக்கியமாக 90 சதவிகிதம் தமிழ் மக்களாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய கஷ்டங்களைப் போக்க ஆவன செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம் நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். பல கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று சொல்லப்படுகிறது. இருந்தும் உணவுப் பற்றாக்குறை நாட்டிலே தீர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக ரசாயன உரங்களைப் பயன்படுத்தவேண்டுமென்று பல ஆண்டுகளாக விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் விவசாய மக்களுக்குத் தேவையான உரம் கிடைப்பதில்லை. உரம் இல்லாத குறையால் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதாக கவர்னர் பெருமான் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். பர்மா, கானடா போன்ற வெளி நாடுகளிலிருந்து

உணவுப் பொருள்களை இறக்குமதி செய்கிறோம். இந்த மாதிரி உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதைக் காட்டிலும் ஏன் இந்த உரத்தை இறக்குமதி செய்யக்கூடாது. அந்நிய நாட்டிலிருந்து உரத்தை இறக்குமதி செய்து விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியைச் செய்து கொடுக்கவேண்டும். அறந்தாங்கி தாலூகாவில் மழை பெய்யாது இப்போதுதான் சமீபத்தில் மழை பெய்திருக்கிறது. அங்குள்ள விவசாயிகள் முற்றிய நாற்றுக்களைக் கொண்டு நட்டுவிட்டால் மட்டும் சரியான விளைச்சல் கிடைக்காது. அவர்களுக்கு ரசாயன உரம் போதிய அளவில் கிடைக்கச் செய்யவேண்டும். விவசாயிகள் உரம் உரம் என்று கதறுகிறார்கள். ஆனால் இவர்கள் அந்த ரசாயன உரத்தை வாங்குவதற்காக நகை முதலியவைகளை விற்று உரம் வாங்கவேண்டுமென்று பணத்தை எடுத்துக் கொண்டு வந்தாலும் உரம் கிடைப்பதில்லை. இப்போது உரம் "ப்ளாக் மார்க்கெட்" டில் விற்கப்படுகிறது. இதைத் தடுத்து மக்களுக்குத் தாராளமாக உரம் கிடைக்க வசதி செய்து கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, உழவு மாடுகள் வாங்குவதற்காகக் கடன் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. கோடிக்கணக்கான ரூபாய் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கடனைக் கொடுக்காமல் இருந்தாலே நல்லது என்று நான் சொல்வேன். இந்தக் கடனை வாங்குவதற்காக மக்கள் படும் கஷ்டத்தைப் பார்க்கின்ற நேரத்தில் அவர்களுக்கு இந்தக் கடனைக் கொடுக்காமல் இருந்தாலே நலமாக இருக்குமென்று தோன்றுகிறது. நூறு ரூபாய் கடன் வாங்கவேண்டுமென்றால் கிட்டத்தட்ட 40 சதவிகிதம் வேறு வழியில் போய்க் கொண்டிருக்கிறது. இந்த மாதிரி லஞ்சங்கள் ஒழியவேண்டும். இந்த நாட்டிலே நிலத்துக்கு உச்சவரம்பு கொண்டு வருவதை விட இந்த லஞ்சத்திற்கு உச்ச வரம்பு கட்டலாம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு லஞ்சம் பெருத்திருக்கிறது. என்று இந்த நாட்டிலே லஞ்சம் ஒழியுமோ அன்றுதான் இந்த நாட்டிலே எல்லா வளங்களும், எல்லாச் செல்வங்களும் பெருகும் என்று கூற விரும்புகிறேன்.

கூட்டுறவு முறையிலே கடன் கொடுக்கப்பட்டு வருவதாகப் பேசப்பட்டு வருகிறது. கிராமங்களிலே இந்த முறையில் கடன் கொடுக்கப்பட்டு வருவதிலுள்ள சில குறைகளை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு கூட்டுறவு சொசைடியில் பெறக் கூடிய தொகை 1,500 ரூபாய் என்றால் மறுபடியும் கடன் தேவைப்பட்டால் அந்தத் தொகை பூராவையும் திரும்பக் கொடுத்த பின்புதான் வாங்க முடியும். சிலர் அவ்வாறு கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். ஏதோ ஐந்து அல்லது ஆறுயிரம் ரூபாய் பாக்கியாகிவிட்டால் கூட, சொசைடியிலே உள்ளவர்கள் முழுவதும் கட்டியவுடன்தான் மேலும் கடன் கொடுக்கமுடியும் என்று சொல்லுகிறார்கள். இதன் காரணமாக அவர்கள் வேறு கடன்காரரிடம் அதிக வட்டி கொடுத்து கடன் வாங்கி சொசைடியின் கடனை அடைத்து விட்டு பின்பு சொசைடியிலிருந்து கடன் வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் பல ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. சொஸைடியின் வாங்கும் பணத்தை அவ்வப்போது கட்டிவிடும்படியாகவும், கட்டிய பணத்தைத் திரும்பத் தேவைப்பட்டால் கொடுக்கும்படியாகவும் திருத்தம் செய்தால் பணம் புரண்டு கொண்டே இருக்கும்; மக்களுக்கும் கஷ்டம் இல்லாமல் இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் ஒவ்வொரு காரியங்களையும் கவனிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர கவனிப்பதில்லை. 1957-வது ஆண்டிலே இந்தச் சபையிலே நான் முதல் முதலாக என் பகுதியில் உள்ள பாதிரக்கடி கிராமத்தைப் பற்றிச் சொன்னேன். அந்த கிராமத்து விவசாய மக்கள் சர்க்காருக்கு வரியாகக் கொடுத்துவருவதோடு அர்த்தமானியத்திற்காக இன்னொரு பகுதி, ஐந்தில் ஒன்று வாரமாகக் கொடுத்து வருகிறார்கள். இந்த நாளிலே, இனும், ஜமீன் ஒழிந்த பிற்பாடு கூட அந்த மக்கள் இரட்டை அடிமையாக வாழ்கிறார்கள். மகசூலில் ஐந்தில் ஒரு பங்கை வாரமாகக் கொடுத்து வருகிறார்கள். இது பெரிய அநீதியாகும். இது மாறவேண்டும். ஏழில் ஒரு பங்கு என்று வாரக் குறைப்பு சட்டமிருந்தும் இவர்கள் சர்க்காருக்கு வரியும், அர்த்த மானியத்திற்கு வாரமும் கொடுத்து வருவது, இது ஒரு பெரிய அநீதி. இது வரைக்கும் அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அந்த கிராம மக்களுக்கு உடனடியாக இந்தச் சலுகையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப் பற்றி சென்ற கூட்டத்தில் கூட சொன்னேன், "கவனிக்கப்படும்" என்று பதில் சொன்னார்கள். ஆனால் இது வரையிலும் அதை கவனிக்கவே இல்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக அவர்களிடத்தில் எந்தவித கண்ணோட்டமும் இதுபற்றி இல்லை. இதைப்பற்றி மந்திரி, சர்க்காருக்கு எழுதி இருக்கிறேன். பதில் வந்து விடும் என்று சொன்னார்கள். இது வரையிலும் எந்த விதமான பதிலும் வரவில்லை. ஒருவித தகவலும் வரவில்லை. இந்தத் தகவலைப் பெறுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லையா? ஏன் அதுபற்றி சர்க்காரைக் கேட்க அமைச்சருக்கு அதிகாரம் இல்லை? ஏதாவது சொல்வதை சொல்லி விடட்டும். அங்கு செய்ய வேண்டிய வேலைகள் எல்லாம் ஆமை வேகத்தில்தான் போய்க் கொண்டிருக்கிறது. அதனால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுடைய ஒத்துழைப்பு அரசாங்கத்திற்குக் கிடைக்காமல் போய் விடும்.



இன்றைக்கு நம்முடைய திட்டங்களையெல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கும், அதற்கு வேண்டிய எல்லா வேலைகளைச் செய்வதற்கும் நமது நாட்டிலுள்ள என்.ஜி.ஓக்களுடைய ஒத்துழைப்பு தேவையாக இருக்கிறது. இப்படி நாம் போடக் கூடிய திட்டங்களை நிறைவேற்றும் வகையில் அவர்கள் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுதுள்ள விலைவாசி உயர்வால் அவர்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு தற்கால நிவாரணமாக குறைந்த பட்சம் இருபத்தி ஐந்து ரூபாயாவது கொடுத்து உதவ வேண்டும். மத்திய சர்க்காருடைய வழியா [illegible] இல்லாமல் வேறு விதமாக இருந்தாலும் இவர்களை கஷ்டத்திற்குள்ளாக்கக் கூடாது. அவர்களுடைய கஷ்டங்கள் நமக்குத்தான் தெரியும். ஆகவே அவர்களுடைய ...

கொஞ்சம் கூட்டிக்கொடுத்து அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

என்னுடைய தாலூகாவில் இப்பொழுது செட்டில்மெண்ட் நடக்கிறது. நிலம் யாருக்கு உரிமை என்று நிர்ணயம் செய்யப் படுவது செட்டில்மெண்ட். இதை லகுவாக செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக பார்த்தால் விவசாயிகளை பெரும் செலவுக்கு உள்ளாக்குகிறது. சாதாரணமாக ஒரு குடியானவனுக்கு, தனக்குச் சொந்தமான இருபது சென்ட் நிலம் தனது என்று ஆவதற்கு 100 முதல் 200 ரூபாய் வரையில் செலவு செய்யவேண்டியதாக இருக்கிறது. இந்த முறையில்தான் இப்பொழுது செட்டில்மெண்ட் நடைபெற்று வருகிறது. இதைப் பற்றி நான் பல முறை ரிவின்யூ மந்திரியிடம் சொல்லி இருக் கிறேன். டைரெக்டரிடமும் சொல்லியிருக்கிறேன். எப்படிச் சொல்லியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்து பரிகாரம் தேடிக்கொடுத்ததாகத் தெரியவில்லை. இப்படியே பல கிராமங் களில் நடந்து வருகிறது. இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் மக்கள் எப்படி முன்னுக்கு வரமுடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

சில இடங்களில் காடாக இருக்கும் நிலங்கள் சாகுபடி நிலமாக வும் விவசாயம் செய்யக் கூடிய நிலங்களை தரிசாகவும் கணக்கு எடுக்கப்படுகிறது. பட்டா கொடுக்கும்போது இப்படிப்பட்ட மாறுபட்ட முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது. நல்ல சாகுபடி செய்யக்கூடிய நிலமாக இருந்தால் அது காடு என்றும் உண்மை யாகவே காடாக இருக்கக்கூடிய நிலங்கள் சாகுபடி செய்யக்கூடிய நிலம் என்றும் ஆளுக்குத்தக்கபடி கணக்கிடப்படுகிறது. இப்படிப் பட்ட ஒரு பெரிய அநீதி நடைபெற்று வருகிறது. இதை மாற்றி அமைக்க வேண்டும். இந்த முறையில் ஆளுக்குத் தக்கபடி நிலங் களுக்கு பட்டா வழங்கப்படுகிறது. இதனால் ஏழை விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். பெரிய இனாம்தார்களுடைய வும் பணக்காரர்களுடையவும் நிலமாக இருந்தால் அவைகள் நிலங்களாக இருந்தாலும் அல்லது காடுகளாகவே இருந்தாலும் பட்டா நிர்ணயம் செய்யப் படுகிறது. இதைத்தவிர இன்னும் பத்து ஏக்கரா குடிக்காணி நிலத்தில் பத்து சென்ட் இருவாரமாக இருந்தால் அந்த நிலம் பூராவையும் இருவார தரிசாக செய்யப் படுகிறது. இதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதனால் அவர்களுடைய உரிமையை கோர்ட்டுகள் மூலமாகவே தீர்த்துக் கொள்வதாக இருந்தால் அதனால் விவசாயிகளுக்கு கஷ்டங்களும் செலவும் ஏற்படுகிறது. இது சம்பந்தமாக வக்கீலிடம் சென்றால் அந்த நிலம் இரண்டு ஆயிரம் மதிப்புள்ளதாக இருக்கிறது. "உனக்கு இரண்டாயிரம் ரூபாய் நிலம் போகப் போகிறதே அதனால் எனக்கு பீஸ் 100 அல்லது 200 ரூபாய் கொடு" என்று கேட்கிறார்கள். இதனால் விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே செட்டில்மெண்ட் செய்யும்போது இதையெல் லாம் விசாரித்து அல்லது மறு விசாரணை செய்து செட்டில்மெண்ட்





செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லையேல் அங்குள்ள மக்கள் கஷ்டத்துக்குள்ளாவார்கள் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நமது சர்க்கார் மதுவிலக்குச் சட்டத்தை மீறு கிறவர்களுக்கு கடுமையாக தண்டனை கொடுக்கிறார்கள். அந்தச் சட்டத்தை மீறுகிறவர்களை ஜெயிலுக்குக்கூட அனுப்புகிறார்கள். இன்றைக்கு நாட்டில் உணவு நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கிறது. அதிலும் சிலர் சர்க்கார் குறிப்பிட்ட விலையைவிட கூடுதலாகக்கூட விற்கிறார்கள். இன்னும் சிலர் உணவு பொருள் களுக்கு என்று வாங்கக்கூடிய உரத்தை வாங்கி பதுக்கல் செய் கிறார்கள். உரத்துடன் கூட கலப்படம் வேறு செய்கிறார்கள். அப்படி கலப்படம் செய்வதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட கலப்படம் செய்கிறவர்களை ஏன் ஜெயிலுக்கு அனுப்பிக்கக்கூடாது என்று கேட்கிறேன். அவர்களுக்கு ஏன் அதிகப்படியான தண்டனை விதிக்கவில்லை என்பதும் தெரியவில்லை. இப்படி கலப்படம் செய்வதால் எவ்வளவோ விவசாயிகள் பாதிக் கப்படுகிறார்கள். அதனால் ஒரு விவசாய குடும்பமே அழிந்து போய் விட்டது. அவனுடைய ஒரு வருஷ வாழ்வோ கெட்டுப் போய் விட்டது. இப்படிப்பட்ட நிலைமையில் கலப்படம் செய்கிற வர்களுக்கு ஏன் அதிகப்படியான தண்டனை விதிக்கக்கூடாது என்று கேட்கிறேன். மிளகாய் பயிருக்கு இப்படி கலப்படம் செய்யப்பட்ட உரத்தைக் கொடுத்ததால் அந்த வெள்ளாமையே பாதிக்கப்பட்டு அதை விவசாயம் செய்த விவசாயி பெரிய நஷ்டத்திற்குள்ளாகிவிட்டான். ஆகவே கலப்படம் செய்யக் கூடியவர்களுக்கும் அதிகப்படியான தண்டனை விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே திட்டங்களை நிறை வேற்றும்போது யார் யாருக்கு பணம் கொடுக்கப்படுகிறதோ அதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். இப்பொழுது அரசாட்சியிடம் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலேய அரசாட்சியில் நல்ல வாழ்வு வாழ்ந்து வந்தோம் என்றும் இப்பொழுதுள்ள அரசாட்சியில் எவ்வளவோ கஷ்டப்பட வேண்டியதாக இருக்கிறது என்றும் கிராமங்களிலுள்ள மக்கள் சொல்லுகிறார்கள். கிராமங்களில் சென்று பார்த்தால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று தெரியவரும். இந்த நிலைமைக்கு மக்களைக் கொண்டு போகக்கூடாது. ஆகவே கண்காணிப்பு அவசியம் இருக்க வேண்டும். இப்படி மக்களைக் கஷ்டப்படும் படியாக விட்டால் நாட்டிற்கு நல்லது அல்ல. மக்களை கஷ்டப் படுத்தாமல் நல்ல வாழ்வு வாழ நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI K. ANBAZHAGAN:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரையின் மீது நன்றி தெரிவிக்கும் முறையில் நண்பர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஓரளவு எதிர்க்கும் முறையில் சில கருத்துக்களைத் தெரிவிக்க நான் நிற்கிறேன். கவர்னர் கருத்துரை வழங்குதலைப் பற்றி முன்னால் அறிவிக்கப்படுகிற நேரத்தில் இந்த ஆண்டு

[Sri K. Anbazhagan] [7th December 1959

கவர்னர் என்ன என்ன சிறந்த கருத்துக்களை, நன்மைகளை வழங்குவார் என்று எதிர்பார்க்கிற வேளையில், அப்படி எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள் என்றும், அப்படி எதிர்பார்க்காமல் இருந்தவர்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பல ஆண்டுகளாகவே, இந்தக் கட்சி ஆட்சி வந்ததிலிருந்தே இன்றுவரைக்கும் கவர்னர் உரை நிகழ்த்துவது என்ற முறை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு முறையின்படி அவரும் உரையை நிகழ்த்திக்கொண்டு வருகிறார். கவர்னர் பதவி என்பதே எப்படி ஒரு சடங்காக இருக்கிறதோ அதைப்போலவே கவர்னர் உரை என்பதும் ஓர் சடங்காகி, கவர்னர் உரையின் மீது நன்றி செலுத்தும் தீர்மானம் கொண்டு வந்து பேசுவதும் மற்றொரு சடங்காக ஆகி இருக்கிறது. அதை எதிர்த்து திருத்தம் கொண்டுவந்து பேசுவதும் ஒரு சடங்காகத்தான் இருக்கிறது என்று எண்ணக் கூடுமானாலும், ஆளும் கட்சிக்கு ஜனநாயக முறையை ஏற்றுக்கொண்டிருப்பதால், திரும்பத் திரும்பச் சொன்னாலாவது பயன் ஏற்படாதா என்ற நினைப்பில், நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது சில திருத்தங்களைத் தந்து பேசவும் முன்வருகின்றோம்.

கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் பேசிய மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் அவ்வளவு பேரும் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் தங்களுடைய உரையை ஆரம்பித்துவிட்டு கடைசியில் தங்களுடைய குறைகளையும் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் கவர்னருக்கு நன்றியைத் தெரிவித்துவிட்டு அவருடைய உரைக்கு மறுப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் சொல்வதற்குக் காரணம் ஆளும் கட்சி சார்பிலுள்ளவர்களே கவர்னர் உரையை மனமாற வரவேற்பதாகக் கூறி தங்களுடைய மாறுபட்ட கருத்துக்களையும் தெரிவித்தார்கள். காலையிலிருந்து இது வரைக்கும் பேசிய அவ்வளவு பேர்களும் முதலில் பேசத் தொடங்கியவர் உட்பட, அதிகமான வருத்தத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். நன்றி செலுத்தும் உரையை நிகழ்த்தியவர் கவர்னர் உரையை வரவேற்று எந்த மறுப்பையும் எழுப்பாமல் தம்முடைய குறையை மட்டும் வெளியிட்டார். பின்னால் பேசியவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய மறுப்பை தெரிவிக்க ஆரம்பித்தார்கள். கடைசியாக பேசிய நீலகிரி தொகுதி அங்கத்தினர் தன்னுடைய மாவட்டத்திலுள்ள கஷ்டங்களை கவர்னர் அவர்கள் சரியாக கவனிக்கவில்லை என்றும் அப்படி கவனித்திருப்பினும் அதற்கு வேண்டிய பரிகாரம் தேடித்தரவில்லை என்றும், அப்படித் தேடித்தரும் முறையில் கவர்னர் உரை வழங்கப்படவில்லை என்றும் சற்று வருத்தத்துடனும் ஆத்திரத்துடனும் தம்முடைய கருத்துக்களை வெளியிட்டார். இவற்றையெல்லாம் நான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் உண்மையாக மாற்றுக் கட்சியில் இருக்கிற என் போன்றவர்கள் பேசாமல் இருந்துவிட்டாலே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் நாங்கள் பேசவேண்டியவற்றையும் சேர்த்துப் பேசுவார்கள் என்கிற எண்ணம் ஏற்படுகிறது. ஆனால் இவற்றையெல்லாம் பலரும் எடுத்துக் காட்டியும் கூட அமைச்சர் அவர்கள் இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அப்போதும் நிர்வாகம்





7th December 1959] [Sri K. Anbazhagan]

செம்மையாக நடைபெற்று வருகிறது என்று மக்கள் மதிப்பார்கள் என்று நான் கருதமுடியாது. இந்த நிர்வாக ஊழல்களுக்குக் காரணம் அமைச்சர்களுடைய தனிப்பட்ட குறை என்றும் நான் சொல்லமாட்டேன். மாறாக ஆட்சிமுறையில் நல்ல சுறுசுறுப்பும், கடமை உணர்ச்சியும் ஏற்பட்டாகவேண்டும். இன்றையதினம் இருக்கிற ஆட்சி முறையில் நாட்டில் அராஜகம் தோன்றவில்லை, வெளிப்படையான பெரிய குற்றங்கள் தோன்றவில்லை, திடீர் கொலைகளும், கொள்ளைகளும், பெரும் அளவு பட்டினிச் சாவுகளும் ஏற்படவில்லை என்று சொன்னாலும்கூட, மேலும் ஆட்சி பீடத்தில் இருக்கிறவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள் என்றாலும் கூட இன்றையதினம் எந்தவிதமான குறையும் இல்லாமல் ஆட்சி செலுத்துகிறார்கள் என்றோ அவ்வப்போது ஏற்படுகிற குறைபாடுகளை நீக்கி, நீதி நிர்வாகத்தைச் செவ்வையாக வைத்திருக்கிறார்கள் என்றோ யாரும் சொல்ல முடியாது. அப்படி யாரும் ஆளும் கட்சியிலே இருந்து கூடச் சொல்லவில்லை.

இதைச் சொல்வதற்குக் காரணம் இங்கே பேசிய மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் "அராஜகம் இல்லை என்றும் அராஜகம் இல்லாத காரணத்தினாலேயே ஆட்சி செம்மையாக நடைபெறுகிறது" என்றும் சொன்னார்கள். அராஜகத்தை எதிர்பார்ப்பது கூட அராஜக மனப்பான்மையை சேர்ந்ததாகத்தான் ஆகும். அஹிம்சையில் நம்பிக்கையுடையவர்கள் அதை எதிர்பார்த்தாலும் கூட நாங்கள் அதை எதிர்பார்க்கக்கூடவில்லை. அராஜகம் இல்லையென்ற காரணத்தினால் நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதாக நினைத்துவிடக்கூடாது. பல்வேறு குறைகள், பலவகைப்பட்ட ஊழல்கள் இன்றைக்கு உண்டாகிறது. ஆட்சியில் உள்ளவர்களின் செல்வாக்குத் தங்களுக்கு இருக்கிறது என்ற காரணத்தினால் பலவிதமான குற்றங்கள் இன்றும் நடைபெறுகின்றன. ஊழல்களும், அக்கிரமங்களும் அவ்வப்போது எடுத்துக் காட்டப்படுகிற காலத்திலேயே, உடனடியாக அதைக் கண்டிப்பதற்கு வேண்டிய பொறுப்பு உள்ளவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்கள். சில சமயத்தில்—நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்—நீதிக்கு மாறாகக் கூடச் சில பேர்கள் பேரில் வழக்குத் தொடரப்பட்டு உயர்நீதி மன்றத்தில் அவ்வாறு செய்தது தவறு என்று நீதி வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்க அராஜகம் இல்லை இல்லை என்று பேசுவது சிறப்பு அல்ல. நாடு அமைதியாக இருக்கக் கூடிய காலத்தில், அதற்கேற்ப நிர்வாகம் குறையில்லாமல் செம்மையாக நடைபெறுகிறதா என்று எண்ணிப் பார்த்தால், ஆட்சி ஒழுங்காக இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்தால் இல்லையென்றுதான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

கவர்னர் தம் உரையில் "பருவ காலம் கெட்டுவிடவில்லை, மழை நன்றாகப் பெய்திருக்கிறது, ஓரிரு மாவட்டங்களில் சிறு பகுதிகளில் மழை சரியாகப் பெய்யவில்லை, இக்குறையும் பருவ மழைக் காலம் முடிவதற்குள்ளாக நீங்கிவிடும் என்று நம்புவோமாக" என்று தெரிவித்திருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்பாக பெய்த மழை பேய் மழையாக மாறி எங்கே பார்த்தாலும் வெள்ளக்காடாகச் செய்ததும், ரயில்வே பாதை உடைபட்டு போக்குவரத்தே சில தினங்கள் தடைபட்டு நின்றதும்,

[Sri K. Anbazhagan] [7th December 1959]

விருத்தாசலம் ரயில்வே ஸ்டேஷனைச் சுற்றி ஜலம் தேங்கி நின்றதும், அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடிழந்து, பல ஆயிரம் ஏக்கர் பயிர் மூழ்கி அழிந்ததும் இந்த உரையில் குறிப்பிடப்படவில்லை. காரணம் இந்த உரை நீண்ட நாட்களுக்கு முன்பே தயாராகி இருக்கவேண்டும். ஆகவே இதை நான் இப்போது குற்றமாகச் சொல்லாவிட்டாலும் இந்த நிலைமைக்குப் பரிகாரம் என்ன என்று கேட்கிறேன். அதைத் தெரிந்து கொள்வதற்கு ஆவலாக இருக்கிறோம். பருவமழை சரியாக இருக்கிறது என்கிற காரணத்தினால் ஒரு பக்கம் திருப்தி எனினும் அதே சமயத்தில் இப்படி வெள்ளத்தினால் 'பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் பாழ்பட்டுப் போவதைக் கண்டு ஒரு பக்கம் வேதனையும் வருகிறது. இந்த நிலைமையைப் பொதுவாகவாவது கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கவேண்டும். பொதுவாக நல்லதையே எடுத்துச் சொல்லி—நல்ல மழை பெய்திருக்கிறது, நிலைமை சீர்பட்டுவிடும் என்று ஜோஸ்யரைபோலச் சொல்லி—நன்மையையே எதிர் பார்த்தாலும் கூட, "நன்மையே வரும்" என்று சொல்கிற குடுகுடுப்பைக்காரனைப்போல நாம் சொல்லிக் கொண்டிருந்தாலும் கூட தீமை வருவதைச் சுட்டிக் காட்டாதபோது நாம் கடமையுணர்ச்சியில் இருந்து தவறுகிறோமோ என்று ஐயப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதேபோலத்தான் அராஜகம் இல்லையென்று சொல்கிறபோதும் மிக அதிகமாக ஆட்சியில் ஏற்படுகிற சூழல்களை நாம் நினைக்காமல் விட்டுவிடுவதற்கில்லை. ஒரு வேளை எங்கே நீதிக்கு கேடு ஏற்படாது என்று கேட்டால் உதாரணத்திற்காக இதனைச் சொல்ல விரும்புகிறேன். உயர்நீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்கு ஒன்றின் தீர்ப்பில்—உயர்தர போலீஸ் இலாகா தலைவராக இருக்கிற ஒருவர் கூட, செல்வாக்குள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவரின் பேச்சைக் கேட்டு நிரபராதி ஒருவனை குற்றவாளியாக்கி இங்கே கொண்டு வந்தது சரியல்ல என்று தீர்ப்புக் கொடுத்திருப்பது எல்லோருக்கும் தெரியும். அரசாங்கத்தார் அப்படிப்பட்ட போலீஸ் அதிகாரியையாவது தண்டித்தார்களா? அப்படி இல்லாத சமயத்தில் நீதியையும், நியாயத்தையும் ஏழை எளியவர்களும் கூட நல்ல முறையில் எவ்வாறு பெற முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

அதேபோல இன்றையதினம் இருக்கிற பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்த ஆட்சி முறையை மாற்றி அமைக்கவேண்டும். இதைக் கூட நான் சொல்வது அமைச்சர்களைக் குறிப்பிட்டுப் பேசுகின்ற பேச்சு அல்ல. ஆனால் கடமை உணர்ச்சியும், சுறுசுறுப்பும் நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கு உடனடியாக ஏற்படும்படித் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். மற்றொன்று நான் தெரிவிக்க விரும்புகிறேன், "கவர்னர் அவர்கள் எல்லாக் கருத்துக்களையும் தம் உரையில் சொல்வது என்பது இயலாத காரியம், பொதுப்படையான சிலபல கருத்துக்களை அவர் சொல்லியிருக்கிறார். நிதி அமைச்சராக இருக்கின்ற நான் மற்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் என் நிதி நிலை அறிக்கையில் தெரிவித்திருக்கிறேன்." என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். அப்படியானால் கவர்னர் உரைதான் எதற்காக என்னும் கேள்வி எழத்தானே செய்யும்.



7th December 1959] [Sri K. Anbazhagan]

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தின் நிலைமையைப்பற்றி நாம் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். உணவு வேண்டும் என்கிறவர்களுக்குக் காசு கிடைத்தாலும் கூட வாங்கி உண்ண உணவுப் பண்டம் கிடைக்காது போகிற நிலைமையில் நாட்டில் ஏற்படுகிற பஞ்சம் ஒருவகை. மற்றொன்று, உணவுப் பண்டங்கள் இருந்தாலும் வாங்கி உண்பதற்குப் பணம் இல்லாத நிலைமையில் சோறு இன்றி பரிதபிக்கிற ஒரு கூட்டமாக மக்கள் ஆகிவிடும் நிலை. இன்றையதினம் நியாயவிலைக் கடைகளை அதிகமாகத் திறந்திருக்கிறோம் என்று அமைச்சர்கள் சொல்லலாம். மற்ற கடைகளிலும் உணவுப் பண்டம் கிடைக்கிறதே என்றும் சொல்லலாம். இருந்தாலும் கூட வாங்கி உண்பதற்குப் பணம் இல்லாத நிலையில் ஒரு பெருங் கூட்டம் இன்றையதினம் பட்டினிப் பட்டாளமாக மாறிக் கொண்டு வருகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாட்டில் இதனாலும் ஒரு கொடிய பஞ்சம் பரவிக்கொண்டிருக்கிறது. உணவுப் பண்டம் கிடைக்கும்படியாகச் செய்வதோடு கூட நாட்டு மக்களுக்கு அவற்றை வாங்கி உண்ணக்கூடிய வழிவகையும் செய்தால்தான் உண்மையில் உணவுப் பிரச்சனையை பஞ்சத்தை ஓரளவாவது தீர்த்து விட்டதாக ஆகும். கையிலே பணம் கொண்டு வாங்க வருபவர்களுக்கு எல்லாம் அரிசி கொடுப்பது அரசாங்கத்தின் கடமை. அதேபோல எல்லோரும் உணவுப் பண்டம் வாங்கி உண்ணும்படியாக எல்லா மக்களுக்கும் வாழும் வழி செய்வதும், அவர்களுக்கு வசதி அளிப்பதும் அரசாங்கத்தின் லட்சியமாக இருக்க வேண்டும் இன்றையதினம் 36 கோடி மக்கள் இருக்கிறார்கள் இந்த தேசத்தில் என்றால் அதில் 30 கோடி மக்களுக்குத்தான் மூன்று வேளையும் வயிறார உண்ண உணவு கிடைக்கும். தமிழ் நாட்டில் மூன்று கோடி மக்கள் இருக்கிறார்கள் என்றால் அதில் 50 லட்சம் மக்கள் ஒரு வேளைகூட வயிறார உண்டு அறியாதவர்கள். இன்னும் ஒரு 50 லட்சம் மக்கள் இரண்டு வேளை சோறு உண்ணும் நிலைமையில் இருக்கலாம். முதலில் குறிப்பிட்டவர்களில் பெரும்பாலோர் ஒரு நாளைக்கு ஒரு வேளைச் சோறாவது கிடைத்தால் போதாதா என்று தடுமாறிக்கொண்டிருக்கிறவர்கள் தான். இவர்களுக்கும் மூன்று வேளை சோறு கிடைக்கச் செய்ய வேண்டுமென்றால் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பது மட்டுமன்றி, இருக்கிற உணவுப்பண்டத்தை வாங்கி உண்பதற்கு ஏற்றவகையில் இவர்களுக்கு வாழ வழி செய்யவேண்டும். அவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். இன்றையதினம் வேலை வாய்ப்பு எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்று இந்த உரையில் சொல்லப்படவில்லை. ஒரு ஆண்டுக்கு எத்தனை லட்சம் பேர் வேலை செய்யக்கூடிய வயதினை அடைகிறார்கள், அவர்களில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது, இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வளவு குறைந்திருக்கிறது என்று தெரிவிக்கவேண்டும்.

அதேபோல் தொழில் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு வருகிறதா என்றும், ஏற்பட்டுக் கொண்டு வருமானால் எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுக் காட்டியிருந்தால் நான் மிக்க மகிழ்ச்சி அடைவேன். ஆனால் அதற்குப் பதிலாக கவர்னர் அவர்கள் தமது உரையின் தொடக்கத்திலேயே

[Sri K. Anbazhagan] [7th December 1959

"கைத்தொழில் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. நமது பிரதான தொழில்களான ஜவுளி, சிமெண்ட், சர்க்கரை லகு-இஞ்சினிரிங்தொழில் உற்பத்திகள் ஆகியவைகளில் அபிவிருத்திக்கான திட்டங்கள் திருப்திகரமாக முன்னேறி வருகின்றன."

என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தத் தொழில் துறையில் அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது என்று சொன்னால் அந்த அபிவிருத்தி ஐந்து சதவிகிதமா, இருபத்தைந்து சதவிகிதமா, முப்பது சதவிகிதமா, எவ்வளவு அதிகமாகியிருக்கிறது என்பதை குறிப்பாக எடுத்துக் காட்டியிருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இன்னும் பூரண அபிவிருத்தி அடைவதற்கு என்ன என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர் தம் உரையில் குறிப்பிட்டிருக்கலாம். அதற்குப் பதிலாக பொதுப்படையாக அங்கங்கே இருக்கிற சிலபல நல்ல பகுதிகளைமாத்திரம் எடுத்துச் சொல்லி மற்றவற்றைப் பற்றியெல்லாம் சுட்டிக்கூடக் காட்டாமல் விட்டுவிட்டதற்குக் காரணம் எல்லோரும் எல்லாக் காரியங்களும் நன்றாக நடந்து கொண்டிருக்கின்றன என்று எண்ணி திருப்தி அடையட்டும் என்று இருக்குமானால் அது உண்மையிலேயே நம்முடைய கடைமையுணர்ச்சியை எடுத்துக் காட்டாது, நாட்டு மக்களுடைய கஷ்ட நஷ்டங்களை எல்லாம் நன்றாக உணர்ந்தவர்கள் நாம் என்பதைக் கொஞ்சம் கூடப் பிரதிபலிக்கச் செய்வதாகாது.

மற்றொன்று தொழில் துறையில் இந்த உற்பத்திகள் எல்லாம் அபிவிருத்தி அடைந்து வருகிறது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளவற்றை எடுத்துக் கொண்டாலுங் கூட உண்மையில் அப்பொருள்களுக்குக் கூடப் பலப்பல வகையில் தட்டுப்பாடும், நெருக்கடியும் இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். சிமிண்டு பல கிராமங்களில் உள்ள மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஜவுளி அதைத் தயாரிக்கும் தொழிலாளர்களுக்கே மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. கைத்தறி ஜவுளியை அமெரிக்காவில் வாங்குவார்கள் என்று எதிர்பார்த்து சில ரகத்தைத் தயார் செய்தாலும் அதுவே இன்றைக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலமாக விற்பனை செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கிறது. அந்த விற்பனையும் இப்போது தடைப்பட்டு இருக்கிறது. அதற்கு நண்பர் திரு. விசுவநாதன் அவர்கள் ஒரு நல்ல யோசனையை எடுத்துச் சொன்னார்கள். வியாபாரிகள் வாங்க வந்தால் பத்து புதுக்காசு அளவுக்குத் தள்ளுபடி தரப்படுகிறது. தனிப்பட்டவர்கள் வாங்கப் போனால் இவர்கள் 6 பைசா தான் தள்ளுபடி செய்து தருகிறார்கள்; அதனால் ஒரு தேக்கம் ஏற்பட்டிருக்கிறதென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதுவும் தேக்கத்திற்கு காரணமாக இருக்கலாம். கூட்டுறவு ஸ்தாபனத்தில் சாக்கு வாங்குகிறவர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான ரிபேட்—தள்ளுபடி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தொழில் துறையில் சரியானதொரு கொள்கை வகுக்கப்பட்டு இத்தொழில் சிறந்த முறையில் வளர்ச்சி அடையும் படியாகச் செய்வது நம் கடமையாகும்.



7th December 1959] [Sri K. Anbazhagan]

மதுரை, ராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாக விற்கப்பட்ட சரக்குகளுக்கு ஓராண்டு காலம் ஆகியும் கூட இன்னும் ரிபேட்—தள்ளுபடி தொகை கொடுக்கப்படவில்லை. அந்தக் குறையைத் திரும்பத் திரும்ப அவர்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் எல்லாம் அந்தத் தொழிலை மிகவும் பாதிக்கப்படாத வகையில் பார்த்துக் கொள்ளவேண்டும்.

அதுபோலவே சர்க்கரையைப் பற்றிச் சொல்லுகிறபோது இரண்டொரு கருத்து என் நினைவுக்கு வருகிறது. சர்க்கரை ஒரு பக்கம் கிடைக்காமல் இருக்கிறது. அதோடு கூட அதன் விலை ஏறுவதும் ஒரு பக்கம் நிகழ்கிறது. அதே சமயத்தில் இந்த மாகாணத்திற்குப் புதிதாக சர்க்கரை ஆலை வரப்போகிறது என்ற செய்தி ஒரு பக்கம் வருகிறது. வேறு மாகாணத்தவர்கள் இனி சென்னை மாகாணத்தில் சர்க்கரை ஆலை வந்துவிடும் என்கிற கவலையையும் தெரிவிக்கிறார்கள். பொறாமையும் அடைகிறார்கள். இப்படி போட்டி ஒரு பக்கம், பொறாமை ஒரு பக்கம், அதனால் ஏற்படுகிற தடையும் தாமதமும் அந்தத் தொழில் வளர்ச்சியைப் பாதிக்கிறது. மக்கள் இன்றையதினம் சர்க்கரை கிடைக்காமல், அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் துறையில் நல்லதொரு அபிவிருத்தி ஏற்படுத்துவதற்குத் தக்க பல நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். சென்னை மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கானத் திட்டத்தைப்பற்றி, டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் தம் கட்டுரை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் தென்னாடு—தமிழகம் வளர்ச்சி அடைய வேண்டுமானால் ரசாயனத் தொழில் துறையிலும், அதேபோல் இன்ஜினியரிங் தொழில் துறையிலும் ஒவ்வொரு பெரிய திட்டத்தை மேற்கொண்டு செயலாற்றியாகவேண்டும். ஒரு பத்து ஆண்டு காலத் திட்டம் என்று சொன்னால் கோடிக்கணக்கான ரூபாய் மூலதனம் போட்டு ஈடுபட்டால்தான் நமது நாடு நல்லதொரு வளர்ச்சியை அடைய முடியும், என்று அவர்கள் தெரிவித்திருப்பது ஏறத்தாழ 300 கோடி அளவு மூலதனமாகும். நமது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது தொடக்கத்தில் 300 கோடி என்று தொடங்கி பின்னர் 275 கோடி அளவுதான் கிடைக்கும் என்ற நினைப்போடு அமைச்சர் பேசுகிறார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 398 கோடி அளவிற்கு நமது நிதி அமைச்சர் அவர்கள் கேட்கச் சென்றார்கள். அவரது பெரிய உள்ளத்திற்காக நான் அவரை வாழ்த்துகிறேன். ஆனால் கடைசியாக 152 கோடிக்குத்தான் வந்து நின்றது. நிதியமைச்சரின் பெருந்தன்மைக்கு மத்திய அரசாங்கத்தினிடம இடம் இல்லாததால் அவர்களது வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டது. இருந்தாலும் ஒத்துக்கொண்டு வந்தார்கள், அவர்கள் சொன்னதை. அவர்களைக் குறித்து நான் கடுமையான வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. அந்த உரிமையை அவர் எனக்குத் தர மாட்டார். ஆனால், செட்டிநாட்டுப் பகுதியைச் சேர்ந்த காரைக்குடி உறுப்பினர் அவர்கள் இங்கே பேசும்போது, "டெல்லிக்குப் போய் நமக்குரிய பங்கைப் பெறவேண்டும், கேட்டுப் பார்க்க வேண்டும், சத்தம் போட வேண்டும், எங்கள் சத்தம் போதாவிட்டால் சென்னை சட்ட மன்றத்தில் வேண்டிய சத்தம் போடுவார்கள்

[Sri K. Anbazhagan] [7th December 1959

என்று சொல்லவேண்டும், அதற்கும் ஒன்றும் செய்யாவிட்டால் ராஜிநாமா செய்வோம் என்று சொல்ல வேண்டும், அப்படி ராஜிநாமா செய்வோம் என்று சொல்வதினால் அமைச்சர் பதவி போய்விடாது மூன்று மாதங்கள் சென்ற பிறகு உங்களையேதான் கூப்பிட்டு பதவியில் இருக்கச் சொல்வார்கள்" என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் முன்னாள் அமைச்சராக இருந்து அனுபவம் பெற்றவர்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், அந்த அளவு நாம் போராட வேண்டியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்குத்தான். இப்பொழுது நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நியாயமான பங்குத் தொகையை கேட்க வேண்டியிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள தொகை நமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த போதுமானதாகாது. ஒரு சில தொழில் துறைகளுக்கே 300 கோடி ரூபாய் வரை வேண்டுமென்று டாக்டர் லோகநாதன் போன்ற நிபுணர்கள் கருதுகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். 275 கோடி, 300 கோடி என்று சொல்லும்போது தொழில்கள் எல்லாம் அதில் சேரக் கூடியதல்ல. சில தொழில்களை பொதுத் துறையில் எடுத்துக் கொள்ள வேண்டும், சிலவற்றை தனியார் துறையில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதெல்லாம் இதில் சேரவில்லை. கல்வித் துறை, வைத்தியத் துறை போன்ற காரியங்களுக்காக மட்டும்தான் இந்த 275 கோடி என்று இருக்கிறதே தவிர எல்லாவற்றையும் சேர்த்தது அல்ல.

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திற்கு எனது நன்றி. நமது மாநிலத்தில் அரசாங்க பொறுப்பிலுள்ளவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளுக்கு பொதுத் துறையில் 275 கோடி, 300 கோடி வேண்டுமென்று கேட்பது போல் தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் எந்தளவுக்கு மூலதனம் போடுவதற்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்பதற்குள்ள பொறுப்பும் நிதியமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றி நாம் கலந்து சிந்திக்க வேண்டும். தனியார் துறையை எடுத்துக் கொண்டால் வடநாட்டில் தனியார் துறையில் உள்ளவர்கள் பெறுவதைப்போன்று தென்னாட்டில் தனியார் துறையில் உள்ளவர்கள் பெறவில்லை என்பது நாடறிந்த உண்மையாகும். உத்தர மாகாணம் பெறுகிற பங்குத் தொகை சென்னை மாநிலத்திற்கு கிடைக்கவில்லை என்றார் முன்னால் பேசிய காரைக்குடி அங்கத்தினர்.

THE HON. SRI C. SUBRAMANIAM : உத்தர மாகாணத்தைப் பற்றித் தெரியாமல் பேசியிருக்கிறார், முன்னால் பேசிய அங்கத்தினர். வேறு மாகாணங்களைப் பற்றி பேசினாலும் பேசலாம், ஆனால் உத்தர மாகாணத்தைப் பற்றி சொன்னால் அதற்கும் இதற்கும் பொருத்தம் இருக்காது. அதை விட அதிகம் சலுகை நமக்குக் கிடைத்திருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள், பிற மாகாணங்களைப் பற்றி வேண்டுமானால் அப்படிச் சொல்லலாமென்று. ஆகவே, உத்தர மாகாணத்தைத் தவிர மற்ற மாகாணங்களை எடுத்துக் கொள்வோம். பெயரில்தான் தவறு



7th December 1959] [Sri K. Anbazhagan]

ஏற்பட்டதே தவிர கருத்தில் தவறு ஏற்படவில்லை. உரிமைக்காகப் போராடினாலொழிய தாழ்ந்த வருமானம் உள்ள தமிழ் நாட்டு மக்கள், தமிழ் நாடு என்று சொல்லும்போது அமைச்சர் அவர்கள் என்ன நினைப்பார்களோ, ஆயினும் சென்னை மாநிலத்தைப் பொறுத்தமட்டில் தமிழ் மக்கள் எப்படி முன்னேற முடியும்? எல்லாத் துறைகளையும் சேர்த்து எவ்வளவு தொகை கிடைக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நெய்வேலித் திட்டத்தைப் பற்றிப் பேசிப் பேசி பொதுமக்களை மகிழ்ச்சியடையச் செய்யப் பார்க்கிறார்கள் அமைச்சர்கள். நெய்வேலியில் இன்னும் தண்ணீர் நிற்கிறது. இந்தத் தண்ணீரைப் போக்கித்தான் நிலக்கரி எடுத்தாக வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதற்காகப் போடப்பட்டிருக்கும் மூலதனம் சுமார் 60 கோடி, அதைச் சார்ந்த தொழில்களுக்கு போடப்படும் மூலதனம் 60 அல்லது 100 கோடி ரூபாய் ஆகலாம். ஆக எல்லாத் தொகையையும் சேர்த்துக் கூட்டினாலும் திட்டத்தில் நமக்குக் கிடைக்கக் கூடிய தொகை மிக மிக குறைவுதான். இந்தக் குறையைப் போக்கினாலொழிய மக்களின் வறுமையை எப்படி ஒழிப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படி ஒழிப்பது, எப்படி நமது மாநில மக்களின் அடிப்படைக் குறைகளைப் போக்குவது? இவைகளையெல்லாம் போக்குவதற்கான வழி வகைகள் கவர்னரது உரையில் இருக்கிறதா என்று பார்க்கும்போது அப்படிப்பட்ட நோக்கத்தை கவர்னர் அவர்கள் தெரிவிக்கவில்லை. அப்படி தெரிவிக்காதது, கவர்னர் அவர்கள் கடைசியாக ஒரு பெரிய பிரச்சனையில் நமது கவனத்தை திருப்பியிருக்கிறார்கள். வெளியிலிருந்து இந்திய எல்லைக்கு, அபாயம் நேரலாம் என்றிருக்கும் இந்நிலையில் நம் அனைவருக்கும் குறிக்கோள் ஒன்றுதான் என்பதை வலியுறுத்தும் முறையில் செயலாற்றுவோமாக" என்று கூறியிருக்கிறார்கள். இதற்கு எந்த விதமான மறுப்பும் இருப்பதற்கில்லை அரசியல் அறிவுள்ள எவரும் இதற்கு மறுப்பு சொல்ல மாட்டார்கள். வெளியிலிருந்து ஆக்கிரமிப்பு இருக்கிறது, ஆகவே அதை எதிர்க்க உதவி செய்யவேண்டுமென்று சொன்னால் யாரிடமிருந்தும் அதற்கு மறுப்பு இருக்க முடியாது. ஆக்கிரமிப்பு என்பதை யார் நடத்தினாலும் அது எதிர்க்கப் படவேண்டியதுதான். உலகத்திலுள்ள எந்த நாடும் ஆக்கிரமிப்புக்கு இடம் தரக் கூடாது. எந்த நல்ல கட்சியும் ஆக்கிரமிப்பை ஏற்றுக் கொள்ளாது. திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட நாட்டு மக்களின் வாழ்வில் அக்கறை வைத்து வட நாட்டுக்காரர்கள் இங்கே ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று கூறுகிறபோது நாங்கள் வேறொரு இனத்தவர் ஆக்கிரமிப்பை நடத்துவதற்கு ஒரு நாளும் இடம் தராது. இன்றைய அரசியல் அமைப்புப்படி இந்திய எல்லைக்கு ஏதாவது ஊறு ஏற்பட்டால் அதில் நமக்கும் பங்கு உண்டு நம்மையும் பாதிக்கும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் எண்ணுகிறது. ஆனால் ஜனநாயக முறைப்படி பல அரசியல் கட்சிகளுக்கிடையேயுள்ள பல்வேறு பிரச்னைகளை அலசிப் பார்த்து அதில் நேரக்கூடிய மாறுபாட்டை யாரும் கைவிட முடியாது. இன்றையதினம் கவர்னர் அவர்கள் இந்தப் பெரிய பிரச்னையைப் பற்றிக் குறிப்பிடும்போது சென்ற ஆண்டு குறிப்பிட்ட ஒரு பிரச்னையை இந்த ஆண்டு உரையில் குறிப்பிடாமல் விட்டு விட்டார்கள். இன்றையதினம் அரசாங்கம் யாரை நம்பி,

[Sri K. Anbazhagan] [7th December 1959

அடிப்படையில் யாரைக்கொண்டு பணியாற்றுகிறதோ அந்த அரசாங்க ஊழியர்களின் நலத்தைக் குறிப்பிட்டு அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கப் படவேண்டுமென்பதைப்பற்றி கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிடவில்லை. கவர்னர் சென்ற ஆண்டு அதைத் தெரிவித்தார்கள்.

" The Government are well aware of the hardships of their non-gazetted officers arising out of the rising trend in prices. Within the available resources, the Government have been doing their best in recent years to redress some of the grievances. It was their intention to examine the matter again in the light of the Report of the Central Pay Commission which may indicate some way of reducing the glaring disparities in the emoluments of the Central and State Government servants doing identical jobs." என்று சென்ற ஆண்டில் தெரிவித்துள்ளார்கள். என்.ஜி.ஓ.க்களின் பரிதாபகரமான நிலைமை, பண்டங்களின் விலையேற்றத்தினால் அவர்களுக்கு விளையும் கஷ்டம், மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும் மாநில அரசாங்க ஊழியர்களுக்குமிடையேயுள்ள ஊதிய ஏற்றத்தாழ்வு முதலியவைகளைப் போக்குவதில் சென்னை மாநில அரசாங்கத்திற்கு அக்கறையிருக்கிறது என்ற நோக்கத்தை இந்த உரையில் தெரிவித்திருக்கிறார்களா என்றால் அப்படி தெரிவிக்கவில்லை. அதற்குக் காரணம் . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : தெரிவித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து கமிஷன் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறோம். அதனால் திருப்பி அந்தப் பாடத்தை படிக்க வேண்டாமென்றுதான் அதைப்பற்றி இங்கு குறிப்பிடவில்லை என்று நினைக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : கவர்னர் அவர்கள் அதைப் பற்றிக் குறிப்பிடாததற்குள்ள ஒரு காரணத்தை நிதியமைச்சர் அவர்கள் தருகிறார்கள். கவர்னர் அவர்கள் அனுவசியமாக எதையும் பேசமாட்டார்கள் என்று எனக்கும் தெரியும். கவர்னர் சென்ற ஆண்டு தெரிவித்த ஒரு கருத்தின்படி, விலையேற்றம் அப்படியேயிருக்கிறது என்று சுட்டிக் காட்டி ஆகவே அதற்கு பரிகாரம் தேட வழி காண்கிறோம் என்றார். கடந்த இரண்டு மாதங்களில் ஏற்பட்டிருக்கிற விலையேற்றம் காரணமாக எந்த என். ஜி. ஓ. குடும்பமும் மானத்தோடு, மரியாதையோடு வாழ்க்கை நடத்த முடியாது, எந்த ஆரம்ப ஆசிரியரும், போலீசாரும்கூட அன்றாட வாழ்க்கை நடத்த முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. குழு நியமிக்கப்பட்டிருக்கிறது, 20, 30 ரூபாய் கூடுதலாகத் தருவார்கள் என்று எதிர்பார்க்கலாம் என்றாலும், இடைக்காலத்தில் ஏதாவது நிவாரணம் அளித்திருக்க வேண்டும். கவர்னரே இடைக்கால உரையைத்தான் நிகழ்த்தியிருக்கிறார்கள். ஏனெனில் இந்த பட்ஜெட்டுக்கும், இன்னொரு பட்ஜெட்டுக்குமிடையே பெரும்பாலும் அரசாங்கம் புதிய வரி போடுவது கூடாது, புதிய திட்டங்களையும் மேற்கொள்ள முடியாது என்பதாலும் அத்தகைய இடைக்காலத்தில் கவர்னர் உரையாற்றியிருப்பதினாலும் என்.ஜி.ஓ.க்களுக்கு ஒரு இடைக்கால நிவாரணமாவது அளித்திருந்தால் அது மிகவும் வரவேற்கப்பட்டிருக்கும். என்.ஜி.ஓ.-க்களுக்கு இருக்கின்ற



7th December 1959] [Sri K. Anbazhagan]

பரிதாபகரமான நிலைமையைப் போன்றுதான் நான்காம்தர ஊழியர்களும் துன்பமான சூழ் நிலையில் வருந்திக்கொண்டிருக்கிறார்கள். கிராம அதிகாரிகளை எடுத்துக்கொண்டால் அவர்களைப் பற்றி இன்று காலையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர் அவர்கள் கிராம அதிகாரிகள் முழு நேர ஊழியர்கள் அல்ல என்று தெரிவித்திருக்கிறார்கள். முழு நேர ஊழியர்கள் அல்ல என்று சொல்லுவதின் மூலமாக அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குத்தான் வேலை செய்கிறார்கள் என்று யாரும் சொல்ல முடியாது. மாறாக அவர்கள் வேலை செய்யும் நேரத்திற்கு, இத்தனை மணி நேரம் வேலை செய்கிறார்கள் என்று கணக்கிட்டு அவர்கட்கு ஊதியம் கொடுக்கப்படவுமில்லை. அவ்விதம் கணக்கிட்டுக் கொடுக்கப்படுவதாக இருந்தால், இப்போது அவர்கள் பெறும் ஊதியத்தைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கும். இல்லையென்றால் உள்ளாட்சி மன்றங்களில் வழக்கிலுள்ளதுபோன்று 100 பில் எழுதினால் ஆறு அணா, 200 பில் எழுதினால் 12 அணா, என்று கணக்கிட்டு கொடுக்கப்படுவதைப்போல் இவர்களுக்கும், இவர்கள் செய்கின்ற வேலைகளை அனுசரித்து, ஜனத்தொகைக்கு தகுந்தவாறு—கோழிக் கணக்கு எடுப்பதாக இருந்தால் அவைகளினுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு கணக்கிட்டுக் கொடுத்தாலும்கூட இப்போது இவர்கள் பெறுவதைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு ஊதியம் அதிகம் பெறுவர். கிராம ஊழியர்களாக இருப்பவர்களை எடுத்துக் கொண்டால் இருபது ஆண்டுகளுக்கு முன்னால் எவ்வளவு பணியாற்றினார்களோ அதைவிட ஐந்து மடங்கு கூடுதலாக பணியாற்றுகிறார்கள். முன்பு எல்லாம் ஒரு தாசில்தாருக்கு பதில் சொல்லவேண்டியவர்கள் இப்போது ஏறத்தாழ ஏழெட்டு தாசில்தார்களுக்கு பதில் சொல்லுகிறார்கள். முன்பு ஒரு இலாகாவுக்குத்தான் வேலை பார்ப்பதாக எண்ணிக் கொண்டிருந்தார்கள். இப்போது நாலைந்து இலாகாவுக்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் அதிகமாக வேலை செய்து கொண்டிருக்கின்ற இவர்களுடைய ஊதியத்தை உயர்த்தி அவர்களுடைய வேலையை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சர் அவர்கள் பல தடவை உறுதியளித்திருக்கிறார். அவர்கட்குச் சம்பளம் கிடைப்பது சம்பந்தமாக பல உத்தரவுகள் வெளியிட்டிருக்கிறார்கள். அவையெல்லாம் என்னவாயின என்று தெரியவில்லை. இன்னும் சில மாவட்டங்களில் சம்பளம் உரிய காலத்தில் கிடைக்கவில்லை என்றும், இதைப்பற்றி சட்டசபையில் எடுத்துக் கூறி உடனடியாகச் சம்பளம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கடிதத்திற்குமேல் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. சில மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்கட்கு இதுவரையிலும் ஊதியம் போய் சேரவில்லை என்றால் அவர்களுடைய நிலைமை என்ன ஆவது? வேறு எந்தவிதமான தொழில் நடத்துவதற்கும், வாய்ப்பில்லாத இவர்கள் தங்கள் வாழ்க்கையை எப்படி நடத்திக் கொண்டிருக்க முடியும்? ஆகவே இதை ஒரு பெரிய குறை என அமைச்சர் அவர்கள் கருதி தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நண்பர் சின்னத்துரை அவர்கள் கூறினதைக் கேட்டு, அமைச்சர் அவர்கள் எங்களை வெளியேறவா சொல்லுகிறீர்கள் என்று கடுமையாகக் கேட்டார்கள். நான் வெளியேறச் சொல்லவில்லை. இம்மாதிரியான குறைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழிவகை யிற்படுத்துங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** நான் முன்பு கேட்டபோது இனிமேல் பேச வதற்கு யாரும் பெயர் கொடுக்கவில்லை. இப்போது ஒரு அங்கத் தினர் பெயர் கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு 10 நிமிட நேரம் ஒதுக்கவேண்டும் என்று சபையை கேட்டுக்கொள்கிறேன்.

**Sri K. ANBAZHAGAN :** உணவுப் பண்டங்களின் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி உணவுப் பிரச்னைபற்றி விவாதிக்க வாய்ப்புக் கிடைக்கும். நேரத்தில் விளக்கமாகப் பேசலாம் என்று கருதுகிறேன். ஆகவே இன்றைய தினம் அரசாங்கம் உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டிய சில திட்டங்களைப்பற்றி நான் நினைப்பூட்ட விரும்புகிறேன். உண்மையாக தமிழ் நாட்டிற்கு மிகவும் தேவையாக இருக்கக்கூடிய நீர்ப்பாசனத்திற்காக கிருஷ்ணா-பெண்ணாறு திட்டத்தை மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத் தில் ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். பொதுவாகத் தென்னாட்டிலுள்ள நான்கு மாகாணங்களும் அரசியல் முறையில் இல்லாவிட்டாலும் மற்ற எல்லா வகைகளிலும் தொடர்புள்ளவை யாகத்தான் இருந்து வருகின்றன. ஆந்திராவிலுள்ள மக்கள் நமக்கு வஞ்சனை செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக் கிறது. அதோடு இதில் பொறுப்புள்ளவர்கள் கலந்து பேசி நல்ல முடிவு எடுத்து கிருஷ்ணா-பெண்ணாறு நீரினை தமிழ் நாட்டு மக்களுக்கு, குறிப்பாக வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்ட பகுதி மக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். அடுத்ததாக மின்சார உற்பத்தி எவ்வளவு பெருகியிருந்தாலும், அணு உலை ஒன்று ஏற்படுத்தினால்தான் நமது தேவைகள் பலவும் பூர்த்தியாக முடியும். அதோடு அணு உலை ஏற்படுத்துவதற்குரிய வாய்ப்பும் வழியும் நமக்கு இருக்கிறது. கன்னியாகுமரி பகுதியில் கிடைக்கும் மணல் போன்ற பொருட்களிலிருந்து இதை ஏற்படுத்த வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. மேலும் நெய்வேலித் திட்டத்தை ஒட்டி இதை உடனடியாக ஏற்படுத்துவதற்கு ஏதாவது தடங்கல்கள் இருந்தாலும், கன்னியாகுமரி பகுதியில் கிடைக்கிற மூலப் பொருட்களைக் கொண்டு அணு உலை ஒன்றை ஏற்படுத்த நாம் வலியுறுத்த வேண்டும். அதே போல், தமிழ் நாட்டின் கடல் போக்குவரத்து ,வாய்ப்பையும் வசதியையும் அதிகப்படுத்துகின்ற முறையில் சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தையும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வற்புறுத்த வேண்டும். அகில இந்திய முறையில் துறைமுக வசதிக்காக தூத்துக்குடி துறைமுகத்தை பெரிதாக்குவது என்பது மட்டுமின்றி, தூத்துக்குடி தொழில் துறையில் தேய்ந்து கொண்டே போவதாலும், இதை மேற்கொள்ள வேண்டும் அங்குள்ள உப்புத் தொழிலில் பல காலமாக இருந்து வந்த கிராக்கி இப்போது குறைந்து கொண்டே இருக்கிறது. வேதாரண்யத்திலும் இதே நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்த வட்டார மக்கள் தொழில் பெறும் வகையில் தூத்துக்குடி துறைமுகத்தை பெரிது படுத்துவதுடன் திருநெல்வேலி மாவட்டத்





திற்கு பயன் ஏற்படுகிற முறையில் இந்த சேதுசமுத்திரத் திட்டத்தையும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். அதேபோல, நீலகிரியில் கிடைக்கும் இரும்பை பயன்படுத்த வழி காணவேண்டும். அதே நீலகிரியில் படச்சுருள் (ரா பிலிம்) தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தப்போவதாக செய்தி இருந்து கொண்டிருக்கிறது. இதற்கான உறுதிமொழி அமைச்சரவையி லிருந்து இதுவரையில் நமக்கு கிடைக்கவில்லை. இதை மத்திய அரசினர்தான் செய்யவேண்டுமென்றிருந்தாலும், அவர்களை சீக்கிரமே இதை நிறைவேற்றிவைக்க வற்புறுத்த வேண்டும். அதோடு பெரியாறு திட்டத்தில் மேற்குப் பக்கத்தில் ஒரு அணை கட்டினால் அதன் மூலம் ராமனாதபுரம் மாவட்டம் பயன்பெற முடியும், என்று சொல்லப்படுகிறது. இதற்கு எண்பது கோடி அல்லது நூறு கோடி செலவு செய்ய வேண்டியிருக்கும் என்றிருந் தாகவேண்டும். இது தவிர தமிழ் நாட்டில், இருபது அல்லது இருபத்தி-ஐந்து சிறு சிறு அணைக்கட்டுத் திட்டங்கள் நிறைவேற்றக் கூடியவையாக இருக்கின்றன. கிருஷ்ணகிரி பக்கத்தில் மலைச் சாரலிலிருந்து வரும் சின்னாற்றில் ஒரு சிறு அணை கட்டினால் பல ஆயிரம் ஏக்கர்கள் நிலம் பயன்பெற முடியும் என்று சொல்லப் படுகிறது. ராசிபுரத்தின் கிழக்கே கோரையாறு என்ற ஆற்றில் ஒரு சிறிய அணை கட்டினால் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் வரை பாசன வசதி பெற முடியும் என்றும் தெரிவிக்கிறார்கள்.—கணக்கு வேண்டுமானால் தவறாக இருக்கலாம்—அன்பழகன் கணக்கு நிபுணன் அல்ல—இதில் நிபுணராக இருக்கக்கூடிய நிதி அமைச்சர் அவர்கள் இதை ஆராய்ந்து பார்த்து, நான் சொன்ன சில சட்டங் களையும் வேறு சில திட்டங்களையும் நிறைவேற்றுவதற்குறிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவைகளைப் பற்றி எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மட்டும் அன்றி ஆளும் கட்சி அங்கத் தினர்களும் கூட எடுத்துக்கூறி வருகிறார்கள். இவைகள் எல்லாம் நிறைவேற்றப்படுமானால்தான் நாட்டு மக்களிடையே இருந்துவரும் பசியும், பஞ்சமும் கொஞ்சம் குறையும்—பட்டினி அடியோடு போகாவிட்டாலும்—என்பதை வற்புறுத்திக் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***Sri S. SADASIVAM :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களது உரை மீது சில வார்த்தைகள் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். கவர்னர் பெருமான் அவர்களது உரையில் முக்கியமாக விவசாய அபிவிருத்திக்கான பல நல்ல கருத்துக்கள் குறிப்பிட்டி ருப்பது கண்டு மிக மகிழ்ச்சியுறுகிறேன். இப்போது இருக்கின்ற நிலைமையில் உணவுப் பொருட்களுடைய விலை உயர்ந்து கொண்டு போவதின் காரணமாக நகரப்புறங்களில் இருக்கும் மக்கள் மிகவும் கஷ்டப்படுவதாக கூறப்படுவதைப்பார்த்து வருத்த மடைய வேண்டியிருக்கிறது. இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவை நாம் உற்பத்தி செய்ய முடியவில்லை என்றால், அதற்கு முக்கிய காரணம் விவசாய உற் பத்திச் சாமான்களுடைய விலை மிகக் கூடுதலாகவும் போதாமலும் இருந்ததுதான். இதை விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் உணருவார்கள். அப்படி இருக்கும் நேரத்தில் விவசாய பொருட்

களின் விலையை ஓரளவு குறைக்கவேண்டுமென்று அரசாங்கம் முயற்சி செய்து கொண்டு வருகிறது. இவ்விதம் விவசாயப் பொருட்களின் விலை குறைந்து போனால் விவசாயிகளுடைய வாழ்க்கை குன்றிப்போய் விடும் என்பதையும் நாம் ஓரளவு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயப் பொருட்களில் குறிப்பாக நிலக்கடலை 16 ரூபாய் என்று இருந்தது, இப்போது 21 ரூபாயாக இருக்கிறது. ஆனால் பிண்ணாக்கு விலை 17 ரூபாயாக இருந்தது இன்றைக்கு 27 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இதே போல் மற்ற விவசாயத்திற்கு தேவையான பொருட்களின் விலையும் உயர்ந்து கொண்டே போகின்றன. இவ்விதம் விவசாய உற்பத்திக்கான பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே போனால் நிச்சயமாக உணவு உற்பத்தி குறைந்து விடும் என்பதை நாம் உணர வேண்டும். அதே சமயத்தில் கிராமப்புறங்களில் இருக்கின்றவர்கள் முன்போல் இல்லாமல், தங்கள் சந்ததியாரும் ஓரளவு நல்ல நிலைமையில் வரவேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் தங்கள் மக்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதார வசதி, அவர்களுடைய குடும்பங்களை நன்றாக நடத்துவதற்கு வேண்டிய பொருளாதார வசதி எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதை நாம் காண முடியும். இந்த நிலைமையில் அவர்களுக்குப் போதிய அளவு உதவி கொடுக்க நாம் பாடு படவேண்டும். இன்று உணவுப் பொருள்களின் விலை ஓரளவு ஏறினாலும் விவசாய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா என்பதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும். இன்று நிலச் சொந்தக்காரர்கள் வாங்கும் சக்தியை இழந்திருக்கிறார்கள் என்றால், உணவுப் பொருள்களை மட்டும்தான் அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். அவர்களுக்கு வேண்டிய மற்றப் பொருள்களின் விலை உயர்ந்திருக்கிறது. நகரப்புறங்களிலுள்ள என்.ஜி.ஓ.-க்கள் போன்றவர்கள் அவர்களுடைய சம்பளத்தைக் கொண்டு வாழ்க்கையைத் திருப்திகரமாக நடத்தமுடியவில்லை என்றால் இன்று நகரங்களில் வீட்டு வாடகை முன்பிருந்ததைவிட அதிகரித்திருப்பதுதான் அதற்குக் காரணம். எனவே அரசாங்கம் அவர்களுக்கு வீட்டு வசதி அதிகமாகச் செய்து கொடுத்தால் அவர்களுக்கு விலைவாசி உயர்வால் அதிகமாகக் கஷ்டம் இருக்காது என்பதை இந்தச்சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் அதிகமாக விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அரசாங்கம் பல திட்டங்கள் தீட்டியிருப்பதை கவர்னர் அவர்கள் இந்த உரையில் எடுத்துரைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாம்பிக்குளத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பது கண்டு நாங்கள் மகிழ்கிறோம். இத்திட்டத்தின் மூலம் ஏராளமான நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைத்து அதன் விளைவாக விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான சூழ்நிலை உண்டாகும் என்று மகிழ்கிறோம். இத்



திட்டத்தில் இப்போதுள்ள பகுதிகளுடன் திருச்சி ஜில்லாவில் உள்ள கரூர் தாலுக்காவின் வரண்ட பகுதிகளைச் சேர்க்க வேண்டும். அந்தப் பகுதிகளைச் சேர்த்தால்தான் அந்தப் பிராந்தியம் இத்திட்டத்தினால் பயனடைய முடியும். எனவே இத்திட்டத்தில் அவைகளையும் சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

இதற்கு முன்பு கொண்டுவரப்பட்ட அமராவதித் திட்டத்தால் அந்தப் பிரதேச மக்கள் கொஞ்சமும் பயனடைய முடியவில்லை. முன்பு இருந்த பாசன வசதி பிரதேசங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தைக் கரூர் தாலுகாவுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், இன்றுள்ள நிலையில் ஏற்கனவே அதிகமாக நீருள்ள இடங்களில் இன்னும் நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்துக் கொண்டுபோனால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாது. உணவு உற்பத்தி பெருக, நஞ்சை நிலங்களுக்குத் தழை உரங்கள் தேவை என்பதை நாம் உணரவேண்டும். ரசாயன உரங்களை அதிகமாக உபயோகித்தால் ஆரம்பத்தில் விளைச்சல் பெருகினாலும் பிற்காலத்தில் விளைச்சல் குறையும். பாசன வசதியுள்ள இடங்களிலே மேலும் பாசன வசதி செய்து கொடுத்தால் தழை உரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய முடியாது. வரண்ட சிறு சிறு பிரதேசங்களில் பாசன வசதியைப் பெருக்கினால் பசுந்தாள உரங்களை அங்கே உபயோகித்து நல்ல பலன் காணமுடியும்.

திருச்சி ஜில்லாவில் திருச்சி, கரூர், குளித்தலை ஆகிய தாலுக்காக்கள் மிகவும் நிலவளமுள்ள பிரதேசங்களாகக் கருதப்படுகின்றன. அவை உண்மையில் அப்படியில்லை. திருச்சி ஜில்லாவிலேயே பின் தங்கிய பிரதேசங்கள் அவை. அவைகளுக்கு நிச்சயமாகப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் தொகுதியில் உள்ள நொய்யல் ஆற்றில் ஒரு அணைக்கட்டி அங்கே பாசன வசதி செய்து கொடுத்தால் 40,000 ஏக்கருக்கு மேல் நீர் பாயும் என்று எஞ்சினியரிங் இலாக்காவினர் கண்டு பல முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். ஆனால் அங்கே சில மக்கள் தாங்கள் அதனால் பாதிக்கப்படக்கூடும் என்று கூறி அத்திட்டத்திற்கு இடையூறு செய்கின்றனர். அத்திட்டம் நிறைவேறினால் கீழ்ப்பகுதிகளுக்கு நல்ல பாசன வசதி கிடைக்குமாதலால், அதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலாவது நிறைவேற்ற வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அது நிறைவேற்றப்பட்டால், அந்த வரண்ட பிரதேச மக்களுக்கு வாழ்வளிக்கப்பட்டதாகும். அது மிகக் குறைந்த செலவில் வளமளிப்பதாகும். மேலும், நீண்ட நாட்களாக விவாதிக்கப்பட்டுவரும் குடவனாறு திட்டத்தையும் நிறைவேற்றினால், அதனால் கால்வாய் மூலம் எடுத்துச் சென்று பல குளங்களை நிரப்பி பல பிரதேசங்களுக்குப் போதிய பாசன வசதியளிக்க முடியும். இதற்கென்று நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஆராய்ந்து தெரிவித்த கருத்தின்படி இத்திட்டத்தை நிறைவேற்றினால் ஒரு பிர்க்கா பூராவுக்கும் பாசன வசதி கிடைக்கும்.

கிராமப் புறங்களிலுள்ள மக்களின் வசதிகளை அதிகப்படுத்துவதற்காக கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் அவர்களுக்குக் கடன்களை நிறையக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்திருப்பதை கவர்னர் அவர்கள் உரை மூலம் அறிந்து நாங்கள் மிகவும் மகிழ்கிறோம். இந்தக் கடன் உதவிகள் அவர்களுக்குச் சீக்கிரமாக, காலாகாலத்தில், கிடைப்பதற்கு இன்னும் அதிக வசதிகள் செய்ய வேண்டும்.

விவசாயிகளுக்கு இரசாயன உரங்களை அதிகமாகக் கொடுக்க கனம் அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்திருப்பது கண்டும் விவசாயிகளுக்கு ரசாயன உரங்கள் நிச்சயம் கொடுக்கப்படும் என்ற அவரின் உறுதி மொழியைக் கேட்டும் மகிழ்ச்சியடைகிறேன். ரசாயன உரங்களைத் துரிதமாக விநியோகிக்க வேண்டும்.

பாசன வசதிக்காக போதிய மின்சாரம் அளிக்கப்பட வேண்டும். நீர்வளம் அதிகமாக இல்லாத பிரதேசமாகிய எங்கள் பகுதியில் 60 அடி 70 அடி ஆழமான கிணறுகளிலிருந்து விவசாயிகள் பம்பின் மூலம் தண்ணீர் இறைக்கிறார்கள். இன்றைய நிலையில், கிராமங்களில் உள்ள மக்கள் வருவாய் போதாததால் அதிக வருவாய் பெறுவதற்காக நகரங்களுக்குச் செல்லுகின்றனர். அதன் காரணமாக விவசாயிகளுக்குக் கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. இந் நிலையில், அவர்கள் டீஸல் எஞ்சின்கள் போன்ற எஞ்சின்களை
5 p.m. வைத்து பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகின்றனர். இப்போது சில ஆண்டுகளாக டீஸல் எஞ்சின்களின் விலை, மத்திய சர்க்காரில் வரியின் காரணமாகவும் ராஜ்ய சர்க்காரின் வரியின் காரணமாகவும் பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. இதனால் அம்முறை கைவிடும் நிலையில் உள்ளது. இந்நிலையில் இத்தகைய பிரதேசங்களில், பாசன வசதி அதிகரிக்கும் பொருட்டு, மின்சாரத்தை அதிக விரைவில் விநியோகிக்க வேண்டும். கவர்னர் அவர்களுடைய உரையில் விவசாயத்திற்கு அனுசரணையான அம்சங்கள் இருப்பது கண்டு இந்த உரையை வரவேற்று என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

## IV.—ANNOUNCEMENTS—*cont.*

### (4) NOMINATION OF MEMBERS TO THE SENATE OF THE ANNAMALAI UNIVERSITY.

MR. SPEAKER: Before we adjourn, I wish to make an announcement.

I have to announce to the House that the following three Members were nominated for the election of three members to the Senate of the Annamalai University:—

(1) A. V. P. Asaithambi, (2) M. Kandasami Padayachi; and (3) G. Vageesam Pillai.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, that is, three, I hereby declare them to be duly elected to the Senate of the Annamalai University.

The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.



## IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*A.—Statutory Rules and Orders.*

1. *Notification issued with G.O. No.* 2507, *Industries, Labour and Co-operation (Labour), dated 23rd June* 1959, *enforcing the provisions of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act*, 1958. [*Laid on the table of the House under section* 41 (3) *of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act*, 1958 (*Madras Act XXXII of* 1958).]

2. *Amendment to the Madras Cinemas (Regulation) Rules*, 1957, *issued in G.O. Ms. No.* 2348, *Home, dated 19th August* 1959. [*Laid on the table of the House under section* 10 (3) *of the Madras Cinemas (Regulation) Act*, 1955 (*Madras Act IX of* 1955).]

3. *Amendment to Revenue Department notification, dated the 25th June* 1959, *published at pages* 207–210 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated 5th July* 1959, *issued in G.O. No.* 446, *Revenue, dated 13th February* 1959. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

4. *Notification issued with G.O. Ms. No.* 1505, *L.A., dated 28th August* 1959, *extending the term of office of the members of the Mathapur Panchayat (Coimbatore district) under section* 10 (1) *of the Madras Village Panchayats Act*, 1950. [*Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act X of* 1950).]

5. *Notification issued with G.O. Ms. No.* 3221, *Industries Labour and Co-operation (Labour), dated 19th August* 1959, *enforcing the provisions of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act*, 1958. [*Laid on the table of the House under section* 41 (3) *of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act*, 1958 (*Madras Act XXXII of* 1958).]

6. *Amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *issued in G.O. Ms. No.* 1736, *Home, dated 18th June* 1959. [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

7. *Amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *issued in G.O. Ms. No.* 666, *Home, dated 5th March* 1959. [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

[7th December 1959

8. *Amendment to the Madras Public Service Commission Regulations*, 1954, *in regard to the post of Assistant Director of Publicity issued with G.O. Ms. No.* 2370, *Public (Services-A), dated 25th August* 1959. [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

9. *Amendment to the Madras Cinemas (Regulation) Rules*, 1957, *issued in G.O. Ms. No.* 2370, *Home, dated 21st August* 1959. [*Laid on the table of the House under section* 10 (3) *of the Madras Cinemas Regulation Act*, 1955 (*Madras Act IX of* 1955).]

10. *Notification issued with G.O. Ms. No.* 2134, *Revenue, dated 23rd July* 1959, *enforcing certain provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 *in relation to the introduction of ryotwari settlement in the Estate villages in Chingleput District other than Kachinad, Sirunambudur and Kalahasti Zamindari Block B.* [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

11. *Notification issued with G.O. Ms. No.* 505, *Revenue, dated 18th February* 1959, *enforcing certain provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *in relation to the introduction of ryotwari settlement of Estates taken over in Tirunelveli District and portions of Ettayapuram, Sivagiri and Athangarai Zamin lying in Ramanathapuram district.* [*Laid on the table of the House under section* 87 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

12. *Amendment to the Madras Weights and Measures (Enforcement) Rules*, 1958, *issued in G.O. Ms. No.* 1355, *Industries, Labour and Co-operation, dated 25th March* 1959. [*Laid on the table of the House under section* 43 *of the Madras Weights and Measures (Enforcement) Act*, 1958 (*Madras Act XX of* 1958).]

13. *Amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *issued in G.O. Ms. No.* 2221, *Home, dated 4th August* 1959. [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

14. *Amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *issued in G.O. Ms. No.* 2480, *Home, dated 31st August* 1959. [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]



7th December 1959]

15. *Notification issued with G.O. Ms. No.* 3485, *Industries, Labour and Co-operation, dated 8th September* 1959, *under the Madras Money Lenders Act*, 1957. [*Laid on the table of the House under sub-section* (3) *of section* (1) *of the Money Lenders Act*, 1957 (*Madras Act XXVI of* 1957).]

* SRI T. T. DANIEL: Mr. Speaker, Sir, while supporting the motion, I like to bring to the notice of the Government certain points for their consideration.

The Governor's Address, one may say, has really given great happiness and consolation to the people of the State. We are really glad to note that our major industries like sugar, textile and cement are making satisfactory progress. It is also gratifying to note that we had plenty of rains except in some pockets in some of the districts. The north-east monsoon had fortunately set in time. Incidentally the question arises whether the tanks in our State are properly repaired and maintained whether their bunds are maintained sufficiently strong enough to receive and store the rain water. Recently breaches occurred in the chain of tanks between Tiruchirappalli and Villupuram. This has created anxiety in the minds of the people whether these were only accidental or they were avoidable. I would suggest to the Government to go into the matter in detail and find out whether these breaches were caused on account of the negligence on the part of the authorities concerned or they occurred accidentally in spite of their vigilance. I will request the Government that in future at least they should give top priority for work connected with the proper maintenance of tanks, especially those adjacent to the railway lines. They should also investigate why water overflows the railway lines and prevent such overflow of water across the line when breaches occur. I take this opportunity to congratulate the line watchers who have given their timely information about these breaches. But for their information, perhaps the Ariyalur tragedy would have even taken place. Luckily no ill-fated train passed that way when the breaches in these tanks had occurred.

The Governor's Address has made sympathetic references about the steady rise in the price of foodgrains. It is true that the rise in the price of foodgrains is an incident consequent to a developing economy. But even in a developing economy, prices of foodgrains will slowly and steadily rise and after an interval, one can expect that it will remain at a permanent level at a particular stage. This is not happening in our State. The rise in the price of foodgrains has really affected fixed income groups and middle class people and correctly sympathetic references about them have been made in the Governor's Address. I think that reference has been made in particular to the difficulties and inconveniences which our N.G.O. friends are experiencing. It is true that the terrible axe has fallen upon the N.G.O. friends who have been caught unfortunately in the wheel of this economic revolution and actually they are put to a lot of difficulties and sufferings. But we are sure that our Government will consider this aspect in particular when they deal with the problem of the redressal of the grievances of the N.G.O. friends. We are shortly expecting the report of the Pay Commission and in considering the recommendations of the Pay Commission, this factor will weigh with the Government. Our Government have really done a lot to alleviate the sufferings of the N.G.Os. during

[Sri T. T. Daniel] [8th December 1959

the last two or three years. The educational concession to their children, free medical aid and the increase in the dearness allowance, are some of the measures which the Government have taken to ameliorate the conditions of our N.G.Os. We are sure that the N.G.Os. will have a fair deal at the hands of our Government.

Sir, the Government have also taken proper and appropriate measures to bring down the prices of foodgrains. But for the timely action taken by the Government, surely the prices of foodgrains would have been higher than what it is at present. When the Government introduced the procurement policy, we all knew what the price of foodgrains was. In certain districts, the price of rice went up to one rupee and twelve annas per Madras measure. After the procurement policy was introduced, undoubtedly the price of rice was slowly coming down but after a period it again showed a tendency to go up. It has been correctly pointed out that the rise in the price of foodgrains was mainly due to the fact that similar measures were not taken by the adjacent States. It is gratifying to note that our Government have opened nearly 2,000 fair price shops and have distributed nearly 30,000 tons of rice every month for the poor people to purchase it at a normal rate. Whatever may be the cause for the increase in the price of foodgrains we have only to applaud the Government for the proper steps that they have taken boldly to prevent perhaps a grave food crisis in our State. I take this opportunity to congratulate the Government for the noble measures that they have taken during the last one year to bring down the price of foodgrains.

Sir, we are told that during the course of the Second Plan period, we will be able to produce 53 lakhs tons of foodgrains in our State and if that is produced, there would be a surplus of 3 lakhs tons of foodgrains to spare for the adjacent States. We have to look at what was Madras before Independence. Our State was deficit in food before the First Plan period. In the First-Five-Year Plan, the Government have allotted nearly Rs. 28 crores of rupees for the construction of major irrigation dams and in the Second Five-Year Plan top priority was given to the construction of major irrigation dams to augment food production. It is on account of these measures of the Government that, we are today in a position to produce the necessary quantity of foodgrains that we require. In fixing up that target, I believe that the Government have based upon a formula that every average man is taking up only a balanced diet. But I would like to point out to the Government that an average individual has got the capacity to take more rice than other necessities and so the Government in fixing up the target of our requirement, must keep in mind that the population of rice-eaters are slowly increasing and the quantity of rice consumed is also increasing.

It is also gratifying to note that from the experience gained in the last five years, we are now evolving the Third Five-Year Plan and I wish that our Government should give top priority to irriga-



8th December 1959] [Sri T. T. Daniel]

tion dams as it was given in the Second Five-Year Plan also. Top priority must be given for the extension of electricity in our State. There must also be provision in the Third Plan for the extension of the railway line from Tirunelveli to Kanyakumari.

(Srimathi Hemalatha Devi in the Chair.)

We know that Cape has become more or less a place of pilgrimage and the extension of the railway line from Tirunelveli to Cape would be convenient to the public and it will also increase commerce in that district.

I may also suggest to the Government that in the Third Plan there must be provision for making improvements to the Tuticorin Port as well as the Colachel Port.

I take this occasion also to thank the Government for proposing to introduce soon a Bill for the management of the Incorporated and Unincorporated Devaswoms of the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district. But in framing the Bill, we suggest to the Government that the Devaswoms Board to be constituted under the Bill should be more or less similar to the Devaswoms Board of the erstwhile Travancore-Cochin State with all the powers provided for in the Travancore-Cochin Act.

Lastly, I would suggest to the Government that the position of teachers in particular in my district is becoming rather very precarious. In this connexion, I may tell the Government that a graduate-trained teacher in my district gets only Rs. 55, perhaps the lowest pay of a teacher in the whole world. His brethren fifty miles away from the district gets Rs. 100 and his brethren just across the boundary of the district gets Rs. 100. We have been telling the Government again and again that the salary of these unfortunate graduate-trained teachers in the district should be brought to the level of the graduate-trained teachers of other districts in the Madras State. I hope that my voice will not be a cry in wilderness and that the Government will take proper steps immediately to raise the salary of these teachers to the level of the salary of the teachers of other districts.

*DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN: 10 a.m.
*சபைத் தலைவி அவர்களே, கவர்னருடைய உரையை ஆமோதித்து நானும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னருடைய உரையிலே ரொம்ப காரசாரமாக அல்லது புரட்சிகரமாக பேச்சுக்கள் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். பொதுவாக பெரியவர் சொல்லுவது போல அவர் ஏதாவது சொல்லிவிட்டுப் போவார். அதனால் நமக்கு வேண்டியதைச் சொல்ல ஒரு வாய்ப்பு கிடைக்கிறது.*

*முதலாவதாக விவசாயத்தைப் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே விவசாயத்திற்கு எவ்வளவு முக்கியமான இடம்*

8th December 1959]
[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

கொடுக்க வேண்டுமோ அவ்வளவு முக்கியமான இடம் கொடுக்க வில்லை என்ற உணர்ச்சி நாடு முழுவதும் இருக்கிறது. அதனால் இப்போது முதல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அடிகோலும் விதத்தில்—இன்றைய தினம் எதற்கெடுத்தாலும் "வார் புட்டிங்" என்று சொல்லுகிறார்கள், அதாவது "புட்-ப்ரொடக்ஷன் ஷூட் பீ ஆர்கனைஸ்ட் ஆன் வார் புட்டிங்"—விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் ஈடுபடவேண்டும். நமது சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில் இந்தியாவிலேயே நம் ராஜ்யம் டார்ஜெட்டை அடுத்து வந்திருக்கிறோம் என்ற பெருமைபட்டுக் கொள்ளும் விதத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். இன்னும் நமக்கு இருக்கும் வசதி, நம்முடைய திறமை, அவசியம் எல்லாவற்றையும் சேர்த்து நமது முயற்சியை இன்னும் அதிகமாக தீவிரப்படுத்த வேண்டும். இப்போது குறைபாடு இருக்கிறது என்று சொல்லவில்லை. இன்னும் கடுமையான முறையில் எஃபெக்டிவ்வாகச் செய்ய சில ஆலோசனைகளை சபையின் முன்பு வைக்க ஆசைப்படுகிறேன்.

நமது ராஜ்யத்தில் இரண்டு வருஷத்துக்கு அல்லது மூன்று வருஷத்திற்கு ஒரு முறைதான் சில காட்டாறுகளில் தண்ணீர் வருகிறது. பெரிய திட்டங்களுக்குத் தண்ணீர் பிச்சை வாங்குவது இருக்கட்டும். அதைத் தவிர, சிறு சிறு ஆறுகளில், இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தண்ணீர் வரும்போது அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்தால் அந்தப் பகுதியிலுள்ள கிணறுகளில் தண்ணீர் வரும். குளங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். என்னுடைய தொகுதியைப் பற்றியே சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால், அங்கே உள்ள குடவனாற்றில் வரக்கூடிய ஓரளவுத் தண்ணீரும் காவேரி ஆற்றிலும் அமராவதி ஆற்றிலும் விழுவதைப் பார்க்கும்போது கண்ணுக்குப் பார்க்க குளிர்ச்சியாக இருந்தாலும் வயிற்றில் எரிச்சலாக இருக்கிறது. குடவனாற்றில் சில சிறு அணைகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் சிதறுண்டுபோயிருக்கின்றன. இம்மாதிரி சிறிய சிறிய காரியங்களைச் செய்ய வேண்டும். இந்த மாதிரி உடனடியாக நாம் முயற்சி யெடுத்துக்கொள்ளாது போனால் உணவு உற்பத்தி பெருக முடியாது. அதற்கு குடவனாறு ஒரு உதாரணம், சாத்தியாறு ஒரு உதாரணம். திருநெல்வேலி ஜில்லாவில் ஜீவ நதியாகிய கடில நதி, ராமா நதி திட்டங்களுக்காக எவ்வளவோ முயற்சி யெடுத்துக் கொண்டிருந்தும், இப்போதுதான் இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்ப வேலை செய்திருக்கிறார்கள். கடினா நதிக்கு ரிஸர்வாயர் கட்ட ஒரு ஏக்கர் கூட அக்வொயர் பண்ணவேண்டியதில்லை. அடுத்த நாட்டுக்காரர்களிடம் நல்ல வார்த்தைகள் சொல்ல வேண்டியதில்லை. நல்ல பண்பட்ட நிலங்கள் சில ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன. ஆகையால் இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் போடுவதற்கு இந்தச் சிறு சிறு நிதிகளை எடுத்துக்கொண்டு, அவைகளில் வரக்கூடிய தண்ணீரை குளங்களில் தேக்கி, கிணறுகளில் தண்ணீர் வரும் விதத்தில்



8th December 1959]
[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

செய்து, அதிக தீவிரமாக குளங்களையெல்லாம் மராமத்து செய்ய வேண்டும் என்று என்றால் எவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்ல முடியுமோ அவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக நாம் எல்லோரும் கெமிகல் பெர்டிலைஸர்ஸ் பற்றிச் சொல்லுகிறோம். அது வேண்டியதுதான். ஆனால் அடுத்த வருஷம் கிடைக்கப் போகிறதில்லை. "ரியலஸ்டிக் பிளானிங்" என்று சொல்லுவார்களே அந்த முறையில் பசுந்தழை உரங்களை அதிகமாக நம்ப வேண்டியதாக இருக்கிறது. இப்போது இந்தப் பசுந்தழை உரங்களுக்கான விதைகள் கிடைப்பதில்லை. விவசாயிகள் எவ்வளவோ ஆசைப்படு கிறார்கள், ஆனால் விதைகள்தான் கிடைப்பதில்லை. இப்போது விதைப் பண்ணைகள் வைத்திருப்பது போல பசுந்தழை உரங்களுக் கான விதைகள் கிடைக்க விதைப் பண்ணைகளை ஆரம்பிப்பது மிகவும் அவசியம். ஆகையால் இந்த விஷயத்தில் பெரிய மிராசு தார்களும், சிறிய சிறிய மிராசுதார்களும் விதைகள் கிடைப்ப தற்காக வேண்டி விதைப் பண்ணைகளை ஏற்படுத்தவேண்டும்.

"பாக்கேஜ் டீல்" தஞ்சை ஜில்லாவிற்கு வருவது மிகவும் சந்தோஷம். சிறு சிறு வடிகால் திட்டங்களை தஞ்சை ஜில்லாவிலே இப்போது முதல் திட்டமிட்டு நிறைவேற்றவேண்டும். உண்மை யிலேயே நம் ராஜ்யத்தில் திறமையாக வேலை செய்கிறார்கள் என்ற மதிப்பு நிச்சயமாக இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் செய்யக் கூடிய வேலை, இந்தியாவிலேயே பிரமிக்கத் தக்க முறையில் அமைய இப்போது முதல் திட்டம் போடவேண்டும். வடிகால் திட்டங்களையும், பசுந்தழை உரம் உற்பத்தி செய்ய விதைப் பண்ணைகள் ஆரம்பிப்பதையும் அவசியமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மறுபடியும் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படு கிறேன்.

அடுத்தபடியாக நியாய விலை நிர்ணயிப்பதில் எப்போது பார்த்தாலும் நகரங்களில் இருப்பவர்கள், ஆலைகளில் வேலை செய்து 100 அல்லது 150 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வாங்குபவர்கள், 5 அல்லது 6 மாத போனஸ் வாங்குபவர்கள் எல்லோருக்கும் விவசாயிக்கு விலை கொடுப்பதில் மனம் வரவில்லை. நாங்களெல்லாம் விவசாயிகளோடு உழன்றுகொண்டிருப்பதால் எங்களுக்கு அவர் களுடைய கஷ்டம் தெரிகிறது. விவசாயிகள் பயிர் செய்வதில், பலவித கஷ்டங்களாலும், பூச்சிகளால் ஏற்படக் கூடிய நாசத்தி னாலும், அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வருஷத்திற்கு நிகர லாபம் வந்தால் பெரிது என்பதைப் பார்த்தால் அவர்களுக்கு உதவி கொடுப்பது தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது என்று நான் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கியவர்கள் 100 ரூபாய் மாதம் வாங்கும்போது, ¾ ரூபாய் விற்ற அரிசிக்கு ஒரு ரூபாய் ஏன் அவர்கள் கொடுக்கக் கூடாது? இதிலே வியாபாரிகளுக்குக் கொஞ்சம்தான் போகிறது. பெரும்பாலும் விவசாயம் செய்யக் கூடியவர்களுக்குத் தான் இந்த

[8th December 1959

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

பணம் போகிறது. நியாய விலை நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்லும்போது விவசாயிகளுக்கும் எத்தனை ஆகிறது, ஒரு விவசாயி வாழ்க்கை நடத்த எவ்வளவு செலவாகிறது என்று பார்த்து நியாய விலை நிர்ணயிக்க வேண்டும். விவசாயக் கூலிக்கு ஆலைக் கூலி போல கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அது பாலைவனப் பேச்சாக முடியும். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். விவசாயக் கூலிக்கு அவனுக்கு வேண்டிய வாழ்க்கைக்குக் கூலி கிடைக்க விவசாயப் பொருள்களுக்கு என்ன விலை வைக்க வேண்டும் என்று "லிங்க்-அப்" பண்ணவேண்டும். காஸ்ட் ஆப் ப்ரொடக்‌ஷன் அத்துடன் ஸேல்ஸ் ப்ரைஸ் இரண்டையும் லிங்க் செய்து விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய அளவுக்குப் பார்த்து நியாய விலை நிர்ணயிக்கவேண்டும். என்றைக்கும் விவசாயிகள் இந்த நிலையில் இருக்க மாட்டார்கள். பக்கத்தில் இயந்திரத் தொழிலாளிகளின் சத்தம் எஃபெக்டிவாக இருக்கிறது. விவசாயக் கூலிகளுக்கு அப்படி இல்லை. ஆகவே நியாய விலை என்று சொல்லி விவசாய உற்பத்தி பெருக முடியாத நிலையை உண்டாக்கக் கூடாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக உச்ச வரம்பு கட்டும் விஷயத்தில் பெண்களுக்கு ஸ்ரீதனமாக வரக் கூடிய நிலம் விஷயத்தில் புருஷர்களுக்கு எவ்வளவு வைத்திருக்கிறார்களோ அதை வைக்கவேண்டும். பெண்களுக்கு வேறு அவிபக்த குடும்பத்தில் எப்படி மைனர்கள் இருந்தால் எப்படி வைக்கிறார்களோ அம்மாதிரி வைக்கவேண்டும். தகப்பனாரிடமிருந்து கிடைக்கும் நிலத்திற்கு பெண்கள் விஷயத்தில் மற்ற ஆண்களுக்கு எப்படி உச்ச வரம்பு வைக்கிறார்களோ அதைப் போலவே வைக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கைத்தொழில் பொறுத்தவரையில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் தாலூக்கா ஹெட்க்வார்ட்டர்ஸ், சப்-தாலூக்கா ஹெட்க்வார்ட்டர்ஸ் முதலிய இடங்களிலும் தேவை என்பது இப்போது உணரப்பட்டுள்ளது. இப்போது டெக்னிக்கல் ஸ்கில் அபிவிருத்தி ஆகவில்லை. கிராமங்களில் திறமையுள்ள வாலிபர்கள், 7-வது, 8-வது, 9-வது கிளாஸ் படித்தவர்களுக்கு இந்த டெக்னிக்கல் எடுகேஷன் கொடுக்க இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் இல்லையென்றாலும், டிரைனிங்-கம்-ப்ரொடக்‌ஷன் ஸெண்டர்களை ஒவ்வொரு பிளாக்கிலும் ஏற்படுத்தி, எங்கெல்லாம் கொல்லர்களும் ஆசாரிகளும் இருக்கிறார்களோ அந்த இடங்களில் ஆரம்பித்தால், தொழில் நுணுக்க கீழ்தர டெக்னீஷியன்கள் கிடைக்கமுடியும். ஆகையால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல தரப்பட்ட இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளுக்கு அடிகோல வேண்டுமானால் இந்தத் தரத்தில் உள்ளவர்களை இப்போது முதற்கொண்டே தயார் செய்து கொள்வது மிகவும் அவசியம்.

சர்க்கார் ஊழியர்கள் சம்பளத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். உலகத்திலேயே நம்முடைய நாட்டிலேதான் அதிகமாக விடுமுறை நாட்கள் விடப்படுகின்றன. நிச்சயமாக விடுமுறை நாட்களைக் குறைக்கலாம். நிச்சயமாக வேலை நேரத்தை 11 மணியிலிருந்து 5 மணி வரை என்று வைக்காமல்—டெல்லியில்கூட 9 மணியிலிருந்து என்று இருக்கிறது—நேரத்தை மாற்றியமைக்கலாம். அதையெல்லாம் அவசியமாகச் செய்யவேண்டிய காலம் வந்து விட்டது. அதே சமயத்தில் கீழ்த்தர பட்ச சம்பளம் இவ்வளவுதான் இருக்க வேண்டுமென்று நிர்ணயிப்பது அவசியமாகும். இந்தச் சம்பள விகிதத்திலே மத்திய சர்க்கார் என்றும், மாகாண சர்க்கார் என்றும், கேரள சர்க்கார் என்றும், ஆந்திர சர்க்கார் என்றும் பேச்சே இருக்கக் கூடாது. அவர்களைப் பற்றி நாம் இப்போது ஒன்றும் சொல்ல முடியாது. நம்மைப் பொறுத்தமட்டில் கீழ்த்தரச் சம்பளம் இவ்வளவுதான் இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டும். குறைந்த பட்ச சம்பளம் 100 ரூபாயாக இருக்க வேண்டுமென்பதிலே தயக்கம் கூடாது. வேலை நேரத்தை "ரேஷனலைஸ்" பண்ணி போதுமான ஊதியத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பது நம்முடைய திட்டத்திலே சேர வேண்டும்.



8th December 1959]

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

கூட்டுறவுச் சங்கங்கள் 100-க்கு 90 வந்தாகிவிட்டது. ஆனால் மெம்பர்கள் தொகை அதிகமாகிவிடவில்லை. அதோடுகூட நில அடமான பாங்குகளை இன்னும் விஸ்தாரமாக்கி விவசாயிகளுக்கு நெடுங்காலக் கடன் கொடுத்து அவர்களைக் கடன் பளுவில் இருந்து விடுவிக்கவேண்டும். ஒவ்வொரு வருஷமும் கடன் கோடி கோடியாகக் கொடுக்கிறோம். அதனால் கஷ்டங்கள் உண்டே தவிர பலன் கிடையாது. இரண்டு வருஷக் கடன், ஐந்து வருஷக் கடன் என்று கனிசமாக உயர்த்தி அவர்கள் குடும்பக் கடனில் இருந்து விடுபடுகிற முறையில் கொடுத்தால்தான் விவசாயம் முன்னேற முடியும். அதற்கு நாம் திட்டம் வகுக்க வேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRI A. GOVINDASAMY**: சட்டமன்றத் தலைவி அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் மீது பேசுகையில் என்னுடைய சில திருத்தங்களை வலியுறுத்தும் முறையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மிகப் பெரிய பொறுப்பில் இருக்கும் கவர்னர் அவர்கள் இந்தச் சர்வ சாதாரண உரை நிகழ்த்துவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்த உரையில் நிலச் சீர்திருத்தச் சட்டம் வரும். என்.ஜி.ஓ.-க்களுக்கு நன்மை ஏற்படும், கைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் நல்ல பல வசதிகள் செய்து தரப்படும் என்று உறுதியெல்லாம் இருக்குமென்று எதிர்பார்த்தவர்கள் மிகப் பெரிய ஏமாற்றத்தை அடையும்படியான நிலையில் தான் இருக்கிறார்கள். ஆகையால் இந்தச் சாதாரண உரை நிகழ்த்த ஒரு பெரிய பதவி தேவையில்லை என்ற கருத்தை நாங்கள் வலியுறுத்திச் சொல்லி வருகிறோம்.

கவர்னர் அவர்கள் தம்முடைய உரையிலே சிமெண்ட், சர்க்கரை அபிவிருத்தித் திட்டங்கள் திருப்திகரமாக முன்னேறிக் கொண்டு வருகின்றன என்று கூறியிருக்கிறார். இது உண்மையா

என்று பார்த்தால் இல்லையென்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றையதினம் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்து சிமெண்ட் கிடைக்காததன் காரணமாக அந்தக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படாமல் இருப்பது அரசாங்கத்திற்கு தெரியும். (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம். அது பழைய கதை.) பழைய கதை இல்லை. எல்லாம் புதுக் கதைதான். இன்னும் கேட்டால் தொடர்கதைதான். கடைகளிலே ஒரு வீசை சர்க்கரை ரூபாய் 1.68 நயா பைசா என்று போர்டிலே எழுதிப் போட்டு விட்டு அதற்கு அடியிலேயே "ஸ்டாக் இல்லை" என்று எழுதியிருப்பதைப் பார்க்கிறோம். உற்பத்தி பெருகியிருக்கிறதென்றால் விலை இறங்கியிருக்க வேண்டும். அதைப் பற்றிக் கேட்டால் மந்திரிகள் சர்க்கரை அதிகம் சாப்பிட்டால் "தித்திப்பு நோய்" வரும், ஆகவே சர்க்கரை சாப்பிடாதீர்கள் என்று சொல்லுகிறார்கள். வட நாட்டில் உத்திரப் பிரதேசத்தில் 66 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன; பீஹாரில் 22 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டிலோ 6 சர்க்கரை ஆலைகள்தான் இருக்கின்றன. (குறுக்கீடு; மதுராந்தகத்திலே ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.) சரி 7 ஆலைகள் என்று வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது மேலும் 3 ஆலைகள் ஆரம்பிக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருப்பது கூட வடக்கே இருப்பவர்களால் தடுக்கப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. என்னுடைய விழுப்புரம் வட்டத்திலே ஒரு சர்க்கரை ஆலையைக் கூட்டுறவு முறையிலே ஆரம்பிக்க சர்வ கட்சியைச் சேர்ந்தவர்களும், அத்தனை விவசாயிகளும் லைசென்ஸுக்கு விண்ணப்பித்துள்ளோம். அந்த ஆலையை எங்கள் வட்டத்தில் ஆரம்பிப்பதற்கு ராஜ்ய சர்க்காரும் சிபாரிசு செய்திருப்பதாக கனம் மந்திரி சொன்னார்கள். அதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால், மத்திய அரசாங்கம் எந்த அளவுக்கு உதவி கொடுக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்க வேண்டும்; மலிவாக எல்லோருக்கும் சர்க்கரை கிடைக்கவேண்டுமென்ற கருத்தில்தான் இவைகளையெல்லாம் சொல்லுகிறேன்.

கவர்னர் அவர்கள், மழை பெய்து விட்டதைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள். நாட்டு மக்கள் அனைவரும் மகிழலாம். ஆனாலும் என்னுடைய மாவட்டத்தில் செஞ்சி தாலுக்காவில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கிடையாது. கனம் மாணிக்கவேலர் தொகுதியிலும் மழை கிடையாது. அவர் போய் மழையைக் கொண்டு வந்து விட்டதாகச் சொன்னார்கள். நானும் என்னுடைய வளவனூர் ஏரிக்குத் தண்ணீர் வரவில்லை என்று தந்தி அடித்து உடனே தண்ணீர் கொண்டு வந்தேன்.

அதிகமாக மழை பெய்திருக்கிறது என்று கவர்னர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் வெள்ளத்தினால் ஏற்பட்ட பாழ் நிலைமையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. சிதம்பரம், விருத்தாசலம், கடலூர், விழுப்புரம் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தினால் 50 லட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 20,000 வீடுகள் வெள்ளத்தினால் சேதமடைந்து விட்டன. அவ்வளவும் ஹரிஜன மக்களும் பின் தங்கிய மக்களும் வசிக்கக் கூடிய குடிசை வீடுகள். அந்தப் பகுதியெல்லாம் தரை மட்டமாகப் போய்விட்டன. இந்த மாதிரி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் போய்ப் பார்க்காத அமைச்சர்களை நான் வன்மையாக கண்டிக்கிறேன். அமைச்சர் கக்கன் அவர்கள் போயிருக்கிறார்கள். அவர்களுடைய கடமையுணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். தேர்தல் நேரத்திலே 6 மந்திரிகள் போனார்கள். ஊர் ஊராக, சேரி சேரியாக மந்திரிகள் எல்லோரும் சுற்றினார்கள். அப்பொழுது அவ்வாறு சுற்றிச் சுற்றி வந்தவர்கள் இப்பொழுது வராதது ஏன் என்று கேட்கிறார்கள். அந்த இடத்திற்குப் போய் அந்த மக்களுக்கு வழி வகைகளை ஆராய்ந்து செய்ய வேண்டுமென்பதற்காகவே இதை நான் வலியுறுத்துகிறேன். வெள்ளத்தைக் கண்டு அமைச்சர்கள் பயப்படுகிறார்களா? அவர்களுக்குத்தான் எல்லாப் பாதுகாப்பும் இருக்கிறதே; ஜீப்பில் போகலாம்.

விலை ஏறுகிறதே என்று கவர்னர் அவர்கள் கவலை தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று கூறவில்லை. இரண்டாயிரம் நியாய விலைக் கடைகளைத் திறந்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கடைகள் நகர்ப்புறங்களில்தான் திறக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் தஞ்சை மாவட்டத்தில் கூடுதலாகத் திறந்திருக்கிறார்கள். கரிய கவுண்டர் அவர்களுக்குப் புள்ளிவிவரம் தெரியாவிட்டால் அமைச்சர் அவர்களிடமே கேட்டுப் பெற்றுக் கொள்ளட்டும். நெல் அதிகமாக விளையும் பகுதியில் அதிக நியாய விலைக் கடைகளையும், குறைவாக விளையக் கூடிய பகுதிகளான தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு போன்ற இடங்களில் குறைவான நியாய விலைக் கடைகளையும் திறந்திருக்கிறார்கள். குறைந்தது 3,000 நியாய விலைக் கடைகளாவது திறக்கப்படவேண்டும். அங்கு கொடுக்கப்படும் அரிசி நாற்றம் இல்லாததாகக் கொடுக்கச் செய்ய வேண்டும்.

வளர்ச்சியடைந்த தேசத்தில் விலையேற்றத்தைத் தடுக்க முடியாது என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது கள்ளமார்க்கட்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் பாதுகாக்கக்கூடிய வாசகம் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விவசாயிகளுக்கா இந்த லாபம் போய்ச் சேருகிறது? அவர்கள் கொடுக்கும்போது மலிவான விலையில்தான் கொடுக்கிறார்கள். பெரிய நிலச்சுவான்தார்களுக்குப் ப்ரொக்யூர்மெண்ட் செய்யும் காலத்தில் ஒரு தொந்தரவும் கிடையாது. பெரிய பண்க்காரர்களைப் பார்த்தால் கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது. அவர்களின் பாதுகாப்புக்காக ஒரு தனிக் கட்சி ஏற்பட்டு விட்டதால் இங்கே இருக்கிறவர்கள் எல்லாம் போய்விடுகிறார்களே என்றுதான் இந்த நில உச்ச வரம்புத் தீர்மானத்தைக் கூடத் தள்ளிக் கொண்டு வருகிறார்களோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. 'நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்துச் சட்டம் எப்பொழுது வரப்போகிறது?

[Sri A. Govindasamy] [8th December 1959

என்று கேட்டால்; புலி வருகிறது, புலி வருகிறது என்பதுபோல் 'இதோ வரப்போகிறது, அதோ வரப்போகிறது' என்று ரெவினியூ அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அவர்கள் சொல்லி வருவதன் காரணமாக நிலம் வைத்திருக்கும் அத்தனை பேர்களும் பாதுகாப்பாய்விட்டார்கள். ஸ்டாம்ப் பேப்பர் கேட்டால் கிடைக்காத நிலைமையும், பதிவு செய்வதற்குக் கட்டண உயர்வும் ஏற்பட்டிருக்கிறது. 'நிலத்தைப் பிரிக்கப் போகிறோம், நிலத்தைப் பிரிக்கப் போகிறோம்' என்று சொல்லிச் சொல்லி பாதுகாப்பாக அவர்களே பிரித்துக்கொண்டிருக்கிறார்கள். இதே மன்றத்தில் நான் கேள்வியொன்று கேட்டதற்கு, 'அவர்களாகவே பிரித்துக்கொண்டால் பிரித்துக்கொண்டு போகட்டுமே' என்று மந்திரி அவர்கள் பதில் சொன்னார்கள். இதுவா அவர்கள் சொன்ன நிலச் சட்டத்தின் உட்கருத்து? அது அல்ல. ஆனால், இதைத்தான் அவர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்தச் சட்டத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூட இல்லை கவர்னர் அவர்களுடைய உரையில்.

வெள்ளம் அடித்த நேரத்தில் என்னுடைய பகுதிகளில் நான் ஒன்பது நாள் சுற்றி வந்தேன். அப்படி வந்த நேரத்தில், விவசாய மக்களுடைய பல குறைகள் எனக்குத் தெரியவந்தன. 'ரசாயன உரம் கிடைக்கவில்லை, பூச்சி மருந்து கிடைக்கவில்லை' என்ற குரல் தான் கேட்டது. போதுமான அளவு ரசாயன உரங்களை இறக்குமதி செய்ய இயலவில்லை என்று அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 12·79 லட்சம் டன் அளவிற்குத் தானிய உற்பத்தியை மேலும் பெருக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டிருப்பதாகவும், ஆனால் 3 லட்சம் டன் அளவிற்குத் துண்டு விழுவதாகவும் கூறி, அப்படித் துண்டு விழுவதற்குக் காரணம் ரசாயன உரம் கிடைக்காததுதான் என்றும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ரசாயன உரம் இறக்குமதி செய்ய லாயக்கில்லாத முறையிலே இந்த அரசாங்கம் தகுதி இல்லாத முறையிலே இருக்கிறதென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. அண்டையிலுள்ள புதுச்சேரியில் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது; மூன்று லட்சம் ஜனத்தொகையுள்ள பகுதியில் அதிகமான ரசாயன உரம் கிடைக்கிறது. ஆனால் 27 லட்சம் ஜனத்தொகையுள்ள தென்னாற்காடு மாவட்டத்திலே கள்ள மார்க்கெட்டிலே வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. கண்ட்ரோல் விலை 19 ரூபாயாக இருக்க, 25 ரூபாய் கொடுத்தால்தான் கிடைக்கிறது. ப்ளாக்கிலே உள்ள தாசில்தாரைத் தொந்தரவு செய்கிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கூடுதலாகக் கொடுக்கும்படியான நிலைமை இல்லாத காரணத்தால், அவை அதிகமான பேர்களுக்குக் கொடுக்க முடியவில்லை. மேலும், கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேராதவர்களுக்கு இந்த நன்மை கிடைக்கவில்லை. கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்ந்தவர்கள் 40 சதவிகிதம்தான் என்று சொல்கிறார்கள். பாக்கி 60 சதவிகித விவசாயிகளுக்கு என்ன செய்துகொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றுதான் நாம் பார்க்க வேண்டும்.



8th December 1959] [Sri A. Govindasamy]

பணக்காரர்களுக்கும் கொஞ்சம் பெரிய நிலச் சொந்தக்காரர்களுக்கும் கூடுதலான மூட்டை கிடைக்கிறது. அப்படியில்லாமல் எல்லோருக்கும் பரவலாகக் கிடைக்க வகைசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாழாகிப்போன வீடுகளைக் கட்டித்தர அரசாங்கம் ஒரு நிவாரண வேலையும் செய்யவில்லை. அமெரிக்கா தேசம் நம்முடைய விவசாயிகளுக்கு நன்மை செய்ய முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறோம். அவர்களுக்கு இருக்கும் நல்லெண்ணம்கூட இந்த அரசாங்கத்திற்கு இல்லை என்பதைக் குறித்து இந்த அரசாங்கத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். எந்தத் திட்டமானாலுங்கூட நீர்வளமுள்ள தஞ்சை ஜில்லாவுக்குப் பயன்படுகிறதேயொழிய, நீர்வளம் இல்லாத பின்தங்கிய மாவட்டங்களுக்கு அதிகமாகப் பயன்படுவதில்லை. அமெரிக்கர்கள் விவசாயத்திற்கு உதவுவது என்றால், அவர்கள் குறிப்பிட்ட 6 துறைகளுக்குத்தான் உதவி செய்கிறார்கள். ரசாயன உரம் கிடைக்கவேண்டும், விதை கிடைக்க வேண்டும். பூச்சி மருந்து கிடைக்கவேண்டும், கடன் வசதி கிடைக்கவேண்டும். இன்னும் இதுபோன்ற 6 துறைகளுக்குத்தான் உதவுகிறது. இவ்வளவும் பின்தங்கிய மாவட்டங்களில் உதவி செய்யவேண்டும். என்னுடைய மாவட்டத்தில் மின்சார வசதி இல்லாத கிராமங்களைக் குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் உணவு மாநாடு கூட்டிய நேரத்தில் அவரிடம் மகசர் கொடுத்திருக்கிறோம். 24 கிராமங்களில் ஏரி மராமத்து செய்யப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறோம். நந்தன் கால்வாயைப்பற்றி 1952-லிருந்து நான் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். கோலியனூர் வாய்க்கால், வளவனூர் ஏரி, சிறுவந்தாடு ஏரி முதலியவைகள் விஷயமும் கவனிக்கப்படவேண்டும். சாத்தனூர் அணையில் அடிக்கடி தண்ணீரைத் தேக்கிவிடாமல், எங்கள் மாவட்ட ஏரிகளுக்கும், குளங்களுக்கும் தண்ணீர் வருவதற்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையில் நீர்ப்பாசன வசதிகள் செய்து தரவேண்டுமென்று மக்கள் கோருகிறார்கள். இந்த அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கவேண்டும். இவ்வளவு குறைகள் கவனிக்கப்படவேண்டியிருக்க, கவர்னரின் உரையைப் பாராட்டுவதற்கோ அமைச்சரவை மீது நம்பிக்கை தெரிவிப்பதற்கோ இல்லாத முறையில் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. P. PERIASAMI:** கனம் சட்ட மன்றத் தலைவி அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் உரையின்மீது பலர் பலவிதமாகப் பேசினார்கள். நானும் அவருடைய பேருரையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன்.

முன்பெல்லாம் கவர்னர் பெருமான் உரையில், ஹரிஜனங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்று அறிவிப்பது உண்டு. ஆனால், இப்பொழுது இந்த உரையிலே ஹரிஜனங்களைப் பற்றி ஒரு குறிப்பும் புள்ளி விவரமும் காணப்படவில்லை. குறிப்பிடாமல் விட்டிருப்பதற்கு ஒரு காரணம் இருக்கலாம். இந்த அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு அதிக அளவிலே நன்மை செய்துகொண்டு, பல கோடி ரூபாய்களைப் பல வழிகளிலும் செலவு செய்து

கொண்டு வருவதால் இந்த வகைகளைக் காட்டவேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிடாமல் விட்டார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இருந்தபோதிலும், நேற்றுகூட ஹரிஜன நல டைரக்டர் ஆபீசிலே கவர்னர் பெருமான் பேசும்போது, ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை எடுத்துக்காட்டி, மிகவும் அன்போடு பேசினார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கு கிட்டத்தட்ட பதினேழு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் தற்சமயம் அதிகமாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் ஹரிஜன மக்களுக்கு இந்தக் கடன் தொகை சரியான முறையில் போய்ச் சேருவது இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவர்கள் தாசில்தாரிடம் கடன் தொகைக்காகப் போகும்போது, அவர்களைப் பின்னடி நிறுத்தி ஜாதி ஹிந்துக்களை முன்னடிவிட்டு, அவர்களுக்கு அதிகமாகக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதோடு பெரியயிருப்பதால் குறிப்பாகச் சொல்கிறேன்.

நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும் சட்டத்தை நமது அரசாங்கத்திலே அதிக சீக்கிரமாகக் கொண்டுவருவதாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதுவும் நமது காங்கிரஸ் அங்கத்தினர்களிலேயே சில பெரும் நிலச்சுவாந்தார்கள் சீக்கிரம் கொண்டுவர வேண்டும் என்று ஆசைப்படுகிறதைப் பார்க்கும்போது, நமது அரசாங்கத்திற்கு இது விஷயத்தில் எவ்வளவு ஆதரவு இருக்கும் என்பதைத்தான் இது காட்டுகிறது. நில உடமைக்கு உச்ச வரம்பு கட்டி கூடிய சீக்கிரத்திலே சட்டம் கொண்டுவந்து விடுவார்கள் என்ற நிச்சயம் இருக்கிறது. குறிப்பாக இத்தனை ஏக்கர்தான் உச்ச வரம்பு என்று சொல்லாவிட்டாலும், அரசாங்கத்திலே பல பேர் அதை ஆலோசித்துக்கொண்டு வருவார்கள் என்ற நிச்சயம் இருக்கிறது. இது விஷயத்தில் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதோடு, பெரிய பெரிய மில் முதலாளிகள், பெரிய பெரிய பஸ் சொந்தக்காரர்கள், 100 வீடுகள், 200 வீடுகள் என்று டவுனிலே கட்டிவிட்டு அதில் பல லட்ச ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கும் உச்ச வரம்பு கட்டுவது அவசியம் என்று நான் நினைக்கிறேன். நிலம் வைத்திருப்பவர்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட அளவு நிலம்தான் வைத்துக்கொள்ளலாம் என்று சட்டம் செய்வதோடு நின்றுவிடக்கூடாது. ஏனென்றால், பெரிய பெரிய பிரபுக்கள் மோட்டார் தொழிலிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் பெறுகிறார்கள். மில் முதலாளிகள் கோடி கோடியாக சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு உச்ச வரம்பு கட்டவேண்டும். மற்ற துறைகளில் உச்ச வரம்பு கொண்டுவாராதபோது நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டுவரக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அது நிச்சயம் கொண்டுவரவேண்டியதுதான். இருந்தபோதிலும், பத்து பஸ்கள் வைத்திருக்கும் ஒரு முதலாளிக்கு 100 ஏக்கர் நிலம்



இருக்கலாம். அப்படி ஒரு விவசாயிக்கு வேறு வருமானம் வந்தால், அதற்குத் தகுந்தபடி நிலத்தின் வருமானத்தைக் குறைக்க வேண்டியது அவசியம். ஒரு விவசாயிக்கு வேறு தொழில் மூலமாக வருமானம் வந்தால், நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும்போது, அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தகுந்தபடி நிர்ணயிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

குடி வாரத்தைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். சேலம் ஜில்லாவிலே அதிகம் இல்லாவிட்டாலும், கரூர், குழித்தலை போன்ற இடங்களில் எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். உச்ச வரம்பு 60:40 என்று போடுகிறோமே தவிர, கலத்திற்கு மூன்று மரக்கால், நான்கு மரக்காலுக்கு மேல் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்த நிலைமையை நான் சில இடங்களில் பார்த்து அதை அவர்களிடத்தில் சொல்லிப் பார்த்தேன். ஆனால், குடிகளுக்குக் கஷ்டம் இருக்கும்போல் தெரிகிறது. நிலக்காரர்கள் அதையும் பிடுங்கி விடுவார்களோ என்று பார்க்கும்போது மூன்று மரக்கால்தான் அளந்துகொண்டு வருகிறார்கள் என்றால், சட்டம் செய்தும்கூட விவசாயிகளுக்குப் பயன்படுவதற்கு வசதி இல்லை.

அடுத்தபடியாக, என்னுடைய ஜில்லாவைக் குறித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். காவேரியில் இந்த வருஷம் அதிகத் தண்ணீர் பெருகி இரு கரையும் புரண்டு ஓடிற்று. எங்கள் சேலம் ஜில்லாவிலே காவேரி தண்ணீர் அதிகமாக பெருகி பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை பாழாக்கிவிட்டது. இப்படி தண்ணீர் அதிகமாக வரும் காலத்தில் மேட்டூர் கால்வாய் கடைகால் வழியாக சேலம் ஜில்லாவில் திருமணிமுத்தார் வழியில் கால்வாய் வெட்டிவிட வேண்டும். இது விஷயமாக எங்கள் பக்கத்தில் இருக்கிற எம்.எல்.ஏ.க்களும் மற்றவர்களும் மந்திரி அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். மந்திரி அவர்களும் என்ஜினியர் அவர்களும் பார்த்து ஆலோசனை செய்வதாக ஏதோ கொஞ்சம் உறுதியாக சொல்லியிருக்கிறார்கள். சேலம் ஜில்லா மத்தியில் அதிகமாக காவேரி தண்ணீரினால் பாசனம் கிடையாது. ஆகவே, காவேரியின் அதிகத் தண்ணீரை உபயோகப்படுத்த மேட்டூர் கால்வாயிலிருந்து சேலம் ஜில்லாவிலுள்ள திருமணிமுத்தார் வழியாக பல கால்வாய்கள் வெட்டி பல ஏரிகளை நிரப்ப முடியும். இம்மாதிரி ஒரு திட்டத்தை கண்டிப்பாக அடுத்த திட்டத்திலாவது நிறைவேற்றிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். 10-30 a.m.

அடுத்தபடியாக, கல்வாணைகளைப் பற்றி கூற விரும்புகிறேன். காவேரிப் பக்கத்திலுள்ள 'எரோஷனினால்' ஏற்கனவே மரங்களெல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டு விட்டன. இப்பொழுது நிலங்களும் அரிக்கப்பட்டு சேதத்துக்குள்ளாகி வருகின்றன. காவேரியானது அகலப்படாமல் இருப்பதற்கு முன் காலத்தில் கல்வாணைகள் மூலம் தடுத்து வைத்திருந்தார்கள். அந்த விஷயம் இப்பொழுது அறவே கவனிக்கப்படவில்லை. கல்வாணைகள் விஷயமாக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கனம் பக்தவத்சலம் அவர்கள் மராமத்து இலாகா மந்திரியாக இருந்த

போதே எடுத்துக் கூறியும், இதுவரையிலும் அது கவனிக்கப்படவில்லை. 1937-ம் ஆண்டு முதல் இதுபற்றி சொல்லிவந்தும், இதுவரையில் இது சம்பந்தமாக ஒன்றும் நடவடிக்கை எடுக்காதது குறித்து நான் வருந்துகிறேன். இப்பொழுது கனம் மந்திரி கக்கன் அவர்கள் இதை நேரில் பார்த்திருக்கிறார்கள். இனிமேலாவது இது விஷயமாக விமோசனம் கிடைப்பதற்கு வழி தேடவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு ஆயிரக்கணக்கான வீட்டு மனைகள் கொடுத்து, மற்றும் குடி தண்ணீர் போன்ற வசதிகளைச் செய்துகொடுத்து, பல வழிகளில் அவர்களுக்கு உதவி செய்து கொண்டு வருவதற்காக அரசாங்கத்தைப் போற்றவேண்டும். எனக்கு முன்னால் பேசிய கனம் கோவிந்தசுவாமி அவர்கள் வடநாடு, தென்னாடு என்று தொனிக்க பேசிய போதிலும், இங்கு கூட தஞ்சாவூர் என்று பேசவேண்டிய நிலையில் இருக்கிறோம். சென்னை ராஜ்யத்தில் தஞ்சாவூர் அதிகமான நன்மையை அடைகிறது, அதிகமாக அங்கே நல்லது போய் சேருகிறது என்று பேசவேண்டிய சந்தர்ப்பம் இருக்கிறது. வட சேலம், தென் சேலம் என்று கூட பேசவேண்டியிருக்கிறது. பிறகு ஒரு ஊரிலே அந்தத் தெரு, இந்தத் தெரு என்று கூட பேச்சு வரும். ஆகையினால் அந்த எண்ணம் கொடுக்காமல், நமது இந்தியா ஒன்று, இந்தியாவில் உள்ள எல்லோருக்கும் ஒன்றாக ஆதரவு கொடுக்கவேண்டும். அந்தக் காலத்தில் கங்கை நதியைக் கூட தெற்கே திருநெல்வேலி, தாம்பரபரணி நதி வரையில் வெட்டிக்கொண்டு வந்து விடலாம் என்று சத்தியமூர்த்தி அவர்களால் பேசப்பட்டது. கங்கை நதியைத் திருப்பி ஒவ்வொரு ஆற்றின் வழியாகக் கொண்டு வந்து தென் பகுதி வரையிலே அதை வெட்டிக்கொண்டு வந்துவிடலாம் என்று முன்னாலேயே பேசிக்கொண்டிருந்தார்கள். ஐந்தாண்டுத் திட்டத்திற்காக எத்தனையோ கோடி ரூபாய் செலவழிக்கிறோம். இந்தியா ஒன்றாக இருக்கக்கூடிய காலத்திலேயே, சுதந்திர அரசாங்கம் கங்கை நதியைத் திருப்பி வாய்க்கால்கள் வெட்டி ஒவ்வொரு ஜீவநதியின் வழியாகத் தண்ணீரைக் கொண்டு வந்து தென் பகுதியில் பாய்ச்சினால் நமது சென்னை ராஜ்யம் மட்டுமல்ல, இந்தியாவே சுபிட்சம் அடையும் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI R. SRINIVASA IYER : அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரைக்காக நாம் நன்றி செலுத்தும்போது, கடவுளுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். நல்ல சமயத்திலே அவசியமான இடங்களிலே நல்ல விதமாக மழை பெய்து சுபிட்சமாக இருக்கிறோம் என்பது எல்லோருக்கும் இப்பொழுது தெரிந்த விஷயம். இன்னும் ஒரு வாரத்திற்கு அவசியமான இடங்களிலே, அதாவது அரந்தாங்கி, ராமநாதபுரம், வட ஆற்காடு முதலிய இடங்களில் மழை பெய்யுமாறு கடவுளை பிரார்த்திப்போமாக. (குறுக்கீடு) கொஞ்சம் தயவு செய்து குறுக்கிடாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் எனக்கு அவகாசம் கொடுத்திருப்பது 10 நிமிஷங்கள்தான்.





கவர்னர் உரையிலே ஒரு 'டார்க் ஸ்பாட்' என்று உணவுப் பிரச்னையைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதை 'டார்க் ஸ்பாட்' என்று சொல்லக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். விவசாயிகளும் ஜீவிக்கவேண்டியதுதான். விவசாயிகளுடைய திறமையினால், அவர்களுடைய உழைப்பினால் நாம் நெல் மற்ற உணவு தானியங்களை விளைவித்து உண்கிறோம். உணவு விலை ஜாஸ்தியாக இருக்கிறது என்று சொல்லுபவர்கள் எத்தனை சதவிகிதம்? எங்கே இருக்கிறார்கள்? எந்த விதத்தில் உணவு விலை அதிகரித்திருக்கிறது? என்ன காரணம்? உணவு உற்பத்தி குறையவில்லை. அண்டை ராஜ்யத்திற்கு அதிகமாக உணவுப்பொருள் போய்விட்டது என்ற காரணமும் இல்லை. 'அஜிடேஷன்' தான் காரணம். ஒரு பக்கத்திலே உற்பத்தி செய்பவர்களை தூண்டிவிட்டு சம்பளம் ஜாஸ்தி கேட்கச் சொல்லுகிறார்கள். மறு பக்கத்திலே விவசாயிகளை தூண்டிவிட்டு 3 மரக்கால் கூலி கேட்கும்படி செய்கிறார்கள். ஒரு ரூபாய் கூலி கொடுக்காவிட்டால் நடவுக்குப் போகாதீர்கள் என்று தூண்டிவிடுகிறார்கள் ஒரு சாரார். இதன் காரணமாக உணவு உற்பத்தியின் செலவு அதிகரித்துவிட்டது. அதுமட்டுமல்ல. உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு துணி வாங்கவேண்டும், இதர சாமான்கள் வாங்கவேண்டும். அவர்களுக்கு முன்பு இருந்த அளவு இப்பொழுது அரிசி விற்பனை இல்லை. விலை கொடுத்து வாங்கவேண்டும். ஆகையினால் எதனால் உணவு விலை ஜாஸ்தியாகிவிட்டது என்பதை நாம் ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம். உற்பத்தியை ஜாஸ்தியாக பெருக்கினாலும் கூட, 'டெவலப்பிங் எகானமியில்' ரூபாயின் விலை மதிப்பு குறைந்திருக்கிறது. இதனால் விலை ஜாஸ்தியாக ஏறத்தான் செய்யும். சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் நியாயமானதும் சரியானதும் தான். நடுவிலே ஒரு சந்தர்ப்பத்தில் அறுவடை ஆன பிறகு தலையிட்டு 'ப்ரொக்யூர்மென்ட்' செய்தார்கள். இரண்டு லட்சம் டன் 'ப்ரொக்யூமெண்டு' செய்ய திட்டமிட்டார்கள். அதிகாரிகள் நல்ல முறையில் பணியாற்றினார்கள். 1,26,000 டன் அரிசி கொள்முதல் செய்தார்கள். ஒருவருக்கும் நோவு இல்லாமல், இடைஞ்சல் இல்லாமல் கொள்முதல் செய்தார்கள். இதில் பல குறைகள் இருந்திருக்கலாம். எல்லா ஜில்லாவிலும் ஒரே மாதிரியாக 'ப்ரொக்யூர்மெண்டு' செய்ய முடியவில்லை. எங்கள் ஜில்லாவை பொறுத்தவரையிலும் எதிர்பார்த்த அளவுக்கு கொள்முதல் செய்தார்கள். அதைக் கொண்டும், மத்திய சர்க்கார் உதவியைக் கொண்டும் இதுவரையில் நியாய விலைக் க்டைகள் நடந்து வந்தன. அதன் பலன் என்ன? விலை குறைந்து வருகிறது. இன்னும் குறையும் என்று எதிர்பார்க்கிறார்கள். நியாயவிலைக் கடைகளில் மூன்று மாதங்களுக்கு முன்பு இருந்த அளவு இப்பொழுது அரிசி விற்பனை இல்லை. 4—12—59 தேதி கூட உணவு அட்வைஸரி கமிட்டியின் கூட்டம் நடந்தது. அரிசி ஜாஸ்தி விற்காத சில இடங்களிலுள்ள நியாய விலைக் கடைகளை எடுத்து அவசியமான மற்ற இடங்களில் மாற்றலாம் என்று இந்தக் கமிட்டியில் ஆலோசனை கூறப்பட்டது. அமைச்சர் அவர்களும் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் அவர்களும், அவர்களைச் சேர்ந்த

[Sri R. Srinivasa Iyer] [8th December 1959

அதிகாரிகளும் செய்த பணியை நாம் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். அத்துடன்கூட, அடுத்த ஆண்டில் நாம் 'ப்ரொக்யூர்மெண்டு' செய்ய வேண்டிய அவசியமே ஏற்படாது. ஏற்படுவதற்கு இப்பொழுது சூழ்நிலை இல்லை. அதுவும் கூட சம்பாவைப் பார்த்துக்கொண்டு முடிவு செய்யலாம் என்று நினைக்கிறார்கள். இம்மாதம் 26-ம் தேதி மறுபடியும் மீட்டிங் போட்டிருக்கிறார்கள். 'ப்ரொக்யூர்மெண்டு' அவசியமில்லை என்றுதான் இப்பொழுது தோன்றுகிறது. 10 வருஷங்களுக்குள் 48 லட்சம் ஏகர் நிலங்களிலிருந்து, 56 லட்சம் ஏகர் நிலங்களில் அரிசி உற்பத்தி செய்யும் அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். உற்பத்தி சம்பந்தமாக இந்தியா பூராவும் சராசரி எடுத்துக்கொண்டால் ஒரு ஏக்கரில் உற்பத்தி 750 பவுண்டு அரிசி. ஒரு ஏக்கருக்கு நமது ராஜதானியில் அரிசி உற்பத்தி 1,300 பவுண்டு, நெல்லாக பார்த்தால் 1,800 பவுண்டு. ஏக்கர் 1-க்கு சராசரி நெல் 2,000. 2,240 பவுண்டுக்கு நாம் முயற்சி செய்யலாம். சாதனங்கள் இருக்கின்றன. எனக்கு முன் பேசிய அம்மையார் அவர்கள் சொன்னதுபோல் கொஞ்சம் முயற்சியும், உதவியும் தேவை. சாதனங்கள் இருக்கின்றன. அந்த முறையிலே 'பிரைஸ் ஸ்டெபிலைஸேஷன் போர்டு' அவசியம் தேவை. மினிமம் அண்டு மாக்ஸிமம் பிரைஸ், அதாவது அறுவடைக்கு முன்னதாகவே, இன்னும் சாகுபடி காலத்திற்கு முன்னதாகவே அடுத்த வருஷத்திற்கு ஒவ்வொரு விவசாயியும் விலை என்ன என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் அவனுக்கு அக்கறை வரும். 'புட்கிரைன்ஸ் என்குயரி கமிட்டி' 1957-ல் ரிபோர்ட்டு செய்திருக்கிறார்கள். 'மினிமம் பிரைஸ் அண்டு மாக்ஸிமம் பிரைஸ்' முன்னதாகவே 'பிக்ஸ்' செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்று நாம் ஆலோசனை செய்துகொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு பெரிய பிராஜெக்டை மூன்றாவது பிளானில் சேர்க்கவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். கிருஷ்ணா-பெண்ணார் பிராஜக்டினால், நம் மாகாணத்தில், செங்கல்பட்டு ஜில்லாவில் ஆறு லட்சம் ஏக்கரா நிலம் தண்ணீர் பாயும். அந்த திட்டம் ஆந்திரா-சென்னை பிரிவுக்கு முன்னாலேயே வகுக்கப்பட்டது. பிரிவினைக்குப் பிறகும் அந்த திட்டத்தை தொடர்ந்து செய்ய வேண்டும். சென்னைக்கு உதவ வேண்டுமென்று, அங்கு முதல் அமைச்சராக இருந்தவர், இன்று காங்கிரஸ் பிரஸிடெண்டாக இருக்கும் காரணத்தால், சூழ்நிலை நன்றாக இருப்பதால் அந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதனால், அங்கே 36 லட்சம் ஏக்கராக்கள் பாயும். சென்னை மாநிலத்தில் செங்கற்பட்டு ஜில்லாவில் ஆறு லட்சம் ஏக்கராக்கள் பாயும். தவிர சென்னைக்கு குடி தண்ணீரும் கிடைக்கும். ஆகவே அந்த திட்டத்தை மூன்றாவது திட்டத்திலே சேர்க்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

அதன் பிறகு மைனர் இர்ரிகேஷன். தஞ்சாவூர் ஜில்லாவிற்கு பேக்கேஜ் டீல் package deal வந்ததற்காகப் பாராட்டுகிறேன். நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். தஞ்சாவூர் ஜில்லா என்றால் பூராவும் பழைய டெல்டா பிரதேசமென்ற தவறான அபிப்பிராயமிருக்கிறது. அறந்தாங்கி, பட்டுக்கோட்டைப் பிரதேசங்கள் மழையினால், ஏரிகள் நிரம்பும் பிராந்தியங்கள் இருக்கின்றன. அங்கு தனியாக ஒரு பேக்கேஜ் டீல் செக்ஷன் அந்த பிராந்தியத்திற்கு ஆரம்பித்தால் நலமாக விருக்கும். உலகிலேயே வியக்கத்தக்க "அஸ்டௌண்டிங்" முறையில் இந்த பேக்கேஜ் டீலை தஞ்சாவூரில் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.



8th December 1959] [Sri R. Srinivasa Iyer]

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி சில வார்த்தைகள். உணவு உற்பத்தியை அதிகரித்து இருக்கிறோம். சென்னையில் ரொம்பவும் சந்தோஷப்படத்தக்க முறையிலே வெற்றி பெற்று இருக்கிறோம். அதிக உற்பத்தியிருக்கிற எல்லா ராஜ்யங்களிலும் ஸீலிங் ஏற்பட்டுவிட்டது. நாமும் ஸீலிங் ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்து உச்ச வரம்பு ஏற்படுத்த நினைப்பது போல இருக்கிறது. அப்படியானால் இப்பொழுது இருக்கக்கூடிய நிலையில், ஒரு குடும்பத்தில், குறைந்தது ஐந்து பேர்களுக்கு மேல் இல்லாமல் இருந்தால், ரூ. 5,000-மாவது நிகர வருமானம் வேண்டும். அந்த முறையில் வருஷம் 1-க்கு 5,000 மாவது நிகர வருமானம் ஸீலிங் நிலத்திலிருந்து வரக்கூடியதாக ஸீலிங் ஏற்படுத்தினால் ஒழிய, சரிவராது. ஒரு குடும்பம் என்றால், குழந்தைகளைப் படிக்க வைக்கவேண்டும், கல்யாணங்கள் செய்ய வேண்டும், வியாதிக்கு சிகிச்சை செய்ய வேண்டும், மேலும், "லீன்" வருஷங்களுக்கு என்று ரிசர்வ் வைக்க வேண்டும். இப்பொழுது "ஸ்டாண்டர்ட் ஏக்கர்" என்று திட்டமிடுகிறோம். வெவ்வேறு நிலவளமுள்ள பல பிராந்தியங்களுக்கு "லாண்ட் போர்ட்", "லாண்டு கமிஷன்" என்று ஏற்படுத்தி ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை என்ன என்று நிர்ணயித்து சீலிங் அந்தப்படி 30, 40 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று செய்ய வேண்டும்.

இதிலே, உணவு உற்பத்திக்கு என்று இருக்கும் நிலங்கள் தவிர, பாக்கிக்கு இந்த ஸீலிங் வேண்டாம். இப்பொழுது தென்னந்தோப்புகள் இருக்கின்றன. தென்னமரங்களை ரொம்பக் காவந்து பண்ணி, பிள்ளையைப் போல் வளர்க்கவேண்டும். வரும்படி ஒரு நாள் கவனிக்காவிட்டாலும், வண்டு விழுந்தாலும், மரம் கெட்டுவிடும். நஷ்டமாகி விடும். ஐந்து வருஷங்களுக்குத் தண்ணீர் விட்டுக் காப்பாற்றி வந்தால், 15 வருஷங்களுக்குப் பிறகு காய்க்கும். நிரந்தரமாகக் காய்க்க சராசரி 20 வருஷமாகும். இப்பொழுது சென்னை மாகாணத்தில் 115,000 ஏக்கர்தான் இருக்கிறது. தேங்காயினால் பாரின் எக்ஸேஞ்ச் கிடைக்கிறது. இப்போது 25 கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்கிறோம். அதை தவிர்ப்பதற்காக அந்தத் தேங்காய் வளர்ப்பை அதிகரிக்க, ஸெண்ட்ரல் கோகனட் கமிட்டியிலே, ஏராள சிலவு செய்து ஆராய்ச்சியெல்லாம் செய்து வருகிறார்கள். அதெல்லாம் வீணாகிவிடும். தென்னந் தோப்புகளை சீலிங்கில் சேர்ப்பது நியாயமாகாது. ஆகவே, தென்னந் தோப்புகள், பழத்தோப்புகள் முதலியவற்றை இந்த ஸீலிங்கிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தோப்பு வைத்திருக்

பவர்களுக்குத்தான் அதிலுள்ள சிரமம் தெரியும். தேங்காய் ஜாஸ்தி உற்பத்தியாவதற்கு, தோப்புகளை ஸீலிங்கிலிருந்து விலக்கியாக வேண்டும்.

காம்பன்சேஷன் சம்பந்தப்பட்ட வரையில், ஒரு வருஷ நிகர வரும்படியை 15-ஆல் பெருக்கி கூடுதலாவதைக் கணக்கிட்டு காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும். சில ராஜ்யங்கள், டெனண்டுகளே காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். சர்க்காரே எடுத்துக்கொண்டால், அதற்கு சரியான காம்பன்சேஷன் கொடுத்தால்தான் நல்லது. இன்னும் சிலர் இதற்கு "ரிட்ராஸ்பெக்டிவ்" எபெக்ட் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அது தேவையில்லை. அனாவசியமாக யாரும் பறுதீனம் செய்துவிட மாட்டார்கள். *Mala fide* யாக செய்துள்ளவர்கள் நஷ்டப்படுவார்கள். அது அவர்களுடன் போய்விடும். வாங்கியவர்கள் மோசடி செய்து விடுவார்கள், நிலக்காரன் அனுபவிக்க முடியாது. ஆகவே அந்த பில் வரும்போது, அது சட்டமாகும் காலத்திலிருந்து அதை அமலாக்கினால் போதும் என்பது என் கருத்து.

பர்ஸனல் கல்டிவேஷனைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன் Personal cultivation is cultivation by himself or by members of his family or by hired labour with his own or hired stock. என்று அர்த்தம் ஆகும்படி செய்ய வேண்டும். எல்லோருமே நேரிலே இருந்து விவசாயம் செய்வது என்பது முடியாத காரியம். மதராசிலே உத்தியோகமாக விருக்கும் ஒரு நபர், நேரே இல்லாமல், hired labour and stock வைத்து விவசாயம் செய்தால் அதுவும் பர்ஸனல் கல்டிவேஷன்தான். மேலும், சிறிய மிராசுதார்களுக்கு, 6 ஏக்கர் வரை பர்ஸனல் கல்டிவேஷனுக்கு எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்க வேண்டும்.

இத்துடன், மூன்றாவது திட்டத்தில், 4 அல்லது 5 திட்டங்களையும் சேர்க்கவேண்டும் என்று வற்புறுத்துகிறேன். சேது சமுத்திரம் பிராஜக்ட்டினால் பெரிய உபகாரம் இருக்கிறது. முன்பு அதற்கு 15 கோடி ரூபாய் ஆகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்பொழுது அதற்கு 30 கோடியானாலும் ஆகலாம். பிராஜக்டுகளை பின்னுக்குத் தள்ளிப் போட்டுக் கொண்டே இருந்தால் இப்படித்தான் செலவு ஜாஸ்தி ஆகும். இதனால், கொச்சிக்கும் மதராசுக்கும் 362 மைல் நீளம் பிரயாணம் குறையும். ஒன்றரை நாள் கப்பல் பிரயாணம் குறைகிறது. உற்பத்தி பெருகப் பெருக, போக்குவரத்து சாதனங்களும் அதிகப்பட வேண்டும்.

கிருஷ்ணா-பெண்ணார் பிராஜக்ட் மிக அவசியம். சென்னையிலே, இந்த பக்கிங்காம் கனாலுக்கு விமோசனமே கிடையாதா? இந்த பக்கிங்காம் கனாலில் சமுத்திர ஜலத்தை வடக்கே பம்பு செய்து தெற்கே சமுத்திரத்தில் டிஸ்சார்ஜ் செய்வதற்கு வேண்டிய திட்டம் வகுத்தாலன்றி, மதராஸ் "ஸிடி பியூடிபுல்" என்று எப்படிச்





சொல்ல முடியும்? சென்னைப் பட்டணம் பியூடிபுல்லாகவே இருக்காது. சுகாதாரக் குறைவும், துர்நாற்றமும் இருந்து கொண்டேதான் இருக்கும். ஆகவே இதற்கு மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில், ஒரு திட்டம் இருக்க வேண்டும்.

20 வருஷங்களுக்கு ரோட்டு விஸ்தரிப்பு திட்டம் என்று இருக்கிறது. உணவு உற்பத்திக்கு அவசியமானது, ஒவ்வொரு கிராமத்திலும், விளைபொருள்களை அவசரமாக, துரிதமாக மார்கெட்டுகளுக்கு கொண்டுபோக கப்பி ரஸ்தாக்கள் அவசியம். அந்த வசதியைச் செய்து தர வேண்டும். பிற்போக்கான இடங்களுக்கு ப்ரையாரிடி கொடுத்து, இந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

துறைமுகங்கள் அபிவிருத்தி சம்பந்தமாக இந்த உரையில் ஒன்றும் இல்லை. சேது சமுத்திர பிராஜக்ட்டும், இந்த துறைமுக அபிவிருத்தியும் சேர்ந்தே செய்ய வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில், தூத்துக்குடி ஹார்பரைப்பற்றிச் சொல்ல வேண்டும். இதை மூன்றாவது திட்ட காலத்திலேயே செய்து முடிக்க வேண்டும். சென்ட்ரல் சர்க்கார் அந்த வேலை செய்வதாக ஏற்பாடு என்று தெரிகிறது. உலக பிரசித்தி பெற்ற எஞ்ஜினியர்கள் நம்மிடம் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு இந்த திட்டத்தை நிறைவேற்றினால் நல்ல பலன் கிடைக்கும்.

(மணியடிக்கப்பட்டது.)

SRI K. RAMACHANDRAN: கனம் சபைத் தலைவியவர்களே, கவர்னர் உரையின் மீது, என் கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலிலே, விலைவாசி உயர்வைப்பற்றிச் சொல்ல வேண்டும். அவர்களே இதை ஒரு "டார்க் ஸ்பார்ட்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே எல்லா மக்களுக்குமே இது கவலைக்கு இடமான விஷயம். இது கடந்த சில வருஷங்களாக ஏறு முகமாக இருந்தாலும், ஓரளவு இப்பொழுதாவது இறங்கு முகமாக நோக்கிப் போகும் என்று எதிர் பார்த்தோம். ஏனென்றால், இந்த வருஷம், சிற்சில இடங்கள் தவிர மற்ற எல்லா இடங்களிலும், நல்ல பருவ மழை பெய்து இருக்கிறது. இந்த நிலைமை பெரும்பாலாக இருக்கும்போது, கண்டிப்பாக விலைவாசிகள் இறங்கியாக வேண்டும். இது சாதாரணமாக வழக்கமாக இருக்கவேண்டிய நிலைமை. அதைத் தவிர சர்க்காரில் கூட ஒரு லட்சம் டன்னுக்கு மேல் அரிசி வைத்துக்கொண்டு சுமார் இரண்டாயிரம் நியாய விலைக் கடைகளை வைத்து நியாய விலையில் அரிசியை விற்று வருவதாகச் சொல்லுகிறார்கள். அப்படியிருந்தும் அதிகமாக உயர்ந்து விற்கக்கூடிய விலையை அவர்களால் தடுக்க முடியவில்லை. ஆனால் ஒன்று சொல்லுகிறார்கள். விலைவாசி அதிகமாக விற்றால் விவசாயிகள் அதனால் பயனடைகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மையில் அப்படி இல்லை. அது எப்படி பொருந்தும் என்பதும் தெரியவில்லை. இப்படி விலைவாசிகள் உயர்ந்து விற்பதால் மக்களிடம் கவலை உண்டாகியிருக்

[Sri K. Ramachandran] [8th December 1959

இறது. சாதாரணமாக விலைவாசிகள் அறுவடை காலங்களில் தங்களுடைய விவசாயப் பொருள்களை விற்றுவிடுவார்கள். மகசூல் காலத்திலேயே விற்றுவிடுவதால் மற்ற காலங்களில் அவற்றை வாங்கும்போது அவர்களும் அதிகப்படியாக விலை கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. மகசூல் காலங்களில் பெரிய வியாபாரிகளும், பணக்கார விவசாயிகளும் தானியங்களை குறைந்த விலை கொடுத்து வாங்கி வைத்துக்கொண்டு மற்ற காலங்களில் அதிகப்படியான விலைக்கு விற்கிறார்கள். அப்படி அதிகப்படியாக விலைவாசிகளை உயர்த்தி வைத்து பெரும் லாபமடையப் பார்க்கிறார்கள். அதனால் ஏழை விவசாயிகளுக்கு எந்த விதத்திலும் சௌகர்யம் இல்லாமல் இருக்கிறது. சாதாரண விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கவில்லை. ஆகவே, இப்படி விலைவாசி விற்பது குறைவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

சென்ற வருஷம் ப்ரொக்யூர்மெண்ட் ஆரம்பித்தபோதும், தென் மண்டலத்தை ரத்து செய்ய வேண்டும் என்று சொன்ன போதும் மத்திய சர்க்கார் தென் மண்டலத்தை ரத்து செய்யக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். சென்ற வருஷம் நல்ல முறையில் ப்ரொக்யூர்மெண்ட் செய்ய முடியவில்லை. இந்த நிலைமையில் காலாகாலத்தில் உணவு தானியங்களை ப்ரொக்யூர் செய்து வைத்துக்கொண்டு ஜனங்களுக்கு நியாய விலையில் விற்க ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. எந்த அளவு உணவு தானியங்களை சேகரிக்க முடியுமோ அவ்வளவு சேகரித்து வைத்துக்கொண்டு நியாயவிலை கடைகள் மூலமாக கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கடமையை இந்தச் சர்க்கார் செய்ய தவறி விட்டது. மத்திய சர்க்கார் ஏதோ சில சமயங்களில் கொஞ்சம் உணவு தானியங்களை கொடுத்துவிட்டு தங்களுடைய கடமையை தட்டி கழித்து விடுவது சரியல்ல. தென் மண்டலத்தை எப்பொழுது அவர்கள் ரத்து செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்களோ அப்பொழுது அவர்கள் இங்கு வேண்டிய உணவு பொருளை சப்ளை செய்ய வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஏதோ கொஞ்சம் உணவு தானியங்களை சப்ளை செய்து விட்டால் மட்டும் போதாது. காலாகாலத்தில் இந்தச் சர்க்கார் வேண்டிய தானியத்தைக் கொள்முதல் செய்திருந்தால் இப்பொழுதுள்ள சங்கடமான நிலைமையை சமாளித்துக்கொள்ளலாம். வேண்டிய நியாய விலைக்கடைகளை வைத்து குறைந்த விலையில் உணவு தானியங்களை மக்களுக்குக் கொடுத்து மக்களுடைய சங்கடமான நிலையை போக்கியிருக்கலாம். இனியும் மக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு சங்கடமான நிலைமையை உண்டாக்கக்கூடாது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய அரசாங்கம் தங்களுடைய பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு தவறி விட்டது. ஏதோ



8th December 1959] [Sri K. Ramachandran]

பத்தாயிரம், இருபதாயிரம் டன் உணவு தானியத்தைக் கொடுத்து விட்டு தங்களுடைய பொறுப்பை தட்டிக்கழிப்பதில் பிரயோசனம் இல்லை. ஆகவே நல்ல முறையில் பப்லர் ஸ்டாக் இருக்கும்போது அவைகளை வாங்கி சேகரித்து வைத்துக்கொண்டு தகுந்த காலத்தில் குறைந்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்யவேண்டும்.

உணவு தானியங்களைப்போலவே மற்ற பொருள்களாகிய புளி, மிளகாய் போன்றவைகளும் அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. அவற்றின் விலைகளும் ஒரேயடியாக ஏறியிருக்கிறது. அதுவும் நல்லது அல்ல. புளி ஏற்றுமதியாகிறது என்றும் சில இடங்களில் புளிய மரங்கள் வெட்டப்படுகிறது என்றும் இதற்குக் காரணம் சொல்லப்படுகிறது. இவைகளையெல்லாம் தவிர்த்து சரியான விலையில் மக்களுக்கு கிடைக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே சர்க்கார் அவ்வப்போதுள்ள நிலைமையை கவனித்து விலைவாசி ஏறுவதை எந்த அளவு தடுக்க வேண்டுமோ அந்த அளவு தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதைப்போலவே உணவு உற்பத்தி அதிகமாக ஆகி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. 12¾ டன் அதிகமாக உற்பத்தியாகி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி இருந்தும் விலைவாசி ஏகமாக உயர்ந்திருப்பதற்குக் காரணம் என்ன? உணவு அதிகமாக உற்பத்தியாகி இருப்பதைக்கண்டு மகிழ்ச்சி அடைந்தாலும் விலைவாசி அதிகமாக உயர்ந்திருப்பது தான் வருத்தத்திற்கு இடமளிக்கிறது. கண்டிப்பாக அரசாங்கம் இந்த உயர்வைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். உற்பத்தி அதிகமானால் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கும்படியான நிலைமை ஏற்பட வேண்டும். ஆனால் அப்படி ஏற்படவில்லை.

உணவு உற்பத்திக்கு வேண்டியது உரம். அதிகமான உரம் இட்டால் அதிக உற்பத்தியைக் காணலாம். ஆனால் உரம் விற்பனையாவதிலும் ஓரளவு கஷ்டம் இருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அரசாங்கம் உரம் சப்ளை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் அப்படி கொடுக்கக்கூடிய உரம் விவசாயிகளுக்கு சௌகரியமாக கிடைக்கவில்லை. ஆனால் தனிப்பட ஓபன் மார்க்கெட்டில் உரம் வாங்குவதாக இருந்தால் வேண்டிய அளவு கள்ள மார்க்கெட் விலைக்குக் கிடைக்கிறது. ஆனால் அந்த அளவு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாங்குவதாக இருந்தால் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் என்னவென்பதை அரசாங்கம் ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஓபன் மார்க்கெட்டில் அதிகமான விலை கொடுத்தால் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை அரசாங்கம் கவனிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு விநியோகிக்கக்கூடிய விதிகள் சரியாக இல்லையா என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

[Sri K. Ramachandran] [8th December 1959

இதைப்போலவே பூச்சி மருந்துகளும். இவைகளும் நியாய விலைக்கு வாங்குவதாக இருந்தால் சுலபமாகக் கிடைக்கவில்லை. தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்குவதாக இருந்தால் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. இதற்கும் என்ன காரணம் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். ராமனாதபுரம் பகுதியில் எப்பொழுதும் போல் இல்லாமல் இந்த வருஷம் வேண்டிய மழை பெய்திருக்கிறது. இருந்தாலும் பயிர்களுக்கு பூச்சி தொல்லை அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய மருந்து சப்ளை செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி செய்யவில்லையானால் மழை பெய்தும் அந்த மாவட்டத்திற்கு பயன் இல்லாமல் போவதற்கு இடம் இருக்கிறது. அங்கே பூச்சி மருந்துகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே நியாய விலைக்கு பூச்சி மருந்துகளை சப்ளை செய்வதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக கவர்னர் உரையில் மூன்றாவது ப்ளானைப்பற்றி சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 166 கோடி ரூபாய் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் செலவு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது மகிழ்ச்சி தரக்கூடியதாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்த அளவுக்கு மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாகத் தெரியவில்லை. இதிலும் ஒரு விஷயம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயாரிக்க சட்டசபையில் எல்லா கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து திட்டத்தை தயாரிக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அது ரொம்பவும் வரவேற்கத்தக்க விஷயம்தான். அது மகிழ்ச்சி தரக்கூடியதாகத்தான் இருக்கிறது. ப்ளானை தயாரித்து விட்டு அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு முடிவு செய்யாமல் ப்ளான் தயாரிப்பதற்கே கமிட்டியின் ஆலோசனைக் கேட்டு தயாரிக்க வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லோரும் கூடி விவாதித்த பிறகுதான் ப்ளானை தயாரிக்க வேண்டும். அத்துடன் பக்கத்து ஸ்டேட்டிலிருந்து வரக்கூடிய உபரியான தண்ணீரை எடுத்து நம்முடைய ராஜ்யத்தில் விவசாயத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்றும் சொல்லப்படுகிறது. அதுவும் சந்தோஷம் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. அதைப்பற்றியும் நல்ல முறையில் தீவிரமாக விவாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி ப்ளானை தயாரிப்பதற்கு முன்னதாகவே ஆலோசனை செய்து திட்டங்களை தயாரித்தால் அது உங்களுக்கு மட்டுமல்ல பொதுவாக மந்திரி சபைக்கே நல்லதாக இருக்கும். அதன் பிறகு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எந்தவிதமான சங்கடமும் இருக்காது.

அதே மாதிரி இப்பொழுது அப்பர் பெரியாறு திட்டம் இருக்கிறது. அந்த திட்டத்தை நாம் அவசியம் மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் ராமனாதபுரம், மதுரை, திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களுக்கு நல்ல பயன் தரும். அது பெரிய பயன் தரக்கூடிய நிலையில் இருக்கிறது. ஆகவே அந்த திட்டத்தை



8th December 1959] [Sri K. Ramachandran]

அவசியம் எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த திட்டத்தை அவசியம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதன் மூலம் சுமார் ஐந்து அல்லது ஆறு லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி அடைய இருக்கிறது. எப்பொழுதும் பஞ்சப் பிரதேசமாக இருக்கக்கூடிய ராமனாதபுரம் ஜில்லா அதன் மூலம் நல்ல பயனடைய முடியும். இந்த வருஷம்கூட வைகையில் அதிகப்படியான தண்ணீர் வந்து அது வேஸ்டாக கடலில் போவதாகக் கேள்விப்படுகிறோம். ஆகவே இந்த திட்டத்தை எடுத்து விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வைகை ப்ராஜெக்டிலிருந்து ராமனாதபுரத்திற்குத் தண்ணீர் கொடுத்து வந்தார்கள். அது இப்பொழுது சாத்யமில்லை என்று சொல்வதாகத் தோன்றுகிறது. அப்படி இல்லாமல் அந்தப் பிராந்திய மக்களுக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய அளவில் வசதி செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அறுவடை காலங்களில் அவர்களுக்கு தண்ணீர் கொடுத்தால்தான் அங்குள்ள மக்கள் சௌகரியமாக வாழ முடியும். அத்துடன் அங்குள்ள கால்வாய்கள் அநேக காலமாக மராமத்து செய்யப்படாமல் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் அல்லது இருபதாயிரம் ஏக்கர் பாயக்கூடிய கண்மாய்களெல்லாம் மேடிட்டு கிடக்கின்றன. ஓரக்கால் போன்ற கால்வாய்கள் எல்லாம் மேடிட்டிருப்பதால் வைகையில் தண்ணீர் வரக்கூடிய காலங்களில் தண்ணீர் எல்லாம் பயிர்களுக்கு பாய்ச்ச முடியாமல் தண்ணீரெல்லாம் கடலில் போய் விழுந்து விடுகிறது. அந்த நிலைமையில் அநேகம் கால்வாய்கள் துரஸ்து செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவைகளையும் எடுத்துச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதைத் தவிர உணவு பொருள்களின் விலை ஏற்றத்திற்குக் காரணம் ரோடு வசதிகள் இல்லாமல் இருப்பதும் ஒன்றாகும். உணவு பொருள்களை பல இடங்களுக்கு எடுத்துச்செல்ல ரோடு வசதி அவசியம் வேண்டியதாக இருக்கிறது. நல்ல ரோடுகளாக இருந்தால் ரொம்பவும் வசதியாக இருக்கும். அப்படி நல்ல ரோடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இம்மாதிரி சில விஷயங்களில் கண்டிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRIMATHI KOLANTHAI AMMAL: கனம் சட்டமன்றத் தலைவி அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் ஒரு சில கருத்துக்களை நானும் சொல்ல விரும்புகிறேன். 11 a.m.

நம்முடைய மாகாணம் முழுவதும் நல்ல மழை பெய்து, விவசாய மக்கள் ஓரளவு திருப்தியாக இருக்கிற இந்த நேரத்திலே; நாட்டிலே வான் சிறப்பு நன்றாக இருந்தால்தான் மக்களும் சுபிட்சமாக வாழ்வார்கள் என்ற வள்ளுவன் கருத்தை அடிப்படையாகக் கொண்டு பருவ மழையைப்பற்றி கவர்னர் அவர்கள் தம் உரையின் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே நாட்டை நல்ல முறையில் ஆளும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத ஒரு கடமையை நிறைவேற்றும் முறையில் இந்தப் பருவ மழையைப் பற்றிய குறிப்பை அவர்கள் எடுத்த எடுப்பில் தந்திருப்பதற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முறையில்தான் இன்று நம்முடைய மாகாணம் முழுவதும் பெரிய நீர்ப்பாசன வசதிகள் மூலமாகவும், சிறிய நீர்ப்பாசன வசதிகள் மூலமாகவும் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் பல்வேறு விவசாயிகளுக்கு நீர் பற்றாக்குறை இருக்கிறது என்ற பேச்சில்லாமல் ஓரளவு நல்ல திருப்தியாக இருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். அதேசமயத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் ஓரளவு விலை ஏறியிருக்கிறது. அதனால் மாதா மாதம் நிரந்தரச் சம்பளம் வாங்கும் ஊழியர்கள் குறிப்பாக ஆசிரியர்கள், சர்க்கார் ஊழியர்கள், க்ளார்க்குகள் இவர்கள் எல்லாம் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இன்னும் குறிப்பிட்ட குறைந்த வருமானத்தைக் கொண்டிருக்கும் பல்வேறு தொழிலாளர்கள், எதிர்பாராமல் விஷம் போல ஏறிக்கொண்டிருக்கிற விலைவாசிகளினால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரிசி, பருப்பு, புளி, மிளகாய் போன்ற அன்றாட உபயோகத்திற்குத் தேவையான பொருள்களின் விலை ஏறியிருப்பது காரணமாக அரசாங்கத்தின் மேலேயே அதிருப்தியாக அவர்கள் பேசுவதை நாம் பார்க்கிறோம். இந்த முறையில் எதிர்பாராத முறையில் விவசாயப் பண்டங்களின் விலையும் சரி, மற்ற பொருள்களின் விலையும் சரி ஏறிக்கொண்டு போவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். காரணம் ஒருபக்கம் உற்பத்தி செய்கின்ற எல்லா விவசாயிகளுக்கும் இந்த லாபமானது நேரிடையாக கிடைக்கின்றது, ஓரளவு எல்லா விவசாயிகளும் நன்மை அடைகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் குறைந்த ஊதியத்தை மாதாமாதம் பெறுகின்ற, குறிப்பிட்ட வரும்படியை உள்ளவர்கள் கடன் இல்லாமல் வாழ்கின்ற வாழ்வு இல்லையே என்று ஏக்கமுற்று இருக்கும்படியான இந்த நேரத்தில் விலையேற்றத்தைக் கண்டு வருந்தாமல் இருக்கமுடியாது. ஆகவே விலைவாசிகள் எதிர்பாராத அளவு ஏறிக்கொண்டு போவதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விவசாயிகளுக்குக் கடன் வசதி செய்வதிலே நம் அரசாங்கம் ஏராளமான பொருள்களை வாங்கி வழங்குகிறது. அந்தச் சிறந்த தாராளமான மனப்பான்மைக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். ஆனால் எத்தகைய விவசாயிகள் இந்த நல்ல கடன் வசதியைப் பெறுகிறார்கள் என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கிறபோது





போதுமான அளவு யார் செக்யூரிட்டி கட்டத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்கள்தான் பெறுகிறார்கள். போதுமான அளவு செக்யூரிட்டி கட்டக்கூடியவர்கள் பெரும் பணக்காரர்களாக இருக்கிறார்கள். அதிக நிலம் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் குறைந்த நிலம் உடையவர்கள், நிலம் இல்லாது, பணம் இல்லாது கஷ்டப்படுகிற விவசாயிகள் கடன் வசதியும் பெற முடியாமல்தான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறைந்த வட்டிக்கு கடன் சர்க்காரே விவசாயிகளுக்கு வழங்க முன் வந்தாலும் கூட இதனால் சிறுசிறு விவசாயிகளுக்குப் பயன் இல்லாது போய்விட்டது. இன்றைக்கு நூற்றுக்கு பத்து பேர்களுக்குக் கூட இத்தகைய கடன் வசதி கிடைப்பது கிடையாது. ஆகவே நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று கடன் கொடுக்கிற நேரத்தில் எல்லா விவசாயிகளுக்கும் இந்த வசதி போய்ச் சேரவேண்டும் என்கிற மனப்பான்மை நம் அரசாங்கத்தில் இருக்கிறவர்களுக்கு கலெக்டரில் இருந்து தாசில்தார் வரைக்கும் உள்ளவர்களுக்கு வரவேண்டும். அவர்கள் இன்னும் கடன் கொடுப்பதற்கு கொடுக்கப்படுகிற தொகையைப் போல மூன்று மடங்கு செக்யூரிட்டி கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே இந்த வசதியைப் பெறுகின்றவர்கள் நிறையப் பணம் உடையவர்கள்தான். அதனால்தான் விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். பணக்காரர்களுக்குக் கடன் வசதி கிடைக்காவிட்டாலும் கூட ஏழை எளிய விவசாயிகளுக்கு எல்லாம் கடன் வசதி கிடைக்கும்படியாக இந்த திட்டத்தில் சிற்சில மாறுதல்களைச் செய்ய வேண்டும்.

அதற்குமேல் விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய உரம் பற்றாக்குறையாக இருப்பதற்குக் காரணம் இறக்குமதி தடைப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இறக்குமதிக்காக செலவழிக்கக்கூடிய பணத்தைப் போட்டு உள்நாட்டிலேயே இப்படிப்பட்ட சிறந்த பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற முறையில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறோம் என்பதற்காக விவசாயிகளும் நல்லமுறையில் தங்களுடைய பாராட்டுதலை சர்க்காருக்குத் தெரிவிக்கிறார்கள். விவசாயிகளுக்கு மிகவும் இன்றியமையாத தேவையாக இருப்பது ரசாயன உரம். ஆகவே அந்த ரசாயன உரத்தை சீக்கிரத்தில் உற்பத்தி செய்வதற்கு விரைவில் நல்லதொரு திட்டத்தை நல்லமுறையில் கொண்டு வரவேண்டும். அது விவசாயிகளுக்குப் பெரும் உபகாரமாக இருக்கும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் நாட்டிலே பணப் பற்றாக்குறைப் பஞ்சம் அதிகமாக ஏற்படாமல் இருக்கவேண்டுமானால் தொழில் துறையில் அதிக முன்னேற்றம் ஏற்படவேண்டும். தொழிற்சாலைகள் பல ஏற்பட்டாக வேண்டும். இன்றைக்கு ரயான் தொழிற்சாலையை மேட்டுப்பாளையத்திலும், அலுமினியத் தொழிற்சாலையை சேலத்திலும், சிமிண்டு தொழிற்சாலையை ராமநாதபுரத்திலும் ஏற்படுத்தி ஓரளவு இன்னும் அதிகத் தொழில் அபிவிருத்தி ஏற்படச் செய்தால்தான்

இப்படிப்பட்ட பஞ்சம் குறைய முடியும் என்று கருதுகிறோம். அப்படித் தொழில் அபிவிருத்தி செய்யும்போது நம்முடைய நாட்டிலே சிறிய பொருள்களுக்கு நிறைந்த மார்க்கெட்டை உண்டாக்கி, மற்ற நாடுகளுக்கும் அந்தப் பொருள்களை அனுப்புவிப்பதன் காரணமாக நம் நாட்டிலே ஓரளவு அதிகப் பணத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு உதவியாக இருக்கும். இதனால் விவசாயத்துறையிலும், தொழில் துறையிலும் நம் நாடு அதிக முன்னேற்றத்தை அடைய முடியும். அதற்கும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இன்னும் நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொண்டால் பல்லடம் தாலுக்கா, கோயம்பத்தூர் தாலுக்கா, தாராபுரத்தில் ஒரு சிறு பகுதி ஆகிய என்னுடைய தொகுதி அபிவிருத்தி இல்லாமல் தான் இருந்து கொண்டிருக்கிறது. பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் எதுவும் அங்கே கிடையாது. சிறிய நீர்ப்பாசன திட்டங்களை அமுல் நடத்துவதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் அதை நடைமுறைக்குக் கொண்டுவர தக்க ஏற்பாடுகளை துரிதமாகச் செய்யவில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் எவ்வளவு அக்கறை காட்டுகிறோமோ அது நல்ல பயன் தரவேண்டுமானால் இந்தச் சிறிய பாசன திட்டங்களில் துரிதமாக நல்ல கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் மிகவும் பிற்போக்காக இருக்கிற எங்கள் தாலுக்காக்களில் எல்லாம் சீக்கிரத்தில் சிறிய நீர்ப்பாசன திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். சிறப்பாக என்னுடைய தொகுதி பல்லடம் தாலுக்கா, கோயம்பத்தூர் தாலுக்கா பெரிய பாசன வசதி எதுவும் பெறாத ஒரு தாலுக்கா. ஆகையால் பெரிய நீர்ப்பாசன வசதி எதுவும் இல்லாத இந்தத் தாலுக்காக்களுக்கு சிறிய நீர்ப்பாசன வசதிகள் மூலமாக நாம் போதுமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உபயோகப்படுத்தக் கூடிய மின்சாரத்திற்குக் கட்டணம் மூன்று மாத செக்யூரிடி கட்டவேண்டும் என்று செய்திருக்கிறார்கள். முன்பு இரண்டு மாத செக்யூரிடி தான் இருந்தது. அதை மூன்று மாதம் கட்ட வேண்டும் என்று வைத்திருப்பதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மூன்று மாதம் செக்யூரிடி என்றால் கிட்டத்தட்ட 300 ரூபாய் விவசாயிகள் கட்ட வேண்டியிருக்கிறது. அது மிகவும் கஷ்டமாக இருக்கும். இதனை பலமுறைகள் வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஆகவே பழையபடி 2 மாதம் செக்யூரிடி கட்டினால் போதும் என்று செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு புறம் பலவகையில் விவசாயிகளுக்கு அனுகூலம் செய்துகொண்டு வருவதோடு கூட இன்னொரு பக்கம் இதுமாதிரியாக விவசாயிகளிடம் இருந்து பணத்தை வாங்குவது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகவே, இதில் அவர்களுக்குக் கொஞ்சம் சலுகை கொடுக்க வேண்டும் என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.





அடுத்தபடியாக, நில உச்ச வரம்பு கட்டும்போது அதிக நிலம் உடைய விவசாயி குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும், ஆடவர்களைப் போலவே தங்கள் நிலம் என்று வைத்துக்கொள்ள உரிமை அளிக்கப்பட வேண்டும். உத்தியோகத்தில் இருந்து சம்பாதிக்கிற பெண்களைப் போலவே பெரிய விவசாய குடும்பத்தில் வாழ்ந்து வருகிற பெண்களுக்கும் தங்களுக்கு என்று உரிமையை வைத்துக் கொள்ள இந்தச் சட்டத்தில் தடை இருக்கக்கூடாது. சம்பாதிக்கிற பெண்கள் வாழ்விலே எப்படி ஒரு திருப்தியுடன் சந்தோஷமாக இருக்கிறார்களோ அப்படியே இவர்களும் இருப்பதற்கு வசதி இருக்கவேண்டும். இன்றைக்கு பெண்களுக்கு பேச்சு உரிமை, எழுத்து உரிமை என்றெல்லாம் கொடுத்துவிட்டு சொத்து உரிமை மட்டும் கொடுக்காமல் இருந்தால் சரியான ஜனநாயக ஆட்சியாகாது. ஆகவே நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும்போது கணவனுக்கு என்பதுபோல மனைவிக்கும் ஓரளவு இருக்கவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** பெண்களுக்கு உரிமை உண்டென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. மனைவி வேறு, கணவன் வேறாக இருந்து, தனித்தனி குடும்பம் என்று நடத்துகிறார்களா அல்லது ஒரு குடும்பமாக இருந்து நடத்துகிறார்களா என்பது தான் பிரச்சனை.

**SRIMATHI KOLANTHAI AMMAL:** குடும்பத்திற்கு உச்ச வரம்பு என்று சொன்னாலும் கணவன் பேருக்கு 40 ஏக்கர் என்று உச்ச வரம்பு கட்டுவதாக வைத்துக் கொண்டால் பெண்களுக்கு அந்த 40 ஏக்கரில் ஒரு 10 ஏக்காராவது இல்லையென்று சொன்னால் கணவன் சொத்தை விற்பதற்கு பெண்களுக்கு உரிமையில்லாது போய்விடும். ஆகவே ஐந்து நபர்கள் அடங்கிய ஒரு குடும்பம் என்று சொல்லி உச்சவரம்பு கட்டும்போது அதில் பெண்களுக்குள்ள பகுதி என்னவென்று தீர்க்கமாக எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதை பல விவசாயக் குடும்பப் பெண்கள் வரவேற்கிறார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அடுத்தபடியாக, கோயம்பத்தூர் நகரத்தைப் பொறுத்த வரையில் ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கோயம்பத்தூர் ஒரு சிறந்த முன்னேற்றமான நகரம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் குடி தண்ணீர் திட்டத்திற்காக டெல்லி அரசாங்கமும், நமது சென்னை மாநிலமும் ஏராளமான பணம் செலவழிக்கும் இந்த நேரத்தில் கோயம்பத்தூர் வட்டாரத்தில் தண்ணீர் இல்லாமல் 50 சதவீதம் பேர்கள் கஷ்டப்படுகிறார்கள் ஆகவே குடி தண்ணீர் திட்டத்தை சீக்கிரமாக விஸ்தரிக்கச் செய்ய கோயம்பத்தூர் நகரசபையைப் பொறுத்த வரையில் எந்த அளவிற்கு கடன் வசதியோ அல்லது மான்யமாகவோ கொடுத்து சிறுவாணி ஆற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டு வர ஒத்துழைக்க வேண்டும். கோயம்பத்தூர் நகரத்தின் ஜலதாரை அந்த நகரத்தின் சிறப்பையே கெடுத்து விடுகிறது. அதற்கு ஒரு அண்டர் கிரௌண்ட் டிரெயினேஜ் கட்ட

[Srimathi Kolanthai Ammal] [8th December 1959

நல்லதொரு திட்டம் வகுக்கப்பட வேண்டும். அப்படியில்லையென்று சொன்னால் அங்குள்ள சுத்தம், சுகாதாரம் இவைகள் பாதுகாக்கப்படவில்லை என்ற அளவுக்குத்தான் வரும். ஆகவே நகரத்தைப் பொறுத்தவரையில் நல்லகுடி தண்ணீர் திட்டத்தையும் சாக்கடை வசதியையும் நல்ல முறையில் செய்து தருவதற்கு வேண்டிய பணம் ஒதுக்குவது நமது அரசாங்கத்தின் கடமையாகும். கடைசியாக, தாலுகா ஆபீஸ், கலெக்டர் ஆபீஸ், ஆசிரியர்கள், போலீஸ் இலாகாவில் இருக்கிறவர்கள் இவர்களைப் போன்ற கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் வேலை செய்கிற இடங்களில் சிலபேர்களிடமிருந்து இன்சார்ஜ் என்று சொல்லி ஆறு மணி நேரம், எட்டு மணி நேரம் என்று அதிகப்படியான வேலை வாங்குகிறார்கள். ஒன்றல்லது இரண்டு என்றிருந்தால் பரவாயில்லை. அப்படி கூடுதல் வேலை வாங்கிவிட்டு அவர்களுக்கு ஸ்பெஷல் பே அல்லது சிறிய அலவன்ஸ் கூட கொடுக்காமல் அதிகப்படியான வேலை வாங்குகிறார்கள். அவர்களுக்கு போதுமானபடி அதிக ஊதியமும் கிடைப்பதில்லை. ஆகவே அவர்களுக்கு ஓரளவு சலுகை காட்ட வேண்டுமென்று கூறிக்கொண்டு நமது மாகாணத்தின் சுபிட்சமான இந்த நேரத்தில் விலை வாசிகள் ஏற்றத்தைத் தடுப்பதற்காக அரசாங்கம் சீக்கிரமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபையின் முன் கொண்டு வந்திருக்கும் கவர்னர் பெருமான் அவர்களின் உரையை வரவேற்று சிற்சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். இரண்டாவது திட்டத்தில் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் ஏற்பட்டு பல சிறிய தொழில்கள், பெரிய தொழில்கள், நீர்ப்பாசனம், மின்சார வசதிகள், இவைகள் அனைத்தும் பெரிய அளவில் கூடுமான வரையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று அவர்கள் கூறியிருப்பதை இந்த சபையிலுள்ள யாரும் மறுக்க முடியாது. அவைகள் எல்லாம் நடந்த விஷயங்களே தவிர மேலும் நடக்கப் போவதையுந்தான் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இங்கு பல அங்கத்தினர்கள் சரியானபடி திட்டங்கள் போடவில்லை என்றும், நமது மாகாணத்தில் உணவுப் பற்றாக்குறை தீர்ந்தபாடில்லாமல் விலைவாசிகள் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறதென்றும் விவாதம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. வாஸ்தவத்தில் விலைவாசிகள் ஏறிக்கொண்டு போகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. அது, ஒத்துக்கொள்ள வேண்டிய ஒன்றுதான். இப்படி விலை ஏறிப் போவதற்கு என்ன காரணம்? அரசாங்கம் இரண்டாவது திட்டத்தில் சொல்லியபடி 152 கோடிக்கு திட்டம் போட்டு வேலை செய்ய முன் வந்திருக்கிறது. அதோடு திட்ட முடிவில் 166 கோடி செலவாகக் கூடிய முறையில் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றித்தான் இருக்கிறார்கள். அதை மறுப்பதற்கில்லை. உணவு விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் இரண்டாவது



8th December 1959] [Sri M. R. Kandaswami Mudaliyar]

திட்டப் பிரகாரம் அதன் முடிவில் 1,279,000 டன் என்று சொன்னால் இந்த மூன்று வருடத்தில் 639,000 டன் உணவு தான்யம் உற்பத்தியாகித்தான் இருக்கிறது. அதை மறுக்க முடியாது. அந்த அளவிற்கு நீர் வசதிகளையும், பாசன வசதிகளையும் அதிகப்படுத்தியிருக்கிறோம். அந்தத் துறையில் உபரியாகத்தான் தான்யங்கள் விளைந்து கொண்டிருக்கிறது. அப்படி கூடுதல் உற்பத்தியாகியும் கூட விலைவாசிகள் ஏன் ஏறிக் கொண்டேயிருக்கிறது, குறையவில்லை என்று கேட்டால் விலைவாசி ஏறிக் கொண்டிருப்பதினால் உற்பத்தியாகவில்லை என்று சொல்ல முடியுமா, அப்படி சொல்ல முடியாது. திட்டங்கள் நல்ல முறையில் நடந்து வெற்றிகரமாக முடிந்திருக்கிறது. அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை பூராவும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் விலைவாசி ஏன் ஏறிக்கொண்டு போகிறது என்று பார்க்கும் காலத்தில் கவர்னர் பெருமான் அதுபற்றி ஒரு விஷயத்தை குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு பண வீக்கம் அதிகமாக இருப்பது, விலையேற்றத்திற்கு ஒரு காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை, ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். ஏனெனில், அப்படி இல்லையென்று சொன்னால் உணவு தான்ய விஷயத்தில் இன்று பற்றாக்குறையிருக்கிறது என்று சொன்னால் உணவு தான்யங்கள் கிடைக்காமல் இருக்க வேண்டும். உணவு தான்யங்கள் கிடைக்கத்தான் கிடைக்கிறது. ஆனால் விலை மட்டும் ஏறியிருக்கிறது, பண வீக்கம் காரணமாக. விலையைக் குறைக்க வேண்டுமென்று பல அங்கத்தினர் கூறுகிறார்கள். வாஸ்தவத்தில் விலையை குறைப்போமேயானால், இன்றைக்கு விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளின் நிலையை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இங்கு நாம் பேசும்போது, தொழிற்சாலைகளிலும், ஆபீஸ்களிலும் மாதம் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் வாங்குகிறவர்களை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு குறைப்போமேயானால், இன்றைக்கு விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளின் நிலையை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இங்கு நாம் பேசும்போது, தொழிற்சாலைகளிலும், ஆபீஸ்களிலும் மாதம் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் வாங்குகிறவர்களை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு பேசினால் அது பொருத்தமுடையதாகாது, அது பொருத்தமற்ற செயல். ஒரு விவசாயியை எடுத்துக் கொண்டாலோ, அல்லது ஒரு நெசவாளியை எடுத்துக் கொண்டாலோ, அல்லது ஒரு விவசாயத் தொழிலாளியை எடுத்துக் கொண்டாலோ அவர்கள் மாதம் 20, 30 அல்லது ஐம்பதுக்கு மேல் சம்பாதிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் அதிகமாக சம்பாதித்தாலும்கூட மாதத்திற்கு ஐம்பதுக்கு மேல் சம்பாதிக்க முடிவதில்லை. ஆனால் 100, 200, 300 ரூபாய் என்று மாதா மாதம் சம்பளம் வாங்குகிறவர்கள் உணவு விலையேற்றம் காரணமாக நாங்கள் கஷ்டப்படுகிறோம் என்று சொன்னால், அவர்களுக்கும் கஷ்டம் இருக்கிறது. இல்லையென்று நான் மறுக்கவில்லை. அவர்களுக்கு அதிகம் கொடுக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை—அது சரியல்ல. ஐம்பது

ரூபாய்க்கு மேல் சம்பாதிக்க முடியாத இந்த ஏழைத் தொழிலாளிகளின் நிலையை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாதம் 200 ரூபாய் சம்பளம் வாங்குகிறவன் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று வாங்கிக் கொண்டு போகும்போது ஐம்பது ரூபாய்க்கும் குறைவாக சம்பாதிக்கும் ஒரு ஏழை விவசாயத் தொழிலாளி கடைக்குப் போனால் அவனுக்கு என்ன ரூபாய்க்கு நாலு படி அரிசியா கொடுக்கிறார்கள்? என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, அந்த ஏழை மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு நாம் வழிவகை காண வேண்டும், மாதா மாதம் உயர்ந்த சம்பளம் வாங்குகிறவர்களின் கஷ்டத்தைப் பார்ப்பதை விட விவசாயிகள், நெசவாளி, விவசாயத் தொழிலாளி இவர்களின் வருவாயைப் பெருக்குவதற்கு வழிவகைகள் தேட வேண்டும். அப்படி பார்க்கும்போது இந்த விலையேற்றம் காரணமாக விவசாயிகளுக்கு ஓரளவு பலன் ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இல்லையென்று மறுக்க முடியாது. ஒவ்வொரு கிராமத்திலும் சொஸைட்டிகள் ஏற்படுத்தி, மிகுதி தான்யத்தை அங்கு வைத்து நல்ல விலை கிடைக்கும்போது அதை விற்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் விவசாயிகளுக்கு கடன் வசதிகள் போன்றவைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இதன் பலனை எல்லோரும் அடைகிறார்கள் என்று சொல்ல முடியாது, ஒரு சிலருக்குத்தான் அந்த பலன் கிடைக்கிறது. ஆகவே, உணவு தான்யங்களின் விலையை நிர்ணயம் செய்யவேண்டும், அவைகளின் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லும்போது ஏழை விவசாயிகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே நான் சென்ற பட்ஜெட் உரையின் விவாதத்தின்போது சொன்னபடி விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்காமல் உணவு தான்யங்களின் விலையை மட்டும் குறைக்க முற்பட்டால் விவசாயி ஒருவனும் விவசாயம் செய்ய முன் வரமாட்டான் என்பதை அரசாங்கம் நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு தடவை கூட நினைவூட்ட விரும்புகிறேன். காரணம், விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி தேடாமல் அவர்களுக்கு பலவித சிக்கல்களை உண்டாக்கிக் கொண்டிருந்தால் அவர்கள் எல்லோரும் நகரங்களை நோக்கி வந்து தங்களது வாழ்க்கையை நல்ல முறையில் நடத்த விரும்புவார்களே தவிர இன்றிருப்பதைப் போல் கஷ்டப்பட்டுக் கொண்டே உற்பத்தியை பெருக்கிக் கொண்டிருக்க விரும்பமாட்டார்கள் என்பதை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த நிலைமையில் கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய நிலைமைகளை எல்லாம் அரசாங்கம் கவனித்துப் பார்த்து பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி கிராமப்புறங்களில் கஷ்டப்படக்கூடிய விவசாயிகளுக்கும் மற்றுமுள்ள நெசவாளர்களுக்கும் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றுள்ள நிலைமையில் விவசாயம் செய்பவர்களுக்கு உரம், உணவு தான்யங்களுக்கான விதைகள் இவைகள் எல்லாம் சர்க்காரிலிருந்து நியாயமான விலைக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.



அதோடு கடன் வசதியும் கொடுக்கப்பட்டு வருகிறது. இவைகளை எல்லாம் எல்லா விவசாயிகளும் நல்ல முறையில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் நம்முடைய அதிகாரிகள் தான். நான் என்.ஜி.ஓ.க்களின் பேரில் குறை சொல்லுகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். கிராமங்களில் இருக்கும் விவசாயிகள் கணக்குகள் எல்லாம் காண்பித்து உரம் அல்லது வேறு ஏதாவது கடன் வசதி பெற வேண்டுமானால் குறைந்தது இருபத்தி ஐந்து ரூபாய் அல்லது ஐம்பது ரூபாய் இந்த அதிகாரிகளுக்கு இனாமாக கொடுக்க வேண்டியிருக்கிறது. இவ்விதம் கொடுத்தால் விவசாயிகள் இந்த வசதிகளை எல்லாம் பெற முடிகின்றது. அதோடு இந்த வசதிகளை பெறுவதற்காக ஆபீஸ் அதிகாரிகளிடத்தில் எட்டு நாட்கள் பத்து நாட்கள் அலைய வேண்டியிருக்கிறது. இதற்கும் சுமார் 25 ரூபாய் வரை செலவாகிவிடுகிறது. இதையெல்லாம் பார்த்து இந்த தொல்லைகளும் வேண்டாம் இந்த கடன் வசதியும் வேண்டாம் என்று சும்மா இருந்து விடுகிறார்கள். இந்த நிலைமை இருந்து கொண்டிருந்தால் எந்த காலத்திலும் விவசாயி அடமானம் வைத்துக்கொண்டு உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு முன் வரமாட்டான் என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் அரசாங்க அதிகாரிகள் உணர்ந்து விவசாயி என்றால் அவர்கள் படிக்காத கீழ்தரமான மனிதர்கள் என்று கருதாமல், அவர்கள்தான் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு போன்றவர்கள் என்பதை மனதில் வைத்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் உடனுக்குடன் செய்து கொடுப்பதற்கு அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். இதற்கான ஒரு திட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, கவர்னர் அவர்களது உரையில் பருவ மழை எல்லா இடங்களிலும் சாதகமாகவே பெய்திருக்கிறது, ஒன்றிரண்டு ஜில்லாக்களில் மட்டும் சரியானபடி பெய்யவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பருவ மழை பெய்யாத சேலம் ஜில்லாவை மனதில் கொண்டுதான் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சேலத்திற்கு சமீபத்தில் வந்திருந்த கவர்னர் அவர்களே இதை நேரில் கண்டதினால்தான் இதை சேர்த்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சேலம் ஜில்லாவானது மிகவும் பிற்பட்ட நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. சேலம் ஜில்லாவில் காவேரி ஓடினாலும் கூட இதனுடைய முழு பயனை எல்லாம் தஞ்சாவூர் ஜில்லாவாசிகளும் திருச்சினாப்பள்ளி ஜில்லாவாசிகளும் தான் பெறுகிறார்கள். சேலம் ஜில்லாவிலுள்ளவர்கள் குடி தண்ணீருக்குக்கூட கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. சேலம் ஜில்லாவிலுள்ளவர்கள் குடி தண்ணீர் கிடைக்காமல் ஒரு குடம் தண்ணீர் ஒரு அணா என்று விலை கொடுத்து வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை நாம் நீக்கியாக வேண்டும். டெல்டா பிரதேசங்களிலுள்ள தண்ணீரை எல்லாம் சேதப் படுத்தாமல் மக்களுக்கு பயன் படுத்தப்பட வேண்டும் என்கிற அளவில் சேலம் ஜில்லாவில்

மக்களுக்கு பயன்படக்கூடிய முறையில் ஒரு திட்டத்தை அமுல் செய்ய வேண்டும் என்று மனு கொடுத்திருக்கிறோம். அதை பரிசீலனை செய்து காவேரி ஆற்றிலிருந்து தண்ணீரை மங்கலாபுரம் ஏரியில் கொண்டு வந்து சேர்த்து அங்கிருந்து கிளைகள் மூலமாக வீரபாண்டி தாலூகாவிற்கும், ராசிபுரம் தாலூகாவிற்கும் பயன் படும்படியாக செய்தால், அங்குள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பாசன வசதி பெற முடியும். குறிப்பாக அந்த இடத்தில் இம்மாதிரியான ஒரு பாசன வசதி கிடைப்பதாக இருந்தால் குறைந்தது 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் ஏக்கர்கள் சாகுபடிக்கு கொண்டுவர முடியும்.. இதன் மூலமாக அங்குள்ள விவசாயிகளும் நல்ல முறையில் வளம்பெற முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் திருச்செங்கோடு, நாமக்கல், ராசிபுரம் போன்ற பகுதிகளில் குடி தண்ணீர் கிடைக்காமல் ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நீக்குவதற்கு ஏதாவது ஒரு திட்டத்தைப் போட்டு நிறைவேற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். சேலம் ஜில்லாவிலுள்ள விவசாயிகள் எல்லாம் சாகுபடிக்கு சரியானபடி தண்ணீர் கிடைக்காததின் காரணமாகவும், பருவ மழை சரியாக பெய்யாததின் காரணமாகவும் அவர்கள் புஞ்சை விவசாயத்தையே நம்பிக்கொண்டிருக்கவேண்டியதாக இருக்கிறது. இவ்விதம் போய்க்கொண்டிருந்தால் அவர்களுடைய வாழ்க்கை சீக்கிரமாகவே பாழ்பட்டுப் போய்விடும் என்பதோடு மட்டுமல்ல, அங்குள்ள லட்சக் கணக்கான குடும்பங்கள் அந்த ஜில்லாவை விட்டே வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு, நெசவாளர்களுக்கும் பெரிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்போதுள்ள நிலைமையில் நூல் அதிகப்படியாக தேங்கிக் கிடக்கிறது என்ற காரணத்தின் பேரில் மில் முதலாளிகள் நூல்களை எக்ஸ்போர்ட் செய்வதற்கு பெர்மிட் வாங்கி வெளியே அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் ஏற்றுமதி செய்வதற்கு பெர்மிட் வாங்கின உடனேயே நூலின் விலை கட்டின் பேரில் நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் விலை ஏறிவிடுகிறது. 18 ரூபாய் என்றிருக்கிற விலை 23 ரூபாய் 23½ ரூபாய் என்று விலையேறிவிடுகிறது. இதன் காரணமாக கைத்தறி ஜவுளிகள் எல்லாம் தேங்கிவிடுகின்றன. தனிப்பட்ட விவசாயி விற்கும் விலையையும் கட்டமுடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே ஏற்றுமதி செய்யப்படும் நூலின் கணக்கை நல்ல முறையில் கண்காணித்து அதற்குத் தகுந்தபடி ஏற்றுமதிக்கு பெர்மிட் கொடுக்கவேண்டும் என்ற முறை இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பெர்மிட் கொடுத்த ஒன்றிரண்டு நாட்களுக்குள்ளாகவே நான்கைந்து ரூபாய் ஒரு கட்டின் பேரில் விலை ஏறிவிடுகிறது. மில் முதலாளிகள் தங்களுக்கு பணத்தை சேகரிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இவ்விதம் செய்து வருகிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை, இல்லையானால் இவ்விதம் திடீரென்று விலை உயருவதற்கு காரணம் என்ன? ஆகவே மில் முதலாளிகள் தங்களுடைய லாபத்திற்காக எதையும் செய்ய தயாராக இருந்து கொண்டிருக்கிறார்கள். சர்க்காரும் அவர்களுக்கு உடனடியாக பயந்து விடுகிறது. அதே போன்று மில்களில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்யப்போகிறார்கள் என்றால் அரசாங்கம் உடனே பயந்து எதை வேண்டுமானாலும் செய்து கொடுத்துவிடுகிறது. ஆனால் அவர்களைக் காட்டிலும பெருவாரியாக இருக்கிற 60, 70 லட்சம் குடும்பங்களின் நிலைமையை அரசாங்கம் கவனிக்கவில்லை என்றால் அவர்களும் ஸ்டிரைக் செய்யக்கூடிய நிலைமைதான் வந்து சேரும். இதன் காரணமாக அரசாங்கம் பல தொல்லைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும். ஆகவே ஒரு சில முதலாளிகளுக்காகவும், ஒரு சில தொழிலாளர்களுக்காகவும் நூல் ஏற்றுமதி செய்வதை நிறுத்தாமலிருந்தால் பல லட்சக்கணக்கான குடும்பங்கள் பட்டினி கிடந்து சாக வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் தமது உரையில் பல திட்டங்களையும் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். பல குறைபாடுகளைப் பற்றி இதில் குறிப்பிடவில்லை என்று சொல்லப்பட்டது. இம்மாதிரி பத்து நாட்களுக்கு கவர்னர் உரை நிகழ்த்தினாலும் அப்போதும் எல்லாக்குறைகளும் சேர்க்கப்படவில்லை என்று சொல்லக்கூடிய நிலைமைதான் ஏற்படும். ஆகவே எல்லாக் குறைகளையும் கவர்னர் அவர்கள் தன் உரையில் சேர்த்துக்கூறமுடியாது என்ற காரணத்தினால் விடப்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. அதல்லாமல் வரவேற்கக்கூடிய பல திட்டங்களைப்பற்றியும் கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையில் அவர்கள் சொல்லியிருக்கிற திட்டங்களை எல்லாம் வரவேற்கிற முறையில் கவர்னர் அவர்களது உரையை வரவேற்று என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





**Sri K. R. NALLASIVAM:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டசபைக் கூட்டத்தில் நிலச்சீர்திருத்த சட்டம் வரப்போகிறது என்ற எண்ணத்தோடு பெரிய நிலச் சுவாந்தார்கள் எல்லாம் ஓடோடி தங்களுடைய நிலங்களை எல்லாம் விற்றுக் கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் என்னைப்போலுள்ளவர்கள் நிலச்சீர்திருத்தச் சட்டம் வரப்போகிறது என்ற ஆவலுடன் சட்டசபையை நோக்கி வந்தோம். ஆனால் நிலசசீரதிருததச் சட்டம் வரவில்லை. இதனுடைய விளைவு என்ன ஆகும் எனபதை முன்னாலும் சொல்லியிருக்கிறேன். இந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருவதால் எந்தவிதமான பயன் ஏற்பட வேண்டுமோ அந்த பயன் எல்லாம் இப்போது இல்லாமல் போய்விட்டது என்பதுதான் என்னுடைய கருத்து. ஏனென்றால் அநேகமாக பெரிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் தங்களுடைய நிலங்களை எல்லாம் விற்றுத் தீர்த்து விட்டார்கள். அது போக பாக்கியிருக்கக் கூடிய நிலங்களையும், இப்போது இந்தச் சட்டம் கொண்டுவரப் படாமல் தள்ளி வைத்திருப்பதினால் கிடைக்கும் காலத்தில் விற்று விடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஒரு அங்குலம் கூட

[Sri K. R. Nallasivam] [8th December 1959

இல்லாமல் விற்றுவிடுவதற்கு இப்போது அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதற்கு தகுந்தபடி இந்தச் சர்க்கார் கொண்டுவரக்கூடிய சட்டத்தைத் தள்ளி வைத்திருக்கிறது. இந்தச்சட்டத்தை கொண்டு வருவது சம்பந்தமாக அதற்கான வேலைகள் எல்லாம் தயாராகி கொண்டிருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது கவர்னர் பெருமான் அவர்களது உரையில். கடந்த ஓராண்டு காலமாகவே இதைப்பற்றி சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இந்த மசோதாவை தயாரிக்கவேண்டுமென்று சொன்னால் இந்த சர்க்கார் முழுக்க முழுக்க ஈடுபட்டிருந்தால் கொஞ்ச காலம் தான் ஆகும். மத்திய சர்க்காரிடமிருந்து இதற்கான வழிமுறைகளை வகுத்து கொடுத்திருக்கிறார்கள். அதோடு பல ராஜ்யங்களிலுமுள்ள செலக்ட் கமிட்டியின் முடிவுகள் எல்லாம் வந்திருக்கும். அதையெல்லாம் வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தை தயாரிக்க வேண்டுமென்றால் நான்கைந்து மாதங்களில் தயாரித்து விடலாம். இதற்காக ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடங்களோ தேவையேயில்லை. ஆகவே இவ்விதம் சர்க்கார் இதை கொண்டு வருவதை தள்ளிவைத்திருப் பதின் காரணமாக கிடைத்திருக்கக்கூடிய மொத்த முடிவு (நெட் ரிசல்ட்) என்னவென்று பார்த்தால் நாட்டிலுள்ள பல விவசாயிகள் பெரிதும் கடன் பட்டிருக்கிறார்கள். விவசாயிகளிடம் பணம் இல்லையென்றாலும் கூட கடனுக்கு நிலங்களை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே வாரிசாக கடன் பட்டிருக்கிறார்கள் என்றாலும் இந்திய நாட்டிலுள்ள விவசாயி களுக்கு நிலம் வாங்க வேண்டும் என்ற ஆசையின் காரணமாக கடனுக்கு நிலங்களை வாங்கி கொண்டிருக்கிறார்கள். உலகத்தி லுள்ள எந்த விவசாயியை காட்டிலும் இந்திய விவசாயி நிலம் வாங்கவேண்டும் என்பதில் மிக பேராசை கொண்டவனாக இருக் கிறான். அதோடு கடனுக்கு நிலங்களை விற்றுவிடுவதற்கு நிலச் சுவான்தார்களும் தயாராக இருக்கும்போது, இந்திய விவசாயிகள்
11-30 எந்த விதமாக கடன் பட்டாவது அல்லது எதை அடமானம்
a.m. வைத்தாவது நிலத்தை வாங்கிவிடுகிறார்கள். அந்த அடிப் படையில் ஆயிரம் ரூபாய் பெறக் கூடிய நிலத்தை 750 ரூபாய்க்குத் தருவதாகச் சொன்னவுடன், அந்தப் பணத்தைக் கட்ட முடியுமா என்று கூட யோசனை செய்யாது, பாண்ட் எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து, சிக்கலுக்கு ஆளாகி இம்மாதிரி லட்சக்கணக் கான விவசாயிகள் நிலம் வாங்கியிருக்கிறார்கள். இது புதிய சிக்கலை உண்டுபண்ணப்போகிறது. நிலச்சீர்திருத்தம் என்று சொல்லிக் கொண்டு இம்மாதிரி ஒன்றும் செய்யாதது சாதாரணத் தவறல்ல, ஒரு மகத்தான தவறு. நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப்போவதில்லை என்று சொல்லியிருந்தாலும் நிலச்சுவான்தார் கள் தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்திருப் பார்கள். நிலச் சுவான்தார்களெல்லாம் இந்த மாதம் 5-ம் தேதி யைக் கண்டு பேயைக் கண்டு நடுங்குவது போல நடுங்கிக்கொண்டி ருந்தார்கள். அம்மாதிரியெல்லாம் ஒன்றும் இல்லாமல் போனது வருந்தத் தக்கது. இந்த விஷயத்தில் விவசாயிகளுக்கு சர்க்கார் பெரிய தவறு செய்திருக்கிறது என்று கூற வேண்டியிருக்கிறது.



8th December 1959] [Sri K. R. Nallasivam]

அடுத்தப்படியாக உணவுப் பிரச்னை. இந்த உணவுப் பிரச்னை யைப் பொறுத்த வரையில் ஒரு பக்கத்தில் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் சர்க்கார் ஈடுபட்டிருக்கிறது. அடுத்த பக்கத்தில் எங்களைப் போன்றவர்கள் உணவுப் பொருள்களின் விலை குறைய வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் விவசாயிகளின் நிலை என்ன? உணவுப்பொருள்களின் விலையைக் குறைப்பதால் மட்டும் இந்தப் பிரச்னையைத் தீர்த்து விட முடியாது. ஒன்று இன்றைக்கு வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கு விலை குறையவேண்டியது அவசியம். மற்றொன்று விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்க வேண்டியது அவசியம். நியாய விலை நிர்ணயிக்கும்போது விவசாயி விவசாயத்தில் செலவு செய்யக் கூடிய பணம், படக் கூடிய கஷ்டம் இவைகளைப் பார்த்து உரிய பலன் கிடைக்கக் கூடிய முறையில் விலை நிர்ணயிக்க வேண்டும். அதை சர்க்கார் பாதுகாக்க வேண்டும். விவசாயிக்கு அந்த விலை கிடைக்க சர்க்கார் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் இருக்க வேண்டும். அது மாத்திரம் போதாது. நிச்சயமாக உணவுப் பொருள்களின் உற்பத்தி மூலமாகத் தான் இந்தப் பெரிய பிரச்னையைச் சமாளிக்க முடியும். அதற்கு வேண்டிய காரியங்களை சர்க்கார் செய்யவேண்டும். நான் ஒன்று கூற விரும்புகிறேன். அப்பன், பாட்டன் காலத்தில் ரசாயன உரம் என்பது தெரியாது. இப்போது ரசாயன உரத்தின் மீது நம்பிக் கையை விவசாயிகளிடம் உண்டுபண்ணிவிட்டு, ரசாயன உரம் வேண்டுமென்று விவசாயி தெருத் தெருவாக ஓடினாலும் கிடைப்பதில்லை; இம்மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முன்பு ரசாயன உரம் இல்லாமல் சாகுபடி செய்து நல்ல முறையில் உற்பத்தி செய்து வந்தார்கள். இன்றைக்கு ரசாயன உரத்தின் மீது நம்பிக்கையை உண்டு பண்ணி விட்டு அதன் மூலமாகத்தான் விளைச்சல் அதிகமாக கிடைக்கும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விட்ட பிறகு ரசாயன உரம் போதுமான அளவுக்கு கிடைப்பதில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய சர்க்கார் பொறுப்பேற்றிருக்க வேண்டும். எதை வேண்டுமானாலும் செய்து ரசாயன உரத்தைக் கொண்டு வந்திருக்கவேண்டும். இன்றைக்கு விவசாயி ரசாயன உரத்தையே நம்பியிருக்கிறான். ஆனால் அது இன்றைக்குக் கிடைப்பது கிடையாது. எப்படி நாம் விலை வாசிகளைக் குறைக்க முடியும்? எப்படி பண வீக்கத்தைக் குறைக்க முடியும்? கோஷங்களாலோ அல்லது வேறு நடவடிக்கைகளாலோ குறைக்க முடியாது. நான் சர்க்கார் சொல்லுவதை முழு மனதோடு ஒத்துக்கொள்கிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வாயால் சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. இதற் கான அடிப்படைக் காரியங்களை சர்க்கார் செய்ய வேண்டும். இன்றைக்கு ஒன்று ரசாயன உரம் கிடைப்பது கிடையாது. இரண் டாவது மின்சாரத்தை உபயோகித்து விவசாயம் செய்வது அவனுக்கு தண்டனை கொடுப்பதாக இருக்கிறது. மற்றொன்று டீஸல் என்ஜின். இந்த டீஸல் என்ஜினுக்குத் தேவையான டீஸல் எண்ணைக்கு வரி போடும்போது இங்கே மந்திரி அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். விவசாயத்திற்காக அதிகமான

அளவு பம்ப்செட்டுகள் உபயோகமாகிறது என்று இருந்தால் அதன் மீது வரியைக் குறைத்து, வரி விலக்குக் கொடுப்பதில் ஆட்சேபமில்லை, அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். விவசாயத்தில் எத்தனை டீஸல் என்ஜின்கள் இருக்கின்றன என்ற ஒரு கணக்கு உண்டா? இல்லை. இன்றைக்கு இதற்கு வரி விலக்கு மிகவும் அவசியம். டீஸல் எண்ணெயை உபயோகித்து, டீஸல் என்ஜின் வைத்து விவசாயம் செய்வது என்பது வறட்டு கௌரவத்திற்காகச் செய்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. ஒன்று மின்சாரம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இரண்டாவது இப்போது இருக்கும் வரியில், டீஸல் என்ஜின் வைத்து உற்பத்தி பெருக்குவது என்பது நடக்காத காரியம். ஆகையால் விவசாயத்திற்கு உபயோகப்படும் டீஸல் எண்ணெக்கு வரி விலக்கு கொடுக்க வழி செய்யவேண்டும். அது மாத்திரம் போதாது. மின்சாரத்தைப் பொறுத்த வரையில் இப்போது போட்டிருக்கக் கூடிய ரேட்டை தயவு செய்து குறைத்தாக வேண்டும். உற்பத்தி பெருக வேண்டும், விலைகளைக் குறைக்க வேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும். விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களான பிண்ணாக்கு போன்றவைகளையும், விதைகளையும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அவைகளெல்லாம் குறைந்தாலொழிய உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியாது. அந்தப் பொருள்களையெல்லாம் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்குக் கொடுத்து நியாய விலைக்கு விளைபொருள்களைக் கேட்டால் விவசாயி ஆட்சேபிக்க மாட்டான். இது ஒரு புறம் இருக்கிறது. பாசனப் பிரதேசங்களில் மின்சாரம் கிடைப்பதிலும் பல இடங்களில் தடை இருக்கிறது. காய்ந்து இருக்கும் இடங்களில் மின்சார வசதி தேவை. புதுப் புதுப் பாசனத் திட்டங்கள் வரும் பகுதியில் மின்சாரம் கிடைப்பதில் தடை ஏற்பட்டாலும் கூட ஆட்சேபிக்க மாட்டேன். புள்ளம்பாடி, மட்டலை, வைகை, லோயர் பவானி, பரம்பிக்குளம் முதலிய இடங்களில் ஆரம்ப காலத்தில் தண்ணீரை உபயோகித்து விட்டு பின்னர் மின்சாரத்தைக் கொண்டு தண்ணீர் இரைத்து பாசனம் செய்ய அந்தப் பகுதிகளுக்கு அதிகமான மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் மூலமாக, 6 மாதங்களுக்குத் தண்ணீர் கிடைத்தால் ஒரு போகம் ஒன்றரை போகமாக பயன்படுத்த முடியும். மின்சார விஸ்தரிப்பு வசதி இருந்தால் நிச்சயமாக மிகச் சுலபமாக அங்கு இருக்கக்கூடிய உற்பத்தி இரண்டு மடங்காக ஆகும். நீர்ப் பாசன வசதி இருக்கும் பூமிகளில் மின்சார வசதி கிடைத்தால் உற்பத்தியை இரண்டு மடங்காகச் செய்ய முடியும். இதை கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். நானும் இதைப்பற்றி 6 அல்லது 7 ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன், ஏதோ போய்க் கொண்டிருக்கிறது.

சமீபத்தில் சர்க்கார் ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அமெரிக்கா உதவி மூலமாக விவசாயிகளுக்கு தஞ்சை ஜில்லாவில் ஒரு வசதி செய்து கொடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.





அதே அளவுக்கு காரியத்தை தஞ்சை ஜில்லாவில் எவ்வளவு கவனம் செலுத்துகிறார்களோ அதே முறையில் கோயம்புத்தூரையும் சேர்த்துச் செய்தால், அதைக் கொண்டு தஞ்சைக்கு ஒரு பகுதியையும் கோயம்புத்தூருக்கு ஒரு பகுதியையும் ஒதுக்கினால், உலக நாடுகளில் எந்த அளவுக்கு அதிக உற்பத்தி காட்டுகிறார்களோ, அதே அளவுக்கு, நான் வேறு ஜில்லாவைப் பற்றிச் சொல்லவில்லை, கோயம்புத்தூர் ஜில்லாவில் காட்ட முடியும். ஆகையால் இதிலும் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக என்.ஜி.ஓ.-க்கள், கடை நிலை ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களைப் பற்றி ஒவ்வொருவரும் குறிப்பிட்டு பேசியிருக்கிறார்கள். பொதுவாக ஏறியிருக்கும் விலைவாசிகள், அத்துடன் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊதிய உயர்வு இவைகளைக் கண்டு எல்லோரும் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதிருப்தியிருந்தால் நிர்வாகம் நல்ல முறையில் இருக்க முடியாது. அவர்கள் நிர்வகிக்கக் கூடிய திட்டங்கள் சரிவர இயங்க முடியவில்லை, ஆகையால் மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய சம்பள அடிப்படையில் அவர்களுடைய சம்பள விகிதங்களையும் மாற்றியமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டு முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. P. PALANISWAMI: கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது கவர்னர் அவர்களுடைய உரையிலே இந்த ஆண்டு மழை நல்ல விதமாக எல்லா மாவட்டங்களிலும் பெய்து செழுமையாக இருக்கிறது, இருந்தும் விலைவாசிகள் ஓரளவு ஏற்றம் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக இந்த விலை ஏற்றத்திற்குக் காரணம் அதிகமாக உற்பத்தி பெருகி இருந்தும் கூட, அண்டை மாகாணங்களில் விலைகளைக் கட்டுப்படுத்தவில்லை என்று கூறியிருக்கிறார். அதனால்தான் உற்பத்தியை நாம் இன்னும் அதிகமாகப் பெருக்க வேண்டும். ஆனால், உற்பத்திப் பெருக்கத்திற்காக வேண்டிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்தும் போதுமான அளவு உற்பத்தி பெருகாமல் இருக்கிறது. இன்றைக்கு சர்க்கார் அதிகமான அளவில் விதைகள் தருகிறது. நல்ல தண்ணீர் வசதி செய்து கொடுத்திருக்கிறது. இருந்தாலும் நல்ல முறையில் வேலை செய்யக் கூடிய நல்ல விவசாயிகள் நம் நாட்டில் இருந்தும் அவர்கள் விவசாயத்தில் ஈடுபடச் சற்று தயங்குகிறார்கள். காரணம் ஒரு சாதாரணத் தொழிலாளி ஒரு நாளைக்கு 3 அல்லது 4 ரூபாய் சம்பாதிக்கும் நேரத்தில், விவசாயிகளுக்கு காலை முதல் மாலை வரையில் வேலை செய்யும் கூலியாக ஒரு ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. இதைப் பார்த்து மனம் நோகக் கூடிய நிலையில் வேலை செய்யத் தயங்குகிறார்கள். குறிப்பாக விவசாயிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 15 அல்லது 20 ரூபாய் தான் வரக் கூடியதாக இருக்கிறது. அவ்வளவு குறைந்த

[Sri K. P. Palaniswami] [8th December 1959

கூலியைப் பெற்றுக்கொண்டு விவசாயி விவசாயத்தைப் பெருக்க மிகவும் கஷ்டப்படுகிறான். விவசாயிகளுக்குக் கூலியை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். சட்டத்தின் மூலமாக பல தீர்ப்புக்களைக் கண்டாலும் கூட நடைமுறையில் ஒன்றும் கிடைப்பதில்லை. தொழில் மூலம் அதிகமாக ஊதியம், கூலி பெறக்கூடிய நிலையில் தொழிலாளர்கள் இருக்கும் காரணத்தால் அதற்கேற்ப விவசாயக் கூலியையும் உயர்த்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரசாயன உரங்களைக் கொடுக்கும் விஷயத்தைப்பற்றி சில பேர் சொன்னார்கள். ஏதோ செல்வாக்குப் படைத்தவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது ஓரளவு உண்மைதான். அநேக ஏழைகளுக்கு உரமே கிடைப்பதில்லை. குறிப்பாக வசதியுள்ளவர்கள் மொத்தமாக தங்கள் தேவைக்கதிகமாக வாங்கி வைத்துக்கொள்ளுகிறார்கள். அவ்வாறு கொடுக்காமல் யாருக்கு அதிகமாக தேவைப்படுகிறதோ அவர்களுக்கு மிகுதியாகவும் குறைவாகத் தேவைப்படுகிறவர்களுக்குக் குறைவாகவும் கொடுக்க வேண்டும். தேவைக்கேற்பத்தான் கொடுக்க வேண்டுமேயொழிய செல்வாக்குள்ளவர்கள் என்பதற்காக அதிகமாகக் கொடுக்கக் கூடாது.

அநேக இடங்களில் "மேஜர் இரிகேஷன் ஒர்க்ஸ்" செய்து கொண்டு வருகிறோம். கோயம்பத்தூர்-அவனாசி தாலுகாவில் பெரிய அணைக்கட்டுகள் கட்ட வசதி இல்லை. அந்த இடங்களில் எல்லாம் "போர் வெல்ஸ்" மூலமாக அநேக பூமிகளுக்குத் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கலாம். சில பேருக்குக் கிணறு வெட்ட ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஒரு தனிப்பட்ட நபர் 3 ஏக்கர், 4 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர் அந்த பூமியில் கிணறு வெட்ட ஆயிரம் ரூபாய் போதாமல் மேலும் கடன் வாங்கும் நிலைமை ஏற்படுகிறது. அப்படி இல்லாமல் 5 பேர் 10 பேர் சேர்ந்து கிணறு வெட்டுவதற்காக ஆயிரம் என்பதை ஐயாயிரமாகவாவது கொடுத்து நல்ல முறையில் கிணறு வெட்டினால் ஐந்தாறு பேருக்கு நன்மையாக இருக்கும்.

மண்ணரிப்பைத் தடுக்கத் திட்டம் இருக்கிறது. என்னுடைய கிராமத்தில் மண்ணரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டுகிறார்கள். அதை யார் கட்டுகிறார்கள் என்று பூமிச் சொந்தக்காரருக்கே தெரியாது. அந்த பூமிச் சொந்தக்காரருக்கு முன்னாலேயே நோட்டீஸ் கொடுத்துக் கட்டினால் அவர்களும் யோசனை சொல்லுவார்கள். இதற்காகப் பணத்தை வீணே செலவு செய்வது என்ற முறையில் இருக்கக்கூடாது. நல்ல முறையில் முன்னாலேயே அறிவிப்புக் கொடுத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"மைனர் இரிகேஷன் ஒர்க்ஸ்"-ஐ எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதன் கீழ் குளங்கள் கட்ட "லாண்ட் அக்வைர்" செய்ய 4, 5 லட்சம் செலவு செய்கிறோம். அப்படிச் செய்யும்போது முதலில் புறம்போக்கு பூமிகளுக்குச் சலுகை கொடுத்துச் செய்



8th December 1959] [Sri K. P. Palaniswami]

தால் அரசாங்கத்திற்குச் செலவு குறைவாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக நிலம் ஆர்ஜிதம் செய்யாமல் இருக்கும் இடங்களுக்கு அந்த திட்டத்தை அமுல் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சில பேர் கூட்டுறவு முறைக்கு மாறுபட்ட கருத்துக்களைக் கூறுகிறார்கள். எனக்குத் தெரிந்த வரை நடைமுறையில் 100 ஏக்கர், 120 ஏக்கர் நிலங்களில் விவசாயம் கூட்டுறவு முறையில் நடந்து வருகிறது. அந்த பூமியின் விலை ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயாக இருந்தது என்று வைத்துக்கொண்டால் இன்றைய தினம் அது 3,000 ரூபாய் மதிக்கத்தக்க அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அந்த புஞ்சை பூமியில் சோளம் விளைந்து கொண்டிருந்தது. இப்போது நெல்லும் கரும்பும் விளைகிறது. "லாண்ட் சீலிங்" வந்த பிறகு எல்லா விவசாய ஹரிஜன மக்களுக்கும் "செர்வீஸ் கோவாப்பரேடிவ் சொசைடி" ஏற்பாடு செய்து கொடுத்து உற்பத்தியைப் பெருக்க வழி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **Sri S. RAMAKRISHNA THEVAR**: மதிப்புக்குரிய சபா நாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவருடைய உரையில் சேது சமுத்திர திட்டம் தொடங்க இருப்பதைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பது காண பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டம் உருவானால் என் போன்ற பிற்பட்ட பகுதி மக்களுக்கு ஒரு பெரிய நன்மை ஏற்படுத்திக் கொடுத்ததாகும். என்னுடைய தொகுதியிலே தொண்டி என்ற நகரம் பல ஆண்டுகளாக துறைமுகமாக இருந்து வருகிறது. அதுவும் இதன் காரணமாக நல்ல சூழ்நிலையை அடையுமென்று பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அத்துடன் கவர்னர் அவர்களுடைய உரையில் எல்லாத் திட்டங்களைப் பற்றியும் அதிக விரிவாகச் சொல்லாவிடினும் ஓரளவு குறிப்பிட்டிருக்கின்றன. கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் பொதுவாக நீர் நிலைக் கஷ்டம் ஏற்பட்டு பல வருஷங்களாக ரொம்ப வரட்சியான நிலைமையில் இருந்து வருகின்றது. இந்த நிலையில் "அப்பர் பெரியாறு" திட்டம் ஒன்று உருவானால் எங்கள் பகுதி மக்கள் சுபிட்சமாக வாழும் நிலைமை ஏற்படும். விவசாய அபிவிருத்தி அதிகமடைய வேண்டுமானால் அத்திட்டத்தை எங்களுக்கு உருவாக்கிக் கொடுக்கவேண்டும். இப்பொழுது நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டவேண்டுமென்ற ஒரு கோரிக்கை உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்தச் சட்டம் இன்னும் சில நாட்களிலே உருவாகிவிடப் போகிறது. இந்தச் சமயத்தில் எங்களைப் போல் ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ளவர்களைப் பற்றியும் கொஞ்சங்கூட அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. ஏன்? தஞ்சை ஜில்லாவில் உள்ளவர்கள் 30 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம் என்ற சூழ்நிலை இருக்கும்போது எங்களுக்கு அந்த மாதிரி ஐந்து பங்காவது வைத்துக் கொண்டால்தான் ஈடாக இருக்குமென்று கருதுகிறேன். அந்த நிலச் சீர்திருத்தச்

[Sri S. Ramakrishna Thevar] [8th December 1959

சட்டத்தை நாங்கள் எப்போதும் வரவேற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த மாதிரி மிகுந்த நிலம் வைத்திருக்கக் கூடியவர்களுக்கு உச்ச வரம்பு கட்டவேண்டுமென்று சொல்லும்போது வாழ்க்கைத் தரத்தில் இவர்களைவிட உயர்ந்த ரகத்தில் இருக்கக் கூடிய பலர் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் என்ன செய்யப் போகிறார்கள்? என்று திட்டம் ஏதும் வரவில்லை. பொதுவாக மில் முதலாளிகளை எடுத்துக் கொண்டால் ஏராளமாக ராஜ போகத்தில் இருக்கிறார்கள். பஸ் முதலாளிகள் அதற்கு மேல் ராஜபோகத்தில் இருக்கிறார்கள். சினிமா முதலாளிகளும் அம் மாதிரியே இருக்கிறார்கள். இன்னும் பலர் பல வீடுகளை வைத்துக் கொண்டு ஏராளமான வாடகைகளை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் ராஜபோகத்தில் இருக்கிறார்கள். பெரும்பாலான விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். உச்ச வரம்பு கட்ட வேண்டாம் என்ற நோக்கத்தில் நான் பேசவில்லை. உச்ச வரம்பு கட்ட வேண்டியது அவசியம்; அவசியத்திலும் அவசியம் என்று நான் கருதுகிறேன். இந்த மாகாணத்தில் இருக்கும் ஏராளமான விவசாயிகளுக்கு ஒரு வித வழியும் செய்யாது இருக்கிறார்களே, அவர்கள்மீது இப்படிப்பட்ட நோக்கு இருக்கிறதே என்று அவர்கள் குமுறிக்கொண்டே இருக்கிறார்கள். மற்ற ஸ்தாபனத்தாருக்கும் இதுமாதிரி ஒரு முடிவு செய்கிறதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, என்னுடைய பிராந்தியத்தில் சமுத்திரக் கரையோரம் உள்ள கிராமங்கள், அதிகமான ஜன நெருக்கமுள்ள கிராமங்களாக இருக்கின்றன. அக் கிராமங்களில் உள்ளவர்கள அன்னிய நாட்டை எதிர்பார்த்து ஜீவனம் செய்து வந்தார்கள. பர்மா, மலேயா, இலங்கை போன்ற நாடுகளிலே அதிகமாக வசித்து வந்தவர்களெல்லாம் இப்பொழுது அங்கிருக்கும் சட்ட திட்டங்களினால் நாடு கடத்தப்பட்டு இங்கு எந்தவிதமான தொழிலும் இல்லாது வந்து அதிகமாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஏதாவது ஒரு வழி சர்க்கார் செய்து கொடுத்து அவர்களை ஆதரிக்க வேண்டும்.

பொதுவாக, உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று நாம் இப்பொழுது அதிகமான சிரத்தை எடுத்துக்கொண்டுவரும் இந்த நேரத்தில் கிழக்கு இராமனாதபுரம் ஜில்லாவில் மூன்று நான்கு தாலூகாக்களில் குளம் கோர்வைப் புஞ்சை என்று அதிக அளவு உணவு கொடுத்து வந்த நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களைப்பற்றி பல முறை சர்க்காரில் தெரிவித்தாய்விட்டது. அது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அதி சீக்கிரத்தில். குளம் கோர்வைப் புஞ்சைக்கு விமோசனம் கிடைக்கவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் மீன் பிடிப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் ரொம்ப மோசமாக இருக்கிறது. அவர்களுக்கு குடியிருக்க வீட்டு வசதி இல்லை. அவர்களுடைய தொழிலுக்கு உரிய கருவிகளைக் காயப் போடுவதற்கு வேண்டிய இட வசதி கிடையாது. இந்த நிலையிலே பெரும்பாலான மீனவர்கள் ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்புதாளை என்ற ஊரில் கடற்கரை ஓரமாக பெரிய பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. கடல் தண்ணீர் அடித்துக்கொண்டு போயிருக்கிறது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது பற்றி இன்னும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். அதையும் உடனடியாகச் செய்யவேண்டும். ஹரிஜனங்கள் அதிகம் உள்ள என்னுடைய தாலூகாவிலே பெரும் பகுதி புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தாலூகாவிலுள்ள ஹரிஜனங்களுக்கு இதுவரைக்கும் அதிகமான நன்மை ஒன்றும் செய்துவிடவில்லை. ஹரிஜனங்களுக்கு வருஷமொன்றுக்கு இவ்வளவு ரூபாய் என்று ஒதுக்குகிறார்கள். ஆனால் அதில் ஒரு பகுதி என்னுடைய தாலூகாவுக்கு வருவதற்கு இன்னும் நல்ல நேரம் கிடைக்கவில்லை. அது சம்பந்தமாக பெரும் முயற்சி எடுத்தும், இன்னும் நல்ல பலன் அளிக்கவில்லை. அது சம்பந்தப்பட்டவர்கள் அதைக் கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



8th December 1959] [Sri S. Ramakrishna Thevar]

சிறிய நீர்த் தேக்கங்கள் சம்பந்தமாக எல்லோரும் குறிப்பிட்டார்கள். அதைப்போலவே என் தொகுதியிலும் சிறிய நீர்த் தேக்கங்கள் அமைப்பதற்கேற்ற சிறு சிறு காட்டாறுகள் இருக்கின்றன. அந்தக் காட்டாறுகளின் குறுக்கே அணைகள் கட்டி, கண்மாய்களுக்குத் தண்ணீர் வருவதற்கான திட்டங்கள் யோசிக்கப் பட்டுவருகின்றன. பல வருஷங்களாகவே இத் திட்டம் உருவாகிக் கொண்டே வருகிறதேயொழிய, இன்னும் பூர்த்தி அடையவில்லை. ஆகையால் துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக, கிழக்கு இராமனாதபுரம் ஜில்லாவில் இவ்வருஷத்தில் நல்ல மழை பெய்து நல்ல முறையில் இருக்கிறது. இதுமாதிரி நல்ல முறையில் இருக்கும் சூழ்நிலையை நான்கைந்து வருஷங்களுக்குப் பின்புதான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இம்மாதிரியே இந்த சுபீட்சம் மாறிவிடாது, சர்க்கார் அதற்கு ஆகவேண்டிய நல்ல தண்ணீர்த்திட்டங்களை நல்ல முறையில் செய்துகொடுத்து எங்களை ஆதரிக்கவேண்டுமென்று நான் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, குடி தண்ணீர் வசதி அங்கு கிடையாது. குடி தண்ணீர்க்கிணறுகள் வெட்டுவதற்கு வேண்டிய வசதி இல்லாததால், குளங்களை நல்ல முறையில் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமென்று, அந்தத் திட்டமும் கலெக்டரால் நிறைவேற்றப் பட்டு வந்தாலும் போதிய பணம் ஒதுக்காததால், என் பகுதியிலுள்ள குளங்கள் செப்பனிடப்படக்கூடிய காரியம் தடைப் பட்டிருக்கிறது. பொதுவாக, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதில் அதிக காலதாமதம் கூடாதென்பதையும் நான் அறிவுறுத்துகிறேன். நான் மேலே சொல்லிய எல்லா வசதிகளையும் இந்த ராஜ்யத்தில் உள்ள எல்லா மோசமான பகுதிகளுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் ஆற்றிய உரையைப்பற்றிச் சொல்லவேண்டுமானால், உப்பு சப்பு இல்லாத உரை என்றுதான் அதைச் சொல்லவேண்டும். சுருக்கமாகச் சொன்னால், அது ஏதோ

சர்க்கார் நடவடிக்கைகளை 'ரெவ்யூ' செய்யக்கூடிய உரையாக இருக்கிறதேயொழிய, அடுத்த ஆண்டிலே மக்களுடைய குறைகளைத் தீர்த்துவைப்பதற்காக வேண்டிய, நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்று சர்க்காருடைய கொள்கையைத் திட்டவட்டமாக வெளியிடக்கூடியதாக அமையவில்லை என்று சொல்ல வேண்டிருக்கிறது. பட்டினி கிடக்கக்கூடியவர்களைப்பார்த்து ஏதோ அனுதாபம் காட்டக்கூடிய முறையிலே, 'உன்னுடைய தலையெழுத்து பட்டினி கிடக்கிறாய்' என்னுடைய தலையெழுத்து நன்றாகப் புளிச்ச ஏப்பம் விடுகிறேன், 'நீ இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திரு, நல்ல காலம் எனக்கும் பிறக்கும்', என்று சொல்லக்கூடிய முறையிலே, உணவு விலைவாசி ஏற்றத்தைக்கண்டு வருந்தக்கூடிய அளவுக்குத்தான் இருக்கிறதே தவிர, விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகள் என்ன, விலைவாசிகளைக் குறைப்பதற்கு இன்னது செய்யப்போகிறோம் என்பதைப்பற்றி ஏதாவது ஒரு வார்த்தை சொல்லப்பட்டிருக்கிறதா என்று பார்க்கும்போது, இந்த உரையிலே ஒன்றுமே கிடையாது. உணவு விலைவாசியைக்குறைப்பதற்கு சர்க்காருக்கு எண்ணம் இருந்திருந்தால் அந்த உரையிலே குறிப்பிட்டிருப்பார்கள். அந்த அளவு எண்ணம் இல்லாததால்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு இதிலே ஒன்றுமே இல்லை என்பதைத்தான் நாம் பார்க்கமுடிகிறது.

ஏதோ பெரும் பகுதியாக இருக்கும் விவசாயிகள்தான் விலைவாசி உயர்வினால் ஏற்படக்கூடிய பலனை அடைவதாக இதில் குறிப்பிட்டிருக்கிறது: நாட்டிலே 52 சதவிகிதம் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் உண்மையிலேயே அந்தப் பலனை அடைகிறார்களா, அல்லது சாகுபடியாளர்கள் அந்தப் பலனை அடைகிறார்களா, அல்லது சிறுநில விவசாயிகள் அந்தப் பலனை அடைகிறார்களா என்று பார்க்கும்போது, நிலப்பிரபுக்களும் பெரிய வியாபாரிகளும் தானியங்களை வாங்கிப் பதுக்க வைத்து கொள்ளை லாபம் அடையக்கூடியவர்கள்தான் அந்தப் பலனை அடைகிறார்கள். உண்மையில் விவசாயத்தொழிலாளர்கள் அந்தப் பலனை அடைவது கிடையாது. ஆகவே, சர்க்காருடைய கண்ணோட்டத்தில் இருப்பது விவசாயிகள் என்று சொல்லக்கூடியவர்கள் பெரிய நிலப்பிரபுக்கள்தான் என்று நாம் தெட்டத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. சட்டசபை ஆரம்பமாதற்கு முன்னால் 4-ந் தேதி என்னுடைய தொகுதியிலே நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் வந்தார்கள். அந்த நேரத்திலே சொன்னார், எஸ்.எஸ்.எல்.ஸி. வரையிலும் இலவசக் கல்வி வசதி செய்துதரப் போகிறோம் என்று. அச்செய்தி பத்திரிகையிலும் வந்திருந்தது. அதைப்பற்றி கவர்னர் உரையில் ஒரு வரி குறிப்பிடப்படும் என்று நாமும் எதிர்பார்த்தோம். ஆனால், ஒன்றுமே கிடையாது. மேலும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்திவிட்டால் போதும், பஞ்சப்படி, சம்பளம் உயர்த்தக்கூட அவசியம் கிடையாது என்று என்.ஜி.ஓ.-க்கள் 3-ந் தேதியன்று மாகாண ரீதியிலே கிளர்ச்சி செய்தார்கள். இருந்தாலும், விலைவாசியையும் கட்டுப்படுத்தவில்லை, விலைவாசிக்கேற்ற அளவுக்கு பஞ்சப்படியையும் சம்பளமும் உயர்த்தவில்லை. அதைப்
12 noon பற்றி கவர்னர் உரையில் ஒன்றும் இல்லை. ஒரு வேளை பட்ஜெட்





நேரத்திலே நமது நிதி அமைச்சர் அவர்கள் உரையிலே வந்தாலும் வரலாம். கவர்னர் அவர்கள் கொடுக்கவில்லை, நாங்கள் அமைச்சர்கள் கொடுக்க முன்வந்திருக்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வரலாம். விவசாயத் தொழிலாளிகளின் மற்ற தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான உத்தரவாதத்தைப் பற்றியோ, வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு தங்களுடைய திட்டம் என்ன என்பதைப் பற்றியோ, விவசாயிகளுடைய கடன் தொல்லைகளைப்பற்றியோ, அவர்கள் அவதிப்படுவதை நிவர்த்திப்பது பற்றியோ அரசாங்கம் எந்தவிதமான சட்டத்தை கொண்டுவரப் போகிறது, எந்த விதமான பாதுகாப்பு அளிக்கப்போகிறது என்பதைப் பற்றி உரையில் ஒன்றுமே கிடையாது.

உணவு உற்பத்தியை பெருக்கப் போகிறோம் என்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது. விவசாயிகளுக்கு அத்தியாவசியமாக தேவைப்படக்கூடிய உரம் போன்ற சாதனங்களை இன்றைக்கு கள்ள மார்க்கெட்டில் வாங்கக்கூடிய அளவுக்கு, ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்கு கடத்தக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது. எலும்பு உரம் தயார் செய்யக்கூடிய தொழிற்சாலை இன்று மூடப்பட்டிருக்கிறது. எலும்பைக் கூட வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கிறது. மனிதன் சாப்பிடக்கூடிய உணவுப் பொருள்கள், அதாவது புளி, மிளகாய், சர்க்கரை இவைகளை மத்திய சர்க்கார் அனுமதி பெற்று கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான அளவுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய காரணத்தினால் விலைவாசிகள் உயர்ந்துவிட்டதே ஒழிய, நமது மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் சீனுவாசய்யர் அவர்கள் சொன்னதுபோல் ஒரு சாரார் தூண்டிவிடுகிறார்கள், 3 மரக்கால் நெல் கொடுத்தால் தான் அறுவடை செய்யுங்கள், இவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும், இவ்வளவு பஞ்சப்படி கொடுக்க வேண்டும் என்று சொல்லி தூண்டிவிடக்கூடிய காரணத்தினால் விலை உயர்ந்துவிட்டது என்று சொல்லுவது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல்தான் ஆகும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நமக்கே போதுமான அளவுக்கு இல்லாத நேரத்தில் இந்த உணவுப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை கட்டுப்படுத்த வேண்டும்.

கவர்னர் அவர்கள் உரையில் எல்லோருடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பை தரும்படி கோரப்பட்டிருக்கிறது. இது பொது ஜனங்களை ஏமாற்றுவதற்கா அல்லது எதிர்க்கட்சி அங்கத்தினர்களை ஏமாற்றுவதற்கா என்பது புரியவில்லை. அமைச்சர்கள் தங்களுடைய தொகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது பொதுக் கூட்டங்களில் 'கம்யூனிஸ்டு பேச்சைக் கேட்காதீர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேச்சைக் கேட்காதீர்கள், எங்களுடைய பேச்சைக் கேளுங்கள்,' அப்பொழுதுதான் உருப்படியாக இருக்க முடியும், என்று பிரசாரம் செய்கிறார்கள். எல்லாக் கமிட்டிகளிலும் மற்றவர்களைப்போல எதிர்க்கட்சி அங்கத்தினர்களை போடக்கூடிய அளவுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. சட்டசபை கமிட்டிகளில் வேண்டுமென்றால் இருக்கலாம். மற்றபடி ஜெயில் கமிட்டி, மாணவர்களை தேர்ந்தெடுக்கக்கூடிய கமிட்டி, டிரெயினிங்குக்கு தேர்ந்தெடுக்கக்கூடிய கமிட்டி ஆகியவை

[Sri V. K. Kothandaraman] [8th December 1959

போன்ற கமிட்டிகளில் பிரியம்போல் அங்கத்தினர்களை நியமிக்கக் கூடிய அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. ஆகவே, 'எங்களுடைய ஒத்துழைப்பை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம், ஆலோசனை சொல்லுவதற்கு தயாராக இருக்கிறோம், அதை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இன்று நிலைமை இருக்கிறதே தவிர, 'நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று' சொல்லுவது உண்மையிலேயே பொருத்தமல்ல என்பதைத்தான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வட ஆற்காடு ஜில்லாவில் காலம் தவறி மழை பெய்தது. துவரை, சோளம் போன்ற பயிர்கள் போடப்பட்டிருக்கிறது. மழை காலம் தவறி பெய்ததால் அவைகளெல்லாம் பூ பூத்து, அதோடு கெட்டுவிட்டன. ஓரிரண்டு ஜில்லாக்களைத், தவிர மற்ற ஜில்லாக்களில் நல்ல மழை பெய்திருக்கிறது என்று சொல்லியிருப்பது சரியாகாது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கவனிக்கிறோம், பார்க்கிறோம் என்று சொல்லக் கூடிய தன்மையிலேதான், இன்று நில சீர்திருத்தம்பற்றி அந்த சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்று போகிற போக்கிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நில சீர்திருத்தம் கொண்டுவருவதிலும் உணவு விலைவாசிகளை கட்டுப்படுத்துவதிலும் கொஞ்சம் கூட தயக்கம் இருக்கவேண்டிய அவசியமே இல்லை. ஒரு கதை உண்டு. பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் யுத்தம் ஏற்பட்ட காலத்திலே அர்ஜுனன் கௌரவர் கட்சியைப் பார்த்து அதிலே 'எங்கள் பாட்டன் இருக்கிறார்,' சித்தப்பன், பெரியப்பன் இருக்கிறார், குருநாதன் இருக்கிறார், எப்படி போர் தொடுக்கிறது' என்று கிருஷ்ண பரமாத்மாவிடம் கூறினார். அப்பொழுது கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனைப் பார்த்து 'இதற்கெல்லாம் நீ கொஞ்சம் கூட இந்த சந்தர்ப்பத்தில் பயப்படக்கூடாது, அப்படி அஞ்சினால் பெரிய அளவுக்கு பாதகம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும்' என்று எடுத்துச் சொன்னார். அதுபோல அர்ஜுனன் போல இருக்கும் உணவு மந்திரி அவர்களுக்குச் சொல்லுகிறேன். 'கொஞ்சம் கூட தயங்காதீர்கள். பதுக்கல்காரர்களையோ, கொள்ளை லாபம் அடிப்பவர்களையோ, நிலப்பிரபுக்களையோ கண்டு பயப்படாதீர்கள். அவர்கள் பேரில் எடுக்கக்கூடிய நடவடிக்கைக்கு நாங்கள் ஒத்துழைக்க தயார். நீங்கள் அவர்களைப் பார்த்து பயப்படவேண்டிய தேவையில்லை. துரிதமாக நடவடிக்கை எடுங்கள்' என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய மக்கள் உணவு விலை ஏற்றத்தினால் பெரும் அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில் கொஞ்சம் கூட பின்வாங்கக்கூடாது என்பதை குறிப்பாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு சிலர் யுத்தம் வருமா என்று கூட எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு குறிப்பாக இருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் இந்தியா பேரில் படை எடுக்கமாட்டார்கள், யுத்தம் வராது என்று சொல்லியிருந்தாலும் கூட, பெரிய பணக்காரராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய கனம் முத்தையா செட்டியார் அவர்கள் யுத்தம் வரும் என்று சொல்லுகிறார்கள். கோடிக்கணக்



8th December 1959] [Sri V. K. Kothandaraman]

கான ரூபாய் பெறுமான மிளகாய் போன்ற உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்து கொள்ளை லாபம் அடிக்கக் கூடியவர்கள், அதன் காரணமாக யுத்தம் வரவேண்டும் என்று சொல்வதற்கு பதிலாக, யுத்தம் கண்டிப்பாக வரும் என்று சொல்லி சர்க்காரை எதிர்க்கக் கூடிய அளவுக்கு எதிர்ப்பு தோன்றியிருக்கிறது. எதிர்க் கட்சியில் இருப்பவர்களின் ஒத்துழைப்பைக் கோரும் இந்த சந்தர்ப்பத்தில், சர்க்கார் கட்சியிலேயே இந்த அளவுக்கு எதிர்ப்பு மறைமுகமாக இருக்கிறது என்பதைத்தான் நான் அமைச்சர் அவர்களிடம் தாழ்மையாக தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்பேர்ப்பட்டவர்களை நன்றாக உஷாராக கண்காணிக்க வேண்டும். இதுபோன்ற அங்கத்தினர்களுடைய நடவடிக்கையை கண்காணிக்கவேண்டும். இல்லையென்றால் உண்மையிலேயே இந்த நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து என்றுதான் சொல்ல முடியும். அதுபோன்று நில விநியோக இயக்கத்தின், பூமிதானத்தின் தலைவர் நமது மதிப்பிற்குரிய வினோபாஜி அர்வகள் 'வெளி நாடுகளில்' இருப்பவர்களால் இந்த நாட்டிற்கு ஆபத்து கிடையாது. இந்த தேசத்திலே இருக்கக் கூடிய ஒரு சில சக்திகளின் விளைவாகத்தான் யுத்தம், ஆபத்து ஏற்படுமே ஒழிய வேறு ஒன்றும் கிடையாது' என்று குறிப்பாக சொல்லியிருக்கிறார். அது மட்டுமல்ல. பார்லிமெண்டில் கூட ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் பெரிய முதலாளிகள் நடத்தக்கூடிய பத்திரிகைகள்தான் இப்படி யுத்த பீதியை இந்தியாவிலே கிளப்பி விட்டிருக்கின்றன, பெரிய பணக்காரர்கள் நடத்தும் பத்திரிகைகளை பறிமுதல் செய்யவேண்டும் என்ற அளவுக்கு குறிப்பிட்டிருக்கிறார்.

**Sri T. KARIA GOUNDER:** On a point of order, Sir, மதிப்பிற்குரிய முத்தையா செட்டியார் அவர்கள் யுத்தம் வருமென்று சொன்னதாகச் சொன்னார்கள். மறைமுகமாக இந்த நாட்டிலே இருக்கிறார்கள் என்றுகூட தெரியுமா என்பதற்கு கொஞ்சம் விளக்கம் சொன்னால் நன்றாக இருக்கும்.

**Mr. SPEAKER:** அது எப்படி point of order ஆகும்?

**Sri V. K. KOTHANDARAMAN:** ஆகவே, இந்த அளவுக்கு யுத்தம் வரும், வரவேண்டும் என்று கூறக்கூடியவர்களும் இருக்கிறார்கள். இதுபோன்ற விஷயங்களிலே பெரும். அளவுக்கு கண்காணிப்பு இருக்கவேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக, 500 சிறிய சங்கங்களை அமைக்கப் போவதாகவும், 17 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கியிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. கூட்டுறவு இயக்கம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். பலதரப்பட்ட சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால் பெரிய பணக்காரர்களுக்குத்தான் வீடு கட்டுவதற்கு பணம் உதவி அளிக்கப்படுகிறது. குறைந்த வட்டியிலே பணத்தை வாங்கி, பெரிய வீட்டைக் கட்டி, நேரடியாக அதிக வட்டி வாங்குவதற்குப் பதிலாக மறைமுகமாக அதிகப்படியான வாடகைக்கு விட்டு லாபம் சம்பாதிக்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறது. மத்தியதர வர்க்கத்தினருக்கு பலன் கிடைக்கக்கூடிய

அளவுக்கு நிலைமை இல்லை. ஆகவேதான் நான் இந்த நேரத்திலே தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுவது என்னவென்றால் 2,000 முதல் 5,000 ரூபாய் பெறுமான வீடுகளை அதிகமாக கட்ட வேண்டுமென்பதுதான். நாற்பதாயிரம், 50,000 ரூபாய் செலவு செய்து பெரிய பணக்காரர்கள் பங்களா கட்டுகிறார்கள். அதே 50,000 ரூபாய் செலவில் 2,000 ரூபாய் பெறுமான 25 வீடுகள் கட்டமுடியும். ஐம்பதினாயிரம் ரூபாய் வீட்டில் ஒரு குடும்பத்தினர் இருக்கிறார்கள். இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்து கட்டிய வீட்டிலும் ஒரு குடும்பத்தினர்தான் இருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பல மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இதைப் பார்க்கிறோம், நகரத்தில் மட்டுமல்ல, கிராமத்திலும்கூட. ஆகவே, பணக்காரர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் மூலம் பணம் போகிறது. ஏழை எளிய மக்களுக்குக் கிடைப்பதில்லை. அந்த அளவுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஏழை மக்களுக்கு உதவி கொடுக்கும் அளவுக்கு நிலைமையைச் செய்ய வேண்டும்.

தொழில் அபிவிருத்தித் திட்டங்களை வரவேற்கும் நேரத்தில், ஒரு லைசன்ஸ் வாங்க வருஷக் கணக்கில் ஆகிறது. டௌன் பிளானிங் ஆபீசர், பஞ்சாயத்து போர்டு, முனிசிபல் அதிகாரிகள், இப்படி எல்லோரிடமும் சென்று, தாமதமாகி, லஞ்சம் கொடுத்து, ஒரு லைசன்ஸ் வாங்க வேண்டியிருக்கிறது. இதெல்லாம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆளும் கட்சியில் இருப்பவர்களே சொல்லுகிறார்கள். அவர்களில் பலர் தொழில் அதிபர்கள். ஒரு தொழில் ஆரம்பிப்பது என்றால், மூன்று மாத காலத்தில் குறைந்த பட்சம், லைசென்ஸ் கிடைக்கச் செய்ய வேண்டும். அந்த அளவுக்கு இல்லையென்றால், தொழில் அபிவிருத்தி யென்பது பெயரளவில்தான் இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னரவர்கள் நிகழ்த்திய உரைக்கு வந்தனம் சொல்லும் முறையிலே, நானும் இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன். "அவர்களது உரையில் காரசாரமாக விவாதிக்க பல விஷயங்களை எதிர்பார்த்தோம், அப்படியொன்று மில்லையே" என்று சிலர் பேசினார்கள். அதே சமயத்தில், ஒரு பொறுப்புவாய்ந்த மாநிலத்தின் தலைவர் என்ற முறையிலே, எந்த அளவுக்கு ஒரு உரை இருக்க முடியுமோ அந்த அளவுக்கு, பொறுப்புடனும், அடக்கத்துடனும் இது இருக்கிறது என்று ஒரு அங்கத்தினர் கூறினார்கள். உண்மையாக, இரண்டாவது தெரிவித்த கருத்தையே நாம் எல்லோரும் ஆமோதிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஏனென்றால், அபிப்பிராயபேதங்கள் நாட்டிலே வளர்ந்து வருகிறது. இதை ஒரு நாட்டின் அறிவுக்கே, வளர்ச்சிக்கே அறிகுறி என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு அங்கத்தினர் சொன்னார்கள், "கவர்னர் உரை முக்கியமோ இல்லையோ, விவாதம் முக்கியமானது" என்று. அது கூட பொருந்துமா, சரியா என்று சிந்திக்க வேண்டும். ஜனநாயக முறையிலே, அரசியல் சட்டத்தின் ஒரு விதிப்படி, ஒரு உரை நிகழ்த்தும்போது, அதைப்பற்றி வல்லுனர்கள் விவாதிக்கிறார்கள்,



சிலர் அதை விரும்பவில்லைபோலும். மற்றொரு கட்சிக்காரர்கள் என்ன காரணத்திற்காகவோ விஜயத்தையே பகிஷ்கரித்தார்கள். அவர்களே, இந்த உரையைப்பற்றி எத்தனையோ விதமாக அலசிப் பேசுகிறார்கள். இதுவும் சற்றுப் புரியவில்லை. அவர்கள் அடியோடு பகிஷ்கரித்தால் அது சரி. இம்மாதிரி ஒரு அடக்கமான உரையை கவர்னர் நிகழ்த்தியது சாலச் சிறந்தது என்றுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதிலே பேசும்போது, அநேக குறைகள் நிவர்த்திக்கப் படவில்லையென்று பேசப்பட்டது. அதை அடியோடு மறுக்க முடியாது என்றாலும், இதுவரை என்ன நடந்து இருக்கிறது என்பதையும் யோசிக்க வேண்டும். பத்து ஆண்டுகளில் என்னென்ன நடந்திருக்கிறது என்று சிந்திக்க வேண்டும். மற்ற நாடுகளெல்லாம் முன்னேறி இருக்கிறது, தமிழ் நாடு மட்டும் தாழ்த்தப்பட்டு வருவதாகப் பேசப்பட்டு வருகிறது. நாம் சிந்திக்க வேண்டும், அப்படியும் இருக்குமா என்று. ஜனங்கள் திரும்பத் திரும்ப சொல்வதை, ஜர்மனியில் கோயபில்ஸ் சித்தாந்தப்படி சொன்ன சொல்லை நம்ப ஆரம்பிப்பார்கள் என்பது போல நம்ப ஆரம்பிப்பார்கள். கவர்னர் உரையிலே நெய்வேலித் திட்டத்திலே, எப்படி முன்னேற்றம் கண்டிருக்கிறோம், எப்படி உர வினியோகம் ஏற்படும் மின்சார வசதி ஏற்படும் என்பது பற்றியும், பரம்பிகுள திட்டம் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். இவைகளெல்லாம் உண்மையல்லவா? இவை முன்னேற்றத்தில் வரவில்லையா? அதை ஏற்றுக்கொள்ள மனம் வரவில்லையா? மந்திரத்தில் மாங்காய் போல், ஒரே நாளில் எல்லாம் செய்து விட முடியுமா? ஒருவர் சொன்னார், என் பகுதியில் 14 கிராமங்களுக்கு மின்சாரம் வரவில்லை என்று; 26 ஏரிகளுக்கு வேலை நடக்கவில்லையென்று. இவைகளெல்லாம் ஒரேயடியாக நடக்கக்கூடியதா? அப்புறம் அந்தத் தொகுதியில் ஒன்றுமே இருக்காதே, செய்வதற்கு.

அறுபத்தி ஆறு சர்க்கரை ஆலைகள் வடக்கே இருக்கிறது என்கிறார்கள், வடக்கு-தெற்கு என்பவர்கள். கிழக்கு-மேற்கு எப்பொழுது வருமோ தெரியவில்லை. 66 ஆலைகள் உத்தரப் பிரதேசத்தில் இருக்கிறது என்றால், அது கங்கை சமவெளி பிரதேசம். அங்கே என்ன விளைகிறது? கரும்பு நிறைய விளைகிறது. இங்கே நெல் நிறைய விளைகிறது. இருந்தும் இங்கு கரும்பு விளையும் அளவிற்கு இங்கும் ஆலைகள் இருக்கின்றன. அப்படியிருக்க, தெற்கு தேய்கிறது என்பதில் என்ன அர்த்தம்? சோளத்தட்டையைத்தான் கரும்பாக உபயோகிக்க வேண்டும். இந்த மாதிரி போதனையால் மக்களைத் திருப்புவது சரியா? அதற்கு மாறாக, வடக்கு வாழ்வதை நாங்கள் இருந்தால் தடுத்து விடுவோம், தெற்கையும் வாழவைப்போம் என்றால் ஏற்றுக் கொள்ளலாம். இதையெல்லாம் நாம் பார்த்துக்கொண்டே இருந்தால் ஓட ஓட விரட்டுவார்கள். இவர்கள் என்ன தெற்கு நோக்கி எல்லையை மாற்றிக்கொண்டே போவார்களா? திராவிட நாட்டில் இன்பக் கனவு காணும் கன்னடம் இல்லாவிட்டால், அங்கிருந்தும் ஓட்டம்; வட ஆற்காடு, செங்கல்பட்டு இல்லாவிட்டால், அங்கிருந்தும் ஓட்டம் பிடிப்போம்; அதுவும் இல்லாவிட்டால், பாண்டிய நாடு, அதுவும் இல்லாவிட்டால், தென்பாண்டி

நாடு, அதன் பிறகு கன்யாகுமரி, அதுவும் இல்லாவிட்டால் கடைசியில், கடலில் விழுவோம் என்கிறார்கள். உண்மையிலேயே, இந்தப் பத்தாண்டு காலததில், காங்கிரஸ்காரர்கள் ஒன்றுமே செய்யவில்லையா ? காங்கிரஸ்காரர்கள் இந்த பத்தாண்டு காலத்தில், உலகம் போற்றும் வகையில், சாதனைகள் செய்திருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் இவர்களுக்கு தாசானுதாசர்கள் ஆகமாட்டார்கள். இம்மாதிரி பள்ளிக்கூட பையன்களையும் காலேஜ் பையன்களையும் நடத்துவது வருந்தக்கூடிய விஷயமாக இருக்கிறது. அவர்களிடத்தில் துவேஷ மனப்பான்மையை உண்டாககுவதாக இருக்கிறது. இன்றைக்கு அவர்களிடத்தில் துவேஷத்தைக் கிளப்பி விட்டு வேடிக்கை பார்ப்பதாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் ஒத்துழைக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதை எப்படி நம்புவது என்பதுதான் தெரியவில்லை. ஒத்துழைப்பு கொடுக்கிறோம் என்று சொன்னால் அதை யார் நம்புவது. அவர்களுடைய பழைய சரித்திரங்களைப் பார்த்தால் அவர்களிடம் எப்படி திட்டங்களை ஒப்படைப்பது என்பதுதான் தெரியவில்லை. ஒரு இடத்தில் பயிர் செய்யுங்கள் ஒத்துழைக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். மற்றொரு இடத்தில் ஸ்ட்ரைக் செய்யச் சொல்லுகிறார்கள். பேமஸ் அண்டர்கிரவுண்ட் திட்டத்திற்கு பெயர் போனவர்களாயிற்றே. இப்படிப்பட்டவர்களை எப்படி நம்புவது என்பதுதான் தெரியவில்லை. இவர்களை நம்புங்கள் என்று சொன்னால் அதை யாரும் நம்பமாட்டார்கள். நம்பத் தயாராகவும் இருக்கமாட்டார்கள்.

(Deputy Speaker in the Chair.)

அத்துடன் இந்தச் சட்டசபை அங்கத்தினர்கள் ஒத்துழைப்பு பெறுகிறோம் என்று சொல்லப்படுகிறது. (ஒரு கனம் அங்கத்தினர் அவர்களுக்குத்தான் கதரில் நம்பிக்கை இல்லையே). அவர்களுக்கு கிறார்கள். அவர்கள் எல்லோரும் காமராஜர் பேரில் சொல்லுகிறார்கள். அவர்கள் எல்லோரும் காமராஜர் பேதில் சொல்லுகிறார்கள். இந்த நிலைமையில் அவர்கள் இதைப்பற்றி என்ன தெரிந்துகொள்ளப் போகிறார்கள். அடுத்தபடியாக கல்வியில் கனம் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும். அப்படி கவனம் செலுத்தினால் நாடு முன்னுக்கு வரும். பள்ளிப் பையன்கள் பூராவும் தமிழர்கள், தமிழன், திராவிடன் என்ற மனப்பான்மையை பள்ளிப்பிள்ளைகளிடம் பெருக்கப்படுகிறது. தெலுங்கு ராஜ்யத்திலும், கன்னட ராஜ்யத்திலும் இன்பக் கனவு காண வேண்டியதாக இருக்கிறது. கேரளாவில் தங்களுடைய கொள்கையை பரப்புவதற்கு கல்வியை அடிப்படையாக எடுத்துக் கொண்டார்கள் கம்யூனிஸ்ட்கள். அதனால், கல்வி மூலமாக தேசீய மனப்பான்மையை வளர்ப்பதற்கு முற்பட வேண்டும். அந்த முறையில் அரசியல் போகக்கூடாது. ஆகவே நல்ல முறையில் பள்ளிப்பிள்ளைகளுக்கு கல்வி வளரவேண்டியதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். கல்வி முறையில் துவேஷ மனப்பான்மையை வளர்க்காமல் நடக்கவேண்டும். ஆகவே இந்த சமயத்தில் இரண்டொரு விஷயத்தை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஜில்லாக்களை இரண்டாகப் பிரிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதனால் ஏற்படக்கூடிய





நிர்வாகச் செலவைப் பார்க்கக்கூடாது. ஒரு பக்கத்தில் அதிகப்படியாக செலவு ஆகிறது என்று கூச்சல் போடுகிறார்கள். இன்றைக்கு படிக்காமல் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள், படித்துவிட்டு வேலையில்லாமலும் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அவசியம் காப்பாற்ற வேண்டியதாக இருக்கிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே 100 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது என்றால் படிப்பை விட்டு விட்டு சம்பாதிக்க வந்து விடுகிறார்கள். இந்த நிலைமையில் நிர்வாக அமைப்பை அதிகமாக ஆக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் ஜில்லாக்களை இரண்டாகப் பிரிக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. பல டெவலப்மெண்ட் வேலைகள் நடக்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு கலெக்டரால் ஜில்லா பூராவையும் சுற்றிப் பார்க்க முடியாமல் இருக்கிறது. எல்லா இடத்திற்கும் போய் வருவதாக இருந்தால் ஆறு மாதங்களாகிறது. ஏனென்றால் ஜில்லாவின் அளவு சுமார் 150 மைல்கள் இருக்கின்றன. இவ்வளவு பெரிய ஜில்லாக்களாக இருப்பதால் அவர்களுக்கு தங்களுடைய வேலையை சரி வர செய்வதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சேலத்தை எடுத்துக்கொண்டால் வடக்கு சேலம், தெற்கு சேலம் என்று இரண்டாக பிரிக்க வேண்டியதாக இருக்கிறது. இங்கும் வடக்கு தெற்கு என்று வருகிறது. அங்கு வேலை செய்யக்கூடிய அதிகாரிகளும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப்போய் வேலை செய்வதாக இருந்தால் வெகு கஷ்டமாக இருக்கிறது. அதனால் அவர்கள் பெரும் சங்கடப்படுகிறார்கள். இப்படிப் பட்ட கஷ்டங்களால் ஜில்லாக்களை இரண்டாகப் பிரிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எங்களைப்போலுள்ளவர்கள், அதிகாரிகளைப்போய் பார்ப்பதாக இருந்தாலும் ரொம்ப தூரம் ரயிலில் போக வேண்டியதாக இருக்கிறது. ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசருக்கு 6 அல்லது 8 பிளாக்குகளுக்கு மேல் இருக்கக் கூடாது. அப்பொழுதான் அவர்கள் தங்களுடைய வேலைகளை நன்றாக செய்ய முடியும். பெரிய அளவில் ஜில்லா இருந்தால் டிபுடி கலெக்டராலும் சரிவர வேலை செய்ய முடியாது.

அடுத்தப்படியாக உச்ச வரம்பைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. உச்ச வரம்புச்சட்டம் கொண்டு வரவேண்டியது ரொம்பவும் அவசியம்தான். அதை சீக்கிரத்தில் கொண்டு வர வேண்டும் என்று மிக பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக என். ஜி. ஓக்கள். அவர்களுடைய பிரச்சனைதான் இப்பொழுது தேசத்தில் இருக்கிறது. மத்திய சர்க்காருடைய சம்பளக் கமிஷன் அறிக்கை வெளியானதிலிருந்து அவர்களுடைய நிலை சங்கடமாக இருக்கிறது. அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான ஆசை அதிகரித்திருக்கிறது. சமீபத்தில் மூன்றும் தேதி அவர்களுடைய கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்கு நான் சென்றிருந்தேன். தங்களுக்கு இடைக்கால நிவாரணம் வேண்டும் என்று தீர்மானம் போட்டு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், மாகாண அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அப்படி இருக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடாது என்று ஏற்கெனவே பண்டித நேரு சொல்லியிருந்தும், இப்படி இருக்க வேண்டியது அவசியந்தான்

என்று கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அந்த சிபாரிசை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் சொல்லுகிறார்கள். இது ஒரு முக்கியமான கருத்து. இதை எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியதாகத்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட வித்தியாசம் தேவையில்லை என்றுதான் நான் சொல்லுவேன். இடைக்கால நிவாரணத்தைப்பற்றி நான் சொன்னேன். பெரிய நிவாரணம் கிடைக்கும்போது ஏன் இடைக்கால நிவாரணம் வேண்டும், அதனால் இடைக்கால நிவாரணத்திற்கு ஆசைப்பட வேண்டாம், அப்படி இடைக்கால நிவாரணம் கொடுத்துவிட்டால் நிவாரணம் கேட்கக்கூடிய வேகம் குறைந்து போய்விடும். அதனால் பெரிய நிவாரணம் கிடைக்க இருக்கும்போது இடைக்கால நிவாரணத்தைக் கேட்காதீர்கள் என்று சொன்னேன். சர்க்கார் நல்ல முறையில் நிவாரணம் அளிப்பார்கள் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, நல்லபடியாக நிர்வாகம் நடப்பதைக்கண்டு பாராட்டி, என்னுடைய வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

• **Sri M. P. SARATHI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அரசாங்கத்தினுடைய கொள்கையை விளக்கும், சமீபத்தில் நடந்த கவர்னர் பெருமானுடைய உரையைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இதற்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ அமைச்சர்கள் எல்லோரும் நாசானு நாசனாகவா இருக்கிறார்கள் என்று சொன்னார். அப்படி அவரே சொல்லிக்கொண்டு வந்தார். அதைப் பற்றியும் ஒன்று குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். இன்றைக்கு சுதந்திரம் வந்து பனிரெண்டு ஆண்டுகளாகின்றன. மக்களுடைய நிலைமை எவ்வளவு மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை அப்படிப்பட்ட நாசானு நாசர்கள் உணருகிறார்களா என்று கேட்கிறேன். ஆனால் எனக்கு அதைப்பற்றி ஒரு சந்தேகம் இருக்கிறது. இந்த பனிரெண்டு வருஷ காலத்தில் ஒரு படி அரிசி ரூ. 1-4-0-க்கு விற்கப்படுகிறது. ஒரு வீசை புளி ஐந்து ரூபாயாக விற்கப்படுகிறது. ஒரு வீசை மல்லி மூன்று ரூபாயாக விற்கப்படுகிறது. இதை கேட்க வெட்கமாக இல்லையா என்று கேட்கிறேன். இப்படி மக்களுடைய அன்றாட உணவுப் பொருள்களின் விலை ஏறிக் கொண்டே போவதை கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டுவிட்டு அப்படிப்பட்ட விலையேற்றம் இந்நாட்டிற்கு நல்லதுதான் என்ற முறையில் பேசியிருக்கிறார். உணவுப் பொருள்களின் விலையேற்றத்திற்கு இப்படி சொல்லி இருப்பதைப் பார்த்தால் ஏதோ கொள்ளை லாபம் அடிக்கிறவர்களையும் பதுக்கல்காரர்களையும் இன்னும் அதிகமாக கொள்ளை அடியுங்கள், இன்னும் அதிகமாக பதுக்கி வையுங்கள் என்று சொல்லி அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதுபோல்தான் தோன்றுகிறது. அந்த முறையில்தான் அவருடைய உரை இருக்கிறது. விலையைக் குறைக்க என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஒன்றும் இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்பதற்காக கனம் அமைச்சர் அவர்களுக்குக் கூட சர்வகட்சிகள் கூடி ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. இதுவரை





அந்த மகஜர் என்னவாயிற்று என்று தெரியவில்லை. புளி விலை உயர்ந்து விட்டது என்றால் புளிய மரங்களை வெட்டுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால் அதை ஏன் தடுக்கவில்லை. இதை ஒரு காரணமாகக் காட்டினால் பொறுப்பற்ற முறையில் பேசுவதாகத்தான் இருக்கிறது. அமைச்சர்கள் இந்த அளவில் போய்க்கொண்டிருப்பது சரியல்ல. புளி விலையின் ஏற்றத்திற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்து அதற்கு பரிகாரம் தேட வேண்டும். புளிய மரங்களை வெட்டுவதால் புளியங்கொட்டைகளை நடுங்கள், மரம் வளர்ந்த பிறகு புளி நிலைமை சரியாகிவிடும் என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பொறுப்பற்ற முறையில் பேசுகிறார்கள். உண்மையில் புளி விலை ஏறுவதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடித்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். புளியங்கொட்டைகளை நட்டு விடுவதனால் புளியின் விலை இறங்கி விடாது.

கவர்னர் பெருமானுடைய உரையில் இன்னும் ஒன்றை குறிப்பிட்டிருக்கின்றார். பருவ மழை நன்றாக இருக்கிறது, விலைவாசி நன்றாக இருக்கிறது, நாட்டில் அமைதி நன்றாக நிலவி வருகிறது, நல்ல விளைச்சல் ஆகி இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அப்படி இருந்தும் விலைவாசிகள் ஏன் ஏறிக்கொண்டே இருக்கிறது என்று கேட்கிறேன். இதற்கு எனக்கு ஒரு காரணம் புலப்படுகிறது. பதுக்கல்காரர்களையும், கொள்ளை லாபம் அடிக்கிறவர்களையும் காப்பாற்றுவதற்காக இப்படிச் சொல்லுகிறார்களோ என்று கூட எனக்குத் தோன்றுகிறது. அது மட்டுமல்ல. அரசாங்கத்தில் இப்பொழுது விலை கட்டுப்பாடு செய்வதற்கு என்று ஒரு இலாகா இருக்கிறது. அது என்ன வேலை செய்துகொண்டிருக்கிறது என்று கேட்கிறேன். இந்த இந்த விலைக்குத்தான் விற்க வேண்டும் என்று அவர்கள் கட்டுப்பாடு செய்தார்களா என்று கேட்கிறேன். இது சம்பந்தமாக அந்த இலாகாவிலிருந்து எந்த விதமான அறிக்கையும் வந்ததாகவே தெரியவில்லை. அந்த இலாகா என்ன செய்து கொண்டிருக்கிறது என்று கேட்கிறேன். அதைப்பற்றி அரசாங்கம் விளக்கியிருக்கலாம். அதைப்பற்றி ஒன்றும் கவர்னர் உரையில் காணோம். ஆகவே இப்படி இல்லாமல் இருப்பதால் இவைகள் எல்லாம் சர்க்காருடைய செய்கையாக இருக்குமோ என்று சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். குறிப்பாக ஏழை மக்களும், மத்தியதர மக்களும் வாங்கும் சக்தியை இழந்து இன்றையதினம் தவிக்கிறார்கள். எத்தனை அதிகமாக விற்றாலும் சரி என்று வருமானம் ஆயிரக்கணக்கில் உள்ளவர்கள் தான் வாங்கி வாங்கி சுகமாக இருக்கிறார்கள். எந்த விலையானாலும் சரி என்று குறிப்பிட்ட சம்பளம் வாங்குகிறவர்கள், சர்க்கார் உத்தியோகத்தில் உள்ளவர்கள், ஏழைத் தொழிலாளர்கள் ஆகியோர்கள் எப்படி வாங்கி ஜீவனம் செய்ய முடியும் என்பதை சர்க்கார் உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் முதல் அமைச்சர் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிட்ட போது நாட்டிலே நோட்டு அடிப்பதால் விலை ஏறியிருக்கிறது என்று சொல்வது பயித்தியக்காரத்தனமாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். நோட்டு அடிப்பதால் விலை ஏறிவிடாது என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது, நோட்டு அடிப்பதால் என்ன கெடுதல் என்று பொதுக் கூட்டத்தில் சொல்வது

[Sri M. P. Sarathi] [8th December 1959

எனக்கு சரியாகப்படவில்லை. எந்தப் பொருளாதார நிபுணர் அவருக்கு இந்தக் கருத்தைச் சொன்னார்களோ தெரியவில்லை. அதிகமாக நோட்டு அடிப்பதனால் ரூபாய் மதிப்பு குறைந்துவிடும் என்றுதான் பெரிய பெரிய பொருளாதார நிபுணர்கள் எல்லாம் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் வடக்கே உள்ளவர்களுக்கு தாசானுதாசர்களாகப் பல விஷயங்களில் இருப்பது சரியல்ல என்று மணியகார் அவர்கள் சொன்னார்கள். இவர்கள் வேண்டுமானால் இந்த ஒரு விஷயத்தில் தாசானுதாசர்களாக இருந்து அவர்கள் அடிக்கிற நோட்டுகளில் பெரும்பகுதியை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று முக்கியமாக மின்சாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வடாற்காடு மாவட்டத்தில் மின்சார கார்ப்பரேஷன் அமைந்து அதன் மூலமாக பல கிராமங்களுக்கு, பலவிடங்களுக்கு மின்சாரம் விஸ்தரித்து வருகிறார்கள். ஆனால் இது இப்போது என்ன நிலவரத்தில் போய்க் கொண்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். அந்த கார்ப்பரேஷனையும் மின்சார போர்டார் எடுத்துக்கொண்டுவிடப்போகிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் இன்னும் முப்பது கிராமங்களுக்கு மேல் மின்சாரம் கொடுக்காமல் இருக்கிறார்கள். எல்லா எஸ்டிமேட்டுகளும் போட்டு தயாராக வைத்து இருந்தும் அதைச் செய்வதற்கு வசதி இல்லையென்று விட்டுவிட்டார்கள். அதன் காரணமாக அடுத்த பெரிய கிராமங்களில் கூட மின்சாரம் இல்லாமல் இருக்கிறது. இதற்கு அவர்களிடத்தில் என்ன காரணம் என்று கேட்டால் "நாங்கள் சர்க்காரிடம் பத்து லட்சம் ரூபாய் கடன் கேட்டிருக்கிறோம். அது வந்தால் மின்சாரம் கொடுக்க முடியும்" என்று சொல்லி விட்டார்கள். மின்சார போர்டாருக்கு எழுதி அந்த விவரத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் அப்புறம் அங்குள்ள சூப்பரின்டெண்டிங் என்ஜினியரைப் போய்ப் பார்த்தபோது எலெக்டிரிஸிடி கார்ப்பரேஷனை சர்க்காரே எடுத்துக் கொள்ளவேண்டும், அப்போதுதான் இந்த கிராமங்களுக்கு மின்சாரம் வரும் என்கிறார். இப்படியே போய்க் கொண்டிருந்தால் பல கிராமங்களின் கதி என்ன ஆகிறதென்று எனக்குத் தெரியவில்லை. இப்படியே விட்டுக் கொண்டிருந்தால் நிச்சயமாக நன்மை அடைய முடியாது என்பதை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவந்து, ஒன்று உடனடியாக இவர்கள் அந்த கார்ப்பரேஷனை எடுத்து நடத்தி விவசாயிகளுக்கு வேண்டிய நல்ல பல வேலைகளைச் செய்ய வேண்டும். அப்படி எடுத்துக் கொள்வது இயலாத காரியம் என்றால் அவர்கள் கோரியிருக்கும்படியான கடன் தொகையையாவது கொடுத்து எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்படவேண்டும் என்றாவது உத்தரவு போடவேண்டும், என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்றை வடாற்காடு மாவட்டத்தில் ஆம்பூரில் ஏற்படுத்தி இந்த ஆண்டிலேயே வேலை தொடங்கும் என்று சென்ற ஆண்டில் சொல்லப்பட்டது. இதுவரைக்கும் அந்த சர்க்கரை ஆலை எப்போது தொடங்கும் என்று சொல்வதற் கில்லை. ஜனவரியில் வேலை தொடங்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த வேலை செய்கின்ற இடத்தில் போய்ப்



8th December 1959] [Sri M. P. Sarathi]

பார்த்தால் இரண்டு வருஷம், மூன்று வருஷம் பிடிக்குமோ என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் உடனடியாக வடாற்காடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க சர்க்கார் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக நம் நாட்டிலே 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் எந்த எந்த வேலைகளை எடுத்துக் கொள்ளலாம் என்பதை முடிவு செய்வதற்காக தென் ராஜ்ய அமைச்சர்கள் எல்லாம் ஒரு மகாநாடு கூட்டியதாக நான் பார்த்தேன். அந்த மகாநாட்டில் தென்னாட்டிற்குரிய நியாயமான உரிமைகளை மத்திய சர்க்கார் வழங்கவேண்டும் என்றும், தென் ராஜ்யங்களை மத்திய சர்க்கார் புறக்கணிக்கிறது என்பதாக மூன்று ராஜ்ய மந்திரிகளும் கூடிப் பேசியதாக நான் கேள்விப்படுகிறேன். இது மிகவும் சந்தோஷமான செய்தியாக இருந்தபோதிலும் தென்னாட்டுக்கு வேண்டிய பல திட்டங்களையும் மத்திய சர்க்காரிடத்தில் இருந்து பெறுவதற்கு ஒரு வசதியைத் தேடிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முக்கியமாக தமிழ்நாடு பலபல தொழிற்சாலைகளை உடைய நாடாகத் திகழ்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாக முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* SRIMATHI P. K. R. LAKSHIMIKANTHAMMAL: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி கூறும் முகத்தான் நான் சில வார்த்தைகள் கூற விழைகிறேன். இந்த உரையிலே கணிசமான அளவில் நாட்டில் பருவ மழை பெய்திருக்கிறது என்ற விஷயம் குறிப்பிட்டிருப்பது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நம்முடன் இயற்கையும் ஒத்துழைக்க விழைந்ததற்கு நாம் இயற்கைக்கும் நன்றிசெலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இருப்பினும் கூட பல பிரச்சனைகளை எதிர் நோக்கி நாம் இருக்கக் கூடிய இந்தக் காலத்திலே நாம் பல தொழிற்சாலைகளையும், பல அணைக்கட்டுகளையும் வெற்றிகரமாக ஏற்படுத்தி தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் பல மடங்கு உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைப்பற்றி, மறுக்க முடியாது. நாம் அதிகமான அளவிலே முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்பதைப்பற்றிச் சிறிதேனும் குறை சொல்வதற்கு இயலாது. ஆனால் உணவு உற்பத்தியை நாம் நினைக்கிறபோது கணிசமான அளவில்தான் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். என்றாலும்கூட, உணவு விலையேற்றம் இன்று பெரும் அளவில் காணப்படுகிறது கொஞ்சம் அச்சத்தையே கொடுக்கிறது. இப்படி விலைகள் ஏறியிருக்கக் கூடிய காலத்தில் மக்கள் எப்படி தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் அதை எதிர்நோக்கி வாழ முடியும் என்கிற பிரச்சனை பெரிய பிரச்சனையாக இருந்து வருகிறது. நகரப்புறத்தில் இருக்கிற என்போன்றவர்கள் அவர்களுடைய கஷ்டத்தை நன்றாக உணர முடிகிறது. ஆனால் அதனுடைய விலையேற்றம் விவசாயிகளுக்கு ஓரளவு நன்மை தரக்கூடியதாக இருக்கிறது என்று சில அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். உண்மையாகவே விவசாயிகளுக்கு நன்மை தரும் பட்சத்தில் நாம் அதை வரவேற்கிறோம். அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறவேண்டும். அவர்கள்

[Srimathi P.K. R. Lakshimikanthammal] [8th December 1959

எல்லாவிதமான வாழ்க்கை வசதிகளையும் பெறவேண்டும் என்பது தான் எங்களது கோரிக்கையும் கூட. ஆனால் அதிக பட்சமாக நாம் நினைத்துப் பார்க்கும்போது, நாம் நினைக்கிற அளவு விவசாயிகள் இந்த விலையேற்றத்தினால் நன்மை அடையவில்லை. விலையேற்றத்திற்குக் காரணமாக இருப்பவர்கள் வியாபாரிகள்தான். லாபத்தில் பெரும் பகுதி இவர்களுக்குதான் போகிறது. மேலும் விலை உயர்வு என்று சொல்லும்போது நாம் அரிசியைப் பற்றி மாத்திரம் நம் மனத்தில் நினைத்துக் கொள்ளக் கூடாது. அரிசி மக்களுக்கு முக்கியமான உணவாக இருக்கிறது. அந்த உணவின் பிரச்சனை அதனுடைய உற்பத்தியைப் பொறுத்தும், மக்களுடைய பெருக்கத்தைப் பொறுத்தும் பற்றாக்குறை ஏற்பட்டுக்கொண்டு தான் இருக்கும். அந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வது நம் அரசாங்கத்தினுடைய பொறுப்பாக இருக்கிறது.

அதற்கு அடுத்தபடியாக நமக்கு வேண்டிய முக்கியமான பொருள்களாக இருக்கக்கூடிய புளி, மிளகாய், மல்லி போன்றவைகள் இன்று அதிகமான அளவில் விலை ஏறியிருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் உற்பத்திக் குறைவா அல்லது இந்தப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கக் கூடியது ஒரு காரணமா? அல்லது வியாபாரிகள் அதை பதுக்கி வைத்துக்கொண்டு அவைகளை வெளியே உலாவ விடாமல் செய்திருக்கிறது ஒரு காரணமா என்பதைப்பற்றியெல்லாம் நாம் சிந்தித்து ஆராயவேண்டியிருக்கிறது. ஏனென்றால், ஒரு பொருள் நம் கையில் இருந்தாலும்கூட அந்தப்பொருள்கள் வருவதற்கு வாகனம் கிடைக்கவில்லை என்று சொன்னால் உடனடியாக அந்தப் பொருள்களை மறைத்து வைத்துக் கொண்டு ஒன்றுக்கு இரண்டு மடங்காக விலையை ஏற்றி விடுகிறார்கள். அண்மையில் சிமென்டைப் பற்றி நாம் நன்கு அறிந்தோம். அதே போல் உற்பத்தியாகும் இடங்களில் பொருள்கள் இருந்தாலும் கூட அது வருவதற்கு தாமதமாகும் என்று தெரிந்தவுடனேயே விலையை ஏற்றி விடுகிறார்கள். அப்படி அதிகமாகக் கிடைக்கும் தொகை விவசாயிகளுக்கு போய்ச்சேருகிறதா என்றுதான் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இந்த விலை உயர்வைத் தடுப்பதற்கு நாம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் சபாநாயகர் மூலம் மந்திரி சபைக்கு சொல்ல ஆசைப்படுகிறேன். இரண்டாவதாக, சிலர் கண்ட்ரோல் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். சிலர் கண்ட்ரோல் இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். உண்மையாக கண்ட்ரோல் இருக்குமானால், கண்ட்ரோல் இருக்கிறது என்ற காரணத்திற்காக பாதிச் சரக்குகளை பதுக்கி வைத்து விடுகிறார்கள் என்பது என் கருத்து. ஆகவே கண்ட்ரோல் இல்லாமல் இருக்கும் பட்சத்தில் நம் நாட்டில் விளையும் பொருள்கள் அனைத்தும் திறந்த மார்க்கட்டில் வரும் சூழ்நிலை ஏற்படும். இப்பேர்ப்பட்ட குழப்பங்கள் ஏற்படாது என்று நான் கருதுகிறேன். ஆகவே, கண்ட்ரோல் இல்லாவிட்டால் நல்லது என்பதுதான் எனது கருத்தாகும். ஆனால் கண்ட்ரோல் இல்லாதிருக்கும்போது வியாபாரிகள் விலையை ஏற்றிவிடுவார்களே என்று கருதலாம். அவ்விதம் விலை ஏற்றம் ஆனாலும் அந்த நேரத்தில் நாம் அரிசியை கொள்முதல் செய்து



[Srimathi P. K. R. Lakshmikanthammal] [8th December 1959

வைத்துக் கொண்டிருக்க வேண்டும். சர்க்கார் அப்பொழுது நியாய விலைக் கடைகளைத் திறந்து அதன் மூலம் மக்களுக்கு சப்ளை செய்ய வேண்டும். எப்பொழுது நாம் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொன்னால் அறுவடைக் காலங்களில் நமக்கு வேண்டிய 2 லட்சம் அல்லது 3 லட்சம் டன்களை, டெண்டர் அழைத்தோ அல்லது லெவி முறையிலோ நாம் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். நம் கையில் அதை அரிசியாக வைத்துக் கொள்ளாமல் நெல்லாக வைத்துக் கொண்டு அவ்வப்போது அந்த நெல்லை மில்களில் அரைத்தோ அல்லது கைக்குத்தல் செய்தோ மக்களுக்கு சப்ளை செய்யலாம். இதே போன்று புளி, மிளகாய் போன்றவைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று கேள்விப்படுகிறோம். அவைகளில் நாம் நமது நாட்டின் தேவைக்காக வைத்துக்கொண்டு மீதியைத்தான் வெளி நாடுகளுக்கு அனுப்பவேண்டும். ஏற்றுமதியை மத்திய சர்க்கார் செய்திருக்கிறது என்று சொன்னாலும் நமது அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு சிபார்சு செய்து புளியையும், மிளகாயையும் ஏற்றுமதி செய்யாமல் தடுத்து நமக்கு வேண்டியதை, நமக்கு உண்பதற்கு வேண்டிய வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக தென்னாடுகளில்தான் சிகப்பு மிளகாயையும், புளியையும் அதிகமாக உபயோகித்து வருகிறார்கள். வடநாட்டில் புளியை அதிகமாக உபயோகிப்பது கிடையாது. அதனால் ஒருவேளை அங்குள்ளவர்களுக்கு அதன் மதிப்பு அதிகமாக தெரியவராது என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக உச்ச வரம்பு பற்றி, புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்லி வருகிறார்களே தவிர உச்ச வரம்பு வரக் காணோமே என்று சில அங்கத்தினர்கள் அங்கலாய்க்கிறார்கள். உச்ச வரம்பின் மிக சமீபத்தில் நாம் இப்போது இருக்கிறோம். வருகிற மார்ச்சுக்குள் அது வந்து விடும் என்று நம்பிக்கை என் போன்றோருக்கு இருக்கிறது. அந்த உச்ச வரம்பு வரும் போது அதுபற்றி நாம் சொல்ல வேண்டிய விஷயங்களை கூறிக் கொள்ளலாம் என்றிருந்தாலும் இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உச்ச வரம்பு வரும்போது, ஒரு குடும்பத்தை எடுத்துக் கொள்வோம். அந்தக் குடும்பத்திற்கு உச்ச வரம்பு என்று 20 அல்லது 40 ஏக்கர் என்று வைத்துக் கொண்டால் பெண்களுக்கு இப்பொழுது நாம் சொத்துரிமை கொடுத்திருக்கிறோம், வேறு உரிமைகளும் கொடுத்திருக்கிறோம். அப்பேர்ப்பட்ட ஒரு பெண் அல்லது மனைவி சீதனமாக ஒரு சில நிலங்களை வைத்துக் கொண்டிருந்தால் அல்லது தான் சம்பாதித்து அந்தப் பணத்தைக் கொண்டு நிலங்கள் வாங்கி வைத்திருந்தால் அந்நிலையில் கணவனுக்கு எவ்வளவு உச்ச வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த அளவு அந்த மனைவிக்கும் அல்லது அந்தப் பெண்ணுக்கும் இருக்கவேண்டுமென்பதுதான் என் அவா. அந்த ஒரு கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு இதை அவசியமாக செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், நமது நாட்டில் இப்பொழுதுதான் பெண்களுக்கு சொத்துரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இப்பொழுது தான் அதிகமாக மதிப்பு ஏற்பட்டு வருகிறது. ஆகவே, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய மதிப்பைக் குறைக்காமல் இருப்பதற்கு இந்த நிலத்தின் சார்பிலும், அவர்களுக்கு சீதனமாகச்

கிடைத்த சொத்துக்களையும், கணவனுடைய நிலச் சொத்துக்களோடு சேர்த்து கணக்கிடக்கூடாது என்பதை மிக முக்கியமாக இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். அதற்கு அடுத்தபடியாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறியிருக்கிறபடி 12.75 லட்சம் டன் அரிசி உற்பத்தி லக்ஷியமாகாக் கொண்கொண்டிருக்கிறோம். 9 லட்சம் டன்தான் நாம் உற்பத்தி செய்ய முடிந்திருக்கிறது. மூன்று லட்சம் டன் குறைவாகயிருப்பதற்குக் காரணம் ரசாயன உரம் இல்லாதிருந்ததுதான் என்று உரையில் கூறப்பட்டிருக்கிறது: ரசாயன உரத் தொழிற்சாலை 1960-61-ல் வேலை செய்ய ஆரம்பித்து விடும் என்று கண்டிருக்கிறது. அது உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, ஜனத்தொகை பெருகிவரும் இந்நேரத்தில், உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த உரத் தொழிற்சாலையை அதிசீக்கிரமாக ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கவர்னர் பெருமானது உரையில் பெரிய பெரிய தொழிற்சாலைகளைப் பற்றியும், ஏனைய உற்பத்தியைப் பற்றியும் சொல்லியிருப்பினும் கூட கைத்தறியைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லாமல் இருந்தது, கைத்தறிப் பகுதியிலிருந்து வந்திருக்கிற என்னைப் போன்றவர்கள் வருத்தப்படாமல் இருக்க முடியாது. ஏனெனில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறியை நம்பி வாழும் மக்கள்தான் அநேகம் பேர்கள், என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். அப்படியிருந்தபோதிலும் கூட, கவர்னர் பெருமானது உரையில் அதுபற்றி ஒன்றும் இல்லாவிட்டாலும் கூட அரசாங்கம், கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நிரந்தரமான தொழில் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வசதிகளை செய்து தரவேண்டும். அவர்கள் தொழிலுக்கு வேண்டிய நூலை ஏற்றுமதி செய்வதால் அதன் விலை ஏறி விடுகிறது. சாயம் போன்றவைகள் விலை அதிகமாயிருப்பதின் காரணமாக அவர்கள் உற்பத்தி செய்யும் துணியின் விலையும் ஏற்றம் கொடுத்து விடுகிறது. ஆகவே, நாம் ஏற்படுத்தப் போகிற கூட்டுறவு நூற்பு ஆலைகளிலிருந்து உண்டாகிற அத்தனை நூலையும் கைத்தறிக்காக கொள் முதல் விலையில் எல்லா நெசவாளிகளுக்கும் கொடுக்கப்படவேண்டும். அதுவும் அதன் அடக்க விலைக்கு கொடுக்கப் படவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் ஒரு நிரந்தர்மான தொழிலைப் பெற்று வாழ முடியும். இப்பொழுது அவர்கள் எவ்வளவு பாடு பட்டு, கஷ்டப்பட்டு சம்பாதித்தாலும் கூட நாற்பது ரூபாய்க்கு மேல் அவர்களால் சம்பாதிக்க முடிவதில்லை. அதே நேரத்தில் ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கூப்பாடு போட்டு, சத்தம் போட்டு நூற்றுக் கணக்கான சம்பளம் பெறுகிறார்கள். ஆனால் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் 12 மணி நேரம் குழந்தை குட்டிகளுடன் உழைத்தாலும் கூட 40 ரூபாய்க்கு மேல் அவர்களால் சம்பாதிக்க முடிவதில்லை. ஆகவே, அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு அளிக்கவும், அவர்கள் சரக்கு நல்ல முறையில் விற்பனையாவதற்குரிய முறையில் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவும் சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





*SRI S. THANGAVELU: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின் மீது இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஆற்றிய உரையில் நல்ல முறையில் நாட்டினுடைய நிர்வாகத்துறை நல்ல முறையில் இயங்கி வருவதாகவும், நாட்டில் ஓராண்டு காலமாக எந்தவிதமான கலவரங்களும் இல்லாமல் இருந்ததைப்பற்றி பாராட்டியிருக்கிறார். அதை நானும் பாராட்டிக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, பொதுவாக பருவ மழை எல்லா ஜில்லாக்களிலும் பெய்திருக்கிறது என்றும் சில ஜில்லாக்களில் பருவ மழை தவறி விட்டது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இம்மாதிரிப்பட்ட பருவ மழை காலா காலங்களில் இல்லாததின் காரணமாக தென் ஆற்காடு ஜில்லாவில் அதிகமாக பல இடங்களிலும் நாற்றுவிடுவதற்கு வழியில்லாமலும், நாற்று நடும் காலங்களில் தண்ணீர் இல்லாமலும் நெருக்கடியான நிலைமை இருந்து வந்திருக்கிறது. அதே சமயத்தில் விவசாய பெருங்குடி மக்களுக்கு வேண்டிய உரங்களும், அமோனியம் சல்பேட் போன்ற ரசாயன உரங்களும், மற்றும் பல வசதிகள் கொடுத்திருந்தும், காலா காலங்களில் மழை பெய்யாமல் இருந்தது. இப்போது அங்குள்ள மக்கள் எல்லாம் திருப்தி அடையக் கூடிய அளவில் பருவ மழை பெய்திருக்கிறது. ஆகவே இந்தச் சமயத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் சர்க்கார் அதிகமாக செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எனக்கு முன்பாக பேசிய சில அங்கத்தினர்கள், உணவுப் பொருட்களின் விலை எல்லாம் உயர்ந்து விட்டது, அவற்றையெல்லாம் குறைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். இவ்விதம் விலைகளை எல்லாம் குறைக்காவிட்டால் பல கஷ்டங்கள் வரும் என்றும் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் விவசாய பெருங்குடி மக்களுக்கு கிடைக்கவேண்டிய சாமான்களின் விலையும் குறைய வேண்டும். விவசாயக் கூலிகள் எல்லாம் குறைந்து விட்டது. இப்போது நாற்று நடவேண்டுமானால் ஐந்து அணா கூலி கொடுக்கப்படுகிறது. ஆகவே விவசாய தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்ய வேண்டும். அதோடு விவசாயிகளுக்கு தேவையான ரசாயன உரங்கள் எல்லாம் அதிக விலையாக இருந்து கொண்டிருக்கிறது. பிண்ணாக்கு விலையும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இவைகளின் விலையெல்லாம் குறைய வேண்டும். அப்போதுதான் உணவுப் பொருட்களின் விலை குறைந்தாலும் விவசாயிகள் பாதகமடையாமல் இருப்பார்கள். மின்சாரத்தைப் பொறுத்தமட்டில் தென்னாற்காடு ஜில்லாவில் பல கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் சர்க்காரை பாராட்டுகிறேன். அதே சமயத்தில் இதுவரையிலும் மின்சார வசதி கிடைக்காத ஓட்டி பிர்க்கா, பெருமாள்நாயக்கன் பாளையம், குள்ளஞ்சாவடி, குறிஞ்சிப்பாடி போன்ற பகுதிகளுக்கும் உடனடியாக மின்சார சப்ளை கிடைக்கச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு காடாம்புலியூர் பிர்க்காவில்தான் முதலாவதாக தேசிய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டிருந்தும் அந்த பிரதேசத்தை விருத்தி

[Sri S. Thangavelu] [8th December 1959

செய்ய முடியவில்லை. காரணம் அங்கு போதிய அளவு தண்ணீர் இல்லை. அங்கு போர்வெல் மூலமாக அதிகமான அளவில் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். இதைப்பற்றி கடலூர் வந்திருந்த கனம் விவசாய அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். அந்த பகுதி முழுவதும் குழாய் கிணறுகளைக்கொண்டு நிரப்புவோமானால்தான் அந்த இடங்கள் எல்லாம் விவசாயம் செய்வதற்கு ஏற்றதாக இருக்கும். அதோடு வாலாஜா என்ற ஏரி, கடலூர் தாலுகாவுக்கும், சிதம்பரம் தாலுக்காவுக்கும் இடையில் இருக்கிறது. அந்த ஏரியிலிருந்து கால்வாய் மூலம் வடலூர், குள்ளஞ்சாவடி, குறிஞ்சிப்பாடி முதலிய இடங்களுக்கு தண்ணீர் கொண்டு போவதாக இருந்தால் அந்த இடங்களில் எல்லாம் விவசாயம் செய்ய முடியும். இதோடு அங்கு இப்போது செய்யப்படுகின்ற புஞ்சை விவசாயத்தை எல்லாம் நஞ்சை விவசாயமாக மாற்ற முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே போன்று கடலூர் ஓ. டி.க்கு அருகில் கொண்டங்கி ஏரி என்ற ஒரு ஏரி இருக்கிறது. அதை இப்போது இருப்பதை விட இன்னும் ஆழப்படுத்தினால், அதன் மூலமாக சுமார் 20 ஆயிரம் ஏக்கர்கள் சாகுபடிக்கு கொண்டு வர முடியும். மேலும் மலட்டாறு என்கிற ஆறில் இப்போது தண்ணீர் நிறைந்து போய்க் கொண்டிருக்கிறது. பெண்ணை நதியிலிருந்து பிரிந்து திருவெண்ணெய்நல்லூர், அரசூர் வழியாக குறுக்கே போய் திருச்சி ட்ரங்க் ரோட்டின் அருகில் போய் சேருகிறது. மலட்டாரில் திருச்சி ட்ரங்க் ரோடில் 16 கண்கள் கட்டப்பட்டிருக்கிறது. இப்போது இதிலுள்ள தண்ணீர் எல்லாம் தெற்கே நோக்கி விழுந்து கொண்டிருக்கிறது. இதை தடுத்தி நிறுத்தி உபயோகப்படுத்தினால் கரையோரங்களில் இருக்கக்கூடிய புஞ்சைகளும் நஞ்சைகளும் பயன்பெற முடியும். அதோடு பக்கத்தில் இருக்கின்ற கிணறுகளில் எல்லாம் ஊற்று எடுத்து அதன் மூலம் ஏழை விவசாயிகள் பயிர் செய்வதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தக்காரியத்தை அரசாங்கம் உடனடியாக செய்யவேண்டும். அது மட்டுமல்ல, அரிஜன பெருங்குடி மக்களுக்கு அரசாங்கம் கல்வி சலுகை, ஸ்காலர்ஷிப் சலுகை, உணவு வசதி, இடவசதி முதலிய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்திருக்கிறது. அதற்காக நான் சர்க்காரை பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நிலச்சீர்திருத்தச் சட்டம் வரப்போகும் இந்த நேரத்தில் ஆங்காங்கே ஏழை விவசாயிகள் பத்து வருடம், பதினைந்து வருடம், ஐந்து வருடம் என்று சில அரிஜனங்கள், மற்றும் பல பிற்பட்ட வகுப்பினர் தாங்களாகவே சில புறம்போக்கு நிலங்களில் பயிரிட்டு வருகிறார்கள். இவர்கள் அரிஜன்ங்கள் மட்டுமல்ல, இவ்விதம் பயிரிடுபவர்கள் யாராக இருந்தாலும், வன்னிய பெருங்குடி மக்களாக இருந்தாலும் சரி, முதலியார்களாக இருந்தாலும் சரி, அல்லது எந்த பிற்பட்ட வகுப்பினர்களாய் இருந்தாலும் சரி, அவர்களுக்கு எல்லாம் அவர்கள் பயிரிட்டு வருகின்ற நிலங்களை எல்லாம் சொந்தமாக பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது அவர்கள் இந்த நிலங்களுக்கான வாய்தா கட்டணங்கள் முதலியவற்றை எல்லாம் செலுத்தி வருகிறார்கள். ஆகவே இவர்களுக்கு எல்லாம் நிலச்சீர்த்திருத்தச்சட்டம் வருவதற்கு முன்னால் இந்த நிலங்களுக்கு எல்லாம் பட்டா வழங்க வேண்டும். அது



8th December 1959] [Sri S. Thangavelu]

மட்டுமல்ல, அரிஜனங்களுக்கு வீட்டு மனை கொடுப்பதற்காக அரசாங்கம் பல இடங்களை ஆர்ஜிதம் செய்து வருகிறது. ஆனால் சில இடங்களில் மனைக்கட்டுக்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கும் இடங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. ஆகவே சர்க்கார் இந்த விஷயத்தில், அரிஜனங்களாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த பிற்பட்ட வகுப்பினர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கும் வீட்டு மனைகள் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு இவ்விதம் ஒதுக்கப்படும் இடத்தில் ஏற்படும் கஷ்டங்கள் என்னவென்றால், விழுப்புரம் தாலுகாவில் தொந்திரெட்டிபாளையம் என்ற இடத்தில் ஹரிஜனங்களிடமிருந்து வீட்டு மனைகள் வாங்குவதற்காக 1,160 ரூபாய் சர்க்கார் வாங்கியிருந்தும்கூட இது வரை அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்படாமல் இருந்து வருகிறது. ஏனென்றால் அங்குள்ள மக்கள் அந்த இடத்தில் அடிக்கடி பயிரேற்றிவிடுகிறார்கள். ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று இருக்கிற இடத்தில் கரும்பு விவசாயத்தை செய்கிறார்கள். அது முடிந்தவுடன் உடனடியாகவே தென்னங்கன்றுகளை போட்டு விடுகிறார்கள். இல்லாவிட்டால் சவுக்கு போட்டு விடுகிறார்கள். அல்லது மணிலாக் கொட்டையை போட்டுவிடுகிறார்கள். இவ்விதம் அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று கணக்கிட்டு சர்வே நம்பர்களை எல்லாம் பார்த்து அதற்கான கணக்குகளை எல்லாம் பார்த்து முடிவு செய்யும்போது இவ்விதமாக பல பயிர்களை போட்டு தடுத்து விடுகிறார்கள். இவர்களுக்கும் அரிஜனங்கள் இந்த இடத்தில் வாழக்கூடாது என்றும் அல்லது அவர்கள் எப்படியாவது கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கட்டும் என்றும் எண்ணுகிறார்கள் சிலர். ஆகவே அவர்களுக்கும் வேறு விதமாக நிலங்களை கொடுத்து இவர்களுக்கும் வீட்டு மனைகளை கொடுப்பதற்கு ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு அரிஜனங்கள் என்று மட்டும் கருதாமல் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் இந்த சலுகையை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு குள்ளஞ்சாவடி, குறிஞ்சிப்பாடி பிர்க்காவில் மின்சாரம் வழங்குவதற்கு வேண்டிய திட்டங்கள் எல்லாம் போட்டு அதற்கான எஸ்டிமேட்டுகளும் தயார் செய்யப்பட்டு சர்க்காருக்கு வந்திருக்கிறது. ஆகவே இந்தப்பகுதிகள் எல்லாம் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால் உடனடியாக இந்த இடங்களுக்கு மின்சார வசதி கிடைக்கச்செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு புறம்போக்கு நிலங்களில் பயிரிட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு எல்லாம் அந்த நிலங்களை எல்லாம் பட்டா செய்து கொடுக்க சர்க்கார் உடனடியாக முன் வர வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன். மேலும் நெல்லிக்குப்பம் பாரி அன்ட் கோ-வில் கடந்த இரண்டு வாரங்களாக சர்க்கரை வேலை செய்து வருகிறது. ஆனால் 300 ஆலைத் தொழிலாளர்களுக்கு இதிலுள்ள தொழிலாளர்கள் இதுவரைக்கும் வேலை கொடுக்கப்படவில்லை. எல்லாம் இங்குள்ள ஒரு சிலர் அமைத்திருக்கின்ற கம்யூனிஸ்டு தொழிலாளர்கள் சங்கத்தில் சேர்ந்தால்தான் வேலைக்கு எடுத்துக்கொள்ளமுடியும் என்று சொல்லி வருவதாக தெரிகிறது. இதையும் சர்க்கார் கவனித்து

ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு கவர்னர் அவர்களுடைய உரையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**SRI M. SELVARAJ** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். (1-00 p.m.) குறிப்பாக கவர்னர் உரையில் போன வாரம் நடந்த வெள்ள விபத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் விட்டிருக்கிறார். அதைப் பார்க்க மிகவும் வருத்தம் ஏற்படுகிறது. குறிப்பாக, தென் ஆற்காடு மாவட்டத்தில் போன மாதம் 28-ம் தேதி பெருத்த மழை காரணமாக விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, சிதம்பரம் தாலுக்காக்களில் கிட்டத்தட்ட 15,000 குடிசை வீடுகள் கீழே விழுந்திருக்கின்றன. அதிலிருந்து மக்கள் குடும்பம் செய்ய இயலாமல் வெளியே பல இடங்களில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் கிட்டத்தட்ட 10,000 ஏக்கர் நிலங்களில் மணல் மேடாக ஆகி பயிர் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நேற்றுக் காலைதான் "டூர் புரோகிராம்" மூலமாகத் தெரிய வந்தது மதிப்பிற்குறிய கக்கன் அவர்கள் அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்திருக்கிறார்கள் என்று. அதைப் பார்க்கும்போது ஏற்கெனவே கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டது போன்று, தேர்தல் காலத்தில் ஊர் ஊராக, கிராமம் கிராமமாக 15 தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்த மந்திரிகள், போன மாதம் 28-ம் தேதி ஏற்பட்ட வெள்ள விபத்திற்கு இந்த மாதம் 8-ம் தேதி விஜயம் செய்கிறார்கள் என்றால் மக்களிடத்தில் இந்த சர்க்கார் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதைக்காட்டுகிறது. ஒரு க்ஷேமநல சர்க்கார் என்று சொல்லக்கூடிய சர்க்கார், மக்கள் அவதிப்படுகிறார்கள் என்றால், விபத்து ஏற்பட்ட இடத்திற்கு மந்திரிகளெல்லாம் நேரடியாகச் சென்று அதிகாரிகளுக்கு வேண்டிய உத்திரவுகளைப் போடவேண்டும். அதிகாரிகளுக்குள்ள அதிகாரம் மிகவும் கம்மியாக இருக்கிறது. அவர்கள் சொல்லுகிறார்கள், நாங்கள் வீடிழந்தவர்களுக்கு வீடு ஒன்றுக்கு 30 ரூபாய்தான் கொடுக்க முடியும், அதுவும் பூரா வீடும் கீழே விழுந்தால்தான் கொடுக்க முடியுமே தவிர ஒரு சுவர் விழுந்தாலும் அல்லது கூரை பிய்ந்து போனாலும் கொடுக்க முடியாது என்று அவர்களுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறார்கள். அவர்களிடம் இருக்கும் அதிகாரம் மிகவும் கம்மியாக இருக்கிறது. ஒரு சிறிய கூரை வீட்டைக் கட்டுவதற்குக்கூட 200 ரூபாய் பிடிக்கும். ஆகையால் இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை உயர்த்தி, குடிசை வீடுகளுக்கு 100 ரூபாய் வீதம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் அங்கே நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலுள்ள மணல் மேட்டை எடுக்க ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் பிடிக்கும். ஆகையால் சர்க்கார் 200 ரூபாய் அளவுக்கு ஸப்ஸிடி மூலமாகக் கொடுத்து அதற்கு வேண்டிய உபயோககரமான வேலைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் அந்தப் பகுதியில் சர்க்காரினால் கொடுக்கப்பட்ட கடன்களைக்கொண்டு விவசாயிகள் கிணறு வெட்டியிருக்கிறார்கள். இப்போது அந்தக் கிணறுகளெல்லாம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.





இந்தக் கிணறுகளையெல்லாம் புதுப்பிக்க சர்க்கார் வசதி செய்து தரவேண்டும். இந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நில வரி வஜா கொடுக்கவேண்டும். அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் சர்க்காரிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுப்பதை ஒரு ஆண்டுக்குத் தள்ளிப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லும் சர்க்கார் விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதில் பின் வாங்குகிறார்கள். குறிப்பாக ஒரு ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் தங்களுடைய நிலங்களைப் பண்படுத்தி நிலங்களில் ரசாயன உரம் உபயோக்க அவர்களுக்கு உரம் கிடைக்கவில்லை. ஆளும் கட்சியில் யார் இருக்கிறார்களோ, யார் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் அதிகாரிகள் பயப்பட்டு, அவர்களுக்குத்தான் உரம் கிடைக்கிறது. ஆளும் கட்சிக்காரர்களுக்குத்தான் வாங்குவதற்கு வழி இருக்கிறது. மற்ற சிறு விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதில்லை. நான் இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் குறிப்பிட்டேன். கிராமங்களிலுள்ள விவசாயிகளுடைய நிலையை கவனித்து மணியக்காரர்களைக்கொண்டு ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நிலம் இருக்கிறது, எவ்வளவு மூட்டை தேவைப்படும் என்று ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று நிர்ணயம் செய்து ரேஷன் கார்டு போன்று ஒரு கார்டு கொடுத்தாவது கிராமக் கர்னங்கள் மூலமாக உரங்களை வினியோகம் செய்யவேண்டுமென்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால் விவசாயப் பொருள்களின் உற்பத்தி பெருகி, நிலங்களுக்கு எரு போட்டு நல்ல முறையில் உற்பத்தி பெருக வாய்ப்பு ஏற்படும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக விவசாயத்திற்கு உறுதுணையாக மின்சாரமானது இப்போது விவசாயிகளுக்கு அதிக அளவுக்குக் கொடுக்கப்படுகிறது. இப்போது அதிக அளவுக்கு கட்டணத்தை அதிகரித்திருக்கிறார்கள். இப்போது மில்காரர்கள் உபயோகிப்பதிலே, ஆயிரம் யூனிட் அல்லது 2,000 யூனிட்டுக்கு மேல் சலுகை கொடுக்கிறார்கள். அதாவது ஒரு யூனிட்டுக்கு ½ அணா அல்லது ஒரு அணா என்று. விவசாயிகளுக்கும் அந்தச் சலுகையைக் கொடுத்தால் மேலும் மேலும் அவர்கள் பம்ப் செட்டுகளை வைத்து விவசாயத்தை நல்ல முறையில் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே விவசாயிகளுக்கும் பெரிய பெரிய மில்காரர்களுக்கும் கொடுக்கும் சலுகையைக் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக இப்போது நடந்த வெள்ள விபத்துக் காரணமாக மேமாத்தூர் அணையிலிருந்து தண்ணீர் பாயக்கூடிய 16 ஏரிகள் உடைபட்டு சேதம் ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இதற்கு உடனடியாக வேண்டிய நிவாரணம் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் வெலிங்டன் ரிஸர்வாயர் என்று ஒன்று இருக்கிறது. அதற்கு வெள்ளக்காலத்தில் மேட்டூரிலிருந்து தண்ணீர் விடவேண்டுமென்று விவசாயிகள் முறையீடு செய்திருக்கிறார்கள். இப்போது வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே

[Sri M. Selvaraj] [8th December 1959

இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புவது ஒரு ஸப்-டிவிஷனல் ஆபீஸரை நியமித்து, மேட்டூரிலிருந்து வெள்ளக்காலத்தில் அந்தத் தண்ணீரை வாய்க்கால் மூலமாகக் கொண்டுவர வேண்டிய வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த கவர்னர் உரையிலே தேயிலைக்கு இருக்கும் ஒரு கட்ட விற்பனை வரியை மாற்றி பல கட்ட விற்பனை வரியாக மாற்றுவதற்கு திருத்த மசோதா வரப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலேயே, பல முனை வரியை எடுத்து விட்டு ஒரு முனை வரி கொண்டுவரவேண்டுமென்று பல தடவைகள் சொல்லியிருக்கிறோம். அதற்கு மாறாக ஒரு முனை வரி இருப்பதை மாற்றி பல முனை வரி கொண்டு வருவது சரியல்ல. அதைப்புனராலோசனை செய்து ஒரு முனை வரியாகக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் அடுத்த மாதம் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்கள் அமைக்கப்போகிறார்கள். ஏற்கெனவேயே பஞ்சாயத்துச்சட்டம் வந்த போது எதிர் தரப்பிலுள்ளவர்கள் சொன்னோம் பஞ்சாயத்தில் யார் இருக்கிறார்களோ அவர்கள்தான் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களில் இடம் பெறவேண்டும் என்று. அப்போது வோட்டர் ஜாபிதாவில் இருக்கக்கூடியவர்கள் ஜில்லா அபிவிருத்திக் கவுன்ஸிலில் இடம் பெற இடமிருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது என்ன நடக்கிறது என்றால் பிளாக் ஏரியாவிலும், நான்-பிளாக் ஏரியாவிலும் பஞ்சாயத்துத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது பஞ்சாயத்துத் தலைவர்களாக இருப்பவர்களுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் தேர்தலில் கலந்து கொள்ள முடியவில்லை. அதுமட்டுமல்ல. யார் யார் பஞ்சாயத்துத் தேர்தலில் கலந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்களோ வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்களோ அவர்களெல்லாம் பஞ்சாயத்துத் தலைவர்களை விலைக்கு வாங்கி விடுகிறார்கள். அப்படியில்லாமல் பஞ்சாயத்துத் தலைவர்களாக யார் யார் இருக்கிறார்களோ அவர்களுக்குள் போட்டியிருக்க வேண்டும் என்று எடுத்துச்சொன்னதற்கு மாறாக வோட்டர் ஜாபிதாவில் இருந்தால் போதும் என்று விதி இருக்கிற காரணத்தினால், பஞ்சாயத்துக்கு வர முடியாதவர்கள், பெரிய பணக்காரர்கள் போட்டியிட முற்படுகிறார்கள். ஆகையால் வருகிற அடுத்த சட்ட சபைக் கூட்டத்திலாவது இந்தச்சட்டத்தை திருத்தி விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக கவர்னர் அவர்கள் உரையிலே பின் தங்கிய வகுப்பாரைப் பற்றியும் ஹரிஜன மக்களுக்கு என்னென்ன சலுகைகள் செய்திருக்கிறோம், என்னென்ன செய்யப் போகிறோம் என்பது பற்றியும் குறிப்பிடாமல் விட்டு விட்டார்கள். நாங்கள் ஹரிஜனங்களுக்காகச் செய்கிறோம் செய்கிறோம் என்று என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் அவர்களுக்காக நல்ல முறையில் எந்த விதமான நன்மையும் செய்ததாகத் தெரியவில்லை. என்னுடைய தாலூகாவில் துறவனூர் கிராமத்தில் ஏழை ஹரிஜன மக்கள் மனைக்கட்டு வேண்டுமென்று விண்ணப்பம் செய்து 4, 5 வருஷ காலமாகியும் ஒரு தகவலும் இல்லை. "லாண்ட் அக்விசிஷன்" முறையில் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைத் திருத்தி ஏழை ஹரிஜன மக்களுக்கு விலக்கு அளித்து விண்ணப்பம் வந்து 6 மாத காலத்திற்குள் மனைக் கட்டு கிடைக்கச் செய்யவேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.



8th December 1959] [Sri M. Selvoraj]

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கிறேன். இதைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசி இருக்கின்றனர். அவர்கள் பேசியதையெல்லாம் நான் கவனமாகக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். கவர்னர் அவர்கள் ஏதோ சொல்லாததைச் சொல்லிவிட்டது போலவும் தாங்கள் ஏதோ மக்களுக்காகவே பிறந்து வாழ்ந்து மக்களுக்காகவே மடிகின்ற திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களைப் போலவும் ஒரு சிலர் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். கவர்னர் அவர்கள் பொதுவாக உள்ளதை நல்ல முறையிலே எடுத்துச் சொன்னார். ஒரு நாட்டிலே உள்ள தலைவர், ஒரு மாகாண கவர்னர் இந்த நாட்டைப்பற்றிக் கூறுகின்ற ரீதியிலே என்னென்ன கூற வேண்டுமோ அவற்றைத் தெளிவான முறையிலே குறிப்பிட்டார். ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஆளும் கட்சியினர் இந்தச் சபையில் உள்ள எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுவதைக் கேட்டு நடக்கவேண்டுமென்ற பாணியில் சொல்லுகிறார்களோ என்பதை நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுக்கு நன்றாக அரசியல் புரிந்திருந்தால் இந்த நிலைக்கு வந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஒரு அங்கத்தினர் "12 வருஷ காங்கிரஸ் ஆட்சியிலே மக்கள் எல்லாம் அவதிப்படுகின்றனர்" என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறி அவரே ஆனந்தப் பட்டுக்கொண்டார். நாட்டிலே இந்த நிலைமை இருக்கிறதென்று எந்தக் கண்ணாடி வைத்துப்பார்த்தாரோ தெரியவில்லை. அவருடைய கண்ணாடிக்கு வேறு விதமாகத் தெரிந்திருக்கிறது. நூற்றைம்பது ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி பற்றி நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் காலத்தில் கிராமங்கள் இருந்த நிலைமையையும் இப்போது கிராமங்கள் உள்ள நிலைமையையும் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இப்பொழுது ரோடே இல்லாத கிராமங்களுக்கெல்லாம் ரோடுகள் போடப்பட்டிருக்கிறது. மற்றும் கிராமங்களில் ஆஸ்பத்திரிகள், கல்விச் சாலைகள், பல உயர்தரப் பள்ளிகள், மருத்துவ விடுதிகள், பூங்காக்கள், ரேடியோ வசதிகள் எல்லாம் ஏற்பட்டுக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். அந்தக் காலத்தில் மின்சாரம் என்பது பணக்காரர்கள் சொத்தாக இருந்தது. ஆனால் இந்தக் காலத்தில் பார்த்தால், ரயிலிலே இரவு நேரங்களில் செல்லும்போது பார்த்தால் எங்கு பார்ததாலும் மின்மினிப் பூச்சி போல் மின்சார விளக்கு வெளிச்சத்தைப் பார்க்கிறோம். பம்ப் செட்டுகள் மின்சாரத்தில் இயங்குவதைப் பார்க்கிறோம். இவைகள் எல்லாம் எதிர்க் கட்சியினருடைய கண்களுக்குத் தெரியவில்லையா என்பது தெரியவில்லை.

இந்தச் சட்டசபையில் விலைவாசி உயர்வைப் பற்றிப் பலர் எடுத்துக் காட்டிப் பேசினார்கள். விலைவாசி உயர்ந்து கொண்டே போவதை அரசாங்கம் ஆதரிப்பது போலவும் இவர்கள்தான்

[Sri P. S. K. Lakshmipathi Raj] [8th December 1959

ஏதோ அந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லுவது போலவும் பாசாங்கு நடைபெற்றுக் கொண்டு வருகிறது. விலைவாசி ஏறுவதை யாரும் விரும்ப மாட்டார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. நெல் விலை உயர்ந்து கொண்டு வருகிறது. அதை யொட்டி அரிசி விலை, புளி, மிளகாய் விலை உயர்ந்து வருகிறது. இவைகளின் விலை உயர்வுக்குக் காரணம் வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதும் ஒன்றாகும். அதை ரத்து செய்தால் நன்றாக இருக்கும். இந்த விவசாயமானது மனிதனுக்கு ஒரு பாரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்த காலத்திலிருந்து அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து அவர்களுடைய விளை பொருள்களுக்குத் தக்க விலை வேண்டுமென்று அதற்கான வசதிகள் எல்லாம் விவசாயி களுக்காகச் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது விவசாயிகள் நல்ல முறையில் வாழ்கிறோம் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கள்ள மார்க்கடகாரர்களுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு கொடுக்கிறதோ என்ற சந்தேகம் ஏற்படுவதாக ஒருவர் பேசினார். ஆனால் உண்மையில் கள்ள மார்க்கட் காரர்களோடு கை கோர்த்துக் கொண்டு உலவுகிறவர்கள் அரசாங்கத்தை எதிர்க்கிற எதிர்க் கட்சிக் காரர்கள்தான். கள்ள மார்க்கட் காரர்களிடம் பணம் வாங்கிக் கொள்ளும்போது அவர்களைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. கனம் முத்தையாச் செட்டியார் அவர்களே எதிர்த்துப் பேசினார்கள் என்று கனம் கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றி நாங்கள் சந்தோஷமே படுகிறோம். எங்கள் கட்சியில் நல்லது என்று தெரிவதை மனமார எடுத்துச் சொல்லக் கூடிய மெம்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியில் உள்ள நல்லதைப் பற்றி ஒரு நாளும் நல்லது என்று எதிர்க் கட்சிக் காரர்கள் ஒருவர் கூட கூறியதை நாங்கள் காதிலே கேட்டதில்லை. எதிர்க் கட்சிக்காரர்கள் சாமிக்கு அர்ச்சனை செய்வதுபோல் அரசாங்கத்தை எப்போதும் குற்றம் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள்.

நாங்கள் ஜனநாயக முறைப்படி நடக்கவில்லை என்று ஒருவர் குறைப்பட்டுக் கொண்டார். "எங்களை எந்தக் கமிட்டியிலும் போடுவதில்லை" என்று குறைபட்டுக் கொண்டார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் இரண்டொரு நகர சபையைக் கைப்பற்றியிருக் கிறார்கள். அவர்கள் கதையைப் பற்றிக் கேட்டால், அவர்கள் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு ஒரு ஸ்தானம் கூட கொடுக்காத கதைதான் நினைவுக்கு வருகிறது. அவர்கள் சட்டசபையில் ஜனநாயகம் காப்பாற்றப்படவில்லை என்று சொல்லுவது எந்த முறையில் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இதைப் பற்றிப் பேசிக் கொண்டே வந்தால் நேரம் ஆகிவிடும். ஆகவே, இதோ இதைப்பற்றிப் பேசுவதை நிறுத்திக்கொண்டு மற்ற விஷயங்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையிலே கூறப்பட்டிருக்கும் பல விஷயங்கள் பற்றி நான் புள்ளி விவரமாக எதுவும் பேச முடியாது. எங்கள் பகுதியின் தேவையைப் பற்றிக் கூறி முடித்துக் கொள்ளு கிறேன். நீண்ட நெடுங் காலமாக பழனி தாலூகாவானது



8th December 1959] [Sri P. S. K. Lakshmipathi Raju]

அபிவிருத்தித் திட்டங்களில் கவனிக்கப்படாமல் இருக்கிறது என்பதை இந்தச் சபையில் எடுத்துக் கூறி வருகிறேன். பாலாறு, புரந்தலாறு ஏரியாவில் ஒரு அணைக்கட்டு கட்ட வேண்டுமென்று பல வருஷ காலமாக கோரிக்கை எழுப்பிக்கொண்டு வருகிறோம். அந்த அணைக்கட்டை அன்பு கூர்ந்து இந்த அரசாங்கம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நில உச்ச வரம்பு பற்றிப் பேசினார்கள். உச்ச வரம்பைக் கொண்டுவர வேண்டிய சந்தர்ப்பம் தவறி விட்டதாகவும், உடனே சட்டம் கொண்டு வரவில்லையே என்றும் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியிலே உள்ள நாங்கள் எல்லாம் கூட அந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்படி துரிதப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். எல்லா மாகாணங்களிலும் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டிய நிலைமை இருப்பதால் எந்த விதத்திலே சட்டத்தை அமைப்பது என்பதெல்லாம் பரிசீலிக்கப்பட வேண்டியிருப்பது தான் தாமதத்திற்குக் காரணம் என்று கூற பிரியப்படுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

* **Sri T. KARIA GOUNDER** : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையை வரவேற்று நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தையொட்டி நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய நண்பர்களில் ஒருவர் 'கவர்னர் உரையில் உப்பு சப்பு இல்லை' என்று குறிப்பிட் டார்கள். கவர்னர் பெருமான் உரையில் எங்களைப்பற்றி அதாவது விவசாயிகளைப்பற்றி—கொஞ்சம் சிறக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதிகமாகச் சொல்லவில்லை என்று கூட நான் கொஞ்சம் சந்தேகப் படுகிறேன். ஏனென்றால், எனக்கு முன்பு எங்கள் தரப்பிலே பேசிய கனம் அங்கத்தினர் திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன் அவர்கள், 'இந்த நாட்டில் உணவுத் தானிய விலை உயர்ந்தாலும், குடியானவர்களுக்குக் கொஞ்சங்கூடக் கிடைக்கவில்லையே. கிடைக்கவேண்டும் என்ற எண்ணம் மக்களுக்கு இல்லையே' என்று வருந்திச் சொன்னார்கள். டாக்டர் தொழில் செய்பவர்களாயிற்றே, அவர்களுக்கு குடியானவர்களைப்பற்றி இவ்வளவு எப்படித் தெரிந்தது என்றுகூட நான் வியந்தேன். எங்களைப் போன்ற விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களைவிட அதிகமாக இந்தப் பிரச்னையை உணர்ந்து பேசியிருப்பதற்காக நான் அவர் களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டி சட்டம் வரப்போகிறது எங்களுக்கெல்லாம். அதை நாங்கள் வரவேற்கத் தயாராயிருக் கிறோம். ஏமாற்றத் தயாராயில்லை. ஆனால், உற்பத்தி செய்கிற வர்களைப்பற்றி ஒருவரும் சிந்திக்கவில்லை. பட்டினிப் பட்டாளம் என்று சொல்லி, சர்வ கட்சியினரும் சேர்ந்து, ஊர்வலம் வந்தார்கள். எல்லாக் கட்சிகளும் சேர்ந்து கொடி பிடித்தார்கள். எங்கள் ஊரிலேயும் பிடித்தார்கள். பட்டினிப் பட்டாளம் தலைமை யோடு கூட நடந்தது. விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் எங்களைப்பற்றி யாரும் சிந்தித்துப் பேசவில்லையே என்று நான் வருத்தப்படுகிறேன். எங்களுக்கு இப்பொழுது கிடைப்பது போதுமா, உற்பத்தி செய்வதற்குச் செலவு என்ன ஆச்சு என்று

பொருளாதார நிபுணர்களைக்கொண்டு கணக்கிட்டுப் பார்த்தால் அப்படிப் பேசியிருக்க முடியாது என்பதை நண்பர்களுக்கு நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இரண்டணா கூலி கொடுத்தது போக, இன்று ஒரு ரூபாய் வரையில் கூலி கொடுக்கிறோம். நாலணா கூலி கொடுத்து வந்தோம். இன்று இரண்டு ரூபாய் கொடுக்கிறோம். ஆனால், வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை. மத்திய சர்க்கார் ரயில் பாதை போடுகிறார்கள் எங்கள் ஊர்ப் பக்கமெல்லாம். அதன் மூலமாக லட்சக் கணக்கானவர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது போய், வேலைக்கு ஆள் இல்லாத திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாய வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இப்படி வேலை கொடுப்பதன் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டம் எங்கள் பகுதியில் ஒருவாறு நீக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மூட்டை தவிடு வாங்குவதற்கு ஐந்தாறு ரூபாய் தர வேண்டியிருக்கிறது. உழவு மாடு வாங்குவதற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். வெள்ளைக்காரன் காலத்தில் படி அரிசி பன்னிரண்டணா இருந்தது என்று சொல்கிறார்கள். அப்பொழுது கூட படி அரிசி ரூ. 2-4-0 விற்றதுண்டு. சர்க்காரை வியாபாரம் செய்யச் சொல்கிறார்கள். சர்க்கார் என்ன செய்ய முடியும்? சர்க்கரையை எங்கே ஏற்றுமதி செய்து விட்டார்கள்? சர்க்கரையைக் கொஞ்சம் ஏற்றுமதி செய்வதிலே தடை இருக்கிறது என்று சொல்லி பங்கீடு செய்ய வேண்டுமென்று சர்க்கார் கொடுத்தால், அதைக் கள்ள மார்க்கெட் செய்தால், அதற்கு மந்திரியா பொறுப்பு, எம்.எல்.ஏ.யா பொறுப்பு என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 'சர்க்கார் அதைச் செய்யவில்லை இதைச் செய்யவில்லை திறமையற்ற சர்க்கார்' என்று பல பேர்கள் சொன்னார்கள். எங்களுக்குத் திறமை இருக்கிறது. திறமை இல்லை என்று சொல்லவில்லை. திறமை இருக்கிறதென்று சொல்கிறவர்களாவது தங்களுடைய யோசனையைச் சொல்லலாம். அதுவும் சொல்வதில்லை. இரண்டு நாளாகப் பேசுகிறவர்கள், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள், சர்க்காரைக் குற்றம் சொல்லித்தான் பேச வேண்டுமென்று பேசுகிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஐந்து ரூபாய்க்கு வாங்கியிருந்த பிண்ணாக்கு 70 ரூபாய் விலைக்கு ஏறியிருக்கிறது என்றால், அதை ஆண்டவனிடத்தில்தான் சொல்ல வேண்டும்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கோவிந்தசாமி அவர்கள், இரண்டு மூன்று வருஷங்களாக மழை இல்லை என்று பேசிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது மழை பெய்து 15 ஆயிரம் மக்களுடைய வீடுகளை அடித்துக் கொண்டு போய்விட்டது என்று பேசுகிறார்கள். வெள்ளம் ஏற்பட்ட இடத்தைப் போய்ப் பார்க்காமல் மந்திரிகள் இங்கே உட்கார்ந்திருப்பதாகக் குற்றம் கூறுகிறார்கள். ஒரு மந்திரியை அந்தப் பகுதிக்கு அனுப்பியிருக்கிறோம். மற்றவர்கள் சட்டசபையில் இருந்து, கனம் அங்கத்

தினர்கள் சொல்லக் கூடியவைகளைக் கேட்டுக் கொண்டிருந்து பதில் சொல்ல வேண்டும் அல்லவா? அதனால்தான் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அங்கே போயிருக்கும் மந்திரி நிலைமையை நேரடியாக அறிந்து வந்து [illegible]க நிவாரணத்தைத் தேடுவார். தென்னாற்காடு மாவட்டத்தில் மழை பெய்தது குறித்து எனக்குத் திருப்திதான். அந்த அளவிலே குறை சொல்லாமல் ஏதாவது காரியங்களைச் சொல்லவேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

எங்கள் பக்கங்களில் பக்கத்து ஊர்களிலுள்ள சினிமாவுக்குச் சைக்கிளில் போவதுண்டு. ஒரு சைக்கிளில் மூன்று பேர்கள் பிரயாணம் செய்வார்கள். முன்னால் ஒரு பெண் பிள்ளை; பின்னால் ஒரு பெண் பிள்ளை; நடுவிலே ஒரு ஆண் பிள்ளை. இப்படியாகப் போய் சினிமா பார்க்கப் போய் வருகிறார்கள். எங்கே பட்டினி என்று நான் கேட்கிறேன். எங்கள் நிதி அமைச்சர் 35 லட்சம் ரூபாய் சினிமாவிலிருந்து தமாஷா வரி வரும் என்று சொன்னார்கள். மூன்றரை கோடி ரூபாய் அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் பட்டினி எங்கே இருக்கிறது என்று நான் கேட்கிறேன். இப்பொழுது சினிமாக் கொட்டகை இல்லாத கிராமமே இல்லை. ரயிலிலும் இடம் கிடைக்கவில்லை. பஸ்ஸிலே இடம் கிடைக்கவில்லை. பஞ்சம் எங்கே இருக்கிறது என்று உணர்ந்து பார்க்கவேண்டும். ஹோட்டலில் கூட இடம் கிடைக்கவில்லை. நேற்று ஒன்றும் இல்லாத ஒருவர் ஹோட்டல் வைத்தார் என்றால் அவர் இன்று லட்சாதிபதியாக இருக்கிறார். இப்படியாகப் பணம் புழங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, பட்டினியும் இல்லை, பஞ்சமும் இல்லை நாட்டிலே. என்னுடைய பகுதிகள் பின்தங்கியிருந்தாலும், மழை பெய்திருக்கிறது. ஏரி நிரம்பியிருந்தால் பஞ்சமே இருக்காது. கேழ்வரகு படி பத்தணாவிலிருந்து எட்டணாவுக்கு வந்திருக்கிறது. சோளம் ஏழணாவிலிருந்து படி ஆறணாவுக்கு வந்திருக்கிறது. சர்க்கார் கடையையே மூட்டை கட்ட வேண்டும் என்ற நிலை வந்துகொண்டிருக்கிறது. கவர்னர் உரையில் நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். அறுவடையானவுடனே, பங்கீடு முறையைக்கூட நிறுத்திவிட சர்க்கார் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறதாக அந்த உரையிலே சொல்லியிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் ஜில்லாவிலே 9 லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் பாயப்போகிறதே, அதை யாராவது மறுக்க முடியுமா? எங்கள் ஊரில் நான் படித்த காலத்தில் 30 பிள்ளைகள்தான் படித்துவந்தார்கள். இன்று 500 பிள்ளைகள் படிக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் சென்ற வாரம் அங்கு வந்து உயர் நிலைப் பள்ளியொன்றுக்கு அஸ்திவாரக் கல் நாட்டினார்கள். பொது மக்கள் திரண்டு வந்து, இரண்டு லட்சம் ரூபாய் தருவதாக முதல் அமைச்சரிடம் சொன்னார்கள். போக்குவரத்துக்குப் பாதை, ஆஸ்பத்திரி, இன்னும் என்ன என்ன செய்ய வேண்டுமோ அவ்வளவும் நடந்து வருகிறது. நேற்று பேசிய என்னுடைய நண்பர் செட்டிநாட்டு ராஜா அவர்கள் ஒரு குறையைத் தெரிவித்தார்கள். அதாவது பாலாற்றைப்பற்றிப் பேசும்போது, எனக்காக அவர் வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்களோ

[Sri T. Karia Gounder] [8th December 1959

என்று கூட ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். எங்கள் ஊரிலே இருக்கும் பாலாற்றைப்பற்றி அவர்கள் சொல்லவில்லை. புதுக்கோட்டை, இராமனுதபுரம் பக்கத்தில் ஒரு பாலாறு இருக்கிறதே அதை அவர் சொன்னதாக நான் சொன்னேன். எங்கள் ஊர் பாலாற்று விஷயம் மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்திலே முடிவு பெறும் என்று கவர்னர் உரையிலே கவனிக்கும்போது சூசகமாக அதில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. அனேகமாக மற்ற நீர்ப்பாசனங்களுக்கு வேண்டிய அவ்வளவும் மூன்ருவது திட்டத்திலே செய்ய சர்க்கார் தயாராயிருக்கிருர்கள், பின்தங்கவில்லை என்று சூசகமாகச் சொல்லியிருப்பதை அமைச்சரவைக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

மின்சார விஸ்தரிப்பு விஷயத்தில் எங்கள் ஜில்லா முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. ஆனல், ஒரு சின்ன உத்தரவு இருக்கிறது. இரண்டாயிரம் அடிக்குமேல் பாலாற்றுக் கரையில் பம்ப் செட் வைத்துக் கொள்வதற்கு மின்சாரம் கொடுக்கக்கூடாது என்பது. அதை இப்பொழுது ஒரு மாதிரியாக சர்க்கார் மாற்றியிருக்கிருர்கள். அதை முழுதுமாக மாற்றவேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். இரண்டாயிரம் அடி என்று இருப்பதிலே, இரண்டாயிரம் அடி அவசியம் என்று தோன்றுகிறதாயிருந்தால் கொடுக்கலாம் என்று உத்தரவை மாற்றியிருக்கிருர்கள். அந்த அளவிலே சர்க்கார் தேவைப்படுகிற ஒவ்வொரு விவசாயிக்கும் அதைக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துவிட்டால், எங்கள் ஜில்லாவில் மின்சாரத்தைப்பற்றிச் சொல்வதற்கு ஒன்றுமே இடம் இருக்காது, பூர்த்தியாய் விட்டது என்றே சொல்லிவிடலாம். மாநிலத்திலே 'எங்கள் ஜில்லா தான் முதன்மையில் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவது பற்றி முடிவு பண்ணிக் கொண்டிருக்கிறேம். தென்னையில் 100 மரங்களுக்குமேல் யாரும் வைத்துக் கொண்டிருக்கவில்லை. தென்னை, பழ வகைகள் போன்ற சில வகைகளுக்கு உச்ச வரம்பிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். சவுக்குவைத்து பத்து வருஷத்திலே பலன் கொடுக்கிறது. தென்னைக்கு இருபது வருஷங்கள் காத்திருக்கவேண்டியிருக்கிறது. அதுவரையிலும் நிலத்திலே பயிர் ஆகாது. நாட்டிலே தென்னை பற்றுக்குறையாக இருப்பதால், அதை விருத்தி செய்வதற்காக, அதற்கு விதிவிலக்கு அளிக்க அரசாங்கத்தை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களைப்பற்றிச் சொல்கிருர்கள். எல்லாக் கிராமங்களிலும் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தாய் விட்டது. வீட்டு வசதி வேண்டும் என்று எல்லா ஹரிஜன மக்களுக்கும் சர்க்கார் நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிருர்கள். எங்கள் தாலுகாவைப் பொறுத்தமட்டிலும், வருஷந்தோறும் திட்டமிட்டு ஹரிஜனங்களுக்கு எல்லா வசதிகளும் செய்துதரப்படுகின்றன. உழவு மாட்டுக்குக் கடன், பகல் உணவு வசதி, படிக்கிற பிள்ளைகளுக்கு



8th December 1959] [Sri T. Karia Gounder]

இலவச உடை முதலியவை கொடுக்க வகை செய்திருக்கிருர்கள். படிக்கிற பிள்ளைகளுக்கு உடை கொடுக்கும் திட்டத்திற்கு சர்க்கார் வகை செய்திருக்கிருர்கள். பொதுமக்கள் மிகவும் ஆர்வத்தோடு ஹரிஜன மக்களுக்கு மட்டுமன்றி ஏழை மக்களுக்கெல்லாம் இலவச உடை கொடுக்கும் திட்டத்திற்கு தாங்களாகவே பொருளுதவி செய்ய முன்வந்துள்ளார்கள். இப்படி யெல்லாம் இருக்க, அரசாங்கத்தைக் குறை சொல்வதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது என்பதை நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏற்கனவே ரேஷன் முறை இருக்கும்போது உபத்திரவப்பட்டோம். ஆகவே, ப்ரொக்யூர்மெண்ட் அவசியம் இல்லை. ஒருவரும் பட்டினியால் சாகவில்லை. இன்னும் விலை குறையப் போகிறது. சந்தேகம் வேண்டாம். விலை குறையும்போது, அதைக் கொண்டு விவசாயி எப்படிக் காலம் தள்ள முடியும்? ஒரு விவசாயிக்கு நான்கு பிள்ளைகள் இருந்தால் ஒருவன் சட்டக் கல்லூரியில் படிக்க வேண்டும், இன்னொருவர் இன்ஜினீரிங் கல்லூரியில் படிக்க வேண்டும். அவர்கள் என்ன ப்யூக் காரில் போகவா விரும்புகிருர்கள்? அதெல்லாம் ஒன்றுமில்லை. அவர்களுடைய வருவாயைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நகரத்தில் உள்ளவர்களையும் சர்க்கார் விடமாட்டார்கள் என்பதையும் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். நகர மக்கள் விஷயத்தில் கூட உச்ச வரம்புத் திட்டத்தைக் கொண்டுவர சர்க்கார் அடுத்தபடியாக முன்வர வேண்டுமென்று காங்கிரசின் சார்பிலே மன்றாடி பணிவுடன் அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன். உதவி சபாநாயகர் அவர்கள் அடிக்கடி கடிகாரத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். எப்பொழுதும் கடைசி நேரத்தில்தான் எனக்குப் பேச சந்தர்ப்பம் கிடைக்கிறது.

1-30 p.m.

கவர்னர் உரையில் சைனவைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிருர்கள். ஒரு கட்சி வேண்டாம் என்கிறது. ஒரு கட்சி சண்டை வேண்டும் என்கிறது. அதை மறைமுகமாக பேசுகிருர்கள். நண்பர் அன்பழகன் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். எல்லோரும் இந்த நாட்டிலே சுதந்தரம் பெற்றேம். பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற முன்வருவதற்கு அவர்கள் தயாராக இருப்பதாக சொன்னதற்கு அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சாரார் இந்த நாட்டிலே உள்ளும் புறமுமாக இருக்கிருர்கள். அவர்களை கண்டிக்க நாங்கள் தயாராக இருக்கிறேம். சமயம் வருங்காலத்தில் இந்த நாட்டிலே பிறந்த ஒவ்வொரு இந்தியனும் உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும் என்று கவர்னர் அவர்கள் சூசகமாக சொல்லியிருக்கும் நோத்திலே எல்லோரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்டு, எனக்கு அதிகமாக 2 நிமிஷ நேரம் அவகாசம் கொடுத்ததற்காக உதவி சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned.

[8th December 1959

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

35. *Amendment to the Madras Payment of Wages Rules,* 1937 *issued in G.O. Ms. No.* 3517, *Industries, Labour and Co-operation (Labour), dated 9th September* 1959 *(Laid on the Table of the House under section* 26 *of the Payment of Wages Act,* 1936 *(Central Act IV of* 1936).

36. *Amendment to the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Rules,* 1959, *issued in G.O. No.* 2500, *Revenue, dated 29th August* 1959 *(Laid on the table of the House under section* 13 (1) *of the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Act,* 1958 *(Madras Act XXXVI of* 1958).

37. *Amendment to the Madras Cinemas (Regulation) Rules,* 1957, *issued in G.O. Ms. No.* 2820, *Home, dated 5th October* 1959 *(Laid on the table of the House under section* 10 (3) *of the Madras Cinemas (Regulation) Act,* 1955 *(Madras Act IX of* 1955).

38. *Notification issued with G.O. Ms. No.* 1682, *L.A., dated 26th September* 1959, *extending the term of office of the members of the Anthanapetti Panchayat (Tanjore district) under section* 10 (1) *of the Madras Village Panchayats Act,* 1950. *(Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act* 1950 *(Madras Act X of* 1950).

39. *Notification issued with G.O. Ms. No.* 1866, *L.A., dated 28th October* 1959 *extending the term of office of the Members of the Mannivakkam Panchayat (Chingleput district) under section* 10 (1) *of the Madras Village Panchayats Act,* 1950 *(Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act,* 1950 *(Madras Act X of* 1950).

40. *Amendment to the Madras Children Rules,* 1940, *issued in G.O. Ms. No.* 2205, *Home, dated 1st August* 1959 *(Laid on the table of the House under section* 44 *of the Madras Children Act,* 1920 *(Madras Act IV of* 1920).

41. *Amendment to the Madras Public Service Commission Regulation,* 1954, *in regard to the exclusion of the Publications Officer, Public (Information and Publicity) Department, from the Commission's purview issued with G.O. Ms. No.* 2712, *Public (Services-A) Department, dated 19th October* 1959 *(Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India).*

42. *Amendment to the Madras Agricultural Income-tax Rules,* 1955, *issued in G.O. No.* 3129, *Revenue, dated 27th October* 1959 *(Laid on the table of the House under section* 61 (3) *of the Madras Agricultural Income-tax Act,* 1955 *(Madras Act V of* 1955).



[8th December 1959

43. *Notification regarding constitution of certain Panchayats, redivision of wards in Tiruchirappalli, Salem, Ramanathapuram, Chingleput, South Arcot, North Arcot, Tanjore, Tirunelveli, the Nilgiris, Madurai and Coimbatore districts. (Laid on the table of the House under section* 113 (3) *of the Madras Village Panchayats Act,* 1950 *(Madras Act X of* 1950) (68 *Notification).*

44. *Amendment to Madras Spirituous Essences Rules,* 1959 *issued in G.O. Ms. No.* 2810, *Home, dated 5th October* 1959. *(Laid on the table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 *(Madras Act X of* 1937).

[8th December 1959

APPENDIX I.

[Vide answer to starred question No. 34 asked by Sri T. S. Ramaswamy and Sri S. Lazar at the meeting of the Legislative Assembly held on 8th December 1959, page 120 supra.]

(a) 875 seats.

(b) (1) The selection of candidates for admission to the following six Engineering Colleges (two Government and four private) is made on a common basis by a Selection Committee and the candidates are allotted to the various institutions thereafter, subject to the modification described in paragraph 5 (a) below. All applications for admission should be addressed to the Director of Technical Education. The upper age-limit for the candidates, 24 (completed) in the case of Scheduled Castes and Scheduled Tribes, 21 in the case of others on 1st July of the year of selection. The Selection Committee shall consist of three members nominated by Government one of whom shall be the Principal of a private college. The Deputy Director of Technical Education shall be the Secretary of the Committee and one of three members shall be nominated as Chairman of the Committee by Government :—

(1) College of Engineering, Guindy.

(2) Government College of Technology, Coimbatore

(3) P.S.G. College of Technology, Coimbatore.

(4) Coimbatore Institute of Technology, Peelamedu.

(5) Alagappa Chettiar College of Engineering and Technology, Karaikudi.

(6) Thiyagarajar College of Engineering, Madurai.

(2) For admission to the Engineering Course, candidates whose subjects are Mathematics and Physical Science in Group A under Part III of the Pre-University Course shall alone be considered. In making the selection, the highest grade obtained in the two subjects only, whether the candidate passed in his first attempt or not shall be taken into account. Only candidates who have passed the Pre-University Examination with the following grades will be considered so far as those belonging to communities other than Scheduled Castes and Scheduled Tribes are concerned :—

(i) Grade B or Higher Grade in both Mathematics and Physical Science; and

(ii) Grade D in either Mathematics or Physical Science, No such limit need be observed in regard to candidates belonging to the Scheduled Castes and Scheduled Tribes.

(3) According to the regulations for the Pre-University Courses, details of the marks secured by the candidates will not be made available by the University but only the class obtained



in the examination as a whole and the symbolic representation of the grade for each subject will be indicated in the certificate granted to the candidates. Therefore, for purposes of selection of candidates for the Pre-Engineering Course, the minimum number of makrs corresponding to the grades in which the candidates have been placed in the optional subject of Mathematics and Physical Science should be added to the marks awarded by the Selection Committee for extra curricular activities in the manner described in paragraph 4 below and the rank assigned on the basis of the total marks thus obtained.

(4) The Selection Committee shall, after interviewing each candidate, assess his suitability for entry into the Engineering profession and in doing so shall have regard to the following factors :—

(a) Aptitude.

(b) General ability.

(c) Sports or N.C.C. activities or scouting or other similar activities.

(d) Extra curricular social service.

(e) General physical condition and endurance.

The maximum number of marks to be awarded on the basis of this assessment should be 75.

Special consideration shall be shown by the Selection Committee when allotting these marks to students who have represented their Colleges, Senior Eleven for Cricket, Football and Hockey, and in Tennis and other similar games and also for atheletic achievements of outstanding merit.

(5) (a) Twenty per cent of the total number of seats available in private colleges shall be reserved to be filled up by the concerned managements from among those who had applied to the Director of Technical Education for admission. These seats will be filled up after the selection committee completes its selection and communicates the allotment of the candidates to each of the private colleges.

(b) Every year, a few seats are reserved by Government on an *ad hoc* basis for candidates coming from outside the State.

(c) Sixteen per cent of the seats in both Government and private Engineering Colleges, after deducting from the total number of seats available, the seats set apart for students coming from outside the State in the case of Government Engineering Colleges and after deducting the institutional quota, shall be reserved for candidates belonging to the Scheduled Castes and Scheduled Tribes.

(d) Twenty-five per cent of seats in both the Government and private Engineering Colleges after deducting the seats set apart for students coming from outside the State in the case of Government Engineering Colleges and after deducting the institutional quota, shall be reserved for socially and educationally Backward Classes.

[8th December 1959

(e) The number of seats remaining after allowing for reservations mentioned in (a) and (b) above and after deducting the seats set apart for students coming from outside the State and after deducting the institutional quota shall be available for candidates belonging to all classes, for selection on the basis of merit.

(6) The seats reserved for Backward Classes and the unreserved seats (these open to all classes) in the Government as well as private Engineering Colleges shall be allotted to candidates on district basis, the seats being apportioned among the districts on the basis of their population according to 1951 census. For this purpose, the population of the districts shall be rounded off to the nearest ten thousand. The seats reserved for Scheduled Castes and Scheduled Tribes will be filled by taking the entire State as a single unit.

(7) The candidates belonging to all classes shall compete in the general selection on the basis of merit to the number of seats specified in rule 10 (c) of these rules. The candidates belonging to the Scheduled Castes, Scheduled tribes and Backward Classes who secure seats in this selection shall not be counted against the respective quotas reserved for these categories. After the general selection is made, the selection of candidates belonging to Scheduled Castes, Scheduled Tribes and Backward Classes shall be made for their respective reserved quotas.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 39 asked by Sri K. Vinayakam, Sri K. Sattanatha Karayalar, Sri N. K. Palanisami and Sri A. A. Rasheed at the meeting of the Legislative Assembly held on 8th December 1959, page 122 supra.]

*Steps to control the rise in the prices of food articles.*

With a view to check the rise in the prices of rice and paddy, the Government launched a scheme of procurement under which a quantity of about 125,822 tons (in rice units) was procured up to 1st November 1959, when procurement was given up. The Government of India have allotted 35,000 tons of rice so far from the stocks held by them. About 2,443 Fair Price Shops have been functioning throughout the State with effect from 15th July 1959, and the procured and allotted stocks are being issued to the Public at Fair prices. A total quantity of about 108,164 tons of rice has been distributed through Fair Price Shops up to 30th November 1959. The price of rice in the open market has consequently declined. The Government have also issued the Madras Foodgrains Dealers' Licensing Order, 1958, prohibiting the purchase, sale or storage, of foodgrains for sale without a licence issued under that Order.

Steps have also been taken to popularise the consumption of wheat products in order to reduce the pressure on the demand for rice. The Government of India were addressed in April 1959 to examine the possibility of importing pulses and grams from foreign



8th December 1959]

countries. They have stated that, as the prices of grams and dhall have gone down, their import would not be desirable. In the light of the position stated by the Government of India and at the instance of the Board of Revenue, the Government of India in the Ministry of Railways were addressed for the provision of necessary wagon facilities and priority for the speedy movement of grams and pulses from North Indian markets. The Railway Board has written to say that during August-September 1959 movements of pulses and grams were comparatively easier and that no difficulty could be anticipated in clearing this traffic expeditiously. With a view to checking the rise in price of sugar, the Government of India have issued the Madras Sugar Dealers' Licensing Order, 1959 and the Sugar Movement Control Order, 1959. The District Collectors have since taken over the distribution of sugar from October 1959 onwards and have appointed retailers in each district. Bulk consumers like hotels, hostels, canteens and bakeries are also allotted quotas by the Collector. The Collectors are asked to arrange for the periodical inspection of shops of the dealers and see whether they are selling the stocks allotted to them at fixed price. The position has improved very much after the Collectors have taken over the distribution.

## APPENDIX III.

[Vide answer to starred question No. 48 asked by Sri S. M. Annamalai at the meeting of the Legislative Assembly held on 8th December 1959, page 128 supra.]

***Towns to which armed policemen were sent during last Municipal Election for bandobust and expenditure incurred on bandobust.***

| *District.* | *Name of town.* | *Expenditure incurred.* |
|---|---|---|
| | | RS. NP. |
| Chingleput .. | .. Kancheepuram, Tiruvellore and Chingleput. | 573·50 |
| South Arcot .. | .. Cuddalore, Chidambaram, Tindivanam and Villupuram. | 560·50 |
| Tanjore .. | .. Mayuram, Kumbakonam, Mannargudi, Tiruvarur and Nagapattinam. | 673·00 |
| Tiruchirappalli | .. Srirangam and Karur .. .. .. | 1,334·91 |
| Madurai North | .. Dindigul, Palani, Periakulam and Bodinayakanur. | 1,678·67 |
| Madurai Urban | .. Madurai .. .. .. .. .. | 5,060·70 |
| Ramanathapuram | .. Karaikudi, Devakottai, Sivakasi, Srivilliputhur, Rajapalayam, Virudhunagar and Aruppukottai. | 2,378·22 |
| Tirunelveli .. | .. Tirunelveli, Palayamcottai, Melapalayam and Tuticorin. | 482·25 |
| North Arcot .. | .. Vellore, Gudiyatham, Ambur, Vaniambadi, Tirupathur, Thiruvannamalai, Arni and Wallajah. | 3,893·50 |
| Salem .. .. | .. Salem and Rasipuram .. .. .. | 511·94 |
| Coimbatore .. | .. Coimbatore, Dharapuram, Pollachi, Erode, Gobichettipalayam, Mettupalayam, Tiruppur and Udumalpet. | 1,954·50 |
| | Total .. | 19,101·69 |

[8th December 1959

## APPENDIX IV.

[Vide answer to starred question No. 53 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 8th December 1959, page 130 supra.]

(அ) The Basic Education week was celebrated in all the Basic Training Schools, Basic Schools and other educational institutions in the State from 20th January 1959 to 26th January 1959 by organizing lectures, entertainments, etc.

(ஆ) As regards the steps taken to promote Basic Education the Government are converting the existing elementary schools into Basic schools in batches according to a phased programme Simlarly teachers employed in such schools are being retrained in Basic Education, for a period of five months. All the teachers Training Schools are being converted into Basic training schools according to a plan and the graduate teachers employed in these schools are also given re-training in basic education for a period of five months. A post-graduate basic training college was opened at Orthanad and this is functioning from 1957–58. The Inspecting Officers of the Department were also given training in Basic Education, with a view to making them fit and competent to inspect Basic institutions. To provide an opportunity to the heads of Basic schools to discuss the day-to-day administration of Basic Education, and to find solutions for the problems they face in the course of implementing the scheme bi-monthly conferences are organized. For similar reasons Regional Basic Education Conferences are also organized once in a year. Since it will necessarily take a long time to convert all the existing elementary schools into Basic schools, it has been decided to conduct seminars for teachers in non-basic schools under the scheme of orientation of elementary schools towards basic pattern. The above scheme is being implemented during the current year. As a first step in this direction the existing syllabus for elementary schools has been revised incorporating therein the salient aspects of basic Education, other than craft centred correlated technique of teaching. Post-Basic Education has been recognized as equivalent to S.S.L.C. and opportunity has been provided to students of post-Basic schools to get employed in public service.

As regards the action taken to obtain public support in the matter, the midday-meals scheme, the school improvement programme, the Parents Association meetings, Teachers' Association meetings, etc., are utilized to the fullest extent.



8th December 1959]

## APPENDIX V.

[Vide answer to starred question No. 54 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 8th December 1959, page 131 supra.]

The following six Training Colleges are affiliated to the University in the optional subject "Methods of Teaching and Learning Basic Education" in the B.T. Course :—

(1) Lady Willingdon Training College, Triplicane, Madras.

(2) St. Christopher's Training College, Vepery.

(3) Meston Training College, Royapettah.

(4) Teachers' College, Saidapet.

(5) Sri R.M. Vidyalaya Training College, Periyanaickenpalayam.

(6) V.O.C. Training College, Tuticorin

Besides these colleges, the Basic Training College, Orathanad (Tanjore district), is also affiliated in B.T. (Basic) Degree course and it deals with Basic Education in a special and comprehensive way.

## APPENDIX VI.

[Vide answer to starred question No. 60 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 8th December 1959, page 138 supra.]

(a) & (b) According to the regulations of the B.T. Degree course of the Madras University, the "Methods of Teaching and Learning Basic Education" is one of the optional subjects. The undermentioned six training colleges are affiliated in this subject and the number of trainees who took that subject in 1958–59 are given against each college :—

| | | |
|---|---|---|
| 1 | Lady Willingdon Training College for Women, Madras. | 33 |
| 2 | St. Christopher's Training College, Madras. | 13 |
| 3 | Meston Training College, Madras .. | 25 |
| 4 | R.M. Vidyalaya Training College, Perianaickenpalayam. | 21 |
| 5 | V.O.C. Training College, Tuticorin .. | 16 |
| 6 | Teachers' College, Saidapet .. .. | 19 |

The Government Basic Training College, Orathanad, is affiliated in B.T. (Basic) Degree course and deals with Basic Education in a special and comprehensive way. So there is no question of this college being affiliated in the subject referred to.

(c) B.T. Degree holders who offered "Methods of Teaching and Learning Basic Education" as an optional subject for their degree should, if they are recruited as School Assistants in the

Subordinate Educational Service or wish to be appointed in Basic Training schools, undergo re-training in Basic Education, the reasons being that only the theory of this optional subject is studied without sufficient practical bias and that the degree holders would not have had training in Community life, which is essential for a teacher in a Basic school.

(*d*) There is at present no proposal to get the other Government Training College [Vellore, Pudukottai, Kumarapalayam and Coimbatore (Women)] affiliated in the optional subject 'Basic Education' nor is there any immediate need to do so in view of the establishment of the Government Basic Training College, Orathanad. In respect of non-Government Training Colleges (there are five such Colleges), it is for the managements concerned to judge the need for affiliating their colleges in the subject referred to.

(*e*) There is no proposal to combine training in Basic Education with the B. T. Training. The course of studies and the scheme of training prescribed by the University of Madras have to be followed in the B.T. Colleges. If training in Basic Education is to be included as an integral part of the B.T. Training the University will first have to revise suitably the regulations relating to the B.T. Degree.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Wednesday, 9th December 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—OBITUARY REFERENCE TO SRI P. CHOKKALINGAM.

MR. SPEAKER: *1952-57-ம் ஆண்டுகளில் அம்பாசமுத்திரம் தொகுதி அங்கத்தினராக இருந்த கனம் சொக்கலிங்கம் அவர்கள் 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ந் தேதி அன்று இறந்து போய் விட்டார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையில் ஒரு நிமிஷம் எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக், கொள்ளுகிறேன்.*

*சபை அங்கத்தினர்கள் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக நின்றார்கள்.*

## II.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*White sugar*

MR. SPEAKER: As the hon. Member who gave notice of the question, namely Sri V. Sankaran, is not in his seat, the answer together with the question will be printed in the official proceedings.

* 61 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any scheme with the Government to manufacture white sugar from neera juice; and

(*b*) if so, the details of the said scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) Yes, Sir. The Government have sanctioned a subsidy of Rs. 13,732 for the free supply of improved equipments to 12 Jaggery Manufacturing Co-operative Societies in the Lower Bhavani Pilot Project area for the production of palm sugar. Twenty-four societies in other blocks have also been provided with financial assistance for the purchase of centrifugal machines.

*Tanning industry*

* 62 Q.—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) what steps are taken by the Government to promote tanning industry in our State;

(b) what is the type of aid given to the industrialists who are engaged in this trade; and

(c) whether the Government propose to bring in legislation regarding the wage structure of the labourers who are employed in this industry?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The following steps have been taken to promote the tanning industry in the State :—

(1) Model Village Tanneries have been started.

(2) Tanning Demonstration Centres (peripatetic) are being maintained.

(3) Financial assistance is being given to individual village tanneries for construction of new pits and for repairing of old pits.

(4) Leather marketing depots have been sanctioned.

(5) Schemes have also been sanctioned under the Community Development programme for the construction of tanning sheds and for the establishment of demonstration centres.

(6) A Service-*cum*-Training Centre for tanning and finishing leather has been set up at Vinnamangalam, North Arcot district.

(b) Individual tanners are given grants towards the construction of new pits and repairing of old pits while individual industrialists are sanctioned loans under the State Aid to Industries Act.

(c) No, Sir. The Government have fixed minimum wages for the employment in tanneries and leather manufacturers under the Minimum Wages Act, 1948.

SRI K. VINAYAKAM : Sir, the labourers involved in this industry are expected to do a type of work different from that of other industries. Will the Government think of possibility of bringing in legislation to fix a planned system of wages with reference to the seriousness involved in this type of labour?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I do not think there is any need for fresh legislation in the matter.

SRI M. KALYANASUNDARAM : ஸார், மத்திய சர்க்கார் இந்தத் தொழிலுக்காக ஏதேனும் உதவி செய்கிறார்களா? சென்ற வருஷம் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது? தனிப்பட்ட முதலாளிகளுக்கு மத்திய சர்க்கார் கடன் கொடுக்கும்போது ராஜ்ய சர்க்காரைக் கலந்து கொண்டு கொடுக்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு நோட்டீஸ் வேண்டும்.



SRI A. A. RASHEED : Sir, will the Government consider the question of granting of loans to the tanners in view of the importance of the industry?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The main question refers to quite a different thing. There is no question of Government granting loans to big tanning industries. Of course there is the aid to industries. Under the State Aid to Industries Act, loans are given.

SRI K. PONNIAN : தலைவர் அவர்களே, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் முழுதும் ஹரிஜனங்கள். இதை இவர்கள் குக்கிராமங்களில் குடிசைத் தொழிலாகச் செய்து வருகிறார்கள். பொருளாதார வசதியில்லாமல் இந்தத் தொழிலை நடத்த முடியவில்லை. பொருளாதார வசதிக்கு இவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆங்காங்கு ட்ரெயினிங் செண்டர்கள் அமைக்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன.

SRI K. VINAYAKAM : Sir, were complaints received by the Government about the non-compliance with the Minimum Wages Act regarding the labourers employed in North Arcot district tanneries?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot tell the hon. Member whether any specific complaints have been received. Whenever complaints are received, necessary action is being taken for the implementation or non-implementation of the Minimum Wages Act.

SRI M. KALYANASUNDARAM : ஸார், தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கடன் கொடுப்பதை விட்டு விட்டு அந்தத் தொகையை ஈடுபடுத்தி தொழிலாளர் கூட்டுறவு சொசைடி மூலம் இந்தத் தொழிலை ஆரம்பிப்பது பற்றிக் கவனிக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுவும் கவனிக்கப்படும்.

SRI V. SUBBIAH : இந்தத் தொழிலிலே பாரம்பரையாக ஈடுபட்டிருக்கும் ஹரிஜன வகுப்பினரில் ஒரு பிரிவினரான அருந்ததியார் கிராமங்களில் வரும்படி இல்லாமல் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் உதவி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பற்றித் தகவல் இல்லை. இந்த மாதிரித் தொழிலில் ஈடுபடுவோர் உதவி கேட்டாலும் கவனிக்கப்படும்.

[9th December 1959

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஹரிஜனங்களுக்கு ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மெண்ட்டிலிருந்து கருவிகள் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. ஜில்லாவுக்கு 4, 5 பேருக்குத்தான் கிடைக்கிறது. அது போத வில்லை. ஆகவே, அரசாங்கமே நேரடியாக உதவி புரிய முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மெண்டும் அரசாங்கந்தான். ஹரிஜன மக்களுக்காகவே அமைக்கப்பட்டிருக்கும் இலாகா. இந்த கவனிப்பு போதவில்லை யென்றால் மேற்கொண்டு அரசாங்கம் தொழில் இலாகா மூலம் என்ன உதவி அளிக்க முடியுமோ அது கொடுக்கப்படும்.

### *Temporary increase in pensions*

* 63 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) ஜி. ஓ. எண் 412, தேதி 20—3—1957 பிரகாரம் பென்ஷனருக்குக் கிராக்கிப்படி எவ்வளவு ? எந்தெந்த இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு அளிக்கப்படுகிறது ?

(ஆ) இந்த கிராக்கிப்படி ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படுகிறதா ? இல்லையானால், ஏன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Under G.O. No. 412, Finance, dated 20th March 1957, all civil pensioners drawing a pension not exceeding Rs. 100 are eligible for a temporary increase in pension of Rs. 6. In the case of persons in receipt of a pension exceeding Rs. 100 but not exceeding Rs. 106 the increase would be such as to make the total Rs. 106.

(*b*) The increase is applicable to teachers who retire from Government service but not to teachers who are eligible for pension under the Madras Teachers' Contributory Provident Fund-Insurance-Pension Rules, 1958. In the case of the latter, the grant of pension is itself a special concession and is governed by the special rules applicable to it.

SRI A. VEDARATHNAM : விலைவாசி ஏற்றம் காரணமாக பென்ஷனர்களுக்கும் கஷ்ட நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அவர்களுடைய கோரிக்கையையும் அனுதாபத்தோடு அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தன் உத்தியோகத்தில் உள்ள என்.ஜி.ஓ.-க்களுக்குச் சலுகைகள் கொடுக்கவே இங்கு சர்க்காருக்கு பணக் கஷ்டம் இருக்கும்போது பென்ஷனர்களுடைய நிலைமையைக் கவனிப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். ஆகவே, இதிலே அதிகமாக சர்க்காரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்றுதான் நினைக்கிறேன்.



9th December 1959]

SRI S. LAZAR : வேலையிலிருந்து ஓய்வு எடுக்கக் கூடியவர்களுக்குப் பென்ஷன் தொகை நிர்ணயிப்பதில் அதிகக் காலதாமதமாகிறது என்பது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : This is a new subject altogether.

### *Madras City hospitals*

* 64 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the reasons for increasing the bed strength and other amenities in the Madras City hospitals; and

(*b*) whether corresponding improvements are made in the mufassal headquarters hospitals?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Almost all the City State Hospitals are overcrowded. This necessitates the increase of bed strength and provision of other amenities in them.

(*b*) Similar improvements have been sanctioned for the hospitals and dispensaries in the mufassal also wherever necessary.

SRI S. LAZAR : ஸார், அபிவிருத்தி என்பதன் பெயரால் புது நவீன இயந்திரங்கள் எல்லாம் நகரங்களிலேயே வைக்கப்படுவதற்குப் பதிலாக வெளிப்புற நகரங்களிலும் ஏற்படுத்துவதன் காரணமாக "கன்ஜெஷன் ஆப் பாப்புலேஷன்" குறையும் என்ற காரணத்தால் அதை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நகரங்களிலே எவ்வளவு புது மாதிரி நவீன சௌகரியங்களும் வசதிகளும் கொடுக்கிறோமோ அதே போல் வெளியிலும் கொடுக்கிறோம். இதைப் பற்றி ஒரு புள்ளி விவரம் சொன்னால் தெரியும். வெளியிலே இருக்கும் ஆஸ்பத்திரிகளுக்கு 289 லட்சம் ரூபாய் செலவு திட்டம், இங்கிருக்கும் ஆஸ்பத்திரிக்கு 43 லட்சம் ரூபாய் செலவு திட்டம்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் மக்கள் தொகை பெருக்கம் எந்த அளவுக்கு வேகமாக ஏறிக் கொண்டு போகிறதோ அந்தப் பெருக்கத்திற்கு ஏற்ற விகிதாசாரத்தில் சென்னை மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா ? இல்லாவிட்டால் அது பற்றி அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்த ஓர் அளவுக்கு முடிகிறதோ அந்த அளவுக்கு படுக்கைகளை அதிகப்படுத்திக்

கொண்டே போகிறோம். ஆனாலும் ஓடிப் பிடிக்க முடியவில்லை. ஜன பெருக்கத்துக்கு ஏற்றவாறு செய்யவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சென்னை நகரத்தைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கும் போது வைத்திய வசதியே இல்லாத கிராமங்களைப்பற்றியும் சற்று மனதில் வைத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

SRI N. R. THIAGARAJAN : என்னுடைய தொகுதியிலே மூன்று லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. இருந்தாலும் இரண்டு படுக்கைகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரிதான் இருக்கிறது. இப்படியிருக்க சென்னையிலே மேலும் மேலும் அதிகப்படுத்திக் கொண்டே போகிறார்கள். சென்னை நகரத்திலே புதுப் புதுக் கட்டிடங்கள், மாட மாளிகைகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன . அதை நிறுத்தி, கிராமங்களுக்கு விஸ்தரிக்கத் தயாராய் இருக்கிறார்களா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்!

THE HON. SRI M. A. MANICKAVELU : கிராமங்களிலே அம்மாதிரி வசதி கொடுக்கத்தான் 151 ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்கள் ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டு, அனேகமாக 110 வரையில் ஏற்படுத்தியிருக்கிறோம். இன்னும் ஏற்படுத்தினால், கிராமங்களில் எல்லாம் கூட இந்த வசதி ஏற்படும்.

SRI S. RAMAKRISHNA THEVAR : தலைவர் அவர்களே, நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் படுக்கை வசதி போதவில்லை என்று வருத்தப்படுகிறார்கள். என் தொகுதியை எடுத்துக் கொண்டால், ஒரு இடத்தில்கூட படுக்கை வசதி இல்லை என்பதை சர்க்கார் அறியுமா?

MR. SPEAKER : ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் தங்கள் தங்கள் தொகுதிக்கு வேண்டியவற்றைக் குறித்துப் பேச ஆரம்பித்தால், அது முடியாத காரியம்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தாலுகா தலைநகர ஆஸ்பத்திரிகளில் புதிதாக அமைக்கப்பட்ட படுக்கைகள் எத்தனை? இதுவரை புதிதாக வைக்கப்படவில்லையென்றால், இந்தத் திட்டம் முடிவதற்குள்ளாவது தாலுகா தலைநகரங்கள் பூராவிலும் உள்ள ஆஸ்பத்திரிகளில் புதிய படுக்கை அமைக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : தாலுகா தலைநகர ஆஸ்பத்திரிகளில் எல்லாம் படுக்கை வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்றுதான் சில இடங்களில் 40, 50 படுக்கைகளும், சில இடங்களில் இன்னும் அதிக படுக்கைகளும் ஏற்பாடாகின்றன. நான் ஏற்கனவே சொன்னது மாதிரி, 289 லட்சம் ரூபாய் வரையில் இம்மாதிரியான ஆஸ்பத்திரிகளுக்குச் செலவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தைச் செலவிட்டு வசதி செய்துகொண்டு போனால், இந்தச் சௌகரியம் ஏற்படும்.



SRI S. NAGARAJA MONIGAR : சென்னை நகர ஆஸ்பத்திரியில் இருக்கும் சங்கடத்தைத் தவிர்க்கும் முறையிலே மாகாணத்தில் பிற இடங்களிலும் நவீன வசதிகளோடு ஏற்பாடு செய்தால், அது வசதியாக இருக்காதா என்று இதற்கு முன் கேட்கப்பட்டபோது, அமைச்சர் அவர்கள், வெளி ஊர்களிலும் இப்படி ஏற்பாடு செய்வதாகக் கூறினார்கள். அப்படியானால் எல்லா ஜில்லா தலைநகர ஆஸ்பத்திரிகளிலும், சென்னை நகரத்தில் இருப்பதுபோன்ற நவீன கருவிகள் முதலிய வசதிகளை வைக்க அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI M. A. MANICKAVELU : எல்லா வசதியும் ஜில்லா தலைநகர ஆஸ்பத்திரிகளில் கிடைக்காது. கான்ஸருக்காக சில வசதிகள் சென்னை நகரத்தில் இருக்கின்றன. அதைப்போன்று ஒவ்வொரு ஜில்லா ஆஸ்பத்திரியிலும் வைக்க முடியாது. எக்ஸ்ரே ப்ளாண்ட், டி.பி. க்ளினிக் இம்மாதிரி அவசியமானவை கட்டாயம் அங்கு நிறுவப்படும். ஆனால் ஸ்பெஷலாகச் சிகிச்சை செய்வதற்கு பெரிய ஆஸ்பத்திரிகளில்தான் வசதி செய்யமுடியும்.

SRI T. IRUSAPPAN : கிராமத்திலே மருத்துவ விடுதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே படுக்கை வசதி செய்து கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : படுக்கை இருக்க வேண்டிய விடுதிகளில் படுக்கை இருக்கும். படுக்கை இல்லாத சில விடுதிகள் 'அட்வைசிங் க்ளினிக்' மாதிரி இருக்கும்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே வைத்திய வசதி செய்து தரப்படவேண்டுமென்ற பொறுப்பை ஏற்றுக்கொள்கிற அரசாங்கத்தார், இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதை ஒரு கடமையாகக் கொள்வதுடன் கூட சென்னை நகரம் போன்ற குறிப்பிட்ட வட்டாரத்தில் மக்கள் தொகை பெருக்கம் மிகுதியாக இருக்கும் காரணத்தினால், மக்கள் பெருக்கத்தின் வேகத்தைவிட மிக அதிகமான அளவிற்கு நோய் வளருகிறது என்பதை அரசாங்கம் கணக்கெடுத்து அறிந்திருக்கிறார்களா? மக்களின் தொகை வளர்ச்சிக்கேற்ற வகையில் மருத்துவ மனைகளை விரிவுபடுத்தவேண்டும் என்ற தத்துவத்தை அரசாங்கத்தார் ஒப்புக்கொள்ளுகிறார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது சாதாரண பிரச்னை. எல்லோரும் அறிந்த விஷயம். நகரில் கூட்டம் அதிகம்; அதனால் அங்கே நோயும் அதிகம். கிராமத்தில் கூட்டம் அவ்வளவாக இல்லை; பரவலாக மக்கள் வசிக்கிறார்கள். அங்கே நல்ல காற்று இருக்கிறது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தான்.

MR. SPEAKER : கனம் ஸ்ரீ பி. கக்கன் அவர்கள் சென்னையில் இல்லாததால், அவர்கள் பதிலளிக்கவேண்டிய கேள்விகள் இன்னொரு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

[9th December 1959

*Railways-Road transport*

* 66 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government of India have asked for the opinion of this Government regarding the proposal to bring railways and road transport under a Centrally administered co-ordinating body; and

(b) if so, the opinion expressed by this Government?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) The reply is in the negative.

SRI N. K. PALANISAMI: ரோட் ட்ரான்ஸ்போர்ட் மூலமாக வரக்கூடிய வருமானத்தை மத்திய சர்க்காரே எடுத்து, இங்கிருக்கும் சர்க்காருக்குக் கொடுப்பதாக உத்தேசம் இருந்ததே, அதைப் பற்றி சர்க்காருக்கு ஏதாவது தகவல் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH: தனி கேள்வி வேண்டும்.

*All-India Law Ministers' Conference*

* 67 Q.—SRI S. LAZAR: } Will the Hon. the
SRI N. K. PALANISAMI: }
Minister for Home be pleased to state—

(a) the suggestions made and discussed in the Law Ministers' (All-India) Conference held at Delhi in 1957 regarding 'giving legal aid to the poor';

(b) the decisions taken; and

(c) to what extent this Government have implemented them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) In the Law Ministers' Conference held at New Delhi in 1957, the following conclusions were arrived at:—

(1) Each State should formulate a scheme for legal aid to the poor.

(2) The scheme may envisage appointment of committes at different levels to entertain applications from the poor for legal aid, and to examine whether the applicants have a *prima facie* case and deserve aid.

(3) The scheme should enable requisitioning of the services of every member of the Bar up to six cases in a year.

(4) At the experimental stage, the scheme may be framed by executive orders.

(5) Each State should forward to the Ministry of Law the schemes formulated by it.

(b) & (c) The question of formulating a scheme for this State is under the consideration of the Government.



9th December 1959]

SRI S. LAZAR: சட்ட உதவி கொடுக்க இருக்கின்ற ஒரு திட்டத்திலே ஸிவில் கேஸ்களுக்கும் கூட சட்ட உதவி கொடுக்கப்படுமா, கிரிமினல் கேஸ்களுக்கு மட்டுந்தானா என்ற விவரம் அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கிரிமினல் வழக்குகளில் அகப்பட்டுக் கொண்டவர்களுக்குத்தான் முக்கியமாக சட்ட உதவி தேவைப்படுகிறது. அவர்களுக்கு அளிப்பதுதான் முக்கியம். அப்படி அளிப்பதினால் வழக்குகள் அதிகமாகுமா என்று யோசனை செய்யவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து, எந்த அளவு உதவி அளிப்பது என்பது இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகிறது. மத்திய சர்க்கார் இதைப் பற்றி ஒரு திட்டம் தயாரித்து அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதுவும் வந்த பிறகு எல்லாவற்றையும் கலந்தாலோசிக்கலாம்.

SRI S. LAZAR: ஏழைகளுக்கு சட்ட உதவி கொடுக்கவேண்டும் என்று திட்டம் தீட்டுகின்றபோது, அவர்களுக்கு கோர்ட் கட்டணத்தைக் குறைத்தாலே அதுவும் ஒரு சலுகையாக இருக்கும் என்ற அடிப்படையிலே, அதையும் இந்த சர்க்கார் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மத்திய அரசாங்கத்தின் திட்டம் இங்கே வந்த பிறகு தான் மற்றதெல்லாம் கவனிக்கப்படும்.

SRI N. K. PALANISAMI: பல கட்டங்களில் கமிட்டி போட்டுப் பரிசீலனை செய்வதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அம்மாதிரி எந்த அளவுக்கு எத்தனை கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ? அது பற்றி எப்பொழுது முடிவு ஏற்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லை. 'பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது' என்று சொன்னேன். மத்திய அரசாங்கத் திட்டம் வந்த பிறகு மேற்கொண்டு நாம் என்ன கவனம் செலுத்தவேண்டுமோ அதைச் செலுத்தலாம்.

SRI M. P. PERIASAMI: கனம் தலைவர் அவர்களே, ஏழைகள் என்ற முறையிலே ஹரிஜன மக்களைப் பொறுத்தவரையிலாவது ஸிவில் கேஸ்களுக்கும் அரசாங்கத்தின் மூலமாக சட்ட உதவி கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்வாறு உதவி அளிக்கப்பட்டு வருகிறது. சில சந்தர்ப்பங்களில்.

SRI N. K. PALANISAMI: மத்திய சர்க்கார் அவர்களுடைய திட்டத்தை எப்பொழுது தயாரித்து அனுப்பப்போகிறார்கள் அது எப்பொழுது இந்த சர்க்காருக்குக் கிடைக்கும் ?

[9th December 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எப்பொழுது அவர்கள் அனுப்பி வைப்பார்கள் என்று நான் சொல்வதற்கில்லை. தயாரித்தனுப்புவதாகச் சொல்லியிருப்பதால், சீக்கிரத்தில் தெரிவிப்பார்கள் என்றுதான் நினைக்கிறேன.

SRI S. NAGARAJA MONIGAR : இப்படி ஒரு திட்டம் வருமானால், ஏழைகளுக்காக வாதாடுகிற வக்கீல்கள் நியமிக்கப்படுவார்களா ? அல்லது அந்த வக்கீல்களுக்கு ஏற்படும் தொகை குறைந்தபட்சம் இவ்வளவு என்று கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் இப்பொழுது கொடுத்த விடையிலேயே, வக்கீல் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவித்திருக்கிறேன்.

### *May I help you squad*

* 68 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the existing strength of ' May I help you Squad ' in the Madras Police Force;

(b) the towns where such squads have been established;

(c) whether there is a proposal to increase the strength of the squad; and

(d) whether there is a proposal to extend the establishment of squads to other towns?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Each squad consists normally of a head constable and six Police constables drawn from the existing strength of the various police stations in the districts in which the squads are functioning.

(b) Please see statement placed on the table of the House.

(c) No, Sir.

(d) The Inspector-General of Police is considering this proposal.

SRI S. LAZAR : What are the special features of this ' May I help you Squad '?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I think I have answered that question some time before.

SRI A. A. RASHEED : May I know whether there is any proposal to form a ' May I help you squad ' consisting entirely of the Women Police in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : At present there is no Women Police and there is no such proposal.

* Printed as Appendix on page 823 infra.



9th December 1959]

SRI M. KALYANASUNDARAM : இந்தப் பிரிவினருக்கும் மற்ற போலீசாருக்குக் கொடுக்கக்கூடிய உடையையே கொடுப்பதால், மற்ற போலீசுக்கும் இதற்கும் வித்தியாசம் தெரியாத காரணத்தால், இவர்களுக்கு வேறு விதமான உடை கொடுக்கும் யோசனை ஆலோசிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினருடைய யோசனைப்படி வேறு உடை கொடுத்தால், போலீசார் உடையில் இருந்து செய்யக்கூடிய உதவியைச் செய்ய முடியுமா என்று யோசிக்கவேண்டும்.

SRI K. VINAYAKAM : Are the personnel belonging to this Squad expected to assist the public only during the prescribed period of one week set apart for the purpose or are they expected to help the public throughout the year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : They are expected to render this special type of service to the public throughout the year.

### *Police Standing Orders*

* 69 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government are aware of the observations made by one of the Judges regarding the change of the Police Standing Orders; and

(b) whether there is any proposal to change the Police Standing Orders?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

SRI A. A. RASHEED : Sir, may I know the circumstances under which these observations were made?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There was a case before the Sessions Judge and in the course of his judgment he made these observations.

### *Adult education*

* 70 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any scheme of Adult Education through the agency of University students was implemented during the year 1957–58; and

(b) if so, whether the Government have subsidized such a scheme?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) No, Sir.

[9th December 1959

*New Medical colleges*

* 71 *Q.*—Sri S. LAZAR: Will the Hon the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any private persons or associations have offered to start medical colleges in the State;

(*b*) the nature of assistance sought for by them from the Government; and

(*c*) whether the Government have duly responded to the request?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) None at present.

(*b*) & (*c*) Do not arise.

*Harvey Mills*

* 73 *Q.*—Sri P. S. CHINNADURAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

மதுரை ஹார்வி மில் நிர்வாகத்தினர் உற்பத்தியை நிறுத்தி விட்டதன் காரணமாக ராஜ்யத்தின் நூல் உற்பத்தி எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The reduction in production of yarn was approximately 144 lakhs lb.

* 74 *Q.*—Sri S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the number of mandays lost and the probable worth of production lost due to the closure of the Harvey Mills located in Madurai, Vickramasingapuram and Tuticorin?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The number of mandays lost is 8,55,779 aproximately and the probable worth of loss in production is estimated to be Rs. 2,38,26,890 approximately.

Sri S. PAKKIRISAMI PILLAI : தூரதிருஷ்டி திட்டத்தை கைக்கொள்ளாமல் முரட்டு பிடிவாதத்துடன் நீண்ட நாட்களாக மில்களை மூடிவைத்த மில் முதலாளிகள் மீது அவர்களால் உண்டான உற்பத்தி பெருக்கு நஷ்டத்திற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முதலாளிகள் இதற்குப் பொறுப்பு என்று அரசாங்கத்திற்கு புலப்படவில்லை. ஆகையினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பிரச்சனை இல்லை.



9th December 1959]

Sri M. KALYANASUNDARAM : அரசாங்கம் இதற்குப் பொறுப்பா?

Mr. SPEAKER : I should like the hon. Members to put questions through the Speaker and not directly. Before I allowed the hon. Member, Sri M. Kalyanasundaram, he has asked the question. Anyway I have no objection, if the Hon. Minister is prepared to answer the question. I would advise the hon. Member not to do so in future. Otherwise, I have no place here.

Sri M. KALYANASUNDARAM : I note your observations, Sir.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முதலாளிகளும், தொழிலாளிகளும் எல்லோரும் இதற்குப் பொறுப்பு என்று நான் சொல்லுகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : எனக்குக் கிடைத்த சில தகவல்களிலிருந்து சில அரசியல் கட்சிகளும் இதற்குப் பொறுப்பு என்று நினைக்கிறேன். (சிரிப்பு).

Sri M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி உள்பட என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*Hydro-electric potentialities*

* 75 *Q.*—Srimathi A. S. PONNAMMAL : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

தலையார்கோம்பையிலிருந்து வரும் ஆற்றிலிருந்தும் குடவனூர் ஆற்றிலிருந்தும் மின்சார உற்பத்தி விஷயமாகப் பரிசிலனை என்ன ஆனது?

The Hon. Sri V. RAMAIAH : The river flowing from Thalayarkombai, referred to in the question, is called Manjalar in the lower reaches. There is no proposal at present to develop hydro-electricity from this river basin, as it is considered that any scheme for such development will not be economical in view of the meagre river flow and the negligible power that could be generated therefrom. As regards development of power from the Kondavanar Basin, necessary rainfall and run-off data are being collected from the catchment area to study the possibility of hydro-electric development.

*Industrial development*

* 76 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தின் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு சர்க்கார் ஆலோசனைக்கு நியமிக்கப்பட்டிருக்கும் தொழில்அபிவிருத்திக் கமிட்டியின் ரிப்போர்ட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டாகிவிட்டதா?

[9th December 1959

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின், அந் நகல் ஒன்று சட்டசபை முன் சமர்ப்பிக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No report is required to be submitted by the State Industries Development Committee. The Committee will only generally advise Government on the development of industries in the State and on any specific matter that may be referred to it.

(b) Does not arise.

SRI P. G. MANICKAM: கிராமபுறங்களிலே குறிப்பாக ஹரிஜன காலனிகளில் ஆதிகாலத்திலே என்னென்ன தொழில்கள் நடைபெற்று வந்தன, அந்தத் தொழில்களின் நிலைமை தற்பொழுது எவ்வாறு இருக்கிறது. அந்தத் தொழில்களை மீண்டும் ஆரம்பிக்க முடியுமா என்ற பரிசீலனை சர்க்காரால் நடத்தப்பட்டதா? அவ்வாறு நடத்தப்படாவிடின், மீண்டும் சர்வே எடுப்பது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முக்கியமாக பொருளாதார நிலைமையில் தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பவர்களுக்கு உதவி அளிக்கும் வகையில், அவர்களை கை தூக்கும் வகையிலே என்னென்ன தொழில்களை அமைக்கலாம் என்பது அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

*Aluminium plant*

MR. SPEAKER: கேள்வி 77, 78 அண்டு 90-ஏ, இந்த மூன்று கேள்விகளும் அலுமினியம் தொழிற்சாலையைப் பற்றியது. ஆகையால் இந்த மூன்று கேள்விகளையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

*77 Q.—SRI P. G. MANICKAM AND SRI M. P. SARATHI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்யத்திலே அலுமினிய தொழிற்சாலையொன்றை ஏற்படுத்துவதற்கான யோசனை திட்டத்தின் மீது இத்தாலிய ஸ்தாபனம் ஒன்றின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்ட அறிக்கையின் விவரங்கள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The report of the Italian Experts on Salem Aluminium Plant is encouraging. The Report contains the details of the quality and quantity of Salem Bauxite Deposits and the financial implications of the project.

*78 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தனியார் துறையில் அலுமினியம் தொழிற்சாலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆராய்ந்தறிய நியமிக்கப்பட்ட



9th December 1959]

கமிட்டியானது அதனுடைய ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டுக்கு அனுப்பிவிட்டதா?

(ஆ) அந்த ரிப்போர்ட்டின் நகல் ஒன்று சட்டசபை முன் வைக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Sub-Committee of Industrialists set up by the State Industries Development Committee to process the scheme of Aluminium Project at Salem was not expected to submit any report to Government. It was intended to advise the Government on any specific matter relating to the project that might be referred to it.

(b) Does not arise.

*Aluminium deposits in Salem district*

*90-A Q.—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any report has been submitted by the Italian Experts on the nature of aluminium deposits in Salem district, the use to which they could be put to;

(b) if so, whether a copy of the same will be laid on the table of the House; and

(c) the decision taken by the Government thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) No, Sir. The report is treated as confidential.

(c) As the Plant will be set up in the private sector, there is no particular decision to be taken by Government.

SRI S. LAZAR: Sir, May I know, the stage at which the Project now stands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The report is under examination. Preliminary attention is being paid to the organisation of the industry.

SRI P. G. MANICKAM: தனியார் துறையிலே இந்தத் தொழிலை நடத்துவதற்கு யார் முன்வந்திருக்கிறார்கள்? அவர்களோடு சர்க்கார் என்ன நிபந்தனை செய்துகொண்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கோயம்புத்தூரில் ஸ்ரீ ஆர். வெங்கடசுவாமி நாயுடு அவர்கள் இந்தத் தொழிலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் மற்ற உதவியையும் நாடி, அந்த உதவிகளை வைத்துக்கொண்டு இந்தத் தொழிலை அமைப்பதற்கு இப்பொழுது முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

[9th December 1959

SRI K. ANBAZHAGAN : சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலையை அரசாங்கம் தாங்களே மேற்கொண்டு நடத்த முடியவில்லை என்ற காரணத்தினால்தான் தனியார் துறையில் விடுகிறார்களா? தனியார் துறையில் விடுவதற்கு ஏதேனும் தக்க காரணம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனியார் துறையில் நடத்துவதா, அல்லது பொதுத் துறையில் நடத்துவதா என்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. தனியார் துறையில் நடத்துவது நலன் என்று தோன்றியதால், அவ்வாறு தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : சர்க்கார் இதில் ஏதாவது பங்குகள் போட உத்தேசிக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார் அவ்வாறு உதவி செய்யவேண்டியிருக்கும். அதுவும் கவனிக்கப்படும்.

SRI P. S. CHINNADURAI : அலுமினியம் தொழிற்சாலையை தனியார் துறையில் முற்றிலும் விட்டுவிடுவதற்கு பதிலாக, பொதுத் துறையில் எடுத்துக்கொள்ளுவதற்கு சர்க்கார் தயாராக இல்லாததன் காரணமாக, சர்க்காரும் தனியார் துறையும் சேர்ந்து 'ஜாயிண்டு ஸ்டேட் எண்டர்பிரைஸ்' என்று சொல்லப்படுகின்ற திட்டத்தின்கீழ் எடுத்து நடத்த முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரும் இதிலே ஈடுபடுவார்கள், உதவி செய்வார்கள் என்று சொன்னேன். ஆனையினால், இதில் சர்க்கார் கண்காணிப்பும் இருக்கும்.

SRI S. NAGARAJA MONIGAR : இப்பொழுது நடக்கும் இந்தப் பரிசீலனை சாதகமான முறையில் சென்று கொண்டிருக்கிறது என்றாகிலும் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி ஐயம் வேண்டியதில்லை. அவ்வாறு சாதகமாக இருக்கிறது, எடுத்துக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : இந்த அறிக்கை ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதை வெளியிட்டால் சர்க்காருக்கு என்ன பாதகம் ஏற்படும்? ஏன் அதை வெளியிடக்கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காருக்கு பாதகம் ஏற்படாது, தொழிலுக்குத்தான் பாதகம் ஏற்படும். கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். தொழில் முறையில் சிற்சில விஷயங்களை வெளியிடக்கூடாது. ஏனென்றால், தொழிலில் போட்டா போட்டி இருக்கிறது. ஆகவே, தொழில் பாதிக்கப்படும் என்பதற்காகத்தான் இதை வெளியிடுவதற்கில்லை.



9th December 1959]

SRI J. MATHA GOWDER : நீலகிரியில் அலுமினியம் செய்யக்கூடிய பாக்ஸைட் 20 லட்சம் டன் தற்போதைக்கு கிடைக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? சர்க்கார் இதுபற்றி ஆராய்ச்சி செய்து, அப்படி என்றால் அங்கு ஒரு அலுமினியம் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவல் ஒன்றுமில்லை. இதுவரையில் எனக்கு ஒன்றும் தெரியாது. தனியாக கேள்வி கேட்டால், பார்த்து சொல்லலாம்.

SRI N. K. PALANISAMI : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அலுமினியம் தொழிற்சாலையை பொதுத் துறையிலே நடத்துவதற்கு சர்க்கார் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது தனியார் துறையிலே சௌகர்யம் இருக்கிறது என்று இப்பொழுது அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். பொதுத் துறையை விட, தனியார் துறை எந்த விதத்தில் சௌகரியம் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே சொன்னேன், சில பெரிய கனரகத் தொழிற்சாலைகளை தனியார் துறையில் நடத்துவது, சிலவற்றை பொதுத் துறையில் நடத்துவது என்று. குறிப்பிட்ட ஒரு தொழிலை எப்படி நடத்துவது என்று யோசனை செய்து பரிசீலனை செய்யப்படுகிறது. முதலில் இந்த அலுமினியம் தொழிற்சாலை பொதுத் துறையில் நடத்துவதாக யோசிக்கப்பட்டது. பிறகு பரிசீலனை செய்ததில் பொதுத் துறையில் வேண்டாம், தனியார் துறையில் நடத்துவது நலன் என்ற முடிவு செய்யப்பட்டு, அவ்வாறு தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the scheme will be taken up before the end of the Second Five-Year Plan itself?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do think so, Sir.

SRI A. MARIAPPAN : இந்தத் தொழிலை வெங்கடசுவாமி நாயுடு அவர்கள் எடுத்துக்கொண்டிருப்பதினால்தான் தாமதம் ஆகிறது என்று கேள்விப்படுகிறேன். அது வாஸ்தவமா ?

MR. SPEAKER : The question is out of order.

*Political Sufferers*

*79 *Q.*—SRI P. S. CHINNADURAI : கனம் நிதி அமைச்சர் 9.30 a.m.
அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சுதந்திரப் போராட்டத்தில் கலந்துக்கொண்டவர்களின் குடும்பத்தினருக்கு விசேட கல்விச் சலுகைகளை, அதாவது, இலவச ஆஸ்டல் போன்றவைகளை விஸ்தரிப்பது குறித்து இந்த சர்க்கார் ஆலோசித்து வருகிறதா ?

[9th December 1959

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) Yes, Sir. The Government of India have suggested a scheme for the grant of scholarships and other educational concessions to the children of political sufferers. The question as to the extent to which the suggestion may be accepted is under the consideration of this Government.

SRI T. S. RAMASWAMY : May I know the details of the communication received from the Central Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : The matter is under consideration. As soon as a decision is taken the whole matter will be published.

SRI V. SUBBIAH : அரசியல் தியாகிகள், கட்சி மாற்றம், மத மாற்றம், பொருளாதார மாற்றம் செய்த எத்தனை பேர்களுக்கு சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அது அமலுக்கு வரவில்லை.

*T.B. Sanatorium at Austinpatti*

* 80 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) மதுரை அருகேயுள்ள ஆஸ்டின்பட்டி டி. பி. சானடோரியம் கட்டி எத்தனை வருடங்களாகிறது?

(ஆ) அதில் டாக்டர்களை நியமித்து நோயாளிகளை எப்பொழுது அனுமதிக்க சர்க்காருக்கு உத்தேசமிருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The buildings at Tuberculosis Sanatorium, Austinpatti, Madurai district, were partially constructed by the Madurai District Branch of the Madras Provincial Welfare Fund up to June 1956.

(b) The Sanatorium can start functioning after the quarters for the staff are completed, i.e., early in 1960.

*Milk powder*

* 82 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் வருடத்தில் மத்திய அரசாங்கத்தாரால் இந்த ராஜ்யத்துக்கு ஒதுக்கப்பட்ட பால் பவுடரானது என்னென்ன விதமாக வினியோகம் செய்யப்படுகிறது?



9th December 1959]

(ஆ) பள்ளிக்கூட குழந்தைகளின் உபயோகத்திற்காக செலவிடப்படும் அளவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The milk powder is distributed mainly among school children, pre-school children and nursing mothers. Some quantity is allotted to the Government Milk Factory also for making toned milk and skim milk for school-children in Madras City.

(b) 470,940 lb.

SRI P. G. MANICKAM : நம் அரசாங்கத்தார் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டத்தை நடத்துவது போல், இந்த மில்க் பௌடரையும், எலிமெண்டரி ஸ்கூல்களிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் கொடுக்கும் ஒரு திட்டத்தை வகுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ராஜ்யத்துக்கு எவ்வளவு கிடைக்கிறதோ, அது பூராவையும் ஏழைக் குழந்தைகளுக்கும், மற்ற குழந்தைகளுக்கும் கொடுக்கப்படுகிறது.

SRI S. M. ANNAMALAI : நம் சர்க்கார் மத்திய சர்க்காரிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் பால் பௌடர் பெறுகிறார்கள். அமெரிக்காவிலிருந்து வரும் பால் பௌடர் ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர் மூலமாக கொடுக்கப்படுகிறது. அது எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அமெரிக்காவிலிருந்து வந்தாலும், மற்ற வெளி நாடுகளிலிருந்து வந்தாலும், அவை மத்திய சர்க்கார் மூலமாகத்தான் கொடுக்கப்படுகிறது. அவ்வளவும் பல வகைகளில் வினியோகிக்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the distribution of milk powder to poor children studying in schools is done only through the Corporation of Madras and only to children in schools maintained by them? Will the Government think of the possibility of distributing the milk powder to children studying in privately managed and aided schools also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That would depend on the availability of the milk powder over and above what is now distributed to the children of the Corporation schools.

*Folidol*

* 83 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government are aware of the Shah Commission's report on the manufacture, transport and distribution of Folidol; and

[9th December 1959

(b) the special steps taken to use folidol without causing any loss to human life?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The answer is in the affirmative.

(b) (i) Steps have already been taken to educate the cultivators in the handling of highly poisonous pesticides.

(ii) Special instructions have been issued to the Departmental staff and the trade regarding the handling, stocking, etc.

(iii) Gramsevak or other field staff help the cultivators and demonstrate the use of pesticides.

(iv) Necessary posters and pamphlets are under print for distribution to ryots to educate them in the use of pesticides.

**SRI S. LAZAR:** இந்த மருந்துகள் தீங்குகளை விலக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், உணவு அபிவிருத்தி அடைய வேண்டும் என்றும் செய்யப் படுகிறது. எப்படி, மனிதர்களுக்கு சீக்கு வந்தால், அரசாங்கமே மருத்துவ உதவி செய்கிறதோ, அதே போல, பூச்சி அடிக்கும்போது, விவசாயிகளை எதிர்பாராமல், அரசாங்கமே ஏற்று நடத்தும் ஒரு திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** மனிதர்களுக்கு தொத்து வியாதி வந்தாலும் அரசாங்கம் மருந்துகளைக் கொடுத்து உதவும். மருந்துகளைத்தான் கொடுக்கலாம், வாயில் போடமுடியாது. எதைச் சாப்பிட வேண்டும், எதை உடம்பில் மேலுக்குப் போடவேண்டும் என்று அவர்களே செய்து கொள்ளவேண்டும். அதை யெல்லாம் சர்க்காரே எடுத்து பூச்சிகளை ஒழிக்க முடியாது. ஆதலால்தான் பிரசாரம் செய்யப்படுகிறது.

**SRI K. R. NALLASIVAM:** பாலிடால் விஷங்கலந்ததாக இருப்பதனால் தீங்கு ஏற்படுவதாக இருந்தால், மாற்றத்திற்கும், மருந்தைச் சேர்த்துக் கொடுக்க, ஏதாவது ஏற்பாடு உண்டா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** இதெல்லாம் கவனிக்கப் பட்டுத்தான் வருகிறது. பீடிக்கப்பட்டவர்கள் அவ்வப்போது கவனிக்கப் படுகிறார்கள்.

*Report of the Education Grants Committee*

*84 Q.—**SRI P. G. MANICKAM:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கல்வி சம்பந்தப்பட்ட விஷயமாக ஆராய்ந்தறிய நியமிக்கப்பட்ட கமிட்டியின் (Education Grants Committee) ரிப்போர்ட் சர்க்காரால் பரிசீலனைச் செய்யப்பட்டாகி விட்டதா?

(ஆ) அவ்வாறு பரிசீலனை செய்யப்பட்டிருப்பின் அதன் நகலொன்று அசெம்பிளி முன் வைக்கப்படுமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** (a) No, Sir.

(b) Does not arise.



9th December 1959]

*Admission to Medical Colleges*

*86 Q.—**SRI N. R. THIAGARAJAN:** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்ய வைத்தியக் கல்லூரிகளில் 55 ஸ்தானங்கள் பூர்த்தி செய்யாமல் வைத்திருப்பது உண்மையா?

(ஆ) அதற்குக் காரணம் என்ன?

**THE HON. SRI M. A. MANICKAVELU:** (a) No, Sir.

(b) Does not arise.

*Reeds and rattan*

*87 Q.—**SRI K. SATTANATHA KARAYALAR:** Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the forest area under reeds and rattan growth;

(b) the quantity collected annually in the past three years;

(c) the present method of utilizing these products;

(d) whether there is any new plan for its better utilization in future; and

(e) if so, the details thereof?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** (a) The exact forest area under reeds and rattan has not been estimated as they generally occur in a scattered nature in the moist ever green forests in the State. Reed occurs in abundance in the forests of Ambasamudram Range of Tirunelveli North division over an area of about 15,100 acres.

(b) Full details are not available showing the quantity of rattan and reeds collected annually during the past three years. Information is available in respect of rattan for 1956–57 and in respect of reeds and rattan for 1957–58 and it is furnished below:—

1956–57—rattan—437,179 lb.

1957–58—reeds—183,792 lb.

1957–58—rattan—825,152 lb.

(c) Reeds and rattans are utilised for manufacturing baskets, chairs, furniture frame and umbrella handle.

(d) & (e) It has been considered that eta reeds found in Tirunelveli North division can be utilised for manufacturing paper pulp. It is estimated that about 17,500 tons of eta reeds can be made available annually for manufacture of paper.

[9th December 1959

SRI K. SATTANATHA KARAYALAR : ரீடுகள், ராட்டன் இவைகள் குத்தகைக்கு தனிக் கூப்புகளாகப் பிரித்து விடப்படுகிறதா, அல்லது ஹில் பிரதேசத்தில் சேர்த்து விடப்படுகிறதா? அப்படி பிரித்து விடுவதானால், கூப்புகளாகப் பிரித்து எவ்வளவு விடப்பட்டிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI R. SRINIVASA AYYAR : Are the Government aware of the indiscriminate removal of rattan in Kuthiraivetti Hills above the Manimuthar Project area and will the Government take steps to prevent this indiscriminate removal and make proper utilization of it on behalf of the Government because the forest area is vested with the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no such information with me. But if the hon. Member would pass on any specific information he may have with him to me, I can look into it.

SRI M. KALYANASUNDARAM : நாணல் உற்பத்தியைப் பெருக்கவும், அதிலிருந்து காகிதத் தொழிற்சாலையை அமைக்கவும் சர்க்காருக்கு ஏதாவது ஆலோசனை உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி யோசனை சர்க்காருக்கு இருக்கிறது. தொழிற்சாலையை, பிரைவேட் செக்டாரில்தான் நடத்தவேண்டும். அதற்கு யாரும் முன்வரவில்லை.

SRI T. S. RAMASWAMY : இந்த ராட்டன் கன்யாகுமரி ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு, கூடைகள் பின்னுவது போன்ற முக்கியத் தொழிலாக இருந்தது. திடீரென்று, அந்தப் பிரதேசம் சென்னையில் சேர்ந்த பிறகு, குத்தகைக்கு விட்டு விடுவதால், ஹரிஜனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? மீண்டும் ஹரிஜனங்கள் தொழில் நடக்க உதவி செய்ய சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு தகவல் இல்லை. குத்தகைக்கு விட்டாலும், யார் தொழிலுக்குப் பயன்பட வேண்டுமென்று தீர்மானித்து, அந்த நோக்கத்தோடுதான் செய்யப்படுகிறது. அது கவனிக்கப்படுகிறது.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலியில் மணிமுத்தார் பிரதேசத்தில், பிரம்பு நிறையக் கிடைப்பதால், பாபநாசத்தில் தொழிற்சாலை ஏற்படுத்துவதாக உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.



9th December 1959]

SRI M. KALYANASUNDARAM : பெரம்பினால் செய்த பொருள்களை ஏற்றுமதி செய்ய, ஏற்றுமதி மார்க்கெட் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நாட்டுக்கு வெளியே ஏற்றுமதி யென்று நினைக்கிறேன். அறிய பொருள்களுக்கு வெளிநாடுகளில் தேவை உண்டு. அது கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : எந்தெந்தத் தொழில்கள் தொடங்க தனியார் முன்வருவதில் தாமதம் ஏற்படுகிறதோ, அத்தகைய தொழில்களை சர்க்காரே எடுத்து நடத்தி, பின்பு நன்மையானது என்று கண்டால், தனியாரிடம் ஒப்படைக்க முன்வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு செய்ய உத்தேசம் இல்லை.

*Rayon pulp factory*

* 88 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state at what stage the setting up of the rayon pulp factory stands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The rayon pulp factory will be in the private sector. No industrialist has so far come forward.

SRI K. SATTANATHA KARAYALAR : அதைப்பற்றி ஏதாவது தனியாருடன் விவாதிக்கப்பட்டதா? அவர்கள் கோரிக்கை சர்க்காருக்கு ஒப்புக்கொள்ள முடியாமல் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி பேச்சு வார்த்தை நடக்கிறது, ஆனால் உருப்படியான திட்டம் ஒன்றும் உருவாகவில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : சர்க்கார் அந்த விவாதத்தில் என்னென்ன உதவிகள் செய்ய வாக்குக் கொடுத்தார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூலப் பொருள்கள் மேற்கொண்டு என்னென்ன உதவிகள் கொடுக்கலாம் என்பதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

*White cement*

* 89 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether white cement is manufactured in our State;

(b) if so, the places where they are manufactured and the quantity so manufactured in 1958-59; and

(c) if not, whether the possibility for the manufacture was examined?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

(c) Yes, Sir. Licences under the Industries (Development and Regulation) Act, 1951, have been granted to (1) V. Ramakrishna Sons (Private), Ltd., Madras, for setting up a new plant at Tiruvothiyur to manufacture 16,500 tons of white and coloured cement per annum and (2) to A.C.C. Ltd., Coimbatore, to manufacture 25,000 tons of white and coloured cement per annum at their Madukkarai Works. The licensees are taking steps to implement the licence.

SRI K. SATTANATHA KARAYALAR: அவர்கள் அதை உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு காலமாகும்? அதற்கு ஏதாவது சர்க்கார் முதலீடு செய்திருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: யந்திரங்களை அவர்கள் வெளிநாட்டிலிருந்து வரவழைக்க வேண்டியதாக இருக்கிறது. அதில் சிரமம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அவர்கள் பாக்டரிகளை அமைப்பதற்கு 31—3—1960 வரைக்கும் மத்திய சர்க்கார் அவர்களுக்கு அவகாசம் கொடுத்திருக்கிறார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: May I know whether our Government are taking shares in those concerns?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not think so.

SRI S. LAZAR: இந்த வெள்ளை கலர் சிமெட்டி வளம் நம் மாகாணத்தில் எந்த எந்த இடங்களில் இருப்பதாகத் தெரிய வருகிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது இரண்டு இடங்களில் பாக்டரிகளை அமைத்திருக்கிறார்கள். ஒன்று கோயம்புத்தூர் மதுக்கரையிலும் மற்றொன்று திருவொற்றியூரிலும் அமைத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் எங்கே கிடைக்கும், அது எந்தெந்த இடங்களில் கிடைக்கிறது என்பதற்கு என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை, அதற்கு எனக்கு நோட்டீஸ் வேண்டும்.

*Educational concessions*

*90 Q.—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the Government have decided to discontinue the Educational fee concessions allowed to the children of Non-Gazetted Government Officers studying in primary schools, that levy school fees; and

(b) if so, for what reasons?



THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) Grant of fee concessions to pupils in a school means payment of compensation grant to the school. The policy is not to pay any grant to a fee-levying elementary school. Schools which work on a fee-levying non-aided basis may not also accept compensation at the rates at which such compensation is paid. It will be possible for children who were hitherto given fee concessions in a fee-levying school to be admitted to a non-fee-levying elementary school in the same locality and there is no need, therefore, for Government to subsidise their education in a fee-levying school. Parents of children who choose fee-levying schools for the education of their children will have to pay the fees demanded by the managements.

SRI K. VINAYAKAM: Sir, is the Hon. Minister aware that the standard of education imparted in schools that levy school fees, is slightly better than the standard in other schools and therefore the Non-Gazetted Officers are tempted to send their children to those schools? So, will the Government reconsider their decision and grant concession to them as it is little?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not concede the fact that the standard in the fee-levying school is higher than the standard in the non-fee-levying school. There are very efficient non-fee-levying schools but I do agree that there are a few special fee-levying schools which are very efficient. Here this is a general concession made applicable to everybody and I do not think that Non-Gazetted Officers should claim special preference in this case.

SRI R. SRINIVASA IYER: If there are no non-fee-levying schools in a particular area and Non-Gazetted Officers are employed there, will the Government consider giving concession in such cases?

THE HON. SRI C. SUBRAMANIAM: It is a hypothetical question and my own information is that there is no area which is not served by non-fee-levying schools.

MR. SPEAKER: Questions are over.

**[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

III.—ANNOUNCEMENT.

**BILL.**

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation for the consideration of the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959, in the Legislative Assembly.

## IV.—GOVERNMENT BILL.

### THE MADRAS (TRANSFERRED TERRITORY) INCORPORATED AND UNINCORPORATED DEVASWOMS BILL, 1959.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill[a], 1959.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959.'

The motion was put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## V.—DISCUSSION *RE* QUESTION HOUR.

**SRI M. KALYANASUNDARAM** : கனம் சபாநாயகர் அவர்களே, கேள்வி நேரம் இரண்டு நாட்களாக முக்கால் மணி நேரத்தில் முடிந்து விடுகிறது. நேற்றும் இன்றைக்கும் சில அமைச்சர்கள் இல்லாத காரணத்தால் முக்கால் மணி நேரத்தில் முடிந்து விட்டது. அதனால் இப்போது இருப்பதை விட இன்னும் அதிகமாக் பத்து கேள்விகளையாவது சேர்த்துக்கொண்டு வரக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். அமைச்சர்கள் வரமுடியவில்லையானால் அவருடைய கேள்விகளை சேர்க்காமல், வரக்கூடிய அமைச்சர்களுடைய கேள்விகளை அதிகமாக ஏன் சேர்த்துக்கொள்ளக் கூடாது? அல்லது வேறு கேள்விகளையாவது சேர்த்துக்கொள்ளக் கூடாதா என்று கேட்கிறேன். அதைப்பற்றி கொஞ்சம் யோசித்து முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER** : அதற்கு நான் என்ன பண்ணுவது? கேள்விகள் சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்னதாகவே அச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அப்போது எந்தெந்த மந்திரிகள் வரமாட்டார்கள் என்பது தெரிவது இல்லை. கேள்விகள் அச்சடித்து வந்த பிறகு மந்திரிகள் தாங்கள் சபைக்கு வரமுடியாது என்றும் வெளியூருக்குப் போவதாகவும் சொல்லுகிறார்கள். அதன் பிறகு அவைகளை மாற்றி அமைப்பது என்பது முடியாத காரியம். அவர்கள் முன் கூட்டியே வரமுடியாது என்று சொன்னால் அவர்களுடைய கேள்வியைச் சேர்க்காமல் இருக்கலாம், அல்லது அதற்கு வேறு உபாயம் உண்டு. அதாவது கனம் அங்கத்தினர்கள் இரண்டு அல்லது மூன்று உப கேள்விகளுக்கு மேல் கேட்பதில்லை என்று உறுதி கொடுத்தால் இன்னும் அதிகப்படியாக பத்து கேள்விகளை சேர்த்துக்கொள்ளலாம். அல்லது

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 9th December 1959.





மந்திரிகள் வர முடியாது என்று முன்பாகவே சொல்லி விட்டால் இன்னும் அதிகப்படியாக பத்து கேள்விகளைச் சேர்த்துக்கொள்ளலாம். சில நாட்களில் முக்கியமான பிரச்னைகளைப்பற்றி கேள்விகள் வருகின்றன. அப்பொழுது அதிகப்படியான உப கேள்விகளுக்கு இடமளிக்க வேண்டியதாக இருக்கிறது. சில தினங்களில் உணவுப் பிரச்னையைப்பற்றி கேள்வி வருகிறது. அப்படி நேற்றுகூட வந்தது. அதன்மேல் சுமார் 35 உப கேள்விகள் கேட்க அனுமதித்தேன். அதனால் ஒரு விதத்திலும் தவறு ஏற்படவில்லை. கேள்விகள் குறைவாக இருந்து முக்கால் மணி நேரத்தில் முடிந்து விட்டால் அதன் பிறகு கவர்னர் உரையின் மீது விவாதம் நடக்கும். அதுவும் நல்லதுதான். ஏனென்றால் இன்னும் அதிகப்படியாக இரண்டு மூன்று அங்கத்தினர்கள் விவாதத்தில் பங்கு எடுத்துக்கொள்ளலாம் அல்லவா?

SRI A. V. THOMAS : Sir, there seems to be something wrong with the mike. It may be attended to. The mike used by the hon. Member, Sri Vinayakam, seems to be overpowerful but we could not hear from the mike used by the Hon. Minister for Home.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member, Sri Vinayakam, does not require a mike.

MR. SPEAKER : I will have the matter examined. As the Hon. Minister for Finance has put it, the hon. Member, Sri Vinayakam, does not require a mike. Perhaps the Hon. Minister Sri Bhaktavatsalam requires an accelerated mike.

***SRI K. ANBAZHAGAN** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது சட்ட மன்றத்தில் கேட்கப்படுகிற கேள்விகளுக்கு முதல் கேள்விக்கு விடை அளிக்கும்போது ஆங்கிலத்திலேயே விடை அளிக்கப்படும் முறை இருந்து வருகிறது. பல அங்கத்தினர்கள், அதன் கருத்தை உடனடியாக உணர்ந்து உடனடியாக துணைக் கேள்விகள் கேட்க முடியாமல் இருக்கிறார்கள், துணைக் கேள்விகள் போட முடியாத நிலை ஏற்படுகிறது. இதைக் கருத்தில் வைத்துக் கொண்டு நமது மன்றத் தலைவர் அவர்கள் ஆளும் கட்சிக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ, கேட்கப்படும் மூலக் கேள்விகளுக்கு முதல் கேள்விக்கு விடை கொடுக்கும்போது தமிழிலேயே விடை அளிக்க சிபாரிசு செய்வார்களா?

**MR. SPEAKER** : அதைப்பற்றி யோசிக்கிறேன்.

## VI.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : We shall now continue the discussion on the Governor's Address. The hon. Member, Sri Sasivarna Thevar, will now speak.

**SRI T. L. SASIVARNA THEVAR** : கனம் சபாநாயகர் அவர்களே, நமது மாநில கவர்னர் அவர்கள் உரையின் மீது சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவருடைய

[Sri T. L. Sasivarna Thevar] [9th December 1959

உரையில் புதிய வரிகள் இருக்குமோ என்பதைப்பற்றி சூசகமாகக் கூட தெரிவிக்கப்படவில்லை என்பதைப் பார்க்க மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால் நமது மாநில நிதி அமைச்சர் அவர்கள் மக்களுக்கு எவ்வளவு தூரம் அதிகமாக வரி போட வேண்டுமோ அவ்வளவு தூரம் ஏற்கனவே போட்டு விட்டார்கள். ஆனால் வரப்போகிற பட்ஜெட் காலத்தில் புதிய வரிகள் வரப் போகிறதோ என்னமோ தெரியவில்லை. மத்திய சர்க்காருடைய மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு என்று அதிகப்படியாக வரி போடப்போவதாக ஏற்கனவே வதந்தி கிராமப் புரங்களிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. அவ்விதம் வரி போடாமல் இருக்க நமது சர்க்கார் யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். ஜாஸ்தி வரியை மேலும் விதிக்காமல் இருக்கும்படியாக வும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தை மட்டும் சொல் லிக்கொள்ள விரும்புகிறேன். மாகாணத்திலுள்ள ஒரு பகுதி மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற ஒரு அநீதியைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அதாவது சென்ற வருஷம் அழுகும் பொருள்களுக்கு இந்த அரசாங்கம் வரி விதித்திருக்கிறார்கள். அதற்கு சென்ற வருஷம் ஒரு கிளர்ச்சி கூட நடந்தது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படி அவைகளுக்கு வரி விதித்திருப்பது நியாயம் இல்லை என்று தோன்றுகிறது. அப்படி கிளர்ச்சி செய்தபோது ஒரு வருஷம் கழித்து பார்த்துக்கொள்ளலாம் என்று வாக்களிக்கப்பட்டது எல்லோருக்கும் நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த வாக்குறுதியை இப்பொழுது மறுபடியும் பரிசீலனை செய்து அதை எடுத்துவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி வரியை எடுத்து வியாபாரிகளுக்கு சௌகர்யம் செய்யும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நமது மாகாணத்தில் இப்பொழுது இருக்கக் கூடிய பெரிய பிரச்னை உணவு பிரச்னைதான். இது சம்பந்தமாக கனம் அங்கத்தினர்களில் பலர் கவர்னர் உரையின் மீது பேசும் போது ஓரளவுக்கு அதிகமாகவே மீறி பேசி விட்டார்கள். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கையை கூடிய சீக்கிரம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நமது நாட்டிலுள்ள பெரிய திட்டங்களை எடுத்து நிறை வேற்றியாகி விட்டன. இனிமேல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் அநேகம் இருக்கின்றன. அவை களையெல்லாம் எடுத்து நிறைவேற்றினால் இன்னும் எவ்வளவோ அதிகப்படியான உணவு உற்பத்தி செய்வதற்கு வசதியாக இருக்கும். இன்னும் அதிலும் நல்ல வெற்றி காணலாம் என்று தோன்றுகிறது. எவ்வளவோ கண்மாய்களுக்கு வரக்கூடிய கால் வாய்கள் எல்லாம் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. அவைகளையெல்லாம் எடுத்து மராமத்து செய்தால் எவ்வளவோ கண்மாய்கள் நிரம்புவதற்கு வசதியாக இருக்கும். இப்படிப்பட்ட கண்மாய்கள் ராமனாதபுரம் ஜில்லாவில் அநேகம் இருக்கின்றன.



9th December 1959] [Sri T. L. Sasivarna Thevar]

அதற்கு முதலிடம் கொடுத்துச் செய்ய வேண்டும் என்று அரசாங் கத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். உடனடியாக தாலூகா வாரி யாகவோ அல்லது ஜில்லா வாரியாகவோ ஸ்பெஷலாக இஞ்சினீயர் களை நியமித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை நிறை வேற்றினால் பெரும் அளவிற்கு உணவு பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது மழை பெய்கிறது. நிறைய ஜலம் வருகிறது. போதுமான கண் மாய்கள் இருந்தபோதிலும் வாய்க்கால்கள் சரியாக இல்லாமல் இருப்பதால் வரக்கூடிய ஜலத்தை தேக்கி வைத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது. அதைப்பற்றி பல தடவை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக விவசாய மந்திரி கூட ஒரு மகாநாடு கூட்டி பேசியிருக்கிறார். அதற்கு நான் அவரைப் பாராட்டுகிறேன். எல்லா பெரிய திட்டங்களையும் எடுத்து முடித் தாகிவிட்டன. பாக்கி இருப்பது அப்பர் பெரியாறு திட்டம் ஒன்று தான். அதை எடுத்து நிறைவேற்றினால் ராமனாதபுரம் ஜில்லா விற்கு அதிகப்படியான ஜலம் வரும். பல நன்மைகள் அதனால் ஏற்படும். (ஒரு குரல் : திருநெல்வேலியிலுள்ளவர்கள் சண்டைக்கு வருவார்களே.) திருநெல்வேலியிலுள்ளவர்கள் சண்டைக்கு வரு வார்கள் என்று கூறுகிறார்கள். பம்பையாறு திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். பெரிய திட்டங்கள் ஆகி இந்த இரண் டையும் சேர்த்துக்கொண்டு சொல்லும்படியாக முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டையும் கொண்டு வந்தால் போதும். தமிழ் நாடு நன்றாக முன்னேறும். அப்பர் பெரியார் திட்டத்தினால் ராமநாதபுரம் பகுதியில் அதிக நன்மை ஏற்படும். இன்னொரு ஸ்கீமினால் திருநெல்வேலி ஜில்லா விற்கு நன்மை ஏற்படும். ஆகையால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த இரண்டையும் சேர்த்துக்கொள்ளவேண்டு மென்று மனப்பூர்வமாக நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக மூன்றாவது திட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு யோசனை. திட்டத்தில் எந்த எந்தப் பகுதியைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று தீர்மானிப்பதற்கு ஒரு சர்வ கட்சி கூட்டத்தை அமைச்சர் அவர்கள் கூட்டியிருக்கிறார்கள் என்று நான் பத்திரிகையில் பார்த்தேன். சென்ற கூட்டத்தில் கூட மாற்றுக் கட்சிகள் கலந்துகொள்ளவில்லையென்று வருந்தின தாகவும் கேள்விப்பட்டேன். எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் எங்கள் தலைவருக்கு அழைப்பு வந்திருந்தது. அவர் வெளிநாடு போயிருந்த காரணத்தினால் அவர் கலந்து கொள்ள முடியவில்லை. அவருக்கு அழைப்பு அனுப்பிய காலத்தில் இன்னொரு அழைப்பும் வந்திருந்தால் எங்களில் யாராவது நிச்சய மாக அந்தக் கூட்டத்திற்கு வந்து கலந்து கொண்டிருப்போம். நாங்கள் இவ்விஷயத்தில் பூர்ணமாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். அந்தமாதிரி விஷயங்களில் நன்றாகப் பரிசீலனை செய்து முடிவு செய்த பிற்பாடு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்து நம்முடைய கோரிக்கைகளைப் பெறவேண்டும் என்று

[Sri T. L. Sasivarna Thevar] [9th December 1959

இந்தச் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். கனம் முத்தையா செட்டியார் பேசியபோது நாம் பெறவேண்டிய சலுகைகளைப் பெறுவதற்கு நம் சர்க்கார் மத்திய சர்க்காரிடத்தில் இருந்து கொஞ்சம் கூடப் பின்வாங்கக் கூடாது என்று சொன்னார். இங்கே உள்ள சக்தியை எல்லாம் ஒன்றாக வைத்து நம்முடைய உரிமைகளை, கோரிக்கைளை பரிபூரணமாக கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்காமல் பெறவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டார். நானும் அவர் சொன்ன முறையை இந்தச் சர்க்கார் கொஞ்சம் கூடத் தயக்கம் இல்லாமல் பின்பற்றவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு நகரப்புறங்களில் அநேகம் பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அதற்கு முக்கியமான காரணம் ஒன்று தெரிகிறது. இன்றைக்கு பக்டோன் சில் பக் போன்ற மூட்டைப் பூச்சி மருந்துகள் ஒரு அணா இரண்டணாவுக்கு சுலபமாக கடைகளில் கிடைத்துவிடுகிறது. இதில் ஆளைக் கொல்லும் விஷ சத்து அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. இந்த மருந்தை நீரில் கரைத்து குடித்துவிடுகிறார்கள். பத்துப் பதினைந்து நிமிஷங்களில் இறந்து போகிறார்கள். இப்படி இளம் பெண்களும், வாலிபர்களும் இறந்து போவதைத் தடுக்க முயற்சி செய்ய வேண்டும். எனக்குத் தெரிந்து பத்துப் பதினைந்து பேர்கள் இறந்திருக்கிறார்கள். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: சாகத் துணிந்தவர்களுக்கு வேறு விஷமா கிடைக்காது.) தற்கொலை செய்து கொள்வதற்காக விஷம் என்று வாங்குவது எப்படி? ஒரு அணா கொடுத்து சுலபமாக மூட்டைப் பூச்சி மருந்தை வாங்கி உண்டு விடலாம் என்று இருப்பது எப்படி? ஆகவே இதைக் கண்டிப்பாகத் தடைசெய்ய வேண்டும். இந்த மருந்துகளுக்குப் பதிலாக வேறு ஏதாவது விஷமில்லாத மருந்தை உபயோகிக்க வகை செய்தாலும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் பெருமான் உரையில் நமது நாட்டிலே பெரும் அளவில் சட்டம், அமைதி ஒழுங்கு ஆகியவை பாதுகாக்கப் பட்டு வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவரும் நேரில் எங்கள் தொகுதிக்கு வந்திருந்தார். துரதிருஷ்டவசமாக கொஞ்ச நாட்கள் முன்பு கலவரம் நடந்த இடத்தையும் நேரில் சென்று பார்த்தார். நானும் அவருடன் சென்றிருந்தேன். அந்தப் பகுதியில் எந்த இரண்டு வகுப்பாரிடையே மோதல் ஏற்பட்டதோ அவர்கள் இரண்டுபேர்களுமே இன்றையதினம் சந்தோஷமாக ஒற்றுமையுடன் வாழ்வதாக அவர்களே நேரில் சொன்னார்கள். துரதிருஷ்டவசமாக ஏற்பட்ட அந்தக் கலவரத்தின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான பேர்கள் கைதி செய்யப்பட்டும் பலபேர்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள். மூவாயிரம் சொச்சம் பேர்களில் இன்றைக்கு 40, 50 பேர்கள்தான் சிறையில் இருக்கிறார்கள். குற்றவாளிகள் இல்லையென்று கோர்ட்டார்களே பலபேர்களை விடுதலை செய்துவிட்டார்கள். நான்கு மாதம், இரண்டு மாதம் என்று தண்டிக்கப்பட்டவர்களும் தண்டனை காலம் முடிந்து வெளியேறிவிட்டார்கள். ஒரு நாற்பது ஐம்பது பேர்கள்தான்



9th December 1959] [Sri T. L. Sasivarna Thevar]

இன்றைக்குச் சிறையில் இருக்கலாம். சர்க்கார் மனது வைத்து அவர்களுக்கும் மன்னிப்புக் கொடுத்து விடுதலை செய்தால் மீண்டும் அந்தப் பகுதியில் நிரந்தரமாக சகஜமான சூழ்நிலை ஏற்பட்டு எல்லோரும் அமைதியாக வாழ்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று ஞாபகப்படுத்துகிறேன்.

இன்னொன்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அச்சம்பவம் காரணமாக சிறையில் இருக்கக்கூடிய குற்றவாளிகளது தன்மையையும் சர்க்கார் நன்றாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கு பி. கிளாஸ் கொடுத்திருந்தார்கள். அந்தக் கைதிகளில் ஒருசிலர் இரண்டு லட்சம், மூன்று லட்சத்திற்கு மேல் சொத்து உடையவர்கள் இருக்கிறார்கள்.

(Sri T. Karia Gounder in the Chair.)

அவ்வாறு தண்டிக்கப்பட்டு பி. கிளாஸ் கொடுக்கப்பட்ட கைதிகளை சர்க்கார் திடீரென்று ஸி. கிளாசுக்கு மாற்ற உத்தரவு பிறப்பித்திருப்பதாக அவர்களுடைய மனைவிமார்களும், உறவினர்களும் என்னிடம் வந்து தெரிவித்து அந்த மாதிரியாகச் செய்யாது இருக்கும்படியாக சர்க்காரிடம் கேட்டுக்கொள்ளச் சொன்னார்கள். அதைப்பற்றி இப்போது உள்நாட்டு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கைதிகளுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த சலுகைகளை எடுத்துவிடாமல் அந்தச் சலுகைகளை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும்படியாக உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**Sri M. K. SOMASUNDARAM**: தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றியிருக்கும் உரையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச நான் விரும்புகிறேன். கவர்னர் பெருமான் ஆற்றியிருக்கக் கூடிய உரையில் பெரிய பெரிய திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பெரிய திட்டங்கள் எல்லாம் கூடுமான வரையில் முடிவாகியிருக்கிறது. அந்தத் திட்டங்களின் மூலமாகப் பல கோடி மக்களுக்கு நன்மை கிடைக்கும் சமயத்தில் இப்போது பின் தங்கியிருக்கிற இடங்களுக்கும் அவற்றை விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் அவர்களும் குறிப்பிட்டார்கள். ராமநாதபுரம், திருநெல்வேலி பகுதி வளம்பெறத்தக்க திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்படிக் குறிப்பிட்ட நோக்கில் அங்கே பின் தங்கிய இடமாக இருக்கும் இடங்களுக்கு இந்தத் திட்டங்களை உருவாக்கவேண்டும் என்றார். அதற்காகத்தான் அந்தப் பிராந்தியங்களில் தொழிற்சாலை ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட இடங்களில் ஹரிஜனங்களுக்கு நல்ல முறையில் பல நன்மைகளைச் செய்கிறபோது மற்றவர்கள் அதற்கு இடையூறாக இல்லாமல் இருந்தால் நலமாக இருக்கும். அந்தத் திட்டங்களை நிறைவேற்ற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒத்துழைக்கா

விட்டாலும் உருவாக்குகிற திட்டங்களுக்கு மற்றவர்கள் இடையூறு செய்யாமல் இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பம்பையாறு திட்டம் இருக்கிறது. அதை நல்ல முறையில் நிறைவேற்றிக் கொடுத்தால் சங்கரன்கோயில், ராமநாதபுரம் பகுதியில் உள்ள பல இடங்கள் கூட நல்ல பலன் அளிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இந்தப் பம்பையாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதே மாதிரி தூத்துக்குடி சேதுசமுத்திரம் ஆகிய இரண்டு துறைமுகங்களையும் முன்பு அபிவிருத்தி செய்வதாக இருந்தது. ஆனால் இப்போது தூத்துக்குடி துறைமுகத்தை எடுத்துவிட்டு சேதுசமுத்திர திட்டத்தை மட்டும் எடுத்துக்கொள்ளப் போவதாகத் தெரிகிறது. தூத்துக்குடி துறைமுகத்தையும் சேர்த்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். தென் பகுதியில் தூத்துக்குடி துறைமுகம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். ஆகவே, அதை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் சில தினங்களுக்கு முன்பாக பரம்பிக்குளம் திட்டத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது ஆலியாறு திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது. ஆலியாறு என்ற இடத்தில் பெரிய அணைக்கட்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது நல்ல முறையில் உருவாகிக்கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். உற்சாகத்துடன் அவர்கள் வேலை செய்துவருகிறார்கள். ஆகையால் அந்த மாதிரி திட்டங்களை நல்ல முறையில் நடத்துவதற்கு நம் அரசாங்கம் நல்ல ஏற்பாடு செய்திருக்கிறது. அதற்காக 40 கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று தெரிகிறது. இது மக்களுக்கு அதிக நன்மை பயக்கும் என்று நம்புகிறேன்.

இன்னும் சில இடங்களில் மராமத்து வேலை நல்ல முறையில் நடக்கவில்லை யென்று எல்லோரும் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். இர்ரிகேஷன் கான்பரன்ஸ் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. அந்த மகாநாட்டில் அவ்வப்போது இந்தக் குறைபாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. எஞ்சினீயர்களும் அதைக் கவனித்து ஆவன செய்து வருகிறார்கள். இன்னும் நன்றாக கவனித்து நல்ல முறையில் செப்பனிடவேண்டும். செப்பனிட்டால் தான் விவசாயத்தை நல்ல முறையில் பெருக்க முடியும். மேலும்
10 a.m. விவசாயப் பொருள்கள் விலைவாசிகள் ஏறிக்கொண்டு போகிறதென்று சிலர் குறிப்பிட்டார்கள். விலைவாசிகள் ஏறிக்கொண்டு போவதனால் ஏற்படுகிற லாபம் விவசாயிகளுக்குக் கிடைக்கும்படியாக இருந்தால் நலமாக இருக்கும்.

ஆனால் வேலையில் அமர்ந்திருக்கிற எல்லோரும் விலைவாசி ஏறிக் கொண்டு போகிறது என்று வருத்தப்படுவதோடு வீட்டில் சும்மா இருக்கிறவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய திட்டத்தை உரு-





வாக்கவேண்டும். ஒருவர் வேலை பார்த்து அவரை நம்பி நாலு பேர் சும்மா வீட்டில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தால் நம் நாட்டின் நிலை என்னவாகும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வீட்டில் சும்மா இருக்கிற ஒவ்வொருவரும், ஆணானாலும் சரி அல்லது பெண்ணானாலும் சரி, ஏதாவது ஒரு கைத்தொழில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை விட்டுவிட்டு விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது என்று சொல்லிக்கொண்டிருந்தால் விவசாய மக்களின் கதி என்னாவது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். விலைவாசிகள் குறைந்தால் விவசாய மக்களின் நிலை இன்னும் மோசமாகும். ஆகவே விலைவாசி எப்படியிருந்த போதிலும் சும்மா இருக்கிறவர்கள் நல்ல முறையில் ஏதாவது தொழில் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாய மக்களை மட்டும் குறை கூறிக்கொண்டு போவது சரியல்ல. இப்பொழுது குடிசைக் கைத்தொழில்கள் கிராமங்களில் நல்ல முறையில் பரவி இருக்கின்றன. அவைகள் இன்னும் நல்ல முறையில் பரவுவதற்கும், அவைகள் இன்னும் அதிகப்படியாக அபிவிருத்தியடையச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். வேலை கிடைக்கவில்லை, கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர குடிசைக் கைத்தொழில்கள் செய்வோம் என்ற எண்ணம் இல்லாமல் பலர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு சரியான முறையில் உரங்கள் கிடைக்காததால் விவசாயம் பின்தங்கிக் கிடக்கிறது. ஆகவே, விவசாய மக்களுக்கு சரியானபடி உரம் கிடைப்பதற்கு வகை செய்து, அவைகள் கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் கொடுக்கப்படவேண்டும். ஆகவே, ஆங்காங்கு கூட்டுறவு சொசைட்டிகள் ஏற்படுத்தி நல்ல முறையில் விவசாயிகளுக்கு தக்க சமயத்தில் உரங்கள் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். சில தினங்களுக்கு முன்பு விவசாயிகள் உரம் கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருந்தார்கள். அலாட்மென்ட் கூட சரியானபடி வந்து சேரவில்லை. எந்தெந்த சமயத்தில் உரம் இடவேண்டுமோ அப்பொழுது இட்டால்தான் நல்ல விளைச்சலை காணமுடியும். ஆகவே, விவசாயிகளுக்கு முன்கூட்டியே உரம் அனுப்பி வைக்க வேண்டியது அவசியம் என்பதைச் சர்க்கார் உணர்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உரம் கிடைப்பதற்கு சில சங்கடங்கள் இருக்கின்றன. உரத்தை கூட்டுறவு சொசைட்டிகளிடமோ அல்லது தனிப்பட்டவர்களிடமோ விநியோகத்திற்குக் கொடுத்தால் துர்விநியோகம் ஏற்படுகிறது என்ற புகார் இருக்கிறது. மூட்டை ஒன்றுக்கு 37 ரூபாயாக இருந்த உரம் ப்ளாக் மார்க்கட்டில் 61 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆகவே, உரத்தை எல்லோருக்கும் நல்ல முறையில் பகிர்ந்தளிக்க கலெக்டர் அவர்களுக்குச் சர்க்கார் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலெக்டர் அவர்கள் உரத்தை கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் விநியோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரம் தக்க காலத்தில் கிடைக்க வேண்டும். அதைத்தான் முன்கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டும். பொதுவாக இப்பொழுது கூட்டுறவு முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கூட்டுறவு முறையில் எல்லோரும் ஈடுபடுவதற்கு த்க்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

[Sri M. K. Somasundaram] [9th December 1959

கூட்டுறவு முறை எப்படி இயங்கவேண்டுமென்பதை சிலயிடங்களில் காட்ட வேண்டும். சில தினங்களுக்கு முன்பு புளியங்குடியில் கூட்டுறவு விவசாய பண்ணை ஆரம்பித்து அதன் மூலம் பல நன்மைகள் அடைய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதை நேரில் சென்று பார்த்தால் நலமாயிருக்கும். நூறு ஏக்கர் கொண்ட ஒரு விவசாய பண்ணையில் 300, 400 பேர்கள் சேர்ந்து நடவு நடுவது நல்ல காட்சியளிக்கிறது. அதேபோல் திருநெல்வேலி ஜில்லாவையடுத்த சமூகபுரம் கோட்டைக்கருங்குளம் என்றயிடத்தில் 436 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை, ஹரிஜனங்களுக்காக ஒரு கூட்டுறவு விவசாயப் பண்ணையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று சர்க்காருக்கு தாக்கீது கொடுத்திருக்கிறோம். ஆகவே அதை கூட்டுறவு முறையில் நடத்த அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். திருநெல்வேலி ஜில்லாவில் அநேக திட்டங்கள் உருவாகி அவைகள் நடைபெறாமல் இருப்பது பற்றி வருந்துகிறேன். அதில் முக்கியமாக காகித தொழிற்சாலை ஒன்று பாபநாசத்தில் ஏற்படுத்தப் பட்டிருந்தது. பின்னால் அது நல்ல முறையில் நடைபெறவில்லை என்று அதன் லைசென்ஸ் கான்ஸல் செய்யப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதை நடத்துவதற்கு தனிப்பட்டவர்கள் முன் வராவிட்டாலும் அதை சர்க்காரே ஏற்றெடுத்து நடத்த வேண்டும். அல்லது அந்தக் காகிதத் தொழிற்சாலையை கூட்டுறவு முறையில் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (பெல்) கடைசியாக நான் சொல்ல விரும்புவது, திருநெல்வேலியில் சில குளங்கள் மேடாகயிருப்பது எல்லோருக்கும் தெரியும். அந்தக் குளங்களை நல்லமுறையில் செப்பனிடுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRI B. K. LINGA GOWDER: Sir, I welcome the Address of the Governor which, though very short, contains some of the magnificent achievements of our Government. The Government deserve to be congratulated on these, especially the maintenance of law and order. It is indeed very remarkable. One wonders at the magnificent way in which they had handled the various disruptive forces in the State. It is something which even the United Nations Organisation has found difficult to achieve in the international field. The success of the Government will last only if all the parties in the State co-operate, forgetting all their differences and sinking all their conflicting ideologies. If such a thing can be achieved in all the other States in the country, we need not worry about any threat from external quarters. I am sure that every patriotic Indian realises the gravity of the situation on our borders and will rise to the occasion for defending the country in the event of any external aggression. Any difference amongst us at this juncture will be disastrous. We expect every Indian to realise his responsibility.

The Governor has made mention in his Address regarding the import of certain machinery into our State. I request the Government to recommend to the Central Government the liberal import of machinery for the tea industry. This is one of the foremost



9th December 1959] [Sri B. K. Linga Gowder]

foreign exchange earners. For want of this machinery and financial aid, about 5,000 small growers of tea are not able to manufacture quality tea. They manufacture only common tea which can be sold locally. The price of this tea is not even one-fourth of that of the quality tea. It is amazing to note that the Union Government have some proposals to give relief to the manufacturers of quality tea in the existing cess. Some time back, I led a deputation of small growers to the Union Deputy Minister for a reduction of the Central excise duty on these common teas. This problem was again brought to the notice of the Union Minister for Finance when he was at Ootacamund. Both of them promised to consider this problem sympathetically. But I am very sorry to say that nothing tangible has resulted so far. So I request the Government to take up the question of import of tea machinery and also the reduction of the Central excise duty on common teas, with the Central Government.

I am thankful to the Government for their decision to levy multi-point sales tax on tea. This has given relief to about 5,000 small growers in my district alone. Now all the small growers have to register themselves by paying a registration fee of Rs. 12, irrespective of the extent they hold, and to pay tax on the turnover. Under the amendment, all these growers are exempted from sales tax. This is a great relief to the common tea manufacturers.

Sir, in my district there is no major industry. The proposal to start a raw film industry has been hanging fire for the past so many years, and now I understand that the Centre has recently sent a team of experts to make a further survey for locating the industry in the district. I am disappointed to hear that these experts have concluded that the water resources which is to feed this industry is highly contaminated. They have come to the decision that the industry cannot be located in the district. I suggest to Government that when such teams are sent out for prospecting, the local M.L.As. and M.Ps. should be given a chance to discuss with the teams and give them suggestions, and, if possible, make alternative suggestions also. So I request the Government to take up this question with the Centre to locate this industry in my district, as it is not very difficult to purify the water of foreign matter with the assistance of modern scientific methods.

My disappointment is greater that in the Address of the Governor, no mention is made about the permanent summoning of the Assembly at Ootacamund. Am I to presume that the Government have taken it for granted that it is to be only an annual meeting on the Hills? If that is so, I would request the Government to make arrangements from now on to provide suitable hostel facilities for the Members of the Assembly. I am glad to say that some of the big palaces in Ootacamund are available

for the use of Members. We may avail of them. Further, considerable vacant space is available in the Arranmore Palace compound and here hostels can be put up for the convenience of Members. They can be used, when the Legislature is not in session, as tourists' homes for the middle class people.

I welcome the proposal for the fixation of ceiling on land holdings and I expect the Government to exempt coffee, tea and rubber plantations from the provisions of this enactment. These industries have already been well organised and they yield the maximum return now. Any proposal to disturb these industries at present will be disastrous and I hope the Government will consider this aspect of the question.

Lastly, I am proud to say that my district has given big hydro-electric schemes like Pykara, Moyar and Kundah to the rest of the State. Though our people have sacrificed a lot, they are happy that their brothers in other parts of the State enjoy the benefits of these schemes industrially and agriculturally. As hon. Members know, my district always deserves special treatment not only for the reason it has given these schemes but because of its peculiar geographical position. I request the Government to give my district the special consideration it deserves.

* **Sri S. M. ANNAMALAI** : *சட்டமன்றத் தலைவர் அவர்களே, இப்போது சட்டமன்றத்தின் மீது வைக்கப்பட்டிருக்கின்ற கவர்னர் உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக அடுத்த ஆண்டு வருவதற்குள்ளாகவே இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக கவர்னர் அவர்கள் உரையாற்றப் போகிறார்கள். அந்த உரையின் மூலமாக மக்களுக்கு, குறிப்பாக பாமர விவசாய மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய செய்திகள் இருக்கும் என்று எல்லோரும் நம்பினார்கள். ஆனால் கவர்னர் அவர்களுடைய உரையில் சொல்லப்பட்டிருக்கின்ற விஷயங்கள் எல்லாம் பொதுமக்களை ஏமாற்றக்கூடிய விஷயங்களாக இருக்கின்றன. அதைப்போலவே கிராமங்களில் வேலை செய்துகொண்டிருக்கக்கூடிய உத்யோகஸ்தர்கள் எல்லாம் கவர்னர் அவர்களின் உரையின் மூலமாக தங்களுடைய பிரச்னைக்கு ஏதாவது பரிகாரம் கிடைக்கும் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அவர்களும் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். கவர்னர் அவர்களது உரையை படிக்கின்ற பொழுது, சம்பா அறுவடைக்குப் பின்னால் நியாயவிலைக் கடைகள் இருக்காது என்ற நிலையில் சொல்லப்பட்டிருக்கிறது. நேற்று கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதும் நமது அமைச்சர் அவர்கள் சம்பா அறுவடைக்குப் பின்னால் நியாயவிலைக் கடைகள் இருக்காது என்று தெரிவித்தார்கள். ஆனால் சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்னால் இதே சட்டமன்றத்தில் அமைச்சர் அவர்கள் உணவுப் பிரச்னையைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில் இந்த நாட்டில் 2,000 நியாயவிலைக் கடைகள் திறக்கப்*



*படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது 2,443 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டிருப்பதாக இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் நாட்டிலிருக்கின்ற பாமர மக்கள் எல்லாம் நியாயவிலைக் கடைகள் மேலும் மேலும் தேவை என்று சொல்லுகின்ற நிலைதான் இருந்து கொண்டிருப்பதுதான். ஆகவே நியாயவிலைக் கடைகள் மேலும் மேலும் தேவை என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் சம்பா அறுவடைக்குப் பின்னால் நியாயவிலை கடைகளை நடத்த முடியாது என்று அமைச்சர் அவர்களே இந்தச் சட்டமன்றத்திலே தெரிவிக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு சர்க்காரிடத்தில் உணவு தான்யத்தைப் பார்த்தால் ஏறத்தாழ இவர்கள் எண்ணியிருந்ததற்கு குறைவாகத்தான் இருக்கின்றது. இதே சட்டமன்றத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னால் இதே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் இரண்டு லட்சம் டன் தான்யம் கொள்முதல் செய்யப்போகிறோம் என்று. ஆனால் சர்க்கார் ஒரு லட்சத்தி 25 ஆயிரத்தி 822 டன் தான் கொள்முதல் செய்ய முடிந்தது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதே சமயத்தில் மத்திய சர்க்காரிடமிருந்து ஒரு லட்சம் டன் உணவு தான்யம் வாங்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரை 35 ஆயிரம் டன்தான் வாங்கியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. அதே சமயத்தில் இங்கு ஒரு மாதத்திற்கு மட்டும் 30 ஆயிரம் டன் உணவு தான்யம் தேவைப்படும் என்றும் சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில் இப்போது கையிருப்பு எவ்வளவு இருக்கின்றது என்பதைப் பார்க்கும்போது ஏறத்தாழ 52,258 டன் அரிசிதான் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸ்டாக்கை வைத்துக்கொண்டு பெப்ருவரி மாதம் வரை நியாயவிலை கடைகளை நடத்த முடியுமா என்பதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உண்மையில் இந்த நிலைமைகளை எல்லாம் வைத்து பரிசீலித்துப் பார்த்தால் இந்த ஸ்டாக்கைக்கொண்டு பெப்ருவரி மாதம் வரை நியாயவிலைக் கடைகளை நல்ல முறையில் நடத்த முடியாது. ஆகவே பெப்ருவரி மாதம் நியாயவிலைக் கடைகளை நடத்துவதற்கும் விலை உயர்வைத் தடுப்பதற்கும் இந்தச் சர்க்கார் என்ன செய்யப்போகிறார்கள், மேலும் உணவு தான்யம் வேண்டுமென்றால் ப்ரொக்யூர்மென்ட் செய்யப் போகிறார்களா? அல்லது வேறு எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை சர்க்கார் திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும். இந்தப் பிரச்னைகளைப்பற்றியெல்லாம் மத்திய சர்க்காரிடத்தில் விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள். ஆனால் இப்போதுள்ள புள்ளி விவரங்களின்படி பார்த்தால் நல்ல முறையில் நியாயவிலைக் கடைகளை நடத்துவதற்கு எந்தவிதமான வழிகளும் இருப்பதாக தெரியவில்லை. ஆகவே இதைப்பற்றி சர்க்கார் சிந்தனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

*அடுத்தபடியாக, மின்சாரக் கட்டணத்தைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மின்சார இலாகா அமைச்சர் அவர்களும் இப்போது சட்டமன்றத்தில் இருந்து*

[Sri S. M. Annamalai] [9th December 1959

கொண்டிருக்கின்றார்கள். சர்க்காரிலிருந்து அக்டோபர் ஒன்றாம் தேதி வெளியிட்ட ஜி.ஓ. ஒன்றில் மின்சாரக் கட்டணங்களை எல்லாம் உயர்த்தி இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு மின்சாரம் மூலமாக பலவிதமான சலுகை செய்து வருகிறோம், கட்டணத்தில் சலுகை செய்து கொடுக்கப் போகிறோம் என்று சொல்லிவிட்டு இப்போது அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கனவே இருந்து வந்த கட்டணத்தை குறைக்கவேண்டும் என்று இதே சட்டமன்றத்தில் பலர் கேட்டிருக்கிறார்கள். ஸ்பெஷியல் கியாரண்டி என்ற இனத்தில் ஒரு குதிரை ஓட்டத்திற்கு ரூ. 50 என்று இருந்து வந்த கட்டணத்தை குறைக்கவேண்டும் என்று இதே சட்டமன்றத்தில் எல்லாக்கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து கேட்டிருக்கின்றார்கள். இந்த சமயத்தில் டாரிப் ரேட் என்ற முறையில், முன்பு ஒரு குதிரை வேக ஓட்டத்திற்கு ஆறு ரூபாய் என்று இருந்தது ஒரு குதிரை வேக ஓட்டத்திற்கு 15 ரூபாய் என்று இப்போது வெளியிடப்பட்ட ஜி.ஓ.வின் மூலமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்போலவே அக்டோபர் ஒன்றாம் தேதி வெளியிடப்பட்ட அறிக்கையில் முன்னால் சர்சார்ஜ் உட்பட யூனிட் ஒன்றுக்கு 12½ தம்பிடி என்றிருந்ததை மாற்றி இப்போது ஏறக்குறைய ஒரு அணா இரண்டு தம்பிடி ஒரு யூனிட்டுக்கு என்ற அளவில் வசூலிக்க உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டும் அல்ல, மீட்டர் டெஸ்ட் என்ற இனத்தில் ஏதாவது மீட்டர்களில் கோளாறு ஏற்பட்டுவிட்டது என்று யாராவது அதிகாரிகளிடத்தில் போய் சொன்னால், அதை வந்து பார்த்து கொடுப்பதற்கு முன்பு ஐந்து ரூபாய் என்று இருந்தது. அதை இப்போது 10 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் பார்க்கும் போது இந்த சர்க்கார் உண்மையிலேயே பாமர மக்களுக்கு நன்மை செய்கிறதா என்று பார்த்தால், இந்த அரசாங்கம் ஏழை மக்களிடமிருந்து அதிகப்படியான பணத்தை வசூலிக்கிறார்கள் என்று தான் தெரிந்துகொள்ள முடிகின்றது. ஆகவே, இந்த நிலைமைகளை எல்லாம் நாம் சிந்திக்கவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். அதைப்போலவே இந்தச் சர்க்கார் வெளியிட்டிருக்கின்ற அறிக்கைக்கும் "பைனான்ஸ்" இலாகாவிலிருந்து அந்த இலாகா ஸெக்ரட்டரி அவர்கள் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கைக்கும் வித்தியாசம் இருக்கின்றன.

அந்த அறிக்கையிலே "டாரிப் சார்ஜ்" குறைந்து விட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1-ம் தேதி ஜி.ஓ.-வில் "டாரிப் சார்ஜ்" அதிகமாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சர்க்கார் தரும் அறிக்கையிலே "the present low tariff for agricultural consumers involves a measure of subsidy and further expansion to the remaining villages will widen the gap further" என்று அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "டாரிப் சார்ஜ்" குறைக்கப்பட்டிருக்கிறது; ஆகையால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்று நிதி இலாகாவின் மூலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் 1-ம் தேதி அறிக்கையைப் பார்த்



9th December 1959] [Sri S. M. Annamalai]

தால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. ஆயிரம் யூனிட், இரண்டாயிரம் யூனிட் செலவழிப்பவர்களுக்குத்தான் சலுகை தரப்பட்டிருக்கிறது. அந்த மின்சார சக்தியை எவ்வளவு அதிகமாக உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்களோ அந்த அளவுக்கு சௌகரியம் தரப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் ஆயிரம் யூனிட்டுக்குக் கீழே, 400 யூனிட்டுக்குக் கீழே "டொமஸ்டிக் சர்வீஸ்" உபயோகப்படுத்துகிறவர்கள் ஒரு யூனிட்டுக்கு 29 நயா பைசா கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஆயிரம் யூனிட்டுக்கு அதிகமாக செலவழிப்பவர்கள் ஒரு யூனிட்டுக்கு 25 நயா பைசா கொடுத்தால் போதும். இதிலிருந்து பணக்காரர்களுக்குத்தான் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது, விவசாயிகளுக்கு எந்த வித சலுகையும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. சர்க்கார் அந்தப் பாமர விவசாயிகளிடமிருந்து இப்படி மறை முகமாக பணத்தை வசூலிக்கிறார்கள்.

ஒரு "சர்வீஸ்" எடுக்கவேண்டுமென்றால் 3 குதிரை ஓட்டத்திற்கு 30 ரூபாய் வைத்திருந்தார்கள். இப்போது 3 குதிரை ஓட்டம் "சர்வீஸ்" எடுக்க 3 மாத பணம் முன் கூட்டியே கட்ட வேண்டும். ஏறத்தாழ டிசம்பர் மாத பில் இப்போது வராது. இப்போது வரும் பில் அக்டோபர் மாத பில்லாக இருக்கும். இந்த ஜி.ஓ. படி அக்டோபர் பணம், நவம்பர் பணம், டிசம்பர் பணம் ஆக மூன்று மாத பணத்தையும் சேர்த்து கட்டும்படியாக இருக்கிறது. அதன் காரணமாக பாமர மக்கள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர். ஆகவே, பாமர மக்களுக்கு, ஏழை விவசாய மக்களுக்கு எந்த வித சலுகையும் தராத இந்த கவர்னர் உரையை எதிர்க்கிறேன் என்று கூற விரும்புகிறேன்.

கடைசியாக, 17 கோடி ரூபாய் விவசாயிகளுக்காகச் செலவழிக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். நாட்டுப் புற மக்களுக்கு இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர், பத்து ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு உண்மையிலேயே எந்தவித நன்மையும் இல்லை. கூட்டு பட்டாவை இதை சப் டிவிஷனைப் பிரிக்க வேண்டும் என்றால் ரெவின்யூ இலாகாதான் சப் டிவிஷனைப் பிரித்துத் தரவேண்டும். ரெவின்யூ இலாகா ஆமை வேகத்தில் செல்லுகிறது. சப் டிவிஷனைப் பிரித்தவுடன்தான் கடன் கிடைக்கும். இரண்டு, 3 ஏக்கர் வைத்திருக்கின்ற பாமர மக்கள் கடனைப் பெற முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கூட்டுப் பட்டாதார்கள் அந்தக் கடனை உபயோகப்படுத்தும் முறைகளில் சர்க்கார் உத்தரவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI A. R. SUBBIAH MUDALIAR : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின் பேரில் சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். "விலைவாசி குறையவில்லை. விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. அதைக் குறைந்து விட்டது என்று மந்திரியவர்கள் சொல்லிவிட்டால் விலைவாசி குறைந்துவிட்டது என்ற மனப்பான்மை ஏற்பட்டுவிடாது" என்று நேற்றுப் பத்திரிகையில்

[A. R. Subbiah Mudaliar] [9th December 1959

பார்த்தேன். நான் கேரளாவுக்குப் பக்கத்து ஜில்லாவைச் சேர்ந்தவன். "டி கண்ட்ரோல்" ஆன பிற்பாடு விலைவாசி இறங்குமுகமாக இருப்பது மகிழ்ச்சிக்குரியது. "ப்ரி ட்ரேட்" இல்லாததால் "மிடில் மென் ப்ராபிட்" காரணமாக விலைவாசி ஏறுமுகமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை முன் பல தடவை கூறியிருக்கிறேன். "டி கண்ட்ரோல்" செய்யப்பட்டது. இப்போது, பற்றாக்குறை மாதத்தில் கூட உடனடியாக விலைவாசி இறங்க ஆரம்பித்திருக்கிறது. ஏனென்றால் இனிமேல் மகசூல் வரக்கூடிய காலம்! "மந்திரிகள் சொல்லுகிறார்கள், புள்ளிவிவரம் இல்லாமல் சொல்லுகிறார்கள்" என்று தலைப்பிலே Editorial போடுவது வருந்தக்கூடியது. உண்மையான விவரங்களைத் தெரிந்து ஆளும் கட்சியைப்பற்றிக் குறை சொல்லிவிட்டால் நாங்கள் அதைப்பற்றி வருந்தமாட்டோம். விலை இறங்கிக் கொண்டிருப்பது உண்மை. "ஃப்ரீ ட்ரேட்" காரணம்தான் விலை நிச்சயமாக இறங்க ஏது இருக்கிறது.

அடுத்தபடியாக, நிர்வாகச் செலவு அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு வழி வகுக்கப்பட வேண்டியது அவசியம். நிர்வாகச் செலவு அதிகமாகிக் கொண்டே போய்விட்டால் வருவாய் பூராவும் நிர்வாகத்திற்கே செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அதைப் பல வழிகளில் குறைத்தாகவேண்டும். எனக்கு முன்பு பேசிய நண்பர் சொன்னபடி ஏதாவது வரி வந்து விடுமோ என்றும் பயப்படுகிறோம்.

உரம் சம்பந்தமாகச் சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். உரம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. நாற்பது பர்சண்ட் "கன்ஸ்யூம்" பண்ணும் உரம்தான் விநியோகத்திற்கு இருக்கிறது. அடுத்த வருஷம், அதாவது 1960-ல் யூரியா நெய்வேலியில் வந்துவிடும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்கு இப்போதே திட்டம் வகுக்கவேண்டும். நெய்வேலியில் கிடைக்கக் கூடிய யூரியாவை நமக்குப் போக சர்ப்ளஸ் இருந்தால்தான் வெளி மாகாணங்களுக்குக் கொடுக்க வேண்டும். நெய்வேலி நம்முடைய மாகாணத்தைச் சேர்ந்திருந்தாலும் மத்திய சர்க்காருடைய பொறுப்பில் இருப்பதால் வரக்கூடிய யூரியாவை நமக்குப் போகத்தான் மற்ற மாகாணங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்கு இப்பொழுது இருந்தே வற்புறுத்த வேண்டும். அம்மோனியம் சல்பேட்டின் பற்றாக் குறையை யூரியாவின் மூலம் சரிக்கட்டிக் கொள்ளலாம். யூரியாவைப்பற்றிக் கிராம விவசாயிகள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் பிரசாரம் செய்யவேண்டும்.

எலெக்ட்ரிசிடி பற்றி எனக்கு முன் குறை பேசிய நண்பருடைய வாதத்தை வருத்தத்தோடு மறுக்கிறேன். அவர்கள் சொல்லுவதைக் கேட்டால் மனம் வருந்துகிறது. "ரேட்" கூடவில்லை என்று உறுதியாகச் சொல்லுவேன். விவசாயத்திற்கு கொடுக்கும் ரேட் 6½ நயா பைசாவாகயிருந்து 7 நயா பைசாவாக கூட்டப்பட்டு இருக்கிறது. அவர்கள் கொடுப்பதற்கு ஆகும் நிகரச் செலவு 19 நயா பைசா. ஆனால் அவர்கள் நம்மிடமிருந்து வசூலிப்பது 7 நயா பைசாதான். இதை விட நாம் பெரிய சலுகையை எதிர்



9th December 1959] [Sri A. R. Subbiah Mudaliar]

பார்க்க முடியாது. எங்கள் பகுதியில் மழை இல்லை. பஞ்சத்தில் தவிக்கிறோம். எலக்ட்ரிசிடி மட்டும் இல்லாவிட்டால் நாங்கள் நாட்டை விட்டே போகவேண்டிய நிலைமையில் இருப்போம். இந்த எலக்ட்ரிசிடியைக் கடவுள் என்று கூட உணர்ச்சியுடன் சொல்ல ஆசைப்படுகிறேன். உற்பத்திச் செலவு 19 நயா பைசாவாக இருக்கும்போது நம்மிடமிருந்து 7 நயா பைசாதான் வசூலிக்கிறார்கள்; 90 ஆயிரம் பம்ப் செட்டுகள் நம் மாகாணத்தில் வேலை செய்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பம்ப் செட்டும் 10-30 a.m.
குறைந்தது மூன்று ஏக்கர்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு பம்ப் செட். மூலம் மூன்று ஏக்கரில் அதிக உணவு உற்பத்தி பெருக வாய்ப்பு இருக்கிறது. நாங்கள் கவலைப்படுவதெல்லாம், மின்சார வெட்டு வந்துவிடுமோ என்பதைப்பற்றித்தான். தினத்திற்கு எட்டு மணி நேரம் விசை கொடுத்து வருகிறார்கள். அந்த உத்தரவு வந்து ஒரு வருஷம் கூட ஆகவில்லை. குழந்தை பிறந்து ஒரு ஆண்டுக் கூட ஆகவில்லை. அதற்குள் பழையபடி மின்சார வெட்டு வந்துவிடுமோ என்ற பயம் இருந்துகொண்டிருக்கிறது.. அதை மந்திரி அவர்கள் கவனித்து, இன்று இருக்கும் நிலைமையில் . . .

THE HON. SRI V. RAMAIAH : இப்பொழுது இருக்கிற மாதிரி இருந்தால் போதும் அல்லவா ?

SRI A. R. SUBBIAH MUDALIAR : எட்டு மணி நேரம் உறுதியாக மின்சார சப்ளை செய்துவிட்டால், அதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். குறைவில்லாமல் உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டிருப்போம். கவர்னர் உரையில், 'ட்ரை டைம்'-ல் கூட மின்சார வெட்டு இருக்காது என்று சொல்லியிருக்கிறார். அதை அமுல் நடத்தவேண்டுமென்றுதான் நான் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

60:40 என்று வாரம் விதித்து ஒரு சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம். டெனென்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் என்று சட்டமும் கொண்டுவந்தோம். உணவு உற்பத்தி குறைவாக இருக்கிறது, அதை அதிகப்படுத்த இப்படியெல்லாம் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்றோம். ஆனால், 60:40 சட்டத்தை அமுல் நடத்துவதற்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அதை அமுல் நடத்துவதில் ஆங்காங்கே போலீஸ் இலாகாவும் ரெவின்யூ இலாகாவும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு கொடுப்பதில்லை. போலீஸ் இலாகா அமைச்சர் இங்கே இருப்பதால் அதைப்பற்றிச் சொல்ல பிரியப்படுகிறேன். 60:40 சட்டத்தை அமுல் நடத்துவதற்கு போலீசாரிடம் ஒரு கிராமம் சம்பந்தமாக தெரிவித்தோம். சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் மனுக் கொடுக்கப்பட்டது, தற்காப்பு வேண்டும் என்று கோரி. விசாரணை செய்யப்பட்டது. அவரால் 60:40 சட்டத்தை அமுல் நடத்த முடியாமல் தாசில்தார் அவர்களுக்கு ரிபோர்ட் செய்தார்கள். நிலச் சுவான்தார்கள் சரியாக நடந்துகொள்ளவில்லை என்றுகூட ரிபோர்ட் செய்தார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வந்து கண்டு முதலைக்

கங்காணம் பண்ணிவிட்டுப் போனார்கள். மறுபடியும் நிலச்சுவாந்தாரிடம் போய் வாரம் பிரித்து ஹரிஜனங்கள் கேட்டார்கள். கொடுக்க மறுத்துவிட்டார்கள். பஞ்சாயத்தாரை வைத்து, மகசூலைப் பிரித்து, 40 பங்கு பணத்தை மணி ஆர்டர் செய்யப்பட்டது. போலீஸ் இலாகாவினர் முப்பது நாட்கள் காத்துக்கொண்டிருந்து, பணம் படைத்த நிலச்சுவாந்தார்களுடைய ஏவுதலுக்காக கொள்ளை பிராது குடியானவர்கள் பேரில் போட்டார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது. யாருடைய பாதுகாப்புக்காக போலீசாரிடம் மனுக் கொடுத்தார்களோ, அவர்கள் பேரிலே கொள்ளை பிராது போடப்பட்டது. நாற்பது குடியானவர்களில் 36 பேர் ஹரிஜனங்கள்; நான்கு பேர்கள் தாழ்த்தப்பட்டவர்கள். நீதி நிர்வாகம் பிரிக்கப்பட்டது ஒரு அளவுக்கு. சப்-மாஜிஸ்ட்ரேட் அவர்கள் ப்ரேலிமினரி என்க்வைரியிலேயே டிஸ்சார்ஜ் செய்துவிட்டார்கள். நிலச்சுவாந்தார்களிடமிருந்து பாதுகாப்பு கோரி போலீசாரிடத்தில் மனு கொடுக்கப்பட்டது. (இத்தருணத்தில் தலைவர் அவர்கள் நேரம் ஆவதைக் குறிக்க மணியை அடித்தார்.) நான் இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். தயவுசெய்து தலைவர் அவர்கள் சில நிமிஷங்கள் அனுமதிக்கவேண்டும். பாதுகாப்பு கொடுக்கவேண்டிய இலாகா பழையபடி அவர்களே அதை ரிபோர்ட் செய்துவிட்டு கொள்ளைப் பிராது போடுகிறார்கள். கலெக்டரிடம் போய்ச் சொன்னேன். ஹரிஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று. 'நான் தலையிடக் கூடியது அல்ல; என்னிடம் வருவதில் பிரயோசனம் இல்லை; கீழேதான் கேட்கவேண்டும் என்று அவர் சொல்லிவிட்டார். ஹரிஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லியும் வழி வகை கிடைக்கவில்லை. சட்டங்கள் போடுகின்றோம். சட்டங்களை அமுல் நடத்த உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பு இல்லை. கலெக்டரிடம் போய்ச் சொன்னால், அவர் கேட்க மறுக்கிறார்கள். நீதி இப்படித் தவிக்கிறது. பொறுப்பை இலாகா வாரியாகப் பிரிக்கப்படுகிறது. இப்பொழுது டெவலப்மெண்ட் கவுன்சிலை கலெக்டர் அவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. வெள்ளையன் காலத்தில் பல ஜமீன்தார்கள் மிட்டர்தார்கள் உண்டாக்கப்பட்டது. இப்பொழுது ஒரு பெரிய ஜமீன்தாராக கலெக்டர்கள் உண்டாக்கப்படுகிறது. அதற்கு உதாரணம் சமீபத்தில் கம்யூனிடி டெவலப்மெண்ட் திட்டத்தின் கீழ் தென்காசி தாலூகாவில் ஒரு ப்ளாக்கை திறந்துவைப்பதற்கு கலெக்டரை வரவேற்கும்போது, "**Mr. Pasupathi has kindly consented to inaugurate the scheme**" என்று ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் சொன்னார்கள். எனக்கு இது என்னவென்று புரியவில்லை. மந்திரி அவர்கள் திறந்துவைத்தால் பொருத்தமாயிருக்கும். ஒரு கலெக்டர், பொதுஜன ஊழியன் கூட இல்லை, பொதுஜன சிப்பந்தி, சம்பளம் வாங்கக்கூடிய ஒருவர் திறந்து வைப்பதாம். **What is meant by Community Development? It is for the benifit of the Public. It is not a function intended to glorify a Government servant.** இப்படி நடக்கிறது. வரவேற்பது ஒரு ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்.

(மணியடிக்கப்பட்டு பேச்சு முடிவு பெற்றது.)



* **SRI K. S. ARTHANAREESWARA GOUNDER**: கனம் சபைத் தலைவர் அவர்களே, இன்று சபை முன் வைத்திருக்கும் கவர்னர் அவர்களுடைய உரையின் மீது வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். கவர்னர் உரையிலே, அவர் முதலில் எடுத்தவுடனே அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பு மிக மிக அவசியம் என்று எடுத்துரைத்து இருக்கிறார்கள். ஆனால், இரண்டு, மூன்று நாள் விவாதத்திலே பார்த்தோமானால், அங்கத்தினர்களில் சிலர் அவர்களுடைய உரையில் இருப்பதைப் பேசுவதை விட்டுவிட்டு அந்த உரையிலே ஒன்றுமே இல்லை என்று சொல்கிறார்கள். கவர்னர் உரையிலே, அன்றாடம் தேவைக்கு வேண்டிய பொருளிலிருந்து அண்டை நாட்டார் வந்து தாக்கக்கூடியது வரையில் பேசியிருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு உணரவேண்டும். ஏனென்றால், அந்த உரையைப் படித்துப் பார்த்தால், உண்மையிலேயே ஒவ்வொரு வார்த்தையிலும் நம்முடைய நாட்டினுடைய, அதிலும் குறிப்பாக நம்முடைய மாகாணத்தினுடைய, முன்னேற்றம் எப்படி இருக்கிறது, எப்படி நடந்து வந்தது, இனி எப்படி நடக்கப்போகிறது என்பதைப்பற்றி மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நேற்றையதினமோ அதற்கு முன் தினமோ, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அங்கத்தினர் ஒருவர், நெய்வேலி பழுப்புத் நிலக்கரித் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அங்கு தண்ணீர் அதிகமாக இருக்கிறது, பழுப்பு நிலக்கரியை எடுக்க முடியுமா என்று அச்சப்பட்டார். ஆனால், அதே அங்கத்தினர்கள் சென்ற தேர்தலில் பல இடங்களில் சுவரொட்டிகளில் விளம்பரம் செய்திருந்தார்கள். நெய்வேலி நிலக்கரித் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக அவர்களுக்கு வோட்டுப் போடவேண்டுமென்று மக்களிடம் வோட்டு கேட்டார்கள். அன்று அப்படிச் சொல்லிவிட்டு இன்று சந்தேகப்படுகிறார்கள் என்றால், அது உண்மையிலேயே மக்களை ஏமாற்றக் கூடிய விதத்திலே இருக்கிறது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். உண்மையிலேயே தண்ணீர் அழுத்தும் சக்தி இருக்கலாம். ஆனால், அன்று அந்தச் சுவரொட்டி போட்ட அங்கத்தினர்கள் இன்று அந்தத் தண்ணீர் அழுத்த சக்தியை எப்படி நீக்குவது என்று சிந்தனைசெய்து யோசனை சொல்ல முயல்வார்களானால் அது மிகவும் நன்றாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு சர்க்காரைக் குறைகூறிக் கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஏனென்றால் இன்று தென்னாட்டில் ஒரு பெரிய திட்டம் நிறைவேறுகிறதென்றால், அது நெய்வேலித் திட்டம்தான். அந்தத் திட்டத்திலே தண்ணீர் அழுத்தம் இருக்கிறதென்றால், சர்க்காருக்குத் தெரியாவிட்டாலுங்கூட, இங்கிருக்கும் கனம் அங்கத்தினர்கள் யோசனை சொன்னால்தான் நன்றாக இருக்கும். அதை விட்டுவிட்டு, அது சரியாய் இல்லையென்றால், அது ஏதோ நாட்டில் இருக்கும் மக்கள் எல்லோரும் ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது.

[Sri K. S. Arthanareeswara Gounder] [9th December 1959

மேட்டூர் நீர்த் தேக்கம் கிட்டதட்ட ஆறுமாத காலமாக குறைவு இல்லாமல் நன்றாக நிறைந்திருக்கிறது. அங்கு அந்தத் திட்டம் மூலமாக சேலம், கோயம்புத்தூரிலே கால்வாய் வெட்டப்பட்டு நல்ல முறையிலே இந்த ஆண்டு பயிர்கள் நல்ல முறையில் விளைந்து இப்பொழுது அறுவடைக்கு வரும் தருவாயில் இருக்கிறது. சில இடங்களில் அறுவடை முடிந்துவிட்டது. அந்த விதத்திலே தண்ணீர் நிறைந்திருக்கும்போது அந்தக் கால்வாயிலே மறுபோகத்திற்கு தண்ணீர் விடுவதற்குச் சர்க்கார் அனுமதி கொடுத்தால்தான் உண்மையிலேயே உணவு உற்பத்தி அதிகப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கரை இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பல கிராமங்களிலிருந்து உணவு டெப்போக்களிலே அஸ்கா இன்றும் இருக்கிறது என்பதை உணரவேண்டும். கிராமங்களில் அஸ்காவை அதிகம் உபயோகப்படுத்தாததால் சில கடைகளிலே தேங்கியிருக்கிறது. அந்த அஸ்காவை தேவைப்படுகிற இடங்களுக்கு மாற்றிக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

அடுத்தபடியாக, எலெக்டிரிஸிடி[illegible]ய பொறுத்தவரையில் எல்லா நீர் தேக்கங்களில் தண்ணீர் இருப்பதாகவும், பல திட்டங்கள் நிறைவேற்றக்கூடிய தருவாயில் இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் 'எலக்டிரிஸிடி கட்' இருக்காது என்றுதான் நானும் அபிப்ராயப்படுகிறேன். மேட்டூரில் பார்க்கிறேன். அங்கு அணை நிரம்பிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது கூட நிரம்பிக்கொண்டிருக்கிறது. கவர்னர் உரையில் சொல்லியிருப்பது போல் உண்மையிலேயே இந்த ஆண்டில் 'எலக்டிரிஸிடி கூட இருக்காது என்றுதான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் உரையில் அமெரிக்கா 'போர்டு பவுண்டேஷன்.' திட்டத்தைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருப்பதைப் பார்த்தால் உண்மையிலேயே எல்லா ஜில்லாக்களிலும் அந்தத் திட்டத்தை அமுல் நடத்தினால் நல்ல முறையில் நடக்கும் என்று தோன்றுகிறது. ஏனென்றால், விவசாயிகளுக்கு முக்கியமாக வேண்டியது உரம். அவர்களுக்கு வேண்டிய கடன் வசதி இவைகளெல்லாம் இந்தத் திட்டத்திலே இருக்கிறது. இது நல்ல திட்டம் என்று நினைக்கிறேன். ஒரு ஜில்லாவில் மட்டும் அதை பரீட்சித்துப் பார்க்காமல், உண்மையிலேயே உடனடியாக அந்தத் திட்டத்தை எல்லா ஜில்லாக்களிலும் அமுல் நடத்தினால் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகள் இருக்கின்றன என்பது என்னுடைய அபிப்பிராயம். குறிப்பாக, அதுவும் இப்பொழுது உணவு உற்பத்தி அதிகம் இல்லை என்றால், நாம் அமோனியம் சல்பேட் ஒன்றைத்தான் நம்பிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அந்த அமோனியம் சல்பெட்டும் இப்பொழுது விவசாயிகளுக்கு சரியான முறையில்



9th December 1959] [Sri K. S. Arthanareeswara Gounder]

கிடைப்பதில்லை என்று பல அங்கத்தினர்களும் சொல்லியிருக்கிறார்கள். கவர்னர் உரையிலும் சொல்லுகிறார்கள். அதைவிட பாஸ்பேட்டை நாம் அதிகமாக உபயோகப்படுத்தினால் உணவு தானிய உற்பத்தியை அதிகப்படுத்த ஏதுவாக இருக்கும். நாட்டிலே இருக்கக்கூடிய எலும்புத் தூளை நல்ல முறையில் விவசாயிகளுக்கு பயன்படும்படிச் செய்தால் உணவு உற்பத்தியை இரண்டு மடங்கு ஆக்குவதற்கு நல்ல வழிவகைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த விதத்தில் எலும்புத் தூள் கிடைக்கவில்லை என்றால்கூட, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தால்தான் உண்மையிலேயே உணவுத் தட்டுதலைப் போக்க நல்ல வழிவகை இருக்கிறது.

கவர்னர் உரையிலே மேட்டூரில் காகிதத் தொழிற்சாலை ஏற்பட திட்டம் பூர்த்தி அடைந்துவிட்டது என்று சொல்லியிருப்பதற்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறேன். தவிர, அலுமினியம் தொழிற்சாலை சேலத்தில் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டையும் உடனடியாக ஆரம்பித்தால், உண்மையிலேயே பிற்போக்காக இருந்த, வரண்ட பிரதேசமாக இருந்த சேலம் ஜில்லா முன்னுக்கு வரக்கூடும். இந்த இரண்டு திட்டங்களையும் உடனடியாக நிறைவேற்றினால், நன்மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதுவும் தவிர, சேலத்தில் குறிப்பாக நாமக்கல் தாலூகாவில் இந்தியாவிலேயே நல்ல முறையில் கரும்பு உற்பத்தி செய்கிறார்கள். இதுபற்றி அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அந்த இடத்திலே ஒரு கூட்டுறவு ஆலை ஏற்படவேண்டும் என்று பல முறை இந்த சட்டசபையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கரும்பு இன்னது என்று தெரியாமல் இருக்கக்கூடிய பல இடங்களிலே கூட்டுறவு ஆலைகள் ஏற்படுத்திவிட்டு, இந்தியாவிலேயே நல்ல கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய இடத்திலே ஆலை ஏற்படவில்லையென்றால், அது மிகவும் வருந்தக்கூடிய விஷயம். அமைச்சர் அவர்கள் இதில் முழு அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக நாமக்கல்லில் கூட்டுறவு ஆலை ஏற்படுத்துவதற்கு வழிவகைகள் செய்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மத்திய சர்க்காரிலிருந்து நமக்கு வரக்கூடிய மானியங்களெல்லாம் சரியான முறையில் நாம் பயன்படுத்த முடியாமல் பல கோடிக்கணக்கான ரூபாய் 'லாப்ஸ்' ஆகிகளாக்குவதற்கு வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டும். நமது நிதி வருஷம் காலாவதி ஆகிவிடுவதுதான் காரணம். குறிப்பாக கிராமக் குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி இவைகள் விஷயத்தில் பல கோடிக்கணக்கான ரூபாய் 'லாப்ஸ்' ஆகிவிடுகிறது. இங்கு இருக்கக்கூடிய அமைச்சர்களுக்கு அக்கரை இல்லை என்று சொல்லவில்லை. மத்திய சர்க்காரிடமிருந்து அந்தத் தொகை சரியான காலத்தில் இங்கு வந்துசேராததுதான் காரணம்.

[Sri K. S. Arthanareeswara Gounder] [9th December 1959

அந்தத் தொகையை நாம் பயன்படுத்த முடியாமல் போவது பற்றி வருந்தவேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரிடமிருந்து அந்த மானியங்களை அதிவிரைவில் பெற்று நல்ல முறையில் செலவிடுவதற்கு வேண்டிய வழிவகை செய்தால் நன்றாக இருக்கும்.

நமது மாகாணத்திலிருந்து வெளி நாடுகளுக்கு மேல் படிப்பிற்காக அனுப்பக்கூடிய மாணவர்களின் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆந்திர மாகாணத்தை எடுத்துக்கொண்டால், வெளி நாடுகளில் பயிற்சி பெறுவதற்கு அங்கிருந்து அதிக மாணவர்கள் அனுப்பப்படுகிறார்கள். நம்முடைய மாகாணத்தில் உண்மையிலேயே வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் மாணவர்களின் தொகை குறைவாக இருப்பது குறித்து வருந்தவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்னும் அதிகமான மாணவர்களை நிபுணர்களாக்குவதற்கு வெளி நாடுகளுக்கு அனுப்பவேண்டும். நமது மாகாணத்தில் ஏற்படக்கூடிய தொழிற்சாலைகள் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால், அதிகமான மாணவர்களை வெளிநாடுகளுக்கு படிப்பதற்காக அனுப்பவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கவர்னர் உரையில் நிலச் சீர்திருத்த சட்டம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அது நாம் எல்லோரும் வரவேற்கவேண்டிய விஷயம்தான். இங்கு இருக்கக்கூடிய நிலச் சுவான்தார்கள் அதை எப்படி வரவேற்கிறார்களோ, அதேபோல் மந்திரிகளும் தங்களுடைய சம்பளத்தை குறைத்துக்கொண்டு தாங்களாகவே முன்வரவேண்டும். அதிலும், குறிப்பாக நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு செலவு மிகவும் குறைவு என்று நினைக்கிறேன். அவர்கள் கலியாணம் ஆகாதவர். குடும்பம் இல்லாதவர். இந்த நிலச் சீர்திருத்தம் வருவதற்குள் அவர்களுடைய சம்பளத்தை குறைத்துக்கொண்டால், நமது மாகாணத்திற்குமட்டுமல்ல, நம்முடைய நாட்டிற்கே அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் நிலச் சீர்திருத்தத்திற்காகச் சொல்லவில்லை. கவர்னர் அவர்கள் உரையிலே எப்படி ஒத்துழைப்பு வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களோ, அதே மாதிரி, பஸ் முதலாளிகள். மில் முதலாளிகள், இன்னும் இங்கு இருக்கக்கூடிய சினிமா படம் பிடிப்பவர்கள் எல்லோருமே சேர்ந்து நம்முடைய சோஷலிஸம் நல்ல முறையில் நடப்பதற்கு ஒத்துழைத்தால், நன்றாக இருக்கும். குறிப்பாக மறுமுறையும் சொல்லுகிறேன். இந்த சட்டம் கொண்டுவருவதற்கு முன்பாக முதல் அமைச்சர் தானாகவே அவர்களுடைய சம்பளத்தை குறைத்துக்கொண்டால்—நான் வெறுமனே சொல்லவில்லை, நன்றாக இருக்கும் என்று சொல்லுகிறேன்—நம்முடைய நாட்டில் மட்டும் அல்ல, வெளிநாடுகளில் இருப்பவர்களும் இதைப்பற்றி போற்றுவார்கள். எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



9th December 1959]

**Sri A. R. MARIMUTHU**: கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரிலேயே நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்துவிடும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு கவர்னர் உரை அவ்வளவு நம்பிக்கை அளிப்பதாக இல்லை என்றுதான் தோன்றுகிறது. நிலச் சீர்திருத்த சட்டம் கொண்டுவருவது இந்த நாட்டிலே நிலம் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு ஓரளவுக்கு வசதி செய்துகொடுப்பதற்காக இருக்க வேண்டுமே தவிர இருக்கிற நிலங்களை நிலம் இருப்பவர்களே பங்குபோட்டுக்கொள்வதற்காக இருக்கக்கூடாது என்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டிருக்குமானால், நிலச் சீர்திருத்த சட்டம் கொண்டு வருவதை இவ்வளவு காலம் ஒத்திப் போட்டுக் கொண்டிருக்க முடியாது. இவ்வளவு காலம் தள்ளிப்போட்டுக் கொண்டிருப்பதை நாம் யோசித்துப் பார்ப்போமானால், நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பதை விட, அந்தப் பெரும் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக் கொள்ளாமல், நிலம் இருக்கிறவர்கள் அவரவர்கள் சொந்தக்காரர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் பிரித்துக் கொடுத்தால் போதும், தங்களுடைய பாரம் குறைந்துவிடும் என்ற கருத்தில்தான் அரசாங்கம் இருந்துகொண்டிருக்கிறது. அம்மாதிரி இருப்பது தவறு. இப்பொழுது பெரிய நிலச் சொந்தக்காரர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், நிலங்களை எவ்வளவு அதிகபட்சமாக கிரயம் செய்ய முடியும், மாற்றி வைக்க முடியும் என்று யோசித்து அதற்கான காரியங்களையே செய்கிறார்கள். இன்னும் மேற்கொண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டுவராமல் காலம் தாழ்த்தினால், நமக்கு இப்பொழுது எவ்வளவு நிலம் கிடைக்குமோ அந்த நிலம் கூட இல்லாமல் போய்விடும். இந்த நிலைமையை அரசாங்கம் மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே போவது சரியல்ல. சீக்கிரம் இந்த சட்டத்தைக் கொண்டுவந்து அமுலாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், நமது ராஜ்யத்தைப் பொருத்தவரையிலே, உற்பத்தி போதிய அளவு இருக்கிறது என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், விலைவாசி குறையவில்லை. இதற்கு வேண்டிய அளவு நாம் உற்பத்தியை பெருக்கி ஆகவேண்டும். இரண்டாவது திட்டத்தில் சுமார் 13 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்தோம். திட்ட இறுதியிலே 9 லட்சம் டன் தான் உற்பத்தி செய்ய முடியும், 3 லட்சம் டன் துண்டு விழுகிறது. இதற்குக் காரணம் ரசாயன உரம் நமக்கு போதிய அளவு கிடைக்காததுதான் என்று கூறப்படுகிறது.

உற்பத்தியை அதிகரிப்பதற்கு வெறும் ரசாயன உரத்தை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது. ரசாயன உரத்தை அதிகமாக பூமியில் உபயோகிப்பதால், பூசாரம் அதிகரிக்க முடியாது. இதர உரங்களையும் கொடுக்க ஆலோசிக்க வேண்டும். என்னைப் பொறுத்த மட்டில், அனுபவ ரீதியாகச் சொல்லுகிறேன், ரசாயன உரத்தை உபயோகிப்பதால், பூசாரம் குறைகிறது. அது தற்காலிகமாகப் பலன் கொடுக்கலாம். ஆனால், நீண்ட காலத்தில்,

[Sri A. R. Marimuthu] [9th December 1959

அது பயனுள்ளது அன்று. ஆகவே, பசுந்தாள் போன்ற இதர உரங்களைச் சப்ளை செய்ய, விவசாயிகள் உபயோகிக்க ஊக்கமளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உற்பத்தி பெருகுவதற்கு, விவசாயிகளுக்குப் போதிய அளவு விவசாய சாதனங்கள் கிடைக்கவில்லை. இரும்பு விலையோ அதிகமாக ஏறி இருக்கிறது. வண்டிக்கு வேண்டிய பட்டை, கட்டு முதலிய இரும்பு சாமான்கள் வாங்கவேண்டுமானால், கட்டு ரூ. 100 கொடுத்து வாங்க வேண்டுமென்று கூறுகிறார்கள். விவசாயக் கருவிகள் விலை அதிகமானால், முதலீடு செய்து உற்பத்தியைப் பெருக்க விவசாயியினால் முடியாது. உற்பத்தி பெருக வேண்டுமானால், விவசாய சாதனங்களெல்லாம், வேண்டிய அளவில், குறைந்த விலைக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரவிருக்கிறோம். இதன் மூலம், கிராமத்தில் இருக்கும் பெரும் வருவாய் உள்ளவர்கள் குறைக்கப்படுகிறார்கள். இப்பொழுது இருக்கும், பொருளாதார ஏற்றத் தாழ்வு இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதால் மட்டும் நாட்டிலே, பெரும் காரியத்தை சாதித்து விட்டோம் என்று சொல்ல முடியாது. தொழில் துறை வருவாயில் உயர்ந்த பட்ச வரம்பு கட்ட நடவடிக்கை எடுத்துக்கொண்டாலொழிய, பெரும் மாற்றம் இருக்காது.

நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்த பிறகு, உற்பத்தி பெருகுமா, குறையுமா என்ற சந்தேகம் கிளம்பி இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், உற்பத்தி பெருகுமே தவிர, குறையாது. இன்னும், உற்பத்தி பெருக வேண்டுமானால், கனம் அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன், நிலச் சீர்திருத்தத்திற்கு அடுத்தபடியாக, சிதறுண்டு கிடைக்கும் நிலங்களை ஒன்று சேர்க்கும் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் பெரும் விளைச்சலைக் காண முடியும். நிலம் ஒரே இடத்தில் கொடுக்கப்பட வேண்டும். அப்படி செய்தால்தான் கூட்டுறவு சாகுபடி செய்ய முடியும்; அதை நாட்டிலே அமல் நடத்த முடியும். நிலங்கள் துண்டு துண்டாக இருந்தால், கூட்டுறவு சாகுபடி சாத்தியமாகாது. ஆகவே, அதை உடனடியாகச் செய்ய வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் கிராமங்களிலே ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. எல்லாக் கடன் வசதிகளையும், ஒரு விவசாயி ஒரே இடத்தில் பெரும் வசதியைச் செய்து தருகிறோம். ஆகவே, கூட்டுறவு இயக்கத்திலே உள்ள குறைபாடுகளை கவனித்து அவைகளைச் சீக்கிரமே நீக்க வேண்டும். இன்றைக்கு கூட்டுறவு சங்கங்கள் அபிவிருத்தியடைந்திருக்கிறது என்கிறார்கள். அங்கத்தினர்கள் அதிகமாகியிருக்கலாம். அவர்களுக்கு காலாகாலத்தில் கடன்கள் கிடைக்கின்றனவா, வருடாவருடம், தேவைப்பட்டபொழுது, கடன் கிடைக்கிறதா என்றால், கிடையாது. குறைந்த பட்ச நிலம் வைத்திருக்கும் விவசாயி, 2 அல்லது 3 ஏக்கர் நிலம் வைத்திருப்பவன் அவ்வப்பொழுது பெற்றுக் கொள்ள முடியாமல் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. புதிய



9th December 1959] [Sri A. R. Marimuthu]

சட்டம் கொண்டு வருகிறேன் என்று கனம் கூட்டுறவு அமைச்சர் சொன்னார்கள். தீவிரமான நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம். இல்லாமே கூட்டுறவு முறையில் செய்ய வேண்டும் என்று சொல்லும்போது, கூட்டுறவு சட்டத்தை திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், அது பயனைத் தராது.

அடுத்தபடியாக, சர்க்கரை நிலையைப்பற்றி. நாட்டிலே சர்க்கரை வினியோகம் போதவில்லை. விலை அதிகமாக இருக்கிறது. சர்க்கரை கிடைக்கவில்லை. வியாபாரிகளெல்லாம், நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச விலைக்கு விற்கத் தயாராக இல்லை. சர்க்கரை ஆலைகளுக்கு லைசென்சு கொடுக்கப்பட்டது. ஆனாலும் ஆலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. மத்திய சர்க்காரிலிருந்து அதற்கு வேண்டிய பொருள்கள் கிடைப்பதில்லை. சர்க்கரைப் பஞ்சம் தீர, மத்திய சர்க்காரை அணுகி, வேண்டிய இயந்திர சாதனங்கள் கிடைக்க அவசரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மூன்றாவது திட்டம் போடும்போது, சர்க்கார் அதிக கவனம் செலுத்தவேண்டும். இரண்டாவது, முதல் திட்டங்களில் எத்தனையோ பணம் விரயம் ஆகிவிட்டது. இதனால், விலைவாசி ஏறிவிட்டது; பணப் புழுக்கம் அதிகமாகிவிட்டது; உற்பத்தி குறைந்து போகும். ஆகவே, அதில் கவனம் செலுத்த வேண்டும்.

கம்யூனிகேஷன், ரோட் விஷயமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவில் இரண்டு பாலங்கள் ரூ. 6,10,000-இல் கட்ட இருக்கிறார்கள். அந்த இரண்டு பாலங்களுக்கு 15 வருஷங்களுக்கு கட்ட வேண்டிய அவசியமே இல்லை. . . ..

(மணியடித்து அடுத்த மெம்பர் பேச அழைக்கப்பட்டார்.)

* **SRIMATHI A. S. PONNAMMAL:** கனம் தலைவர், அவர்களே, நம் கவர்னர் பெருமான் அவர்களின் உரையைப் பாராட்டி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசும்போது, கவர்னர் உரையில் "உப்பு, சப்பு" இல்லை என்று பேசப்பட்டது. கவர்னர் செய்த உரையில், அன்றாட நிலைமை மக்கள் வாழ்க்கைத் துறையில் எப்படி இருக்கிறது, குறிப்பாக விலைவாசி ஏற்றம், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதையெல்லாம் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உரை சுருக்கமானாலும், அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

விலைவாசி ஏற்றத்தைப்பற்றிப் பேசும்போது, அதிகமாகப் பட்டணங்களில் இருக்கிற, அதிகச் சம்பளம் வாங்கும் என்.ஜி.ஓ.க்கள் பிரச்சினைப்பற்றியும், விலைகள் அதிகமாகி, அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். ஆனால், ஏழை விவசாயி உழைத்து உழைத்து பட்டணத்தில் பகட்டாக வாழும் மக்களுக்கு, கொடுத்து விட்டு, உணவு தானியங்களின் விலைவாசியும் இறங்கிவிட்டால், மற்ற பொருள்களை வாங்கத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். விவசாய கருவிகளுக்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. நெல் விலையைக் குறைக்கும்போது, மற்ற விவசாயக்

[Srimathi A. S. Ponnammal] [9th December 1959

கருவிகளின் விலையும் குறைக்க வேண்டும். அமைச்சரவர்களிடம் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயம் நல்ல முறையிலே நடக்க வேண்டும் என்பதைப் பார்த்துச் செய்ய வேண்டும். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு புளி, மிளகாய், இதர சாமான்கள் இவற்றின் விலை ஏறி இருக்கிறது. இந்த ஏற்றத்தினால், தரகர்கள் பணத்தைக் கொள்ளை அடிக்கிறார்கள். அவர்கள் பொருள்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு லாபம் அடிக்கிறார்கள். அவற்றிற்கு "எக்ஸ்போர்ட்" லைசென்சும் கொடுத்து விடுகிறோம். அப்படி லைசென்சு கொடுக்கும்போது, நம் உள் நாட்டில் டிமாண்டாக இருக்கும் சமயம் "எக்ஸ்போர்ட்" சற்று நிறுத்தப்பட்டால் நலமாக இருக்கும். உள் நாட்டின் பற்றாக் குறையைப் போக்க முடியும். நாட்டில் சர்பிளஸாக இருக்கும் சாமான்களுக்கு "எக்ஸ்போர்ட்" செய்ய உத்திரவிடுவது நலம். இம்மாதிரியான நிலையைக் கடைப்பிடிக்காவிட்டால் நிச்சயமாக விலைவாசி ஏற்றத்தைத் தவிர்க்க முடியாது என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

11-00 உ.மு. உணவு உற்பத்தி விஷயத்தில், இந்தியா முழுவதுக்கும், சென்னை மாநிலம் முன்னால் நிற்கின்றது. அப்படி உற்பத்தி பெருகியிருந்தும் பற்றாக்குறை இருந்துகொண்டிருக்கிறது. இந்நிலையில் கேரளாவிற்கு கொடுக்கும் அரிசியையும் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஏனென்றால் மற்ற நாடுகளுக்கு நாம் கொடுத்தால்தான் நமக்கு அவர்களிடமிருந்து சலுகைகள் கிடைக்கும்; பல வசதிகளைப் பெற முடியும். நாம் ஏதாவது அவர்களுக்குக் கொடுத்தால்தான் அவர்கள் நமக்குத் தண்ணீர் கொடுப்பார்கள். நாம் அதிகப்படியாக உணவைப் பெருக்க வேண்டுமானால் நமக்கு தண்ணீர் வேண்டியதாக இருக்கிறது. அதற்கு நாம் நிறைவேற்ற வேண்டிய அநேகம் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் எடுத்து நடத்த வேண்டும். இருக்கக்கூடிய பெரிய திட்டங்களை எல்லாம் எடுத்து நிறைவேற்றியாகிவிட்டன. குறிப்பாக கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு சுமார் 2 லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி செய்து கொடுக்க இருக்கிறோம். அதை நாம் பாராட்ட வேண்டியதாக இருக்கிறது. வரண்ட பிரதேசங்களுக்கு சிறிய நீர்பாசன வசதிகளைச் செய்து கொடுக்க முன்வந்தால் வரண்ட பிரதேசத்தில் இருக்கக்கூடிய ஏழை விவசாயிகள் எவ்வளவோ இந்த அரசாங்கத்தை வாழ்த்துவார்கள். அதனால் அதில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக எங்கள் பகுதியாகிய வரண்ட பகுதிக்கு எவ்வளவோ சிறிய நீர் பாசன திட்டங்களை எடுத்துச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. எங்கள் பகுதியில் சாத்தியார் ஓடை என்ற ஒரு சிறிய ஓடை ஓடுகிறது. அதைச் சுற்றி பாலைவனமாக இருக்கிறது. அந்தப் பாலைவனத்தில் ஏழை விவசாயிகள் வாழ்ந்து வருகிறார்கள். அந்த ஓடையைத் தடுத்து நீர்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அது சம்பந்தமாக இன்வெஸ்டிகேஷன் முடிந்து எஸ்டிமேட் போட்டு இங்கு அரசாங்கத்தினிடம் வந்திருக்கிறது. அதற்கு இன்னும் ஸாங்க்ஷன் கொடுக்கவில்லை. அந்தத்



9th December 1959] [Srimathi A. S. Ponnammal]

திட்டத்தை எடுத்து விரைவில் முடிப்பதற்கு உடனடியாக ஸாங்க்ஷன் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைச் செய்து கொடுத்தால் அங்குள்ள மக்களுக்கு எவ்வளவோ வசதியாக இருக்கும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முன்வருவார்கள். இதைச் செய்ய வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடுகூட சிறுமலையில் மரஷற்றார் திட்டம் இருக்கிறது. அதற்கு 5·2 லட்சம் ரூபாய் ஆகும் என்று எஸ்டிமேட் போட்டு அதுவும் ஸாங்க்ஷன் ஆகாமல் இருக்கிறது. இதைப்பற்றி நான் ஊட்டியில் கூட்டம் நடந்தபோது சொல்லி இருக்கிறேன். இது சம்பந்தமாக அங்கே கேள்வி கேட்டபோது இதைப்பற்றி ஸாங்க்ஷன் செய்யப்படும் என்று பதில் சொல்லி இருக்கிறார். ஆகவே, அடுத்த அசெம்பளி கூட்டத்திற்குள்ளாகவாவது இவைகளுக்கு ஸாங்க்ஷன் கொடுத்து திட்டவேலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மாதிரி வரண்ட பிரதேசங்களுக்கு வசதி செய்து கொடுத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏழை விவசாயிகள் முயற்சி எடுத்துக்கொள்ளுவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கு அங்குள்ள விவசாயிகள் சார்பாக கனம் மந்திரி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உரத்தை எடுத்துக்கொண்டால் அதுவும் ரொம்ப டிமாண்டில் இருந்து கொண்டிருக்கிறது. சாதாரணமான ஐந்து ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதாகவே இல்லை. ஆனால் அரசாங்கம் உரம் விநியோகிக்கிறோம் என்றுதான் சொல்லுகிறார்கள். ரசாயன உரம் வருகிறது என்றும் அதைக் கொடுக்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள், ஆனால் அவைகள் ஏழை விவசாயிகளுக்குக் சௌகர்யமாகக் கிடைக்கிறது. அதுவும் வியாபாரிகள் கையில் கிடைக்கவே இல்லை. பெரிய நிலச்சுவாந்தார்களுக்குத்தான் அதுதான் இருக்கிறது. அதனால் அவர்கள் ப்ளாக் மார்கெட்டில் விற்று வருகிறார்கள். அப்படி விற்பதால்தான் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. ஏழை விவசாயிகளுக்கு என்று சமுதாய நல திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். ஒவ்வொரு பிர்க்காவிலும் கணக்கு எடுத்து ஐந்து ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு எவ்வளவு உரம் வேண்டும் என்று அங்குள்ள கிராம சேவக் கணக்குப் பார்த்து அதன்படி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஜம்புக்கரை கோட்டை என்ற பிர்க்கா இருக்கிறது. அங்கே ப்ளாக் வேலை நடக்கிறது. அங்கு நிலம் எவ்வளவு இருக்கிறது என்று கண்டுபிடித்து அந்த அடிப்படையில் அங்கு உரம் சப்ளை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அம்மாதிரி அங்குள்ள பிர்க்காவிற்கும் நிலத்திற்கு உரம் எவ்வளவு தேவை என்று கணக்கு எடுத்து, உரமும், விதைகளும் வித்துகளும், பசுந்தாள் உரமும் ரசாயன உரமும் சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும்.

உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய காலத்தில் உரம் கிடைக்காமல் இருப்பதால் உற்பத்தியை பெருக்கக்கூடிய சக்தி இல்லாமல் இருக்கிறார்கள். உரத்தை வாங்க முடியாமல் இருப்பதால் அவர்களால் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. ஏனென்றால் அவ்வளவு அதிகமாக உரம் விற்கப்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களிளெல்லாம் கிராம சேவக்குகளை வைத்துக்கொண்டு உரத்தை சப்ளை செய்யச் சொல்ல வேண்டும்.

*(கனம் சபாநாயகர் தலைமை வகித்தார்.)*

இதைப்போலவேதான் பூச்சி மருந்துகளும் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அதனால் ஐந்து ஏக்கர் வரையில் யார் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் கிராம சேவக்கிகள் போய் அவரவர்களுடைய நிலத்திற்கு வேண்டிய உரத்தை அவர்களே தெளித்துவிட்டு, பூச்சி மருந்துகளையும் அவர்களே தெளித்துவிட்டு மகசூல் காலத்தில் உரத்தின் பணத்தையும் பூச்சி மருந்துகளின் பணத்தையும் எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் ஏழை விவசாயிகள் கஷ்டப்படாமல் விவசாயம் செய்து உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளுவார்கள். இப்படிச் செய்தால் அவர்களுக்கு எந்த விதமான கஷ்டமும் ஏற்படாது. வித்துகள் கொடுக்கக்கூடிய காலத்திலும் இப்படியே செய்தால் ஏழை விவசாயிகளுக்கு எவ்வளவோ சௌகர்யமாக இருக்கும். இந்த முறையை அனுசரிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கனம் மந்திரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதைத் தவிர ஏழை விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய கடனை வாங்கிக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் கடன் வாங்குவதில் எவ்வளவோ கஷ்டம் இருக்கிறது. மூன்று, இரண்டு அல்லது ஐந்து ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவார்கள் கடன் வாங்குவதற்கு கஷ்டமாக இருக்கிறது. கூட்டுறவு முறையில் கடன் கொடுக்கிறோம் என்று சொல்லப்படுகிறதே தவிர அதன் மூலமாக வாங்குவதும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. கூட்டுறவு முறையில் கடன் வாங்குவதாக இருந்தால், அதாவது 100 ரூபாய் கடன் வாங்குவதாக இருந்தால் அதற்கு 800 ரூபாய் மதிப்பு உள்ள சொத்து இருக்கிறதா என்று கேட்டு அதை ஜாமீன் வைத்தால்தான் கடன் கொடுக்கிறார்கள். அத்துடன் வில்லங்க சர்ட்டிபிகேட்டுகள் வேறு வாங்கிக்கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலைமையில் ஏழை விவசாய மக்களால் கடன் வாங்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை நீடித்தால் உணவு உற்பத்தியைப் பெருக்கவே முடியாது. ஆகவே ஏழை விவசாயிகள் கடன் வாங்குவதற்கு வேண்டிய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக வேலையில்லா திண்டாட்டம். ஒவ்வொரு கிராமத்திலும் வேலை இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இதைப் போக்குவதற்கு உள்விவகார மந்திரி அவர்கள்





வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் போக்குவதற்கு பிர்க்காவாரியாக எடுத்துக்கொண்டு அங்கங்கே ஏதாவது ஒரு சிறு தொழிலை ஆரம்பிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டால் அதற்கு வேண்டிய மூல பொருள் இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாவிட்டால் அங்கே கிடைக்கக்கூடியவற்றை வைத்துக்கொண்டு ஏதாவது சிறு தொழிலை ஆரம்பிக்கலாம். சாதாரணமாக அங்கே நல்ல மண் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு செங்கல் செய்யும் தொழிலை ஆரம்பிக்கலாம். அதன் மூலம் ஓரளவு வேலை இல்லா திண்டாட்டத்தைப் போக்கலாம். ஆகவே, ஒவ்வொரு பகுதியிலும் சிறு தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மின்சாரம். பக்கத்தில் மின்சாரம் போய்க்கொண்டிருந்தாலும் ஏழை விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு மின்சாரம் இன்னும் கிடைக்கவில்லை. ஆழமான கிணற்றிலிருந்து தண்ணீரை இரைத்து விவசாயம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதுவும் வரண்ட பிரதேசங்களில் தண்ணீர் இரைப்பது கஷ்டமாக இருக்கிறது. அங்கேயெல்லாம் விவசாயிகளுக்கு மின்சாரம் சப்ளை செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் மின்சார அமைச்சர் இப்பொழுது இங்கு இல்லாவிட்டாலும் அவரிடம் தெரிவிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்வளவோ தடவை மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் இதுவரையிலும் கொடுக்கப்படவில்லை. கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். 6, 7 வருஷங்களுக்கு முன்னதாகவே மின்சாரம் கொடுக்க வேண்டும் என்பதற்காக செக்யூரிட்டி கட்டப்பட்டிருந்தும் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, 1959-60-ம் வருஷத்திலாவது மின்சாரம் சப்ளை செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் ஆழமான கிணற்றிலிருந்து தண்ணீரை இரைத்து விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

மதுரை-ராமநாதபுரம் பகுதிகளில் அநேகம் இடங்கள் வரண்ட பிரதேசமாக இருக்கிறது. அங்கேயெல்லாம் மின்சாரத்தை விஸ்தரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றும் அப்படி பெரியாறு திட்டத்தை எடுத்து நிறைவேற்றினால் வரண்ட பிரதேசங்களாகிய மதுரை ராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். வைகையிலிருந்து வரக்கூடிய தண்ணீர் என் தொகுதி வழியாக ஓடுகிறது. வாய்க்காலின் இருபுறமும் புன்செய் பயிர்கள் மழையில்லாக் காரணத்தால் காய்ந்து நிற்கக்கூடிய நிலையை ஒரு சில சமயங்களில் பார்க்கிறோம். இம்மாதிரியான பகுதிகளுக்கு 100 அடி தூரத்திலாவதும் கிணறு வெட்டி தண்ணீர்

[Srimathi A. S. Ponnammal] [9th December 1959

இறைத்துக்கொள்ள அனுமதி கொடுத்தால் வளம் பெற ஏதுவாக இருக்கும்.

இங்கு அடிக்கடி பேசப்பட்டு வருகிறது, அதாவது எல்லாவற்றிற்கும் மத்திய அரசாங்கத்தைக் கேட்க வேண்டியதாக இருக்கிறது என்றும், இங்குள்ளதை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்வதற்கு யாரும் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. அப்படி எடுத்துச் சொல்வதற்கு போதிய உணர்ச்சி நமது மந்திரிகளுக்கு இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட உண்மைக்குப் புறம்பான விஷயங்களை கனம் அங்கத்தினர்கள் கூறவே கூடாது. சமீபத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றது. அந்த மகாநாட்டில் நமது மந்திரிகள் என்ன செய்தார்கள் என்பதைப்பற்றி கேட்டோம். எங்கள் மந்திரிகள் பேசாமல் இருக்கிறார்களா அல்லது எப்படி பேசுகிறார்கள் என்றெல்லாம் கேட்டோம். அதற்கு எங்களுக்கு என்ன பதில் கிடைத்தது என்றால் தமிழ் நாட்டிலிருந்து வந்த மந்திரிகள்தான் மத்திய அரசாங்கத்தினிடம் நன்றாக பேச முடிகிறது என்றும், அப்படி பேசும்போது தங்களுடைய திட்டங்களைப்பற்றி முக்கியமாக எடுத்துச்சொல்லுகிறார்கள் என்றும், அதிலும் நமது நிதி அமைச்சர் அவர்கள் பிரதமரிடம் நம்முடைய கோரிக்கைகளைப்பற்றி தகுந்த முறையில் விவாதம் நடத்துகிறார்கள் என்றும், அவர்கள் செய்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி நாங்கள் சொல்வதை சொல்லிவிடுகிறோம் என்று தைரியமாகவும் அழுத்தமாகவும் துணிச்சலாகவும் தெரிவிக்கிறார்கள் என்றும் மற்ற மாகாண மந்திரிகள் அப்படி தெரிவிப்பது இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதைக் கேட்டு நாங்கள் பெருமைப்படுகிறோம். அப்படிப்பட்ட நிலைமையில் நமது மந்திரிகள் அங்கு போய் ஒன்றும் சொல்வது இல்லை என்று சொல்வது சரியல்ல என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடைசியாக ஹரிஜனங்களைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. கவர்னர் அவர்களுடைய உரையில் அவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லாவிட்டாலும் கூட நிலப் பிரச்னையோடு அவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு சௌகர்யமாக எவ்வளவு நிலச் சீர்திருத்தச் சட்டம் செய்தாலும் அவர்களுக்கு குடியிருப்பு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். தங்களுக்குச் சொந்தமாக மனைக்கட்டுகள் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டில் போய்ப் பார்த்தால் பதினைந்து பேர்களுக்குக் குறையாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்குத் தக்கபடி வீட்டு மனைக்கட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் பயிரிடக்கூடிய இடங்களிலேயே அவர்களுக்கு வசதியாக வீடுகளுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுப்பதோடு இன்னும் ஐந்து வருஷங்களில் அவர்களுடைய குடும்பங்கள் எந்த அளவிற்கு பெருகி இருக்கும் என்பதை கணக்கிட்டு அந்த அடிப்படையில் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் அவர்களுக்கு எவ்வளவு தேவையாக இருக்கும் என்பதைப் பார்த்துக் கொடுக்க வேண்டும்.



9th December 1959] [Srimathi A. S. Ponnammal]

இப்படி அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு வசதியாக நிலச் சட்டத்தை விரைவில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **SRI A. MARIAPPAN:** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரையை வரவேற்று சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பருவ மழை சரியாகப் பெய்திருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் சேலம் ஜில்லாவைப் பொறுத்த வரையில் அதன் தென்பகுதிகளில் எல்லாம் மழை பெய்யவில்லை. அதுவும் நாமக்கல் போன்ற இடங்களில் இந்த மழைக் காலத்திலேயே கிணறு வெட்டவேண்டிய சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த மாதிரியான இடங்களில் உடனடியாகச் சிறிய பாசனத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு தான்யங்களைப் பொறுத்து ஆங்காங்கு அதிகமான நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தி ஏழை மக்களுக்கு எல்லாம் குறைந்த விலையில் உணவு தான்யம் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் பரவலான முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று. குறிப்பாக சேலம் ஜில்லா ஆத்தூர் தாலுக்காவை எடுத்துக்கொண்டால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்றைய தினம் தரிசாகக் கிடக்கின்றன. அங்கே மேலெழுந்த வாரியாகக் கிணறு வெட்ட சௌகரியம் இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவைவிட ஆத்தூர் தாலுக்காவில் குறைந்த செலவில் கிணறு வெட்டலாம். ஆகவே அங்கே உள்ள தரிசு நிலங்களை எல்லாம் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு இயந்திர வசதிகளை உபயோகித்து தக்க பல ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் கூட அங்கே இயந்திர வசதியைக்கொண்டு விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாக கேள்விப்பட்டேன். அவைகளைத் தாமதப்படுத்தாமல் சீக்கிரமாக அந்தத் தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக சேலம் ஜில்லாவில் ஆரம்பிக்க இருக்கும் சக்கரை ஆலையைப் பற்றி எனக்கு முன்பு பேசிய நண்பர் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சர்க்கரை ஆலையை உடனடியாக ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்கரைப் பஞ்சம் நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. சேலம் ஜில்லாவில் மோகனூருக்குப் பக்கத்தில் ஆரம்பிக்க இருக்கும் சர்க்கரை ஆலையினால் நம் நாட்டுச் சர்க்கரைப் பஞ்சம் போக முடியும். அதே சமயத்தில் அநேகம் பேர்களுக்கு வேலை கிடைப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

அதோடு நூற்பு ஆலை ஒன்றையும் சீக்கிரத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நூற்பு ஆலை ஆரம்பிப்பதோடு நம்முடைய மாகாணத்தில் எல்லாப் பகுதியிலும் 16 கதிர்கள்

[Sri A. **Mariappan**] [9th December 1959

கொண்டு சிறிய நூற்பு இயந்திரங்களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். அதே மாதிரி பம்பாய் குப்தே என்பவர் ஆரபித்து இருக்கும் நூறு கதிர்கள் கொண்ட சிறிய இயந்திரத்தை இங்கேயும் ஆரம்பிக்க ஏற்பாடு செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். இதனால் அதிக அளவு நூல் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்கு வழி ஏற்படும். ஆகவே நூறு கதிர்களைக் கொண்டு நூற்று இயந்திரத்தையும், 16 கதிர்கள் கொண்டு இயந்திரத்தையும் இங்கே அதிக அளவில் ஏற்படுத்தி நம் ராஜ்ய நெசவாளர்களுக்கு நூல் கிடைக்காத கஷ்டத்தைப் போக்குவதற்கு நம் சர்க்கார் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேலத்தில் ஆரம்பிக்க இருக்கும் அலுமினியம் தொழிற்சாலையையும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அது இன்றைக்கு தாமதப்படுவதற்குக் காரணம் அதை ஆரம்பிக்க முன் வந்தவர்களின் சுணக்கம்தான் என்று தெரிகிறது. ஆனாலும் எந்தவிதமான தயக்கமும் சுணக்கமும் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் புறக்கணித்து உடனடியாக இதை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். மேட்டூரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் காகிதத் தொழிற்சாலையையும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று கவர்னர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறோம். அதே நேரத்தில் அதையும் கால தாமதம் செய்யாமல் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் சமீபத்திலே நூல் விலை அதிகமாகக் கூடியிருக்கிறது. குறிப்பாக 20-ம் நம்பர் நூலை எடுத்துக்கொண்டால் நான்கு மாதங்களுக்கு முன்பாக ஒரு கட்டு 16 ரூபாய்க்கு விற்றது. இப்போது 19 ரூபாய், 19½ ரூபாய் என்று உயர்ந்திருக்கிறது. இந்த மாதிரி விலை கூடுவதனால் கைத்தறி நெசவாளர்கள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். குறிப்பாக இருபதாம் நம்பர் நூல் 2 அணா கூடினாலும்கூட நெசவாளர்களுக்கு கிடைக்கிற கூலி குறைந்து விடுகிறது. ஆனால் இன்றைக்கு மூன்று ரூபாய், மூன்றரை ரூபாய் வரையில் கூடியிருக்கிறது என்றால் அதனால் நெசவாளர்கள் எத்தனை கஷ்டத்திற்கு உள்ளாவார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. இதைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் தம் உரையில் எதுவும் குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். இந்தச் சமயத்தில் நூல் விலை ஏற்றத்திற்குக் காரணம் பஞ்சு விலையேற்றம் தான் என்று சிலர் கூறுகிறார்கள். அது சரியல்ல. சமீபத்தில் 20 நம்பர் நூலை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய சர்க்கார் அனுமதித்திருக்கிறார்கள். அப்படி அனுமதி கொடுத்திருப்பதனால்தான் விலை கூடியிருக்கிறது. ஆகையால் நமது மாகாண சர்க்கார் இதில் தலையிட்டு 20 நம்பர் நூலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடைபடுத்தவேண்டும். இல்லாவிட்டால் சென்ற காலங்களில் நெசவாளர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருந்தனவோ அவ்வளவையும் உடனடியாக அவர்கள் அனுபவிக்கும்படியாக ஏற்படும். இன்னொன்று. செங்கல்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு, மாவட்டங்களில் உள்ள நெசவாளர்கள் இன்றையதினம் கொஞ்சம் சௌகரியமாக இருக்கிறார்கள்.



9th December 1959] [Sri A. Mariappan]

குறிப்பாக அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்யக் கூடியவர்கள் வாரம் ஒன்றுக்கு இருபது ரூபாய், இருபத்தைந்து ரூபாய் வரையில் சம்பாதிக்கிறார்கள். அதே சமயத்தில் இருபதாம் நம்பர், முப்பதாம் நம்பர் துணிகளை உற்பத்தி செய்கின்ற நெசவாளர்களுக்கு வாரம் ஒன்றுக்கு 5 ரூபாய், 6 ரூபாய் கூடக் கிடைப்பது இல்லை. அதோடு அந்த நெசவாளர்கள் தங்களுக்கு வாரம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட முப்பது ரூபாய் கிடைப்பதனால் நூல் சுற்றுவதற்கும், பாவு செய்வதற்கும், இன்னும் இதர சில்லரை வேலைகளைச் செய்பவர்களுக்கு அதிகக் கூலி கொடுக்கிறார்கள். இவர்களிடத்தில் அதிகக் கூலியைப் பெறுகின்ற தொழிலாளர்கள் 20 நம்பர், 30 நம்பர் நெய்யக்கூடிய நெசவாளர்களிடத்திலும் அதிகக் கூலியைக் கேட்கிறார்கள். ஆகவே நூல் விலை உயர்வு ஒரு பக்கம். தொழிலாளர்களுடைய ஊதிய உயர்வு ஒரு பக்கம் இப்படி இரண்டு வகையிலும் 20 நம்பர், 30 நம்பர் நூல் நெசவு பண்ணக்கூடிய நெசவாளர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்து வெளி நாடுகளுக்கு இருபதாம் நம்பர் நூல் ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கைத்தறித் துணித் தேக்கம் எந்தக் காலத்திலும் இல்லாத அளவு இன்று உயர்ந்து இருக்கிறது. நமது ராஜ்ய கூட்டுறவு நெசவாளர் சங்கத்தை எடுத்துக்கொண்டால் இன்றுபோல் எந்தக் காலத்திலும் துணித்தேக்கம் ஏற்பட்டது கிடையாது. கிட்டத்தட்ட இன்றையதினம் 118 லட்சம் ரூபாய் ஜவுளி தேங்கியிருக்கிறது நமது சங்கங்களில். இதன் விளைவு என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. ஓரிரு வாரங்களில் எங்கே கூட்டுறவு சங்கங்களில் வேலையை நிறுத்திவிடுவார்களோ, அல்லது மாஸ்டர் வீவர்களுக்கு நூல் கொடுக்காமல் நிறுத்திவிடுவார்களோ களோ என்றெல்லாம் நெசவாளர்கள் மிகுந்த அச்சம் கொண்டிருக்கிறார்கள். ஆகையால்தான் உடனடியாக நூலைக் குறைந்த விலைக்கு கொடுப்பதற்கும் துணி தேங்காதபடிக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ரிபேட்டைப் பொறுத்த வரையில் மொத்த விற்பனைக்கு 3 சதவீதம், சில்லரையில் வாங்குவோர்க்கு 6 சதவீதம் கொடுப்பதும் என்று இருப்பதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சிலர் கூறியிருக்கிறார்கள். அது மிகவும் உண்மையானது. இதன் காரணமாகவே சங்கங்களில் அதிகத் துணி தேங்குகிறது. மொத்த விற்பனைக்கும், சில்லரை விற்பனைக்கும் 6 நயா பைசா என்ற ரீதியில் ஒரேயளவாகக் கொடுக்கவேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு இவர்கள் சிபார்சு செய்ய வேண்டும். மேலும் ரிபேட்டைப் பொறுத்த வரையில் ராமநாதபுரம் சங்கங்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகை இரண்டாண்டு காலம் ஆகியும் கூட இன்னமும் கொடுக்கப்படாமலேயே இருக்கிறது என்பதாக எனக்குத் தந்தி வந்திருக்கிறது. ஏனைய உறுப்பினர்களுக்கும் வந்திருக்கும். அதுவும் குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் உள்ள சொஸைடியில் சில தவறுகள் நடந்துவிட்டதன் காரணமாக

கொடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்ட ரிபேட் தொகை இன்னமும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதுபற்றி ஏற்கனவே தொழில் அமைச்சர் அவர்களும், சங்கத்தைத் சேர்ந்த முக்கியஸ்தர்களும் கூடிப் பேசி ஒரு முடிவு செய்திருக்கிறார்கள். இருந்தும் இன்னமும் அந்தக் கணக்குத் தீர்க்கப்படவில்லை. அதனால் அந்தப் பகுதியில் உள்ள நெசவாளர்கள் பாதிக்கபட்டிருக்கிறார்கள். மற்றும் ராஜ்யத்தில் உள்ள இதர பகுதிகளிலும் கூட குறைந்தது 6 மாதம் வரையில் ரிபேட் தொகை கொடுக்கப்படாமலேயே இருக்கிறது. நெசவாளர்களின் சங்கங்கள் தங்களுடைய மூலதனத்தை இப்படிக் கொடுத்து முடக்கி விடுவதனால், அவர்களுக்கு ரிபேட்டாக வர வேண்டியதும் காலாகாலத்தில் வராது போவதனால் நெசவாளர்களுக்கு சரியானபடி வேலை கொடுக்க முடியாமல் போகிறது. ஆகவே இதையெல்லாம் கவனித்து மாதா மாதம் ரிபேட் தொகையைக் கொடுப்பதற்கு உண்டான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நமது மாகாணத்தில் ஜரிகை நெசவுத் தொழில் செய்வது மிகவும் அதிகமாகயிருக்கிறது. அப்படியிருந்தும் கூட நமது மாகாணத்தில் ஜரிகை உற்பத்தி தொழிற்சாலை ஏற்படவில்லை. ஆகவே நமது மாகாணத்திற்கு ஜரிகை உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த மாகாண அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மில் துணியைப் போன்று பளப்பளப்பாக கைத்தறி இருக்கவேண்டுமென்றால் மெர்ஸிடைஸ்ட் ப்ளான்ட் போன்றவைகள் இருந்தால்தான் கைத்தறித் துணிகள் நல்ல முறையில் துணிகளோடு போட்டி போடமுடியும். ஆகவே அந்த அளவிற்கு நமது மாகாண சர்க்கார் உடனடியாக மெர்ஸிடைஸ்ட் ப்ளான்ட் ஒன்றை இந்த மாகாணத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலத்தைப் பொறுத்த வரையில் சேலம் நகரசபையார் சேலம் நகரசபைக்குச் சொந்தமான கல்லூரியை நமது மாகாண அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதை உடனடியாக ஏற்று அந்தக் கல்லூரியை பெரியதொரு கல்லூரியாகச் செய்வதற்கு உண்டான ஏற்பாட்டை மாநில சர்க்கார் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ஹரிஜனங்களை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு சுடுகாட்டிற்கு போவதற்கு பாதைகள், எங்கள் ஜில்லாவில் பலவிடங்களில் இல்லை. அதை நமது மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் பல இடங்களில் பார்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தப் பாதை வசதி ஏற்படுத்த இதுவரையிலும் எந்தவிதமான வசதியும் செய்து தரப்படவில்லை. ஆகவே ஹரிஜனங்களுக்கு சுடுகாட்டிற்குப் போவதற்கு உடனடியாக பாதை வசதி செய்து தரவேண்டும்.

(மணி அடிக்கப்பட்டு பேச்சு முடிவு பெற்றது.)

* SRI D. S. AUTHIMOOLAM: மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், கவர்னர் பெருமான் உரையில் விசேஷமாக உள்ள சமாசாரங்கள் ஒன்றும் இல்லைதான். இப்பொழுது சாதாரணமாக எல்லோரும், பெரிய தலைவர்களிலிருந்து கிராமங்களில் உள்ள குட்டித் தலைவர்கள் வரையில் சொல்கிற காரணந்தான் முக்கியமானது. அதாவது



ராஜ்ய சர்க்கார்களுக்கு பொதுவாக நிதி வசதியும் இல்லை, அதிகாரமும் இல்லை, என்பதுதான். ஆகவே இந்த முறையில் நாட்டில் மக்களுக்கு பல கஷ்டங்கள் நேரிடுகிறது. உணவு விலையை எடுத்துக் கொள்வோம். உணவு அமைச்சர் அவர்கள் சொல்வது போல் அவைகள் ஏறுமுகமாக போவதை ஓரளவு தடுத்தபோதிலும் அவைகள் மத்திய தர வகுப்பாரும் ஏழை மக்களும் வாங்கக்கூடிய விலையில் விற்கவில்லை. இதை அதிகாரத்தில் இருக்கக் கூடியவர்கள் கவனத்தில் வைத்து தகுந்த நடவடிக்கைகள் எடுத்துத்தான் வேண்டும். தட்டிக் கழிப்பதில் பிரயோஜனமில்லை. அதற்கு சமீபத்தில் அருப்புக்கோட்டையில் நடந்த தேர்தலின் முடிவு உங்களுக்கு ஞாபகத்தையூட்டும் என்று நம்புகிறேன். சிதம்பரம் தேர்தலில் நடந்ததை வைத்துக்கொண்டு எல்லாம் சரியாகப் போய்விட்டது என்று மாகாண சர்க்கார் நினைத்து விடக்கூடாது. சிதம்பரத்தில் கூட 40,000 பேர்கள் அரசாங்க கட்சிக்கு எதிராகத்தான் வோட்டு போட்டிருக்கிறார்கள். ஆக நிலைமை எப்படியென்றால், பொதுவாக விலைவாசியைப் பொறுத்த வரையில் ஜனங்களிடம் பெரிய அதிருப்தி உங்கள் பேரில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் உங்கள் பேரில் அதிருப்தி ஏற்பட்டால் எங்களைப் போன்றவர்களுக்கு சந்தோஷந்தானே என்று சொல்லி விடக்கூடாது. பொதுவாக ஜனங்களுக்கு கஷ்டம் இருக்கிறது. அந்தக் கஷ்டத்தை சமாளிக்க நீங்கள் முன்வரவேண்டும். ஆனால் நீங்கள் சமாளிக்கத் தெரியாதவர்களா? கனம் நிலக்கோட்டை அங்கத்தினர் முன்பு பேசும்போது இந்தியாவிலேயே சென்னை ராஜ்ய மந்திரிசபைதான் நல்ல நிர்வாகத்திறமை உள்ளது என்றார். அது ஓரளவுக்கு வாஸ்தவந்தான். உங்களிடம் திறமையிருக்கிறது. நல்லதொரு அமைப்பு இங்கேயிருக்கிறது. செக்ரேட்டேரியேட்டிலிருந்து கிராம ஊழியர்கள் வரையில் தாலுகா ஆபீஸ் வரை நல்லதொரு ட்ரெடிஷன் (tradition) உள்ள நல்ல திறமை வாய்ந்த ஆபீஸர்ஸ் (Officers) இங்கு உண்டு. ஆகவே நீங்கள் இனி கொஞ்சம் தைரியத்தை, காங்கிரஸ் அங்கத்தினர் முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னதைப்போல், கைக்கொள்ள வேண்டும். முக்கியமாக இப்பொழுது ஒரு சமாசாரத்தைப் பார்க்கிறோம். அது, சென்னை நகர பஸ் போக்குவரத்து நிர்வாகம். அது ரொம்ப பயங்கரமாகயிருக்கிறது, காலையிலும், மாலையிலும், மந்திரிகள் இருக்கக் கூடிய தலைநகரில் உங்கள் கண் முன்னே அது நடக்கிறது. அதுவும் 14 ஸீட்கள் உள்ளதில் 10 ஸீட்களை, அதாவது அஸெம்பளி ஸீட்ஸ் (Assembly seats) உங்களுக்கு அளித்துள்ள ஜனங்கள் இருக்கும் இடத்தில். அந்த ஜனங்களுக்கு நீங்கள் எந்த அளவிற்கு கடமைப் பட்டிருக்கிறீர்கள் என்று பார்க்க வேண்டும். இதை நான் சொல்வது, சாயங்காலம் நான் போனவுடனே சென்னைமாநகரத்திலுள்ள ஜனங்கள் யாராவது என்னை அடையாளம் கண்டு கொண்டு என்னைப் போற்றுவார்கள் என்பதற்காகவல்ல. பல கோடி ரூபாய் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் செலவு செய்தும் இந்த நிலையா என்றுதான் நான் கேட்கிறேன். ஒரு ஜில்லாவில் மலேரியாவை ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க 50,000 ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்று சொன்னால் அதற்கு மத்திய சர்க்காரிடம் கிராண்ட் கேட்டு வாங்கித்தான் செலவு செய்ய வேண்டியதொரு நிர்ப்பந்தம் இருக்கிறது. அப்படி

யிருக்க கூடுதல் 100 பஸ்களை வாங்கிப்போட்டு மக்களுக்கு சௌகரியம் செய்து கொடுக்க வேண்டுமென்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? பாவம். திறமையுள்ளவர்களின் கையையும் காலையும் கட்டிப் போட்டு வைத்திருக்கும் முறையில்தான் இந்திய சர்க்காரின் கொள்கைகள் இருந்து கொண்டிருக்கிறது. உணவு விஷயத்திலாகட்டும், அப்படித்தானிருக்கிறது. ஆகவே எந்த விஷயத்தில் ஆகட்டும், நிர்வாக விஷயத்திலும் ஆகட்டும், கொஞ்சம் புரட்சிகரமான வேலையை செய்ய ஆரம்பிக்க வேண்டும். இல்லாவிடில் ஜனங்களுக்கு கஷ்டம் மேலும் மேலும் அதிகரிக்கத்தான் செய்யும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அகவிலை, உணவுப்பொருள்களின் விலை கூடியிருக்கிறது என்பதோடு பெயர் ப்ரைஸ் (fair p ice) ஷாப்பை இன்னும் கூட்டுங்கள், அப்பொழுது விலை குறைவதற்கு ஒரு வசதி ஏற்படும். கவர்னர் உரையில் இருக்கிறபடி மாதம் ஒன்றுக்கு 30,000 டன்தான் நீங்கள் விநியோகம் செய்கிறீர்கள். அதாவது வருடம் ஒன்றுக்கு 360,000 டன். இந்த மாகாணத்தின் மொத்த அரிசித் தேவை 35 லட்சம் டன். அதில் 3½ லட்சத்தைக் கழித்தால் 31½ ஆகிறது. அதில் சொந்த நிலங்கள் உள்ளவர்களின் விளைச்சலை, 11 லட்சத்தைக் குறைத்தால் 20 லட்சம் டன் அரிசியை ஜனங்கள் வெளி மார்க்கட்டில் வாங்க வேண்டியிருக்கிறது. ஒரு ஊரில் 5,000 ஜனத்தொகையிருக்கிறது என்றால் 500 பேர்களுக்குத்தான் நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி கிடைக்கிறது. மீதியுள்ளவர்களில் 2,000 பேர்களுக்கு சொந்த நிலமிருக்கலாம். அப்பொழுது 2,500 பேர்கள் எப்படியாவது அதிக விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் தாழ்மையாக தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் பெயர் ப்ரைஸ் (fair price) ஷாப்களை 2,000 என்றிருப்பதை சீக்கிரமாக மூன்று மடங்காகவாவது கூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இல்லாவிடில் விலைவாசி இறங்கவே இறங்காது. அதோடு இந்த பெயர் ப்ரைஸ் ஷாப்ஸ் நடத்துவதற்கு கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு அனுமதி கொடுக்கவேண்டும். அப்படியில்லாத இடங்களில் தனிப்பட்டவர்களுக்கு அந்தக் கடைகளை நடத்துவதற்கு அனுமதி கொடுக்கக் கூடாது. இதை கனம் உணவு அமைச்சர் அவர்கள் ஞாபகத்தில் வைத்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் இந்த நாட்டில் ப்ளாக் மார்க்கட்டியேர்ஸ் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். இந்த அவலட்சணமான வார்த்தையை அமைச்சர்களின் முன்னால் உபயோகிப்பதற்கு வருந்துகிறேன்.

இவர்கள் கழுகு மாதிரி சுற்றிக்கொண்டேயிருக்கிறார்கள்.
11-30 a.m. என்னிடத்தில் கூட பலர் வருவார்கள், எனக்கு சீனி கோட்டா வாங்கித் தர வேண்டுமென்று. அவர்களிடத்தில் சொல்வது என்னவென்றால் கலெக்டர் அவர்களிடத்தில் போய் சொல்லி மூன்று மூட்டைக்கு பெர்மிஷன் வாங்கிக்கொடுத்தால் குறைந்தது 1½ மூட்டையாவது சரியாக விநியோகம் செய்யவேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக்கொண்டு கலெக்டரிடத்தில் போய் வாங்கி கொடுப்பதுண்டு . . .





**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** ஒன்றரை மூட்டை மட்டும் விநியோகம் செய்வதில் திருப்தி அடைந்து விடாமல் பேச்சுக்காவது மூன்று மூட்டையையும் விநியோகம் செய்ய வேண்டும் என்று அவர்களிடத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லவேண்டும்.

**SRI D. S. AUTHIMOOLAM :** நம்முடைய நாட்டு மக்களுடைய பண்பே இம்மாதிரிதான் இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் எவ்வளவோ நம் நாட்டு மக்களுடைய பண்பு (culture) உயர வேண்டும். இப்போது மிகவும் குறைந்த அளவில் தான் இருந்து கொண்டு இருக்கிறது. இதற்கு அரசாங்கமும் 25 சதவிகிதம் காரணம் தான். ஆகவே இந்த நியாயவிலைக்கடைகளை எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு கொடுத்து விட்டால் அவர்களுடைய கணக்குகளை எல்லாம் சரிவர கண்காணிக்க முடியாது. கூடுமான வரை—நமது ராஜ்யத்தில் தான் மற்ற எந்த ராஜ்யத்திலும் இல்லாத அளவில் பஞ்சாயத்து போர்டுகள் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த பஞ்சாயத்து நிர்வாகத்தில் இதை ஒப்படைக்கவேண்டும். அவர்கள் ஐந்தாறு பேர்களாக சேர்ந்திருப்பதினால் பெரிய தவறுகள் ஒன்றும் நடைபெறாது என்று நாம் எதிர்பார்க்கலாம். அதே போன்று அங்கங்கே இருக்கக்கூடிய கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் இதை ஏற்றெடுத்து நடத்துவதற்கு அனுமதிக்கலாம். அதல்லாமல் தனிப்பட்டவர்களுக்கு இந்தக் கடைகளை கொடுக்கக்கூடாது. எங்கள் ஜில்லாவில் எவ்வளவோ கூட்டுறவு சங்கங்கள் இருந்தாலும் கூட நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்களிடம் சொல்லி—அவர்களும் எந்தவிதத்திலாவது அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கிவிடுகிறார்கள்—அவர்கள் எந்தவிதத்திலும் தாட்சனியம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்—எப்படியோ நியாயவிலைக்கடைகளை நடத்துவதற்கு அனுமதி வாங்கி பல தனிப்பட்டவர்கள் நடத்தி வருகிறார்கள். எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் சில இடங்களில் கிராம முன்சீப்கள் கர்ணங்கள் கூட நியாயவிலைக்கடைகளை வாங்கி வைத்துக்கொண்டு காரியங்களை நடத்தி வருகிறார்கள். இதற்கெல்லாம் முடிவு கட்டவேண்டும். ஆகவே பஞ்சாயத்து நிர்வாகத்தில் இந்தக்கடைகளை எல்லாம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அதிகமாக கூட்டுறவு சங்கங்களை அமைப்பதைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதைப்பார்த்தால் சோஷியலிஸ தத்துவங்களைப் பற்றி அவ்வளவாக குறிப்பிட்டு பேசவில்லையென்றாலும், கூட்டுறவு சங்கங்கள் அதிகமாக அமைக்கவேண்டுமென்றும், கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த வருடம் 17 கோடி ரூபாய் கடனாக வழங்கப்போகிறோம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. போன வருடம் 12 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. அதன்படி பார்த்தால் இந்த வருடத்தில் ஐந்து கோடி ரூபாய் கூடுதலாக கொடுக்கப்படப்போவதாக தெரிகிறது. இதன் மூலமாக கிராமவாசிகள் போதிய அளவுக்கு கடன்கள் பெற்றுக்கொள்ளமுடியாது. கிராமங்களில் எல்லாம் லேவாதேவிக்காரர்களும் கடன் கொடுப்பதை அதிகமாக நிறுத்தி வருகிறார்கள். பொதுவாக இந்த நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு சர்க்கார் கொடுக்கிற கடன் பங்கு 8 சத

விகிதம்தான் என்று ரிசர்வ் பாங்க் ரிப்போர்ட் தெரிவிக்கிறது. இது போதாது, இன்னும் தாராளமாக கடன் கொடுக்கவேண்டும். அதற்கான முறையில் சட்டதிட்டங்களை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கடன் கொடுக்கின்ற முறைகளை எடுத்துக்கொண்டால் நிர்வாகத்தில் எல்லாம் பழைய ஆட்களே இருந்து கொண்டிருக்கிறார்கள் . . (மணியடிக்கப்பட்டு பேச்சு முடிவு பெற்றது.)

**Sri G. G. GURUMURTHI** : கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரை மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் பல விஷயங்களைப்பற்றி எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக வேளாண்மையைப்பற்றி குறிப்பிட்டு நமது இரண்டாவது திட்டத்தில் உணவு உற்பத்தியின் உச்ச வரம்பானது 12·79 லட்சம் டன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நடைமுறையில் நாம் 9 லட்சம் டன் தான்யம் தான் உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாக்கியிருக்கக்கூடிய மூன்று லட்சம் டன் தான்யத்தை உற்பத்தி செய்வதற்கு, இப்போது இருப்பதை விட இன்னும் அதிகமாக விவசாயத்தைப் பெருக்குவதற்கு, அமோனியம் சல்பேட் போன்ற ரசாயன உரங்கள் அதிகமாக கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால், அரசாங்கம் போடக்கூடிய திட்டங்கள் எல்லாம், அவைகள் எல்லாம்—பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களாகட்டும், அல்லது சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களாகட்டும்—இவைகள் மூலமாக கிடைக்கக்கூடிய வசதிகள் எல்லாம், அரசாங்கம் கொடுக்கக்கூடிய சலுகைகள் எல்லாம் நிர்வாகத்தில் எந்த விதமான இடையூறும் இல்லாமல் நேரிடையாக விவசாயிகளிடத்தில் கிடைக்குமானால் இந்த மூன்று லட்சம் டன் தான்யத்தையும் நம்மால் உற்பத்தி செய்ய முடியும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் வேண்டியதில்லை. இப்போது விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய ரசாயன உரங்களை எடுத்துக் கொண்டால், அல்லது விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் கடன் வசதிகளை எடுத்துக்கொண்டால், அல்லது கிணறுகள் வெட்டுவதற்கு கொடுக்கப்படும் கடன் வசதிகளை எடுத்துக்கொண்டால், இவைகளுக்கு எல்லாம் ஒதுக்கப்படும் தொகை காலாகாலத்தில் விவசாயிகளுக்கு போய் சேருவதில்லை. கிணறுகள் வெட்டுவதற்கு சாதாரணமாக இங்கு பட்ஜெட் கூட்டம் நடந்து முடிந்த பின்னால் அதாவது மார்ச் மாதத்திற்குப் பின்னால் கொடுக்கப்படும் பணம் உண்மையிலேயே விவசாயிகளுக்கு ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் தான் போய் சேருகிறது. இதைக்கொண்டு அவர்கள் வேலை தொடங்கி பயன் பெறுவதற்குள்ளாக கடனை திருப்பிக்கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதன் காரணமாக விவசாயிகள் இதன் மூலமாக கிடைக்கும் பயனை சரியாக பெற முடியாத நிலையிலிருக்கிறார்கள். அதேபோன்று தான் பொறுக்கு விதைகள் கொடுப்பதிலும், மற்றுமுள்ள பூச்சிமருந்துகள் கொடுப்பதிலும், மேலும் இதற்கான கருவிகள் கொடுப்பதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. ...சாயக்கடன்களை எடுத்துப்பார்க்கும்போது கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது இன்னும்





500 கூட்டுறவு சங்கங்களை அதிகமாக ஏற்படுத்தவேண்டும் என்று கவர்னர் அவர்களது உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் இருக்கின்ற கஷ்டங்கள் என்னவென்றால் ஒரு ஸொஸைட்டி கடன் வாங்க வேண்டும் என்றால் அங்கிருக்கின்ற யூனியன்களிடத்தில் போய் கேட்கவேண்டும். இதனாலும் தாமதம் ஏற்படுகிறது. அதிலும் சென்ட்ரல் பாங்கிலிருந்து விவசாயக்கடனாக கொடுக்கப்படும் கடன்கள் எல்லாம் குறுகிய கால கடன்களாக கொடுக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் விண்ணப்பம் செய்து கடனை பெற்றுக்கொண்டு அதைக்கொண்டு பயன்பெறுவதற்கு முன்னாலே அந்த கடனைத் திருப்பிக்கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் விவசாயத்திற்காக வாங்கியிருந்த மாடுகள் போன்றவைகளை விற்றுக்கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொடுக்கப்படும் கடன்கள் எல்லாம் மத்திய கால கடன்களாக கொடுக்கவேண்டும், அதாவது மூன்று அல்லது ஐந்து வருடங்களில் திரும்பி கொடுக்கும்படியாக இருக்க வேண்டும். அப்போதுதான் இந்தக் கடனை விவசாயிகள் நன்கு பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும்.

புதிதாக நீர்ப்பாசன வசதி பெற்ற ஆயக்கட்டு நிலங்களில் கிணறுகள் வெட்டக்கூடாது என்ற தடை இருக்கிறது. அதாவது கிணறுகள் வெட்டினால் கடைசிவரை தண்ணீர் போய் சேராது என்று சொல்லப்படுகிறது. ஆனால் கால்வாய்களில் தண்ணீர் போகும்போது அதிலிருந்து ஏற்படும் ஊற்றுகள் மூலமாக கிணறுகளில் எல்லாம் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே இந்த தடை இருக்கவேண்டிய அவசியமே இல்லை. அதோடு இதனால் யாருக்கும் எந்தவிதமான கஷ்டங்களும் ஏற்படப்போவதில்லை. இவ்விதம் கிணறுகள் வெட்டுவதற்கு தடையில்லாமல் இருந்தால், கண்டிப்பாக இப்போது இருப்பதை விட இன்னும் அதிகமாக மகசூலை பெருக்குவதற்கு ஏதுவாக இருக்கும். அதோடு இந்த ஆயக்கட்டு பிரதேசங்களிலுள்ள கிணறுகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் தடை விதிக்கப்பட்டிருந்தது. எல்.பி.பி. பகுதியிலும், மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்திலும் இந்த தடை இருந்து வந்தது. இப்போது எல்.பி.பி. பகுதியில் இருந்து வந்த தடையை நீக்கிவிட்டார்கள். ஆனால் மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தில் இப்போதும் பம்புசெட்டுகள் வைக்கக்கூடாது என்று தடை இருந்து வருகிறது. இந்த தடை நீக்கப்படவேண்டும். வாய்க்காலில் தண்ணீர் நின்றதின் பின்னால் கிணறுகளில் இருக்கும் தண்ணீரை இறைத்து நல்ல பயன்பெற ஏதுவாகும். ஆகவே இந்த தடையிருப்பதினால் விவசாயிகளுக்கு கெடுதியாக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்வதோடு, எல்.பி.பி. பகுதியில் இருந்து வந்த தடையை நீக்கிவிட்டது போன்று மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தில் இருக்கும் தடையையும் எடுத்து விடவேண்டும். இந்த தடை இருக்கவேண்டும் என்று இன்ஜினியரிங் இலாகா சொல்லும் காரணமானது, கால்வாய்களின் பக்கத்திலேயே பம்புசெட்டுகள் இருந்தால் கடைசியில் இருக்கக்கூடிய (டெயில் லாண்ட்) நிலங்களுக்கு எல்லாம் தண்ணீர் போய் சேராது என்று சொல்லுகிறார்கள். வாய்க்காலில் தண்ணீர் நின்ற பிறகாவது மின்சார பம்புசெட்டுகள் மூலம் தண்ணீர் இறைத்து கொள்வதற்கு

அனுமதி கொடுக்கப்படவேண்டும். இந்த காலத்திற்குள் தண்ணீர் இறைத்துக்கொண்டே வருடத்திய மினிமம் கேரண்டி தொகையை கொடுக்கவேண்டுமென்ற நிலைமை ஏற்படலாம். அந்த ஆறு மாதத்தில் கிணற்றில் போதுமான அளவு தண்ணீர் இருப்பதனால் வருஷத்திய மினிமம் கேரண்ட் தொகை ஓரளவு கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அப்படி இல்லையானால் அரசாங்கம் அவர்களுக்கு மினிமம் கேரண்டி தொகை கட்டுவதிலிருந்து விதி விலக்குக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் நல்லபடியாக விவசாயம் பெருகும்.

அடுத்தபடியாக இந்த ஆண்டு பருவ மழை நன்றாகப் பெய்திருக்கிறது. இருந்தும் பல பகுதிகள் இந்த மழையின் பயனை அனுபவிக்க முடியாமல்தான் இருக்கிறது. காரணம் அந்தப் பகுதியில் உள்ள ஏரிகள், கண்மாய்கள் எல்லாம் பலகாலமாக மராமத்து செய்யப்படாமலேயே இருப்பதினால் மழை பெய்கிற இந்தக்காலத்தில் அந்த நீரைத் தேக்கிக்கொள்ள முடியவில்லை. அரசாங்கத்தைக் கேட்டால் குடிமராமத்து என்று சொல்லி கிராமத்தவர்களே அதைச் செப்பனிட்டுக்கொள்ளவேண்டும் என்கிறார்கள். கிராமங்களில் சரியான தலைவர்கள் இல்லை. அதன் காரணமாக அவை சரியாக செப்பனிடப்படவில்லை. இப்போது அதைப்பற்றிச் சொன்னால் பஞ்சாயத்துகளிடம் அந்த வேலையை ஒப்படைக்கலாம் என்கிறார்கள். எல்லா கிராமங்களுக்கும் பஞ்சாயத்து இன்னமும் வராத நேரத்தில் அவர்கள் அந்த வேலையைச் செய்வார்கள் என்பது வீணான காலதாமதத்தைத்தான் கொடுக்கும். மேலும் இப்போது புட் ப்ரொடெக்ஷன் இலாகா என்று ஏற்படுத்தி அதில் என்ஜினியர்களை வைத்திருக்கிறார்கள். சிறிய நீர்ப்பாசன திட்டங்களைக் கவனிப்பதற்காக தனியாக ஒரு டிவிஷன் ஏற்படுத்தி என்ஜினியர்களை வைத்திருக்கிறார்கள். இவர்களிடத்திலாவது இந்த வேலைகளை ஒப்படைத்துக் காலதாமதம் இல்லாதவாறு மராமத்து செய்தால்தான் பருவமழை சரியாக இருப்பதன் பயனை பூரணமாக அனுபவிக்க முடியும். ரெவின்யூ இலாகாவே எஸ்டிமேட்டுகளைத் தயார் செய்வது என்றால் வீணான காலதாமதம்தான் ஆகிறது. இதனால் பல கஷ்டமும், நஷ்டமும் ஏற்படுகிறது.

அடுத்தபடியாக மேட்டூரிலே இப்போது நிறையத் தண்ணீர் இருக்கிறது. இந்த ஆண்டில் இரண்டு போகத்திற்கு விடவேண்டுமென்று எங்கள் பகுதியில் உள்ளவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு போகம் சாகுபடி செய்ய நீர் விடுவதாக இருந்தால் 45 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடிக்குக் கொண்டு வரலாம். மற்ற ஜில்லாக்களில் இருப்பதைவிட இந்த ஜில்லாவில் உள்ளவர்கள் அதிகமான விளைச்சல் செய்து காட்டக்கூடியவர்கள். அதிக வேளாண்மை உற்பத்தியை பெருக்கக் கூடிய விவசாயிகள் இங்கே இருக்கிறார்கள். ஆகவே இரண்டு போகத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இரண்டு போகத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு இடையூறு இருக்குமானால் தற்போது உள்ள அரசாங்க உத்திரவுப்படி டிசம்பர் 30-ந் தேதியோடு தண்ணீர் விடுவதை நிறுத்திவிடாமல்,





1960, ஜனவரி மாதம் 30-ந் தேதி முடிய தண்ணீர் வரும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்த பிராந்தியத்தில் பதினைந்தாயிரம், இருபதாயிரம் ஏக்கரா நிலங்களில் உள்ள பயிர்கள் வீணாகப் போய்விடும். ஆகவே இவ்வாண்டாவது இன்னும் ஒரு 1½ மாதம் அதிகமாக தண்ணீர் விடும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நெசவாளர்கள் உபயோகப்படுத்திக்கொண்டிருந்த 20-ம் நம்பர் நூல், 30-ம் நம்பர் நூல் இவற்றின் விலை எல்லாம் அதிகமாக ஏறிக்கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் அதனால் தயார் செய்யப்படுகிற வெள்ளை ரகக் கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கியிருக்கிறது. அதனால் அங்கு இருக்கக் கூடிய மாஸ்டர் வீவர்ஸ் நூல் வாங்கிக் கொடுக்க முடியாமல் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அந்த ரக நூல்களைக் குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். துணி தயார் செய்து அதை விற்பனை செய்து விற்பனையின் பேரில் ரிபேட் கொடுப்பதைவிட முதலிலேயே நெசவாளர்கள் வாங்கும் நூல்களின் விலையின்மேல் ரிபேட் கொடுக்கப்பட்டால் நெசவாளர்களுடைய கஷ்டம் ஓரளவு குறையக்கூடும். மேலும் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கே இந்த ரிபேட் கொடுக்கப்படுகிறது. அப்படியில்லாது நான் சொல்கிற யோசனைப்படி நடந்தால் எல்லா நெசவாளர்களுக்கும் அனுகூலம் ஏற்படுவதற்கு வழியேற்படும். அடுத்தபடியாக கோயம்பத்தூர் ஜில்லாவிலே புதிதாக நீர்ப்பாசன வசதி பெற்று இருக்கக்கூடிய நிலங்களில்—அதுவும் மேட்டூர் வாய்க்கால், லோயர்பவானி வாய்க்கால் பாசனப் பகுதிகளில் கரும்பு சாகுபடி ஏற்பட்டிருக்கிறது. சுமார் பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். அந்தப் பிராந்தியங்களில் சர்க்கரை ஆலை ஏற்படுத்தவேண்டுமென்று சென்ற ஆண்டில் விண்ணப்பம் கொடுத்தோம். அந்த விண்ணப்பத்திற்கு—அரசாங்கம் இந்தத் திட்ட காலத்திற்குள் புதிதாக சர்க்கரை ஆலை ஒன்றையும் துவங்கப்போவதில்லை—என கொள்கை அடிப்படையில் எங்கள் விண்ணப்பத்தைப் புறக்கணித்துவிட்டார்கள். இப்போது அந்தக் கொள்கை மாறியிருப்பதினால், புது சர்க்கரை ஆலைகள் ஏற்படவேண்டுமென்று திட்டமிட்டிருப்பதினால் எங்கள் பிராந்தியத்தில்—கவுந்தப்பாடியில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் அரசாங்கத்தின் திட்டங்களை எல்லாம் பொதுமக்கள் நன்கு புரிந்துகொண்டு வரவேற்கிறார்கள். திட்டங்களுக்கு ஒத்துழைப்பும் கொடுக்கிறார்கள். பொதுமக்கள் திட்டங்கள் சம்மந்தப்பட்ட காரியங்களுக்கும், மற்றும் அவர்களுடைய காரியங்களுக்கும் அடிக்கடி சர்க்கார் காரியாலயங்களுக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. அதன் காரணமாக அங்கே நடக்கிற முறைகளையும், காலதாமதத்தையும், அதிகாரிகள், சிப்பந்திகள் இவர்களுடைய போக்கையும் கண்டு வெறுப்புற்று நம்முடைய அரசாங்க திட்டங்களை எல்லாம் அவர்கள் வரவேற்றாலும் கூட என்ன நினைக்கிறார்கள் என்றால் இந்தச் சர்க்கார் அபிவிருத்தித் திட்டங்களை எல்லாம் கொஞ்சம் நிறுத்தி வைத்துவிட்டு நிர்வாக முறையை ஏன் சீர்படுத்தக் கூடாது என்று

[Sri G. G. Gurumurthi] [9th December 1959

நினைக்கிறார்கள். இந்த எண்ணம் தான் பாவி வருகிறது. நிர்வாகம் சீர்கெட்டு செம்மையாக நடக்க வேண்டும். அதற்கு முதல் காரியமாக என்.ஜி.ஓ.-க்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும். அவர்களுக்கு அதிருப்தி இல்லாதபடி செய்து ஊழியர்கள், உற்சாகமாகவும், ஒழுங்குடனும் வேலை செய்யுமாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI G. GOMATHISANKARA DIKSHITAR : கனம் சபா நாயகர் அவர்களே, நமது கவர்னர் பெருமானின் உரையை ஆமோதித்து இரண்டொரு வார்த்தை கூறவிரும்புகிறேன். நமது ராஜ்ய மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்கு முன்னால் நாம் அடைந்துவிடக் கூடிய நிலைமையில் இருக்கிறோம். நம்முடைய லட்சியமும், திட்டங்களும் அந்தவகையில் உருவாகியிருக்கிறது. ஆனால் உணவுப் பண்டங்களுடைய விலை பொதுமக்களால் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்து கொண்டே போவதைத் தடுப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(Deputy Speaker in the Chair.)

குறைந்த விலையில் எல்லா மக்களுக்கும் உணவு தானியம் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்பதற்காக இப்போது நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதிகமாக இந்தக் கடைகள் பரவலாகத் துவக்கப்படுவதோடுகூட இந்தக் கடைகள் நல்லமுறையில் நடப்பதற்கும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் கிராமங்களில் ஆகட்டும், தாலூகாவில் உள்ள சிறிய நகரங்களில் ஆகட்டும், இந்த நியாயவிலைக் கடைகள் இல்லாததனால் மத்தியதர வகுப்பினர்களுக்கு, உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, ஏழைத் தொழிலாளர்களுக்கு உணவுப் பொருள் வாங்குவதில் மிகுந்த கஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையால் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி அதன் மூலமாக மக்களுக்கு உணவு தானியங்கள் குறைந்த விலையில் கிடைக்கும்படி செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அத்தியாவசியமான பண்டங்களின் விலை விஷம்போல ஏறிக்கொண்டு வருகிறது. இதனால் நாட்டிலுள்ள மக்கள் எல்லாம் இந்தச் சர்க்காரைக் குறை கூறுகிறார்கள். அத்தகைய குறைகளை எளிதில் நீக்குவதற்கு நமது அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. இருந்தாலும் புளி மிளகாய் பாக்கு போன்ற அத்தியாவசியமான பண்டங்களின் விலை ஏறுகிறது. பற்றாக்குறையினாலா அல்லது வெளிநாடுகளுக்கு அனுப்பிவிடுவதன் மூலமாகவா என்பதை ஆராய்ந்து அவைகளுடைய விலையைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் உணவு உற்பத்தி அதிகமாகப் பெருகவேண்டுமானால் நீர்ப்பாசன இலாகா நல்லமுறையில் செயல்படவேண்டும். எங்கள் தொகுதியில் மணிமுத்தாறு அணையானது 20 ஆயிரம் ஏக்கரா



9th December 1959] [Sri G. Gomathisankara Dikshitar]

நிலத்திற்குப் பாசன வசதியைக் கொடுக்கிறது. ஆனால் எல்லா இடங்களிலும் விவசாயம் செய்வதற்கு இடம் இல்லாதபடி அவற்றை நான்கு பாகமாக வைத்து மூன்று பாகத்திற்குத்தான் விவசாயம் செய்யும்படியான ஓரளவு நீர்நிலை இருப்பதினால் அணைக்கு சமீபத்தில் உள்ளவர்களுக்கு வசதி இல்லாது அப்பால் உள்ளவர்களுக்கு அந்த வசதியை அளித்திருக்கிறார்கள். இப்போது மழையும் நன்றாகப் பெய்திருக்கிறது. தண்ணீர் மட்டம் ஏறிக்கொண்டு வருகிறது. ஆகவே எல்லா இடத்திற்கும் விவசாயம் செய்வதற்கு நீர் வசதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பொதுமக்கள் நம்முடைய அரசாங்க நிர்வாகத்தைப்பற்றி என்ன என்ன குறைகள் கூறுகிறார்கள் என்பதையெல்லாம் நன்றாக உணர்ந்து அவைகளை நீக்கிக் கொள்வதற்கு வேண்டிய வழிகளைச் செய்து இன்னும் நல்ல முறையிலே நிர்வாகத்தை நடத்தவேண்டும் என்பதாக வேண்டிக் கொள்கிறேன்.

எனக்குமுன் பேசிய நண்பர் அவர்கள், அரசாங்க இலாகாக்களிலே உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கிடைக்கவேண்டிய நல்ல பலன்கள் அவர்களுக்குக் கிடைக்காதபடி கஷ்டப்படுவதை எடுத்துக் கூறினார்கள். அதை நன்கு கவனிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உணவு அபிவிருத்தி அதிகமாக வேண்டுமானால் உர விநியோகம் இன்னும் நல்ல முறையிலே செய்யப்பட்டு விவசாயிகளுக்குக் கஷ்டம் இல்லாது கிடைக்கக்கூடிய முறையில் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். சமுதாய நலத் திட்ட இடங்களிலே விவசாயிகளுக்கு உரம் நல்ல முறையிலே விநியோகிக்கப்படுகிறது. மற்ற இடங்களில் காலத்திற்குத் தகுந்தபடி, தங்களுக்கு வேண்டிய காலம் பிசகாமல், வேண்டிய உரங்களை விவசாயிகள் பெறமுடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உணவு உற்பத்திக்கு உரம் மூலாதாரமாக இருப்பதால், இதன் விநியோகத்தில் இருக்கும் ஊழல்களை நன்கு கவனித்துக் களைய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தி அதிகமாகப் பெருகவேண்டுமானால், சிறிய நிலச்சுவாந்தார்களுடைய நலனையும் நாம் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களையும் விவசாயிகள் மாதிரியே நாம் கருத வேண்டும். ஐந்து ஏக்கர்களுக்குக் குறைந்துள்ள நிலங்களை வைத்திருக்கக்கூடியவர்கள், அவர்கள் சிறு நிலச்சுவாந்தார்களாக இருந்தாலும், விவசாயிகளைப்போல்தான் அவர்களுடைய நிலைமை இருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டு, நியாய வார மசோதாவிலே அவர்களுக்குச் சில உரிமைகள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், நல்லமுறையிலே அதன் பயனைப் பெறுவதற்கு, சட்டபூர்வமாக அவர்களையும் விவசாயிகள் என்று கருதி அவர்களுடைய நலனுக்கும் அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும்.

நாட்டிலே சோஷலிசக் கருத்தைப் பரப்புவதற்கு உச்ச வரம்பு நல்ல வழியாகும். அதனால், கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். உச்ச வரம்பு கட்டி, அதற்கு வேண்டிய சட்டம் இயற்றப்பட்டு, அதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்க

வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளப் போவதைப்பற்றி மக்கள் மிகவும் மகிழ்ச்சிதான் அடைகிறார்கள். ஆனாலும், சிறிய சிறிய நிலங்களை வைத்திருக்கும் நிலச்சுவான்தார்களும் விவசாயிகள் மாதிரி கருதப்படவேண்டும். விவசாயம் நல்ல முறையிலே நடைபெறுவதற்கு அந்த விவசாயிகளுக்கும் அந்த சிறிய நிலச்சுவான்தார்களுக்கும் உள்ள விவாதங்கள், அபிப்பிராயங்கள் அதன் மூலமாக கோர்ட்டுக்குச் செல்லக்கூடிய விவகாரங்கள் ஏற்படாதபடி உணவு உற்பத்திக்கு அது பயன்படுவதற்கு நல்ல சூழ்நிலையை நமது அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமங்களிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் போக குடிசைத் தொழில்களை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். மகாத்மா காந்தி அளித்துள்ள இராட்டினத்தை வீடுகள் தோறும் பரப்புவதோடு முக்கியமாக அம்பர் சர்க்காவை மிக விரைவாகப் பரப்பவேண்டும். அதற்கு அதிகமான பயிற்சிச் சாலைகளை ஏற்படுத்தி அவை மூலமாக தீவிரமாக கிராமங்களில் அம்மாதிரி குடிசைத் தொழில்களைப் பரப்புவோமானால் ஏழை கிராம வாசிகளுக்கு வேலையில்லாத் திண்டாட்ட நிலை நீங்கி அவர்கள் முன்னேறுவதற்கு இது மிகவும் நல்ல முறையிலே வழிகாட்டியாகும். இதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். கூட்டுறவு இலாகாவாகட்டும், பஞ்சாயத்து இலாகாவாகட்டும் அவர்கள் அதிகாரவர்க்க ரீதியிலே இல்லாதபடி மக்களுக்குச் சேவை செய்வதற்காக இந்த நாட்டினுடைய புனருத்தாரணத்திற்கு ஒரு சிறந்த தொண்டை ஆற்றுவதற்காக உரிய இலாகாக்கள் என்பதை உணர்ந்து நல்ல முறையில் பொதுமக்களுக்கு இந்த இரண்டு இலாகாக்கள் மூலமாகச் சிறந்த சேவை செய்வதற்குள்ள ஆற்றல்களை அளித்து உதவுவதற்கு நமது அரசாங்கம் மிகவும் ஜாக்கிரதையாக வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI P. U. SHANMUGAM: சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றியிருக்கும் உரை குறித்து எனது கருத்துக்களை தெரிவிக்கின்றேன். கவர்னர் உரையில் காரசாரம் இருக்கும் என்றோ, சோகக் கட்டம் நிரம்பி இருக்கும் என்றோ நான் நினைக்கவில்லை. ஆனால், அந்த கவர்னர் உரை, காலக் கண்ணாடியாக, நாட்டின் நிலையை விளக்கக் கூடியதாக இருக்குமென்று நான் எதிர்பார்த்தேன். ஏமாந்தேன் என்றுதான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கவர்னர் அவர்கள் ஆற்றியிருக்கும் உரையில், நாட்டை எதிர்நோக்கியிருக்கும் பல பிரச்சினைகளைப்பற்றிக் குறிப்பிடுகிறேன் என்று குறிப்பிட்டு, பிரச்சினைகளைச் சொல்லி, அவைகளுக்கெல்லாம் முடிவு காணுங்கள் என்றும் சொல்லாமல், இப்படித்தான் சர்க்கார் ஆலோசிக்கிறது என்று வழிவகைகளைக் கூறாமல் அப்படியே விட்டுவிட்டு கவர்னர் உரை முடிந்திருக்கிறது.

பரிகாரம் எது என்பது இந்தச் சர்க்காருக்குத் தெரியாது என்று நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். காரணம், இந்தச் சர்க்காரை நிர்வகிக்கின்றவர்கள் திறமைசாலிகள், புத்திசாலி



மந்திரிகள், பிறரைக் கேலி பேசுவதிலே மிக்க ஆற்றல் படைத்தவர்கள். இவர்களுக்கு இதற்குப் பரிகாரம் தெரியாது என்று என்றால் ஒத்துக்கொள்ள முடியாது. பரிகாரம் தெரிந்தும் மூடி மறைக்கிறார்கள் என்ற குற்றசாட்டை நானும் மூடி மறைத்துப் பயன் கிடையாது; யாரும் அதை மூடி மறைத்துப் பயன் இல்லை. ஏன் பரிகாரம் தேடுவதற்குத் தயங்குகிறார்கள் என்று எனக்குப் புலப்படவில்லை. ஒருவேளை இவர்கள் பரிகாரம் தேடுவதற்கு தங்களுக்குத் தெரியவில்லை என்று சொல்வார்களானால்—நான் சொல்லமாட்டேன், பிறர் சொல்வார்கள்—இந்த அமைச்சரவை பதவியில் இருக்க லாயக்கற்றது என்று. எனவே, அந்த முடிவுக்கு அவர்கள் வரக்கூடாது என்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். எல்லாம் தெரிந்த இவர்களுக்கு நாட்டில் எதிர்நோக்கியிருக்கும் பல பிரச்னைகளைக் குறித்து பரிகாரம் தெரியும். தெரிந்தும் அவர்கள் இதற்கு வழிவகை காணாது காலத்தைத் தள்ளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இவர்கள் மீது சுமத்துகிறேன்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு அம்மையார் குறிப்பிட்டார்கள். இந்த மந்திரிமார்களைப் பார்த்து கோழை என்றும், மத்திய சர்க்காரிடத்தில் சரியாக அவர்கள் வாதாடுவது இல்லை என்றும் நாங்கள் சொல்கிறோம் என்று. மந்திரிமார்களைப் பார்த்துக் கோழைகள் என்று சொல்கிற அளவு நாங்கள் இல்லை. காரணம், நாட்டு மக்களால் தாங்க முடியாத அளவு எவ்வளவு தூரம் விலைவாசிகள் உயர்ந்தாலும் கவலை இல்லை என்ற தைரியத்தோடு இருக்கும் இந்த அமைச்சரவையைப் பார்த்து கோழைகள் என்று சொல்வதற்கு முடியாது; உண்மையிலேயே நாங்கள் சொல்ல மாட்டோம்; அப்படிச் சொல்லக்கூடிய தகுதி எங்களுக்குக் கிடையாது.

கவர்னர் அவர்கள் ஆற்றியிருக்கும் உரையில், நாட்டில் வளரும் பொருளாதார அமைப்பில் விலைகளின் ஏற்றம் தவிர்க்க முடியாதது என்று குறிப்பிட்டிருக்கிறார். வளரும் பொருளாதார அமைப்பில் விலை ஏற்றத்தைத் தவிர்க்க முடியாது என்பதை மனதார நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால், விலைவாசி மட்டும் ஏறிக்கொண்டு போனால், அது ஆபத்தாக முடியும். விலை ஏறுவதோடு, பொருள்கள் உற்பத்தியும் பெருகவேண்டும். அந்தப் பொருள்களை வாங்குவதற்கான சக்தி மக்களுக்கு வளரவேண்டும். வாங்கும் சக்தி மக்களுக்கு வளராது, விலை ஏற்றத்திற்கு ஏற்றவாறு பொருள்கள் உற்பத்தி பெருகாவிட்டால், அது ஆபத்தாக முடியும். உலகத்திலே பல மூலைகளில் நடைபெற்றிருக்கும் புரட்சி வரலாற்றைப் படித்துப் பார்த்தால், நாட்டு மக்களால் தாங்க முடியாத அளவுக்கு விலைவாசி உயர்ந்துவிட்ட காரணத்தால் அங்கங்கே ஏற்பட்டது என்று நினைவுபடுத்த விரும்புகிறேன். 'புரட்சி' என்ற பயங்கரமான பதத்தை அமைச்சர் முன்பு சொல்லிப் பயமுறுத்துவதாக எவரும் கருதக்கூடாது. காரணம்—நான் முதலில் குறிப்பிட்டேன்—இவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள், பயப்படமாட்டார்கள் என்று. அதைத் தெரிந்தும் நான் இவர்களுக்குப் பழைய சம்பவங்களை நினைவுபடுத்தினேன். அவ்வளவுதான்.

[Sri P. U. Shanmugam] [9th December 1959

பொதுவாக, கவர்னர் உரையில் பொருளாதார அமைப்பில் விலை ஏற்றத்தைக் தவிர்க்க முடியாது என்று குறிப்பிட்டிருக்கிற அவருக்கும், இந்தச் சர்க்காருக்கும் ஒன்று நினைவுபடுத்துவேன். தேர்தல் காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவாகச் சொல்லியது "நாட்டு மக்கள் வாட்டம் போக்க நோட்டு அடித்தால் போதாது" என்று. அப்போதெல்லாம் நாட்டில் சுற்றிவந்த அமைச்சர்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் இந்த வாசகத்தைக் கேலி பேசினார்கள். 'அடுக்குத் தொடர் எப்படி இருக்கிறது பார்' என்று கேலி செய்தார்களேயொழிய அதில் பொதிந்திருக்கும் உண்மையை மறந்துவிட்டார்களோ, அல்லது வேண்டுமென்றே மறைத்துவிட்டார்களோ என்பது எனக்குப் புலப்படவில்லை. அப்பொழுதே

12 noon. சொன்னோம், நாட்டு மக்களின் வாட்டத்தைப் போக்க நோட்டு அடித்தால் போதாது என்று. அப்பொழுது கேலியாகப் பேசின நிதி அமைச்சர் உள்ளிட்டு இப்பொழுது மற்றவர்கள் அவர்கள் காதாலே கேட்கின்ற அளவுக்கு பொருளாதார நிபுணர்கள் அத்தனை பேர்களும் சுடச்சுடச் சொல்லுகிறார்கள் . இந்த சர்க்கார் தெளிவு பெறுவதற்கு கூறுகிறார்கள், சர்க்கார் நோட்டை அடித்து விட்டு விலை ஏற்றத்தை ஏற்றிவிட்டது என்று. அப்பொழுது நாங்கள் சொன்னதையே இப்பொழுது பொருளாதார நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இனியாவது சர்க்கார் இதனை உணர்ந்து ஆவன செய்யவேண்டும். திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்ற காலத்தில் நோட்டு அடிப்பது குற்றம் குறை நிறைந்தது என்று சொல்லவில்லை. செய்யவேண்டியதுதான். அளவோடு செய்திருக்க வேண்டும். அளவு மீறிச் செய்த காரணத்தினாலே இந்த விளைவு நாட்டிலே ஏற்பட்டது என்ற குற்றச் சாட்டைச் சுமத்துகிறேன்.

மேலும் வரிகளைப்பற்றி எனக்கு முன் பேசிய அங்கத்தினர் குறிப்பிட்டார். இந்த சர்க்கார் விதித்திருக்கிற வரிகளைப் போல் வேறு எந்த சர்க்காரும் விதித்திருக்குமா என்று உள்ளபடியே ஐயம் உண்டு. காரணம், வரி இல்லாமல் எந்தப் பொருளையும் நாட்டிலே நாம் அனுபவித்தது கிடையாது. குடிக்கிற தண்ணீராக இருந்தாலும் சரி, இருளைப் போக்குகிற விளக்காக இருந்தாலும் சரி, நடக்கிற பாதையாக இருந்தாலும் சரி, சாப்பிடுகிற சாப்பாடாக இருந்தாலும் சரி, உடுக்கின்ற உடையாக இருந்தாலும் சரி, அணிகின்ற மற்ற ஆபரணங்களாக இருந்தாலும் சரி, ஆளும் சர்க்காருக்கு நாம் வரி கொடுக்கிறோம் ஒரு வகையிலே, ஒரு முனையிலே. இந்த சர்க்கார் ஆட்சியில் வரி இல்லாமல் எந்தப் பொருளையும் நாம் அனுபவிக்க முடியாது. ஆனால், ஒன்றே ஒன்று சொல்லலாம். காற்றுக்கு வரி கிடையாது. காரணம் அதற்கு வரி போடுவதற்கு முடியாது. எனவே இன்றைக்கு வரி போடாத பொருளே கிடையாது. மூன்றாவது திட்டத்தில் சுற்றி வர இருக்கின்ற வரிகளை நினைவு படுத்திப் பார்க்கும்போது, உள்ளபடியே பயங்கரமாக இருக்கிறது. இந்த பயங்கரமான சூழ்நிலையில் நாட்டு மக்களை வைத்துவிட்டு, இவர்கள் மூன்றாவது திட்டம் தீட்டும்பொழுது உள்ளபடியே நாம் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. தீட்டப்பட்ட திட்டங்களினால் நாடு எவ்வளவு தூரம் பயன் அடைந்திருக்கிறது என்பதை யோசிக்காமல், மூன்றாவது



9th December 1959] [Sri P. U. Shanmugam]

திட்டத்தை தீட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள் நமது சர்க்கார் என்பதை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாட்டு மக்கள் வாங்கக்கூடிய அளவுக்கு விலைவாசியைக் குறைக்க திட்டம் தீட்டுங்கள். நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் வரிகளை குறைப்பதற்கு திட்டம் தீட்டுங்கள் என்று நான் அமைச்சர் அவையை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கவர்னர் உரையில் 100-க்கு 40 சதவீதம் கூட்டுறவு சங்கங்களில் மக்கள் வந்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். 100-க்கு 90 கிராமங்களில் கூட்டுறவு சங்கங்கள் பரவியிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். 100-க்கு 40 மக்கள்தான் கூட்டுறவு இயக்கத்தில் பங்கு கொண்டிருக்கிறார்கள் என்றால், பாக்கியுள்ள 60 சதவீத மக்கள் கூட்டுறவு இயக்கத்தில் நுழைய மறுக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. கூட்டுறவு இயக்கத்தில் நுழைய விரும்புகின்ற மக்களை ஏற்கனவே கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஈடுபட்டுள்ளவர்கள், அவர்களை உள்ளேவிட அனுமதிக்க மறுக்கிறார்கள் என்பதை மிக வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மாமன்றத்தில் இதை நான் பல முறை வற்புறுத்திய பொழுது, அதற்கான வழிவகைகளைச் செய்வதாகச் சொன்னார்கள். இதுவரையில் வழிவகைகள் செய்ததாக புலப்படவில்லை. விரைவில் வழிவகை காணவேண்டும். அப்படி நாட்டு மக்கள் அனைவரும் கூட்டுறவு ஸ்தாபனங்களில் பங்கு கொள்ளுவதற்கு வழிவகை ஏற்பட்டால்தான், ஊழல்கள் இருக்காது, கூட்டுறவு ஸ்தாபனங்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு வழிவகை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் இந்த சர்க்காருக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

நிவாரணக் கடைகளினால் விலைகள் குறைந்தன என்று அமைச்சர் அவர்கள் தைரியத்தோடும், பெருமையோடும் இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டார்கள். அதே அமைச்சர் இந்த மன்றத்தில் மீண்டும் சொல்லுகிறார்கள் இப்பொழுது நிவாரணக் கடைகளை எடுக்கப்போகிறோம் என்று. அமைச்சர் அவையை பணிவோடு கேட்கிறேன், நிவாரணக் கடைகளை திறந்ததினால் விலை குறைந்தது உண்மையானால், நிவாரணக் கடைகளை மூடவேண்டிய அவசியம் என்ன? ஒரு வேளை அமைச்சர் அவர்கள் சொல்லலாம், சம்பா அறுவடை வந்துவிட்டது, அதனால் நிவாரணக் கடைகளினால் லாபம் இருக்காது, தேவை இருக்காது என்று. ஆனால் தேவை இருக்கும் என்றுதான் சொல்லவேண்டும். காரணம், விலை மீண்டும் உயரத்தான் போகிறது. மிராசுதாரர்களும், வியாபாரிகளும், மீண்டும் பதுக்கல் வேலைகளை ஆரம்பித்து ஆபத்தான நிலைமையில் கொண்டுபோய் விடுவார்கள் என்பதை இந்த சர்க்காருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

முடிக்கும் நேரத்தில் ஒன்று சொல்லுகின்றேன். வட ஆற்காடு மாவட்டத்தில் பஞ்சம் ஏற்பட்டது என்று சொல்லி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் தோழர் அண்ணாமலை அவர்கள் இந்த மன்றத்தில் சர்க்காரின் கவனத்தை

இழுத்துப் பேசினார். சர்க்கார் அமைச்சர், ரெவின்யூ இலாகா அமைச்சர் பஞ்சம் என்பதை தான் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லி நிவாரண வேலைகளுக்காக பல லட்ச ரூபாய் ஒதுக்கினார். திருவண்ணாமலை, போளூர், செங்கம் ஆகிய இடங்களில் செலவழிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு ஒதுக்கிய ரூபாய் அந்த இடத்திலே செலவழிக்கப் பட்டதா என்றால், இல்லை. இந்த டிவிஷனைச் சார்ந்த துணை தண்டல்நாயகம் (ரெவின்யூ டிவிஷனல் ஆபிஸர்) தான் ஐ.ஏ.எஸ். ஆகவேண்டுமென்பதற்காக ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தொகுதியிலேயே அவ்வளவையும் செலவு செய்திருக்கிறார் என்பது குறித்து உள்ளபடியே வருத்தப்படு கிறேன். சர்க்கார் தயவு செய்து இதை கண்காணிக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் எடுத்துப் பேசிய அந்த இடங்களில் செலவிடப்படவில்லை. வேறு பகுதியிலே செலவிடப் பட்டிருக்கிறது. அந்தத் தொகுதியில் செலவு செய்ததற்காக நான் குற்றம் சொல்லவில்லை. என் தொகுதியிலோ அல்லது நண்பர் அண்ணாமலை அவர்களின் தொகுதியிலோ செலவழிக்க வேண்டுமென்பதற்காக எடுத்துச் சொல்லவில்லை. அண்ணாமலை அவர்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக எடுத்துச் சொல்லிய இடங்களில் செலவழிக்கப்படாத காரணம் புலப்பட வில்லை. இது குறித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, கவர்னர் உரை நாம் எல்லோரும் திருப்திப்படக்கூடிய அளவில் இல்லை என்று இறுதியில் சொல்லி, சர்க்காரை விலைவாசியைக் குறைப்பதற்கு முயற்சி செய்யுங்கள், வரியைக் குறைப்பதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையைப்பற்றிப் பலபேர்கள் பல கருத் துக்களை கவளியிட்டார்கள். அந்த உரை காலத்தின் கண்ணாடியாக இல்லை என்று குற்றம் சாட்டப்பட்டது. கருப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்ப்பவர்களுக்கு அது காலக் கண்ணாடியாக காட்சி அளிக்காதுதான். உண்மையிலேயே நாட்டின் நிலையை பிரத்தியட்சமாக படம் பிடித்து காட்டுகிறது கவர்னர் உரை என்பதை யாரும் மறுக்க முடியாது. விலைவாசி ஏற்றத்தைப் பற்றி கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார் என்றால், ஆளும் கட்சியினர் விலைவாசி ஏற்றத்தை மறைப்பதற்கோ, மறுப்பதற்கோ ஆசைப்படவில்லை என்பதைத்தான் குறிப்பிடுகிறது. விலைவாசி குறையவேண்டும், நாட்டில் மக்களின் குறைகளை நீக்கும் அளவுக்கு நாம் இயங்கவேண்டும், நாட்டில் உற்பத்தி பெருகவேண்டும் என்ற அவா ஆளும் கட்சிக்கு உண்டு. திறமைசாலிகள் என்று சொல்லிக் கொள்ளுபவர்கள்தான் பரிகாரத்தை பதுக்கிவைத்திருக்கிறார்கள். அவர்களிடத்திலே பரிகாரத்தைச் சொல்லுவதற்கு வழி இல்லை என்ற காரணத்தினால், நாம் பரிகாரம் காணவில்லை என்பதை சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். பரிகாரம் தேடக்கூடிய ஆற்றல் அவர்களுக்கு ஆளும் கட்சியைவிட அதிகமாக இருக்கு மாயின், உண்மையிலேயே அவர்களுக்கு மக்கள் பேரில் அக்கரை இருக்குமாயின் நல்ல பரிகாரத்தை அவர்கள் எடுத்துச் சொன்னால்,





உடனே அதை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். நாங்கள் பதுக்கி வைத்திருக்கும் பரிகாரத்தைவிட, நீங்கள் சொல்லப் போகும் பரிகாரம் உடனடியாக விலை ஏற்றத்தை குறைக்க உதவும் என்றால், நாட்டு மக்களுக்கு பயன்படக்கூடியது என்றால், அந்தப் பரிகாரத்தைச் சொல்லுவதற்கு உடனடியாக முன்வர வேண்டும். பரிகாரத்தை அவர்கள்தான் பதுக்கி வைத்துக்கொண் டிருக்கிறார்களே தவிர, ஆளும் கட்சி பரிகாரத்தை பதுக்கிவைத் திருக்கிறார்கள் என்று சொல்லுவதற்கு காரணமே இல்லை. ஆளும் கட்சியினர் எவ்வளவு துரிதமாக இயங்க முடியுமோ அவ்வளவு துரிதமாகத்தான் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். உணவு விலை ஏறுகிறது என்று சொன்னவுடனேயே நியாய விலைக் கடைகளை திறந்தார்கள். என்ன செய்யமுடியுமோ, அவைகளையெல்லாம் உணவு அமைச்சர் தயங்காது செய்து கொண்டுதான் இருக்கி றார்கள். குறுவை அரிசியை தமிழ் நாட்டிலே சாப்பிடுகிறவர்கள் குறைவு, அதை கேரள நாட்டிலே மலையாளிகள்தான் அதிகமாக சாப்பிடுகிறார்கள். அதன் காரணமாகத்தான் குறுவை அரிசியை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு தொல்லை கொடுக்கவேண் டாம் என்று நினைத்து குறுவை கொள்முதலை நிறுத்தினார்களே ஒழிய, கண்ணை மூடிக்கொண்டு நியாய விலைக்கு அரிசி வரக்கூடாது என்ற காரணத்தினால் அல்ல. நகர்புற மக்களைத்தான் இந்த விலை வாசி அதிகமாக பாதிக்கிறது. 100-க்கு 75 பேர்கள் விவசாயிகள். முக்கால் பங்கு விவசாயிகள் அவர்கள் உற்பத்தி செய்ததை அவர் களே உண்கிறார்கள். ஆகவே, விலை ஏற்றம் அவர்களை பாதிப்பது கிடையாது. 'அர்பன் பாபுலேஷன்', அதாவது நகர் புறங்களிலே இருக்கும் 100-க்கு 25 பேர்களைத்தான் விலை ஏற்றம் பாதிக்கிறது. அதே சமயத்தில் நெல் விலை குறைகிறது என்றால் விவசாயிக்கு வருத்தமாக இருக்கிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் ஒரு மூட்டை நெல் 21 ரூபாய் என்றால் விவசாயி மகிழ்ச்சி அடைகிறான். இதுவரை ஓலை மாற்றாத சாதாரண விவசாயியிடம் இன்றைக்கு பங்களா எழுப்பலாம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு பணம் இருக்கிறது. அதனால் அவன் மகிழ்ச்சி அடைகிறான். நெல் விலை குறைகிறது என்றால் அவன் மனதில் வருத்தம் தோன்றுகிறது. அதே சமயத்தில் நகர்புறங்களிலுள்ள தொழிலாளிகள் பெறுகின்ற 1-4-0 ரூபாய் ஊதியத்திலே அதிக விலை கொடுத்து அரிசி வாங்குவது என்றால் யோசிக்கிறார்கள். ஆகையினால்தான் நியாயவிலைக் கடை களை தொடர்ந்து நடத்துவதும், மேலும் அதிகமான கடைகள் திறப்பதும் அவசியமாக இருக்கிறது.

பக்கிங்ஹாம் கர்நாடிக் மில் விம்கோ நெருப்புப்பெட்டி தொழிற் சாலை போன்ற பெரிய தொழிற்சாலைகளில் அவர்களே கூட்டுறவு சங்கங்கள் மூலம் தொழிலாளிகளுக்கு உணவு தானியங்களை அதிக லாபம் இல்லாமல் விநியோகம் செய்கிறார்கள். ஒரு சில ஆண்டு களுக்கு முன்னால் ரயில்வேயிலும் தொழிலாளிகளுக்கு உணவு தானியங்களை அவர்களே விநியோகம் செய்துகொண்டிருந்தார்கள். அம்மாதிரி பெரிய தொழிற்சாலைகளும், சர்க்காரும் தங்களுடைய ஊழியர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிக லாபம் இல்லா மல் உணவு தானியங்களை வாங்கி விநியோகம் செய்தால், நகர்புறங் களிலுள்ள தொழிலாளிகளை ஓரளவுக்கு விலைவாசி அதிகமாக

பாதிக்காது என்று நினைக்கிறேன். இந்தப் பரிகாரத்தை யோசித்துப் பார்க்கவேண்டும். மேலும் இதை துருவிப் பார்த்து அதற்கு வேண்டிய வழிகளை சீக்கிரம் செய்தால்தான் குற்றச்சாட்டிலேயே காலத்தை ஓட்டுகின்ற கொள்கையற்ற எதிர்க்கட்சிகள் அதிகமாக வாலாட்ட முடியாது. உணவு உற்பத்தியைப் பெருக்குகிறோம். எவ்வளவு துரிதமாகவும், அதிகமாகவும் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டு அந்த முறையிலே போய்க்கொண்டு இருந்தாலும்கூட, எதிர்பார்க்கும் அளவுக்கு நாம் வெற்றிகரமாக இல்லை. அது மறுக்க முடியாதது. அதை மறைக்காமல்தான் கவர்னர் உரையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தியில் கவனம்செலுத்தும்போது மிகவும் சிறந்ததாக இருக்கக்கூடியது பசும் தழை உரம். ரசாயன உரங்களையே எதிர்பார்க்கக்கூடாது. சிறு சிறு நிலச்சுவாந்தார்களுக்கு அரசாங்கம் புறம்போக்கு நிலங்களைக் கொடுத்து, தழை உரம் உற்பத்தி செய்வதற்கு, நல்ல விதைகளையும் கொடுத்து, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தால், அவர்களுக்குத் தேவையான தழை உரங்களை பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். நாமும் தழை உரங்களை வளர்த்தோம் என்ற பெருமைக்கு ஆளாக முடியும். அதுவும் சிறந்த உரமாக இருக்கும். அதைப்போன்றே குப்பை எருவும். இப்பொழுது பஞ்சாயத்து பிளாக்கு யூனியன்களிலே இதை ஏற்படுத்தியிருக்கிறோம். குப்பை எருவின் மதிப்பு அவ்வளவாக உணரப்படவில்லை. நகரப் புறங்களிலே உள்ள குப்பைகளை அங்கேயும், இங்கேயும் கொண்டுபோய்க் கொட்டிவிடுகிறார்கள். நல்ல எருவாக வேண்டும் என்று ஆசைப்பட்டு, குப்பைகளைக் கொட்டி விட்டால் மட்டும் போதாது. குப்பையைக் கொட்டி, அதன் மேல் சாணத்தைப் போட்டு, தண்ணீரைத் தெளித்து, அதை மக்க வைத்து, நல்ல முறையிலே பண்படுத்தினோமானால், எரு பயன்படக் கூடியதாக ஆகும். அந்த முறையிலே, பஞ்சாயத்து ப்ளாக்கு யூனியனிலே அதற்கு ஆதரவு கொடுத்து, குப்பை எருக்களைத் தக்க முறையிலே சேகரித்து விவசாயிகளுக்கு விநியோகிக்க நாம் வாய்ப்பு கொடுத்தால், எல்லோரும் ரசாயன உரங்களையே எதிர்பார்த்துக்கொண்டு ஏக்கம் கொள்ளாமல், வேண்டிய அளவு உற்பத்தி பெருக ஏதுவாகும்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறது. உச்ச வரம்பு ஏதுவானாலும் இருக்கலாம். வேண்டாம் என்று சொல்லவில்லை. உச்ச வரம்புக்கு மேலும் எடுக்கப்படும் நிலங்களை சாதாரணமாக இன்றைக்கு, நிலம் இல்லாதவர்களுக்கு கொடுக்கிறோம் என்று சொல்கிறோம். இன்றைக்கு 100-க்கு 66 விவசாயிகள், 2 அல்லது 3 ஏக்கருக்கு குறைவாகத்தான் சொந்தமாக வைத்திருக்கிறார்கள். அதற்குமேல் கிடையாது. சிறு சிறு மிராசுதார்கள், சிறு சிறு நிலச்சுவாந்தார்கள், அன்எகனாமிக் ஹோல்டிங்ஸ் என்று சொல்லுகிறோமே, அம்மாதிரி தக்க வருவாய் பெறமுடியாத அளவுக்கு குறைந்த அள நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள், மேலும் தங்கள் நிலத்தோடு அதிகமாக வாங்கி, பெருக்கிக்கொள்வதற்கு, நாம் வாய்ப்பு அளிக்கவேண்டும். நம் நாட்டிலே பெரிய பெரிய நிலச்சுவாந்தார்கள் மிகக் குறைவு; அன்எகனாமிக் ஹோல்டிங் வைத்திருப்பவர்கள் அவர்களுக்குக் கீழே; அதற்கும் கீழே





குத்தகைதாரர்கள் வருகிறார்கள்; அதற்கும் கீழே நிலம் இல்லாதவர்கள் வருகிறார்கள். நாம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் செய்யும்போது, அதிக நிலம் ஒரு மனிதன் கையிலே குவிந்து இருக்கக்கூடாது என்றாலும், உணவு உற்பத்தி செய்ய வேண்டிய அளவுக்கு இருக்க வேண்டுவது அவசியம். உச்ச வரம்பு கொண்டு வரும்போது, நிலம் இல்லாதவர்களுக்கு கொடுப்பதைத் தடுக்கவில்லை. ஆனால், 2 அல்லது 3 ஏக்கருக்குக் கீழே நிலம் வைத்திருக்கும் சிறு நிலச்சுவாந்தார்களுக்கு நிலக் கிழார்களுக்கு, உச்ச வரம்பை ஒட்டி அந்த அளவுக்கு வாங்கக்கூடிய வாய்ப்புத் தரக் கடமைப் பட்டிருக்கிறோம். மேலும் இருக்கும் நிலங்களை எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு வாங்குவதற்கு—அவைலபிலிடி ஆப் லாண்ட்—நிலம் அரிதாகி விடும். அப்படி நிலம் அரிதாகி விட்டால் விலை அதிகமாகி விடும். விலை அதிகமாக ஏறி விட்டால், 2, 3 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு வாய்க்கும் போதாமல், வயிற்றுக்கும் போதாமல் அவதிப்படுகிறானே அவனுக்கு நிலம் கொடுப்பது சங்கடமாகிவிடும்.

டெனண்ட்ஸ் பார்மிங் கட்டாயமாக கூட்டுறவு முறையிலே கொண்டுவர வேண்டும். இப்பொழுது நம்மிடம் இருக்கும் சட்டப்படி, டெனண்ட்டுகளை வெளியேற்ற முடியாது. ஆனால், பண்ணை கல்டிவேஷன் வைத்திருக்கிறார்களே, 2, 3 ஏக்கர்களைக் கொண்டு, அன்எகனாமிக் ஹோல்டிங்களாக வைத்திருக்கிறார்களே, அவர்களுக்கு மேலும், நிலம் கிடைக்க வசதி செய்து, அந்தத் தொகையை அவர்கள் 20 ஆண்டுகளிலே கொடுக்கும் முறையில், கூட்டுறவு சொஸைடி மூலமாக கடன் வசதி கொடுத்து, அவர்கள் உச்ச வரம்பு அளவுக்கு வராவிட்டாலும், எகனாமிக் ஹோல்டிங்காக வைத்திருக்கும் அளவுக்குக் கொண்டுவரவேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்னால் இதை அமைச்சரிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று பெண்களுக்கும் சொத்து உரிமை உண்டு. அந்த சொத்தை ஒரு அப்பா பிள்ளைக்கும், பெண்ணுக்கும் பங்கு போட்டுக் கொடுக்கும் அளவுக்கு இன்றைக்கு உரிமை இருக்கிறது. ஆனால், நிலத்தைப் பெண்களுக்கு எழுதிக் கொடுத்தால், அதைத் தடுக்கக் கூடாது. பெண்களும் வாழப் பிறந்தவர்கள்தான். அவர்களுக்கும் சொத்துரிமை உண்டு. ஆண்களைவிட சொத்தைப் பாதுகாப்பதில் ஆற்றல் மிகுந்தவர்கள் பெண்கள். (சிரிப்பு). ஆகையால் அதைத் தடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, உச்ச வரம்பு வரும்போது, பெண்களுடைய பங்கைத் தடுக்காமல், ஆண்களுக்கு மாத்திரம் இருந்தால் போதும் என்றும், பெண்களுக்குத் தேவையில்லை என்றும் இல்லாமல் பெண்களுக்கும் ஒரு சலுகை காட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் இரண்டு மூன்று யோசனைகளைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

கிருஷ்ணா-பெண்ணாற்றை இணைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு முன்பாக, கங்கை-காவேரி இணைப்பைக் கவனிக்க வேண்டும். இதற்கு முன்னால், டாக்டர். ஸி. பி. ராமசுவாமி அய்யர்

[Srimathi T. N. Anandanayaki] [9th December 1959

திட்டமிட்டார்கள். கங்கையையும் காவேரியையும் இணைத்தால் விவசாயத்திற்கு மாத்திரமல்லாமல், நாவிகேஷன், போக்குவரத்துக்கும், வியாபாரத்திற்கும் உதவியாக இருக்கும் என்று திட்டமிடப்பட்டது. ஒரு மாநிலத்திற்கும், அடுத்த மாநிலத்திற்கும் போக்குவரத்துக்குச் சாதகம் ஏற்படும். அந்தத் திட்டத்தை இன்றைக்கே ஆரம்பித்தால், இன்னும் சில வருஷங்களிலாவது நன்மை ஏற்படும். அது இந்தியாவிற்கே செல்வம் தருவதாக விளங்கும் என்று அமைச்சரவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிழக்குக் கடற்கரையோரமாக ஒரு பெரிய ரோடு போடும் திட்டம் வேண்டும். சென்னை முதல், ராமேஸ்வரம் வரை கடற்கரை ஓரமாக ரோடு வழி இருந்தால் நல்லது. இப்பொழுது, பம்பாய்-கன்னியாகுமாரி வெஸ்டர்ண் கோஸ்ட் ரோடு இருக்கிறதே, அதேபோல், கிழக்குக் கடற்கரையோரமாக ஒரு ரஸ்தாவைப் போடுவது, மக்களுக்குப் பயன்படும். அது மட்டுமல்ல. தஞ்சை, ராமநாதபுரம் மாவட்டங்களிலே ரோடுகளை விஸ்தரிப்பதால், வியாபாரப் பெருக்கம் இருக்கும். மக்களுக்கு போக்குவரத்து வசதி அதிகமாகக் கிடைக்கும்.

**DEPUTY SPEAKER**: The hon Member's time is up.

**SRI C. N. ANNADURAI**: கனம் அங்கத்தினர் உச்ச வரம்பு அளவுக்கு நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றார்கள். அது சர்க்காருடைய திட்டமா என்று கேட்கிறேன்.

**SRIMATHI T. N. ANANDANAYAKI**: என் கருத்தைச் சொன்னேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: நான் விடை அளிக்கும் போது இதெல்லாம் வரும்.

**SRI P. S. CHINNADURAI**: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். அங்கத்தினரவர்கள் பேசும்போது, "எதிர் கட்சிக்காரர்கள் வாலை ஆட்ட முடியாது" என்று சொன்னார்கள். அந்தப் பதம் இந்த சபையின் கௌரவத்திற்கு உகந்ததா? அப்படி உகந்தது இல்லையென்றால், உதவி சபாநாயகர் அவர்கள், அந்த வார்த்தைகளை சட்டசபைக் குறிப்புகளிலிருந்து எடுத்து விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER**: ப்ரொசீடிங்சைப் பார்த்துச் சொல்லுகிறேன். அவர்கள் சொன்ன அந்த டைமிலேயே அப்ஜக்ஷன் ரெயிஸ் பண்ணியிருக்க வேண்டும்.

The hon. Member should have raised objection then itself. I shall look into the proceedings. If it is irrelevant I shall certainly remove it.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எப்படியும் வால் நமக்குக் கிடையாது. அந்த "வாலாட்டுதலை" கனம் அங்கத்தினர் அவர்களே வாபஸ் வாங்கிக் கொள்ளலாம்.



9th December 1959]

**SRI P. S. CHINNADURAI**: சார், இது மிகவும் முக்கியமான பிரச்னை. இம்மாதிரிப் பதங்களைப் பரிமாறிக் கொள்ளுவதில் கனம் அமைச்சரவர்களுக்கு விருப்பமானால், எனக்கு ஆட்சேபமில்லை.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: நான் அவர்கள் வாபஸ் பெறலாம் என்றுதான் சொன்னேன்.

**SRI C. N. ANNADURAI**: அமைச்சயவர்கள் ஆற்றிய யோசனைப் படி அவர்கள் வாபஸ் வாங்கிக்கொண்டால், மற்றவர்கள் அந்த வார்த்தைகளை உபயோகிக்காமல் இருக்கலாம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: Mr. Deputy Speaker, as far as my memory goes, 'wagging the tail' is not an unparliamentary expression. There is nothing unparliamentary in it. If you still feel, it is unparliamentary, I shall withdraw. But, let the hon. Member know what it is.

DEPUTY SPEAKER: I think the hon. Member has withdrawn it.

SRI P. U. SHANMUGAM: It may be expunged.

DEPUTY SPEAKER: I shall do it. You need not worry about it.

* **SRI T. R. RAMAMIRTHA THONDAMAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் தன் உரையிலே, சட்டம் ஒழுங்கு அமைதிபற்றி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே, மாகாணம் பூராவையும் எடுத்துக்கொண்டு பார்க்கும் போது, மொத்தமாக சட்டமும், ஒழுங்கும் நன்கு பரிபாலிக்கப் பட்டு வந்திருக்கிறது என்பது பெருமைப்பட வேண்டிய விஷயம். அதைப் பார்க்கும்போது, அந்த இலாகாவில் உள்ளவர்களையும், அந்த இலாகா அமைச்சரையும் வெகுவாகப் பாராட்ட வேண்டியது அவசியம் என்ற போதிலும் போலீஸ் இலாகா கீழ்தர அதிகாரிகளான கான்ஸ்டபிள்கள் விஷயம் கவலைக்கிடமானது என்பதையும் அந்த இலாகாவில் இருக்கும் அடிப்படை நிர்வாகஸ்தர்களான அஸ்திவாரமாக இருக்கும் போலீஸ்காரர்களின் சம்பளக் குறைவு மிகவும் வருந்தக்கூடியது. குடியிருப்பு வீடு கஷ்டங்கள் இன்னும் வாழ்க்கை வசதி கஷ்டங்கள் இவற்றைப் போக்கி அமைச்சர் அவர்கள் போலீஸ்காரர்களின் சம்பளத்தை இப்போதுள்ள தேவையை அனுசரித்து சம்பளத்தை அதிகப்படுத்த ஒரு பரிகாரம் காண வேண்டும் என்று தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுடைய நிலைமை மிகவும் கஷ்டமான வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது என்பதை வலியுறுத்தி கூறுகிறேன்.

உணவு விலையேற்றத்தைப் பற்றியும், கட்டுப்பாடு பற்றியும் பல அங்கத்தினர்கள் பேசினார்கள். உணவு தானிய விலை விஷம் போல் ஏறி, நகரப்புரங்களில் உள்ளவர்களுக்கு வெகுவாக கஷ்டத்தைக் கொடுத்திருப்பதாகவும் கூறினார்கள்.

உணவு விலை அதிகபட்டதன் காரணமாகவும், நியாய வார பாதுகாப்புச் சட்டம் வந்த பிறகும் பல விவசாயிகள் நிலங்கள் வாங்க முனைந்து கொண்டிருக்கிறார்கள் இப்பொழுது கிராமங்களில். இந்தச் சட்டங்கள் அவர்களுக்கு எவ்வளவோ நன்மைகளை அளித்திருக்கின்றன. இப்படிச் சட்டங்களைக் கொண்டு வந்ததற்கு அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். ஆகவே, உணவு விலை விஷயத்தில் கவனித்து முடிவு காண கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கவர்னர் அவர்கள் உணவு விலை ஏற்றத்தைப்பற்றியும், உணவு உற்பத்தியைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். உணவு விலை விஷம்போல் ஏறியிருப்பதால் நகர பகுதி மக்கள் கஷ்டத்தை அனுபவித்தாலும் கிராம பகுதிகளில் சில சமுதாயம் முன்னேற்ற மடைந்து வருகிறது. இன்னும் பல நடவடிக்கைகளும் எடுத்து நிறைவேற்ற அரசாங்கம் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கும் அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருந்தபோதிலும் இன்னும் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறது. உணவு உற்பத்தியில் சில குறைபாடுகள் இருந்துகொண்டுதானிருக்கிறது. அநேக இடங்களில் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. சில இடங்களில் உணவு உற்பத்திக்கு இயற்கையே சாதகமாக இருந்துவருகிறது. மழை பெய்திருப்பதால் வரண்டப் பிரதேசங்களுக்கு சௌகர்யம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அங்கே ஏற்கெனவே பாசன வசதிகள் இருக்கின்றன, அவைகள் இயற்கையாகவே ஏற்பட்டன. அங்கே இப்பொழுது மழை பெய்ததன் காரணமாக ஒரு நன்மையும் ஏற்படாமல் எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாகிவிட்டது. பல பயிர்கள் அழிந்து போயின. மற்ற இடங்களுக்கு இந்த மழை சௌகர்யமாக இருந்தாலும் தஞ்சை ஜில்லா பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு அதிகப்படியான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பல பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே உணவு உற்பத்தி முறையை எடுத்துக்கொண்டால் விவசாயத் துறையில் எடுத்துக்கொண்டால் அங்கே அநேக இடங்களில் மராமத்து செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்கு அதிகப்படியான பணமும் செலவு செய்து கவனமும் செலுத்த வேண்டியதாக இருக்கிறது. சில இடங்களில் வடிகால் வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த இடங்களுக்கெல்லாம் வடிகால் வசதி செய்து கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். உணவு உற்பத்திக்கு வடிகால் வசதி ஒரு உறுதுணையாக இருக்கிறது. விவசாயத்திற்கு பாசனம் வடிகால் முக்கியம். அதற்காக மராமத்து வேலைகளை கண்ட்ராக்ட் முறையில் செய்யப்படுகிறது. அதையும் கொஞ்சம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட கண்ட்ராக்ட் முறை இப்பொழுது நல்ல முறையில் இல்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டமெல்லாம் கண்ட்ராக்டர்கள் செய்து கொண்டிருக்கும் வேலையினாலும் இதற்கு முன் செய்த வேலையினாலும்தான் இப்பொழுது இப்படிப்பட்ட





பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். ஆகவே அதை சர்க்கார் உடனடியாக பரிசீலனை செய்யவேண்டும். ஐந்து வருஷங்களுக்கு முன்னால் கண்ட்ராக்டர்கள் செய்த வேலைகளையெல்லாம் எடுத்துப் பார்க்கவேண்டும். அப்பொழுது அவர்களால் கட்டிய கட்டிடங்கள் இப்பொழுது எந்த அளவில் உறுதியாக இருக்கிறது என்பதைப் பார்த்து அதில் எந்தெந்த கண்ட்ராக்டர்கள் வேலை உறுதியானது, எது உறுதியற்றது என்று பார்த்து நல்ல முறையில் கட்டாத கண்ட்ராக்டர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களை கண்ட்ராக்ட் லிஸ்டிலிருந்தே எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதோடு எந்த கண்ட்ராக்டர் செய்த வேலையில் உறுதியிருக்கிறதோ அவர்கட்கு ரேட்டுகளை அதிகப்படுத்தி டெண்டர் முறையில்லாமல் எஸ்டிமேட் ரேட்டுக்கே வேலை கொடுப்பதோடு அவர்கட்கு நல்ல வசதிகள் ஏற்படவும் செய்யவேண்டும்—மேலும் தண்ணீர் வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே மராமத்து இலாகா கண்ட்ராக்டர்கள் செய்த வேலையை பரிசீலனை செய்து பார்த்து கட்டிடங்கள் எல்லாம் நல்ல முறையில் இருக்கிறதா, வடிகால் வசதியெல்லாம் நல்ல முறையில் இருக்கிறதா என்பதை முன் கூட்டியே பார்த்திருந்தால் இப்படிப்பட்ட சேதமெல்லாம் வந்திருக்காது. தண்ணீர் வருவதற்கு முன்னதாகவே கட்டுவதற்கு எஸ்டிமேட் தயார் செய்து, செய்த வேலைகளை அளந்து முடிக்க வேண்டும். தண்ணீர் வந்து வேலை செய்வதென்பது கூடாது. ஆகவே, மராமத்திலாகாவில் உள்ள ஊழலையும், கண்ட்ராக்டர்கள் ஊழலையும் கவனிக்க வேண்டும்—மேலும் விவசாயத்தில் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்றால் விவசாயிகள் வெள்ளாண்மை செய்வதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. விவசாய பாதுகாப்புச் சட்டம் அவர்களுக்குக் கொண்டு வந்த போதிலும், நியாய வார சட்டங்களை அவர்களுடைய சௌகர்யத்திற்குக் கொண்டு வந்த போதிலும் பல சலுகைகளை அவர்களுக்குக் கொடுத்திருந்தபோதிலும் நீர்பாசனம் செய்வது வரப்புகளை அமைப்பது, உரமிடுவது போன்றவைகளை தொடர்ந்து செய்யும்போது அவர்களுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. சாகுபடி செய்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. சுதந்திரமில்லாத இப்படிப்பட்ட கஷ்டங்களுடன் விவசாயிகளுக்கு குடியிருப்பு வசதி இல்லாதது மனைக்கட்டு வசதி இல்லாதது மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயம். அவர்களுக்கு குடியிருக்க சொந்தமான நிலம், மனை. பெரும்பகுதியினருக்கு கிடையாது. அவர்கட்கு குடியிருக்கும் இடம் சொந்தமாக்கபட வேண்டும். எவ்வளவு விவசாயம் செய்தாலும் அவர்களுக்கு பல சிக்கல்கள் இருக்கின்றன. இதனுடன் அவர்களுக்கு நிலச் சொந்தக்காரர்கள் பல சிக்கல்களை உண்டுபண்ண விரும்புகிறார்கள். ஆகவே, விவசாய தொழிலாளர்களுக்கும் கூலி நிர்ணயம், குடியிருப்பு மனைக்கட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும். அதற்கு வேண்டிய உத்திரவாதம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இப்பொழுது நாம் நிலச் சீர்திருத்தம் செய்துகொண்டு வருகிறோம். அந்த சமயத்தில் அவர்களுக்கு மனைக்கட்டு வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. விவசாயிகளுக்கும் உழவர்களுக்கும்

[Sri T. R. Ramamirtha Thondaman] [9th December 1959

குடியிருப்பு அவசியம். மடாலய தேவஸ்தான மற்ற இதர ஊதுவரயிருந்தாலும் குறைந்தது 20 செண்டு நிலம் சுதந்திரமாக சொந்தமாக உழவர்களுக்கு குடியிருப்பு மனைக்கட்டுகள் சொந்தமாக்கப்பட வேண்டும். அது மிகவும் அவசியம். மேலும் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கொண்டுவரக்கூடிய அமெரிக்க "போர்டு பவுண்டேஷன்" திட்டத்தின்கீழ் கொண்டு வரக்கூடிய சாதனங்களையெல்லாம் இதர ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். இது தஞ்சை ஜில்லாவிற்குப் போய்விடுமோ என்று பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். சென்ற காலத்திலிருந்தே சோறு கொடுத்த நாடு சோழ நன்னாடு என்று தஞ்சையைப்பற்றி பல கருத்துக்களை அறிந்த பெரியோர்களும், அறிஞர்களும், பட்டதாரிகளும் தஞ்சை ஜில்லாவைபற்றி நன்றாக அறிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும் தஞ்சைக்கு கிடைக்கும் நன்மையை குறை கூறுவது நன்றி மறப்பதாகும். இப்பொழுது உள்ள சூழ்நிலையில் கோயம்புத்தூரை எடுத்துக்கொண்டால் ஏக்கர் ஒன்றுக்கு 45 கல கண்டுமுதல் ஆகிறது. தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அதிகபட்சம் ஏக்கர் ஒன்றுக்கு 36 கலத்திற்கு மேல் சராசரி போனதில்லை என்று அறியலாம். அந்த நிலைமையில் தஞ்சை ஜில்லா இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கிறது. இயற்கையிலேயே தஞ்சை ஜில்லா விவசாய வளம் பெற்றிருக்கிறதே தவிர அதற்கு புதிய சத்து, வாய்க்கால், வடிகால், நல்ல உரம், வேலை செய்ய பொருளாதாரம் இல்லை. ஆகவே, மேற்படி போர்டு பவுண்டேஷன் திட்டத்தை தஞ்சைக்கே கொடுக்க வேண்டுமென்றும், அதை மற்ற ஜில்லா அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதைப்பற்றி கவர்னர் தெளிவாக்கியிருக்கிறார். விவசாயக் கடன் கொடுப்பதில் சில மாறுதல்கள் அவசியமாக செய்ய வேண்டியதாக இருக்கிறது. கூட்டுறவு சென்ட்ரல் பாங்குகள் மூலமாக விவசாயக் கடன் வாங்குவது என்றால் அதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்று பல அங்கத்தினர்கள் தெரிவித்துவிட்டார்கள். கிராமங்கள் தோறும் சென்று பார்த்தால் விவசாயிகள் இந்தக் கடன்களை வாங்குவதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது தெரியவரும். ஆகவே இப்பொழுதுள்ள முறையை மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. கடன் வாங்குவதற்குள்ள கஷ்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஏழை விவசாயியாக இருந்தாலும் சரி, தர்ம ஸ்தாபன நிலங்களை உழக்கூடியவனாக இருந்தாலும் சரி அவனுக்கு விவசாய உரிமை இருக்கும்படியான அளவில் அவனுக்கு விவசாய உரிமை வழங்கப்பட வேண்டும். கிராமங்களில் பெரும்பான்மையாக உள்ளவர்கள் விவசாய உழவர்கள்தான். அவர்கள் நிலம் உள்ளவர்களாக இருந்தாலும் சரி நிலமற்றவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் எல்லோருக்கும் சாகுபடி உரிமை இருக்க வேண்டும். அவர்கள் கடன் பெறுவதற்கு வேண்டிய வசதி இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய வாய்ப்புகள் இவர்களுக்கு இருக்க வேண்டும். விவசாயம் செய்வதற்கும் இதர கைத்தொழில் செய்வதற்கும்



9th December 1959] [Sri T. R. Ramamirtha Thondaman]

விவசாயத்திற்கு என்று அமைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஸ்தாபனமாக இருந்தாலும் சரி அவைகள் எல்லாம் ஒரே மாதிரியாக விவசாயிகளுக்குக் கடன் வசதி அளிக்கக்கூடிய நிலைமையில் இருக்க வேண்டும். அவர்களுக்குக் கடன் கிடைக்கும் முறையில் கூட்டுறவு மூலம் கடன் கொடுக்கும் முறையை மாற்றி அமைக்க வேண்டும். உற்பத்தி பெருக்கினால் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருந்தாலும் விவசாயிகளுக்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக கடன் பெறுவதாக இருந்தால் பல சிக்கல்கள் இருக்கின்றன. அப்படி இல்லாமல் அந்தச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டியதாக இருக்கிறது. சட்டத்தைத் தக்க முறையில் திருத்தி அமைக்க வேண்டும். கூட்டுறவு ஸ்தாபனங்களை இனிமேல் அமைக்கும்போது அதிலுள்ள சிக்கல்களை எவ்வளவு தூரம் மாற்றி அமைக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் மாற்றி அமைக்க வேண்டும். தேவஸ்தான நிலங்களாக இருந்தாலும் சரி, மடாலயங்களுக்குச் சொந்தமான நிலங்களாக இருதாலும் சரி, தர்மத்தின் பெயரால் நிலங்கள் இருந்தாலும் சரி, அவைகளின் பேரில் கடன் கொடுக்க முன்வர வேண்டும். கிராமந்தோறும் கிராம நாணய சங்கமும், கிராமக் கூட்டுறவு சாகுபடி சங்கமும் அமைத்து அதன் மூலம் கடன்தர வசதி செய்ய வேண்டும். அதிலுள்ள சிக்கல்களை மாற்றி அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை [illegible]க்கொள்ள வேண்டும். அந்த முறையில் கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நில உச்ச வரம்பு கட்டுவது சம்பந்தமாக பல அங்கத்தினர்கள் நீலிக் கண்ணீர் வடித்தார்கள். இப்பொழுது எவ்வளவோ நிலங்கள் பல பித்தலாட்டங்கள் மூலம் மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே வரும் நிலச் சீர்திருத்த சட்டம் உழவர்களுக்கும், உழவுத் தொழில் செய்பவர்களுக்கும் நல்ல பயன் தரும் முறையில் இருக்க வேண்டும்.

(மணி அடிக்கப்பட்டு பேச்சு முடிவு பெற்றது.)

***SRI T. S. RAMASWAMY**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையில் பொதுவாக நம்முடைய ராஜ்யத்தில் சில வருஷங்களாக எப்படி இருந்தது, இனி வரப்போகிற வருஷங்களில் என்னென்ன வர இருக்கிறது என்பதைப்பற்றி பொதுவாகக் கூறியிருக்கிறார். மழையைப்பற்றியும், உணவுப் பிரச்னையைப்பற்றியும், தொழிற்சாலைகளின் வளர்ச்சியைப்பற்றியும் பொதுவாகக் குறிப்பிட்டு சந்தோஷப்பட்டிருக்கிறார். உணவு சம்பந்தமாக கொஞ்சம் கஷ்டம் இருந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி இருக்கிறார். உணவுப் பிரச்னையைப்பற்றி பெரிய பொறுப்புள்ள மந்திரிகளும் அகில இந்தியத் தலைவர்களும் எல்லோரும் கூடி விவாதித்திருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மிகப் பெரிய வெற்றியைப் பெற வேண்டுமானால் உணவுப் பிரச்னை சரியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். இந்த உணவுப் பிரச்னை வெற்றிகரமாகத் தீர்க்கப்படவில்லையென்றால் நம்முடைய முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது

[Sri T. S. Ramaswamy] [9th December 1959

ஐந்தாண்டுத் திட்டம், வரப்போகும் மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்டம் இவைகள் எல்லாம் பெரிய ஆபத்து விளைவிக்கக்கூடிய
அளவில் பெரும் பிரச்னையாக ஆகிவிடும் என்று அவர்கள் எச்சரித்
திருக்கிறார்கள். இருந்தபோதிலும்கூட நம்முடைய இரண்டாவது
ஐந்தாண்டுத் திட்டம் போட்ட போதிலும் கூட அதை சாதிக்க
எவ்வளவோ மடங்கு வரிகளை அதிகரித்த போதிலும்கூட இந்தப்
பிரச்னை தீர்க்கப்படவில்லை என்று பார்க்கும்போது உண்மையி
12.30 p.m. லேயே எதிர்க் கட்சியிலுள்ளவர்களும், காங்கிரஸ் கட்சியிலுள்ள
பல அங்கத்தினர்களும் மிகவும் வருந்துகிறார்கள். உண்மை
யாகவே இன்றைய தினம் விவசாயப் பண்டங்களின் விலை
கொஞ்சம் உயர்வாக இருப்பது விவசாயிகளுக்குத் திருப்தியாக
இருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. நானும் ஒரு விவசாயி
என்ற முறையில் இதைச் சொல்கிறேன். விவசாயிகளுக்குத்
தேவையான பொருள்களை எடுத்துக்கொண்டால்—குறிப்பாக
உரத்தைப் பொறுத்தவரையில், மாடுகளைப் பொறுத்தவரையில்
விலை மிகவும் உயர்ந்து கொண்டே போகிறது. அவர்களுக்கு
மிகவும் இன்றியமையாத பொருள்கள் எல்லாம் உயர்ந்து
கொண்டே போகின்றன. அவற்றுக்கு எல்லாம் காரணம் நாங்கள்
இல்லையென்று சொல்ல முடியாது, இன்று ஆளும் கட்சியில்
இருக்கக் கூடியவர்களால். ஆளும் கட்சியில் உள்ளவர்கள் இன்று
கையாளுகிற கொள்கையினால்தான் இன்றையதினம் விலைவாசிகள்
உயர்வதும், சாமான்கள் கிடைக்காமல் போவதும், அதனால் மக்கள்
சொல்ல முடியாத துன்பத்தை அநுபவிப்பதும் என்று சொன்னால்
அதுதான் உண்மை. ஒரு பக்கம் பொருள்களின் விலை அதிக
மாகிக் கொண்டு போகிறது. இன்னொரு பக்கம் போதுமான
பணம் இல்லாத முடை ஏற்படுகிறது. இந்த நிலைமையில் என்ன
செய்ய வேண்டும் என்பதை திருவண்ணாமலைத் தொகுதி மெம்பர்
ஒருவர் குறிப்பிட்டார். நோட்டு அதிகமாக அடிப்பதனால்தான்
இன்றையதினம் விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றார்.
டெபிசிட் பினான்ஸினால்தான் விலையுயர்ந்து போகிறது. இதில்
கருத்து வேற்றுமை இருக்கலாம். இரண்டு விதமான கருத்துக்கள்
நிலவக்கூடும். டெபிசிட் பினான்சு தவறு என்று நான் சொல்ல
முடியாது. பொருள்களின் உற்பத்தி நோட்டுகள் பெருக்கத்தின்
அளவுக்கு உயரவில்லையென்றால் இதன் காரணமாக பணவீக்கம்
(இன்பிளேஷன்) தான் ஏற்படும். அவற்றுக்கு எல்லாம் பொறுப்பு
எதிர்க்கட்சியினரா? இந்த அரசாங்கமா? அல்லது மத்திய சர்க்
காரா? நான் நிச்சயமாகச் சொல்வேன். ப்ளானிங் கமிஷன் என்று
ஏற்படுத்தி அவர்கள் திட்டமிடுகிற வேலைகளை மத்திய அரசாங்கம்
நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. ப்ளானிங் கமிஷன் முடிவு
செய்கிற திட்டங்களுக்காக நாம் கோடிக்கணக்கான ரூபாய்களை
ஒதுக்கிச் செலவிடுகிறோம். 74 கோடி, 84 கோடி என்று செலவழிக்
கிறோமே இந்த ராஜ்யத்தில் இதன் பயன் பூர்ணமாக மக்களுக்கு
நன்மை அளிக்கக்கூடிய வகையில் போய்ச் சேருகிறதா என்று
பார்த்தால் இல்லையென்றுதான் வருந்தவேண்டியிருக்கிறது. நான்
மட்டுமல்ல. பல அங்கத்தினர்களும் இந்தச் சபையில் என்னைப்
போலவே கருதுகிறார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது.



9th December 1959] [Sri T. S. Ramaswamy]

எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்களும் அதைக் குறிப்பிட்
டார்கள். பிரிட்டிஷ் ஆட்சியில் எத்தகைய நிர்வாக இயந்திரத்தை
வைத்துக்கொண்டு, எத்தகைய முறையில் அவர்கள் ஆட்சி செலுத்
தினார்களோ அதே நிர்வாக அமைப்பைக்கொண்டு, அதே முறை
யில் இன்று இவர்கள் ஆட்சி செலுத்துகிறார்கள். அன்றைக்கு
இருந்த ஆட்கள் இன்று இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை.
அன்றைக்கு இருந்த அதிகாரிகளின் மனப்பான்மை இன்றைக்கு
இருக்கும். அதிகாரிகளிடத்திலும் மாறாமல் அப்படியேதான்
இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.
அதைக் கண்டு வருந்தாமல் இருக்க முடியவில்லை. மந்திரி சபை
யின் போக்கும் அந்த மனப்பான்மையை வளரவிடக்கூடியதாகத்
தான் இருக்கிறது. உதாரணமாக நான் சொல்வேன். எந்த ஜன
நாயக நாட்டிலும் சரி பொருளாதார முறையில் நாட்டை வளப்
படுத்த வேண்டும், பலபல திட்டங்களை வகுக்கவேண்டும் என்று
அமைக்கப்படுகிற கமிட்டிகளுக்கு எல்லாம் மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே தலைமை தாங்குவது சம்பிரதாய
முறைக்கு மட்டும் அல்ல. அப்போதுதான் அது மக்களுடைய
மனோபாவத்தோடு ஒட்டிய நல்ல பல ஆக்க வேலைகளாக அமையும்.
ஆனால் சென்னைக்கு வந்த பிறகுதான் நான் பார்க்கிறேன், எந்தக்
கமிட்டியாக இருந்தாலும் அதற்கு அதிகாரிகள் தலைமை வகிப்பது,
அவர்கள் சொல்கிற வார்த்தைகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்
பட்ட பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்கிற முறை.
இவை எல்லாம் ஜனநாயகப் பண்பாட்டுக்குப் புறம்பான முறை.
நான் இங்கே வந்த பின்னால்தான் அதைப் பார்க்கிறேன். ஜன
நாயகத்தை நல்ல முறையில் நடத்த வேண்டும், மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு மக்களுக்கு அத்தியாவசியமான
திட்டங்களை எல்லாம் போட்டு நிறைவேற்ற வேண்டும் என்று நாம்
ஒரு பக்கத்தில் சொல்லிக்கொண்டு பழைய ஆதிக்கிய மனப்
பான்மை மாறாத அதிகார வர்க்கத்தினரையே அந்தக் கமிட்டி
களுக்கும், கூட்டங்களுக்கும் தலைமை வகிக்கப் போட்டுக்கொண்
டிருக்கிறோம். இப்பேர்ப்பட்ட நிலைமையை இன்னமும் நீடிக்க
விட்டுக்கொண்டிருப்பது ஜனநாயகப் பண்புக்கு ஒவ்வாததாகும்.
கனம் சபாநாயகருக்கு நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.
இன்னும் சபாநாயகர் மூலமாக சபையில் உள்ள அங்கத்தினர்கள்
எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அறநிலைய
பாதுகாப்பு மசோதா கொண்டு வந்தோம். அதிலும் அதிகாரி
களாக இருக்கக்கூடியவர்கள் தலைமை தாங்கவேண்டும் என்று செய்
தோம். இன்னும் கன்னியாகுமரி ஜில்லாவுக்கு என்று தேவஸ்வம்
மசோதா சீக்கிரமாகக் கொண்டுவர இருக்கிறோம். இதற்கு
முன்னால் அந்த ராஜ்யத்தில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஜன
நாயகப் பிரதிநிதிகளுக்கு என்ன என்ன உரிமைகள் இருந்
தனவோ அவைகளை எல்லாம் இந்த மசோதாவின் மூலம் பறிப்
பதற்கு வேண்டிய நடவடிக்கைகள்தான் இன்றையதினம் எடுக்கப்
பட்டு வருகிறது என்பதை அறிந்து நான் அதைச் சொல்ல
வருத்தப்படவேண்டியிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில்
முன்பும் அப்படித்தான் இருந்தது. அதை மாற்றுவதற்கு முயற்சி

செய்து அதில் வெற்றியும் கண்டு பத்து வருஷமாகிறது. இப்போது மட்டும் சென்னையில் சேர்ந்த பின்னால் எங்களுக்கு பழைய கதியே, சென்னையில் சேர்ந்தோம் என்கிற காரணத்தினால், வரவேண்டியிருக்கிறதே என்று பார்க்கும்போது நான் வருந்தாமல் இருக்க முடியவில்லை. சபாநாயகர் அவர்களுக்கும், அவர்கள் மூலமாக சபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். மக்களால் தேர்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் மதிப்போடும், கௌரவத்தோடும் நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்றால் தயவு செய்து அதிகாரிகளுக்கு காணிக்கை செலுத்தும் நிலையில் மக்களுடைய பிரதிநிதிகளை வைக்காதீர்கள் என்று ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் நிச்சயமாக அவர்களை எதிர்க்கவேண்டியதாக எங்களுக்கு நேரிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. பல அங்கத்தினர்கள் கூறினார்கள். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் உரத்திற்காக நாம் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறோம், இருந்தும் ரசாயன உரம் சாதாரண விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லையே என்று முறையிட்டுக் கொண்டார். கன்னியாகுமரி ஜில்லாவில் விநியோகம் ஒழுங்காக நடக்கிறது. அதை விநியோகம் செய்வது கூட்டுறவு சங்கங்கள். சில சமயங்களில் ஊழல்கள் இருக்கின்றன என்று சொல்ல வேண்டியது இல்லை. ஸ்ரீமான் ஆதிமூலம் அவர்கள் பேசும்போது "மூன்று மூட்டை சீனி வாங்கித் தரேன். 1½ மூட்டையாவது மக்களுக்குத் தாருங்கள்" என்று சொன்னார். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று 74 கோடி ரூபாய் ஒதுக்கி என்ன பயன்? அந்தப் பணம் மக்களுக்குப் போய் சேருகிறதா? சர்க்கார் ஊழியர்களுக்கு இன்று இருக்கக்கூடிய அதிருப்தி இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்றால் அதில் ஏதோ தவறு இருப்பதாக நினைக்கிறோம். தயவு செய்து இன்று இருக்கும் நிலைமை என்ன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இன்றைக்கு என்.ஜி.ஓ.க்கள் சம்பள உயர்வு கோருகிறார்கள் என்றால் அது தவறு இல்லை. 1939-லே 100 புள்ளியாக இருந்த விலைவாசிகள் இன்றையதினம் 450 ஆக உயர்ந்திருக்கிறது என்று சர்க்காருடைய ரெக்கார்டுகளே கூறுகின்றன. அரசாங்க புள்ளி விவரம் கூறுகிறது. அப்படி இருக்கும்போது அவர்கள் சம்பள உயர்வு கேட்டால் அதை நீங்கள் ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்? இவர்கள் சம்பள உயர்வு கேட்டால் உடனே ஆட்சியில் உள்ளவர்களுக்கு விவசாயிகளின் பேரில் கருணை பொங்கிவிடுகிறது. "விவசாயிகள் எவ்வளவு குறைந்த கூலிகூடக் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்று தெரியவில்லையா?" என்று கேட்க ஆரம்பிக்கிறார்கள். விவசாயிகள் தங்களுக்குள்ள கஷ்டமான நிலைமையை எடுத்துச் சொல்லிக்கொண்டு வரும்போது அதிகாரிகளின் பேரில் கருணை உண்டாகிறது. அவர்கள் எல்லாம் எத்தனை கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியாமல் உங்கள் நலனையே கருதுகிறீர்களே என்று கேட்கிறார். இப்படி ஒருவர் நிலையைச் சொல்லும்போது ஒருவரின் மீது கருணையாளராகப்





பொங்கி ஓடும்படியாக சொல்வது—ஒரு பகுதியினரை ஒரு பகுதியினர் மீது இணைத்து மோத விடுவது கொஞ்சம் கூடச் சரியல்ல. நாட்டில் திட்டமிட்டு, உற்பத்தியையும், செல்வத்தையும் பெருக்கிக் கொண்டிருக்கும்போது எல்லா மக்களுடைய நிலையையும் சீர்படுத்துவது சர்க்காரின் பொதுக் கடமையாகும். உற்பத்தி மாத்திரம் சரியாக இருந்து பயன் இல்லை. விநியோகமும் சீராக இருந்தால்தான் நாட்டில் சரியான நிர்வாக அமைப்பு ஏற்பட முடியும். ஆகவே அரசாங்க ஊழியர்களுடைய நிலைமையை சர்க்கார் சரியானபடி கவனித்தாக வேண்டும். ஹரிஜன மக்கள் பலகாலமாக சமுதாயத்தில் எந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாதது அல்ல. அதுவும் அவர்களிடம் அன்பு உடையவர்கள் என்று எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய முதல் அமைச்சருடைய ஆட்சியில்.

அவர்கள் தலைமையமைச்சராயிருக்கும்போது ஹரிஜனங்களுக்காகச் செய்யக்கூடிய திட்டங்களில் ஏன் இவ்வளவு காலதாமதம் ஏற்படவேண்டுமென்று எனக்கு அதிசயமாக இருக்கிறது. அங்கு மூன்று தொழிற்சாலைகள் அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டார்கள். கன்யாகுமரியில் ஒன்றுகூட இன்னும் அமுலுக்கு வரவில்லை. காரணம், ரெட்டேப்பிஸம்தான். காரணம், அதிகாரிகள் ஸ்லோ கோச்சஸ்-ஆக இருப்பதுதான். நிழலின் அருமை வெய்யிலில் போனால்தான் தெரியும் என்று சொல்வார்கள். அது உண்மைதான். இதைச் சொல்லும்போது ஹோம் மினிஸ்டர் அவர்கள் சூடாக ஒன்றும் சொல்ல மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் முன்பு நாங்கள் அங்கிருந்தபோது மிகவும் சௌகரியமாக இருந்தது, அதேபோல் இங்கு இல்லை என்று சொல்லும்போது ஒரு அமைச்சர் சொன்னார், "நீங்கள் வேண்டுமானால் திரும்பி கேரளத்திற்குப் போய் விடுங்களேன்" என்று அது போகட்டும். வாதம் வரும்போது அவர்கள் அதைச் சொன்னார்கள். நான் சொல்வதற்குக் காரணம், ரீ-ஆர்கனைசேஷனுக்கு முன்னர் ஒரு ஹரிஜன மாணவன் முதல் வகுப்பிலிருந்து கல்லூரி போவது வரையில் ஒரு மாதத்திற்குள்ளாகவே அவனுக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்து விடும். ஆனால் இங்கு 3½ ரூபாய் வாங்குவதற்கு கால் ரூபாய் பாரம் வாங்க வேண்டும். அதை வாங்கி எழுதி அனுப்பினாலும், கடைசிப் பக்கத்திலுள்ள ஒரு ரூலை வைத்து இது தள்ளப்பட்டிருக்கிறது என்று அனுப்பி விடுகிறார்கள். இப்படிச் செய்வோமானால் ஹரிஜன மாணவர்களுக்கு உதவி செய்கிறோமா இல்லையா என்பது தெரியவில்லை. இதேபோல் எவ்வளவோயிருக்கிறது. இன்றையதினம் இந்த சென்னை ராஜ்யத்திலுள்ள அதிகாரம் இந்த சட்டசபைக்கு இருக்கிறதா அல்லது இங்குள்ள அதிகாரிகள் கையில் அதிகாரம் இருக்கிறதா என்பது சிந்திக்க வேண்டிய விஷயம். இங்கு நாம் சட்டம் இயற்றுகிறோம், உண்மை. வேண்டிய சடங்குகள் எல்லாம் இங்கே நடக்கிறது, உண்மை. நான் அதிகாரிகளைப் பற்றி குறை கூறவில்லை. ஆனால் இங்கு '**Officialdom enthroned**' அதிகாரவர்க்கம்தான் சிம்மாசனத்தில் இருக்கிறது.

ஒரு சில மந்திரிகளைத் தவிர மற்றவர்கள் உல்லாசத்திற்காகத் தான் போகிறார்கள் ஸ்டேட் பணத்தில், டூர் என்று சொல்லிக் கொண்டு. கன்னியாகுமரிக்கு வருகிறேன், எனக்கு நான்கு ப்ரோக்ராம் போடுங்கள் என்று சொல்கிறார்கள். அது மட்டுமா? கண்ணியம் பொருந்திய கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் 'I desire that you will conduct your deliberations with decorum, dignity and a high sense of public duty.' என்று. "ஹை சென்ஸ் ஆப் ட்யூட்டி" சபையின் விஷயங்களை கண்ணியத்துடனும், கடமை உணர்ச்சியுடனும் செய்யுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் மேல் சபையில் நடந்ததைப் பற்றி பத்திரிகையில் ரிப்போர்ட் வந்ததைப் பார்த்தேன். அதைப் பார்த்தால் அமைச்சர்கள் விஷயங்களை கண்ணியத்துடன் நடத்துகிறார்களா, அவர்கள் கடமை உணர்ச்சியுடன் நடத்துகிறார்களா என்பது சந்தேகமாயிருக்கிறது. முக்கியமான பிரச்னையைப் பற்றி அங்கத்தினர்கள் விவாதம் செய்யும்போது ஒரு மந்திரி படம் போட்டுக்கொண்டிருந்தாராம்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இன்னொரு சபையில் நடந்ததைப்பற்றி இந்த சபையில் சொல்வது முறையல்ல என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும்.

**SRI T. S. RAMASWAMY :** கவர்னர் உரை மீதுள்ள விவாதம் என்பது முக்கியமானதொன்றாகும். ஒரு வருடத்திலுள்ள முக்கிய விவாதமாகும் அது. இங்கும் அப்படிப் படம் போடுகிறார்களோ என்னவோ தெரியாது. இங்கே விவாதம் நடக்கும்போது அமைச்சர்கள் எல்லோரும் எங்கெங்கோ போய் விடுகிறார்கள். கேட்டால், எங்களுக்கு இது ஒன்றுதானா வேலை என்பார்கள். அமைச்சர்கள் மாவட்டங்களுக்கு வந்தாலோ அவர்களைப் பார்க்கவே முடியாது; அவர்களுக்கு மாலைகள் வாங்கவே நேரம் இல்லை. ஒரு நாளைக்கு 25 ப்ரோக்ராம்கள் வைத்துக்கொள்கிறார்கள். எவ்வளவு தூரத்திற்கு, அதிகமாக கலெக்டர் ப்ரோக்ராம் போட்டுக் கொடுக்கிறாரோ அந்த அளவுக்கு அவர்கள் கெட்டிக்காரர்கள், அவர்களுக்கு சீக்கிரம் ப்ரமோஷன் கிடைக்கிறது. இங்குள்ள ரூல்ஸ்களையெல்லாம் 'சேஞ்ச்' செய்ய வேண்டும். பழைய துருப்பிடித்த ரூல்களை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கு, ஸ்பெஷல் விஸிட்டேர்ஸ் காலரிக்கு போக வேண்டுமானால் லாண்ட் டாக்ஸ் 500 ரூபாய், அல்லது இன்கம் டாக்ஸ் 200-க்கு மேல் கட்டுபவர்கள்தான் அங்கு சென்றிருக்கலாம் என்று ரூல்ஸ் இருந்தது. இப்படி எவ்வளவெவ்வளவோ இருக்கின்றன, சொல்வதற்கு. அவைகள்தான் ஜனநாயகத்திற்கு எதிராகயிருக்கின்றன. இன்னும் சொல்வதற்கு ரிக்ரூட்மெண்ட், பிரமோஷன்ஸ் இப்படி எவ்வளவோ இருக்கின்றன, ஆனால் பத்து நிமிடங்களுக்குள் அவைகளைப் பற்றியெல்லாம் பேச முடியாது. ஆகவே, இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

*** SRI K. G. PALANISWAMY GOUNDER :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையில்





நல்ல பல திட்டங்களைப் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக்கூறி நமது மாகாணத்தில் பல நல்ல காரியங்களைச் செய்வதற்கும், நல்ல கருத்துக்களை சிறப்பாக எடுத்துக் கூறியிருப்பதற்கும் நாம் அவர்களுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். நம் நாட்டிலே மழைப் பெருக்கத்தால் பெரிய பெரிய வசதிகள் ஏற்பட்டு நல்ல செழிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது மாகாணத்தில் நல்ல மழை பெய்திருக்கிறது என்பது உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதும் சந்தோஷத்திற்குறிய விஷயங்களேயானாலும் கூட, எனது பகுதியில் சாதாரண மழைதான் பெய்திருக்கிறது, என்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். எங்கு எப்படி மழை பெய்து செழித்தாலும்கூட தாராபுரம் தாலுக்கா, காங்கயம் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாகும் என்று நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வருஷா வருஷம் பெய்யக்கூடிய மழையை விட இந்த வருஷம் மழை எங்கள் தாலுக்காவில் குறைவாகப் பெய்ததால் அங்கு குடிதண்ணீருக்குக் கூட கஷ்டம் இருந்து வருகிறது. நான் வரும்போதுகூட அங்கு குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாதிருப்பதைப் பார்த்து வந்தேன். அங்குள்ள நிலையைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அங்கு ஸ்ரீ சுப்பிரமண்யம் அவர்கள் தலைமையில் எஸ்டிமேட் கமிட்டி வந்தது. எஸ்டிமேட் கமிட்டி மெம்பர்கள் எல்லோரும் அங்குள்ள கிணறுகளை எல்லாம் பார்த்தார்கள். 100 அடி ஆழத்தில்தான் தண்ணீர் இருக்கிறது. இந்த நிலைமையை எல்லாம் அவர்கள் தெரிந்து கொண்டு வந்திருக்கிறார்கள். எனது பகுதியைப் பற்றி நான் வருஷா வருஷம் இந்த சட்டசபையில் பேசி வருகிறேன். ஆகவே, அங்கு வேண்டிய நிவாரணம் அளிக்க அமைச்சரவை முன்னுக்கு வரவேண்டும். பரம்பிக்குளத் திட்டம் பற்றி கவர்னர் அவர்களது உரையில் கூறப்பட்டிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் பகுதி வரண்ட பகுதியாகும். அது எப்பொழுதும் பஞ்சப் பிரதேசமாக இருப்பதினால் அங்கு ஒரு நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். மற்ற பகுதிகளுக்கு இருப்பதைப் போன்றும் இதற்கும் ஒரு சமசந்தர்ப்பம் அளிக்கவேண்டும். ஆகவே, இந்த பரம்பிக்குளத் திட்டத்தை எங்களுக்குத் தந்தேயாக வேண்டும். அந்தத் திட்டத்தினால் எங்களுக்குத் தண்ணீர் தராவிட்டால் கொஞ்ச காலத்தில் எங்கள் பகுதி பாலைவனமாவதைத் தவிர வேறு வழியே கிடையாது. பஞ்சத்தினால் வாடும் எங்கள் பகுதி மக்கள் லோன் கொடுங்கள், தந்த லோனைத் தள்ளுங்கள், அல்லது ஒத்தி வையுங்கள் என்று கேட்பதைத் தவிர வேறு விமோசனம் கிடையாது. இந்த சமயத்தில் இந்த பரம்பிக்குளத் திட்டம் எங்களுக்கு ஒரு பெரிய ஒத்தாசையாகயிருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டத்தை எங்கள் பகுதிக்கும் விஸ்தரிக்க வேண்டும். அதன் தண்ணீர் எங்கள் பகுதியில் 1½ லட்சம் ஏக்கருக்காவது பாயக் கூடிய விதத்தில் வழி செய்ய வேண்டும். எங்கள் பகுதி மக்கள் இந்தத் திட்டத்தை நம்பித்தான் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவைக்கு நன்கு தெரியும். ஆக, இந்தத் திட்டத்தில் எங்கள் பகுதியை விட்டு விடாமல் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று மறுமுறையும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

[Sri K. G. Palaniswamy Gounder] [9th December 1959

அடுத்தபடியாக, நில உச்ச வரம்பு வர இருக்கிறது. அப்படி உச்ச வரம்பு நிர்ணயிக்கும்போது எங்கள் பகுதியிலுள்ள நிலங்களையும், மற்ற பகுதிகளிலுள்ள நிலங்களையும், அதாவது ஸ்டேண்டர்டு ஏக்கர் 8 ரூபாய் என்றிருக்கும் நிலங்களையும் ஒன்றாக வைத்து உச்ச வரம்பு நிர்ணயம் செய்யக் கூடாது. ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்று வைத்துக்கொண்டு காளிங்கராயன் வாய்க்கால் நிலங்களும் இருக்கின்றன, லோயர் பவானி ஏரியாவிலுள்ள நிலங்களும் இருக்கின்றன. இவை இரண்டையும் ஒன்றாக வைத்து கணக்கிடக் கூடாது, உச்ச வரம்பு நிர்ணிப்பதற்கு. லோயர் பவானி ஏரியாவிலுள்ளதைப் போன்று மூன்று மடங்காக உயர்த்தவேண்டும். எங்கள் பகுதியிலுள்ள நிலங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கும்போது வருவாயைப் பொறுத்துத்தான் ஸீலிங் வைக்க வேண்டுமே தவிர, பூமியின் தராதரத்தைப் பொறுத்துத்தான் ஸீலிங் வைக்க வேண்டுமே தவிர பொதுவாக ஏக்கர் கணக்கில் வைக்கக்கூடாது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கின்ற மேய்ச்சல் பூமிகளுக்கும் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும். அவ்விதம் விதிவிலக்கு அளிப்பதாக இருந்தால் இதனால் பிழைத்துக்கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் இந்தச் சர்க்காரைப் பாராட்டுவார்கள். எங்களுக்கு மேய்ச்சல் தரைகள்தான் முக்கியமாக இருந்து கொண்டிருக்கின்றன. காங்கேயம் மாடுகளை செல்வமாக நாங்கள் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இதை நாங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள தக்க வகையில் இந்த மேய்ச்சல் நிலங்களுக்கு எல்லாம் உச்ச வரம்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள மக்கள் எல்லோருமே அங்கு இருக்கக் கூடிய கால்நடைகளை வைத்துக்கொண்டுதான் தங்கள் குடும்பத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மேய்ச்சல் நிலங்களுக்கு நிச்சயமாக உச்ச வரம்பிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்றுள்ள நிலையில் எங்கள் பகுதியில் குடிதண்ணீர்க் கஷ்டம் மிகவும் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. இன்றும் கூட ஜில்லா போர்டு மூலமாகத்தான் குடிதண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்காக படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. ஆகவே குடிதண்ணீர்க் கஷ்டத்தை நீக்குகின்ற முறையில், அமராவதி ஆற்றிலிருந்து மேஜர் பஞ்சாயத்து, கிராம பஞ்சாயத்துகளுக்கு குடிதண்ணீர் சப்ளை செய்வதற்கு, ஒரு திட்டம் வகுத்து இதற்கு ஏதாவது ஒரு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பரம்பிக்குளத் திட்டம் ஓர் நல்ல திட்டம். இருந்தாலும் இந்தத் திட்டம் எங்களுக்குக் குறைந்த அளவு பாயக்கூடிய சாதாரணத் திட்டமாகவே இருந்து வருகிறது. முக்கியமாக பரம்பிக்குளத் திட்டத்தின் மூலமாக கோடை காலத்தில், அதாவது மூன்று மாத காலத்திற்கு மட்டுமாவது தண்ணீர் கொடுத்து உதவினால் அங்குள்ள மக்கள் இந்த அரசாங்கத்திற்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். இல்லையென்றால் அங்குள்ள மக்கள் எல்லாம் அந்தப் பகுதியை விட்டு வெளியேறி விடுவார்கள். அங்கு உள்ள நிலப்பரப்பு எவ்வளவு, அங்குள்ள ஜனத்தொகை என்ன என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் நன்கு தெரியும். அதற்குத் தகுந்தபடி வேண்டிய திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கவர்னர் அவர்களுடைய உரையை வரவேற்று என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



9th December 1959] [Sri K. G. Palaniswamy Gounder]

* **SRI P. JAYARAJ** : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரை மீது ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்களது உரை மிகவும் சுருக்கமாக இருக்கிறது என்பதை நாம் அனைவரும் பார்த்தோம். சுருக்கச்சொல்லி விளங்க வைப்பது போன்று சுருக்கமாக பல விஷயங்களைப்பற்றி குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து நாம் மகிழ்ச்சியுறத்தான் வேண்டும். முக்கியமாக சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது என்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சியைச் சேர்ந்த சசிவர்ணத் தேவர் அவர்களும் அதைப் பாராட்டினார்கள். அதறகாக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு அகவிலைகள் எல்லாம் ஏறுமுகமாக இருப்பது மிகவும் வருந்தத்தக்க முறையில் இருக்கிறது என்றும் அதற்கான காரணங்களையும் கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது மாநிலம் முழுவதும் பார்த்தாலும் எல்லாப் பொருள்களின் மீதும் அகவிலை, எல்லாம் ஏறுமுகமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை சற்று நிதானத்தோடு பார்ப்போமானால், எதிர்கட்சிகளின் பிரச்சாரமும் இதற்கு ஒரு காரணமாகும், விலைகள் எல்லரம் உயர்ந்து விட்டது என்று செய்யும் விளம்பரம்தான் இதற்கு காரணம் என்று நம்மால் சொல்ல முடியும். இவர்கள் செய்யும் விளம்பரங்களின் மூலமாக கிராமப்புறங்களில் சிறிய கடைகள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் கூட, விலையேற்றம் என்றால் என்ன என்று தெரியாதவர்கள்கூட எல்லாப் பொருள்களுக்கும் விலையை அவசியமில்லாமல் ஏற்றிவிடுகிறார்கள். இதை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் ஆராய்ந்து பார்ப்பார்களானால், இதன் உண்மை நன்கு தெரிய வரும். அதோடு கூட்டுறவு விவசாயத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும், பல இடங்களில் கூட்டுறவு விவசாயம் நல்ல முறையில் நடந்து வருகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், மேலராமன் சேத்தி, குத்தாலம், வக்காரமாரி போன்ற பகுதிகளில் கூட்டுறவு விவசாயம் நல்ல முறையில் நடந்து வருகிறது. இதை நமது அமைச்சர் அவர்கள்தான் ஆரம்பித்து வைத்தார்கள். தனியார் நிலங்களையும் மடாலய நிலங்களையும் சேர்த்து விவசாயம் செய்து வருகிறோம். இதிலும் சில மடாலயத்தின் அதிகாரிகள் இதற்கு விரோதமான வகையில் இடையூறுகள் செய்து வருகிறார்கள். இன்னும் சில நிலங்கள் மடாலயங்களுக்குச் சொந்தமானவை இந்தக் கூட்டுறவின்கீழ் கொண்டு வரப்படாமல் இருந்து வருகின்றன. அதையும் இந்தக் கூட்டுறவு ஸொஸைட்டியின்கீழ்

கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் எல்லா நிலங்களையும் சேர்த்து விவசாயம் செய்தால், இந்த மாநிலத்திலேயே நல்ல முறையில் நடைபெறக்கூடிய ஒரு கூட்டுறவு இயக்கமாக இது விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் குறிப்பாக பொள்ளாச்சி செட்டியார் அவர்கள், தன் கீழ் இருந்துவந்த மடாலய குத்தகை நிலங்களை எல்லாம் சொசைட்டிக்கு கொடுத்து உதவியிருக்கிறார்கள். அவர்களை நாங்கள் என்றும் பாராட்டக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம். அதே போன்றுதான் பேரளத்தில் மடாலயத்தின் கீழ் இருக்கின்ற நிலங்களை எல்லாம் கொடுத்தால் இந்தக் கூட்டுறவு விவசாயத்திற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். இதற்கும் கனம் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தி இதை வாங்கிக் கொடுப்பார்களானால் அங்குள்ள ஏழை மக்களுக்கு மிகவும் பயன்படும்படியான முறையில் இன்னும் நாலைந்து கூட்டுறவு ஸொஸைட்டிகளை ஏற்படுத்த முடியும் என்பதோடு மட்டுமல்ல, உணவு உற்பத்தியையும் பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, உச்சவரம்பு வரப் போகிறது என்பதை அறிந்து அது எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை விவசாயிகளும் மிராசுதார்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நமது அமைச்சர்களும் நன்கு ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதன் மூலமாக எவ்விதத்திலும் ஏழைகளுக்கு நன்மை கிடைக்கும் என்பதை அறிந்து ஏழை மக்கள் எல்லாம் சந்தோஷப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதோடு சிறு நிலச்சுவான்தார்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும்போது அதில் உழுகின்ற சாகுபடியாளர்கள் பாதிக்கப்படக்கூடாது. அதோடு இவைகளில் சாகுபடி செய்யும் பண்ணையர்ாகளுக்கும் எந்தவிதமான பாதகமும் ஏற்படக் கூடாது என்பதுதான் எங்கள் கோரிக்கை. இந்த நாட்டில் இரண்டு மூன்று ஏக்கர்களைச் சொந்தமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் அந்நிய நாட்டில் சென்று வியாபாரம் செய்கின்றவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். இந்த நிலங்களில் எல்லாம் இந்த நாட்டிலுள்ள பண்ணையாட்களே சாகுபடி செய்கின்றார்கள். இந்த நிலையில் உச்ச வரம்புச் சட்டம் வரும்போது இந்த சாகுபடியாளர்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்படுவார்களானால், அவர்களுக்கு எந்தவிதமான வழியும் இல்லாமல் போய் விடும். ஆகவே, இவர்களை அப்புறப்படுத்தாமல் இருக்கச் செய்வதற்காக ஏதாவது வழிவகை செய்தாக வேண்டும். அத்துடன் உர வகைகளையும் விவசாய மக்களுக்கு, குறிப்பாக ஹரிஜனங்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். இப்போதிருக்கின்ற நிலையைப் பார்த்தால், உரம் வாங்க வேண்டும் என்று சொன்னால், அதற்குத் தகுந்த ஜாமீன் வேண்டும் என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இவ்விதம் மேலொப்பம் இல்லாத விண்ணப்பங்களுக்கு எல்லாம் உரங்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதற்கு மிராசுதார்களும் பொறுப்பேற்க முன் வராமல் இருக்கின்ற காரணத்தினால் இந்தக் கஷ்டங்கள் ஏற்படு



கின்றன. இதற்கு பட்டாமணியக்காரர், கிராம முனிசீப்கள் இவர்களும் இதையேதான் வற்புறுத்துகிறார்கள். ஆகவே ஜாமீன் இல்லாத முறையில் உரம் வழங்குவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுள்ள நிலையில் தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்குப் பல சலுகைகள் கிடைத்து வருகின்றன. இருந்தாலும் இந்தச் சட்டத்தின் காரணமாக பல பண்ணையாட்களையும் கூலியாட்களாக மாற்றி அவர்களிடமிருந்து அதற்குத் தகுந்தவாறு மிராசுதார்கள் எழுதி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நிரந்தரமாக பண்ணையாட்களாக இருக்கக்கூடியவர்களை எவ்விதமெல்லாம் விலக்கலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். அதோடு பண்ணையாட்களை விலக்கவேண்டுமென்றால் 150 ரூபாய் கொடுத்துவிட்டு போகச் சொல்லிவிடலாம் என்று சட்டத்தில் இடமிருக்கிறது. இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு அதிகமான பண்ணையாட்களை மிராசுதார்கள் நீக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதில் 150 ரூபாய் என்றிருப்பதை மாற்றி 250 ரூபாய் என்று நிர்ணயித்தால் இவ்வளவு அதிகமான பேர்களை மாற்ற மாட்டார்கள். இப்போது 150 ரூபாய் என்றிருப்பதன் காரணமாக ஆயிரக்கணக்கான பேர்களை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் நல்லுறவு ஏற்படுவதில்லை. தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில் மிராசுதார்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இருந்து வந்த சண்டைகள் எல்லாம் போய் இன்றைக்கு ஒருவருக்கொருவர் இணக்கமாகவும் ஆதரவாகவும் இருந்து வருகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்த மாநில சர்க்கார் கொண்டு வந்திருக்கின்ற சட்டங்கள்தான் என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆகவே இப்போது இருக்கின்ற இந்த நல்லுறவு மேலும் நீடித்திருக்க வேண்டுமானால், பண்ணையாட்களை அப்புறப்படுத்துவதற்கு 150 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றிருப்பதை மாற்றி 250 ரூபாய் என்று நிர்ணயிப்பதற்கு ஏதாவது வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

1 p.m.

* **Sri P. S. ELLAPPAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீங்கள்தான் எனக்குத் தலைவர் என்பது வழக்கமாப் போச்சு. (சிரிப்பு.) இப்போது மேன்மை தங்கிய கவர்னர் பெருமானுடைய உரையின்பேரில் எல்லோரும் பேசினார்கள். எல்லாரும் என்ன பேசினார்கள்? அந்த கவர்னர் உரையைப்பற்றிப் புகழ்ந்து பேசி, வரவேற்று இரண்டொரு வார்த்தைகள் சொல்லப் போகிறேன் என்று சொல்லுகிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள்? அதில் விஷயம் ஒன்றுமே இல்லை, பிரயோஜனமே இல்லை என்று சொல்லுகிறார்கள். கடைசியில் இரண்டு பேரும் கஷ்டமான நிலைக்கு வந்து சேருகிறார்கள். "என்னுடைய தொகுதி நன்றாகக் கவனிக்கப்படவில்லை, இந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை; அதைச் செய்யவில்லை" என்று அழுகிறார்கள். தனித் தனி முறையிலே இப்படி அழுகிறார்கள். இப்படித் தனித் தனியாக அழுவதைவிட ஒன்றாகச் சேர்ந்து அழுதால் நன்றாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன். (சிரிப்பு.)

[Sri P. S. Ellappan] [9th December 1959

ஆகவே, நான் இது விஷயத்தில் என்ன சொல்லுவது? நான் என்ன சொல்லி என்ன பிரயோஜனம்? எத்தனையோ வருஷமாக நான் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறேன். சொன்னது ஏதாவது நடக்கிறதா? நானும் அசெம்பிளிக்கு வந்த நாளிலிருந்து பார்க்கிறேன். காரியத்தில் ஒன்றும் நடக்கவில்லை. இந்த நிலைமையே நீடிக்குமானால் இந்த ஆட்சி எவ்வாறு நிலைக்கும்?

பஞ்சக் கஷ்டம் பற்றி எல்லோரும் சொல்லுகிறார்கள். மழை பெய்திருக்கிறது என்று கவர்னர் சொல்லியிருக்கிறார். எப்போது மழை பெய்தது? எந்தக் காலத்தில் பயிரிட்டால் எந்தக் காலத்தில் அறுவடை அதிகமாகக் கிடைக்கும்? ஐப்பசி மாதம் 15-ம் தேதி மழை பெய்தது. நாற்று வைத்து நன்றாக முளைவிட 40 நாள் மழை பெய்யவேண்டும். மதுராந்தகம் தாலுகாவில் எல்லாம் தீய்ந்து விட்டது. முதல் போகமே கிடையாது. முதல் போகத்திற்கே தண்ணீர் இல்லை; இரண்டாவது போகத்திற்கு என்ன பண்ணுவது?

ரேஷன் கடையில் அரிசி வாங்கக்கூடிய மக்கள் படும் கஷ்டத்தைப்பற்றிச் சொல்லவே முடியாது. கண்ணீர் வருகிறது. அரிசி கொடுக்கிற ரேஷன் கடையில் போய்ப் பார்த்தால் அங்கு க்யூவில் நிற்கும் பெண் பிள்ளைகளையெல்லாம் கீழே போட்டு ஆண்கள் மிதிக்கிறார்கள். அந்த ரேஷன் கடைகளில் ஒரு நாளைக்கு 10 மூட்டை தான் கொடுக்கிறார்கள். ஐந்து மைல் விஸ்தீரணத்திற்கு ஒரு ரேஷன் கடைதான் இருக்கிறது. காலை 10 மணிக்கு அரிசி கொடுக்க ஆரம்பித்தால் 12 மணிக்கெல்லாம் மூட்டை ஆகிவிட்டது என்று கோணியை விரித்துக் காட்டி விடுகிறார்கள். அந்த அரிசியை வாங்குவதற்காக ரொம்ப தூரம் மக்கள் "க்யூ"வில் நிற்கிறார்கள். அவர்கள் நீண்ட நேரம் நின்றாலும் அரிசி கிடைக்குமென்ற நிச்சயம் இல்லை. ஜனங்கள் படுகிற கஷ்டம் என்ன மாதிரி என்று சொல்ல முடியவில்லை. தெருவிலே கதர்ச் சட்டைக்காரன் போனால் இவன் சட்டசபைக்குப் போய் என்ன செய்கிறான் என்று சொல்லி வம்பு பிடிக்கிறார்கள். என்னை யார் என்று சொல்லிக் கொள்ள முடியவில்லை. இந்தச் சட்டை ஒரு பாரமாக இருக்கிறது. (சிரிப்பு.) கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான அரிசி கிடைக்காமல் தவிக்கிறார்கள். கலெக்டரிடம் போய் முறையிட்டால் "உள்ளது அவ்வளவுதான்" என்று சொல்லிவிடுகிறார். இந்த முறையில் பஞ்சமானது மிகவும் அபாயமான நிலையில் இருக்கிறது. இந்த மாதிரிப் பஞ்சத்திற்குக் காரணம் இந்த அரசாங்கந்தான் என்று சொல்ல விரும்புகிறேன். "உனக்கு என்ன அவ்வளவு தூரம் அறிவு முதிர்ந்து விட்டதா?" என்று கேட்காதீர்கள்.

சர்க்காரிடம் எவ்வளவு புறம்போக்கு நிலம் இருக்கிறது? 1942-ல் இருந்து உணவு உற்பத்தி செய்ய எல்லா நிலங்களிலும் பயிரிடச் சொன்னார்கள். எல்லோரும் பயிரிட்டுக்கொண்டு வந்தார்கள். இந்த வருஷம் 5 ரூபாய் தீர்வை போடுகிறார்கள். அடுத்த வருஷம் அதற்கு 15 ரூபாய் தீர்வையாகி விடுகிறது. எங்கெங்கு நிலம் சும்மா கிடக்கிறதோ அங்கெல்லாம் பயிரிடலாம் என்று



9th December 1959] [Sri P. S. Ellappan]

உத்தரவு போடுங்கள். உற்பத்தியைப் பெருக்க நீங்கள் கடனும் கொடுக்கவேண்டாம்; மற்ற எந்தவித உதவியும் செய்யவேண்டாம். இருக்கும் காலி நிலங்களில் எல்லாம், புறம்போக்கு நிலங்களில் எல்லாம் பயிரிட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டால் ஜனங்கள் எவ்வளவு ஆனந்தமாக இருப்பார்கள்? கிராமப் பஞ்சாயத்தில் ஒரு சட்டத்தைப் போட்டு சும்மா கிடக்கும் நிலங்களையெல்லாம் பயிரிட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டால் எவ்வளவு ஜனங்கள் ஜீவிப்பார்கள்? "ஜமீன்களை ஒழிக்கிறோம்" என்று சொன்னவுடன் ஜனங்கள் தங்கள் ஓட்டை அந்தக் கட்சிக்குப் போடுகிறார்கள். அதனால் விவசாய மக்களுக்கு ஒன்றும் பயன் ஏற்படவில்லை என்று அவர்கள் உணர்ந்து கொண்ட பின்னர் மறுபடியும் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று பேசுகிறார்கள். அதைக் கேட்டுவிட்டு உடனே தன்னுடைய வோட்டை அந்தக் கட்சிக்குப் போடுகிறான். இவ்வாறு சொல்லுவதிலேயெல்லாம் பயன் இல்லை. இன்றையதினம் மக்கள் பஞ்சத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். "சாகத் துணிந்துவிட்டால் சமுத்திரம் முழங்கால் ஜலம்" என்று பாரதியார் கூறியபடி மக்கள் இனி இப்படிச் சும்மா இருந்து கொண்டே இருக்க மாட்டார்கள். பசி வந்துவிட்டால் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. அவர்களுக்கு மீதிச் சௌகரியங்கள் செய்வதைப்பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் அவர்களுடைய உயிரைக் காப்பாற்றுங்கள் என்று உணவு மந்திரி அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI N. R. THIAGARAJAN**: தலைவர் அவர்களே, சென்ற இரண்டு மூன்று நாட்களாக கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைமீது, பலர் பல் வேறு கோணங்களிலிருந்து அலசி ஆராய்ந்து பேசி விட்டார்கள். கவர்னர் அவர்கள் உரையிலே இரு சொற்கள் என் காதிலே சுவையாக இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. ஒன்று இந்த நாட்டிலே உள்ள 90 சத விகித ஏழை கிராம விவசாயிகள் முன்னேற்றம் பற்றியது. மற்றொன்று நிலச் சீர்திருத்தம் பற்றியது. இந்த இரு சொற்கள் யாருக்குத்தான் இதயகீதமாக ஒலிக்காமலிருக்கும்? இப்பொழுதுதான் முதல் தடவையாக கவர்னர் அவர்கள் கிராமவாசிகளின் முன்னேற்றம் பற்றி பேசுகிறாரென்று கருதுகிறேன். இந்தச் பேச்சை அறிந்து எனது தொகுதி வாசிகளின் உள்ளம் குளிர்ந்திருக்கும், என் உள்ளமும் குளிர்ந்து துள்ளிக் குதிக்கிறது.

"விலைவாசிகள் உயர்ந்துவிட்டது" என வீரா வேசத்துடன் பலர் கூறினார்கள், அவ்வாறு கூறுவது தற்போது ஒரு "பாஷன்" ஆகிவிட்டது. விலைவாசி உயரத்தான் செய்யும் என, தேனி தொகுதி கிராமங்களில் மட்டும் நான் கூறவில்லை, மதுரை நகரில் ஸ்ரீமதி லக்ஷ்மிகாந்தம்மாள் தொகுதியில்கூட பேசிவிட்டு வந்திருக்கிறேன். உணவுப் பொருள் விலை உயர்வு பற்றி பேசுபவர்கள் எல்லாம் கிராமவாசிகளின் நிலையை அறியாமல், முனிசிபாலிட்டி, கார்பரேஷன் நகரங்களிலிருந்து கனவு காண்கிறார்கள், எனது தொகுதிகளில் உள்ள ஆண்டிபட்டி பிர்காவில் 132 கிராமங்

களுக்கு சமீபத்தில் சென்று வந்தேன். அங்கு ப்ளாக் டெவலப்மெண்ட் நடைபெறுகிறது. இவ்வளவு உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தும், அவர்களின் வாழ்வு உயரவில்லை. அந்த 132 ஊர்களில் ஒரு புது வீடு கூட கட்டப்படவில்லை. சரி, பிளாக்கிலிருந்தாவது புது பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டியிருக்கலாம், அதுவும் இல்லை, எல்லாம் நகரங்களுக்கு கொட்டிக் கொடுத்துவிட்டு வறுமையைப் பெருமையுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் பணத்தை சுரண்டி பட்டினங்களில் மாடமாளிகைகூட கோபுரங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக எழும்பிக் காட்சியளிக்கின்றன. ஆசியாவில் மிகப் பெரிய சென்னையில் உள்ள கட்டிடத்தைப் பார்த்தால் வயிறெறியுது, கும்பி கொதிக்கிறது, இப்படி அநியாயமாக கிராம மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து வந்து நகரங்களில் கட்டிடத்தின்மேல் கட்டிடமாக கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். கிராமத்தவர் நிலை பற்றி கட்சிக் கட்டுப்பாட்டை விட்டாவது உள்ளத்தில் உள்ளதை கூறித்தானாகவேண்டும். உணவு விலையைக் குறைக்க வேண்டுமாம். ஒரு கோஷ்டியார் கூறினார்கள், காங்கிரசைக் கவிழ்க்க திட்டமிட்டார்கள், அதற்கு வழி யென்னவென்று ஆலோசித்து ஒரு புது வழி கண்டு பிடித்தார்கள். அதுதான், கொள் முதல் செய், கட்டுப்பாடு செய் என்னும் கூக்குரல். இவர்களின் கூச்சலைக் கேட்டு சர்க்கார் மீண்டும் ரேஷன் முறையை அமுல் செய்யும்போது நாம் கண்ட்ரோல் ஒழிக, ஆறு அவுன்ஸ் ஒழிக எனக் கத்தி, கிராம மக்களிடையே காங்கிரசுக்கு உள்ள செல்வாக்கை ஒழித்து விடலாமென திட்டங்கள் போட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். படி அரிசி பனிரெண்டணவுக்கு வேண்டுமாம், 500 பேருக்கு ஒரு நியாய விலைக் கடையாம், நாத்தமெடுத்த அரிசி கூடாதாம், முன்கூட்டியே நாத்தமெடுத்த அரிசியென எப்படிக் கண்டு பிடித்தார்கள்? வேலையற்ற சோம்பேரிகள்! கல்லும் மண்ணும் கலந்த அரிசியென நகரவாசிகளிடையே கூறுவார்கள். கிராமவாசிகளிடையே சென்று 'அந்தோ, உங்கள் தானியத்தை சர்க்கார் கொள்ளையடித்துக் கொண்டு போகிறது' என்பார்கள். இவர்களுடைய மாய்மலப் பிரசாரத்தை முறியடிக்க எனது தொகுதியில் பொதுக்கூட்டம் போட்டேன், முதலமைச்சரும் வந்திருந்தார், 'பனிரெண்டணவுக்கு அரிசி கொடுக்க முடியாது, புஞ்சை தான்யம் ரூபாய்க்கு மூன்று படி கொடுக்க முடியாது, 500 பேருக்கு ஒரு கடையா, அது அறவே முடியாது' என்று ஆணித்தரமாகக் கூறினேன், என்னுடைய தொகுதியில் உள்ள 3 லட்சம் மக்களும் இதை ஏற்றுக் கொண்டார்கள். கிராம வாசிகளிடையே கொள்முதல் கூடாது, ரூபாய்க்கு 3 படி கொடுக்க கட்டுபடியாகாது எனக் கூறி மீண்டும் தேர்தலுக்கு நிற்கத் தயாராக இருக்கிறேன். யாராவது என்னை எதிர்த்து நிற்க வருகிறீர்களா? என் தொகுதி யென்ன, இந்த ராஜ்யத்தில் உள்ள 25 நகரத் தொகுதிகளை விட்டு, எங்கு வேண்டுமானாலும் யாருடன் வேண்டுமானாலும், கட்சி சார்பாக வென்றாலும் அல்லது கட்சிப் பெயர் இல்லாமலும் போட்டியிடத் தயார், யார் வேண்டுமானாலும் என்னை எதிர்த்து நிற்கட்டும், ஹார்வி மில் தொழிலாளர் வாழும் தொகுதியில் உங்களுக்கு ஓட் கிடைக்கலாம்,





மற்ற இடங்களில் டிபாஸிட் போய்விடும். ஓட்டுரிமை கொடுத்தும் அதை உபயோகிக்காதவர்கள் நகரவாசிகள். எனது ஜில்லாவில் கூட நகரப்பகுதிகளில் 30 அல்லது 40 சதவிகிதமே வாக்குப் பதிவு இருந்தது. இந்த சோம்பேறிகள்தான் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் பெற்று குந்திக் கொண்டே கும்பியை நிரப்பலாம் எனக் கூக்குரலிடுகிறார்கள். குடியாத்தம் தொகுதியில் உணவு விலைகள் பற்றிப் பேச வரும்படி கோதண்டராமன், எம்.எல்.ஏ.-யை அழைத்தேன். அவர் நகரில் பேசும்படி கூறினார். நான் தொகுதிக்குள் கிராமப்புறம் வருகிறீர்களா? என்றேன். அவர் ஒப்புக் கொள்ளவில்லை.

மிளகாய் விலையைக் குறைக்க வேண்டுமாம். எனது முப்பது கிராமங்களில் மிளகாய் உற்பத்திதான் பிரதானமாக நடைபெறுகிறது. ஏக்கருக்கு 500 முதல் ஆயிரம் வரை செலவு செய்து 300-ம், 400-ம் சென்ற 10 ஆண்டுகளாக வருமானம் வந்தது. இந்த ஆண்டுதான் நல்ல விலை கிடைத்திருக்கிறது. அமைச்சரவர்களே! இந்நிலையில் ஏற்றுமதியை நிறுத்தினால் என் தொகுதி விவசாயிகள் அதோகதியாகி விடுவார்கள். அற்பர்களின் கூச்சலுக்கு அஞ்சாமல் ஏற்றுமதி செய்யுங்கள், என் தொகுதிவாசிகள் லாபமடையட்டும்.

புளி விலை குறைய வேண்டுமாம். நகரிலிருந்து புளிய மரத்தை வெட்டிக் கொண்டுவா என விவசாயிக்கு ஆசை காட்டி மரங்களை வெட்ட வைத்து விட்டு, தற்போது புளி விலை குறைய வேண்டுமென்பது புளித்துப்போன வாதம். இதை பொருட்படுத்த வேண்டாம். புளிய மரம் வைத்தவன் பிழைக்கட்டும். அவன் பிழைப்பில் மண் போட வேண்டாம்.

சர்க்கரை வேண்டுமாம் சர்க்கரை. ஒரு பாடல் ஞாபகத்திற்கு வருகிறது :

பாலுக்கு சர்க்கரை இல்லை என்பார்க்கும்
பருக்கையற்ற கூழுக்குப் போட உப்பில்லை
என்பார்க்கும்,
குத்தித் தைத்த காலுக்கு தோல் செருப்பில்லை
யென்பார்க்கும்,
கனக தண்டி மேலுக்கு பஞ்சணையில்லை
யென்பார்க்கும் விசனம் ஒன்றே.

பாலுக்கு சர்க்கரை யில்லை என்றால் அதனால் பட்டினியா கிடக்கிறார்கள்? கூழுக்குப் போட உப்பில்லையே எனும் குக்கிராம வாசிகளின் பிரதிநிதி நான். கும்பி கொதித்து குற்றுயிராய் கிடைக்கும் அவர்கள் சர்க்கரைபற்றி அக்கரை செலுத்தவில்லை. தாங்கள் உற்பத்தி செய்யும் தானியங்களுக்கு கட்டுப்படியாகும் விலைதான் விரும்புகிறார்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் போதவில்லையாம், உணவுப் பொருள்களின் விலை கூட விற்கிறதாம். அதற்காக விலைகள் குறைய வேண்டுமாம். இதற்கு முன்னும் இச்சபையில் கூறி

யிருக்கிறேன். இன்னும் கூறுகிறேன். கட்டுப்படியாகாத சம்பளத்திற்கு வேலை பார்க்க வேண்டாம், மரியாதையாக ராஜினாமா செய்து விட்டு லாபமுள்ள விவசாய வேலையை கிராமங்களுக்குச் சென்று பாருங்கள், அந்த பாட்டாளி மக்கள் வாழுமிடங்களில் பள்ளிக்கு வயது வந்த பிள்ளைகள் 100 இருந்தால் 50 தான் பள்ளியில் படிக்கும். பாக்கி பிள்ளைகள் எங்கே என்றால் வயல் வெளியிலும் வரப்பிலும் வருணன், அருணன், வாயு ஆகிய முத்தேவர்களின் பராமரிப்பில் வாழ்வதைப் பார்க்கலாம். இங்கே ஒருவர் வேலை செய்ய ஒன்பது பேர் உட்கார்ந்து உண்டு களித்து தங்கி உல்லாச வாழ்வு வாழ ஊதியம் போதவில்லையென கத்துகிறார்கள். இந்தக் கதையெல்லாம் இனி மேல் நடக்காது, இந்த கத்தலுக்கு பயந்து விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியாது. குறைக்க வேண்டுமென்று கூறுபவர்கள், புது வரி போட்டு அந்தப் பணத்தைக் கொண்டு கூடுதல் விலைக்கு விவசாயி கேட்கும் விலை கொடுத்து வாங்கி, குறைந்த விலையில் விற்று நஷ்டத்தை சர்க்கார் ஏற்கும்படி கூறுகிறார்களா? திட்ட வட்டமாகக் கூறட்டும். மூன்று படி வேண்டுமாம். இவன் அப்பன் உழுதான் போலிருக்கிறது, மூன்று படி கொடுப்பதற்கு. நிலத்திலே உழுபவனுக்குத் தெரியும். நிழலிலே இருப்பவனுக்கு வெய்யிலின் அருமை எப்படித் தெரியும்? மூன்று படியும் கேட்பான், முப்பது படியும் கேட்பான். மூன்று படி வேண்டுமென்று கிராமத்திலே வந்து மூன்று விரலைக் காட்டினால் "அந்த விரல் மூன்றையும் வெட்டி விடுவேன்" என்று விவசாயி கூறுவது உனக்குத் தெரியும். படி அரிசி பனிரெண்டணாவுக்கு கொடுக்க முடியாது, நியாய விலைக் கடை திறக்க முடியாது, புஞ்சை தானியங்கள் மூன்று படி கொடுக்க முடியாது, தான்யக் கொள்முதல் விவசாயிகளிடம் செய்ய முடியாது என்பதை மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறேன்.

நிலச் சீர்திருத்தம் பற்றி கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக . . .

**Sri P. U. SHANGUBAM**: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்த மாமன்றத்தில் ஒரு கனம் அங்கத்தினர் மற்ற கனம் அங்கத்தினர்களைப் பார்த்து சவால் விடுவது முறைதானா, அதைச் சட்டம் அனுமதிக்கிறதா என்று கேட்கிறேன்.

**DEPUTY SPEAKER**: சவால் இல்லை. It is not a point of order. The Hon. Member has not said anything against any member.

**Sri P. U. SHANMUGAM**: சவால் விடக்கூடாது என்று விதிகள் சொல்கின்றனவே . . .

**Sri M. KARUNANITHI**: கனம் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் துரோணாச்சாரியார் மாதிரி விரலை வெட்டி விடுவேன் என்று சொல்கிறார்களே, அது ஒழுங்குக்கு உட்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.





**DEPUTY SPEAKER**: கதையிலே இருக்கிறதைச் சொல்கிறார். அது சொந்தமாகச் சொல்வது இல்லை. The Hon. Member may continue.

**Sri P. S. CHINNADURAI**: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்தச் சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிற வாக்காளர்களின் ஒரு பகுதியினரைப் பார்த்து, 'சோம்பேறிகள்' என்று குறிப்பிடுவது முறையாகுமா?

**DEPUTY SPEAKER**: வேலை செய்யாதவர்கள் சோம்பேறிகள் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர்களைச் சொல்லவில்லை. வேலை செய்யாதவர்கள் சோம்பேறிகள்.

**Sri P. S. CHINNADURAI**: வோட்டு செய்வதற்கு வராதவர்கள் சோம்பேறிகள் என்றார்களே . . .

**DEPUTY SPEAKER**: அதைப்பற்றிக் கவலை இல்லை. It is not unparliamentary.

**Sri P. S. SANTHANAM**: கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள் 'வோட்டு வாங்குவதற்கு என் தொகுதிக்கு வாருங்கள்; மூன்று விரல்களை வெட்டி விடுகிறேன்', என்று. வோட்டு வாங்குகிறவர்கள் அங்கத்தினர்களாகத்தானே இருக்க வேண்டும்?

**DEPUTY SPEAKER**: The Hon. Member may continue his speech.

**Sri N. R. THIAGARAJAN**: தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தம் பற்றி கவர்னர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதுவும் மனதிற்குச் சந்தோஷமாக இருக்கும்.

**DEPUTY SPEAKER**: கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும் போது மற்றவர்களைத் தாக்கிப் பேசாமல் இருக்கவேண்டும். பேசும்போது பார்லிமெண்டரி வார்த்தைகளையே உபயோகிக்க வேண்டும். 'அன்பார்லிமெண்டரி' வார்த்தைகளைப் பேசக் கூடாது.

**Sri N. R. THIAGARAJAN**: ஒருவரைத் தாக்கிப் பேசி எனக்கு வழக்கமில்லையே. தனி நபரையோ கட்சியையோ தாக்கிப் பேசும் வழக்கம் எனக்கு கிடையாது.

நிலச் சீர்திருத்தம் பற்றி ஒரு முக்கியமான அறிக்கையை கவர்னர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை வாழ்த்துகிறேன்; வரவேற்கிறேன். நிலச் சீர்திருத்தம் அவசியம் வர வேண்டும். புதிதாக ஒரு கட்சி தோன்றியிருக்கிறது. எந்தப் பேரில் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கு இருக்கிறார்களோ தெரியவில்லை. கா.சி.க.வோ, ஜ.கா.சு.கா.வோ தெரியவில்லை.

மூன்று வருஷத்தில் மூன்று பேரை மாற்றிக்கொண்டே இருக்கிறார்கள். எங்கோ பேசும்போது, 'நிலம் என்பது மனைவிக்குச் சமானம்; அதை யாரும் பிறருக்குக் கொடுக்க முடியாது, கொடுக்க மாட்டோம்' என்று பெரியவர் பிரசங்கம் செய்துவிட்டு வந்துவிட்டார்கள். நிலம் என்பது மனைவிக்கு ஒப்பானால் 'சப்-ரிஜிஸ்தரார் ஆபீசில் சென்று பார்த்தால், அங்கே பத்திரங்கள் பதிவு செய்யப் படுவதைப் பார்க்கிறோமே, நிலத்தை ஒத்தி வைக்கிறார்கள். குத்தகைக்கு விடுகிறார்கள். அடமானம் வைக்கிறார்கள், இன்னும் வாரத்திற்கு விடுகிறார்கள். இதற்கெல்லாம் என்ன செய்வது என்று யோசிக்கவேண்டியிருக்கிறது. நிலத்தை மனைவிக்கு ஒப்பிட்டு வியாக்கியானம் செய்வதைக் கேட்டுவிட்டு, நிலத்தை யாரும் எடுக்கக் கூடாது, தொட முடியாது, அடமானம், ஒத்தி வைக்கக்கூடாது என்று கோரி சட்டதிட்டங்களை மாற்றி விடுவார்களோ, அதனால் நாம் பின்தங்கி விடுவோமே என்று பெருவாரியாக விவசாயிகள் பயப்படுகிறார்கள். தயவு செய்து அம்மாதிரி வியாக்கியானங்களை யெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க வேண்டாம் என்று அமைச்சரவையைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை வெகு சீக்கிரத்திலேயே கொண்டு வரவேண்டுமென்று அமைச்சர் அவையை நான் கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டு வர வேண்டும். இந்தச் சட்டசபைக் கூட்டத்திலேயே அத்தகைய சட்டம் வரும் என்று எதிர்பார்த்தேன். வராமல் போய்விட்டதற்காக நான் வருந்துகிறேன். சீக்கிரமாக அது வர வேண்டும். அப்படி வருமானால், அதைக் கொட்டு மேளத்துடன் வரவேற்கத் தயாராயிருக்கிறோம், ஒரு எதிர்ப்பும் இல்லாமல், ஏகமனதாக இந்தச் சபையிலே நிறைவேற்றி வைப்பதற்கு வேண்டிய ஆதரவைக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம் என்று கூறிக்கொண்டு, கவர்னர் உரையை ஆதரித்து என் உரையை முடிக்கின்றேன். ஜெய்ஹிந்த்.

* SRI S. RAMALINGA PADAYACHI: சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி செலுத்தும் முகத்தான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் முதல் முதலாக சட்டமும் ஒழுங்கும் இந்த ஆண்டில் பாதுகாக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். அது மிகவும் வரவேற்கத்தக்கது. சட்டத்தினால் தான் சட்டத்தை பாதுகாக்க முடியும். ஆகவே, வள்ளுவர் கூறுகிறார்:

"கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

தீங்கு செய்பவர்களை அரசன் தண்டிப்பது, களையை வெட்டி பயிரைக் காப்பதுபோல் ஆகும். ஆகவே, சட்டத்தினாலேதான் சட்டம் காக்கப்படுகிறது. சட்டத்தைப் பாதுகாப்பது மக்கள் பொறுப்போடு அல்லாமல், மாநில அமைச்சர்களும் சட்டத்தைப் பாதுகாக்க வெகுவாக பாடுபடுகிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன்னால் சிதம்பரம் தொகுதியில் ஒரு கலவரம் ஏற்பட்டபொழுது,





நமது அமைச்சர் அவர்கள் அங்கு விரைந்து சென்று மக்களிடையே ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தினார். மக்களிடையே ஒரு குழப்பம் ஏற்பட்டால், அமைச்சர்களே நேரில் சென்று அங்கே ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதை சென்னை மாகாண அமைச்சர்களிடத்தில் தான் காணலாம், மற்ற இடங்களில் பார்த்திருக்க முடியாது என்பதைக் குறிப்பிட ஆசைப் படுகிறேன்.

நமது மாநிலத்தில் இந்த ஆண்டிலே நல்ல பருவ மழை பெய்திருப்பதாக கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார். எங்கள் தொகுதியில் இந்த வருஷம் நன்றாக மழை பெய்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் நல்ல மழை பெய்திருக்கிறது. ஆகையினால் தான் திருவள்ளுவர் கூறியிருக்கிறார்:

"வான்நின்று உலகம் வழங்கி வருதலான்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று."

உலகத்தில் நன்றாக மழை பெய்தால், நல்ல சுபிட்சம் ஏற்படும் என்று கூறியிருக்கிறார். ஆகையினால் இந்த ஆண்டில் நல்ல மழை பெய்திருப்பதால், மக்களுடைய பசி, பிணி நீங்கும், தானியங்கள் நன்றாக விளையும், ஈகை, அறம் நன்றாக நடக்கும் என்று நினைக்கிறேன். நல்ல மழை பெய்திருப்பதால் எங்கு பார்த்தாலும் குளங்களில் தண்ணீர் நிரம்பியிருக்கிறது. புஞ்சை நிலங்களில் நன்றாக வேளாண்மை கிடைக்கும். பயிர்கள் செழுமையாக இருக்கிறது. எங்கள் பகுதியில் நல்ல மழை பெய்திருப்பதால் எந்த விதமான குறைவும் இல்லை என்று நினைக்கிறேன். நான் பல நண்பர்களைப் பார்த்துப் பேசும்பொழுது அவர்கள் க்ஷேம சமாசாரத்தைவிட முதலில் 'உங்கள் பகுதியில் மழை பெய்ததா' என்று தான் விசாரிப்பேன். எல்லா நண்பர்களும் இந்த வருஷம் நல்லபடியாக மழை பெய்தது என்று சொன்னார்கள். சில பேர்கள் கொஞ்சம் மழை குறைவு என்று குறிப்பிட்டார்கள். கவர்னர் பெருமானும் அதுபோலவே சில பகுதிகளில் மழை கொஞ்சம் குறைவாகப் பெய்திருப்பதாகவும், மற்ற பகுதிகளில் நல்ல மழை பெய்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படி நல்ல மழை பெய்திருந்தாலும், இந்தத் திருப்திகரமான சூழ்நிலையில் அகவிலை ஏறியிருப்பது குறித்து அது வருந்தக்கூடிய விஷயம் என்று சொல்லியிருக்கிறார். அகவிலை ஏறிவிட்டது என்று சொல்ல முடியாது. 1948—49-லிருந்து 1952—53 வரையில் 60 படி மூட்டை 40 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறோம். இந்த வருஷத்தில் 26, 27 ரூபாய் விற்கிறது என்று சொன்னால், அதிகமாக விலை ஏறிவிட்டது என்று சொல்ல முடியாது. ஏதாவது பிரசாரத்திற்கு வேண்டுமானால் அவ்வாறு சொல்லலாம். கிராமத்தை எடுத்துக் கொண்டால், கிராமவாசிகள் அகவிலை ஏறிவிட்டதாக யாரும் சொல்லமாட்டார்கள். விவசாயத்திற்கு வேண்டிய உரம், பிண்ணாக்கு இவைகள் 1948-49 முதல் 1952-53 வரையில் விற்ற விலைக்கும், இப்பொழுது விற்கிற விலைக்கும் எவ்வளவு விலை அதிகமாக ஏறியிருக்கிறது என்பதை கவனிக்கவேண்டும். ஆக்வே, அகவிலை ஏறிவிட்டது என்று சொன்னால் தெரிந்தோ, தெரியாமலோ சொல்லுகிறார்களே தவிர, அகவிலை ஏறிவிட்டதாக ஒப்புக்கொள்ள

[Sri S. Ramalinga Padayachi] [9th December 1959

முடியாது. உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்று ஒரு பழமொழி உண்டு. ஒரு விவசாயி விவசாயம் செய்வதற்கு ஏற்படக்கூடிய செலவைக் கணக்குப்போட்டுப் பார்த்தால், 4 ஏகரா வைத்துக்கொண்டு வேளாண்மை செய்யக் கூடிய விவசாயி கண்டு முதல் செய்து பார்க்கும்பொழுது அவனுக்கு ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவனுக்கு வரக் கூடிய வருமானம் கூட வராது. அவன் குடும்பத்தை நடத்து வதற்கு அவனுடைய வருமானம் கட்டுபடியாகாது. ஏற்கனவே 2, 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்த விலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு மூட்டைக்கு 2 ரூபாய்க்கு மேல் அதிகமாக விலை ஏறியிருக்க வில்லை. நாலு ஏக்கர் பயிரிடும் ஒரு விவசாயிக்கு தன்னுடைய குடும்பத்தின் உணவுக்குப்போக அதிகம் 8 மூட்டை நெல் கிடைக் கிறது என்று வைத்துக்கொண்டால், அவனுக்கு மூட்டைக்கு 2 ரூபாய் வீதம் அதிகமாக 16 ரூபாய்தான் கிடைக்கும். ஏற்கனவே இருந்த நெல் விலைக்கும், ஏற்கனவே இருந்த உரம், பிண்ணாக்கு இவைகளின் விலைக்கும், இப்பொழுது நிலவும் அதிகப்படியான உற்பத்தி செலவுக்கும், நெல் விலைக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால், அகவிலை ஏறியிருப்பதாகச் சொல்வதற்கு இடமே இல்லை. ஏதோ நகர்புறத்தில் இருப்பவர்கள், தொழிலாளிகள் இவர்களெல்லாம் அகவிலை ஏறிவிட்டது என்று சொல்லலாமே தவிர, கிராமத்தில் விவசாயம் செய்யக்கூடியவர்கள் அகவிலை ஏறினதாக கூற முடியாது. நகரத்தில் இருப்பவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு சினிமா காட்சிகள் பார்க்கிறார்கள். மோட்டார் வைத்துக்கொண் டிருக்கிறார்கள். கிராமத்திலுள்ள விவசாயிகளைப் பார்த்தால், அதுவும் என். தொகுதியைப் பார்த்தால் அங்கே ஒரு கார் கூட கிடையாது. எங்கு பார்த்தாலும் ஒரே குடிசைக் காடு தான். வேறு ஒன்றுமில்லை. விலைவாசியினால் நகரவாசிகள்தான் கஷ்டப் படுகிறார்கள் என்று சொல்லிக்கொள்ளலாமே தவிர, கிராமவாசி களுக்கு அது பொருத்தமல்ல. கிராமவாசிகள் விலை ஏற்றத்தை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். நகர்புறத்தை சேர்ந்த ஒரு செட்டியார் தான் வெளியூருக்குச் சென்ற பொழுது விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. உழுது பயிரிடுவது 9 பங்கு லாபம் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது! அதனைப் பார்த்தார். பிறகு அவர் விவசாயத்திற்கு ஒரு நிலத்தை குத்தகைக்கு எடுத்து, தன் தொழிலைப் பார்த்துக்கொண்டு கூலி ஆள் வைத்து விவசாயம் செய்தார். விவசாயக் கணக்கை எடுத்துப் பார்த்தால் 9 பங்கு நஷ்டம் வந்தது. மற்றவர்களிடம் இதைப்பற்றிச் சொன்னார். மற்றவர்கள் சொன்னார்கள் அவருக்கு 'அதற்குக் கீழே எழுதியிருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? நிலத்திற்கு உடையவன் இல்லாவிட்டால் 9 பங்கு நஷ்டம் என்று குறிப்பிட்டிருக்கிறதே' என்று. உடைய வன் நேராகப் போகாவிட்டால் ஒன்றும் இருக்காது, 9 பங்கு லாபத்திற்குப் பதில் 9 பங்கு நஷ்டம்தான் வரும். விவசாயியின் மகன் நேராக நிலத்தில் இறங்கி உழுது பயிரிடாவிட்டால், தானே சாகுபடி செய்யாவிட்டால், வேறு ஒருவரிடம் பயிரிடுவதற்கு ஒப்படைத்தால் நஷ்டம்தான் ஏற்படும். நேராக நிலத்தில் இறங்கி சாகுபடி செய்யாவிட்டால், 4 ஏக்கர் வைத்திருக்கும் விவ



9th December 1959] [Sri S. Ramalinga Padayachi]

சாயிக்கு ஒவ்வொரு ஏகராக குறைந்து, கடைசியில் அவன் கூலி வேலை செய்யவேண்டிய நிலைமைதான் ஏற்படும். ஆகவே, இந்த நிலைமையில் அகவிலை ஏறியிருப்பதாகச் சொல்ல முடியாது. அரசாங்கம் எடுத்து நடத்திய விவசாயப் பண்ணையிலே நஷ்டம் தான் ஏற்பட்டது. விவசாயி நேரிடையாக பயிர் செய்தால்தான் லாபம் இருக்கும். நகரமக்கள் எவ்வளவோ உல்லாசமாக இருக் கிறார்கள். கிராமத்திலுள்ள விவசாயிதான் கஷ்டப்படுகிறான். அப்படியிருக்கும்பொழுது அகவிலை ஏறிவிட்டது என்று சொல்லு வது தகாது. என்னுடைய தொகுதியில் அகவிலை ஏறியிருக்கிறது என்று யாரும் ஒப்புக்கொள்ள முடியாது.

சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவேண்டுமென்று கவர்னர் உரையில் குறிப்பிட் டிருக்கிறது. இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் பல நீர்த் தேக்கங்கள் இருந்தாலும் கூட, இன்னும் சிறு சிறு ஓடைகளில் அதிகமாக நீரைத் தேக்கலாம். காவேரியில் தண்ணீர் அதிகமாக வழிந்து ஓடக்கூடிய காலங்களிலே எந்தெந்த இடத்திலே அதைத் தேக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ அந்த இடத்திலே வாய்க் கால் வெட்டி அதிலிருந்து தண்ணீர் பாய்ச்சினால் உணவு உற்பத்தியை அதிகரிக்கலாம். உடையார்பாளையம், பெரம்பலூர் தாலுக்காக்களுக்கு மோகனூர் ஆகிய இடங்களில் வாய்க்கால் வெட்டி காவேரியிலுள்ள அதிகமான தண்ணீரை விட்டால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். அம்மாதிரி செய்தால் உடையார் பாளையம், பெரம்பலூர் முதலிய இடங்களிலுள்ள அநேக ஏரிகளை நிரப்பலாம். அரசாங்கம் இம்மாதிரி ஒரு திட்டத்தை ஏற்று நடத்தினால் உணவு உற்பத்தியை அதிகப்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow. 1-30 p.m.

The House then adjourned.

### VII—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*A. Statutory Rules and Orders.*

45. *Amendment to the Madras Liquor Permit (Personal Consumption) Rules,* 1956, *issued in G.O. Ms. No.* 3244, *Home, dated* 14*th November* 1959. [*Laid on the table of the House under Section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 (*Madras Act X of* 1937).]

46. *Amendment to the Madras Public Service Commission Regulations,* 1954, *in regard to the inclusion of certain temporary posts in the Madras Industries Subordinate Service within the commission's purview issued with G.O. Ms. No.* 2761, *Public (Service), dated* 24*th October* 1959. [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

[9th December 1959

*B. Reports, Notifications and other papers.*

14. *Review on the working of the Madras Industrial Investment Corporation, Limited, Madras, for the year ended 30th June* 1958.

15. *Short review of the activities of the Agricultural Department for the first half-year*, 1958 (*July to December*, 1958).





APPENDIX.

[Vide answer to clause (b) of starred question No. 68 asked by Sri S. Lazar at the meeting of Legislative Assembly held on 9th December 1959, page 230 supra.]

***Stations where " May I Help You " Squads are functioning.***

| *Districts.* (1) | *Stations.* (2) |
|---|---|
| Madras City Police .. .. | (i) Mylapore. |
| | (ii) Triplicane. |
| | (iii) Flower Bazaar. |
| | (iv) Vepery. |
| | (v) Control room in the City Police Office. |
| Railway Police, Tiruchirappalli. | (vi) Madras Egmore Junction. |
| | (vii) Madras Central Junction. |
| | (viii) Madurai Junction. |
| | (ix) Coimbatore Junction. |
| | (x) Tiruchirappalli Junction. |
| Coimbatore .. .. .. | (xi) Coimbatore. |
| Madurai Urban .. .. | (xii) Madurai. |
| Salem .. .. .. | (xiii) Salem. |
| The Nilgiris .. .. .. | (xiv) Ootacamund (for summer season only). |
| Tirunelveli .. .. .. | (xv) Tuticorin. |
| | (xvi) Tirunelveli Town. |
| Ramanathapuram .. .. | (xvii) Virudhunagar. |
| Tiruchirappalli .. .. | (xviii) Tiruchirappalli Town. |
| Tanjore .. .. .. | (xix) Kumbakonam. |
| North Arcot .. .. .. | (xx) Vellore. |
| | (xxi) Vaniyambadi. |
| | (xxii) Tiruvannamalai. |
| Chingleput .. .. .. | (xxiii) Conjeevaram. |
| South Arcot .. .. | (xxiv) Chidambaram. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Thursday, 10th December 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—OBITUARY REFERENCE TO SRI P. SELVARAJ.

**MR. SPEAKER :** *1952-ம் ஆண்டிலிருந்து 1957-ம் ஆண்டு வரை விளாத்திக்குளம் தொகுதியிலிருந்து வந்து இந்த சட்டசபை அங்கத்தினராகயிருந்த பி. செல்வராஜ் அவர்கள் இறந்துபோன செய்தியை நான் உங்களுக்கு வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். உங்கள் அனுதாபத்தை தெரிவிக்கும் வகையில் ஒரு நிமிஷம் நிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*சபை அங்கத்தினர்கள் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக நின்றார்கள்.*

## II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : Now we will take up questions postponed from 7th December 1959.

*Admission to Professional Colleges*

* 15 *Q.*—SRI T. T. DANIEL (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether Christians amongst the Scheduled Castes are treated on a par with the Hindus in those castes in the matter of admission to Government colleges with special reference to professional colleges; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) No, Sir. Christians who are themselves converts from a Scheduled Caste are treated as ' Backward ' and counted towards the quota reserved for Backward Classes. Other Christians among Scheduled Castes are treated as Non-Backward. It is considered that they are not in need of the reservation.

* 16 *Q.*—SRI T. T. DANIEL (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether Christians amongst Backward Classes and Most Backward Classes are treated on a par with the Hindus in those classes in the matter of admission to Government colleges with special reference to professional colleges; and

(b) if not, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) & (b) No. Sir. Christian converts from Backward and Most Backward Classes are treated as non-backward for purposes of admission to all educational institutions as it is considered that they are not in need of the protection offered by the reservation.

* 17 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether seats reserved in the Medical and Engineering Colleges for the students who have returned to India from Ceylon have been filled in 1957–58 and 1958–59?

THE HON. SRI C. SUBRAMANIAM: One seat was reserved for the Pre-Professional course leading to the M.B.B.S. degree during 1958–59 and this was filled up. No such reservation was made in 1957–58. As regards Engineering Colleges, two seats were reserved during each of the years 1957–58 and 1958–59 but there were no applications.

SRI A. A. RASHEED: May I know how they were filled up? Who were filled up in those vacancies?

THE HON. SRI C. SUBRAMANIAM: They have gone back to the general pool.

SRI K. VINAYAKAM: May I know whether there is any reciprocal system obtaining in Ceylon of giving seats to students of Madras State if they happen to seek admission in that island?

THE HON. SRI C. SUBRAMANIAM: I may ask the hon. Member to look into the question. This is with reference to students who had returned to India from Ceylon. These are Indian nationals who had returned to India. I do not think any reciprocal arrangement could arise from this.

*Nursery schools in Tamil medium*

* 24 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to open nursery schools with Tamil as medium of instruction?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI A. A. RASHEED: Are there any nursery schools run by private bodies wherein the medium of instruction is Tamil and for which Government are giving aid?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not have the information here.





*Tamil medium in Coimbatore colleges*

* 25 Q.—SRI A. A. RASHEED, SRI N. K. PALANISAMI: } Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have consulted and taken the advice of the University of Madras regarding the introduction of Tamil as medium of instruction in Colleges in Coimbatore in 1960–61?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Vice-Chancellor of the Madras University was consulted and his advice taken.

SRI A. A. RASHEED: May I know whether the University Senate and Academic Council were consulted and if so, whether their consent was taken?

THE HON. SRI C. SUBRAMANIAM: I have already stated in my answer that the Vice-Chancellor of the Madras University was consulted and I suppose consultation with Vice-Chancellor is as good as consulting the University.

SRI N. K. PALANISAMI: தமிழ் மொழியை பாக்கியிருக்கக் கூடிய காலேஜ்களிலும் விஸ்தரிப்பது சம்பந்தமாக அவர்கள் ஒத்துக்கொண்டார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதுபற்றி ஒரு அரசாங்க அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை அவர்கள் ஒப்புக்கொண்டு, அவர்கள் ஒப்புக்கொண்ட அடிப் படையில்தான் அந்த அரசாங்க அறிக்கை அமைக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED: Will Tamil be introduced as medium of instruction in all colleges irrespective of the outcome of the experiment that we are going to conduct in Coimbatore College?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not understand the word "irrespective". My opinion is that it would be a success and it would be introduced in other colleges also. If any hon. Member has got any doubt let him wait and see.

SRI K. VINAYAKAM: Is it a fact that Government have stipulated that colleges that do not adopt this system of introducing Tamil as medium of instruction after 1960–61 would be denied the grants given by Government? If some colleges refuse to adopt this system, will Government stop giving them the grant?

THE HON. SRI C. SUBRAMANIAM: The question does not arise in the year 1960–61. If the hon. Member goes through the Government order we have issued, he would find that only from the year 1963–64, this problem would arise. In the Government Order itself the year indicated is 1963–64. We have stated that if any college were to offer English as medium for the B.A. course from 1963–64 onwards, they may not get Government's assistance.

[10th December 1959

SRI A. VEDARATHNAM : கல்லூரிகளில் இதுவரையில் ஆங்கில மீடியத்தில் பாடங்கள் போதிப்பது, விஞ்ஞானம் போன்ற பாடங்கள் விஷயமாக தமிழில் நூல்கள் தயாராகிவிட்டதா? இல்லையானால் அதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தயவுசெய்து சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது நாம் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய திட்டம் பி.ஏ. வகுப்புகளில் தமிழை போதனை மொழியாக்க வேண்டுமென்பது. விஞ்ஞானம் அதிகமாக கற்பிக்கக்கூடியது பி.எஸ்.ஸி. திட்டத்தில் பி.ஏ.யிலும் சில விஞ்ஞான பாடங்கள் போதிக்கப்படுகின்றன. ஆனால் பி.ஏ.யில் வருகின்ற எல்லா பாடங்களையும் தமிழில் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பது சர்க்காரின் திட்டம். அதற்காக இப்பொழுது புத்தகங்கள் தயாராகிக்கொண்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Do the Government realise that by introducing this kind of regional language as medium of instruction in the colleges, the opportunity of employment of our graduates will be limited only to our State where State language is Tamil and this will be impairing the prospects of our graduates from getting employment outside the State, viz., in Central Government and foreign countries?

THE HON. SRI C. SUBRAMANIAM : We are not undertaking a wholesale change of the medium of instruction. As I already indicated this is restricted to the B.A. degree course. There seems to be a good deal of misunderstanding with reference to the steps already taken. Many people seem to thing that English will have no place at all in the curriculum of studies. It is not so. As far as English standard is concerned, in Part I of B.A. degree course, where Tamil is medium of instruction, we have said that English standard should be maintained and if possible that standard might also be upgraded to some extent. That is why Government have now undertaken a scheme of upgrading the teaching of English from the V standard onwards.

SRI V. S. MANICKASUNDARAM : தமிழில் விரிவுரைகள் நிகழ்த்துவதற்கு விரிவுரையாளர்கள் தயார் செய்யப்பட்டிருக்கிறார்களா? இல்லையானால் தயார் செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

*Switch over to regional language*

* 26 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Union Minister for Education has drawn the attention of the Government to the recommendation of Kunzru Committee that the country was not yet ready to switch over to regional language?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. The Government have not also received the report of the Kunzru Committee.



10th December 1959]

SRI A. A. RASHEED : What is the view of the Government with regard to Kunzru Committee's recommendations?

MR. SPEAKER : Government have stated that they have not received that Committee's report. How can they then give their views on it?

*Unemployment among the educated*

* 91 Q.—SRI N. K. PALANISAMI AND SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Centre have formulated any scheme for the educated unemployed and communicated to this Government for their reaction during 1959; and

(b) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) Based on the model scheme formulated by the Government of India, a scheme for the establishment of three work and orientation centres for the educated unemployed in this State, one each at Coimbatore, Madurai and Madras, has been sanctioned in August, 1959. A statement[a] showing the salient features of the scheme is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : நம் மாகாணத்தில் எவ்வளவோ பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்? இந்தத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோயம்புத்தூர், மதுரை சென்டர்களில் ஒவ்வொரு சென்ட்ரலிலும் 100 பேர்கள் அமைப்பதாகவும் கிண்டியில் ஆகஸ்ட் 60-லிருந்து 100 பேர்கள் வைத்துக்கொள்வது என்றும் இப்பொழுது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் தகவல் என்னிடம் இல்லை.

SRI P. G. MANICKAM : இந்தத் திட்டத்திற்காக மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்ட உதவி தொகை எவ்வளவு? அத்துடன் நம் மாகாண சர்க்காரால் செலவழிக்கப்படும் தொகை எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய அரசாங்க உதவி ரூ. 16,97,000 வரையில் கொடுக்கப்படும்.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்தத் திட்டத்தின் மூலமாக பி.யு.ஸி. அதாவது இண்டர்மீடியட் வகுப்பில் தோல்வி அடைந்தவர்களுக்கும் இந்தத் திட்டத்தில் இடமுண்டு. ஆறுவது பாரம் வகுப்பில் தேறினவர்களுக்கும் தேர்வு பெறாமல் இருப்பவர்

[a] Printed as Appendix I on pages 458–459 infra.

களுக்கும் மற்ற படித்தவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலமாக உதவி கிடைக்குமா? இதே போன்ற வேறு வகுப்பில் படித்து வேலையில்லாது இருப்பவர்களுக்கும் இந்தத் திட்டம் உதவிகரமாக இருக்குமா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: குறிப்பிட்ட இந்தத் திட்டத்திற்குத்தான் என்னிடம் தகவல்கள் இருக்கின்றன. மற்றவர்களுக்கு வேலை அளிப்பது பற்றிய காரியத்தில் வேறு கவனம் செலுத்தப்படும்.

**SRI T. T. DANIEL**: Sir, if the Government have not taken so far the statistics of the educated unemployed in our State, will agency of the municipalities and panchayats so that we may know the acuteness of the problem?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: I may tell the hon. Member that the Government are quite well aware of the acuteness of the problem, and they have got the statistics.

*Unemployment among the educated*

* 92 *Q*.—**SRI P. G. MANICKAM**: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) படித்து வேலையில்லாதிருப்போருக்காக தொழில் பயிற்சி நிலையங்களை மத்திய சர்க்காரின் உதவியோடுகூட சென்னை சர்க்காரால் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு வருகிறது?

(ஆ) மேற்கண்ட ஒவ்வொரு தொழில் பயிற்சி நிலையங்களிலும், வருடந்தோறும் எத்தனை பேர்களுக்கு என்னென்ன விதமான தொழில் பயிற்சிகள் கொடுக்கப்படும்?

(இ) இத் திட்டமானது எப்போது அமுலுக்கு வரும்?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: A note* containing the particulars required is placed on the table of the house.

**SRI P. G. MANICKAM**: தலைவர் அவர்களே, 1959 நவம்பரில் இதற்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள் என்று தெரிகிறது. தற்போது இதில் மாணவர்கள் சேர்க்கப்பட்டாகி விட்டார்களா? அப்படியானால் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் எத்தனை பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கோவை, மதுரை இந்த இரண்டு சென்டர்களிலும் 1959 நவம்பரிலிருந்து மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். கிண்டியில் 1960 ஆகஸ்டிலிருந்து மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

* Printed as Appendix II on page 460 infra.





**SRI K. B. S. MANI**: இந்தத் தொழில் கல்லூரி நிலையங்களில் சேர்க்கப்படுகின்ற மாணவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் முறைப்படி ரிசர்வேஷன் கொடுத்து சேர்க்கப்படுகிறார்களா? அவர்களுக்கு ஏதாவது ரிசர்வேஷன் ஒதுக்கப்படுகிறதா? அவ்விதம் ஒதுக்கப்படவில்லையென்றால் அதற்கு காரணம் என்ன?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: இது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற திட்டம். இதில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு பயிற்சி அளிப்பது என்பதுதான் சர்க்காரின் நோக்கம்.

**SRI N. K. PALANISAMI**: தலைவர் அவர்களே, படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு இந்தத் திட்டம் அமல் நடத்தப்படுவதாக் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், அப்படியானால் இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு அரசாங்கம் உத்திரவாதம் கொடுக்குமா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: அந்த உத்தேசத்தோடுதான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**SRI T. S. RAMASWAMY**: Sir, are the Government aware of the fact that several of the young men, who got themselves trained in these technical institutions as electricians, and who applied to the Electricity Department, did not get appointments, and that the Electricity Department recruits raw men as N.M.R. and line men? If so, will the Government rectify the position?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: If the hon. Member wants any particulars about the individual cases that he has referred to, I would like to look into them.

*Pony breeding*

* 93 *Q*.—**SRI N. K. PALANISAMI**: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the amount allotted for pony breeding in the Point Calimere area in Tanjore district; and

(*b*) the number of ponies bred in that area?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: (*a*) Rs. 4,500.

(*b*) Sixty ponies including fillies are reported to be available in the area. The scheme for breeding local ponies will be implemented during the current year.

**SRI N. K. PALANISAMI**: ஸார், காங்கேயம் நாட்டிலுள்ள மாடுகளைப் போலவே அங்குள்ள குதிரைகளையும் நன்றாக வளர்ப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: காங்கேயத்திலுள்ள குதிரைகளை வளர்ப்பதுபற்றி இந்தக் கேள்வியில் குறிப்பிடவில்லை. இது கோடிக்கரை (பாயின்ட் காலிமர்)யிலுள்ள காடுகளிலுள்ள குதிரைகளை வளர்ப்பது பற்றியது. ஆதலால் வேறு இடங்களைப் பற்றி இப்போது தகவல் இல்லை.

[10th December 1959

**Sri R. KRISHNASAMI NAIDU** : ஸார், ராமனாதபுரம் ஜில்லாவில் மண்டபம் காடுகளிலுள்ள மட்டக் குதிரைகளை வளர்ப்பதற்கும் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ராமனாதபுரத்தைப் பற்றி தனியாக கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கலாம்.

*Death of a person due to beating by the Police*

* 94 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether one Yesupadam, aged 40, was beaten to death by Arcot Police in May 1958;

(*b*) if so, the details thereof; and

(*c*) the contents of the post-mortem certificate given by Dr. Dorairaj of Ranipet?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The said Yesupadam died in the Scudder Memorial Hospital, Ranipet, on 2—5—1958. It was alleged that the Police had beaten him on 12—4—1958 and that the injuries sustained by him in the course of this beating had caused his death. The Revenue Divisional Officer, Ranipet, held an enquiry into the allegation under P.S.O. 157. The enquiry has established that a few days after he was alleged to have been beaten by the Police, Sri Yesupadam was admitted in the hospital for treatment for fever and that he died of pneumonia and cerebral meningitis.

(*c*) A copy[a] of the post-mortem certificate is placed on the table of the House.

**Sri N. K. PALANISAMI** : ஸார், நான் கேட்டிருப்பது துரைராஜ் என்கிற டாக்டர் பரிசீலனை செய்த ரிப்போர்ட்டின் விவரம் என்ன என்று. ஆனால் இதில் கோபால் என்று இருக்கிறது. அதாவது இந்தக் கேஸ், சாராயக் கேஸில் கைது செய்யப்பட்டபின் அடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள் என்பது தகவல் என்றும் அதன் அடிப்படையில் துரைராஜ் என்பவருடைய ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அப்படியென்றால் அதன் பேரில் போலீஸின் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இந்தக் கேள்வியானது ஏசுபாதம் என்பவர் இறக்கும்படி அடிக்கப்பட்டார் என்று சொல்லப்பட்டதின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுபற்றி. இதைப்பற்றி ஆர்.டி.ஓ. விசாரித்தார். திருட்டுச் சாராயம் இருந்ததாக கேஸ் போடப்பட்டது என்பது உண்மைதான். அவர் ஆஸ்பத்திரியில் இருந்த போது இறந்த போது போஸ்ட்-மார்ட்டம் செய்து கொடுத்த சர்டிபிகேட் இங்கு

[a] Printed as Appendix III on pages 460-461 infra.



10th December 1959]

கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் நிமோனியாவினாலும், மெனிஞ்சிட்டீஸ்-ஸினாலும்தான் இறந்துபோனார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

Sri A. A. RASHEED : Sir, why was not the post-mortem conducted by a medical graduate?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : **Post-mortem** எந்தெந்த முறைகளில் நடத்தவேண்டும் என்றிருக்கிறது. அதன் படிதான் செய்யப்பட்டிருக்கிறது.

Sri N. K. PALANISAMI : May I know, Sir, whether any inquest was made, and, if so, what was the result?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The post-mortem certificate is placed on the table, and I do not have any other particulars about it.

*Study of Sanskrit and Hindi*

*** 95 *Q.*—Sri A. VEDARATHNAM** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

ஹைஸ்கூல்களில் படிக்கும் மாணவர்கள் சமஸ்கிருதமும், அத்துடன் தேசீய மொழியாகிய இந்தியும் படிக்க விரும்பினால் அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறதா ? அதன் விவரமென்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Under the old syllabus, which is now being replaced by the reorganised syllabus, it is possible for a student to study in Forms I to VI, Sanskrit under Part II of the first language and Hindi as an optional third language. Under the new reorganised syllabus, the study of Hindi or Sanskrit will start only in new standard VIII. In new standards VIII to XI, either Hindi or Sanskrit can be studied under Part II of the subject " Languages ", but not both.

**Sri A. VEDARATHNAM** : ஸார், பாரம்பரையாக சமஸ்கிருதம் படித்து அதிலே நிபுணர்களாக தேர்ச்சி பெற்றவர்களின் பிள்ளைகளும், தேசீய மொழியாக இந்தியைப் படிப்பதற்கு வழி செய்து கொடுக்கவேண்டும். இப்போதுள்ள நிலையில் பள்ளிகளில் சமஸ்கிருதம், இந்தி இரண்டையும் சேர்த்து படிப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது. இதை மாற்றி இரண்டையும் படிப்பதற்கு ஏதாவது வசதி செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : சமஸ்கிருதம் படிக்க வேண்டும் என்றால் வீட்டில் வைத்தே படித்துக்கொள்ளலாம். இந்த மொழி பிரச்னையைப்பற்றி எல்லாக் கட்சிகளும் சேர்ந்திருந்து ஆலோசித்து முடிவு எடுக்கப்பட்டாய்விட்டது. இனிமேல் இதை மாற்றுவதற்கு சர்க்காருக்கு உத்தேசமில்லை.

[10th December 1959

*Betterment levy in the Lower Bhavani Project Area*

* 96 *Q.*—SRI A. R. MARIMUTHU (on behalf of Sri K. R. Nallasivam) : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கீழ்ப்பவானி பிரதேசத்தில் எத்தனை கிராமங்களுக்கு அபிவிருத்தி வரி அதிகாரிகள் பரிசீலனை முடித்து வரியை நிர்ணயித்து உள்ளனர் ?

(ஆ) ஏக்கருக்குக் குறைந்த பட்சம், அதிக பட்சம் எவ்வளவு தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Betterment Levy Officer has completed the investigation in respect of 'Perumugai-Athani Branch channel' and 'Mewani Distributary' and the proposals are before the Advisory Committee. The preliminary investigation in respect of 'Punjathalayur extension channel' has been completed. But the betterment contribution has not been determined for any village in the Lower Bhavani Project pending further examination of the entire system.

(*b*) The highest and lowest rates of levy are tentatively fixed at Rs. 326 and Rs. 183, respectively, for 'Perumugai-Athani Branch channel' and 'Mewani Distributary'.

MR. SPEAKER : Question No. 97.

THE HON. SRI P. KAKKAN : Sir, hon. Members have put some important questions. I will answer all the questions addressed to me to-morrow. They may therefore be postponed to to-morrow.

MR. SPEAKER : Questions 97, 105, 106, 114 and 117 addressed to the Hon. the Minister for Works will be taken up to-morrow.

*Fee for application for bus routes*

* 98 *Q.*—SRI T. L. SASIVARNA THEVAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that applicants for bus routes are required to pay Rs. 12 as application fees; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Yes, Sir. This fee is prescribed in rule 167 of the Madras Motor Vehicles Rules, 1940.

SRI T. L. SASIVARNA THEVAR : இதில் அனுமதி கிடைக்காதவர்களுக்கு இந்தக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படுமா ? இவ்விதம் கொடுக்கப்படாததினால் அவர்கள் பெரிதும் ஏமாற்றமடைகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை. இவ்விதம் குறைந்த கட்டணம் வைத்திருப்பதின் நோக்கம் பலருக்கும் இந்த ரூட்டுகளுக்கு மனு செய்து



10th December 1959]

அவர்களுக்கும் கிடைக்க சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்பது தான். இந்தக் கட்டணம் 12 ரூபாய் என்றிருக்கிறது, இதைக் கொண்டு கணக்கிட்டுப் பார்த்தால், பரிசீலனை செய்வதற்கு ஆகும் செலவு கூடுதலாகத்தான் இருக்கிறது. ஆகவே, இந்தக் கட்டணத்தை உயர்த்தினால்கூட நல்லது என்று நம்புகிறேன்.

*Road repairs during nights*

* 99 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal before the Government to have the road repairs in the City of Madras and the major cities in the State done during night for avoiding traffic congestion during day time?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The answer is in the negative.

SRI S. LAZAR : Is it a fact that such a system is being followed in some of the European countries and that it avoids congestion of road traffic?

MR. SPEAKER : How can the Hon. Minister answer that question?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : There is no information from other countries, Sir.

SRI K. ANBAZHAGAN : சென்னை நகரத்தில் உள்ள நெடுஞ்சாலைகளில் பகலில் பழுதுபார்ப்பதால் போக்குவரத்து தடைப்படுவதுடன் மட்டுமன்றி சில சமயங்களில் விபத்துக்களும் ஏற்படுகின்றனவாதலால், பழுதுபார்க்கும் வேலையை இரவு நேரத்தில் செய்யவும் அவ்வாறு செய்து இவ்வேலையைத் துரிதப்படுத்தவும் அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இரவு நேரங்களில் ரோடுகளைப் பழுது பார்ப்பதில் கூடுதலான சிரமங்கள் இருக்கின்றன. இந்த யோசனை ஏற்கெனவே ஆலோசிக்கப்பட்டதில் இது சாத்தியப்படாது என்று தீர்மானிக்கப்பட்டது. எனவேதான் இப்பொழுது இரவு நேரத்தில் ரொடுகளைப் பழுது பார்ப்பதில்லை.

SRI A. A. RASHEED : Will the Government consider the question of repairing these at least during the summer, if not in the other months?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Where the work is very necessary and it is not possible to do it in the day-time, the work is done during the nights. Otherwise, it will be waste of time and money as it will be more difficult to do it in the nights than in day-time.

[10th December 1959

**SRI S. LAZAR** : இந்த முறை இதற்கு முன்பு பரீட்சார்த்தமாகவாவது மேற்கொள்ளப்பட்டதா, அல்லது அவ்வாறு பரீட்சார்த்தமாக முயற்சி செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : ஆலோசனை செய்யப்பட்டதில் பிறகு இது சாத்தியப்படாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

**SRI K. ANBAZHAGAN** : பகற்காலத்தில் ரோடுகளைப் பழுது பார்க்கும் வேலையை நிறுத்தாவிட்டாலும், இரவு நேரத்திலும் பழுது பார்ப்பதன்மூலம், போக்குவரத்தை மிகவும் பாதிக்கக் கூடிய அளவிற்கு மிகப் பழுதடைந்துள்ள சென்னை நகர ரோடுகளை விரைவாகச் செப்பனிடலாம் என்பதால், அதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்குமா ?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : ரோடுகளை இரவு நேரத்தில் பழுது பார்ப்பதிலுள்ள சிரமங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். ரோடு போடுவதற்கு வேண்டிய சில பொருள்களை எழும்பூரிலுள்ள ப்ளாண்டிலிருந்து கொண்டுவர வேண்டியிருக்கின்றது. அந்தப் ப்ளாண்டை இரவும் பகலும் முழு நேர வேலைசெய்து இயக்குவதற்கு முடியாது. மேலும் இரவும் பகலும் வேலை செய்வதானால், இரவில் வேலை செய்பவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கவேண்டும். தவிரவும், இரவு நேரத்தில் விபத்துக்கள் அதிகமாக ஏற்படும் என்று கருதப்படுகின்றது.

### *Passenger train services*

*100 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have made any representation to the Centre about the resumption of certain passenger train services that have been suspended from January 1959 by the Southern Railways within the jurisdiction of the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

### *Handicraft training schemes for the wives of policemen*

*101 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any scheme has been introduced for the benefit of the wives of the policemen in the State to earn a little by making matches or knitting hosieries in their homes; and

(*b*) how far the scheme is successful?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : (*a*) A list[a] of the schemes sanctioned for the benefit of the families of the Policemen in this State is placed on the table of the House.

[a] Printed as Appendix IV on pages 461–462 infra.



10th December 1959]

(*b*) The schemes are in their initial stages of implementation. The number of persons benefiting from these schemes fluctuates from month to month according to the participation of the wives and daughters of the Police personnel. On an average, the number is about 35 per district.

SRI N. K. PALANISAMI : May I know whether there is any proposal to extend the benefit to all the families of the Policemen?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, this scheme is being extended to every district.

**SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM** : போலீஸ்காரர்களின் மனைவிகளுக்கென அச்சுக் குத்துத் தொழில் பாளையங்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே இப்போது போலீஸ்காரர்களின் மனைவிகளல்லாத மற்றப் பெண்கள் மாத்திரமே இத்தொழிலில் சேர்த்துக்கொள்ளப்பட்டு பயிற்சியளிக்கப்படுகின்றனர். இதை மாற்றியமைக்க அரசாங்கத்தார் ஏதாவது செய்வார்களா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இப்போது அமுலிலுள்ள திட்டங்களை நடத்துவதிலுள்ள கஷ்டங்கள் அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு அவசியமான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

**SRI P. S. CHINNADURAI** : கோயம்புத்தூர் ஜில்லா இத்திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருக்கிறதே ? அதற்கு ஏதாவது விசேஷ காரணங்கள் உண்டா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : அங்குள்ள டி.எஸ்.பி. இதில் அக்கறை எடுத்துக்கொள்வதோடு கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்களும் அக்கறை எடுத்துக்கொண்டால், இதை துரிதமாக நடத்தலாம்.

**SRI P. G. MANICKAM** : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் குறிப்பில் மாதர் நல இலாகாவின் மூலம் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாதர் நல இலாகாவின் மூலம் போலீஸ்காரர்களின் குடும்பத்தினருக்கு இத்தொழில்களில் பயிற்சியளிக்கும் நிலையங்களை குறைந்தபட்சம் ஜில்லாவிற்கு ஒன்று வீதமாவது ஏற்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : மாதர் சங்கம் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கிறது. எனவே இத்திட்டம் எங்கெல்லாம் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் மாதர் நல இலாகாவின் மூலம் இத்திட்டத்திற்கு உதவி பெறலாம்.

[10th December 1959

*Pay and allowances of Police officials of the Ex-Travancore-Cochin State*

* 102 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any difference between the pay and allowances of the Police Constable, Head Constable, Sub-Inspector of Police, Deputy Superintendent of Police and Superintendent of Police of this State and those of the corresponding police officers transferred from the erstwhile Travancore-Cochin State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir, except in the case of Superintendents of Police.

SRI T. T. DANIEL : May I know whether in the case of such of those officers in the Police Department in which the pay and allowances of the transferred personnel is lower than the pay and allowances of the Madras State servants, the Government will equalise their emoluments?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The revised scales in the Kerala State were given by the previous Government of Kerala. But, I may tell the hon. Member that in spite of the revision of the scale of pay, there are individual constables and other officers from Kerala who are anxious to come over to this State. I may also inform the hon. Member that the question of revision of scales of pay in the Police as well as other Departments is under examination by the Pay Commission.

**SRI A. V. P. ASAITHAMBI :** ஷ்பெஷல் ஆர்ம்ட் போலீசைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் வெளியூருக்குப் போனால் அவர்களுக்கு படி எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

**MR. SPEAKER :** மூலக் கேள்வியானது முந்தைய திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து நமது ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைப் பற்றியது. எனவே, கனம் அங்கத்தினர் தமது உப கேள்வியில் ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸைப்பற்றி ஏதுவும் கேட்கக்கூடாது. அவ்வாறு கேட்டால் அது அவ்ட் ஆப் ஆர்டர் ஆகும்.

**SRI A. V. P. ASAITHAMBI :** அந்த உத்தியோகஸ்தர்களுக்கான படிக்கும் ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸிலுள்ளவர்களுக்கான படிக்கும் வித்தியாசம் இருக்கிறதுபோல் தெரிகிறது. எனவே நான் என் சந்தேகத்தை நிவர்த்தித்துக்கொள்வதற்கு ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

**MR. SPEAKER :** கனம் அங்கத்தினருடைய உப கேள்வியானது முந்தைய திருவாங்கூர் ராஜ்யத்திலிருந்து இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைப் பற்றியதாகத்தான் இருக்க வேண்டும். அவருடைய உப கேள்வி ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸிலுள்ளவர்களின் சம்பளத்தைப் பற்றியதாக இருந்தால் அது அவ்ட் ஆப் ஆர்டர் ஆகும்.



10th December 1959]

**SRI A. V. P. ASAITHAMBI :** முந்தைய திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கப்படுகிற படிக்கும் இந்த ராஜ்ய போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படுகிற படிக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

**MR. SPEAKER :** இந்த உப கேள்வி அவ்ட் ஆப் ஆர்டர்.

SRI T. S. RAMASWAMY : May I know the details of the difference in scales of pay?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have got the details. It is a long list. If the hon. Member puts a separate question, I can place the answer on the table of the House.

*Exemption of Harijan students from the payment of special fees*

* 103 *Q.*—SRI P. RAMACHANDRAN (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Finance be pleased to state the action taken by the Government so far to exempt the Harijan students studying in various educational institutions from the payment of special fees in respect of all items?

THE HON. SRI C. SUBRAMANIAM : At present Harijan students studying in Forms IV to VI of secondary schools have been exempted from the payment of three items of special fees, viz., library, laboratory and medical inspection fees. The question whether the concession need be extended to such students studying in Forms I to III of secondary schools and in colleges has been examined in detail and it has been decided not to extend the concession. The question whether the scope of the exemption may be extended to all other items of special fees is also under consideration.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal before the Government to extend this concession to all classes of people who are economically backward?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am afraid it is completely a different question altogether.

**SRI P. G. MANICKAM :** மாணவர்கள் ஜூன் மாதம் பள்ளிக்கூடத்தில் சேரும்போதே—அந்த ஆரம்பத் தருணத்திலேயே—ஸ்பெஷல் பீஸைக் கட்ட வேண்டியிருக்கிறது. அதே சமயத்தில், அவர்கள் புத்தகங்களையும் வாங்க வேண்டியிருக்கிறது ; இதர செலவினங்களும் அவர்களுக்கு அப்போது இருக்கின்றன. ஆகவே, ஸ்பெஷல் பீஸை அவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்த இரண்டு, மூன்று மாதங்கள் ஆன பிறகே வசூலிக்கும்படியாவது சம்பந்தப்பட்ட இலாகாவினருக்கு—கல்வி இலாகாவினருக்கு—அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பிப்பார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இது சம்பந்தமாக ஹரிஜன நல இலாகாவினர் அவசியமான நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

[10th December 1959

SRI K. ANBAZHAGAN : ஹரிஜன மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் சேரும்போதே தாங்கள் ஹரிஜன மாணவர்கள் என்பதற்காக சாற்றிதழ்களை அளிக்க வேண்டியிருக்கிறது. அப்போதே, அந்தச் சாற்றிதழ்களை ஆதாரமாகக் கொண்டே அவர்களுக்கு இலவசச் சம்பளம் இன்றி இலவச அனுமதி தாமதத்தை தவிர்க்கக் கூடிய உத்தரவுகளை சம்பந்தப்பட்டவர்களுக்குப் பிறப்பிக்க அரசாங்கம் இந்த இலாகாவினருக்கு அனுமதி தருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தச் சலுகைகளை அளிப்பதில் காலதாமதம் ஆவது சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந்தக் காலதாமதம் ஏற்படாத வகையிலும், ஹரிஜன மாணவர்களுக்கும் மற்றச் சலுகைகள் கோரும் மாணவர்களுக்கும் இத்தகைய கஷ்டங்கள் ஏற்படாத வகையிலும் விதிகள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் அவை இப்போது பரிசீலனை செய்யப்பட்டுவருகின்றன.

*Vaigai Project*

* 104 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு
9-30 a.m. பதிலளிப்பாரா—

(அ) வைகை நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள குன்னூர் என்னும் ஊரில் பாதி ஊர்வரை நீர்பிடிப்பு ஏற்படுமென்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) பாக்கியுள்ள பாதி ஊரில் மக்கள் குடியிருக்க முடியுமா ?

(இ) முழு ஊரையும் ஆர்ஜிதம் செய்து அதனால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) to (*c*) Part of the habitation of the Kunnur village will be affected by submersion due to back water effect during heavy floods when the reservoir is full. Such of the low lying houses on the north and east of the village proper as will be affected have been acquired and the construction of an earthern bund with revetted sides and top around the habitation to protect the unacquired houses from submersion during floods is to be taken up shortly. A decision about acquiring the rest of the village will be taken up after watching the position this year.

SRI N. R. THIAGARAJAN : ஸார், அந்த ஊரைச் சுற்றியும் மாகிணட் அரண் போன்ற அரண் கட்டினாலும் கூட நீர்ப் பிடிப்பினால் அந்த ஊருக்குள் தண்ணீர் தேங்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகையால் அந்த ஊர் முழுவதையும் அக்வொயர் செய்து அங்குள்ளவர்களை வேறு இடத்தில் அமர்த்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது விஷயமாகச் சொல்லக்கூடிய என்ஜினியர் பெரிய பெரிய அணைகளைக் கட்டக் கூடியவர். இது அவருக்கு நன்றாகத் தெரியும். அவர் பர்கொலேட் ஆகாது என்று சொல்லுகிறார். அதற்குத் தகுந்தபடி ரிவெட்மெண்ட் எல்லாம் போடுகிறோம் என்று சொல்லுகிறார். பார்க்கலாம் அதையும் ஒரு வருஷம்.



10th December 1959]

*Government Bus Transport, Madras*

* 107 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) in how many Government Transport buses, time-pieces and clocks were supplied by the manufacturers along with the buses;

(*b*) where are they now; and

(*c*) how many of them are missing?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Ninety-eight (98).

(*b*) They are kept at the following places :—

| | |
|---|---|
| Time-keepers' bunks ... ... ... ... | 32 |
| Staff vehicles and buses ... ... ... | 8 |
| Office, depots and workshop ... ... ... | 13 |
| Stock in stores ... ... ... ... | 45 |
| | 98 |

(*c*) None, Sir.

*Chank fisheries*

* 108 *Q.*—SRI P. U. SHANMUGAM (on behalf of Sri M. P. Subramaniam) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any Italian expert of Food and Agricultural Organization has submitted any report to this Government about the scope of developing the chank fisheries near Tuticorin in our State; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) An Italian Expert Dr. Baschieri Salvadori was assigned to this State for a period of six months from November 1958 to May 1959 for conducting underwater exploration and survey of pearl and chank beds off the coast of Tuticorin. The official report of the Expert has not yet been received.

(*b*) Does not arise.

MR. SPEAKER : அடுத்த Pearl Oysters பற்றிய 109-ம் கேள்வி கனம் அங்கத்தினர் சட்டநாத கரையாளர் அவர்கள் சபையில் இல்லாததால் இந்தக் கேள்வியும் அதற்கான பதிலும் சபையில் விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

[10th December 1959

*109 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether pearl oysters are found in any parts of our State other than the usual place near Tuticorin; and

(*b*) if so, which are the places?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*) & (*b*) Yes, Sir. But only very few stray pearl oysters are found occasionally in Palk Bay. In 1914, a small Pearl Fishery Operation was conducted off the coast of Tondi in Ramanathapuram district and about 4·3 lakhs of oysters were culled out. In 1939 about one lakh of pearl oysters were culled out, off the Coast of Mallipatnam in Tanjore district.

*Cultivable waste lands*

*110 *Q.*—SRI A. VEDARATHNAM: *கனம் உள்ளிவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—*

*தரிசாக இருக்கும் சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவர அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A note* is placed on the table of the House.

*Tractor manufacturing factory*

*111 *Q.*—SRI A. VEDARATHNAM: *கனம் உள்ளிவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

*(அ) இந்த மாநிலத்திலிருக்கும் ட்ராக்டர் உற்பத்தி சாலையில் ஆண்டுதோறும் உற்பத்தியாகும் ட்ராக்டர்கள் எத்தனை?*

*(ஆ). இதற்கு அரசாங்கம் அளித்திருக்கும் உதவிகள் என்ன?*

*(இ) இதை மேலும் விஸ்தரிக்க உத்தேசமுண்டா? அப்படியானால் அதன் விவரமென்ன?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) There is only one factory in Madras, viz., the Standard Motor Products of India, Ltd., licensed to manufacture 200 Ferguson Tractors per mensem. It has produced 2,125 tractors during the year 1957 and 642 tractors in 1958.

(*b*) No assistance from Government was asked for by the company.

(*c*) The Government have no information whether the company has proposals for further expansion.

* Printed as Appendix V on pages 462–463 infra.



10th December 1959]

SRI A. VEDARATHNAM: *இந்தத் தொழிற்சாலையில் டிராக்டர்களின் பாகங்கள் செய்ய வசதி உண்டா? அப்படியானால் நம் ராஜ்யத்தில் பழுது அடைந்திருக்கிற அநேக டிராக்டர்களைப் பழுது பார்க்க வசதி இருக்குமா? அதைச் செய்ய அரசாங்கம் முன் வருமா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், புதிதாக டிராக்டர்கள் உற்பத்தி செய்யும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் விஸ்தரிக்கும்போது டிராக்டர்களில் அடங்கிய பாகங்களும் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.*

SRI P. S. CHINNADURAI: *ஸார், ஜப்பான் நாட்டில் இருப்பதைப் போல பெரியதாக டிராக்டர்களை உற்பத்தி செய்ய அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறதா? அப்படியானால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *அது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. அதைப் பற்றிய விவரங்கள் சொல்வதற்கு இப்போது தகவல் இல்லை.*

SRI S. M. ANNAMALAI: *ரஷ்யாவிலிருந்து 5 ஏக்கர்களுக்கு உட்பட்டு உழக்கூடிய டிராக்டர்களை வாங்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *ரஷ்ய டிராக்டர் அம்மாதிரி குறைந்த நில விஸ்தீர்ணத்திற்கு உபயோகப்படும். அதை நானே பார்த்திருக்கிறேன். அந்த மாதிரி டிராக்டர் இங்கே இருக்கிறது. அவைகளை இன்னும் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.*

SRI K. B. S. MANI: *ஸார், இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் டிராக்டர்களைக் கொண்டு நம் மாகாணத்தின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறதா? அல்லது தேவைக்கேற்ப வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்படுமா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்கிற டிராக்டர்கள் நம் மாகாணத்திற்கே தேவை என்றாலும் நம் மாகாணமே எடுத்துக்கொள்ள முடியாது. ஆகையால் நமக்குப் போதிய அளவு இந்த தொழிற்சாலையிலிருந்து கிடைப்பதில்லை. நமக்குப் போதிய அளவுக்கு மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.*

*Khadi*

*112 *Q.*—SRI A. VEDARATHNAM: *கனம் உள்ளிவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

*(அ) கதர் துணியைக் கவர்ச்சிகரமான முறையில் தயாரிக்க அரசாங்கம் ஏதேனும் திட்டமிட்டுள்ளதா?*

[10th December 1959

(ஆ) அப்படியானால், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) The following steps have been taken to produce popular and attractive varieties in Khadi:—

Latest types of printing blocks have been purchased from Ahmedabad and other centres where cloth printing is more advanced and Chintz and sarees of latest patterns have been produced. In practice it is seen they are very popular in the market.

A design centre has been opened at Gandhigram where attractive sarees and cholis are produced and the designs copied in other production centres.

Two expert weavers from Pochampalli in Hyderabad were brought here for training the local weavers in tie and dye method. About 4 dozen local weavers have been trained in this process and they are now producing these popular varieties.

Flock printing and pigment printing are also done and these varieties are also very popular.

Furnishing cloth of the cottage fabric variety is also produced. Furnishing cloth has also been produced out of Jacquard machine and this variety is in great demand.

'Rasai Asan' has been produced and they are very attractive.

SRI A. VEDARATHNAM: பம்பாயிலிருந்தும், அஹமதாபாத்திலிருந்தும் வருகிற பிரிண்ட் ரகங்களை இங்கேயே நம் மாகாணத்திலேயே செய்ய முடியாதா? அந்தத் துறையில் என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது? இல்லையானால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்தத் துறையிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

SRI GOMATHI SANKARA DIKSHITAR: பிளாக் டெவலெப்மெண்ட் ஏரியாக்களில் சிறந்த நெசவாளர்கள் இருப்பதால் அம்மாதிரி வெரைட்டிகளை அங்கே தயார் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது விஷயத்தில் அதிகமாக கவனம் செலுத்தப்படுவது இந்த வட்டார வளர்ச்சிப் பிராந்தியங்களில் தான்.

SRI K. ANBAZHAGAN: கதர் தயாரிப்பில் கூட வட மாகாணத்தில் தயாரிக்கப்படுகிற கதருக்கு இங்கே அதிக கிராக்கி இருப்பதாகச் சொல்வது உண்மையா? அப்படிப்பட்ட ரகங்களை இங்கேயே தயாரித்து அந்தப் போட்டியைச் சமாளிக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நம் தெற்குப் பிராந்தியக் கதருக்குத் தான் வட நாட்டில் மோஹம் இருக்கிறது. (சிரிப்பு.)



10th December 1959]

SRI S. LAZAR: ஸார், இந்த கதரிலே உயர்ந்த ரகத் துணிகளுக்கும் பட்டு ரகத் துணிகளுக்கும் ரிபேட் குறைவாக இருக்கிறது. இவைகளெல்லாம் பாபுலராக வேண்டுமென்று சொன்னால், மற்ற காட்டன் துணிகளுக்குக் கொடுக்கும் அளவுக்கு இவைகளுக்கும் ரிபேட் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது ரிபேட்டை அதிகப்படுத்தும் உத்தேசம் இல்லை. தீபாவளியின் போது அதிகப்படியாக ரிபேட் கொடுத்தார்கள். அதனால் அதிகப்படியான விற்பனையும் ஆயிற்று.

SRI P. S. CHINNADURAI: சினிமா நடிகையர்கள் அணிந்து கொள்ளக்கூடிய ரகங்கள்தான் "பாஷன்" என்று, அவர்கள் அணிந்து கொள்ளாத துணிகளை அணிந்து கொள்வதற்கு நமது பெண்மணிகள் தயங்குவதால், கவர்ச்சிகரமான ரகங்களைத் தயாரிக்கும்போது அவர்களைக் கலந்துகொண்டு, அவர்கள் அணிந்து கொள்ளும்படியான ரகங்களைத் தயாரிக்க சர்க்கார் முன்வருவார்களா? (சிரிப்பு.) இதனை நான் உண்மையாகவே கேட்கிறேன். (சிரிப்பு.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவர்களைக் கலந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. சினிமா நடிகைகளும் கவர்ச்சியுடன் வாங்கக் கூடிய ரகங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. (சிரிப்பு.)

MR. SPEAKER: உண்மையாகவே கேட்கிறேன் என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்களே அவர்களுக்கே நம்பிக்கையில்லையா? (சிரிப்பு.)

### *Teaching of English*

*113 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Finance be pleased to state the special steps taken to teach English in V Standard in all the schools?

THE HON. SRI C. SUBRAMANIAM: The revised syllabus of Elementary Education will be introduced in the V Standard from the academic year 1960–61. This involves the teaching of English also. An English reader based on the new syllabus has been prepared and will be published departmentally. Instructions have been issued to appoint secondary grade teachers, wherever necessary, to teach English in the V Standard of Elementary schools.

SRI S. LAZAR: ஸார், இந்த முறையை ஆரம்பிக்கும் போது, 5-வது வகுப்பு உள்ள எல்லாப் பள்ளிகூடங்களிலும் ஆரம்பிக்கப்படுமா? ஏனென்றால் ஆங்கிலம் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகளும் இருக்கின்றன என்பதற்காக நான் இதைக் கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: எல்லாப் பள்ளிகளிலும் சொல்லிக்கொடுக்கப்படும். இதற்காக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

[10th December 1959

**SRI S. LAZAR :** இதற்கென்று ஒரு புத்தகம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். யார் யாரைக் கலந்துகொண்டு இதைத் தயாரித்தார்கள் என்று தெரிய விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** புத்தகம் தயாரிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களையெல்லாம் கலந்துதான் தயாரிக்கப் பட்டது.

**SRI V. SANKARAN :** இதற்கான ஸிலபஸ் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுவிட்டதா? அந்த ஸிலபஸ் அடிப்படையில் தனியார்கள் புத்தகங்கள் தயாரிக்க உரிமை அளிக்கப்படுமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இதிலே இப்போது உடனடியாக புத்தகம் வேண்டியிருக்கிறது. அதைச் சர்க்காரிலேயே அச்சிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தயார் செய்வது அரசாங்கத்தில் அல்ல. அச்சிடுவது தான் சர்க்கார் அச்சுக்கூடத்தில். இப்போது 5-வது வகுப்புற்கு. அடுத்தபடியாக, 6, 7, 8-வது வகுப்புகளுக்கு என்ன செய்வது என்று முடிவு எடுக்கப்பட வேண்டும்.

**SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN :** ஆங்கிலத்தை நல்ல முறையில் போதிக்க இப்போது இருக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்க இப்போது திட்டம் அமுலில் இருக்கிறதா? அது எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** பிரிட்டிஷ் கவுன்ஸில் ஸ்தாபனத்தின் உதவியைக் கொண்டு எல்லா ஆசிரியர்களுக்கும் ஆங்கில மொழி போதிப்பதில் பயிற்சி கொடுக்கும் திட்டம் இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது இப்போது ஆரம்பமாகி அமுலில் இருந்துகொண்டிருக்கிறது.

**SRI S. LAZAR :** ஸார், ஒரே புஸ்தகம் மாகாணம் பூராவும் கொண்டு வரப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஆரம்பப் பிள்ளைகளுடைய தரம் "கன்செப்ஷன் ஆப் ஐடியாஸ்" நகரத்திலுள்ளவர்களுக்கும் கிராமத்திலுள்ளவர்களுக்கும் மாறுபட்டிருக்கும். அதற்குத் தக்கவாறு கிராம பள்ளி புஸ்தகங்களை, நகர புஸ்தகங்களை வேறு முறையில் தயாரிக்க சர்க்கார் முன்வருமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இரண்டு விதமாக பாடத்திட்டம் அமைப்பது என்பது கஷ்டம். கிராமத்திலுள்ளவர்கள் கிராமத்திலேயே படிக்க வேண்டுமென்று அவர்களை ஒதுக்கிவிட முடியாது. தரம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி இருக்க வேண்டுமென்பதுதான் எண்ணம்.



10th December 1959]

**SRI A. VEDARATHNAM :** ஆங்கிலம் போதிக்க ஏற்படுத்தியிருக்கும் இந்தப் பயிற்சியில் எவ்வளவு ஆசிரியர்கள் இதுவரையில் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்? எல்லா ஆசிரியர்களுக்கும் எவ்வளவு காலத்தில் அந்தப் பயிற்சி பூர்த்தியடையும்?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இப்போது ஆசிரியப் பயிற்சி கொடுக்கக்கூடிய ஆசிரியர்களை இதற்கும் தயார் செய்து கொண்டு வருகிறோம். இரண்டு வருஷத்திற்குள் 22,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்பது திட்டம்.

**SRI K. VINAYAKAM :** Sir, in view of the revised scheme by which importance is given to the teaching of English from V Standard from the year stipulated, will the Government consider the possibility of giving some special allowance to such of those teachers who would be asked to handle those classes when compared to other teachers of the same categories who handle different subjects in the same classes?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** I do not understand the suggestion of the hon. Member. All the teachers will have to have English classes for some time more. Therefore, the question of giving special allowance does not arise.

**SRI S. M. ANNAMALAI :** ஸார், இந்த செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்கும்போது 1946-ம் ஆண்டு ஜி.ஓ. ஒன்றின்படி 1:1 என்ற ரேஷியோவில் செகண்டரி கிரேடு பாஸ் பண்ணிவிட்டு ஹையர் கிரேடு ஆசிரியர்களாக வேலை செய்கிறவர்களுக்கு ஒரு ஸ்தானமும், இப்போது புதிதாக பாஸ் பண்ணிவிட்டு வந்தவர்களுக்கு நேரடியாகவே செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக ஒரு ஸ்தானமும் வேலை கொடுக்கிறார்கள். அதை மாற்றியமைத்து செகண்டரி கிரேடு பாஸ் செய்துவிட்டு ஹையர் கிரேடு இடத்தில் வேலை செய்கிறவர்களுக்குச் சலுகை அளிக்கப்படுமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இதைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் எழுதி அதற்குப் பதிலும் அனுப்பப்பட்டிருக்கிறது.

*Employment Exchanges*

* **115 *Q.*—SRI A. VEDARATHNAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களில் தொழிலாளர் பகுதி, இளைஞர் பகுதி, பெண்கள் பகுதி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) அப்படியானால், எப்பொழுது? எங்கெங்கே?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** (*a*) & (*b*) Separate sections for industrial workers as such, have not been provided at Employment Exchanges. However, for candidates belonging to

[10th December 1959

Technical and Unskilled categories, separate sections have been provided at the District Employment Exchange, Madras. Regarding youths, a specialised unit for giving guidance in the choice of careers has been set up at the District Employment Exchange, Madras, under the Second Five-Year Plan. Regarding women, separate sections exist at all the Employment Exchanges in the State for their registration and placement.

SRI A. VEDARATHNAM : இந்த மாதிரித் தனித் தனிப் பகுதிகள் சென்னையில் இருப்பது போல இதர ஜில்லாக்களில் இருக்கும் வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களுக்கும் இந்தப் பகுதிகள் அமைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது உடனடியாக மதுரையிலும் திருச்சியிலும் தனிப் பகுதிகள் அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

*Plot for housing the Central Library*

• 116 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the Local Library Authorities for the City of Madras, purchased a plot of land measuring 21 grounds in the City for housing the Central Library;

(*b*) if so, the total value of it;

(*c*) whether the Collector of Madras was consulted in fixing the value;

(*d*) if so, whether the Collector's advice was acted upon;

(*e*) if not, the reasons therefor;

(*f*) whether the same authorities have bought another plot of land 41 grounds in extent; and

(*g*) if so, the total value of this and the purpose for which it was purchased?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Rs. 1,00,600.

(*c*) Yes.

(*d*) Yes.

(*e*) Does not arise.

(*f*) Yes.

(*g*) Rs. 2,79,599. For the use of the Local Library Authority, Madras.

*Dairies*

• 118 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether dairies run by private individuals are eligible for subsidies and loans; and



10th December 1959]

(*b*) if so, under what conditions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

*Coir industry*

• 119 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

கோயம்பத்தூர் ஜில்லாவிலே கயிறு திரிக்கும் பயிற்சியை நவீன முறையில் கையாளப்படுவதற்காக ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரின், விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A Coir Production-*cum*-Training Centre was started from 3rd April 1957 at Chinnamallampalayam in Coimbatore district. Training was given for 30 candidates each year in the manufacture of coir yarn by the use of spindles and coir ropes, brush mats, chain mats, coir brooms, etc. Rope making machines, on the models of those used in the Coir School at Beypore in the Kerala State, were introduced. The Centre was closed on 8th April 1959 and was converted into an Industrial Co-operative Society on 2nd July 1959.

SRI P. G. MANICKAM : ஸார், பனைமரம், தென்னை மரம் ஆகியவைகளிலிருந்து கயிறு திரிக்கும் தொழில் கோயம்பத்தூர் ஜில்லாவில் அநேக இடங்களில் நடைபெற்று வருகின்றது. அவ்வாறு எங்கெங்கு நடைபெறுகிறது என்பதற்கான புள்ளிவிவரம் சேகரம் செய்து அவர்களுக்குத் தகுந்த பயிற்சி முறையில் ப்ளாக் மூலம் பயிற்சி கொடுக்க திட்டம் வகுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கயிறு உற்பத்தி செய்யும் வேலைக்குப் பயிற்சி அளிக்கத்தான் வருஷா வருஷம் 30 பேர் தயாரிக்கப்படுகிறார்கள். இவர்களைக்கொண்டு பல தொழில்களை ஆரம்பிக்கலாம். கோவையில்தான் இவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

SRI A. V. P. ASAITHAMBI : கயிறு திரிப்பை வேறு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கயிறு திரிக்கும் வேலை எங்கும் இருக்கிறது. நல்ல பயிற்சி அளிக்கவேண்டும். அது அளிக்கப்படுகிறது.

*Employees' State Insurance Scheme*

• 120 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Central Government have consulted this Government with regard to extending medical benefits under the Employees' State Insurance Act to the families of insured workers in such places where the Act is in vogue; and

(*b*) if so, what opinion has been tendered by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government have informed the Employees' State Insurance Corporation and the Government of India that the Employees' State Insurance Scheme will be first extended to the unimplemented areas in the State and that the provision of medical facilities to families of insured workers will be taken up thereafter. The Corporation and the Government of India have accepted the views of the Government.

**SRI S. PAKKIRISAMI PILLAI :** *இதர ராஜ்யங்களில் இந்த "எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் திட்டம்" இருக்கும்படியான மற்ற ராஜ்யங்களில் குடும்பங்களுக்கும் விஸ்தரித்திருக்கும்போது நம் ராஜ்யத்தில் மாத்திரம் வேறு திட்டத்தை அனுசரிப்பதற்குக் காரணம் என்ன? இங்கிருக்கும்படியான குடும்பங்களுக்கும் இந்த நன்மையைச் செய்தால் நல்லதில்லையா? ஆகவே, இந்தக் குடும்பங்களுக்காக விஸ்தரிக்கும் திட்டத்தை அடுத்த வருஷத்திலாவது அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா?*

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** *எனக்குத் தெரிந்த வரையில் வேறு எந்த ராஜ்யத்திலும் இந்தத் திட்டம் பரிபூரணமாக பிராந்தியம் பூராவும் மேற்கொள்ளப்படவில்லை. மற்ற ராஜ்யங்கள் என்ன செய்வதாக இருந்தாலும் இந்த ராஜ்யத்தில் எல்லோருக்கும் விஸ்தரித்துவிட்டு அதற்குப் பிறகு குடும்பங்களுக்கும் விஸ்தரிக்கலாம். இப்போதே குடும்பங்களுக்கு விஸ்தரிப்பது என்பது கஷ்டம்.*

MR. SPEAKER : Questions are over.

[*Note.* **An asterisk,* at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—GOVERNMENT BILL.

THE MADRAS CITY TENANTS' PROTECTION (AMENDMENT) BILL, 1959.

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959.

MR. SPEAKER : The question is—

" That leave be granted for introduction of the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959."

The motion was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

**MR. SPEAKER : The Bill is introduced.**



IV.—DISCUSSION ON THE GOVERNORS' ADDRESS—*cont.*

MR. SPEAKER : We shall now proceed with the discussion on the Governor's Address. To-day Sri M. Kalyanasundaram, Leader of the Communist Party and Sri C. N. Annadurai will participate in the debate. They will take half-an-hour each. Therefore, other hon. Members will be given only 10 minutes each. *ஒவ்வொரு அங்கத்தினரும் 10 நிமிஷத்திற்குள் முடித்துவிட வேண்டும். இன்று இரண்டு தலைவர்கள் பேசப் போகிறார்கள். முதலில் திரு. கல்யாணசுந்திரம் அவர்களுக்கு 20 நிமிஷம் ஒதுக்கி வைக்கிறேன்.*

**SRI M. KALYANASUNDARAM :** *கனம் சாபாநாயகர் அவர்களே, கவர்னருடைய பிரசங்கத்திற்குப் பொறுப்பு மந்திரிசபை. ஆகவே, நான் கூறப்போகும் விஷயங்கள் மந்திரிகளைச் சாருமே யொழிய கவர்னர் அவர்களைச் சாராது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கவர்னர் அவர்களுடைய பிரசங்கமானது ஏதோ திறமையற்ற மந்திரிகளால் தயாரிக்கப்பட்டு உப்புச்சப்பற்ற முறையிலே இருக்கிறதென்று ஒருசிலர் நினைக்கலாம். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. உண்மையற்றவைகளைக்கூட உண்மை போல் தோன்றச் செய்யக் கூடிய திறமைசாலிகள் தயாரித்த உரையாகும். திறமையற்றவர்கள் தயாரித்த அறிக்கை என்று நான் இதைக் கருதவில்லை. நமது ராஜ்யம் பல விஷயங்களில் முதலிடம் வகிப்பதாக அமைச்சர்கள் கூறுகின்றார்கள். மத்திய நிர்வாகத்துக்குப் பொறுப்பான அமைச்சர்களும் அதைப் பகிரங்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அப்படிக் கேள்விப்படுகிற சமயத்தில் எனக்குக்கூட ஓரளவு சந்தோஷந்தான் ஏற்படுகிறது. நம்முடைய ராஜ்யம் நிர்வாகத்திலும் மற்ற திட்டங்களை நிறைவேற்றுவதிலும் முன்னணியில் இருக்கிறது என்று கேள்விப்படும்போது எனக்குக்கூட சந்தோஷம் அளிக்கிறது. நிதி மந்திரி அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்.*

**THE HON. SRI C. SUBRAMANIAM :** *'எனக்குக் கூட' என்று கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்களே என்று யோசிக்கிறேன்.*

**SRI M. KALYANASUNDARAM :** *நான் எதிர்க் கட்சியில் இருந்தபோதிலும் என்பதற்காகச் சொன்னேன். நான் அடுத்து பேசப்போவதைக் கவனிப்பார்களானால், ஏன் அப்படிச் சொன்னேன் என்பதைத் தெரிந்துகொள்வார்கள். இந்தத் திறமைக்குப் பொறுப்பானவர்கள் மந்திரிமார்கள் என்று அவர்கள் எடுத்துக் கொண்டால் அதில் எனக்கு உடன்பாடு இல்லை. அந்த வித்தியாசத்தைத் தெரிவித்துக் கொள்வதற்காகத்தான் "நான் கூட" என்று நான் சொன்னது. இதற்குப் பொறுப்பாளி நம்முடைய ராஜ்ய நிர்வாகத்தை ஏற்று நடத்தக்கூடிய கடைசி சிப்பந்தியிலிருந்து பெரிய அதிகாரிகள் வரையில் எல்லோரும் ஒன்றுசேர்ந்து அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். குறைபாடுகள் இல்லை; ஊழல்கள் இல்லை என்று அர்த்தம் இல்லை. அவற்றில் பல இருக்கலாம், இருந்தாலும்,*

மத்திய அரசாங்கத் திட்டங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய ராஜ்யத்தில் திர்வாகம் ஓரளவுக்குத் திறமையாக நடந்திருக்கிறது என்று அவர்கள் கூறிக்கொள்வதிலே அர்த்தம் இருக்கிறது. ஆனால், அதற்குப் பொறுப்பாளிகள்—நான் முதலில் கூறியதுபோல்—சர்க்கார் ஊழியர்கள்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் முன்னே சொல்லியிருக்கிறேன், இங்கேயிருக்கும் நல்லாட்சிக்கு, திறமையான ஆட்சிக்குக் காரணம், அதிகாரிகள் கூட அல்ல, நம்முடைய நாட்டு மக்கள் என்று. ஆகையால், அந்தப் பாராட்டு பூராவும், அதனுடைய பெருமை பூராவும் தமிழ்நாட்டு மக்களுக்குச் சேர்ந்தது என்று நான் அடிக்கடி கூறியிருக்கிறேன். அதையே இப்பொழுதும் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

**SRI M. KALYANASUNDARAM**: கனம் மந்திரி அவர்களுடைய கருத்தை நான் தெரிந்துகொள்வதற்கு ரொம்ப சந்தோஷப்படுகிறேன். ஆனால், அவர்களுடைய கவனத்திற்கு ஒன்று நான் கொண்டுவர விரும்புகிறேன். துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டிய விஷயத்தை வலியுறுத்திக்கூறுவது—சர்க்கார் ஊழியர்களுடைய சம்பள விகிதம் பற்றி துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது. நம்முடைய ராஜ்ய சர்க்கார் தனியாக ஒரு சம்பளக் கமிஷன் நியமித்திருப்பதும், அவர்கள் விசாரணை நடத்துவதும் எனக்குத் தெரியாதது அல்ல. அந்தக் கமிஷனுக்கு நானும் சில அறிக்கைகள் என் கட்சியின் சார்பில் சமர்ப்பித்திருக்கிறேன். நான் இங்கு எடுத்துக்காட்ட விரும்புவது—இரண்டாவது சம்பளக் கமிஷன் மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு, அந்தக் கமிஷனும் தங்களுடைய சிபார்சுகளைச் செய்திருக்கிறது. அந்த சிபார்சுகள், முதல் சம்பளக் கமிஷன்—வரதாச்சாரி கமிஷன்—செய்த சிபார்சுகளைவிட மிக அபிவிருத்தியானது அல்ல என்று மத்திய சர்க்கார் ஊழியர்கள் கருதுகிறார்கள். அதனால் அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கலாம். இருப்பினும், அந்தச் சிபார்சுகள், நம்முடைய ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுடைய நிலையைவிட அபிவிருத்தி அளிக்கக்கூடிய முறையில் இருக்கின்றன. அந்த சிபார்சுகள் அளவுக்காவது ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கான பொறுப்பை மத்திய சர்க்காரும் எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்களுடைய நிலையை உயர்த்தவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுவதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டது. ஆகவே, இந்த சம்பளக் கமிஷன் சிபார்சு செய்ததே அந்த அளவுக்காவது ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுடைய சம்பள விகிதங்களை அபிவிருத்தி செய்யலாம் என்று கருதினால் மட்டும் போதாது. மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட சம்பளக் கமிஷனுடைய சிபார்சுகளை எப்படி அமுல் நடத்துவது என்பது தான் விசாரிக்கவேண்டிய விஷயமே தவிர, ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளை எந்த அளவுக்கு உயர்த்தலாம் என்பதை மட்டும் விசாரித்தால் போதாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.



நிலச் சீர்திருத்த விஷயம் இன்னும் சிந்தனையில் இருக்கும் விஷயமாகவே கருதப்பட்டு வருகிறது. நம்முடைய அமைச்சர்களுக்கு சிந்தனைசக்தி அவ்வளவு மெதுவாக இருப்பதாக நான் கருதவில்லை. வெகு துரிதமாக சிந்திக்கக்கூடியவர்கள். ஆனால், சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம் அதிகமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். 1955-ம் வருஷம் சாகுபடியாளர்களுடைய பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்த சமயத்திலே, கவர்னர் உரையிலும் சரி, நம்முடைய அமைச்சர் அவர்கள் பிரசங்கங்களிலும் சரி, 'மூன்று பிரிவாக நிலச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவரப்போகிறோம். முதல் இரண்டு பிரிவுகள் முடிவு அடைந்துவிட்டன; மூன்றாவது பிரிவு தயாராய்க்கொண்டிருக்கிறது' என்று சொன்னார்கள். இப்பொழுது நான்கு வருஷங்களாக அதைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிந்தனையில் இருந்துக்கொண்டிருப்பதாக கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பதானது வருத்தத்தை அளிக்கிறது. அது சம்பந்தமாக துரிதமான முடிவு எடுக்கவேண்டும். ஏனென்றால், நிலப் பரிவர்த்தனை வேகமாக நடந்துகொண்டிருக்கிறது. காவேரி வட்டாரத்தில் பெரிய நிலப் பிரபுக்கள் மோசடியாக பல பேரில் நிலத்தைப் பிரித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பணம் வாங்காமல்கூட கிரயம் செய்ததாக கிரயப் பத்திரம் செய்துகொண்டிருக்கிறார்கள். பத்திரம் கிடைப்பதுகூட கஷ்டமாக இருக்கிறது என்று புகார்கள் திருச்சி, தஞ்சை முதலிய இடங்களிலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, கால தாமதம் செய்வது இன்னும் சாகுபடியாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய அற்ப சொற்ப அனுகூலத்தையும் பறித்துவிடும் என்பதை நான் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சமுதாய நலத் திட்டத்தில் நூற்றுக்கு மேலான பிளாக்குகள் அமைந்துவிட்டன. கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் வரைக்கும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 12 கோடி ரூபாய் செலவுக்குத் தகுந்த என்ன என்ன வசதிகள் ஜனங்களுக்குக் கிடைத்திருக்கின்றன என்பதை இன்னும் நிச்சயமாக யாராலும் எடுத்துக்கூற முடியாது. அத்தகைய ஒரு பரிசீலனை அவசியம் வேண்டியிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து, அதனால் நன்மை ஏற்பட்டிருக்கிறதா, விரயம் அதிகமாயிருக்கிறதா, அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் வீண் விரயத்தைத் தடுப்பதற்கு என்கிற பரிசீலனை செய்வது மிக அவசியமாகவும் அவசரமாகவும் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

கைத்தறி சம்பந்தப்பட்ட மட்டில் இப்பொழுது இருக்கக்கூடிய நெருக்கடியை சர்க்கார் சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறார்கள். நெசவாளர் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு ரிபேட் கொடுத்து வந்தார்கள். ஏதோ ஒருசில இடங்களில் சொசைட்டிகள் ரிபேட்டை வாங்குவதில் தவறு செய்திருக்கலாம். தவறு செய்த சொசைட்டிகளைப்பற்றி நான்கூட சில சமயங்களில் எடுத்துக்காட்டியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். ஆனால், சர்க்கார் அதிகாரிகள் எடுத்திருக்கும் நடவடிக்கை எப்படி இருக்கிறது? கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சொசைட்டிகள் நூற்றுக்கணக்கில்

[Sri M. Kalyanasundaram] [10th December 1959

(Sri T. S. Ramaswamy in the Chair.)

இருக்கின்றன என்று சொன்னால் மிகையாகாது. குறிப்பாக இராமநாதபுரம் ஜில்லாவிலும், திருச்சி ஜில்லாவிலும், நூற்றுக் கணக்கில் சொசைட்டிகளை விசாரணை நடத்துவதாகச் சொல்லி, அவைகளுக்கு மத்திய பாங்கும் கடன் கொடுப்பதில்லை, ரிபேட் தொகையும் கடந்த இரண்டு வருஷ காலமாகக் கிடைக்கவேண்டிய தொகை பற்றி முடிவு செய்யப்படவில்லை. விசாரணை உத்தரவு போட்டு கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகிறது. இன்னும் விசாரணை முடிந்தபாடில்லை. ஆகையால் இந்த சொசைட்டிகள் தாங்களாகவே மூடிவிட்டுப்போகக்கூடிய நிலையும், ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளிகள் வேலை இழக்கக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது. விசாரணை அவசியமானால் விசாரணை செய்யட்டும். ஆனால், விசாரணை துரிதமாக முடிவு செய்து, தவறு செய்திருக்கும் சொசைட்டிகளுக்குக் கொடுக்கவேண்டிய தண்டனையைக் கொடுத்து மற்ற சொசைட்டிகளை போல் விட்டு விட்டால், அவைகள் இயங்க முடியும். இயங்க முடியாத நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறதனால் ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்களைப் பாதித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கவர்னர் அவர்கள் இன்னும் தன்னுடைய உரையில் முக்கியமாகக் கவனம் செலுத்தியிருப்பது உணவு நிலைமையைப் பற்றி. நாட்டில் மக்கள் மிகவும் கவலையோடு கவனித்துக் கொண்டிருக்கிற விஷயம் இது. விலைவாசி உயர்வையும் உணவு நிலைமையையும் அரசியல் பிரச்னையாக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(Mr. Speaker in the Chair.)

வேண்டுமானால் தேர்தல் காலத்தில் வைத்துக்கொள்ளலாம். இப்பொழுது எல்லாக் கட்சிகளுக்குமே பொறுப்பு இருக்கிறது. உழைக்கக்கூடிய விவசாயிகள், கிராம விவசாயத் தொழிலாளர்கள், நகரத்தில் இருக்கும் மக்கள், எல்லோருக்கும் மலிவான விலையில் அவசியமான உணவுப்பொருள் கிடைக்கவேண்டும் என்பதிலே அரசியல் கருத்து வித்தியாசத்திற்கே இடம் இருக்கவேண்டிய அவசியமே இல்லை. இந்தப் பிரச்னையைச் சரியாகத் தீர்க்காவிட்டால், பஞ்சப்படி உயர்வு, சம்பள உயர்வு என்ற கிளர்ச்சியும், அதனால் ஏற்படக்கூடிய சிக்கல்களும் அதிகரிக்கும். உற்பத்தி பெருகவேண்டுமென்ற நோக்கம் உடையவர்கள் அனைவருமே விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள். சம்பளம் உயரவேண்டும், பஞ்சப்படி உயரவேண்டும் என்பதைவிட விலைவாசி ஒரு நிலையில் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்ற கொள்கைதான் சரியான கொள்கை என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். கொள்கையை ஏற்றுக்கொள்வதில் நம்முடைய அமைச்சர்களும் தயங்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால், நம்முடைய ராஜ்யத்தினுடைய நிலை என்ன, நம்முடைய ராஜ்யத்திலே பிரத்யேகமாக சில காரணங்கள் உண்டா என்பதைப் பற்றி பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தப் பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. நமது அமைச்சர் அவர்கள் இந்த பொறுப்பை ஏற்றதற்கு முன்னாலும் இருந்தது.



10th December 1959] [Sri M. Kalyanasundaram]

அவர்கள் இந்த பொறுப்புக்கு வந்த பிறகும் தொடர்ந்து இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள், 10 a.m.
விலைவாசி இறங்கிவிடும் என்று. அவர்கள் அம்மாதிரி சொல்லாமல் இருந்தால் தேவலை என்று தோன்றுகிறது. அவர்கள் அம்மாதிரி சொன்ன அதே மாதத்தில் உடனே ஒரு பத்து புள்ளி அதிகமாக ஏறிவிடுகிறது. அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லுவதாக நினைக்க வேண்டாம். அவர்களுடைய ஜோஸ்யம் பலிக்காமல் போவது மட்டுமல்ல, அவர்களுடைய வாக்குக்கு நேர் விரோதமாகப் போகிறது நிலைமை. (ஒரு கனம் அங்கத்தினர்: அப்படியென்றால் விலை ஏறும் என்று சொல்லட்டுமா?) அப்படிச் சொன்னால் ஒரு வேளை விலை இறங்குமோ என்னவோ தெரியாது. அவர்களுடைய வாக்குக்கு நேர் விரோதமாக நிகழ்ச்சி நடக்கிறது. உதாரணமாக, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் நான் பத்திரிகையில் பார்த்தேன். விலைவாசி இறங்கிக்கொண்டிருக்கிறது என்று ஒரு இடத்திலே சொன்னார்கள். செப்டம்பர் மாதத்தில் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அந்த மாதத்தில் சர்க்கார் புள்ளி விவரம் என்ன காட்டுகிறது என்றால்—இந்தப் புள்ளி விவரத்தை நாங்கள் எதிர்க்கட்சியினர் ஒன்றும் வெளியே தயார் செய்யவில்லை. கோட்டைக்குள்ளேயே இருக்கக்கூடிய புள்ளிவிவரம் சேகரிக்கும் நிபுணர்கள் தயார் செய்த புள்ளிவிவரம், அது நமது அமைச்சர் கவனத்திற்கு வருகிறதோ அல்லது அவருடைய இலாகாவின் கவனத்திற்கு வருகிறதோ என்னவோ தெரியவில்லை—434 புள்ளியிலிருந்து 441 புள்ளிக்கு உயர்ந்திருக்கிறது. விலைவாசியில் 7 புள்ளி உயர்வு. இந்த 7 புள்ளி உயர்வுக்கு அவர்களே காரணம் சொல்லுகிறார்கள். மற்ற பொருள்களின் விலை உயர்ந்திருப்பது மட்டுமல்ல. குறிப்பாக உணவுப் பண்டங்கள், அதுவும் அரிசி, புளி, காய்கறிகள், மிளகாய் ஆகிய நான்கு இனங்களிலும் விலை 17, 18 புள்ளி உயர்ந்திருப்பதால், மொத்த விலைவாசி 7 புள்ளி உயர்ந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்களின் முதல் ஜோஸ்யம் தவறிவிட்டது.

இரண்டாவது தடவை அமைச்சர் அவர்கள் ஜோஸ்யமும் சொன்னார். அது சட்டசபையிலே என்று நினைக்கிறேன். அப்பொழுது நவம்பர் மாத புள்ளி விவரம் என்ன காட்டுகிறது என்றால், ஏற்கனவே 7 புள்ளி உயர்ந்தது இப்பொழுது 8 புள்ளி உயர்ந்திருக்கிறது. நவம்பர் மாதத்தில் 441-லிருந்து 449-க்கு ஏறியிருக்கிறது. டிசம்பர் இந்த 10 நாட்களுக்குள் என்ன நடந்திருக்கிறதோ என்னவோ தெரியாது. நவம்பர் மாதம் வரையில் 449 புள்ளி உயர்வு. மிக மோசமான காலத்தில் இருந்தது 453 புள்ளி. ரொம்ப மோசமான புள்ளியை எட்டிப் பிடிப்பதற்கு இன்னும் 4 புள்ளிதான் பாக்கி. புள்ளி விலைவாசி இருந்த காலத்தில் உணவு பற்றாக்குறை இருந்தது. தேசம் ஒட்டுமொத்தமாகவும் உற்பத்தி குறைவாக இருந்தது. சமீபத்தில் 5 வருஷ காலத்தில் உற்பத்தி குறைந்திருக்கிறதா, இல்லை. திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா, நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விவசாய இலாகா மட்டும் திட்டம் போட்டதைவிட கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது. நான்கு வருஷங்களில் 7 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஓரளவு

[Sri M. Kalyanasundaram] [10th December 1959

விலைவாசி உயர்வு காரணமாக இருக்கலாம். ஆனால், செலவு திட்டத்திற்குமேல் அதிகமாக ஆகியிருக்கிறது. பெரிய பாசன திட்டங்களெல்லாம் அநேகமாக நிறைவேற்றப்பட்டு விட்டன. ஒன்பது திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன. இன்னும் ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்காக 12 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி 4 வருஷங்களில் 19 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு அதனால் பலன் என்ன கிடைத்திருக்கிறது என்று பார்த்தால் விலை ஏறியிருக்கிறது. வருமானம் சம்பந்தப்பட்டமட்டில் ராஜ்ய மக்கள் பணம் கொடுக்கவில்லை என்று நினைத்துவிடக்கூடாது. பணம் அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு அதிகமாக செலவழித்திருப்பதாகச் சொல்லுகிறார்களோ, அதேபோல வருமானம் எவ்வளவு வந்திருக்கிறது என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதிக வரி மூலம் சர்க்கார் எதிர்பாராத வருமானம் ரூபாய் 1,26,00,000 ஆனால், இந்த 4 வருஷங்களில் மட்டும் வரியின் மூலம் அதிகமாக வருமானம் கிடைத்தது 20 கோடி ரூபாய் எதிர்பார்த்ததற்கு மேல் அதிகமாக வருமானம் கிடைத்திருக்கிறது, செலவும் அதிகமாக ஆகியிருக்கிறது. உற்பத்தி எவ்வளவு குறைந்திருக்கிறது என்று சொன்னால், இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 12 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டம் போட்டோம். ஒன்பது லட்சம் டன் நிச்சயமாக கிடைக்கும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

1958-59-ல் நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் உத்தேசமாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய உணவுப்பொருள் 50 லட்சம் டன். சர்க்கார் அறிக்கையிலே இருக்கக்கூடிய புள்ளிவிவரத்தைத்தான் நான் கொடுக்கிறேன். அது நம்முடைய தேவைக்கு கிட்டத்தட்ட போதுமானது. ஒரு மனிதனுக்கு 16 அவுன்ஸ் உணவுப் பொருள் தேவை என்று வைத்துக்கொண்டால், 50 லட்சம் டன் கிட்டத்தட்ட நமது தேவைக்குப் போதுமானது. ஓரளவுக்கு கேரளாவுக்குப் போகலாம். வேறு ஏதாவது எதிர்பார்த்ததிலே வராமல் போகலாம். இதைச் சரிகட்டுவதற்கு கொஞ்சம் அதிகமாக தேவையாக இருக்கலாம். ஆனால் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றும், கேரளாவுக்கு போவதைக் கழத்தாலுங்கூட, விலைவாசி இவ்வளவு ஏறக்கூடிய அளவுக்கு நமது பற்றாக்குறை இருக்கிறதா என்று பார்த்தால், பற்றாக்குறை அந்த அளவுக்கு இல்லை. ஆனால், விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. இந்த உண்மையைத்தான் நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

உற்பத்தி பெருகவேண்டுமென்று சொல்லுகிறார்கள். கவர்னர் உரையில் கூட நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியைப் பெருக்குவதுதான் நல்ல வழி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 'இண்டர்நெல் ப்ரொடக்ஷன்' வேண்டும். மத்திய சர்க்காரையோ, வெளி நாட்டு இறக்குமதியையோ எதிர்பார்த்துக்கொண்டிருப்பது சரியல்ல என்று சொல்லுவது ஆதரிக்கக்கூடிய விஷயம்தான். ஆனால், உற்பத்தி பெருகியும் விலைவாசி ஏறியிருக்கிறது. மத்திய சர்க்கார் ஒருவேளை வாக்களித்துக் கொடுக்காமல் இருக்கலாம்.



10th December 1959] [Sri M. Kalyanasundaram]

கேரளாவுக்குப் போகிறதே என்று அமைச்சர் அவர்களுக்கு கவலை இருக்கலாம். நம்முடைய ராஜ்யத்திற்குத் தேவையான உணவை முதலில் கொடுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. கேரளாவுக்குப் போவதைத் தடை செய்யவேண்டுமென்று விரும்பினால் அதுபற்றி கவலை இல்லை. கேரளாவுக்குப் போவதினால்தான் இந்த பற்றாக்குறை என்று அமைச்சர் அவர்கள் கருதினால், கேரளாவுக்குப் போவதைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், இன்னொரு சமயம் கேரளாவுக்கு போகக்கூடிய அரிசியை நாம் கொள்முதல் செய்வதில் பிரயோசனம் இல்லை என்று அமைச்சர் அவர்களே சொல்லுகிறார். ஏனென்றால் குறுவை அரிசியை நம் ராஜ்ய மக்கள் அதிகமாக உண்பதில்லை. அம்மாதிரி செய்தால் காவேரி வட்டாரத்திலுள்ள விவசாயிகளை பெரும் அளவுக்கு பாதிக்கும் என்று சொல்லுகிறார். ஆகையினால் குறுவை அரிசி போவதை தடை செய்வதாயிருந்தால், காவேரி வட்டாரத்தில் சாகுபடி முறையையே மாற்றி அமைக்க சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். கேரளாவும் நம்முடைய தேசத்தில் ஒரு ராஜ்யம்தான். நாம் தடை செய்துவிட்டால் அதனால் கேரள மக்கள் செத்துப் போய்விடமாட்டார்கள். அவர்களுக்குத் தேவையான அரிசியை அவர்கள் வேறு எங்கிருந்தாவது பெற்றுக்கொண்டு விடுவார்கள். தாங்கள் செய்திருக்கக்கூடிய தவறுகளை, எடுக்க தவறியிருக்கக்கூடிய அல்லது எடுத்த தவறான நடவடிக்கைகளை மறைப்பதற்காக வேண்டி கேரள ராஜ்யத்தைக் காட்டுவதோ அல்லது ஸோன் பிரிப்பதற்கு மத்திய சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லுகிறதோ பிரச்னையைத் தீர்த்துவிடாது. ஸோன் பிரிப்பது அவசியமாக இருந்தால் பிரித்துக்கொள்ளட்டும். ஆனால், தென் உணவு மண்டலம் அடிப்படை பிரச்னை அல்ல. உணவு மண்டலம் இருந்தாலும், சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கலாம். எல்லா ராஜ்யங்களும் இந்தியாவுக்கு உட்பட்டவைதான். பக்கத்து ராஜ்யத்திற்கு கஷ்டம் ஏற்பட்டால், அது நம்மை பாதிக்காமல் இருந்துவிடாது. தனி மண்டலம் பிரித்துவிட்டால் சௌகரியமாக இருக்கும் என்று நினைத்தால், அம்மாதிரி செய்யட்டும். அதற்கு ஆதரவு உண்டு. ஆனால், பிரச்னை அதுவல்ல. கேரளாவுக்குப் போவதை தடுப்பதோ, அல்லது உணவு மண்டலம் பிரிப்பதோ அடிப்படை பிரச்னை அல்ல. அடிப்படை பிரச்னை என்னவென்றால், நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாகக்கூடிய உணவுப் பொருள்கள் ராஜ்யத்தில் அதை உபயோகிக்கக்கூடியவர்களுக்கு தேவைப்பட்டபோது கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்திருக்கிறார்களா என்பதைத்தான் கவனிக்க வேண்டும். அதைத்தான் நான் வற்புறுத்த விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் சம்பந்தமாக பற்றாக்குறை இல்லை என்று பார்த்துவிட்டோம். அப்பொழுது ஏன் விலை ஏறிக்கொண்டிருக்கிறது? உபயோகப்படுத்துகிறவர்களுக்கு ஏன் கிடைக்கவில்லை என்பதைக் குறித்து ஆராய்ச்சி செய்கிறபொழுதுதான் நில உடைமைப் பிரச்னை முக்கியமாக ஆகிறது. உற்பத்தியாகக்கூடிய நெல் எங்கே போகிறது? அதற்கு புள்ளிவிவரம் சர்க்காருடைய தஸ்தாவேஜியிலிருந்தே எடுத்துக் காட்டுகிறேன். பெரிய அளவு நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் உற்பத்தி செய்யும் கணிசமாக அளவு நெல் உடனே மார்க்கெட்டுக்கு

[Sri M. Kalyanasundaram] [10th December 1959

விற்பனைக்கு வருவதில்லை. அது அவர்களுடைய பெரிய கிட்டங்கிகளில் முடக்கப்படுகிறது. அவர்கள் இடத்தில் கைவைக்காமல் உணவுப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைத்தால், மத்திய சர்க்காரிடமிருந்து எத்தனை லட்சம் டன் வாங்கினாலும் போதாது. மத்திய சர்க்காரிடமிருந்தும் வாங்கட்டும். வாங்க வேண்டாம் என்று சொல்லவில்லை. வாங்குவதில் ஆட்சேபனை இல்லை. கேரளாவுக்குப் போவதை தடை செய்வதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. உள் நாட்டில் உற்பத்தியாகக்கூடிய கணிசமான அளவு நெல் பதுக்கி வைக்கப்படுவதை தடுக்கவேண்டும். பணபலம் படைத்தவர்கள் பதுக்கிவைக்கிறார்கள். நாம் உற்பத்தி செய்பவர்களுக்கு பரிந்து பேசுகிறோம். உற்பத்தி செய்பவர்களுக்கு விலைவாசி ஏறியிருப்பது ஓரளவுக்கு அனுகூலம் என்று கவர்னர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. உண்மையான உற்பத்தியாளர் யார் என்பதைப் பார்க்கவேண்டும். வயலில் இறங்கி வேலை செய்யக்கூடியவர்கள்தான் உண்மையான உற்பத்தியாளர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்றே நினைக்கிறேன்.

திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால், மக்கள் உதவி வேண்டுமானால், உற்பத்திப் பெருக்கத்தில் உழைப்பாளனுக்கு சரியான பங்கு வேண்டும். விவசாயிகளில், 1, 2 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள்தான் அதிகம். 15, 20 ஏக்கர் உள்ள சிறு நிலச்சுவான்தார்கள் கொஞ்சபேர். அவர்களுக்கெல்லாம் அனுகூலம் வேண்டும். ஜனத்தொகையில், 54 சதவீதத்திற்கு மேல், சிறு சிறு விவசாயத் தொழிலாளர்கள். ஒரு செண்டு நிலம் கூட இல்லாதவர்கள். கூலி பெற்று ஜீவனம் செய்யக்கூடியவர்கள். விலைவாசி ஏற்றத்தினால், ரூபாய் 1, ரூபாய் 2 கூலி பெற்று வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு அதிகக் கஷ்டம் ஏற்படுகிறது. 1, 2 ஏக்கர் வைத்திருக்கும் சிறு நிலச்சுவாந்தார்களுக்கு, சாகுபடிச் செலவு அதிகமாக இருப்பதால், அடுத்த சாலுக்கு சாகுபடி செய்யவும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. அதிக உற்பத்தியின் பயனை அவர்கள் அடைய முடியவில்லை. விலைவாசி உயர்வினால் ஒரு சிலர், 30 ஏக்கருக்கு அதிகமாக வைத்திருக்கிறவர்கள், லாபமடைகிறார்கள். நானாகச் சொல்லவில்லை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட புத்தகத்திலிருந்து படிக்கிறேன். இது ராஜ்ய சர்க்கார் கொடுத்த தகவல்களிலிருந்து, பிளானிங் கமிஷன் அறிக்கையிலிருந்து படிக்கிறேன். (குறுக்கீடு).

முப்பத்து ஒன்று சதவிகித உற்பத்தியாகும் நிலப் பரப்பில், 2.8 சதவிகிதம்தான் பெரிய ஹோல்டிங்காக இருக்கிறது. அதிகக் குறைவானவர்களிடம்தான் 30 ஏக்கருக்கு அதிகமான நிலம் இருக்கிறது. உற்பத்தியாகக் கூடிய நிலத்திலே கணிசமான பகுதி அவர்களிடம்தான் இருக்கிறது. அதே ரீதியில், மற்ற பயிர் சாகுபடிகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும்கூட (குறுக்கீடு), சரி, குத்தகையைக் கழித்துப் பார்த்தாலும்கூட, 33 லட்சம் டன் அவர்களிடம் தேவைக்கு போக மிச்சமாக இருக்கிறது. அதை நாம் லெவி போட்டு கொள்முதல் செய்யச் சரியான கொள்கையிருந்தால்தான், கணிசமான அளவில் கொள்முதல் செய்ய முடியும். அப்படிக் கொள்முதல் செய்யவேண்டும். இன்னும்



10th December 1959] [Sri M. Kalyanasundaram]

தேவைப்பட்டால், அப்பொழுது, மத்திய சர்க்காரிலிருந்தும் வாங்கிக் கொள்ளலாம். அப்பொழுதுதான் விலைவாசியும் குறையும். நகரத்திலுள்ள மக்களுக்கும், கிராமத்தில் உள்ள மக்களுக்கும், உழைக்கும் உழைப்பாளிகளுக்கும், நிரந்தரமான அனுகூலம் ஏற்படுமே ஒழிய, வேறு வழியில் இல்லை. ஆதலால்தான் ஸ்டேட் டிரேடிங் இன் புட்கிரெயின்ஸ் என்று நேஷனல் டெவலப்மெண்ட் கௌன்சிலிலே முடிவு எடுத்தார்கள். உணவு பொருள் உற்பத்தி செய்தால் மட்டும் போதாது. வினியோகம் செய்யும் முறையைப் பொருத்திருக்கிறது அதன் பயன். இந்த விலைவாசிப் பிரச்னையை ஒரு அரசியல் பிரச்னையாக்காமல் இருக்கவேண்டும். கவர்னரவர்கள், எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பைக் கேட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், உண்மைக்குப் புறம்பான, ஜனங்களுக்கு சாதகமற்ற, உழைப்பாளிகளுக்கு நன்மையற்ற திட்டத்திற்கு, ஒத்துழைப்பு எங்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. தனி நபர் சுதந்திரம், தர்மம் என்று பேசப்படுகிறது. யாருடைய தருமம்? (கனம் ஸ்ரீ காமராஜ்: எது தருமம்?) பொறுங்கள் சொல்லுகிறேன். நில உடைமையை வைத்து, 3 பர்செண்ட் நபர்களுக்காக, மூன்று கோடி மக்களின் உரிமையை விடுவதா? எது தனி நபர் சுதந்திரம்? உழைக்கக் கூடிய மக்கள், அவர்களுக்கு உண்ண உணவு, உடுக்கத் துணி, இருக்க வீடு, கிடைக்கச் செய்வது அவர்களின் தனி நபர் சுதந்திரமில்லையா? எது சரியான தருமம்? அதுவல்லவா தருமம். அதில்லையென்றால், அவர்கள் தருமத்தைச் சொல்ல அருகதையற்றவர்கள். இதைத்தான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

(Mr. Speaker rang the bell.)

SRI M. KALYANASUNDARAM : Two minutes, Sir.

MR. SPEAKER : I have already given the hon. Member seven minutes more. Let him please finish his speech in two minutes.

**SRI M. KALYANASUNDARAM** : சர்க்கார் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எதற்குச் சாதகமாக இருக்கிறது? இந்தப் பிரச்னையை மக்களுக்குச் சாதகமாகத் தீர்க்க வேண்டுமானால், எதிர் கட்சிகள், கம்யூனிஸ்ட், திராவிட முன்னேற்றக் கழகம், இந்தப் பக்கத்தில் ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை, எல்லோரும், அதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், அமைச்சர்கள் செய்யும் காரியங்கள் எப்படி இருக்கிறது? (குறுக்கீடு) அதற்கு நன்றி செலுத்தாமல், ஏசுகிறார்கள். ஏசட்டும், பரவாயில்லை. இதை ஒரு அரசியல் பிரச்னையாக்காமல், மக்களின் நலத்திற்காகக் கேட்டால், எங்கள் ஒத்துழைப்பு எப்பொழுதும் கிடைக்கும். ஆனால், மக்களில் சிலரைக் கொழுக்க வைக்க ஒத்துழைப்பைக் கேட்டால், அது கிடைக்காது என்பதைச் சொல்லிக்கொண்டு, என் பேச்சை முடிக்கிறேன்.

***SRI A. VEDARATHNAM** : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய ராஷ்ட்ர பாலகர் அவர்களுடைய (சில குரல்கள்: என்ன, என்ன?) ராஜ்யம், ராஷ்ட்ரம், இரண்டும் ஒன்றுதான், ஒரு

[Sri A. Vedarathnam] [10th December 1959

சிறந்த ரத்தினச் சுருக்கமான உரையை நிகழ்த்தியதற்காக, அவரைப் பாராட்டக் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். கடந்த மூன்று, நான்கு தினங்களாக, அந்த உரையைப் பற்றிய விவாதம் இங்கே மிக ஊக்கத்தோடு, உற்சாகத்தோடு நடைபெற்று வருகிறது. அந்த உரையைப் பற்றி இங்கே, பலர், நம் எதிர் கட்சி அங்கத்தினர்கள் பேசினார்கள், "உப்பு, சப்பு இல்லாத" ஒரு உரை யென்றும் "அந்தை குறிப்பிட.வில்லை, இதைக் குறிப்பிடவில்லை" என்றும், அதையெல்லாம் குறிப்பிடாததற்கு வருந்துவதாகவும் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருக்கும் என்றும் அவர்கள் கூறினார்கள். அவர்கள் குறிப்பிடும் விஷயங்களெல்லாம் அந்த உரையிலே கொண்டு வரப்பட்டிருக்குமானால், அது ஒரு பிரசங்கமாக இருந்திருக்குமே ஒழிய, ஒரு கவர்னர் நிகழ்த்தும் உரையாக இருந்திருக்காது என்று நான் கூற விரும்புகிறேன். நன்றாக நடைபெறும் ஒரு ராஜ்யத்திலே கவர்னர் ஸ்தானத்திலே இருக்கும் ஒருவர் நிகழ்த்தக்கூடிய உரை எப்படி இருக்க வேண்டுமோ அந்த முறையில் இந்த உரை அமைந்திருக்கிறது. சொல்லுக்கு இலக்கணம் கூறும்போது, வள்ளுவப் பெருந்தகை சொல்கிறார்:

"பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசு அற்ற,
சில சொல்லல் தேற்றா தவர்."

அந்த உரையைப் பற்றி குறை கூறுகிறவர்கள் சொல்லும் அத்தனை விஷயங்களும் குறிப்பிட்டால், இந்த இலக்கணத்திற்கு முற்றிலும் முரணாக இருக்கும். சில வார்த்தைகளிலே நடைபெற்றிருக்கிற, நடை பெறவிருக்கும் எல்லா விஷயங்களையும், ரத்தினச் சுருக்கமாக சொல்லியிருக்கிறார்கள். இந்த உரையை விட சிறப்பாக ஒரு உரையை ஆற்றியிருக்க முடியாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன், சுருக்கமாக. எனக்குக் கொடுத்திருக்கக் கூடிய நேரம் பத்து நிமிஷமானதால் நான் அதற்குள் என்னுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. நமது மாகாணத்திலுள்ள பெரிய பிரச்னையைக் காட்டிலும் நம்முடைய நாடு முழுவதிலும், அதிலும் அகில இந்தியாவுக்கும் உள்ள பிரச்னை, அதாவது இந்தியாவுக்கு வெளியிலிருந்து வரக்கூடிய ஒரு பிரச்னை இந்நாட்டு மக்கள் மனதை வாட்டி வருகிறது.

(Sri T. S. Ramaswamy in the Chair.)

இப்படிப்பட்ட ஒரு முக்கியமான பிரச்னையைப்பற்றி இந்த அவையில் முன் பேசியவர்கள் பலர் குறிப்பிட்டார்கள். நம்முடைய இந்திய எல்லையில், இது வரையிலும் நமக்கு நண்பராக இருந்து வந்த சைனாவின் நடவடிக்கைகளைப் பற்றி. இந்த ஆக்கிரமிப்பு எப்படி இருந்த போதிலும் அது என்னவாகப் போகிறது என்ற விஷயம் இந்த அவையிலேயும் இந்த நிர்வாகத்திலுள்ளவர்கள் கையிலும் இல்லை என்பது நாம் எல்லோரும் அறிவோம். ஆனால் இதன் மூலம் நாம் அறிந்துக்கொண்ட ஒரு உண்மை என்றைக்கும் மறப்பதற்கு இல்லை. மந்திரி சபையிலுள்ளவர்கள் இதை என்றைக்கும் வைத்துக்கொள்ளுவார்கள். நமது சென் நா புலவர் கூறியது போல் கூறியதை குறிப்பிட்டாலும் சான்றாகும்:



10th December 1959] [Sri A. Vedarathnam]

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்."

அபாயம் வருகிறது, அது ஒரு நன்மைக்காகத்தான் என்றார்கள். அதனால் இதுகாறும் நண்பனாக இருந்த சைனா இப்பொழுது விரோதியாக மாறியிருப்பதைப் பற்றி ஒன்றும் ஆச்சரியம் இல்லை. நம்முடைய நண்பன் என்று இதுவரை உடன் இருந்தவர்கள், யார் யார் நம்மிடத்து உண்மையான நண்பர் என்று உடன் இருந்து இருந்து இப்பொழுது எப்படி இருக்கிறார்கள் என்பது தெளிவு பட்டிருக்கிறது என்ற விஷயத்தை அறிந்துக் கொள்வதற்கு இந்த அருமையான சந்தர்ப்பத்தை இந்த சம்பவம் நமக்கு உண்டாக்கி இருக்கிறது என்பதை நான் இந்த சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நாம் மறந்துவிடக்கூடியது அல்ல இந்த விஷயத்தை. இப்பொழுது நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் நம்முடைய அரசாங்கம் என்ன முறையை அனுஷ்டிக்கவேண்டும், எதைக் கையாளவேண்டும், இந்த நோயை பரவ விடாமல் செய்வதற்கு என்ன செய்வது என்ற விஷயங்களை எல்லாம் நம்முடைய அமைச்சர்கள் அறிவார்கள். இதற்கு அதிகமாக இதைப்பற்றி நான் ஒன்றும் கூற விரும்பவில்லை. முக்கியமாக இவர்கள் எல்லாம் கையாள நினைப்பது இன்றைக்கு இந் நாட்டு மக்கள் இந்த ராஜ்யத்திலிருக்கிறவர்களுடைய மனதை இது வாட்டி வருகிறதே, இந்த விஷயத்தின் மூலமாக இந்த அரசாங்கத்தினிடத்தில் அவர்கள் ஓர் அதிருப்தியை விளைவிக்க அவர்கள் நினைக்கிறார்கள். அதற்காக என்ன வழிகளை அனுஷ்டிப்பது என்று ஆலோசனை செய்து அதற்கு விழாக்கள் என்று ஒரு தினமும் கொண்டாடப்பட்டது. இந்த மாநிலம் முழுவதும் இந்த விலைவாசி ஏற்றம் என்ற பூதத்தைக் காண்பித்து பயமுறுத்தலாம் என்பது அவர்களுடைய அந்தரங்க நோக்கம். அவர்களை நான் ஒரு விஷயம் கேட்க விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் உற்பத்தி அதிகரிக்காத காரணமாக விலைவாசி ஏறிவிட்டது என்று எல்லாம் கூறுகிறார்கள். நம்முடைய மாநிலத்திற்கு அண்மையில் இருக்கிற ஆந்தர மாகாணம் அவர்களுடைய தேவைக்குப்போக 6 அல்லது 7 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி பண்ணுகிறார்கள். அவர்கள் அரசாங்கம் நிர்ணயித்த விலைக்காவது கொடுக்க நம்முடைய நாட்டின் தேவைக்குக் கொடுக்க முன் வந்தார்களா என்பதைச் சிந்திக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு மாத்திரம் அல்ல இந்தியாவிலேயே ஒரு சில இடங்களைத் தவிர அகில உலகத்திலேயேகூட சொல்லுவேன் விலைவாசி இந்த ராஜ்யத்தை விட எந்த ராஜ்யத்திலாவது இன்றைக்கு இதை விட விலை குறைந்து இருக்கிறதா என்ற விஷயத்தையும் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். கங்கை நதி சிந்து நதி பாயக்கூடிய இடங்களில் கூட, இன்றைக்கு அதிகப்படியான வளப்பமாக இருக்கக்கூடிய இடங்களில்கூட, விலைவாசிகள் அதிகமாகத்தான் இருக்கிறது. அங்கு விற்கக்கூடியவற்றை ஆராய்ந்து பார்த்தால் நாம் விற்கிற இந்த விலையைக் காட்டிலும் மிகவும் அதிகமான விலைக்கு விற்கிறார்கள். அதனால் இந்த ராஜ்யங்களிலிருந்து அந்த ராஜ்யங்களுக்கு கள்ளக்கடத்தல் கூட நடந்து வருகிறது. அப்படி கள்ளக்கடத்தல் மூலமாகக் கொண்டு போய் அங்கு இங்கு விற்கக்கூடிய விலையைக்

[Sri A. Vedarathnam] [10th December 1959

காட்டிலும் அதிகமாக விற்கிறார்கள். அந்த நிலையில் இருக்கிறது இப்பொழுதுள்ள நிலைமை. அங்கேயெல்லாம் நம்முடைய நாட்டில் விற்கக்கூடிய விலையைக் காட்டிலும் ஐந்து மடங்கு விலைக்கு விற்கப் படுகிறது. விவசாயத் துறையில் எவ்வளவோ முன்னேற்றமடைந் திருக்கிற, விஞ்ஞான முறையில் விவசாயம் செய்யக் கூடிய இடங் களாகிய அமெரிக்கா போன்ற இடங்களில்கூட, விவசாயத் துறை யில் எவ்வளவோ முன்னேற்றமடைந்த நாடுகளில்கூட, நம்முடைய நாட்டிலிருந்து உணவுப் பொருள்களை வாங்கக்கூடிய நிலை இல்லை. அந்த நாட்டிலிருந்து நமது நாட்டிற்கு உணவு பொருள்களை வரவழைத்து கோடிக்கணக்கான ரூபாய் குறைத்து நஷ்டப்பட்டு நம்முடைய விலைக்கு விற்க வேண்டியதாக இருக் கிறது என்பதை அவர்கள் கொஞ்சம் கூர்ந்து கவனிக்கவேண்டும். அங்கேயெல்லாம் சராசரி நபர் ஒன்றுக்கு 17 ஏக்கர் என்று சொன்னால் இங்கே அரையே மூணு வீசம் ஏக்கர் என்று வருகிறது. அந்த நிலைமையில்கூட அங்கேயிருந்து தானியங்களைக் இங்கே கொண்டுவந்து கொடுத்து 40 அல்லது 50 கோடி ரூபாய் நஷ்டப்பட வேண்டியதாக இருக்கிறது. உலக நாடுகளில் இந்த விலைவாசி எப்படி இருக்கிறது என்பதையும் கொஞ்சம் உணர வேண்டும். இங்கே இருக்கிற மிளகாயை வாங்கிக்கொண்டு போய், கொண்டு போகக்கூடிய செலவு எல்லாம் கொடுத்து அங்கே அதிக விலைக்கு விற்கிறார்கள் என்றால் அங்கு எந்த விலைக்கு விற்கப் படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இன்றைக்கு விலைவாசி ஏற்றத்திற்கு உற்பத்தி மாத்திரம் காரணம் அல்ல. தேவைக்கு பன் மடங்கு அதிகமாக வேண்டியதாக தான்ய உற்பத்தியாகியும்கூட அரசாங்கம் நிர்ணயித்த விலைக்குக் கூட அங்கு தானியங்கள் கிடைக்கவில்லை. அதைக் காட்டிலும் அதிகப் படியான விலைக்குத்தான் விற்கப்படுகிறது. இதற்கு உற்பத்தி மட்டும் காரணம் இல்லை என்பதையும் நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக ஆந்தர மாகாணத்தில் 6 அல்லது 7 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்து வருகிறார்கள். இந்த மாநிலத்தில் நிர்ணயிக்கிற விலைக்கு அவர்கள் கொடுப்பது இல்லை, அந்த விலைக்கு அவர்கள் அங்கே விற்பதும் இல்லை. ஆகவே இப்படிப்பட்ட விலைவாசி உயர்வு இந்த மாகாணத்தில் மட்டும் அல்ல உலக நாடுகளிலேயே இருப்பதை நாம் அறிவோம். சமீபத்தில் பிரிந்து போன அண்டை ராஜ்யங்களில் ஒரு பல் துலக்கும் டூத் ப்ரஷ் விலையைப் பார்த்தால் இங்கு ஒரு ரூபாய் அல்லது ஒன்றேகால் ரூபாய் என்றால் பாகிஸ்தானில் அதன் விலை ஏழு அல்லது எட்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதே போன்று இங்கே பத்து அல்லது பதினைந்து ரூபாய்க்கு விற்கப்படுகிற ஒரு ஜதை பாதரட்சை ரஷ்யாவில் 250 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. ஆகவே இப்பொழுது குறை கூறுகிற நண்பர்கள் இந்த விலைவாசி ஏற்றத்தை ஒரு வியாஜ்யமாக வைத்துக்கொண்டு ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்கள்பேரில் ஒரு அதிருப்தியை வளர்க்க முன் வர மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எதைச் சொன்னாலும் மக்கள் நம்புகிறார்கள்



10th December 1959] [Sri A. Vedarathnam]

என்பதற்காக இனி இப்படிச் சொல்ல வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். எதைச் செய்தாலும் சொன்னாலும் அதை நம்புகிற மக்கள் இருக்கிற காரணத்தால் இந்த மாதிரியான பிரசாரம் வேண்டியதில்லை.

அடுத்தபடியாக இங்கே கவர்னர் பெருமானுடைய உரையைப் பற்றிப் பேசிய அத்தனை அங்கத்தினர்களும் மற்ற எத்தனையோ விஷயங்களைப்பற்றி கூறியபோதிலும் ஒரு விஷயத்தை அநேகமாக ஒவ்வொரு அங்கத்தினரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது என்ன விஷயம் என்று சொல்லி கூர்ந்து பார்த்தால் அது நீர்ப்பாசன விஷயம்தான். அதைத்தான் அநேகமாக நான் கவனித்த வரையில் இந்த அவையில் எல்லோரும் கூறியிருக்கிறார்கள். எதிர் கட்சி அங்கத்தினர்களும் சரி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி எல்லோரும் நடை முறையில் குறிப்பிட்ட ஒரு விஷயம் என்ன என்பதை எடுத்துக்கொண்டால் அது நீர்ப்பாசன விஷயமாகத் தான் இருக்கும். அவர்வர்கள் தங்களுடைய தொகுதியைப் 10-30 a.m.
பொறுத்த வரையில் ஒருசில யோசனையைச் சொல்லி அதற்கான வசதிகள் எல்லாம் இருக்கிற காரணத்தினால் அவற்றைக்கொண்டு விரைவில் பாசனவசதி செய்து கொடுக்கவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் செய்த ஒரு தவறு என்னவென்றால் முதல் ஐந்தாண்டுத் திட்டம் பூர்த்தியானவுடன் 2 லட்சம் டன் உணவு தான்யத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அப்படி ஏற்று மதி செய்துவிட்டோம் என்ற நம்பிக்கையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்காக போதிய பணம் ஒதுக்காது போனதுதான். அதனால்தான் திட்டத்தை மறு பரிசீலனை செய்து திருத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மற்ற எந்த இனத்திற்கு நிதி ஒதுக்கினாலும், ஒதுக்காவிட்டாலும் வேறு எந்த துறையில் அபிவிருத்தி செய்வதற்கு அக்கறை எடுத்துக் கொண் டாலும் எடுத்துக் கொள்ளாவிட்டாலும் நீர்ப்பாசன விஷயத்தில் அவர்கள் முழு கவனம் செலுத்தி, அங்கத்தினர்கள் கூறிய யோசனை களை எல்லாம் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். அதற்குக் கொஞ்சம்கூடத் தயங்காது அரசாங்கம் முன்வரும் என்று நினைக் கிறேன். எனக்கு அதிகம் பேச அவகாசம் இல்லாததால் இன்னும் ஓரே ஒரு வியஷத்தை மட்டும் கூறிவிட்டு முடித்துக்கொள்கிறேன். இந்த அவையில் அது ஒரு பெரிய பிரச்சனையாக இல்லாமல் போனாலும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் முக்கிய பிரச்சனையாக இருப்பது உச்ச வரம்பு. அதைப்பற்றி. இந்தச் சபையில் ஒரு மசோதா ஆலோசனைக்கு வர இருந்தது. இப்போது கொஞ்சம் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். ப்ரீதிங் டைம்—மூச்சுவிடுகின்ற அவகாசம் கிடைத்திருக்கிறது. அதனால் இந்தச் சபையில் அந்த பில்லைக் கொண்டுவந்து நிறைவேற்ற அவசியம் இல்லாத நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் நமது மாகாணவாசிகள் மிக்க அறிவாளிகள், புத்தி சாலிகள். நிலச்சுவாந்தார்கள் என்றால் அதிலும் கெட்டிக்கார்ர் கள். சொத்து உடையவர்கள் என்று சொன்னாலே அவர்களுக்கு ஒரு தனித் திறன் இருக்கிறது. மகாத்மா காந்தி அவர்கள் சொல்லி

[Sri A. Vedarathnam] [10th December 1959

யிருக்கிறது போல் "அவர்களை அழித்துவிடக்கூடாது. அவர்களுடைய திறன் சக்தி எல்லாம் மனித சமுதாயத்திற்குப் பயன் படக்கூடிய வகையில், அவர்கள் தர்மகர்த்தர்களாக இருந்து நாட்டுக்கு தங்கள் சொத்தை நல்லவழியில் செலவழிப்பதற்கு மார்க்கம் தேட வேண்டும்" என்று சொல்வார்கள். ஆகவே நாம் இன்னும் கொஞ்சம் அவகாசம் கொடுப்போமேயானால் நில உச்ச வரம்பு சட்டம் என்று ஒன்று ஏற்படுத்துவதற்கே அவசியம் இல்லாதபடி அவர்கள் செய்து கொள்வார்கள். எப்படி சுதேச சமஸ்தான மன்னர்கள் ஒரு கூப்பாடும் இல்லாமல் தங்கள் ராஜ்யத்தைத் துறந்தார்களோ அப்படி இந்தப் பிரச்சனைக்கும் ஒரு முடிவு ஏற்பட்டுவிடும். ஜமீன்தாரி ஒழிப்பு மசோதா கொண்டு வந்தபோது காங்கிரஸ் கட்சியிலேயே பத்துப் பதினைந்து ஜமீன்தார்கள் இருந்தார்கள். மந்திரி சபையில் மூன்று ஜமீன்தார்கள் இருந்தார்கள். அப்படி இருந்தும் ஜமீன் அபாலிஷன் பில் இந்தச் சபையில் நிறைவேறி இருக்கிறது என்றால் அதேமாதிரியாக நில உச்சவரம்பு மசோதாகூட இங்கே எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் கொண்டுவர முடியும். ஆனால் மந்திரி அவர்கள் ஒரு காரியம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தற்போது ஒரு டிரஷரியிலாவது ஸ்டாம்பு கிடையாது. அங்கு எல்லாவற்றிலும் ஸ்டாம்பு கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் தர்ம ஸ்தாபனங்களுடைய நிலங்களுக்கு உச்ச வரம்பு கொண்டுவரப்படுமா படாதா என்பதைப் பற்றி ஒரு குழப்பமான நிலையில் ஆலோசனையில் இருந்து கொண்டு வருகிறது. நில உச்ச வரம்பு என்று கட்டுவதாக இருந்தாலும் தர்ம ஸ்தாபனங்களுடைய சொத்துக்கு நிலத்திற்கு வரம்பு என்று இருக்கக் கூடாது. எத்தனையோ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக முதல் குலோத்துங்கனால் அளிக்கப்பட்ட மானியம், இரண்டாவது குலோத்துங்கனால் அளிக்கப்பட்ட மானியம் என்று அந்த நிலங்கள் எல்லாம் கோயிலுக்கு எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. கல்வெட்டுக்களிலே அவற்றைப் பார்க்கலாம். எத்தனையோ ஆண்டு காலமாக மொகலாய ஆட்சி காலத்தில்கூட அந்த நிலங்கள் பறிமுதல் செய்யப்படாமல் இருந்து வந்திருக்கின்றன. நாம் இன்றைக்குச் சொல்லலாம். அந்த நிலங்களை எடுத்துக்கொண்டு அதற்கு நஷ்டஈடாக வேறு ஏதாவது கொடுக்கலாம் என்று. அந்தக் கோவில்களுக்கு பழைய மன்னர்கள் காலத்தில் நிலத்தைத் தவிர நகைகளாகவும், இதர பொருள்களாகவும் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் எல்லாம் என்றோ இல்லாமல் போய்விட்டது. ஆனால் நிலமாக இருந்த ஒரு காரணத்தினால் பூமி மட்டும் இன்றுவரை இருந்து வந்திருக்கிறது. ஆகையால் நிலத்திற்கு உச்சவரம்பு என்று கொண்டுவரும்போது தர்ம ஸ்தாபனங்களின் சொத்தில் கை வைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் அந்த சொத்துக்களில் இருந்து வரும் பணம் எங்கும் போவதில்லை. எத்தனையோ கலை நிபுணர்களுக்கு, கோயில் கைங்கர்யம் செய்கிற ஏழைகளுக்கு, கூட்டுகிறவர்களுக்குத்தான் போய்ச்சேருகிறது. ஆகையால் உச்ச வரம்பு கட்டும்போது தர்ம ஸ்தாபனங்களுடைய சொத்துக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு இந்த உரையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.



10th December 1959]

* SRIMATHI SAVITHRI SHANMUGHAM: கனம் சபாநாயகர் அவர்களே, நமது கவர்னர் பெருமான் ஆற்றிய பேருரையைப் பாராட்டி, அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு இந்த உரையின் பேரிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த நான்கு நாட்களாக இந்த உரையின் பேரிலே பல அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டு அரசாங்கத்தைப் பாராட்டியும், அரசாங்க நிர்வாகத்தில் உள்ள குற்றங்குறைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய கருத்து கவர்னர் பெருமானின் உரை சுருக்கமாக இருந்தபோதிலும், அந்த உரையிலேயே நம்முடைய ராஜ்யத்திலே இன்று வரையில் நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நன்மைகளையும், அதேசமயத்தில் இன்னும் இருக்கக் கூடிய பல குறைபாடுகளையும் அவர்கள் தெள்ளத் தெளிய நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்திலே அதுவும் முக்கியமாக மற்ற ராஜ்யங்களைவிட சிறப்பான பல திட்டங்களை வகுத்தும், நிறைவேற்றியும் வருகிறோம் என்றால் நம் ராஜ்யம் எல்லாவற்றுக்கும் முன் அணியில் இருக்கிறதென்றால் அதற்காக நாம் சந்தோஷப்படாமல் இருக்கமுடியாது. அதற்காக நம்முண்டய ராஜ்யத்தில் இருக்கும் அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பாராட்டாமல் இருக்க முடியாது. சிறந்த இரு பெரிய திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். பலபல நீர்ப்பாசன திட்டங்களையும், மின்சார திட்டங்களையும் அதிக விரைவில் ஏற்படுத்தி பல லட்சக்கணக்கான ஏக்கரா நிலங்கள் இன்றைய தினம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதைக் கண்குளிரக் காண்கிறோம்.

கவர்னர் பெருமான் தம்முடைய உரையின் ஆரம்பத்திலேயே நமக்கு இவ்வாண்டு பருவ மழை சாதகமாக இருந்ததாய் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்திருக்கிறார். அதன் காரணமாக இன்றைய தினம் நம்முடைய ராஜ்யத்திலே பலவிடங்களில் உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால் அதே சமயத்தில் உற்பத்தி அதிகரித்து இருக்கிறது என்று பெருமை கொண்டாலும் இன்று நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் இல்லாமல் நம்முடைய நாட்டிலேயே விலைவாசிகள் விஷம் போல ஏறிக் கொண்டிருக்கிறதென்பதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். இதனால் பொதுமக்கள் மிகவும் கவலைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சனையை நாம் தீர்க்கவேண்டுமென்று சொன்னால் உற்பத்தியைப் பெருக்குவதோடுகூட நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து நல்ல கருத்துக்களை அவ்வப்போது ஆளும் கட்சிக்குச் சொல்ல வேண்டும். எதிர்தரப்பில் உள்ளவர்கள் எல்லாம் நல்ல கருத்துக்களைச் சொல்லி ஒத்துழைத்தால்தான் இந்தப் பிரச்சனையைச் சரியான முறையில் தீர்க்க முடியும். இது நம்முடைய நாடு என்கிற பற்றை நாம் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொண்டு நாட்டின் நலனுக்குப் பாடுபடவேண்டும். இதை விட்டுவிட்டு சமீபத்தில் நடந்தது நம் எல்லோருக்கும் தெரியும்—விலைவாசிகளைக் குறைக்கவேண்டும் என்று பல கட்சித் தலைவர்கள் சேர்ந்து கண்டனக் கூட்டங்களை நடத்தினார்கள். ஆனால் இதனால் நாம் அடைந்த பயன் என்ன என்பதை நாம் நன்கு உணர்ந்து இருக்கிறோம். விலைவாசிகள் இறங்கிவிடவில்லை. அதற்கு மாறாக

[Srimathi Savithri Shanmugham] [10th December 1959

பொருள்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்கிற பீதி மக்கள் உள்ளத்திலும், இதைச் சந்தர்ப்பமாகக் கொண்டு ஏறுத பொருள்களின் விலையைக்கூட ஏற்றுகிற மனப்பான்மை வியாபாரிகளின் உள்ளத்திலும்தான் ஏற்பட வசதி உண்டாயிற்று. அதை விட்டுவிட்டு விலைவாசிகளைக் குறைப்பதற்கு உருப்படியான யோசனைகளை ஆளும் கட்சியினருக்கு நாம் எல்லாம் சொல்லியிருக்கலாம். அப்படிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியதுதான் நம்முடைய கடமை என்பதை மீண்டும் ஒரு முறை வற்புறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்று பலபல பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் எல்லாம் முடிந்து இருக்கின்றன. இன்னும் பல திட்டங்கள் நம்மை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக எங்கள் கோவை ஜில்லாவில் வர இருக்கும் பரம்பிக்குளத் திட்டம் நல்லதொரு முறையில் அந்தப் பகுதியில் விவசாயம் பெருகுவதற்கும், உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கும் வாய்ப்பாக எதிர்நோக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு மிகவும் முக்கியமானது மின்சாரம். இன்று எல்லா இடங்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரித்து, கிணறுகளுக்கு பம்பு செட்டுகள் வைத்து அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு கூட்டுறவு முறையில் கடன் கொடுக்கும் திட்டம் மிகவும் சாதகமாக இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் உர வினியோகம் செய்யப்படாமல் தவறிவிடுகிறார்கள்.

அந்தமாதிரி ஏற்படாமல் தேவையானபோது தகுந்த காலங்களில் அவர்களுக்கு அந்த உரம் கிடைப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் இன்று விவசாயத்திற்கு முக்கியமான பல உப்புகள் கூட விவசாயிகளுக்கு வேண்டிய அளவில் கிடைக்காததினால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உணவு உற்பத்தி அதிகமாகயிருந்தும் கூட விலைவாசிகள் உயர்ந்திருப்பதை நமது அரசாங்கமும், அமைச்சர்களும் உணர்ந்து உடனடியாக எல்லா இடங்களிலும் ஆங்காங்கு நியாயவிலைக் கடைகள் ஆரம்பித்து நியாயவிலைக் கடைகள் மூலம் மக்களுக்கு நல்ல முறையில் உணவுப் பொருள்களைக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் பல அங்கத்தினர்கள், இன்னும் சில காலத்திற்குள்ளாக இந்த நியாயவிலைக் கடைகளை நிறுத்தி விட வேண்டுமென்று சொல்வதைக் கேட்டு வருந்துகிறேன். ஆனால் நாள் செல்லச்செல்ல வியாபாரிகளும் மக்களுமே உணர்ந்து நியாயமான விலையில் உணவுப் பொருள்களை மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை ஏற்பட்டு நியாயவிலைக் கடைகளின் அவசியமே இல்லாமல் போகும் என்றுதான் எனது சொந்தக் கருத்து. சமீபத்தில் சர்க்கரைக்கு திடீரென்று கஷ்டம் ஏற்பட்டபோது நமது அரசாங்கம் உடனடியாக அந்தந்த ஜில்லாக்களிலே இதற்கென்று தனிப்பட்ட அதிகாரிகளை நியமிக்காமல் கலெக்டரும் அவரது சிப்பந்திகளும் சேர்ந்து நல்ல முறையில் ஆங்காங்கு மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறார்கள். அதற்காக நான் அதிகாரிகளையும் அவர்களது சிப்பந்திகளையும் பாராட்டிக் கொள்ள



10th December 1959] [Srimathi Savithri Shanmugham]

விரும்புகிறேன். முக்கியமாக நாம் கவனம் செலுத்த வேண்டியது சுகாதாரம். கோவை நகரைப் பொறுத்த அளவில் முக்கியமாக குடிதண்ணீர் பிரச்னை இன்று நேற்றல்ல பல வருட காலமாக இருந்து கொண்டு வருகிறது. போன நவம்பர் 18-ம் தேதி கோவை நகரசபையிலும் கூட ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். புதிதாக இனிமேல் கட்டப் போகும் வீடுகளுக்கு பைப் கனெக்ஷன் கொடுக்க முடியாது என்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே குடிதண்ணீர் விஷயத்தில் முக்கியமான கவனம் செலுத்தி கூடிய சீக்கிரம் இதற்காகவுள்ள திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு நல்ல உதவியைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கோவை நகரத்தைப் பொறுத்த மட்டில் சாக்கடைத் திட்டம் நல்லமுறையில் நிறைவேற்றப்படாமலிருக்கிறது. கோவை நகரில் இன்னும் பல பாகங்களில் அண்டர் கிரௌண்ட் ட்ரேனேஜ் இன்னும் முடிவடையவில்லை. இதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் ஜில்லாக்களிலுமே ஆஸ்பத்திரிகளில் நெருக்கடி மிக அதிகமாகயிருக்கிறது. பொதுவாக ஒரு ஆஸ்பத்திரியில் 500 படுக்கைகள்தான் இருக்கவேண்டுமென்று உத்தரவு இருந்தால் அங்கு போய்ப்பார்த்தால் ஆயிரம் நோயாளிகள் அங்கு வந்து சேர்ந்து விடுவதால் அவர்களை வெளியே அனுப்ப முடியாத காரணத்தினால் நெருக்கமாக திண்ணைகளில் கூட, அதாவது வராண்டாக்களில் கூட பாயைக் கொடுத்துப் போட்டு விடுகிறார்கள். அதோடு அதிகப்படியான நோயாளிகள் வரும்போது நர்ஸ்களும், மற்ற சிப்பந்திகளும் குறைவாகயிருக்கிறார்கள். அவர்களை நாம் நம் சகோதர சகோதரிகளாக நினைக்க வேண்டும். இன்றைக்கு ஆறாவது பாரம் படித்த பெண்களுக்கு வேலை கிடைப்பது கஷ்டமாகயிருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும் ஆசிரியர் பயிற்சியைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வேலையில்லா நிலையைத் தவிர்ப்பதற்காகவும் இன்னும் அதிகப்படியான பெண்கள் நர்ஸ் பயிற்சி பெறுவதற்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இன்று பல ஜில்லா போர்ட் பள்ளிகளிலும் ஆறும் வகுப்பு தொடங்க அனுமதி கொடுத்து பல மாதங்களாகியும் ஆசிரியர்கள் அங்கு நியமிக்கப் படாமல் இருப்பதுபற்றி இந்த இடத்தில் கூறிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri M. KARUNANITHI** : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உயர்திருவாளர் மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றியுள்ள உரையின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கவர்னர் அவர்களது உரையின் இறுதிப் பகுதியில் கடமைகளை நிறைவேற்றுவதில் "கடமையுணர்ச்சியுடனும் கண்ணியத்துடனும் செயலாற்றுவீர்கள்" என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவருடைய உரையின் மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில், விலைவாசி உயர்வைத் தடுக்க வேண்டு

[Sri M. Karunanithi] [10th December 1959

மென்று, குறைக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டு யாராவது
என்னுடைய தொகுதிக்கு வந்தால் அவர்களுடைய விரல்களை
வெட்டி விடுவோம் என்று சொல்கிற அளவுக்கு காங்கிரஸ் நண்பர்
கள் தங்களது விவாத உரையில் தங்கள் கண்யத்தைக் காப்பாற்றி
யிருக்கிறார்கள். காந்தியாரின் உருவப்படத்தை மாட்டி வைத்துக்
கொண்டு அஹிம்சையைப் பற்றி இங்கு மிக அழகாக எடுத்துச்
சொல்லி வருகிறார்கள். பிரான்ஸ் நாட்டில் உணவுப் பிரச்னையைத்
தீர்க்கவேண்டுமென்று பாட்டாளி மக்கள் குமுறி எழுந்து
"எங்களுக்கு ரொட்டி வேண்டுமென்று சொன்ன நேரத்தில்
பிரான்ஸ் நாட்டு இராணி ரொட்டி கிடைக்கவில்லையா என்று
ஆச்சரியத்தோடு கேட்டு விட்டு ரொட்டி கிடைக்கவில்லை என்றால்
கேக் சாப்பிடுங்கள் என்று சொன்னாளாம். அவள் தெரியாத்தன
மாக அப்படிச் சொன்னாள். ஆனால் "பௌலான்" என்ற ஒரு
கவர்னர் அதே பிரான்ஸ், நாட்டில், ரொட்டி கிடைக்கவில்லை
என்றால் புல்லைச் சாப்பிடுங்கள் என்று சொன்னான். அவன் ஆணவத்
தோடு பதில் சொன்னான். ஆனால் தெரியாத்தனமாக சொன்ன
அர்சிக்கும், ஆணவத்தோடு பதிலளித்த கவர்னருக்கும் அளித்த
தீர்ப்பு ஒன்றுதான் என்பதை நான் இங்கே மிக மிக வருத்தத்
தோடு குறிப்பிட விரும்புகிறேன். விலைவாசிகள் ஏற்றம் ஏற்பட்டி
ருக்கிற காரணத்தினால் நாட்டில் ஏற்பட்டிருக்கிற தொல்லை தீர
வேண்டுமென்று எதிர்க்கட்சிக்காரர்கள் சர்க்காரோடு ஒத்துழைப்
பதற்கு தயாராகயிருக்கிறோம், நல்ல திட்டங்களை சர்க்கார்
அளிக்குமானால் என்ற நிபந்தனையின் பேரில் எதிர்கட்சிக்காரர்கள்
கண்டனக் கூட்டங்கள் நடத்தினார்களே தவிர சர்க்காரைக்
கவிழ்ந்துவிட வேண்டுமென்றோ அல்லது சர்க்காரைக் குற்றம்
சாட்டவேண்டுமென்பதற்காகவோ அல்ல என்பது அந்த சர்வ
கட்சி கண்டனக் கூட்டங்களில் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது.
இன்னும் சொல்லப் போனால் மக்கள் சர்க்காருக்கு எதிராக
நடத்துகிற பொதுஜன கிளர்ச்சியை, இன்னும் சொல்லப் போனால்
புரட்சியை கொஞ்சம் அடக்கி வைப்பதற்குக்கூட சர்வகட்சியின்
அணிவகுப்பு, சர்வகட்சியின் ஒற்றுமை பயன்படும் என்றுதான்
அந்தக் கண்டனக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லப் பட்டி
ருக்கிறது என்பதை இந்த சட்டசபையில் நான் குறிப்பிட விரும்பு
கிறேன். உணவுப் பிரச்னை என்பது ஒரு நாட்டு மக்களின்,
சாதாரண பிரஜையின் உரிய கோரிக்கைகளில் ஒன்று. உணவு,
உடை, உறையுள் என்ற சாதாரண பிரச்னைகளுக்குக் கூட ஏறத்
தாழ 12 ஆண்டு காலமாக நடைபெறுகிற சுதந்திர சர்க்கார் என்று
சொல்லப்படுகிற இந்த சர்க்காரினால் தீர்வு காணப்படவில்லை
என்பதை யாராவது கண்டிக்காமலோ அல்லது குறிப்பிட்டுச்
சொல்லாமலோ இருக்க முடியாது. கவர்னர் பெருமான் அவர்கள்
4-2-1959-ல், "உணவுப் பற்றாக்குறை நீடித்து வருவது,
வேளாண்மைப் பொருள்களின் விளைவை நாம் இன்னும் பன்
மடங்கு பெருக்கும் வகையிலே தொடர்ந்து முயலவேண்டும்
என்னும் படிப்பினையைத்தான் வலியுறுத்துகிறது" என்று
கூறியிருக்கிறார்கள். அதே கவர்னர் 5—12—1959-ல் ஆற்றிய
உரையில், "வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதின்
மூலம்தான் நமது உணவுப் பிரச்னைக்கு நிரந்தரமான பரிகாரம்
காண முடியும்" என்று அதையே திருப்பிச் சொல்லியிருக்கிறார்கள்.



10th December 1959] [Sri M. Karunanithi]

4—2—1959-ல் எதைச் சொன்னாரோ அதையே 5—12—1959-லும்
சொல்லியிருக்கிறார்கள். 4—12—1959-ல் பெற்ற படிப்பினையை
ஏறத்தாழ 10 மாதங்கள் சுமந்த பின்னரும் அப்படியே இருக்கு
மானால் முயற்சி என்கிற குழந்தை பிறக்கவில்லை என்பதோடு உள்ள
படியே சர்க்கார் கர்ப்பத்தடைப் பிரசாரம் அதற்குத்தான் பயன்
பட்டதோ என்று சந்தேகப்படுகிறேன். உற்பத்தி ஏன் பெருக
வில்லை, உற்பத்தி பெருகினாலும் ஏன் நாட்டிலே இத்தகைய தொல்லை
இருக்கிறது என்பதைப்பற்றி எடுத்துக் கூறுகிற நேரத்தில் நிலவுட
மைக்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்கிற ஒரு பிரச்னையை
கவர்னர் அவரது உரையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல
ஆண்டு காலமாகவே நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டவேண்டு
மென்ற கொள்கையை இந்த சர்க்கார் எடுத்துச் சொல்லி வருகிறது.
ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஏடுகள் மூலம் எழுதுகிறார்கள்,
மேடைகளில் காரசாரமாக பேசுகிறார்கள், ஆனால் உச்சவரம்பு
கட்டப்பட்டதா? அதற்கான முயற்சிகள் எத்தனை வருட காலமாக
எடுக்கப்பட்டு வருகிறது என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க
முடியாது.

கவர்னர் பெருமான் அவர்கள் 58-வது ஆண்டில் ஆற்றிய
உரையில் குறிப்பிட்டார், "நில உடமைக்கு உச்சவரம்பு கட்டுவது
பற்றி அரசாங்கம் இப்போது தீவிரமாக ஆலோசனை செய்து
வருகிறது, இதில் ஒரு முடிவு ஏற்படுமுன் நிலைமை மேலும் சிக்க
லாகாமல் தடுக்க வேண்டும். உத்தேச வரம்புக்கு மீறி நிலத்தைச்
சொந்தமாக்க விரும்பும் போக்கை உடனடியாகக் கட்டுப்படுத்த
வேண்டும். எனவே, தற்காலிகமாக நில உடமைக்கு ஒரு உச்ச
வரம்பு கட்டி, அந்த வரம்புக்கு மேற்பட்டு, நிலத்தைச் சொந்த
மாக்குவதைத் தடை செய்யும் வகையில் ஓர் இடைக்கால
சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் எண்ணியுள்ளது." என்று
8—2—1958-ல் பேசியிருக்கிறார். அதன் பின்னால் 4—2—1959-ல்
இதே கவர்னர் அவர்கள் பேசும்பொழுது "நில உடமைக்கு வரம்பு
கட்டும் வகையிலே மிக விரைவில் ஒரு சட்டம் கொண்டுவரவேண்
டும் என்பது தான் அரசாங்கத்தின் எண்ணம்" என்று குறிப்பிட்
டிருக்கிறார். அதன் பின்னால் சமீபத்தில் 5—2—1959-ல் நிகழ்த்திய
உரையில் "நில உடமைக்கு மேல் வரம்பு நிர்ணயிக்கும் மசோதா
வின் விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன" என்று குறிப்பிடு
கிறார். இதை யெல்லாம் சேர்த்து கவனிக்கும் நேரத்தில்
பயமேற்படுகிறது, காரணம் நிலத்திற்கு உச்சவரம்பு கட்ட
வேண்டும் என்கின்ற தூய எண்ணம் இவர்களுக்கு கொஞ்சமும்
இல்லை என்று தான் எண்ண வேண்டியிருக்கிறது. எலியை பிடிப்
பதற்காக, பூனையை வளர்த்து, அந்தப் பூனைக்கு மணியையும்
கட்டி அது வரும் நேரத்தையும் அறிவிப்பது போலுள்ள புத்தி
சாலித்தனம் தான் இருக்கிறது இதில் என்று எண்ண வேண்டி
யிருக்கிறது. புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்லி நிலப்
பிரபுக்கள் அனைவரும் உஷாராகிவிடுங்கள் என்று கூறி, அவர்கள்
தங்கள் உற்றார் உறவினருக்கும், நெருங்கிய நண்பர்களுக்கும்
தங்கள் நிலத்தை எல்லாம் பிரித்துக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பத்
தையும் அளித்துக்கொண்டிருக்கிற அலங்கோலமான நிலை தான்
இருந்து வருகிறது என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது.

[Sri M. Karunanithi] [10th December 1959

கவர்னர் அவர்களது உரையில், இதே சட்டமன்றத்தில் பல தடவைகளிலும் வலியுறுத்தி சொல்லப்பட்டுவந்த—பஸ் போக்கு வரத்தை எல்லாம் தேசீயமய்மாக்கவேண்டும் என்பதைப்பற்றி—எந்தவிதமான வாசகமும் காணப்படவில்லை. பஸ் தொழில் தேசீயமயமாக்கவேண்டும் என்று முற்போக்கு கட்சிகள் எல்லாம் சொல்லுகிற நேரத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம் எதிர்க்கத்தான் செய்கிறார்கள். பஸ் முதலாளிகள் இல்லாவிட்டால் காங்கிரஸ் இல்லை என்ற நிலைதான் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. பஸ் முதலாளிகளால்தான் இன்று காங்கிரஸ் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை மிக மிக, வற்புறுத்திக் கூறுவதோடு மட்டுமல்ல, அதற்கான ஆதாரங்களை எங்களுக்கு எடுத்துக்காட்ட முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பஸ் முதலாளிகளால்தான் காங்கிரஸ் கர்ப்பாற்றப் படுகிறது, இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸின் உயிர் இன்று பஸ் முதலாளிகளின் கையில்தான் இருக்கிறது என்று குறிப்பிடலாம். புராணத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல் மயில் ராவணனின் உயிர் எங்கே இருக்கிறது என்று அனுமான் தேடிக்கொண்டிருந்த நேரத்தில் அது ஏதோ பத்து காதத்திற்கு அப்பால் உள்ள மலைச்சாரலில் ஒரு தடாகமிருக்கிறது, அதையும் தாண்டிப் போனால் ஒரு சுரங்கம் இருக்கிறது, அதற்குள்ளில் ஒரு குகை இருக்கிறது, அதன் மத்தியில் இருக்கும் டப்பாவில் ஒரு வண்டு இருக்கும், அதைப் பிடித்து நசுக்கினால் தான் மயில் ராவணனைக் கொல்ல முடியும் என்று புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் எவ்வளவு உண்மை இருக்கிறதோ, அந்த உண்மைதான் கனம் அங்கத்தினர் அவர்கள் சிறிது முன்னால் சொன்ன காரியத்திலும் இருக்கும் இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். (கைதட்டல்.)

SRI M. KARUNANITHI : அந்தக் கதைப்படி டப்பாவில் இருக்கும் வண்டைப் பிடித்து நசுக்கினால் எப்படி மயில்ராவணனுடைய உயிரைப் போக்கடிக்க முடியுமோ, அதே போன்று பஸ் தொழிலை தேசீயமயமாக்கிவிட்டால் காங்கிரஸின் நிலையும் ஆகிவிடும் என்பதை எடுத்துக்காட்டவே விரும்பினேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படியானால் பஸ் தொழிலை தேசீயமயமாக்கவேண்டும் என்று சொல்வது காங்கிரஸ் கட்சியை ஒழிப்பதற்காகத்தானா? அல்லது நாட்டினுடைய நன்மையைக் கருதியா என்பதை கேட்க விரும்புகிறேன்.

SRI M. KARUNANITHI : நாட்டினுடைய நன்மைக்காகத் தான் பஸ் தொழில் தேசீயமயமாக்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்றோம். ஆனால் பஸ் தொழில் தேசீயமயமாக்கப்பட்டு விட்டால் ஒழிக்கப்பட வேண்டியவை எல்லாம் தானாகவே ஒழிந்து போய்விடும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், பாயிண்ட் ஆப் ஆர்டர், சட்டமன்றத்தில் சட்டமன்றத்தின் முன்னால் இருக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றி பேசவேண்டும் என்று இருக்கும்போது குறிப்பிட்ட கட்சிகளை நசுக்குவதைப் பற்றியும், அவற்றை ஒழிப்பதைப் பற்றியும் பேசுவது கட்சிகளுக்கு அவமானம் ஏற்படுவதாக இருக்காதா என்பதை அறிய விரும்புகிறேன்.



10th December 1959]

MR. SPEAKER : இதில் ஒழுங்குப் பிரச்னைக்கு ஒன்றுமில்லை.

SRI M. KARUNANITHI : ஆகவே கவர்னர் அவர்களுடைய உரையில் மிக மிக முக்கியமாக இருக்கின்ற பிரச்னைகளைப்பற்றியெல்லாம் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். முக்கியமாக சுயமரியாதைத் திருமணங்களை சட்டப்படி செல்லுபடியாக்க செய்ய வேண்டும் என்று பலதடவை இங்கு கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று நாட்டில் சுயமரியாதைத் திருமணங்கள், முறைப்படி பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் செல்லுபடியாகாது என்று சொல்லக்கூடிய நிலை வளர்ந்து வருகின்றது. நாஸ்தீகர்கள் என்று வீணாக மற்றவர்களால் குற்றஞ்சாட்டப்படுகிறவர்கள் மட்டுமல்ல, ஆஸ்தீகர்களாக இருக்கின்ற அமைச்சர்கள் கலந்து கொள்ளுகின்ற வாழ்க்கை ஒப்பந்தங்களாக இருந்தாலும் சரி, அல்லது அவர்களுடைய ஊரில் இருக்கின்ற அறிவு இயக்கங்களின் மூலமாக நடத்தப்படுகின்ற சுயமரியாதைத் திருமணங்களாக இருந்தாலும் சரி அவைகள் எல்லாம் செல்லுபடியாகாது என்கின்ற நிலை இன்று நாட்டில் வளர்ந்து வருகின்றது. இதற்கு இந்த மன்றத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்பதைப்பற்றி கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிடவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதைப் பற்றி ஒரு குறிப்பு சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் அரியலூரில் ஒரு நீதிபதி முறைப்படி வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தவர் போட்டிருந்த ஜீவனாம்ச வழக்கில் தீர்ப்பளித்திருக்கிறார், சப்-ரெஜிஸ்டிரார் முன்னிலையில் முறைப்படி திருமணம் செய்து கொண்டிருந்தாலும் அந்த திருமணம் செல்லுபடியாகாது என்று தீர்ப்பளித்திருக்கிறார். இந்த அளவுக்குத்தான் நாட்டில் சுயமரியாதைத் திருமணங்களின் நிலை இருந்து வருகிறது. குறள் கூறும் வாழ்க்கைத்துணை நலம் கொள்ளுவதை கூடாது என்று சொல்லலாமா?

"யாயும் ஞாயும் யாராகியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்,
யானும் நீயும் எவ்வழி அறிதும்,
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

என்று சங்ககால இலக்கியத்தில் கூறப்பட்டிருக்கின்ற தன்மையை அனுசரித்து நடைபெறுகின்ற திருமணங்கள் மீண்டும் தொடரலாகாது என்று நினைக்கின்றார்களா என்று தெரியவில்லை. இதை நாங்கள் சொல்லுகின்றோம் என்ற காரணத்திற்காக ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும் பச்சைத் தமிழருடைய ஆட்சித்தான் இந்த நாட்டில் வேரூன்றி நிற்க வேண்டும் என்று சொல்லுகின்ற பெரியார் ராமசாமி அவர்களை திருப்தி செய்கின்ற முறையிலாவது சுயமரியாதைத் திருமணத்தை செல்லுபடியாக்குவதற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க மாட்டார்களா என்று நான் ஏக்கத்தோடு, ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்கின்ற ஒரு சட்டம், நிச்சயமாக இந்த மன்றத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்று தாழ்மையுடன் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

½Sri M. Karunanithi] [10th December 1959

இறுதியாக, நாட்டிலுள்ள உணவுப் பிரச்னைக்கு பரிகாரம் தேடப்படவில்லை, அதற்கான நடவடிக்கைகள் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. பஸ் தொழிலை தேசீயமயமாக்கவேண்டும் என்பதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை, சுயமரியாதைத் திருமணத்தை சட்டப்படி செல்லுபடியாக்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்பதைப்பற்றி இதில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்ற காரணங்களுக்காக நான் எனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு கவர்னர் அவர்களது உரை நாட்டிலுள்ள மக்களை திருப்தி செய்யக் கூடிய வகையில் அமையவில்லை, இங்கு சட்டமன்றத்தில் இருக்கின்ற எங்களுக்கும் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் அமையவில்லை என்பதை தெரிவித்துக்கொண்டு . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: கவர்னர் உரையின் போது சபையில் வந்திருந்தவர்களுக்காகத்தான் உரை நிகழ்த்தினார்கள். வராதவர்களுக்காக அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI M. KARUNANITHI: அன்றைய தினம் சபைக்கு வராதவர்கள் நாங்கள் மட்டுமல்ல, அமைச்சர்களில் கூட இரண்டு மூன்று பேர்கள் வரவில்லை. அவர்களும் எங்களோடு சேர்ந்து, வடநாட்டு கவர்னருக்கு எதிர்ப்பு தெரிவித்ததற்காக நாங்கள் அவர்களையும் பாராட்டுகிறோம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இவ்வளவு தூரத்திற்கு நீங்கள் ஏமாந்தவர்களாக இருக்க மாட்டீர்கள் என்று நம்பினேன். எல்லா விஷயங்களிலும் நீங்கள் இப்படித்தான் ஏமாந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். மற்றவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைத்துக்கொள்வீர்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. (கைத்தட்டல்.)

## V.—ANNOUNCEMENT.

### DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. SPEAKER: இப்பொழுது பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கூடி ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்கிறது. அதாவது இப்போது கூடியிருக்கும் இந்த சபை இன்று மத்தியானம் 1 மணிக்கு எழுந்து பிற்பகல் 3 மணிக்கு திரும்பவும் கூடும், அப்போது கனம் அண்ணாத்துரை அவர்கள் பேசுவார்கள். மாலை ஐந்து அல்லது ஆறு மணி வரைக்கும் சபையை வைத்திருக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். நாளை காலை திரும்பவும் 9 மணிக்கு கூடும், அப்போது கேள்வி நேரத்திற்கு பின்னால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அமைச்சர் அவர்களும் பேசுவார்கள். 12, 13 இந்த தேதிகளில் சபை கூடாது. 14-ந் தேதி காலையில் சப்ளிமெண்டரி கிரான்ட் பற்றிய விவாதம் நடைபெறும். 15-ந் தேதி உத்யோகப்பற்றற்ற விஷயங்கள், தீர்மானங்கள் விவாதிக்கப்படும். அதற்கு பின்னால் 16, 17 இந்த தேதிகளில் அரசாங்க விஷயங்கள் விவாதிக்கப்படும். இதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டார்கள். அதனால் பிற்பகல் சபை கூடும்போது எல்லோரும் வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



## IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

SRI N. MAHALINGAM: சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களது உரையை ஆதரிக்கும் வகையில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் நம்முடைய நாட்டில் விவசாயத்துறையில் அதிகமான வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார்கள். இது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. விவசாயத் துறையில் நல்ல முறையில் உழுது பாடுபட்டு விவசாயத்தை முன்னேற்றமடைய செய்ததற்காக விவசாய சமூகத்திற்கு நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் நன்றி செலுத்துவதற்குப் பதிலாக இங்கு பேசப்படும் சில பேச்சுகள் விவசாய சமூகத்தை பழிப்பதாக இருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது மிகவும் வருத்தத்தை அளிக்கின்றது. 11 a.m.
விலைவாசிகள் உயர்ந்துவிட்டன என்று கூறப்படுகிறது. விலைவாசிகள் மட்டும்தானா உயர்ந்திருக்கின்றன? இன்று தேசத்தில் கூலிகள் (வேஜெஸ்) உயர்ந்திருக்கின்றன. தொழில் துறையில், உற்பத்தியாகும் பொருள்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. விவசாயிகள் வாங்கக்கூடிய பொருள்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. விலைவாசிகள் எல்லாப் பக்கங்களிலும் மிகவும் உயர்ந்திருக்கின்றன என்பதை பல கனம் அங்கத்தினர்கள் மறந்து விட்டார்கள் போலும். இப்போது, விவசாயத்துறையில், கூலி ஓரளவு உயர்ந்திருந்தாலும் அது இன்னும் ஆலைத் தொழிலிலுள்ள கூலிக்குச் சமமாக உயரவில்லை. ஜவுளித் தொழிலில், ஆலையில் தினந்தோறும் எட்டு மணி நேரம் வீதம் வேலை செய்பவர்களுக்கு மாதம் 70-80 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. ஆனால், பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு தினசரிக் கூலி 1½ ரூபாய் அல்லது 1¼ ரூபாய்தான்; அதுவும் பெண்களுக்கு ¾ ரூபாய் அல்லது 14 அணாதான். பருத்தியை 'ப்போஸைஸ்' செய்யும் ஜின்னிங் பாக்டரியில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு தினசரிக் கூலி குறைந்தபட்சம் 1¼ ரூபாயாக இருக்க வேண்டும் என்று சர்க்கார் நிர்ணயித்திருக்கிறார்கள். அது இன்னும் அமல் நடத்தப்படவில்லை. பருத்தி உற்பத்தியாகும் இடத்திலிருந்து துணி உற்பத்தியாகும் இடம் வரையில் உள்ள தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் ஏறுமாறாக இருக்கின்றன. ஒரு இடத்தில் 8 மணி நேர வேலைக்கு மிக அதிகமான கூலி கொடுக்கப்படுகிறது. மற்றொரு இடத்தில் மிகக் குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மிகக் குறைவாகக் கூலி கிடைத்துக் கொண்டிருக்கும்போது விவசாயப் பொருள்களின் விலைகள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்லுவது நியாயமல்ல. எனவே விவசாயப் பொருள்களுக்கு நியாயமான குறைந்தபட்ச விலையை சர்க்கார் நிர்ணயிக்க வேண்டும். விவசாயப் பொருள்களின் விலைகள் ஒருபோதும் குறையாமல் ஒரு குறைந்தபட்ச விலையில் இருக்க வேண்டும். விவசாயிகளின் நன்மைக்காக, விவசாயப் பொருள்களுக்குத் தகுந்த குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்க வேண்டியது மிகவும் அவசியம். விவசாயப் பொருள்களின் விலைகள் கொஞ்சம் அதிகமானவுடன் 'விலை அதிகம், விலை அதிகம்' என்று சொல்லுபவர்கள்

[Sri N. Mahalingam] [10th December 1959

அவைகளுடைய விலைகள் குறைந்தபோதெல்லாம் என்ன செய்தார்கள் என்று கேட்க விரும்புகிறேன். விவசாயிகளுக்காக எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கும்போது விவசாயப் பொருள்களின் விலைகள் அதிகமாகி விட்டன என்று பல அரசியல் கட்சிகள் கூக்குரல் எழுப்புவது நியாயமற்றது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ தியாகராஜன் அவர்கள் இதைத்தான் ஒரு உத்வேகத்துடன் குறிப்பிட்டார்கள். கிராமப்புற மக்களுடன் பழக்கம் இல்லாதவர்கள்தான், கிராம மக்களின் உணர்ச்சியை அறியாதவர்கள்தான், விவசாயப் பொருள்களின் விலைகள் அதிகமாகிவிட்டன என்று குறிப்பிட்டார்கள். அதற்காகவே, தேர்தலில் தம்முடன் யார் வேண்டுமானாலும் போட்டியிடட்டும் என்று அவர் குறிப்பிட்டார். எனவே அவர் அவ்வாறு பேசியதில் கண்ணியக் குறைவானதாகவோ பலாத்காரத்தைத் தூண்டக்கூடியதாகவோ எதுவும் இல்லை. அவர் அவ்வாறு பேசியதில் கிராமப்புற மக்களின் உணர்ச்சியை ஒரு உத்வேகத்துடன் வெளிப்படுத்தினாரே தவிர, அதில் கண்ணியக் குறைவான வார்த்தையோ பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய வார்த்தையோ காந்தி மகானின் தத்துவங்களுக்கு விரோதமான வார்த்தையோ எதுவும் இல்லை என்று கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இப்போது மாநில சர்க்காரின் சிப்பந்திகளின் சம்பள விகிதங்களை நமது சம்பளக் கமிஷன் ஆராய்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் இதற்குள் மத்திய சர்க்காரின் சிப்பந்திகளுக்கு கூடுதலாக 5 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். மத்திய சர்க்காரின் நிதி வசதி சாதகமாக இருப்பதால் அவர்கள் தங்கள் சிப்பந்திகளின் சம்பளங்களை அடிக்கடி அதிகப்படுத்திக்கொண்டே போகிறார்கள். ஆனால் இது மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்திற்கும் மாநில சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்திற்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை அதிகப்படுத்திக்கொண்டே போகிறது. இந்த விஷயத்தில் நமது மாநில சர்க்கார் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் மாநில சர்க்கார் சிப்பந்திகளுக்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க வேண்டியது மிகவும் அவசியம். இப்போதுள்ள நிலையில் மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தைக் குறைக்கவும் முடியாது. ஆனால் நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இனிமேல் நேரிடையாக வெளியிலிருந்து சிப்பந்திகளை தெரிந்தெடுத்து நியமிக்காமல் மாநில சர்க்காரிலிருந்தே 5—6 வருட அனுபவமுள்ள திறமையானவர்களை எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு செய்தால் அனுபவம் உள்ளவர்களாக இருந்தாலும் பல வருடங்களாக உத்தியோக உயர்வு கிடைக்காமல் இருக்கும் பல மாநில சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு மத்திய சர்க்கார் உத்தியோகம் கிடைத்து அதிகச் சம்பளம் கிடைக்கவும் கூடும். இந்த யோசனையை நம் மாநில அரசாங்கம் மற்ற மாநில அரசாங்கங்களுடன் சேர்ந்து மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த வேண்டும். இந்த யோசனைப்படி செய்தால் நம் மாநில சர்க்காருக்கும் சௌகரியமாக இருக்கும், மத்திய சர்க்காருக்கும் கஷ்டம் ஏற்படாது.



10th December 1959] [Sri N. Mahalingam]

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக 10,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டுவிடும் என்று கவர்னர் அவர்களுடைய உரையில் கண்டிருக்கிறது. இப்போது கிராமங்களில் கிணறுகளில் வைக்கும் பம்பு செட்டுகளுக்குத் தான் மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. கிராமங்களில் புதிதாகத் தொழில் ஆரம்பிக்க வேண்டுமானால் 3-பேஸ் மின்சார ஸப்ளை வேண்டியிருக்கிறது. அது போதுமான அளவு சில இடங்களில் கிடைப்பதில்லை. பொள்ளாச்சியில் 16 கதிர் சர்க்கா 1 h. p. மோட்டாருடன் வைத்து இயக்கப்பட வேண்டியிருக்கிறது. அத்தகைய மோட்டார்கள் அனேக கிராமங்களில் போதுமான மின்சார ஸப்ளை இல்லாததால் எரிந்துபோயின. கிராமங்களில் கைத்தொழில்கள் பெருக வேண்டுமானால், 3-பேஸ் மின்சார சப்ளையை சரியானபடி, வோல்டேஜ் குறையாமல் கிடைக்கச் செய்யவேண்டியது அவசியம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மேலும், கவர்னர் அவர்கள் தமது உரையில் தேச மக்கள் எல்லோரும் கவலைப்படக்கூடிய ஒரு மிக முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது, அவர் நமது நாட்டில் எல்லையில் ஏற்பட்டுள்ள அபாயத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நம் இந்தியா தேசத்தின் ஒரு எல்லையில் பக்கத்திலுள்ள ஒரு தேசம் தன் படைகளைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு நம்முடைய அப்பிரதேசத்தை தன்னுடையது என்று அது சொல்லிக்கொண்டிருக்கிறது. ஆகவே, நம் தேசத்திற்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிறார். இந்நிலையில் தேசப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நமது சர்க்காருக்குச் சிறந்த ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டியது, நம் தேச சுதந்திரத்தில் பற்றுள்ளவர்களின் கடமையும் தேச பக்தியுள்ளவர்கள் எல்லோருடைய கடமையும் ஆகும். இவ்விஷயத்தில் நமது சர்க்காருக்கு நம்முடைய சிறந்த ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டியது நம் கடமை. இந்நிலையில், இந்நாட்டில் எந்த ஒரு சிலர் 1942-ம் ஆண்டில் தேசத்துரோகமான காரியங்களைச் செய்தார்களோ அதே ஒரு சிலர் இன்றும் தேசத்துரோகமான காரியங்களைச் செய்யத் தயாராக இருப்பதை நாம் பார்க்கிறோம். அவர்கள், நம் நாட்டின் எல்லையை நம் எல்லை என்று சொல்லக்கூடத் தயாராக இல்லை. இதை நாம் பார்லிமெண்ட் விவகாரங்களிலும் அவர்களுடைய கட்சிகளின் விவகாரங்களிலும் காண்கிறோம். சர்க்கார் இந்த ஐந்தாம் படை ஆட்களை கவனித்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன். நம் நாட்டில் சுதந்திரமாக இயங்குவதற்கு இந்தக் கட்சியாருக்கு இடம் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும், அவர்கள் சமயத்தில் 'க்விஸ்லிங்குகளாக' மாறிவிடாதபடி சர்க்கார் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

Sri M. KALYANASUNDARAM: On a point of order, Sir. The hon. Member is using all sorts of words like quislings, traitors, etc. Are these words parliamentary?

[10th December 1959

THE HON. SRI C. SUBRAMANIAM : If the hon. Member has followed the speech of the hon. Member Sri Mahalingam, he would have found that he (Mr. Mahalingam) was only saying that proper safeguards should be taken to see that such things did not happen and that they were not allowed to turn into quislings. I do not think he was referring to any party.

MR. SPEAKER : I am closely following his speech. He has not mentioned any individual names. The moment he mentions any individual name, I will rule him out of order.

SRI N. MAHALINGAM : தேசத் துரோகிகளும் 'க்விஸ்லிங்குகளும்' நம் தேசத்திற்கு விரோதமான காரியங்கள் செய்யாதபடி பார்த்துக்கொள்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் முன் எச்சரிக்கையாக மேற்கொள்ள வேண்டும். அவசியமானால் நம் போலீஸ் இலாகாவை அதற்கு வேண்டிய அளவிற்கு பலப்படுத்த வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். தேசத்தின்பால் எல்லோருக்கும் பெரிய பொறுப்பு இருக்கிறது. பல ஆண்டுகளாக சிரமப்பட்டு தியாகங்கள் செய்து பெற்றுள்ள சுதந்திரத்தை நாம் இழக்க முடியாது. ஒரு சிலர் அதை இழக்கத் தயாராக இருந்தாலும் அதை நாம் அனுமதிக்க முடியாது. —

(Sri T. S. Ramaswamy in the Chair.)

மேலும், நம் மாநிலத்தில் சட்டமும் ஒழுங்கும் அமைதியும் சரியானபடி பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக கனம் போலீஸ் இலாகா அமைச்சரையும் போலீஸ் இலாகாவினரையும் நான் பாராட்ட விரும்புகிறேன். போலீஸார் சில ஆயிரக்கானவர்கள். அவர்கள் கோடிக்கணக்கான மக்களிடையே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியிருக்கிறது. பல குற்றவாளிகளை விசாரணை செய்யும்போது, அவர்களைப் பிடிப்பதில் தகுந்த நடவடிக்கை எடுத்து ஆபத்தான இடங்களில் போய் அங்கிருந்து அவர்களைப் பிடித்துகொண்டுவந்து விசாரணை செய்ய வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் அவர்கள் "ஓவர் ஜெலெஸ்" என்று சொல்லக்கூடிய முறையில் தங்கள் கடமைகளைச் செய்யும்போது ஏதாவது தவறுகள் ஏற்பட்டால், போலீஸ் இலாகாவில் உள்ளவர்களை ஏதோ கடும் குற்றம் செய்தவர்களைப் போல கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்தி விசாரணை செய்வது நியாயமல்ல. அவ்வாறு செய்தால், போலீஸ் இலாகாவில் உள்ளவர்களுக்கு அவர்கள் மனம் குன்றி வேலையைச் சரியானபடி செய்ய முடியாமல் போகும் என்று குறிப்பிட விரும்புகிறேன். அம்மாதிரி தவறுகள் போலீஸ் இலாகாவில் ஏற்பட்டால், கிரிமினல் குற்றவாளிகளைப் போல அவர்களைக் கோர்ட்டில் விசாரிப்பது நியாயமல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன். அவர்களை போலீஸ் இலாகாவிலேயே விசாரிக்க வேண்டும்.

அடுத்தபடியாக போலீஸ் இலாகாவில் விசாரணை சம்பந்தப்பட்ட மட்டில்—குற்றவாளிகளை விசாரிப்பதில்—தற்கால விஞ்ஞான முறையில் உள்ள ஏற்பாடுகளைப் புகுத்தவேண்டும்.



10th December 1959] [Sri N. Mahalingam]

அமெரிக்காவில் குற்றவாளிகளை விசாரிப்பதில், விசாரணைக்கு முன்பாக ஸோடியம் பெண்டலால் ஊசி போடுகிறார்கள். இந்த ஊசி போட்டால் குற்றவாளிகள் உண்மைதான் பேச முடியும். பொய் பேசுவதற்கு மூளைக்கு இடம் கொடுக்காமல் இருக்கிறது. இதைப்போல அமெரிக்கா போன்ற தேசங்களில் குற்றவாளிகளை உண்மை பேச வைப்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அதைப்போன்று நம் போலீஸ் இலாகாவில் உள்ளவர்களுக்கும் பயிற்சி கொடுத்தால் அநாவசியமாக குற்றவாளிகளை உண்மையைக் கண்டு பிடிப்பதற்காக வேண்டி அடிக்கப் பிரமேயம் ஏற்படாது. தற்கால முறைகளில் அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மறுபடியும், நம்முடைய கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் பல விஷயங்களைக் குறிப்பிடவில்லை என்பதைப்பற்றி சில கனம் அங்கத்தினர்கள் குறை கூறினார்கள். கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் உச்ச வரம்பு குறித்து உடனடியாக ஒன்றும் சொல்லவில்லை, உச்சவரம்பு சட்டம் வருவதற்குள், வரம்பு வைக்க வேண்டிய அவசியம் இல்லாமலேயே போய்விடுமோ என்று குறிப்பிட்டார்கள். உச்ச வரம்புச் சட்டம் வருவது பூமி ஓரளவுக்கு இருந்தால்தான் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும், அதிகமாக இருந்தால் நல்ல முறையில் விவசாயிகள் உற்பத்தி செய்ய முடியாது என்பதுதான் முக்கிய காரணம். ஆகையால் விவசாயியாக பூமியை விற்றுவிட்டாலோ அல்லது பூமி இல்லாதவருக்குக் கொடுத்துவிட்டாலோ அதனால் சர்க்காருக்கு நஷ்டம் கிடையாது. அவ்வாறு செய்வதை ஏதோ ஏமாற்றிவிடுகிறார்கள் என்று குறிப்பிடுவது நியாயமற்றது என்று குறிப்பிட விரும்புகிறேன். நாம் இந்த வரம்பு கட்டும்போது, அந்த வரம்பிற்கு அதிகமாக உள்ள பூமியை சர்க்கார் சும்மா எடுத்துக்கொள்ள முடியாது. அரசியல் சட்டப்படி நியாயமான நஷ்ட ஈடு கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா போன்ற பெரிய பாங்குகளையும், இன்ஷூரன்ஸ் கம்பெனிகளையும் சர்க்கார் தேசியமயமாக ஆக்கியபோது அதற்கு ஷேர் மார்க்கெட்டில் அன்றைய தேதியில் என்ன விலை இருந்ததோ அதைக் கொடுத்தார்கள். அதைக் கொடுத்துத்தான் தேசியமயமாக்கினார்கள். அதைப் போல் மாகாண சர்க்கார் அதிகப்படியாக உள்ள நிலங்களை அக்விஸிஷன் செய்யும்போது எந்த முறையில் எடுத்துக்கொள்ளுகிறார்களோ அந்த முறையில் எடுத்துக்கொள்ளும்படியான முறையை வகுக்கலாம். அப்போதும் நஷ்ட ஈடு கொடுத்தே ஆகவேண்டும். அவர்களே விற்றுக் கொண்டால், நஷ்ட ஈடு ஏதுமில்லாமல் சர்க்காருக்கு வேலை இல்லாமல் போகிறது. நம் எண்ணம், உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்ற எண்ணம் நடந்துவிடுகிறது. அதைத்தான் கனம் அங்கத்தினர் சர்தார் வேதரத்னம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகையால் நாம் எண்ணிய எண்ணங்கள் சட்டம் மூலமாக இல்லாமல் தானாக நடக்கும் என்று குறிப்பிட்டார்களே தவிர அதில் ஒன்றும் யாரும் ஏமாற்றம் அடைய வேண்டியதில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

[Sri N. Mahalingam] [10th December 1959

மறுபடியும் கவர்னர் அவர்களுடைய உரையிலே பஸ் தொழிலை தேசியமயமாக்குவதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டார்கள். பல காலத்திற்கு முன்னாலேயே இது சர்க்கார் கொள்கையாக இருக்கிறது. எப்போது அதைச் செய்யப் போகிறார்கள் என்பது குறித்து மந்திரி சபை முடிவு செய்ய வேண்டுமே தவிர அதைப்பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் புதியதாகச் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. அதன் காரணமாகவும் கனம் அங்கத்தினர்கள் யாரும் ஏமாற்றம் அடையவேண்டியதில்லை.

இப்படி நம் மாகாணத்தில் உள்ள பல பிரச்னைகளைப் பற்றி நமது கவர்னர் அவர்கள் முன்வந்து எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri V. K. KOTHANDARAMAN :** ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார், பார்லிமெண்டிலே சீன-இந்திய எல்லை சம்பந்தமாக விவாதம் நடந்த நேரத்தில் அங்கே பேசிய பாதுகாப்பு மந்திரி கிருஷ்ண மேனன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு என்றால் என்ன என்று அமெரிக்காவிற்கே கூட அர்த்தம் புரியாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். திட்டவட்டமாக சீனா படையெடுத்திருக்கிறது என்று சொல்ல முடியாது என்று பிரதமர் நேருஜியே கூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த மத்திய சர்க்கார் மந்திரிகளே சொல்லும்போதுகூட இம்மாதிரி யுத்த பீதியை மேலும் மேலும் உண்டாக்கக்கூடிய முறையில் பேசுவது இதுதான் காட்டிக்கொடுக்கும் நிலைமையாகும், ஐந்தாம் படை நிலைமையாகும் அல்லவா என்று அமைச்சர் அவர்களிடம்கூட விளக்கம் கேட்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM .** இதில் ஆக்கிரமிப்பு இருக்கிறதா இல்லையா என்பது இப்போது விவாதம் இல்லை. நம் நாட்டிற்குள் இன்னொரு அந்நியர் இருக்கிறார்கள் என்பதுபற்றி கனம் கோதண்டராமன் அவர்களாவது அவர்களுடைய கட்சியாவது மறுக்க முடியாது. அதை நீக்க வேண்டுமென்பது சர்க்காருடைய கொள்கை. அதை நீக்கும்போது அதன் காரணமாக ஏதாவது ஏற்படுமானால் அப்போது துரோகிகளுக்கு இடம் கொடுக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதுதான் எல்லோருடைய கருத்தும். அதிலே "துரோகி" என்று சொன்னால் உடனே எங்களுக்குத்தான் அந்தக்குல்லா பொருந்தும் என்று குதிக்க வேண்டியதில்லை. நம் தேசத்தைப் பொருத்த மட்டில், நம் சபையைப் பொருத்த மட்டில், நம் தமிழ் நாட்டைப் பொருத்த மட்டில் எல்லோரும் உறுதியாக தேசிய சர்க்கார் பக்கம் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இது பொதுவாகக் கூறப்பட்ட கருத்தே யொழிய யாரும் இதைக் கொண்டு மனதைக் கஷ்டப் படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.



10th December 1959]

**Sri M. KALYANASUNDARAM :** இப்படி தேசத்திற்கு ஏற்பட்ட கஷ்டத்தை அரசியல் லாபத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நானும் இதைத்தான் திரும்ப திரும்ப கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சொல்லி வருகிறேன். உணவுப்பிரச்சனையானாலும், நாட்டுப் பாதுகாப்பு விஷயமானாலும், அல்லது பஞ்ச நிலைமையானாலும், அதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களுடைய கொள்கையைப் பரப்பிக்கொள்ள பயன்படுத்திக் கொள்ள வேண்டாமென்று திரும்பத் திரும்ப கம்யூனிஸ்ட் கட்சிக் காரர்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

TEMPORARY CHAIRMAN (Sri T. S. RAMASWAMY) : **Order**, Order.

**Sri V. K. KOTHANDARAMAN :** On a point of order, அமைச்சர் அவர்கள் கூறும்போது கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் ஏதோ குல்லாப் போட்டுகொண்ட மாதிரி கம்யூனிஸ்ட்களுக்கு குல்லா பொருந்துமென்று குதிக்க வேண்டியதில்லை என்று பெரு முதலாளிகளால் நடத்தப்படும் பத்திரிகைகள்தான் மக்கள் மனதை குழப்பும் முறையில் தவறான பிரசாரம் செய்கிறது. ஆகையால் அவைகளையும் பெரு முதலாளிகளையும் கண்காணிக்க வேண்டுமென்றால், அவர்கள்தான் துரோகிகள் என்றால், அந்தக் குல்லா எனக்குத்தான் பொருந்தும் என்று நிதி அமைச்சர் ஏன் குதிக்கிறார் என்று தெரியவில்லை. இதை விளக்குவாரா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : This is not a point of order.

**TEMPORARY CHAIRMAN (Sri T. S. RAMASWAMY) : Order, Order. This is not a point of order.**

* **Sri S. SAMIKKANNU PADAYACHI :** கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய உரையின் மீது சென்ற நான்கு தினங்களாக பல அங்கத்தினர்கள் கலந்து கொண்டு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. கவர்னர் அவர்களுடைய உரையில் முக்கியமாக பருவ மழை திருப்திகரமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது மிகவும் முக்கியமான விஷயம். அது வாஸ்தவம் என்று ஏற்படுகிறது. சென்ற நான்கு ஆண்டுகளாக சில ஜில்லாக்களில் புஞ்சை மகசூல் செய்யும் இடங்களில் பருவ மழை இல்லாமல் வரி வஜா கூடச் செய்து வந்திருக்கிறார்கள். அப்படி ஏற்படாமல் இந்த வருஷம் ஏற்பட்டுள்ள பருவ மழையால் வரி வஜா செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது என்றே நான் எண்ணுகிறேன். அதோடு சமீபத்தில் பெய்த மழையினால் சில ஜில்லாக்களில், முக்கியமாக தென் ஆற்காடு ஜில்லாவில், அதிலும் குறிப்பாக சிதம்பரம், விருத்தாசலம் என்ற இரண்டு தாலுக்காக்களில் கொஞ்சம் அதிகமாக மழை பெய்து வாய்க்கால்கள், குளங்கள், குட்டைகள் எல்லாம் உடைப்பு எடுத்துக்கொண்டும், சில குடியிருப்பு இடங்களும் கட்டிடங்களும் வெள்ளத்தால் சேதப்பட்டன. சேதப்பட்ட இடங்களில் ஏற்கெனவே

[Sri S. Samikkannu Padayachi] [10th December 1959

30 ரூபாய் வீதம் குடிசைகளுக்குக் கொடுத்து வந்தார்கள். 30 ரூபாய் கொடுத்தால் இப்போது அவைகளைத் திரும்பக் கட்டிக் கொள்ள முடியாது. ஆகையால் கொஞ்சம் அதிகப்படியாக 50 ரூபாய் வீதமாவது கொடுக்கவேண்டும் என்று அரசாங்கத்திற்கு ஞாபகமூட்டுகிறேன்.

உணவுப் பொருளின் விலை ஏறிக்கொண்டே போவதைப்பற்றிக் கவர்னர் பெருமான் அவர்கள் மிக வருத்தத்துடன் சொல்லியிருக்கிறார்கள். உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்பதற்காக கடந்த 10 ஆண்டுகளாக அநேக விதமான பெரிய நீர்த் தேக்கங்களையும், அணைக்கட்டுகளையும் அரசாங்கம் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். மற்றும் ரசாயன உரம் கொடுப்பது போன்ற சௌகரியங்களையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். லட்சக்கணக்கான டன் உணவு உற்பத்தியாகி இருந்தும் உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. விலைவாசி ஏறுமுகமாக இருப்பதற்குக் காரணம் அடுத்த கேரளாவுக்கு உணவுப் பொருள்கள் போவது தான் காரணம் என்று சொல்ல முடியாது. அதோடு, கிராமங்களிலே உள்ளவர்கள் எவருமே விலை கொடுத்து உணவுப் பொருளை வாங்கக்கூடிய நிலைமையில் இருக்க மாட்டார்கள். நகரப் புறங்களில் இருக்கக்கூடியவர்கள் மட்டுந்தான் விலை கொடுத்து உணவுத் தான்யங்களை வாங்கியாகவேண்டும். அவர்களுக்கு நியாய விலைக் கடைகள் தேவைதான். ஆனால் கிராமப் புறங்களில் நியாய விலைக் கடைகள் அவ்வளவு அவசியமில்லை. நகரப் புற மக்களுக்காக மட்டும் நியாய விலைக் கடைகளை வைத்துக் கொடுத்தால் போதும் என்று நினைக்கிறேன். இப்போது விவசாயிகளுக்கு உற்பத்திச் சிலவு முன்பைவிட எவ்வளவோ அதிகமாகி இருக்கிறது. ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய 300 ரூபாய், 400 ரூபாய் ஆகிறது. விலைக்கு வாங்கிச் சாப்பிடக்கூடியவர்கள் நகரப் புறங்களில் கொஞ்சந்தான் இருப்பார்கள். கிராமங்களில் பொதுவாக யாரும் விலை கொடுத்து உணவுப்பொருள் வாங்கமாட்டார்கள்.

மானாவாரிப் பிரதேசங்களில் விவசாயம் செய்ய மின்சாரம் அதிகம் தேவைப்படுகிறது. விவசாய மக்களுக்கு மின்சார வசதி செய்து கொடுத்தால் அவர்கள் உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்து கொடுக்க ஏதுவாக இருக்கும். நிலச் சீர்திருத்தம் கொண்டு வருவதாக 4 வருஷ காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அநேக பெரிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் கூடுமான வரையில் தங்களுடைய நிலங்களை எந்தெந்த வகையில் பங்கிடவேண்டுமோ அந்த வகையில் பங்கிடு செய்து கொண்டார்கள் என்பது அரசாங்கத்திற்கே தெரியும். எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் "நிலச் சீர்திருத்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவில்லையே. நிலங்களையெல்லாம் சொந்தக்காரர்களுக்குள்ளேயே பிரித்துக்கொண்டார்களே" என்று கூறுகிறார்கள். அதுவும் நியாயந்தான். ஆனால் நிலச் சொந்தக்காரர்கள் கூடுமான வரை அவர்களே நல்ல முறையில் பங்கிடு செய்துவிட்டார்கள். அரசாங்கமும் அதைத்தான் செய்யப்போகிறது. அரசாங்கத்திற்கு வேலை இல்லாமல் நிலச் சொந்தக்காரர்களே அந்த வேலையைச் செய்து விட்டார்கள் என்று எண்ணுகிறேன். ஆனாலும்,



10th December 1959] [Sri S. Samikkannu Padayachi]

அந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எவ்வளவு சீக்கிரம் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சில இடங்களில் கூடுமான வரையில் பெரிய நீர்த்தேக்கங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருப்பது மக்களுக்கும் தெரியும்; அங்கத்தினர்களுக்கும் தெரியும். கிருஷ்ணா-பெண்ணாறு திட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்படுவதாக இருந்தது. ஆந்திர சர்க்கார் அப்போது மறுத்ததால் நின்றுவிட்டது. ஆனால் இப்போது ஆந்திர அரசாங்கம் அந்தத் திட்டத்திற்கு ஒத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நம்முடைய அரசாங்கம் ஆந்திர சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தி அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு ஜில்லாக்களில் உணவு உற்பத்தி பெருக வழி ஏற்படும். பற்றாக்குறை நீங்கும். நம்முடைய நாடு நல்ல செழிப்புறும். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காவேரி, கொள்ளிடத்தில் சுமார் இரண்டு மாத காலமாக அதிக வெள்ளம் வந்து கடலிலேபோய் எல்லாம் சேர்ந்துவிட்டது. அந்த மாதிரி வெள்ள சமயங்களில் வரும் அதிகத் தண்ணீரை வெள்ளாறு, பெண்ணையாறு மூலமாக திருப்பி விட்டால் அங்குள்ள விவசாயிகளுக்கு ஓரளவு வசதி ஏற்படும். அதையும் இந்த அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது வெள்ளத்தினால் தென்னாற்காடு, விருத்தாசலம், சிதம்பரம் ஆகிய பகுதிகளில் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. வாய்க்கால்கள், ஏரிகளில் எல்லாம் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் கூடுமான வரையில் சீக்கிரத்தில் பழுது பார்த்துக் கொடுக்கவேண்டும். அங்கு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI S. SOWDI SUNDARA BHARATHI : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரையின் மீது நானும் ஓரிரு வார்த்தைகள் சொல்வது கடமை என்று நினைத்துப் பேச முன்வந்திருக்கிறேன். 11-30 a.m.

விலைவாசி ஏற்றத்தின் காரணமாக "காஸ்ட் ஆப் லிவிங்" அதிகமாகியிருப்பதால், மிகவும் குறிப்பிட்ட ஒரு வருவாய் பெறக்கூடிய மக்கள், என்.ஜி.ஓ. போன்றவர்கள் தங்களுடைய வாழ்க்கை நிலைமை கஷ்டமாக இருக்கிறது என்று கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையிலே நாம் தற்போது இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை முடித்துவிட்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்ளும் நிலையில் இருக்கிறோம். அரசாங்கத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே முக்கியமாக உதவக்கூடியவர்கள் என்.ஜி.ஓ.க்கள் தான். ஏனென்றால் அவர்கள் நாட்டு மக்களுடன் அதிக தொடர்பு கொண்டிருப்பதோடு அரசாங்கத்தோடும் அதிக தொடர்பு

[Sri S. Sowdi Sundara Bharathi] [10th December 1959

கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் நல்ல நிலையில் இருந்தால் நிச்சயமாக அரசாங்கம் வகுக்கக்கூடிய திட்டங்களை நன்றாக அமுல் செய்ய முடியும்.

இப்பொழுது என்.ஜி.ஓ.க்களுக்கு இருக்கும் குறைகளை உடனடியாக அரசாங்கம் கவனிக்க வேண்டுவது அவசியம். நம் மாகாணத்தில் இருக்கும் என்.ஜி.ஓ.க்கள் மிகவும் திறம்பட வேலை செய்கிறார்கள் என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திறம்பட வேலை செய்யக்கூடிய என்.ஜி.ஓக்களை வைத்துக்கொண்டிருக்கும்போது, அவர்களுடைய குறைகளை நாம் உடனடியாகக் கவனிப்பது மிகவும் அவசியமாகும். அவர்களுக்கு இருக்கும் குறைகள் பிரமாதமானவை அல்ல. மிகவும் சாதாரணமான சில குறைகள்தான் அவர்களுக்கு இருக்கின்றன. உணவுப் பொருள்கள் விலை எல்லாம் அதிகமாக இருக்கும்போது, அவர்களுக்கும் அதுசம்பந்தமாக குறை இருக்கத்தான் செய்கிறது. அந்த அவர்களுடைய குறைகளைப் போக்க அரசாங்கம் முன்வர வேண்டும். ரயில்வே உத்தியோகஸ்தர்கள், போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இவர்களுக்கெல்லாம் கூட்டுறவு சொசைட்டி மூலமாக உணவுப் பண்டங்களை வாங்கி, கண்ட்ரோல் விலையில் அரிசி, மிளகு இம்மாதிரி பதார்த்தங்களை வழங்குகிறார்கள். அதுபோல் கூட்டுறவு சொசைட்டி மூலமாக இத்தகைய பதார்த்தங்களை என்.ஜி.ஓக்களுக்கும் இந்த அரசாங்கம் கொடுக்க வகை செய்தால், அவர்கள் வாழ்க்கையை சரிவர நடத்துவதற்கு முடியும், அதை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்.ஜி.ஓ.க்களுக்கு இருக்கக்கூடிய மற்றொரு முக்கியமான க்ரீவன்ஸ், உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய குறைபாடு இருக்கிறது. அதாவது, நகரங்களில் இருக்கும் என்.ஜி.ஓக்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுவது போல் தாலூகாவில் மூன்று ரூபாய் கொடுக்கப்படுகிறது. இந்த அலவன்ஸ் அவர்களுக்கு மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது. என்.ஜி.ஓ.க்கள், பார்பர், வண்ணார்களுக்குக் கொடுக்கக்கூட இந்த அலவன்ஸ் போதுமானதாக இல்லை. இந்த அலவன்ஸை வீட்டு வாடகை அலவன்ஸ் என்று சொல்வதைவிட பார்பர்ஸ் அலவன்ஸ், டோபி அலவன்ஸ் என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதற்கு அரசாங்கம் மிகவும் சிரமப்பட்டு அவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டிய அவசியம் இல்லை. புறம்போக்கு நிலங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக ஆங்காங்கு அபரிமிதமாக இருக்கின்றன. போலீசாருக்கு ஹவுசிங் காலனி கட்டிக்கொடுத்திருப்பதுபோல், அவர்களுக்கு க்வார்ட்டர்ஸ் ஏற்பாடு செய்திருப்பதுபோல, என்.ஜி.ஓ.க்களுக்கும் பல வீடுகளைக் கட்டிக்கொடுத்து, குறைந்த அளவு வாடகை வசூலிக்கலாம். ஐந்து ரூபாய், மூன்று ரூபாய் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கிறார்களே, அந்த வாடகையை அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம். இது அரசாங்கத்திற்குப் பெரிய கஷ்டமான வேலை அல்ல. தாங்க முடியாத பளுவும் இல்லை.

அடுத்தபடியாக, என்.ஜி.ஓக்களுக்கு இருக்கும் முக்கியமான பெரிய குறை அவர்கள் ஊழிய காலத்தில், சர்வீஸில் இருக்கும் போது திடீரென்று இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்ப நிலை



10th December 1959] [Sri S. Sowdi Sundara Bharathi]

கவனிக்கப்படுவதேயில்லை. ஒருவிதமான உத்தரவாதமும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் நிலை மோசமாகிவிடுகிறது. தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்களாக இருந்தால், அவர்களுக்குச் சில ஒத்தாசை செய்ய அந்த ஸ்தாபனங்கள் முன்வருகின்றன. ஆனால், அரசாங்கத்தில் வேலை செய்பவர்கள் திடீரென்று இறந்துவிட்டால், அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்ய அரசாங்கம் முன்வருவது இல்லை. மத்திய அரசாங்க ஊழியர்கள் யாராவது திடீரென்று இறந்துபோனால், அவர்களுடைய குடும்பத்திற்கு ஐந்து வருஷம் வரையில் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. அந்த அளவு நம்முடைய அரசாங்கம் கொடுக்காவிட்டாலும், அவர்களுக்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட தொகையையாவது கலெக்டர் மூலமாக அல்லது அந்த ஊழியர் வேலை பார்த்த ஸ்தாபனத்தின் முக்கிய தலைமை அதிகாரி மூலமாக கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்படிச் செய்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். அதையும் செய்ய இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியைப்பற்றி யான் ஒருசில வார்த்தைகள் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதி கைத்தறி நெசவாளர்கள் மிக அதிகமாக இருக்கும் தொகுதியாகும். அந்த தொகுதி மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறது. கவர்னர் அவர்களுடைய உரையில், கைத்தறி ஜவுளித் தொழில் ஒரு பெரிய தொழில் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்றாலும் இந்த நிலையிலே கைத்தறித் தொழில் மிகவும் க்ஷீணதிசையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இதற்கு வேண்டிய ஒத்தாசையை சாதாரணமாக இந்த அரசாங்கம் செய்யலாம். அருப்புக்கோட்டைப் பகுதியில் ஒரு வருஷ காலமாக ரிபேட் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் இரண்டு வருஷ காலமாக ரிபேட் கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு அரசாங்க உத்தியோகஸ்தர் தவறுதல் காரணமாக இது நடந்தால், அதை உடனடியாகக் கவனித்து ஆவனசெய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதற்கு அடுத்தபடியாக, அருப்புக்கோட்டை தொகுதியிலே தண்ணீர் கஷ்டம் ஜாஸ்தியாக இருக்கிறது. அருப்புக்கோட்டை முனிசிபாலிட்டியைப் பொருத்த அளவிலே மக்களுக்குத் தண்ணீர் வசதி மிகவும் நன்றாக இப்போதே கிடைக்கக்கூடிய வசதி செய்ய வேண்டுமென்று பல வருஷங்களாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அரசாங்கத்திடம் அதற்காக ஏதாவது ஒரு அளவுத் தொகை உதவி வேண்டுமென்று பல முறை விண்ணப்பங்கள் செய்யப்பட்டு இதுவரை அரசாங்கம் கவனிக்கவில்லை என்ற மாபெரும் குறை இந்த மக்களிடையே நிலவி இருக்கிறது. அதைப் போக்க இந்த அரசாங்கம் உடனடியாக நிச்சயமாக ஒரு பரிகாரம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய அருப்புக்கோட்டைத் தொகுதியைப் பொறுத்த அளவிலே, அது மிகவும் 'பாக்வார்டு ஏரியா' என்று சொல்வார்கள். கல்வியைப் பொறுத்த அளவிலே மூன்று தரமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். பார்வார்டு, பாக்வார்டு, மோஸ்ட் பாக்வார்டு என்று பிரிக்கப்பட்டிருப்பது போல, நம்முடைய மாநிலத்தில் இருக்கும் பல பகுதிகளையும் பார்வார்டு ஏரியாஸ், பாக்வார்டு ஏரியாஸ், மோஸ்ட் பாக்வார்டு ஏரியாஸ் என்று பிரிக்கலாம். அதைப்போல் அருப்புக்கோட்டை தொகுதியை இராமநாதபுரம் ஜில்லாவிலேயே மோஸ்ட் பாக்வார்டு ஏரியா என்று குறிப்பிட வேண்டும். கல்வியைப் பொறுத்த அளவிலே எப்படி மோஸ்ட் பாக்வார்டு க்ளாஸாக இருக்கிறவர்களுக்கு சலுகை அதிகமான அளவிலே அளிக்கிறார்களோ, அதைப் போல, மோஸ்ட் பாக்வார்டு தொகுதியாக இருக்கும் அருப்புக்கோட்டை தொகுதிக்கு முதன் முதலில் வசதிகள் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரம் ஜில்லாவில் மற்ற பகுதிகளைவிட இந்தப் பகுதியை முதன் முதல் அபிவிருத்தி செய்வதற்கு எடுத்துக்கொண்டு, வேண்டிய சலுகைகளைக் கொடுக்கவேண்டுமென்று மிகப் பணிவாக இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் சீக்கிரம் செய்யவேண்டும். அது மிகவும் முக்கியமானது. மற்ற முற்போக்கு ஏரியாக்களுக்கு அதிகமான வசதிகள் செய்வதைவிட, பிற்போக்கு ஏரியாக்களை அவர்கள் சீக்கிரமாக கவனிக்கவேண்டும். அதற்கு ப்ளாக் டெவல்ப்மெண்ட் போன்றதை நமது அரசாங்கம் சீக்கிரமாக இந்தத் தொகுதிக்கு அவர்கள் ஏற்பாடு செய்யலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன் இந்தச் சட்டசபையிலே அங்கத்தினராக இருந்த மதிப்பிற்குரிய திரு. எம்.டி.ஆர். அவர்கள் பல முறை கேட்டுக் கொண்டிருக்கிறார், அருப்புக்கோட்டைக்கு ரயில் வசதி செய்ய வேண்டும் என்பதாக. அதற்காக அவர் எம்.பி. யாக இருந்த காலந்தொட்டு பல முயற்சிகள் எடுத்து வந்திருக்கிறார். திரு. ஓ. வி. அளகேசன் மத்திய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த காலத்தில் அவரிடம் பல முறை இந்த விஷயத்தை சொல்லி, அதற்கு ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அவரும் அப்பொழுது ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார். சமீபத்தில் மத்திய ரயில்வே மந்திரி அருப்புக்கோட்டைக்கு வந்த காலத்தில், அருப்புக் கோட்டைக்கு ரயில் வசதி கொண்டு வருவது மிகவும் சாத்தியம் என்று சொன்னார்கள். அவர் பிரசாரத்திற்காக அதைச் சொல்லியிருந்தாலுங்கூட, கொள்கை அளவிலே அருப்புக் கோட்டைக்கு ரயில் வசதி கொண்டுவருவது சாத்தியம் என்று அவர்கள் மிக வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். எனவே இதை அரசாங்கம் மனதில் கொண்டு, அருப்புக்கோட்டைக்கு மாறு மதுரையிலிருந்து விருதுநகரை இணைக்கும் ஒரு ரயில் பாதையை ஏற்படுத்த முயற்சி எடுக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளுகிறேன்.





உணவுப் பிரச்னையைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லிக்கொண்டு உரையை முடித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது அரசாங்கம் உணவு விலையைப் பொறுத்த அளவிலே சற்று ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு யோசித்துக்கொண்டிருக்கிறது. என்ன காரணத்திற்காக அம்மாதிரி சரியான நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது என்று எனக்குப் புரியவில்லை. உணவு பற்றாக் குறையாக இல்லை. போதிய அளவு உணவு இருக்கிறது. ஆனால், சில இடங்களில் அது பதுங்கிக் கிடக்கிறது. அதை நாட்டு மக்களுக்குக் கொடுக்க வேண்டிய முயற்சியை அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம். நாம் மிகவும் பெருமைப் படக்கூடிய முறையில் ஸி.ஐ.டி. இலாகாவினரை நம்முடைய மாகாணத்தில் வைத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களை வைத்து, ஆங்காங்கே பதுங்கியிருக்கும் உணவு வகைகளைக் கண்டுபிடித்து அவைகளைக் கொண்டுவர முயற்சி செய்தால், ஒரு வாரத்திற்குள்ளாக வேண்டிய உணவைக் கொண்டுவந்து சேர்த்துவிடுவார்கள். அதை வைத்து கண்ட்ரோல் விலையில் நம்முடைய மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வழிவகுத்துக்கொள்ளலாம். என்ன காரணத்திற்காக இந்த வழியைக் கையாள அரசாங்கம் தயங்குகிறது என்பது எனக்கு புரியவில்லை. உண்மையிலேயே இந்த அரசாங்கத்திற்கு மக்கள் மீது அன்பாகவும் பிரியமாகவும் நல்ல் எண்ணமாகவும் நடந்து கொள்ளவேண்டுமென்று கருத்து இருந்தால் இதைச் செய்ய வெண்டுவது அரசாங்கத்தின் கடமை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதோடு எனக்குக் குறிப்பிட்ட காலவரை முடிவடைந்துவிட்டதால் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri K. S. G. HAJA SHERIFF : Sir, I rise to speak in support of the motion moved by my esteemed colleague thanking His Excellency the Governor for his Address given to us. Sir, he is the constitutional head and is really a great man. Because at the very outset he has stated "I beseech you all to extend to the Government your whole-hearted co-operation towards maintaining a progressive administration." This appeal he has made not only to one or the other Party but to one and all Members of this House. I do not know how the Members of a particular party had absented themselves when the Governor delivered his Address. I wonder whether it will be in order for them to participate in the discussion on the Address when they were not here when the Governor delivered his Address. I leave it to the Members to judge whether their behaviour is in order or consistent with the dignity of the constitutional Head.

We are all glad, at any rate that a large majority of the Members are happy that His Excellency has said that the Law and Order situation in the State is satisfactory. Unless, this position is maintained I am afraid the society will not be happy. We are really grateful to the Hon. the Home Minister for the satisfactory position. On this occasion, I would like to mention that another very important matter which the Government should take note is that just like Law and Order is important to the welfare of the

[Sri K. S. G. Haja Sheriff] [10th December 1959

society, traffic in the principal City or in the towns should be fairly satisfactory and that there should be no congestion or trouble with regard to the free movement of any kind of vehicular traffic. This traffic problem is assuming a very important and difficult situation in the metropolitan city and I understand this is the case in the other big towns in the State also. Our roads or our streets were laid out some 50 or 60 years ago not apparently with the thought that this problem would assume such importance today. In Madras City alone I understand there are about 20 thousand power driven vehicles besides others. This is creating such a serious situation putting all concerned into difficulties. Unless the Government take steps to solve it immediately, I am afraid, it will have to be done at a colossal cost at a future date. I would like to commend to this Government the Master Plan submitted recently by the Commissioner of Police to tackle this situation. I understand that the revenue collected by the Government in the City from the vehicles—all included such as cars, lorries, buses, etc.—and from the sale of petrol is to the tune of Rs. 3 crores. I do not know what amount is being spent for the maintenance of these roads and maintaining easy flow of traffic. I am sure not all the amount, not even an appreciable part of it is being spent on the maintenance of these roads. Every year, Mayor after Mayor has been giving a long statement that this will receive their attention. But unfortunately nothing is receiving their attention. I would appeal to the Government with all the earnestness, that I can command, that they must look into this problem immediately. Otherwise, they would have to spend a colossal amount at a distant date.

Another thing I find is this. The Government have not tackled the slum improvement especially in the metropolitan city. It is a source of annoyance, and what shall I say, it is a very bad eye-sore for any person to see in what condition they are. We are in a Welfare State and we profess to work for the welfare of the people. I do not know why these slums should not be removed at all. Unless it is tackled on an emergency basis, I am afraid, we shall all have to put our heads down in shame at a later date when it would be pointed out by everyone that the slums are a living hell. This city is being visited by people coming from almost every corner of the world and the people who come are unavoidably taken to these slums. The anxiety which they express about the condition in these slums is a matter of very great regret. I would, therefore, appeal to the Government, that they must tackle the slum problem on an emergency basis and see that at least a substantial amount is diverted for the eradication of these slums and the improvements of slums. If this is not done, I think any party which goes to these slums to get votes from the people there, will have a difficult time irrespective of the fact whether it is Congress or Communist or the D.M.K. or any other party.

Sir, His Excellency has said that there should be more production and all efforts should be made in this direction. I wonder whether I can give a suggestion to the Government in this regard.



10th December 1959] [Sri K. S. G. Haja Sheriff]

We have still lakhs of acres of land which could be reclaimed and cultivated and thus production could be increased. Why should we not raise a land army and then also made a sumptuous provision for tackling this problem in addition to our trying to improve production in all other possible manner? This is a suggestion I am giving to the Government for their serious consideration.

Thank you, Sir.

• **SRI M. KANDASAMY PADAYACHI:** தலைவர் அவர்களே, நமது கவர்னர் பெருமான் உரையை வரவேற்று சில வார்த்தைகள் பேசலாம் என்று நினைக்கிறேன்.

நமது ராஜ்யத்திலே 2,000 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டிருப்பதாக கவர்னர் அவர்களின் உரையிலிருந்து அறிகிறோம். இருந்தாலும், நமது அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின் பொழுது 2,243 கடைகள் திறக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள். நமது விவசாய மக்களை நல்ல முறையிலே நடத்தியிருந்தால், அதிலும் முக்கியமாக அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்திருந்தால், இந்த உணவு பற்றாக்குறை வந்திருக்காது என்று நான் நினைக்கிறேன். ஆகவே, அவர்களுக்கு தேவையான வசதிகளை உடனடியாகச் செய்துகொடுக்க வேண்டும். வசதிகளில் முக்கியமானது ஜலம். எல்லா நீர் தேக்கங்களும் அநேகமாக கட்டி முடிந்துவிட்டது. இன்னும் ஓரிரண்டு கட்டிக் கொண்டு வருகிறார்கள். நமது நண்பர்கள் சிலர் குறிப்பிட்டதுபோல், வீணாக சமுத்திரத்தில் போய் விழும் ஜலத்தை நல்ல முறையிலே அணைக்கட்டுகளின் மூலம் வேறு பற்றாக் குறையாக இருக்கும் ஆறுகளுக்கு திருப்பிவிட்டு, அதைக் கிளை நதிகளாக மற்ற நீர்தேக்கங்கள் மூலம் பிரித்து ஜல வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நமது சாத்தனூர் நீர்தேக்கத்திலிருந்து அநேகமாக வட பிரிவு ஒன்று பிரித்திருக்கிறார்கள். மைசூர் அணையிலிருந்து கிட்டே காவேரியானது பிரிகிறது.

பெண்ணையாற்றுக்கு வரும் தூரம் 10 அல்லது 12 மைல் இருக்கும். ஆகவே, பெண்ணையாற்றில் வரும் தண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்படும் காலத்தில், அந்த சாத்தனூர் அணைக் கட்டில் நல்ல ஜலம் நிரம்பும். வட ஆற்காடு, தென் ஆற்காடு, முதலிய மாவட்டங்களுக்கு சாதகமாக இருக்கும். அந்த மாதிரி ஜலம் தேங்கினால், தென்னாற்காடு, சங்கராபுரம், உளுந்தூர் பேட்டை வரை அது போகும். இதையே தான் வேண்டும் என்று சாமிகண்ணு படையாச்சி அவர்கள் மிக முக்கிய கவனம் செலுத்தி சொன்னார்கள்.

நமது ஆறு குளங்களிலெல்லாம், மழை இல்லாத காலங்களில் காய்ந்து கிடக்கும். ஆனால், கடந்த நவம்பர் 28-ம் தேதி பருவ மழை திடீரென்று அதிகமாகப் பெய்ததால், வெள்ளக்காடு அதிகமாகி விட்டது. ஏரிகளும், குளங்களும் உடைத்துக் கொண்டு வெள்ளமும் சேதமும் ஏற்பட்டன. நான்கு, ஐந்து வருஷங்களாக ரிப்பேர் செய்யாமல், மண் மேடு இட்டிருந்தன அவைகள்.

கொஞ்சம் தண்ணீர் நிறைந்ததும் உடைப்பு எடுத்துக் கொண்டன. ஆகவே அந்த மாதிரி ஏரி, குளங்களை செப்பனிட்டு, மண் எடுக்க வேண்டும். ஸில்ட் ரிமூவல் செய்தால் உடைப்புகளுக்கு வழி இருக்காது. ஆகவே இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த விஸ்தரிப்புத் திட்டத்திலே, பிளாக்கிலே எதை எடுத்தாலும், ஜனங்கள் கண்டிரிப்யூஷன் வேண்டும் என்கிறார்கள். விவசாய மக்களிடம் பணம் இல்லாதது தெரிந்ததே. ஆதலால், அதைச் சர்க்காரே திட்டமிட்டு லோகல் டெவலப்மெண்ட் வேலை போல், செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு ரோடு என்று எடுத்துக் கொண்டால், அதை முதலில் நீங்கள் செய்யுங்கள், பின்னர், சர்க்காரில் நாங்கள் செய்கிறோம் என்கிறார்கள். அது சரியல்ல. மக்களிடம், பசிப்பிணி இருந்தாலும் கூட, திட்டத்திற்கு எஸ்டிமேட் போட்டு, Local Development வேலை போல், நாலில் ஒரு பங்கு, பணமாகவோ, வேலையாகவோ பெற்றுச் செய்தால்தான் நலமாக இருக்கும். எங்கள் பிர்க்காவிலே, ரோட் வசதியைப் பெருக்க வேண்டும். அப்பொழுதுதான், விளை பொருள்களை வியாபாரத்திற்கு கொண்டு போக வசதி ஏற்படும்.

சிதம்பரம் ஏரியாவிலே, ஆர்டிஷன் கிணறுகள் கிளம்புகின்றன. ஊற்றுக் குழிகளிலிருந்து தண்ணீர் இறைக்கும் திட்டம் என்று நினைக்கிறேன். குழாய் மூலம் சப்-ஆர்டிஷன் கிணறுகள் அமைக்க மானியம் கொடுத்தால், பயிர் உற்பத்தியை பெருக்க தக்க வசதி ஏற்படும். தண்ணீர் இறைப்பதற்கு அதிகக் கஷ்டமாக இருக்கிறது. விலைவாசி ஏற்றத்தாலும், எட்டு மணி வேலைத்திட்டத்தாலும், இறை கூலி ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் ஆகி கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கத்திலே, சப்-ஆர்டிஷன் கிணறுகளுக்கும் உதவி செய்ய வேண்டும். குழாய் போடுவதற்கும், மின்சார வசதி யிருந்தாலும், பம்பு செட்டுகள் கொடுத்து உதவவும் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு மூலமாக முக்கியமாகப் பண உதவி செய்கிறார்கள். கூட்டுறவு மூலமாக, வித்து விதை, ரசாயன உரம், பிண்ணாக்கு இவைகளைக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், இவை சரியான காலத்தில் கொடுப்பதில்லை. தக்க காலத்தில் உதவி புரிய வேண்டும். பருவ மழை சரியாக இருந்தால், ரசாயன உரம், பிண்ணாக்கு இவற்றோடு, பசுந்தாள் உரம் உற்பத்தி செய்வதற்கும் அவர்களுக்கு விதை முதலியன கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெய்வேலி திட்டத்திற்காக, எங்கள் பிராந்தியத்தில், எடைக்கல் காடு, பாண்டூர் காடு, முதலிய பாரஸ்டுகளை அழித்து விட்டார்கள். ஆனால் அங்கு மக்கள் யாரும் வாழவில்லை. மூவாயிரம், நாலாயிரம் ஏக்கருக்கு மேல் இருக்கிறது. காடெல்லாம் அழித்தாகி விட்டது. ஆனால் அது நல்ல முறையிலே பயன் படவில்லை. விறகு வெட்டக் கூட காடில்லாமல் போய் விட்டது. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். காடு, மழைக்கு முக்கியமானது;





காடு வளர்ந்தால் தான் நல்ல மழை வரும், திட்டங்களெல்லாம் நல்ல முறையிலே நிறைவேறும், பற்றுக்குறை அகற்றப் படும். ஆகவே, அந்தக் காடுகளை வளர்க்க திட்டம் இடவேண்டும். . .

(மணியடித்து அடுத்த மெம்பர் அழைக்கப்பட்டார்.)

* **SRI T. IRUSAPPAN**: தலைவர் அவர்களே, இன்றைய தினம், கவர்னர் அவர்கள் ஆற்றிய உரை மீது, என்னுடைய சில வார்த்தைகளை சொல்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். கவர்னர் உரையில், நாட்டில் சட்டமும், ஒழுங்கும், அமைதியும் நல்ல முறையிலே இருந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாட்டிலே, பஞ்சமும், திண்டாட்டமும், ஜாதிக் கொடுமையும் ஆக இப்பேர்ப்பட்ட அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் நாங்கள் பல முறைகள் வெளியிட்டு இருக்கிறோம். எங்களை விவசாயம் தெரியாதவர்கள் என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். நாங்கள் விவசாயத்திலே பிறந்தவர்கள், அதிலே வளர்கிறவர்கள், மக்களிடத்திலே உழைக்கக் கூடியவர்கள். விவசாயத்தில் இருக்கும் நாங்கள், விலை ஏறியிருந்தாலும், அதன் பலனை அனுபவிக்க முடிவதில்லை. அந்த லாபம் அவர்களுக்குக் கொடுக்கப்படுவது கிடையாது. உழைத்து, உழைத்து, ஊதியத்தை யாரோ சாப்பிடுகிறார்கள். அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. பதுக்கல்காரர்கள், பணக்காரர்கள், இவர்களிடத்தில் கடனை வாங்கி, அறுவடைக்கும் முன்பே அது பணயமாகி விடுகிறது. அறுவடையான பிறகு, உழைத்த விவசாயி அப்படியே தானியத்தைக் கொடுத்து விடும் நிலையில் இருக்கிறான். பணம் கொடுத்தவர்கள், பணக்காரர்கள், பெரிய முதலாளிகள் அந்த லாபத்தை அடைகிறார்கள், அனுபவிக்கிறார்கள். விவசாயம் செய்யக்கூடிய ஏழை எளிய விவசாயிகளுக்கு சர்க்கார் கொடுக்கக்கூடிய இனும் கடன் வசதிகள் கிடைப்பது கிடையாது. ஆனால் சட்டம் ஒழுங்கு நாட்டில் 12 noon நன்றாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். முன் பேசியவர்கள் சொன்னதைப் போன்று பெரிய பணக்காரர்களுக்கும் சட்டைக்காரர்களுக்கும் தான் அதிகாரிகள் சலுகைகள் காட்டுகிறார்கள். ஏழை விவசாயிகளுக்குக் காட்டுவதாகவே இல்லை. இது நான் சொல்லக்கூடிய ஒரு குற்றச்சாட்டு. நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள் ஏழை விவசாயிகளை மதிப்பதுகூட கிடையாது. இரக்கம் காட்டுவதே கிடையாது. அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களைக் கண்டால் அவர்களுக்கு எந்த விதமான சலுகைகளும் கொடுக்கப்படுவது இல்லை. அதுவும் என்னுடைய தாலுகாவில் இருக்கக்கூடிய ஒரு உண்மை.

அடுத்தபடியாக பூச்சி மருந்துகள். பயிர்கள் எல்லாம் அழிந்து போகக்கூடிய நிலையில் இருக்கின்றன. ஆனால் சர்க்கார் நல்ல முறையில் வேலை செய்து வருவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற மாதம் 23-ம் தேதி ஜில்லா கலெக்டர் மூலமாக ஒரு ஆலோசனைக் குழு கூட்டத்தில் நான் வலியுறுத்தியதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய மாவட்டமாகிய ஆத்தூரில் ஏனைய விவசாயிகளும் தங்களுடைய பயிர்கள் கதிர்

[Sri T. Irusappan] [10th December 1959

விடக்கூடிய நேரத்தில் பூச்சி விழுந்து பயிர்கள் தரை மட்டமாகக் கூடிய நிலைமை ஏற்பட்டது. முக்கால்வாசி பயிர்களும் அழிந்து போய் விட்டன. அதற்கு வேண்டிய பரிகாரம் கேட்டுக்கொண்டும் தேடித் தரவில்லை. பூச்சி மருந்துகள் கிடைக்காமல் இருந்தது. மருந்துகளை அடிக்கக்கூடிய கருவிகள் கூட இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டார்கள். திருச்சி, சேலம் போன்ற இடங்களுக்குச் சென்று பார்த்தும் அங்கேயும் அந்தக் கருவிகள் கிடைக்கவே இல்லை. இந்த நிலைமையில் அந்தக் கூட்டத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டேன். இது வரைக்கும் பரிகாரம் தேடிக் கொடுத்ததாக தெரியவில்லை.

இந்த நிலைமையில் விவசாயப் பொருள்களுடைய விலை ஏற்றத்தைப் பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார்கள். ஆனால் விவசாயிகள் வாங்கக்கூடிய பொருள்களின் விலை ஏவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயத்திற்கு வேண்டிய கவலைத்தோல், ரசாயனப் பொருள்கள், மண்வெட்டி, கலப்பை விவசாயக் கருவிகளுடைய விலைகள் எல்லாம் அதிகப்படியாக உயர்ந்திருக்கின்றன. அதன் விலைகளையும் ரசாயன உரம், பிண்ணாக்கு போன்றவைகளின் விலையையும் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு விலையை நிர்ணயம் செய்யும்போது அவர்கள் வாங்கக்கூடிய பொருள்களுக்கும் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கூறிக் கொள்ளுகிறேன். இப்படி குறைந்த விலைக்கு கொடுக்காமல் இருப்பது என்பது சர்க்காருடைய கருத்தாக இருக்கிறது என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் உரையில் இந்நாட்டில் இருக்கக்கூடிய, ராஜ்யத்தில் இருக்கக்கூடிய, ஆறில் ஒரு பங்காக இருக்கக்கூடிய ஆதி திராவிட சமுதாயம் இருக்கிறதே அந்த சமுதாயத்தைப்பற்றி ஒரு வரி கூட குறிப்பிடாமல் இருப்பது மிக மிக வருந்தக் கூடியது. அந்த சமுதாயம் இன்றைக்கும் தீண்டப்படாதவர்களாகவும், தொடப்படாதவர்களாகவும், எட்டி நிற்கக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். அந்த சமுதாயத்தை இந்தச் சட்டங்களும் ஒழுங்கும் சரிவர நடத்தவில்லை என்ற குற்றத்தை நான் சாட்டுகிறேன். இது என்னுடைய கருத்து.

என்னுடைய தொகுதியாகிய ஆத்தூர் தொகுதியில் எவ்வளவோ சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்கள் அவைகள் தரிசாகவும் இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய சிறிய நீர்பாசன திட்டங்களை எடுத்து முடித்தாலும் சிறிய சிறிய ஏரிகளுக்கு வரக்கூடிய கால்வாய்களுக்கு அணைகளைக் கட்டினால் பெரும்பாலான நிலங்களை அதிலும் தரிசாக இருக்கிற நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவரலாம். இப்படி அணைகளைக் கட்டிக்கொடுத்து அங்குள்ள ஏழை எளிய விவசாயிகளுக்கும் நிலம் இல்லாதவர்களுக்கும் உதவி செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த சட்டமன்றத்தின் மூலமாக அமைச்சர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



10th December 1959] [Sri T. Irusappan]

அடுத்தபடியாக, கிராமங்களில் கூட்டுறவு நாணய சங்கங்கள் 100-க்கு 90 வீதம் இந்த ஆண்டில் உயர்த்தப் போவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் கிராமப்புரங்களில் இருக்கக்கூடிய கூட்டுறவு நாணய சங்கங்கள் யாருக்கு இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும். இதைப்பற்றி அமைச்சர்கள் ஆராய்ந்து பார்த்தால் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கிராமங்களில் இருக்கக்கூடிய கூட்டுறவு நாணய சங்கங்களும், மார்க்கெட்டிங் சொசைட்டிகளும் ஏழை எளியவர்களுக்குக் கிடையாது. அங்கே இருக்கக்கூடிய பணக்காரர்களுக்கும் பதுக்கல்காரர்களுக்கும்தான் அவைகள் இருக்கின்றன. மற்றவர்களுக்குக் கிடையாது. அங்கே இருக்கக்கூடிய பணக்காரர்கள் பாமர மக்களுடைய பெயர்களைச் சொல்லிக் கொண்டு, நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு பணத்தை வாங்கி கையாடல் செய்து கொண்டிருக்கிறார்கள். தவிட்டு மூட்டையைக் காண்பித்து நெல் மூட்டை என்று சொல்லியும், புளியங்கொட்டை மூட்டையைக் காண்பித்து கடலைக் கொட்டை மூட்டை என்று சொல்லியும் பணத்தை வாங்கிக் கொண்டு போகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் கூட்டுறவு சங்கங்களில் இடம் இருக்கிறது. என்னைப்போன்ற எதிர்க் கட்சிக்காரர்களுக்கு அதில் இடம் கிடையாது. கடன் கிடைப்பது கிடையாது. மற்ற எந்த விதமான வசதியும் கிடையாது. இந்த முறையில்தான் கிராங்களில் கூட்டுறவு இயக்கம் நடந்து வருகிறது. கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் இயங்க வேண்டுமானால் கட்சி பேதம் இல்லாமல் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு பாடுபட வேண்டும். கட்சி பேதத்தில் அது வாழக்கூடாது. கூட்டுறவு பொருத்த வரைக்கும் நான் சொல்லுகிறேன் கட்சி பேதம் இருக்கக்கூடாது, பணக்காரர்கள் ஏழைகள் என்று இருக்கக்கூடாது. எல்லோரையும் ஒன்றாகத்தான் பாவிக்க வேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் ஏழை எளிய விவசாயிகளுக்கும், நிலம் இல்லாதவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட இனத்தவர்களுக்கும் ராமநாய்க்கன் பாளையம், பெரிய ஏரி நத்தக்கரை, அம்மம்பாளையம், நாவலூர், தம்மம்பட்டி, மம்மலை இப்படி பல இடங்களில் நிலங்களைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வாழ்வை அளிக்க அவர்கள் நல்ல வாழ்வு வாழ்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்தச் சட்ட மன்றம் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். கூட்டுப் பண்ணை முறையில் விவசாயத்தை ஏற்படுத்தினால் அதனால் ஏழை எளிய விவசாயிகள் நல்ல வாழ்க்கை நடத்தி அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் உயரும். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நில உச்ச வரம்பு வரப்போகிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி நான் போன தடவையே குறிப்பிட்டிருக்கிறேன். இனிமேல் அது வந்தாலும் ஏழை எளிய விவசாயிகள் அதனால் நல்ல

[Sri T. Irusappan] [10th December 1959

பயனடையக்கூடிய அளவில் செய்யவேண்டும். இதையே பல முறை பல அங்கத்தினர்களும் ஆளும் கட்சியிலுள்ளவர்களும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அப்படிச் சொல்லிக்கொண்டு வருவதால் நிலம் படைத்தவர்கள் அவரவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதனால் பின்னால் நிலம் இல்லாமல் போய் விடும். அந்த நிலை வருவதற்குள் இந்த சட்டத்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு ஏழை எளிய விவசாயிகளுக்கும், நிலம் இல்லாதவர்களுக்கும் நிலத்தைப் பிரித்துக் கொடுக்கவும் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் உடனடியாக அந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**Sri K. N. PALANISWAMI GOUNDER:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் கவர்னர் அவர்கள் உரையின் மீது பேசும்போது சென்ற வருஷம் சொன்னதைப் போலவே இந்த வருஷமும் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார். இன்றைய தினம் கவர்னர் அவர்கள் உரையில் முக்கியமாக இருப்பது நிலச் சீர்திருத்தம். அதைப்பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்நாட்டில் நிலச் சீர்திருத்தம் என்று சொன்னவுடனேயே விவசாயிகளிடத்திலும் நிலமுள்ளவர்களிடத்திலேயும் ஒருவித பரபரப்பையும், வியப்பையும், சந்தேகத்தையும் அளித்திருக்கிறது. அப்படி நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருவதாக இருந்தால், அதிலும் நில உச்ச வரம்பு கட்டும் சட்டம் கொண்டு வருவதாக இருந்தால் முன் கூட்டியே எல்லா காரியங்களையும் செய்துவிட்டு தகுந்த சட்டத்தை இயற்றி எவ்வளவு ஏக்கர் உச்ச வரம்பு என்று நிர்ணயம் செய்து, மத்திய அரசாங்கத்தினிடம் ஆதரவு பெற்று அதன் பிறகு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதாக இருந்திருந்தால் நாட்டில் இப்படிப்பட்ட பரபரப்பும் சந்தேகமும் ஏற்பட்டிருக்காது. மந்திரிகள் பேசும் கூட்டங்களிலெல்லாம் பேசும்போதும் பேபர்களிலும் சொல்லி வருவதால், சட்டசபையிலும் அதைப்பற்றி அடிக்கடி சொல்லி வருவதாலும் இப்படிப்பட்ட ஒரு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. பதினைந்து தினங்களுக்கு முன்னதாகவே இப்படிப்பட்ட சட்டம் வரப்போகிறது என்று சொன்னவுடனேயே சுமார் பதினைந்து தினங்களாக எங்கு சென்றாலும் சப் ரிஜிஸ்தரார் ஆபீஸ்களில் அதிகப்படியான பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக ஒரு நாளைக்கு பதினைந்து அல்[illegible]ரெண்டு பத்திரங்களுக்கு மேல் பதிவாகாத இடங்களிலெல்லாம் இன்றைக்கு 150-க்குக் குறையாத பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். மற்ற இடங்களைப்பற்றி எனக்கு தெரியாவிட்டாலும் கோயம்பத்தூரை எடுத்துக்கொண்டால் அங்கே ஒரு நாளைக்கு சுமார் 150 பத்திரங்கள் வரை பதிவு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். மற்ற இடங்களில் என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. கோயம்பத்தூர் சப் ரிஜிஸ்தரார் ஆபீசை எடுத்துக்கொண்டால் பல லட்ச ரூபாய் சப் ரிஜிஸ்தரார் ஆபீசில் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை



10th December 1959] [Sri K. N. Palaniswami Gounder]

சர்க்காருக்கு நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்வதால்தான் மக்களிடத்தில் இப்படிப்பட்ட பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படி இல்லாமல் எல்லாவற்றையும் தயாரித்து வைத்துக் கொண்டு சட்டத்தைக் கொண்டு வந்தால் இப்படிப்பட்ட பரபரப்பு ஏற்பட்டிருக்காது. ஆகவே, இனிமேலாவது இந்த மாதம் கொண்டு வரப்படும் என்று அறிவித்து அந்தப்படி சட்டத்தைக் கொண்டு வந்து சட்டசபையில் நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தம் என்று சொன்னால் நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறவர்கள் விவசாயிகள். மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை வளர்ச்சி பெற்றாலும் அதைச் சர்க்கார் கவனிப்பது இல்லை. தொழில் முதலாளிகள் இருக்கிறார்கள். வியாபாரிகள் இருக்கிறார்கள். இன்னும் இதுபோன்ற பல வகை சமூகத்தினர் எத்தனை வளர்ச்சி பெற்றாலும் அதை யாரும் கவனிப்பது இல்லை. ஆனால் இன்றையதினம் நிலம் உடையவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். நில உச்ச வரம்பு 30 ஏக்கர் என்று சொன்னால் கோயம்பத்தூர் ஜில்லாவில் ஏக்கருக்கு 150 ரூபாய், 200 ரூபாய் கூட வருமானம் வராத நிலங்கள் இருக்கின்றன. வருஷத்திற்கு மூவாயிரம் ரூபாய் வருமானத்தைக் கொண்டு ஒரு குடும்பம் எப்படி ஜீவனம் செய்ய முடியும்?

இன்றையதினம் ஈரோடு, கொடுமுடி பக்கத்தில் என்றால் ஏக்கர் பதினைந்தாயிரம் ரூபாய்க்குப் போகிறது. திருப்பூர் பகுதியில், தாராபுரம் பகுதியில் தண்ணீர் பாய்வதற்கு வசதி உள்ள பூமிகளே ஏக்கர் ஒன்றுக்கு அவ்வளவு ரூபாய்க்குப் போவதில்லை. காடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அப்படி இருக்க ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று அந்த பூமி ஒன்றுக்கு இரண்டு பங்கு என்று வைப்பது எவ்வளவு பொருத்தம் என்று தெரியவில்லை. இன்றைய தினம் கொடுமுடி பக்கத்தில் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் வருஷத்திற்கு வருமானம் வருகிறது. அந்த இடத்தில் 30 ஏக்கர் உச்ச வரம்பு என்றால் கிட்டத்தட்ட அந்த குடும்பத்திற்கு ஒரு லட்ச ரூபாய் வருமானம் வருஷம் கிடைக்கும். ஆனால் எங்கள் ஜில்லாப் பகுதியிலும் அப்படி என்றால் அவ்வளவு வருமானம் கிடைக்குமா என்று பார்க்க வேண்டும். நிச்சயமாகக் கிடைக்காது. ஆகவே இன்றைக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய கணக்கை வைத்துக்கொண்டு ஒன்றுக்கு இரண்டு பங்கு, மூன்று பங்கு என்று நிர்ணயிப்பது சரியானதாக இருக்காது என்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் அப்படிச் சொல்வது வியப்பாகவும் இருக்கிறது. அதுவும் கவர்னர் அவர்கள் சொல்கிறார்கள், இவ்வாண்டு பருவ மழை சரியாக, நன்றாகப் பெய்திருக்கிறது என்று. இன்றையதினம் கோயம்பத்தூர் ஜில்லா திருப்பூர் தாலுக்காவை எடுத்துக்கொண்டால் 15 முறைகூடப் பெய்யவில்லை. அறுவடை ஆகுமா, வெள்ளாமை எடுக்க முடியுமா முடியாதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. இவை எல்லாவற்றையும் சர்க்கார் நன்றாகப் பரிசீலனை செய்து உச்ச வரம்புச் சட்டம் கொண்டு, வரும்போது நியாயமான முறை

யில் நஞ்சை எவ்வளவு, புஞ்சை எவ்வளவு, தோட்டம் என்றால் எவ்வளவு என்பதை எல்லாம் நிர்ணயம் செய்ய வேண்டும். இன்றையதினம் நம்முடைய ராஜ்யத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படச் சந்தர்ப்பம் இருக்கிறது. இன்னும் அவசரமாகச் செய்ய வேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கின்றன. நிலம் சம்பந்தமாக நாம் செய்கிற காரியங்களை எல்லாம் அதிகாரிகளின் யோசனைப்படி மட்டும் நடந்துவிடாமல் நிலச்சுவாந்தார்களையும் கலந்து செய்தால் தான் நன்றாக இருக்கும். குறிப்பாக விவசாய மக்களை பாதிக்காமல் இருக்கும்.

நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது சம்பந்தமாக என் போன்றவர்களின் அபிப்பிராயம் என்னவென்றால் ரெவின்யூ கிஸ்தியின் அடிப்படையில் இதை நிர்ணயம் செய்யலாம். எங்கள் பக்கத்தில் நிலத்தின் தரத்திற்கு ஏற்ப பதினான்கு ரூ, பனிரெண்டு ரூ கூட கிஸ்தி கட்டக்கூடிய பூமி இருக்கிறது. இருநூறு, முந்நூறு ரூபாய் கிஸ்தி கட்டக்கூடிய பூமிகளும் சில பகுதிகளில் இருக்கிறது. உச்ச வரம்பு கட்டும்போது இந்த கிஸ்தியை கணக்கில் எடுத்துக் கொண்டு 300 ரூபாய், 400 ரூபாய்க்கு மேல் கிஸ்தி கட்டக்கூடிய நிலங்களை எடுத்துக்கொள்ளலாம். கிஸ்தி அவ்வளவு ரூபாய் கட்டுகிற வரையில் பூமி வைத்துக்கொள்ளலாம் என்று செய்தால் சரியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிக் கொண்டுவந்து விட்டால் சல்லிசாக இருக்கும். இன்னொன்று நிலத்திற்கு உச்ச வரம்பு என்று கட்டும்போது பெண்களுக்கு என்று சொத்துக்கள் வைத்துக்கொள்ள உரிமை கிடையாது என்று சொன்னார்கள். பெண்களுக்கு நாம் எல்லா வகையிலும் சுதந்திரம் கொடுத்திருக்கும்போது நிலம் மாத்திரம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று ஏன் சொல்லுகிறார்கள் என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. 30 ஏக்கர் உச்ச வரம்பு என்றால் ஒருவன் நான்கைந்து பெண் குழந்தைகள், பிள்ளைகளோடு கூடிய குடும்பத்தை வைத்துக்கொண்டு எப்படி சமாளிக்க முடியும்? அதுவும் நான்கைந்து பிள்ளைகளுக்கு அதைப் பிரித்துக் கொடுப்பது என்றால் அடுத்த தலைமுறையில் அவன் பிள்ளைகள் தெருவில் பிச்சை எடுக்கும்படியாக ஆகிவிடும். இன்றையதினம் தஞ்சாவூர் ஜில்லாவில் மேய்ச்சல் தரை என்பது கிடையாது. ஆனால் கோயம்பத்தூர் ஜில்லாவில் மேய்ச்சல் பூமி என்று இருக்கிறது. அதுவும் பழைய கோட்டைப் பண்ணையில்தான் கால்நடை சரியான முறையில் வளர்க்கப்பட்டு வருகின்றன. கால்நடை வளர்ப்புக்காக மத்திய அரசாங்கமும் சரி, நம் அரசாங்கமும் சரி பல திட்டங்களைப் போட்டு நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அதற்காக அதிகப் பணமும் ஒதுக்கி வைத்துச் செலவிட்டு வருகிறார்கள். இந்த மாதிரி கால்நடைப் பண்ணைக்காக மேய்ச்சல் தரை ஒதுக்குகிறபோது அந்த நிலத்திற்கும் உச்ச வரம்பு என்று 30 ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்றால் ஒருசில ஆட்டு மந்தைகளைக் கூட வளர்க்க முடியாது. கால்நடைப் பண்ணை என்றால் அதற்காக நூற்றுக்கணக்கான ஏக்கரா பூமிகள் ஒதுக்கப்பட வேண்டும்.



நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது ஒரு பெரிய பிரச்னையாக இருப்பது போலவே விவசாய வருமான வரி போடுவதும் ஒரு பிரச்னையாகிவிட்டது. நூறு ரூபாய் கிஸ்தி கட்டுகிறவர்கள் கூட 250 ரூபாய், 300 ரூபாய் என்று இன்று வரி கட்டுகிறார்கள். விவசாயிகளுக்கு வருமான வரி என்று போடும்போது வரி கட்டுவது கூட விவசாயிகளுக்குக் கஷ்டமாக இல்லை, அந்தக் கணக்குகளை சரியாக வைத்திருந்து அதிகாரிகளுக்குக் காட்டுவதற்குள் அவர்கள் படுகிற கஷ்டம் அதிகம். அதுவும் முன்பு அமைச்சர் அவர்கள் பேசும்போது 6 கோடி ரூபாய் ரெவின்யூ கிஸ்தி என்றால் அதில் 1 கோடி ரூபாய் இதனால் வரும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஒவ்வொரு பொருள்களின் விலையும் பத்து ஆண்டுகளுக்கு முன்பாக இருந்ததைவிட 6 பங்கு வளர்ந்திருக்கிறது. சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த கிஸ்தி இருக்கிறது. விவசாய வருமான வரி என்று போடுவதற்குப் பதிலாக, இதனால் அவர்கள் பல தொந்தரவுகளுக்கு உள்ளாகும்படியாகச் செய்வதைவிட இந்த கிஸ்தியில் ஏதாவது வருமானத்தை அதிகப்படுத்தி இதை விட்டுவிடலாம் என்று சொன்னேன்.

அடுத்தபடியாக, நான் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த முறையும் சரி, இதற்கு முன்பாக பல தடவைகளிலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கவர்னர் பெருமான் இந்தச் சபையில் உரையாற்றுகிற நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில்லை. அப்போதெல்லாம் நான் கொஞ்சம் வியப்பு அடைவது உண்டு. ஆனால் பின்னால் நடக்கிற விவாதத்தில் அவர்கள் கலந்து கொள்கிறார்கள். முகூர்த்தத்தில் கலந்து கொள்ளாது விருந்திலும், இன்னிசையிலும் கூட கலந்துகொள்வதில்லை என்று அறிஞர் அண்ணா சொன்னார்கள். உரை நிகழ்ச்சி விழாவில் கலந்து கொள்வதில்லை என்றால் விவாதத்திலும் அவர்கள் கலந்துகொள்ளாமல் இருந்தால் ஒருவகையில் பொருந்தும். எப்போது விவாதத்தில் கலந்துகொள்வது என்கிற முறையைப் பின்பற்றுகிறார்களோ அப்போது இனி அவர் இந்தச் சபையில் உரையாற்றுகிற விழாவிலும் கலந்து கொள்வது நல்லது என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI M. MAYANDI NADAR : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது நான் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை வரவேற்று சில வார்த்தைகள் கூறிக்கொள்கிறேன். அவர்கள் தம்முடைய உரையில் இன்று நமது மாகாணத்தில் நடக்கக்கூடிய ஒவ்வொரு காரியங்களையும் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். மற்ற பேர்கள் பேசியது போல சுருக்கமாக நம்முடைய தேவைகளை எல்லாம் அதில் கூறியிருக்கிறார்கள். நமது மாகாணத்தில் உணவுப் பிரச்சனை மிகவும் சிக்கலானதாக இருந்தாலும் நமது அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் பலனாக இப்போது அந்தப் பிரச்சனை கொஞ்சம் இறங்கியிருக்கிறது. 43 ரூபாய்க்கு விற்ற அரிசியானது இப்போது 38½ ரூபாய்க்குக் குறைந்திருக்கிறது. அரசாங்கம் தக்க சமயத்தில் பல நடவடிக்கைகளை

மேற்கொண்டதன் காரணமாக நமக்கு உணவு தானியம் குறைந்த விலையில் கிடைக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

ஆந்திராவிலிருந்து வரக்கூடிய நெல்கள், 30 ரூபாய் 12 அணாவிலிருந்த நெல் இப்பொழுது 27, 27½ ரூபாய்க்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இன்றுள்ள நிலைமையில் வருகிற சம்பா மகசூல் கூட மற்றவர்கள் நினைக்கக் கூடிய அளவில் நமக்கு 12 அணாவுக்கு தாராளமாக கிடைக்குமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனெனில் இன்று நம் மாகாணத்தில் விவசாயத் துறை நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்களது உரையில் பற்றாக்குறை இருக்கிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஆகவே, உணவுப் பொருள்கள் நல்ல முறையில் மக்களுக்கு கிடைக்கும்படிச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். உரங்களை வேண்டிய அளவிற்கு தருவித்து விவசாயிகளுக்கு அவைகள் போதுமான அளவு கிடைக்கும்படிச் செய்தால் நாம் இன்னும் உற்பத்தியை அதிகமாகப் பெருக்கலாம். அடுத்தபடியாக, மத்திய அரசாங்கத் திட்டப் பிரகாரம் நம் நாட்டிலுள்ள ஹரிஜனங்களுக்கு மேலும் பத்து வருஷத்திற்கு கல்வி வசதி போன்ற மற்ற வசதிகள் அளிக்கப்பட்டிருக்கிறது. அது, ஹரிஜனங்களின் நிலை இன்னும் உயரவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. அதேபோல் நம் நாட்டில் மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் ஹரிஜனங்களைப் போல்தான் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஹரிஜனங்களுக்கு கிடைப்பதைப் போன்ற சலுகைகள் மீனவர்களுக்கும் கிடைக்கும் வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம் நாட்டில், கப்பல்களில் வேலை செய்வதற்கு ஆட்களை பொறுக்கி எடுக்கும்போது, குறிப்பாக ஸீமென் போன்றவைகளுக்கு மீனவர்களை எடுத்தால் அவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஏனெனில் அவர்கள் சமுத்திரத்தில் போய் பழக்கப்பட்டவர்கள். அடுத்தபடியாக, சென்னை நகரைப் பொறுத்தவரையில் மீனவர்கள் கட்டுமரங்களில் இரண்டு, நான்கு மைல்கள் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வருகிறார்கள். ஆனால் பெரிய வலைகளை வைத்துக் கொண்டு இயந்திரப் படகுகளில் சென்று மீன் பிடிக்கிறவர்களினால் இந்த கட்டு மரங்களில் சென்று மீன் பிடிப்பவர்களுக்கு ஓரளவு கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இயந்திரப் படகுகளில் சென்று மீன் பிடிக்கிறவர்கள் நாலைந்து மைல்களுக்கு அப்பால் தான் சென்று மீன் பிடிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்தபடியாக, நகரப்புறங்களை எடுத்துக்கொண்டால் பஸ் கட்டணங்கள் உயர்த்தப்படலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். அப்படிச் செய்தால் நகரப்புறங்களில் இருக்கும் ஏழை மக்கள், தொழிலாளி மக்கள் இவர்கள் மிகவும் கஷ்டப்படும்படியான நிலை ஏற்படும். ஏழு நயாபைசாவிலிருந்து பத்து நயாபைசாவாக உயர்த்தினால் கூட அதே மாதம் ஒன்றுக்கு இரண்டு, மூன்று ரூபாய் கூடுதலாக வந்து விடும். ஆகவே, இதை அரசாங்கம் கவனித்து பஸ் கட்டணங்களை உயர்த்தாதிருக்கும்படி





அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். போன பட்ஜெட்டின் போது நாம் அழுகும் பொருள்களுக்கு வரி போட்டு அதன் காரணமாக நமக்கு சில லட்சம் ரூபாய்கள் வந்தபோதிலும் கூட அதன் காரணமாக மக்கள் அதிருப்தி கொண்டிருப்பதால் அந்த வரியை நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் இரண்டு மாதங்களுக்கு முன்பு பர்மா போயிருந்தேன். அங்கு, இந்தியாவிற்கு வர வேண்டிய மக்கள் கப்பல் வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு சிலர் கல்கத்தா மார்க்கமாக விமானத்திலோ அல்லது கப்பலிலோ வந்து பின் சென்னைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு பர்மாவிலிருந்து இங்கு வர கொடுக்கும் பணமோ குறைவு. ஆகவே, அவர்கள் அங்கிருந்து சென்னைக்கு வருகிற கப்பல்களில் வருவதற்கு வேண்டிய சௌகரியங்களை செய்து கொடுக்கும்படி சென்னை சர்க்கார் சிபார்சு செய்து மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும்படி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். பர்மாவிலிருந்து வரக்கூடியவர்கள் 100 ரூபாய்தான் அதிகமாக பெறுகிறார்கள். அதை வைத்துக்கொண்டு அவர்கள் ஊருக்குக் கூட போக முடிவதில்லை. ஆக, மாதம் ஒரு தடவையாவது ரங்கூனிலிருந்து போய் வர ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் சென்னையிலிருந்து அந்தமான் போகக் கூடிய கப்பல் ரங்கூனுக்கு போய் சுற்றி வரும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சுகாதார வசதியை நாம் பெருக்க வேண்டியிருக்கிறது. நாட்டில் இன்று ஜனத்தொகை பெருகி வருவதோடு கூட க்ஷயரோகம் போன்ற வியாதிகளும் அதிகமாக பரவிக் கொண்டே வருகிறது. ஆகவே, ஜெனரல் ஆஸ்பத்திரி, ஸ்டான்லி ஆஸ்பத்திரி போன்றவைகளில் இத்தகைய க்ஷயரோகம் போன்ற வியாதிகளைத் தீர்ப்பதற்கு தனியிடங்களை தாராளமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் இப்படிப்பட்ட வியாதிகளால் பாதிக்கக் கூடியவர்களை தகுந்த முறையில் சிகிச்சை செய்யமுடியும். அடுத்தபடியாக, வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களை எடுத்துக் கொள்வோம். சாதாரணமாக, மூன்று நான்கு வருடங்களாக அங்கு பதிவு செய்து வைத்திருந்தும் கூட அநேகம் பேர்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கிறது. அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லையா, வரிசைப் படியாக கொடுக்கவில்லையா என்பதைப் பற்றியெல்லாம் அரசாங்கம் கவனித்து எல்லோருக்கும் நல்ல முறையில் வேலை கிடைப்பதற்கான வகையை செய்து கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். கவர்னர் பெருமானது உரையில் நாட்டின் முன்னேற்றத்திற்கு, வேண்டிய விதத்தில் எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைக்குமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, எந்தக் கட்சியாகயிருந்தாலும் உருப்படியான திட்டங்களை அரசாங்கத்திற்கு கொடுத்து மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

***SRI V. SUBBIAH**: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களின் உரை மீது நான்கு தினங்களாக விவாதம்

[Sri V. Subbiah] [10th December 1959

நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தில், இதில் கலந்து கொண்டு பேசுவதினால் ஏதாவது விசேஷ பலன் அளிக்கிறதா என்ற சந்தேகத்தின்பேரிலேயே இன்றுள்ள நிலைமைகளைப் பற்றி கூறுவதற்கு நான் முன் வந்திருக்கிறேன். எங்கள் பகுதிகளில் மழை ஜாஸ்தியாக பெய்திருந்தாலும் சங்கரன்கோவிலிற்கு மேற்குப் பகுதியிலுள்ள ஏரி, குளங்கள் இன்னும் நிரம்பவில்லை. காரணம், மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும் மழை அரபிக் கடலுக்கு சென்று விடுகிறது. அந்தத் தண்ணீர் அப்பகுதிகளுக்கு வராதது காரணமாகயிருக்கலாம். ஆனால் இந்த மாதத்தில் பெய்தாலும் நல்ல பலன் கிடைக்கும். இல்லாவிடில் அரசாங்கம் நிவாரண வேலைகள், வரி வஜா போன்றவைகளைச் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள்.

12-30 p.m. அடுத்தபடியாக, விவசாயிகளுடைய குறைகளைப்பற்றி நினைக்கும்போது குறிப்பாக அரசாங்கம் அவர்களுக்காக செய்யத் தவறிய பல காரியங்கள் இருக்கின்றன. அவைகளில் சிறிய நீர் பாசனத் திட்டங்கள் பலவற்றை செய்யாமல் விடப்பட்டிருப்பதை சொல்ல முடியும். பெரிய அணைக்கட்டுகளை எல்லாம் பல ஆயிரம் கோடி ரூபாய்களை செலவு செய்து கட்டி முடித்திருக்கிறார்கள். ஆனால் அதன் பலன் எல்லாம் அதிகமாக விவசாயிகள் அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கிறது. ஏனென்றால் பல ஓடைகள், பல காட்டாறுகள், இவைகள் எல்லாம் வியர்த்தமாகிகொண்டிருக்கின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. இதனால் சமீபத்தில் மழை பெய்தபோது கூட பல குளங்களும், ஏரிகளும் நிரம்பாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் விவசாயப் பொருட்களுக்கு எல்லாம் கண்ட்ரோல் என்ற முறையில் பல கட்டுப்பாடுகளை கொண்டுவந்திருக்கிறோம். இதனால் விவசாயிகளுக்கு பெரும் தொல்லைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. பொதுவாக இந்த நாட்டில் கலப்படம் இல்லாத பொருட்களே கிடையாதோ என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யக்கூடிய எல்லாப் பொருட்களிலும் கலப்படம் சேர்ந்திருக்கின்ற நிலையைத்தான் நாம் பார்க்கிறோம். உணவுப் பொருட்கள் முதல் எல்லாவித உபயோகப் பொருட்கள் வரை எல்லாப் பொருட்களிலும் இதே கலப்படம் தான். அதிலும் முக்கியமாக இந்த நாட்டினுடைய உணவு உற்பத்திக்கு மிகவும் முக்கியமாக இருக்கின்ற ரசாயன உரங்களில் சாப்பிடக்கூடிய உப்பை அரைத்து சேர்த்து தாராளமாக விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் விற்கக்கூடிய உரத்தை பிளாக் மார்க்கட்டில் 55 ரூபாய் 60 ரூபாய் என்று கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. இதை நான் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இந்த நிலையில், இதயமற்ற நிலையில், ஒழுக்கமற்ற நிலையில், மனித தன்மையற்ற நிலையில் நடந்துகொண்டிருக்கக்கூடியவர்களுக்கு அரசாங்கம் லைஸன்ஸ் கொடுப்பதை நிறுத்தவேண்டும். இந்த முறையில் ரசாயன உரங்கள் எல்லாம் வினியோகிக்கப்படுமென்றால் விவசாயிகள் எந்த நிலையில் உணவு உற்பத்தியை பெருக்குவார்கள் என்பதை அமைச்சர்கள் சற்று சிந்திக்கப்



10th December 1959] [Sri V. Subbiah]

பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமத்திலிருக்கின்ற பொருளாதார அமைப்பை எடுத்துக்கொண்டு பார்த்தால் மிகவும் மோசமாக இருக்கிறது. விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய சாமான்கள் எல்லாம் அதிக விலையாக இருந்து கொண்டிருக்கிறது. கலப்பைக்கு வேண்டிய இரும்புகள், வண்டிப்பட்டைகள் கொழுக்கள் இவைகள் எல்லாம் கிடைப்பதில்லை. இதற்காக பல பேர்களுக்கு லைஸன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் இரும்பை வாங்கி அந்த இடத்திலேயே விற்று ஆயிரக் கணக்கில் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். இவ்விதம் அவர்கள் சரியாக விநியோகம் செய்யாத காரணத்தினால் ஏழு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய வண்டிப்பட்டையை 70 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. விவசாயிகளுக்காக எவ்வளவோ திட்டங்களை எல்லாம் போட்டுக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லக்கூடிய இந்த அரசாங்கம் கேவலம் விவசாயத்திற்கு மிக்வும் அவசியமாக இருக்கக்கூடிய உரங்கள், விவசாயக் கருவிகள், இவைகள்கூட கிடைக்கச் செய்யவில்லை என்றால் அது மிகவும் வருந்தத்தக்க நிலை மட்டுமல்ல, மிகவும் வெட்கப்படக்கூடிய நிலையாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவில் கிராமத்திலுள்ளவர்களின் பொருளாதார நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதோடு விவசாயிகளுக்கென்று பலவிதமான கடன்கள் கொடுக்கப்படுகிறது. ஆனால், அவை ஒன்றேனும் காலாகாலத்தில் கொடுக்கப்படுவதில்லை. 'ஸீட பார்ம்' வைக்கவேண்டும் என்ற முறையில் நான் சுமார் 10 ஏக்கரில் பருத்தி வைத்திருக்கிறேன். அதற்கு இப்போது களை எடுக்க வேண்டிய நேரம், அதற்கு வேண்டிய பணம் இதுவரையிலும் கிடைக்கவில்லை. அரசாங்கத்தை நம்பி இவ்விதம் பயிர் செய்தால் அதோகதியாகப் போகவேண்டியதுதான். அரசாங்கம் நிச்சயமாக உதவி செய்யும் என்று நினைத்துக்கொண்டு யாரும் விவசாயம் செய்ய முடியாது என்கின்ற நிலைதான் இன்று ஏற்பட்டிருக்கின்றது. இதே சமயத்தில் விலைவாசிகள் எல்லாம் கூடிவிட்டது என்று சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில் விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் எவ்வாறு இருக்கிறது? அவர்களுடைய வீட்டு வசதி எவ்வாறு இருக்கிறது? அவர்களுக்கு குடியிருக்க வீடு இருக்கிறதா படுக்கையிருக்கிறதா? இவற்றையெல்லாம் பார்ப்போமானால் விவசாயி மிகவும் கீழ்த் தரமான நிலைமையில் இருந்து கொண்டிருப்பதைத்தான் நம்மால் பார்க்க முடியும். இதற்கிடையில் நிலங்களுக்கு எல்லாம் உச்ச வரம்பு கட்டப்போகிறோம் என்று பேசுகிறோம். உச்ச வரம்பு கட்ட வேண்டியது அவசியம், தனி மனிதர்களே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டிருப்பதை நாம் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் இதைக் கொண்டுவருகின்ற நேரத்தில், கிராமத்திலிருக்கின்ற நிலங்களையும், அங்குள்ள பொருளாதார நிலையையும்தான் நினைக்கிறோமே தவிர, நகரங்களில் இருந்துகொண்டிருக்கிற பொருளாதார நிலைமையை நாம் கணக்கெடுத்துக்கொள்வதில்லை. இன்றுள்ள நிலையில் கிராமத்திலிருக்கின்ற 200 ஏக்கர் நிலங்களும், மௌண்ட் ரோட்டில் இருக்கின்ற ஒரு பெரிய கட்டிடத்திற்கு சமமாகத்தான் இருக்கும். கிராமத்திலிருக்கின்ற இன்றைய விலைவாசிகள், அதிலும் குறிப்பாக நிலங்-

[Sri V. Subbiah] [10th December 1959

களுக்கு இருக்கின்ற விலையை எடுத்துக்கொண்டால் எனக்குத்
தெரியும்—தஞ்சாவூர் ஜில்லாவைத் தவிர மற்ற எந்த ஜில்லாக்களை
எடுத்துக்கொண்டாலும் சரி, கிராமத்திலிருக்கின்ற 200 ஏக்கர்
நிலத்தையும், இங்கு மௌண்ட் ரோட்டில் இருக்கின்ற ஒரு பெரிய
கட்டிடமும் சமமாகத்தான் இருக்கமுடியும். இதை யாரும் மறுக்க
முடியாது. நகரங்களில் எத்தனையோ விதமான வியாபாரங்கள்
எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நகரங்களிலுள்ள
வர்கள் தினமும் ஆகாய விமானங்களில் பறந்து கொண்டிருக்
கின்றார்கள், இன்னும் பலவித வேலைகளை எல்லாம் செய்துகொண்
டிருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் கிராமங்களிலுள்ள
வர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு விவசாயத்தைத்தவிர
வேறு தொழில்கள் செய்வதற்கு என்ன வாய்ப்பு இருக்கிறது?
இன்றைக்கு கிராமங்களில் இருக்கின்ற நிலங்களை நாம் எடுத்து
விட்டால் அவர்களுக்கு நாம் என்ன நஷ்டஈடு கொடுக்கப் போகி
றோம்? அவ்விதம் எடுக்கப்பட்ட நிலங்களை எல்லாம் நாம்
யாருக்குக் கொடுக்கப்போகிறோம்? அவ்விதம் கொடுப்பதாக
இருந்தாலும் அந்த நிலங்களை எல்லாம் விவசாயம் செய்ய வேண்டு
மென்றால், அதற்கு வேண்டிய மாடுகள், விதைகள், உரங்கள் இவை
களை எல்லாம் எவ்விதம் கொடுக்கப்போகிறோம்? இதற்காக
நமக்கு எத்தனை கோடி ரூபாய் தேவைப்படும்? இவைகளை எல்
லாம் நாம் எவ்வாறு பெற முடியும், சிறு சேமிப்புத் திட்டங்களினால்
பெற முடியுமா? அல்லது மத்திய சர்க்கார்தான் கொடுக்க
முடியுமா—அவர்களே இப்போதுள்ள நிலையில்—வெளிநாடுகளில்
எல்லாம் கடன் வாங்கிக்கொண்டிருக்கக்கூடிய இந்த நிலையில்—எவ்
விதம் நமக்கு கொடுத்துதவப் போகிறார்கள்? ஆகவே, இவைகளை
எல்லாம் யோசித்துப் பார்த்து கிராமங்களிலிருக்கின்ற நிலங்
களுக்கு மட்டும் கட்டுப்பாடு ஏற்படுத்தாமல், பெரிய நகரங்களில்
இருக்கின்ற பெரியத் தொழில்களிலும், பெரிய போக்குவரத்துத்
துறைகளிலும் மற்றும் இவைபோன்ற தொழில்களிலும் கட்டுப்
பாடு ஏற்படுத்த வேண்டும். அவ்விதம் ஏற்படுத்துவதாக இருந்
தால் அது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும், நியாயமுள்ள
தாகவும், தர்மமுள்ளதாகவும், நேர்மையானதாகவும் இருக்கும்
என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதல்லாமல் திடீரென்று
எதையும் கொண்டுவருவதினால் எந்தவிதமான பிரயோஜனமும்
இல்லை. இன்னொரு காரியத்தைச் சொல்லவேண்டியதாக இருக்
கிறது. இதே சட்டமன்றத்தில் இதைப்பற்றி பல தடவை சொல்லி
யாய்விட்டது. மின்சார அமைச்சர் அவர்கள் இப்போது இந்த
மன்றத்தில் இல்லையென்றாலும் இதைப்பற்றி சொல்லவேண்டிய
தாக இருக்கிறது. விவசாயத்திற்காகவே மின்சாரத்தை அதிகப்
படியாக உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கி
றோம். ஆனால் அவர்களுக்கு மின்சாரம் அதிகப்படியாக கொடுக்
கப்படுகிறதா என்று பார்த்தால் அவ்விதமொன்றுமில்லை. ஆனால்
இந்த நாட்டில் விவசாயிகள்தான் அதிகமாக மின்சாரக் கட்டணம்
செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு
மட்டும் கட்டுப்பாடு என்று ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
எந்த விதமான தொழிற்சாலைகளுக்கும் கிடையாது. சினிமாக்



10th December 1959] [Sri V. Subbiah]

களுக்கு கிடையாது, பாக்டரிகளுக்கு கிடையாது, ஆயில் மில்
களுக்கு கிடையாது, ஆனால் விவசாயிகளுக்கு மட்டும் வைத்திருக்
கிறார்கள். பாபநாசம் திட்டத்தின் கீழ் இருக்கின்ற பம்பு செட்டு
களுக்கு எல்லாம் ஒரு க்ரூப் ஸிஸ்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
இதைப்பற்றி உதகையில் சட்டசபை நடந்தபோதும் குறிப்பிட்
டிருக்கிறேன். இவ்விதம் க்ரூப் ஸிஸ்டம் என்ற பெயரில் அவர்
களுக்கு ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்தி, அங்குள்ள விவசாயிகளை
அவர்களை மிகவும் பரிதாபகரமான நிலையில் ஆக்கியிருக்கிறார்கள்.
இந்த நிலையைப்பற்றி அமைச்சர்களுக்கு சிந்திக்கக்கூட நேர
மில்லையோ என்னவோ தெரியவில்லை. இந்த நாட்டில் எவ்வளவோ
கிலோ வாட்ஸ் சக்தியுள்ள மின்சாரம் உற்பத்தி செய்யப்
படுவதாகவும், குந்தா திட்டத்தின் மூலமாக அதிகமாக மின்சாரம்
நமக்கு கிடைக்கப்போவதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் விவ
சாயிகளுக்கு இருக்கின்ற கஷ்டங்கள் எல்லாம் அப்படியே இருந்து
கொண்டிருக்கிறது. இந்த சட்டசபையில் சொல்லப்படுகின்ற
விஷயங்களை எல்லாம் கொஞ்சம் கவனித்துப் பார்த்து—நாங்கள்
எல்லாம் இங்கு வேடிக்கைக்காகவோ அல்லது விளையாட்டுக்காக
வோ வரவில்லை—மக்களுக்கு வேண்டிய காரியங்களை எடுத்துச்
சொல்லத்தான் வந்திருக்கிறோம்—அவ்விதம் சொல்லப்படுகின்ற
காரியங்களை எல்லாம் கவனித்துப் பார்த்து—அதற்கு வேண்டிய
நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று அமைச்சர்களை நான்
கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் இதற்கு மேல்
கூடுதலாக ஒன்றும் சொல்லுவதற்கில்லையாதலால், இதோடு
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI HEMALATHA DEVI: கனம் அவைத் தலைவர்
அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள்
ஆற்றிய உரையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை எடுத்துக்கூற
விரும்புகிறேன். இந்த நான்கு தின விவாதத்தில் கலந்துகொண்ட
அங்கத்தினர்களில் ஒருவர் கவர்னர் அவர்களுடைய உரையானது
காரசாரமற்றது என்று கூறினார், மற்றொருவர் உப்பு சப்பில்லை
என்று கூறினார், வேறொருவர் கவர்னர் அவர்களது உரையில்
சோறும் இல்லை, சாறுமில்லை, பக்கத்தில் கொஞ்சம் ஊறுகாய்கூட
இல்லையே என்று சொல்லுவரோ என்னவோ. இன்றைய தினம்
விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளைத் தவிர மற்ற எல்லாத்
தொழிலாளர்களும், முதலாளி வர்க்கத்தைச் சார்ந்தவர்களும்,
நாட்டிலிருக்கின்ற மத்தியதர வகுப்பைச் சார்ந்தவர்களும்,
உணவுப் பொருட்களின் மீது இருக்கின்ற விலைவாசியை குறைக்க
வேண்டுமென்று கூக்குரலிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இவர்
கள் எல்லாம் தங்களுடைய சுயநலத்தைக் கருதிதான் இவ்விதம்
சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கவேண்டியிருக்
கிறது. காரணம் இருபது ஆண்டுகளுக்கு முன்னால் தொழிலாளி
யாக இருந்தாலும் சரி—நடுத்தர வகுப்பினரைச் சார்ந்தவராக
இருந்தாலும் சரி—அவர்களுக்கு 20 ரூபாய் வருமானம் வந்து
கொண்டிருந்தது என்றால் இப்போது அது 60 ரூபாய் அல்லது 80
ரூபாய் என்று உயர்ந்திருக்கிறது. முதலாளிகளுக்கும் வருவாயில்
பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. ஆனால் விவசாயிகள் அன்று

[Srimathi Hemalatha Devi] [10th December 1959

இருந்தது போலவே இன்றும் இருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்பு 20 ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருந்த விவசாயிகள் இன்று இருந்த இடம்கூடத் தெரியாமல் போயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கே வழியில்லாத நிலையில் தங்களிடமுள்ள அத்தனை காணி நிலத்தையும் விற்றுவிட்டு ஏரைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டு வாரத்திற்கு உழலாமா என்று எண்ணிக்கொண்டிருக்கும் நிலைமையில்கூட இருக்கிறார்கள். தற்போது விவசாயம் செய்து வருபவர்களும் வானம் பொழியுமா, பூமி விளையுமா என்ற ஏக்கத்துடன் கடவுளைப் பிரார்த்தித்துக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கின்றனர். விவசாயிகள், அவர்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் அதிகமான விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் தங்களுக்கு வேண்டிய உடைக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் நகைகள் வாங்கினாலும், மற்றப் பொருள்கள் வாங்கினாலும், எல்லாப் பொருள்களுக்கும் அதிகமான விலைதான் கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளான கொழு கம்பி, கடப்பாரை, மண்வெட்டி முதலிய பொருள்களுக்கும் இதர இரும்புச் சாமான்களுக்கும் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. எருதின் விலையும் 20 ஆண்டுக்கு முன் 50 ரூபாய் என இருந்தது தற்போது 300 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்நிலையில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களை மட்டும் குறைந்த விலைக்கு விற்க வேண்டும் என்றால் அவர்களுடைய கதி என்ன ஆவது? அவர்களுடைய குடும்பம் என்ன ஆவது? விலைவாசிகளைக் குறைக்க வேண்டும் என்று சொல்லும்போது விவசாயிகளின் நிலையையும் அவசியம் கவனிக்க வேண்டும். மேலும், ஜனத்தொகை 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது அதிகரித்திருக்கிறது. ஜனப் பெருக்கத்திற்கேற்றவாறு பூமியின் பரப்பளவு ஒன்றும் அதிகரிக்கவில்லை. ஜனப் பெருக்கத்திற்குத் தகுந்தவாறு வசிப்பதற்கான இடங்கள் அதிகமாக வேண்டியிருக்கின்றன. அதற்கான விளையும் பூமியில் கூட வீடுகளைக் கட்டுகிறோம். இப்படிச் செய்துகொண்டு விளைபொருள்கள் பெருக வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு உற்பத்தியானதைவிட அதிகமாகவே, நமது தேவைக்கும் அதிகமாகவே, உணவுப் பொருள்கள் உற்பத்தியாகியிருக்கின்றன என்பதை சர்க்காரின் புள்ளிவிவரங்கள் மூலம் அறிகிறோம். அப்படி இருக்க, விலைவாசிகள் அதிகரிக்கக் காரணம் என்ன? காரணம், அண்டை மாநிலங்களில் உணவு தானியங்களுக்கும் மற்ற பொருள்களுக்கும் இன்று விலைக் கட்டுப்பாடு இல்லை. மேலும் அண்டை ராஜ்யங்களுக்கு நாம் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதும் நிறுத்த முடியவில்லை. எனவே, நம் மாநிலத்தில் எவ்வளவு உற்பத்தியாகிறது என்றும், நம் தேவை எவ்வளவு என்றும் கணக்கிட்டு, நம் தேவைக்கு மேல் இருக்கும் உபரி தானியத்தை ஏற்றுமதி செய்யலாம். இன்று எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறியிருக்கின்றன. வியாபாரிகள் எல்லோருக்கும் பண ஆசை அதிகரித்துள்ளது. வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கி வைக்கிறார்கள். அது அரசாங்கத்தின் குற்றமா அல்லது வியாபாரிகளின் குற்றமா என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். விலைவாசிகள் ஏறுவதால் நாம் அதிகப்படியான ரூபாய் நோட்டுக்களை அச்சடித்துவிட்டால், இன்று வருவாய் ஒரு ரூபாய் என்கிறபோது அரையணாவுக்கு விற்கும் ஒரு பொருள் நாளை வருவாய் நான்கு ரூபாய் என்றால் அப்பொருள் இரண்டணாவிற்கு விற்கும். எனவே ரூபாய் நோட்டுக்களை அச்சடித்தாலும் விலையேற்றத்தைத் தடுக்க முடியாது என்பதை நன்கு அறிகிறோம். தற்போதைய நிலையை சற்று சமாளிக்க வரப்போகும் மகசூல் வரையிலும் நியாய விலைக் கடைகளை நீடித்து வைத்திருக்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால், அதற்கு மேலும் அவைகளை வைத்திருக்கத்தான் வேண்டும். அதற்கு அரசாங்கத்தார் ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.



10th December 1959] [Srimathi Hemalatha Devi]

அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அண்டை மாநிலங்களில் இருக்கும் அதிகப்படியான நீரை நமது மாநிலத்திற்குத் திருப்புவதற்கான காரியங்களில் அரசாங்கத்தார் ஈடுபட்டிருக்கிறார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதே சமயத்தில், நம் மாநிலத்திலேயே சேலம் ஜில்லாவில் பல ஆண்டுகளாக வறண்ட பிரதேசமாக இருக்கும் தர்மபுரி தாலூகாவில் சின்னாறு என்ற ஒரு பெரிய ஆறு இருக்கிறது. அதற்கு அணை போட வேண்டும் என்று பல ஆண்டுகளாக அங்குள்ள ஜனங்கள் சொல்லி வந்தார்கள். அது சூழ்ச்சிகளின் காரணமாக தடைப்பட்டு விட்டது. ஆனாலும் அங்கே வந்திருந்த நம் மராமத்து அமைச்சர் அவர்கள் அணைகட்ட வேண்டிய இடங்களைப் பார்வையிட்டபின் அதற்குக் கட்டாயம் அணை கட்டவேண்டும் என்று நிச்சயித்திருக்கிறார்கள். அதற்காக அவருடைய கருணைக்கு என் பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சின்னாறு என்ற அந்த ஒரு ஆற்றில் அணை கட்டாமல் மேலும் நான்கு ஆறுகளும் சேரும் இடத்தில் அணைகட்ட வேண்டும் என்று தர்மபுரி தாலூகாவில் பெரும்பாலான கிராமங்களிலுள்ள மக்கள் விரும்புகிறார்கள். அங்கே நான்கு, ஐந்து ஆறுகள் சேரும் இடமாகிய வெள்ளைக் கல் குன்று, மல்லேஸ்வரன் கோவில் குன்று இவைகளுக்கிடையே அணைக்கட்டை அமைக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் அந்த ஜனங்களின் சார்பில் அரசாங்கத்தை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டும் மசோதா பரிசீலனையில் இருப்பதாக கவர்னர் அவர்களுடைய உரையில் கூறப்பட்டிருக்கிறது. ஜில்லாவிற்கு ஜில்லா நில வளமும் நீர் வளமும் மாறுபட்டிருக்கின்றன. வரண்ட பிரதேசமாக இருக்கும் ஒருசில ஜில்லாக்களில் நில அளவை ஏக்கர் கணக்கில் மட்டும் பார்க்காமல் நிலத்தின் தரத்தையும் கவனித்து மாகாணம் பூராவும் சமத்துவமான நில வருவாயைக் கொண்டு நில உச்ச வரம்பை நிர்ணயிக்க வேண்டும். மேலும், மாநிலத்தில் எல்லாத் துறைகளிலும் எல்லோருக்கும் சமமான வருவாய் கிடைக்கக்கூடிய வகையிலும் ஒரு சட்டம் அமையவேண்டும் என்றும் கருதுகிறேன்.

[Srimathi Hemalatha Devi] [10th December 1959

கோவில்களுக்கு நிலங்கள் இருக்கின்றன. நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரும்போது கோவில்களின் வருமானத்தில் தலையிடும் வகையில் எதுவும் செய்யக்கூடாது. கோவில்களின் வருமானத்திற்கு அந்த நிலங்களிலிருந்து வரும் வருவாயை உபயோகித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். ஏனென்றால் சில முக்கியமான கோவில்களுக்குத் தான் நிலச் சொத்துக்கள் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அரசாங்கம் எண்டோமெண்ட் இலாகாவின் மூலம் டிரஸ்டிகளை வைத்துக் கோவில்களை நிர்வகித்து வரும்போது 5-6 கோவில்களுக்கு ஒரே டிரஸ்டி இருக்கிறார். ஒரு பெரிய கோவிலின் வருவாயைக் கொண்டுதான் 5-6 கோவில்களில் பூஜை முதலியவை நடத்தப்படுகின்றன. வேண்டுமானால் எல்லாக் கோவில்களின் நிலங்களையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு, அவைகளின் மூலம் வரும் வருமானத்தை கோவில்களுக்கே பயன்படுத்தலாம். எனவே, கோவில் நிலங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI K. VINAYAKAM : சபைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில் இன்றைய நிலைமைபற்றி ஓரளவு விளக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு விலைவாசிகள் ஏறியிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். பொது மக்களுக்கு அது மாத்திரம் ஆறுதல் தராது. பொது மக்கள் ஆட்சியாளர்களிடமிருந்து எதிர்பார்ப்பது ஏறுகிற விலைவாசிகளை எப்படி குறைக்கப் போகிறார்கள் என்பதுதான், விலைவாசிகளைக் குறைக்க என்ன வழி வகுத்திருக்கிறார்கள், அப்படி வகுப்பதால் விலைகள் குறையுமா, விலையெல்லாம் குறைந்த பிறகு என்று சுபிட்சம் ஏற்படும் என்பது தான். ஓரிரண்டு ஆண்டுகளாக இருக்கிற விலைவாசி வருகிற வருவாயைக் கொண்டு குடும்பம் நடத்திவிடலாம் என்று நினைத்தவர்களெல்லாம், படிப்படியாக எல்லாப் பொருள்களும், குறிப்பாக உணவுப் பொருள்களே விலை ஏறுகிற நேரத்தில், குடும்பம் நடத்துகிற முறையையே மாற்றி அமைக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக ஒருசில பொருள்கள், புளி, அரிசி, மற்றும் காய்கறி பதார்த்தங்கள், இவைகள் எல்லாம் விலை ஏறிக்கொண்டே போனால் எப்படி பொது மக்கள் சகித்துக்கொண்டிருப்பார்கள் என்று நாமே சிந்திக்கவேண்டும். இன்றைய நிலையில் "எங்களுக்கு வருகிற வரும்படியை ஏற்றிக்கொடுக்க வேண்டும்" என்று சொல்லாமல் இருப்பவர்கள் மூன்று பேர்கள் இருக்கின்றார்கள். ஒருவர் கவர்னர் பெருமான், அவருக்கு ஊதியம் அதிகம் வேண்டுமென்று சொல்லவில்லை. இன்னொன்று, பொது வேலைக்கு என்று வந்துள்ள காரணத்தினால் ஒன்றும் வெளியே பேச முடியாமல் இருக்கிற மந்திரிகளும், நாமும், நீங்களும். இந்த வகுப்பினர் தான் "எங்களுக்கு ஊதியம் அதிகம் வேண்டும்" என்று சொல்ல முடியவில்லை. பொது வேலைக்கென்று வந்திருக்கிற நாம் இதை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. இந்த நாட்டிலுள்ள எல்லா மனிதர்களும், எந்தத் துறையில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பவர்



[10th December 1959 [Sri K. Vinayakam]

களாக இருப்பினும் சரி, அவர்களுக்கு ஒரு கழகமோ அல்லது யூனியனோ வைத்துக் கொண்டு "எங்களுக்கு வருகிற ஊதியம் போதவில்லை" என்று சொல்லுகிறார்கள். ஒரு மனிதன் எதிர்பார்ப்பது ஆட்சியாளரிடமிருந்து, ஒரு நிலையான சர்க்காரிடமிருந்து, ஒரு நல்ல சர்க்காரிடமிருந்து, தான் வாழ்க்கையை ஒரு விதமாக நடத்த வேண்டிய அளவுக்கு சூழ்நிலை இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும் என்பது. அது எல்லாம் இல்லையென்றால் இயற்கையாகவே வெறுப்பு வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி நம் அரசாங்கம் செய்வது சரியில்லை என்று கூடக் குறை சொல்லாமல் அவர்களுக்கு இருக்கும் வெறுப்பை வேறு விதமாக தேர்தல் காலத்தில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதை ஆட்சியாளர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கவர்னர் பெருமான் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். நாம் இது விஷயத்தில் என்ன செய்திருக்கிறோம் என்று மந்திரி சபையோ அல்லது மற்றவர்களோ யோசிக்கவேண்டும். நான் இந்த இடத்தில் ஒன்று உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எல்லோருக்கும் தெரியும் பக்கத்திலுள்ள நாட்டைப் பற்றி—பாகிஸ்தானைப் பற்றி. பாகிஸ்தான் என்று சொன்னவுடனே நான் ஏதோ ராணுவ அதிகாரத்தை விரும்புகிறேன் என்றல்ல. நான் ஒரு ஜனநாயக வாதி. ஜனநாயக லட்சியம் வேண்டும். அப்படி இருந்தும் இப்போது ஜனநாயகத்தில் என்ன குறைபாடுகள் இருக்கின்றனவோ அவைகளை ராணுவ முறையில் எப்படி தீர்த்துக் கொண்டார்களோ அதை வைத்துக்கொண்டு, அந்த முறைகளை நாமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் எனக்கு எட்டிய சிறிய யோசனையை நான் சொல்ல விரும்புகிறேன். விலைவாசி ஏற்றத்திற்கு யார் யார் மீதிலோ பாரத்தைப் போட்டு விடுவதை விட்டு, உற்பத்தியாளர்களையும், வியாபாரிகளையும், கன்ஸ்யூமர்களையும் அழைத்து, ஆலோசித்து, சிந்தித்து, கடைசியாக முடிவுக்கு வந்து, ஒவ்வொரு பொருளுக்கும் இது தான் விலை என்று நிர்ணயித்து—அதாவது ஆங்கிலத்தில் சொல்வார்கள் கள் "ஸ்டிப்யுலேடெட் ப்ரைஸ்" என்று—அந்த முறையில் நிர்ணயித்து, அதை விடக் கூட வைத்து விற்றாலும், வியாபாரம் செய்தாலும்—"ஐதர் எக்ஸ்ப்ளிஸிட்லி ஆர் இம்ப்ளிஸிட்லி"—அதற்கு இந்த தண்டனை விதிப்போம் என்று வைத்து, முதலாவதாகச் செய்யப்படும் குற்றத்திற்கு 6 மாதம் சிறை தண்டனை என்றும், இரண்டாவதாகச் செய்யப்படும் குற்றத்திற்கு 3 மாத சிறை தண்டனை என்றும், மூன்றாவதாகச் செய்யப்படும் குற்றத்திற்கு இனிமேல் அந்த வியாபாரமே செய்யக் கூடாது என்று சொல்லி அதை அமுல் நடத்தினால் ஓராண்டுக்குள்ளாக பழைய நிலைமை வரலாம். பொருளாதார அடிப்படையில் எல்லா நடவடிக்கைகளையும் பயன்படுத்தி, கடைசியில் வேறு வழியில்லாமல் இம்முறைகளை கையாண்டிருக்கிறார்கள் அன்னிய நாடுகளில். அந்த நிலைமை இங்கே வரவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், இங்கே எடுத்துக்கொள்ளுகிற நடவடிக்கை "ஹாப் ஹார்ட்டேட் மெஷர்" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், அதாவது நேரடியாக அரசாங்கம் இறங்கி எல்லா வழிகளிலும் இதைத் தடுக்க வழி

[Sri K. Vinayakam] [10th December 1959

செய்யாமல் இருந்து மக்களுக்கு நிவாரணம் தேடித் தரவில்லை என்றால் எல்லா நாடுகளிலும் ஏற்பட்ட அனுபவம் தான் நமக்கும் வரும், அதாவது உடைப்பில்தான் வந்துவிடும். எதிர்காலத்தில் எல்லோரும் குற்றம் சொல்லும் அளவுக்கு வரும், தைரியம் இருந்தால், "புல் ஹார்ட்டெட் மெஷர்ஸ்" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், அந்த முறையில் நேரடியாக இறங்கி கட்டுப்படுத்தினால் இந்த நிலைமையைத் திருத்தி அமைக்க முடியும். அதை விட்டு விவசாயிகள் கோபித்துக்கொள்வார்கள், கொள் முதல் செய்தால் மிராசுதார்களுக்கு ஆத்திரம் வரும் என்று ப்ரொக்யூர்மெண்டை விட்டு விடுவது என்ற முறையில் போனால், ஆங்கிலத்தில் "ஹாப் ஹார்ட்டெட் மெஷர்ஸ்" என்று சொல்லப்படுவது போல நிலைமை திருத்தி அமைக்கப்படாதுதான் போகும். "புல் ஹார்ட்டெட். மெஷர்ஸ்" எடுக்காது, அதை விட்டு அங்கே என்.ஜி.ஓ.-க்கள் கூட்டம் போடுகிறார்களே என்று, அவர்களைப் பற்றி நானும் இங்கே பேசியாக வேண்டுமென்று பேசி விடுவதால் மட்டும் இந்த நோய் தீராது. இதற்குப் பரிகாரம் "We must have a strong Government with a full hearted policy" அப்படி இருந்தாலொழிய இந்தக் குறைபாடு சீக்கிரத்தில் தீராது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, 'இந்த சென்னை நகரம் சென்ற ஓராண்டாக துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சென்னை நகரத்தில் இதே சட்ட சபை அங்கத்தினர்கள் 4 அல்லது 5 ஆண்டுகளாக பார்த்திருப்பார்கள் எந்த நிலைமையில் பாதைகள் இருக்கின்றன என்று. இப்போது இருக்கும் பாதைகளைப் பாருங்கள். ரோடுகள் ரிப்பேர் செய்யப் படாமல் ஆங்காங்கு உடைப்பு அதிகமாக இருக்கிற நிலைமையைப் பற்றி கேட்டால் கார்ப்பொரேஷன் நிர்வாகஸ்தர்கள், போதிய அளவு அரசாங்கம் பணம் தரவில்லை, கடன் கொடுக்க வில்லை, மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸேஷன் ஆக்டின் கீழ் வசூலிக்கக் கூடிய பணத்திலிருந்து போதிய பணம் வரவில்லை என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இதை அரசாங்கம் கவனித்து, ஏதாவது ஒரு திட்டத்தை வகுத்து, ஒன்று நாமே எடுத்துக் கொள்வதோ அல்லது அவர்களிடமே கட்டாயம் செய்யவேண்டு மென்று சொல்லி வற்புறுத்தியோ ஏதேனும் ஒன்று உடனடியாகச் செய்ய வேண்டும்.

இந்த சட்ட சபைக் கூட்டத்திற்கு முன்னால் நம் மாகாணத்தில் உலவிய கருத்து, நிலச் சீர்திருத்த மசோதா வருகிறது, அதற்காகத்தான் நாம் பிரத்தியேகமாகக் கூடுகிறோம் என்று சொல்லி, பிறகு மசோதா வரவில்லை. இப்போது யோசனையில் இருக்கிறது, மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாம் அதைத் தடுக்கக் கூடாது. நிலச் சீர்திருத்தம் வரவேண்டும். வரவேண்டாம் என்று யாரும் தடுக்க தைரியமாக முன்வரமாட்டார்கள். அதே நேரத்தில் முன்னேற்



10th December 1959] [Sri K. Vinayakam]

யாக வந்து விடவேண்டும், மிராசுதார்களை ஒழித்து விடவேண்டும் என்று சொல்வது சரியல்ல. எந்த விதத்தில் கொண்டு வந்தால் உணவு உற்பத்தி குறையாமல் இருக்கும் என்று சிந்தித்து அதற்குத் தகுந்தபடிதான் மசோதாவைக் கொண்டு வரவேண்டும். அதே நேரத்தில் "அர்பன் இன்கம்ஸ்" என்று சொல்லக்கூடிய விஷயத்தில், அதாவது வக்கீல்கள், டாக்டர்கள் முதலியவர்கள் இவ்வளவு தான் சம்பாதிக்கவேண்டும் என்று ஒரு உச்ச வரம்பு கிடையாது. "இன்கம்-டாக்ஸ்" இருக்கிறது. அதில்தான் ரூபாய்க்கு 12 அணா அல்லது 14 அணா போய்விடுகிறதே என்று சொல்வது சாக்குப் போக்கு சொல்வது போல் ஆகும். கிராமப் புறங்களில் இருக்கும் எங்களுடைய வருவாய்க்கு தடை செய்ய வேண்டுமென்று சொல்லும் நேரத்தில், மற்றவர்களுக்கு ஒன்றும் தடையில்லாமல் இருப்பது முறையா என்று அவர்கள் நினைக்கக் கூடியதில் ஆச்சரியமில்லை. ஆகவே அர்பன் இன்கம் சம்பந்தப் பட்ட மட்டிலும் கூட அதையும் யோசித்து, அதற்கும் ஒரு மசோதா தயாரிக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, எல்லைப்புற தகராறு தீர்ந்து விட்டது. மசோதா லோக் சபையிலும், ராஜ்ய சபையிலும் நிறைவேறி விட்டது. நான் இது சம்பந்தமாக கனம் பந்த் அவர்களையும், கனம் தத்தார் அவர்களையும் கண்டு பேசினேன். நமது அரசாங்கம் தயாராக இருந்தால் ஜனவரி மாதம் முதல் தேதியன்றே அந்தப் பகுதிகளைச் சேர்த்து விடத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். இதற்காக ஒரு விழா நடக்கும்போது, இதிலே அக்கறை கொண்டு பாடுபட்ட அமைச்சர்கள் திரு. காமராஜ், திரு. சுப்பிரமணியம், திரு. பக்தவத்சலம் அவர்களெல்லாம் வரவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அத்துடன் சபைத் தலைவரையும் அழைக்கிறேன்.

**Mr. SPEAKER :** உங்களை ?

**Sri K. VINAYAKAM :** நான் தானே நடத்தப் போகிறேன். இந்த நேரத்தில் எல்லா அங்கத்தினர்களையும் எங்கள் ஊருக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கூட கனம் அங்கத்தினர்கள் அடுத்த பட்ஜெட் வரும்போது எங்கள் பகுதியைப் பற்றி கொஞ்சம் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். அது ஒரு நெக்லெக்டெட் ஏரியா. அங்கே சுமார் 350 கிராமங்கள் இருக்கின்றன. அதற்கு குறைந்தது 1 கோடி ரூபாய் ஒதுக்கி வைத்து, இங்கே இருக்கும் அளவுக்கு அந்தப் பகுதியையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதை கனம் அங்கத்தினர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கூறி, எல்லோரையும் மறுமுறை அந்த விழாவிற்கு அழைத்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** இப்போது மணி ஒன்று. இந்தச் சபையை மாலை 3 மணி வரையில் ஒத்தி வைக்கிறேன். 1 p.m.

The House then rose for lunch.

[10th December 1959

**(After lunch 3 p.m.)**

**Mr. SPEAKER :** கவர்னர் உரையின் மீது விவாதம் தொடர்ந்து நடக்கும். ஸ்ரீ செல்வராஜன் இப்பொழுது பேசுவார்.

**Sri M. S. SELVARAJAN :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கிறேன். இந்த ராஜ்யத்தின் தலைவர் என்ற முறையில் சிறப்பான அம்சங்களைப் போற்றியிருக்கிறார்கள்; இந்த ராஜ்யத்தில் நடந்து வந்திருக்கும் காரியங்களில் பெருமைப் பட்டிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கடந்த நான்கு வருஷங்களில், திட்டங்களை நிறைவேற்றும்போது, வருஷா வருஷம் அந்தத் தொகையை செலவழித்து வந்திருக்கிறோம்; ஐந்தாவது வருஷத்தில், திட்ட இலக்கையும் மீறி, ரூ. 14 கோடி வரும் என்றும், மொத்தம் 38 கோடி திட்டத்துக்குத் தேவை என்றும் திட்டம் கொடுக்கக் கூடிய ராஜ்யத்தின் தலைவர் என்று பெருமைப் படுவதில், நியாயம் உண்டு. அந்த நிலையிலே, கடந்த வருஷங்களிலே, நம் அரசாங்கம் நல்ல பணியாற்றி வந்திருக்கிறது; ஜனங்களைப் பராமரிக்கும் பொறுப்பை பெருமையாகவும், திறமையாகவும், செய்து, நற்பெயரை ஏற்று இருக்கிறது. நடந்து வந்த காரியங்களைப் போல் இனி நடக்க வேண்டிய காரியங்களிலும், இந்த ராஜ்யம் அந்த நற்பெயரை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இந்த ராஜ்யத்திலே, சில உயர்தர உத்யோகஸ்தர்கள், அரசாங்கத்தின் சார்பில் சிற்சில சமயங்களில், பத்திரிகைக்காரர்களுக்கு, ஆங்காங்கே கொள்கை அறிவிப்பு செய்து வருகிறார்கள். என் அபிப்பிராயம், அரசாங்கத் துறையிலிருந்து கொள்கை விளக்கம் எதுவாயினும், அரசாங்கத்திற்கு பூரணப் பொறுப்பு ஏற்றுள்ள, அமைச்சர் வாயிலாகத்தான் வர வேண்டும். இது என் பணிவான கருத்து. இப்பொழுது பார்க்கிறோம், பண்டித ஜவர்லால் நேரு மேற்கொண்டிருக்கும், பாரத அரசாங்க செய்தி விளக்க முறையை. ஆங்காங்கே இருக்கும் பத்திரிகைக்காரர்களை அழைத்து, குறிப்பிட்ட நாட்களில், தெரிவிக்க வேண்டிய கருத்துக்களைத் தெரிவிக்கிறார்களே, அதே போல, தலைமை மந்திரியவர்கள், அவ்வப்போது, குறிப்பிட்ட ஒரு நாளில் பத்திரிகைக்காரர்களை அழைத்து இந்த ராஜ்யத்தின் கொள்கையை, நடந்தவை, நடக்க வேண்டிய காரியங்களை, தெரிவிக்கக் கூடிய வழக்கத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். மற்ற மந்திரிகளும், அவரவர்கள் துறைக்கு அப்படிச் செய்யலாம். ஆனால் அதிகாரிகள் இந்தப் பணியைச் செய்வது தகுதியல்ல.

இந்த ராஜ்யத்தில், சாதாரண கர்ணம், கிராம முன்சிப் முதல், செக்ரடேரியட்டில் வேலை செய்யும் உயர்தர உத்யோகஸ்தர்கள் வரை அதிகமான வேலை செய்கிறார்கள். மற்ற மத்ய சர்க்கார் சிப்பந்திகளைக் காட்டிலும் அதிகமான வேலை செய்து வருகிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், சமீப காலத்தில் திருநெல்வேலியில், ஜில்லா என்.ஜி.ஓ. மகாநாடு நடந்தது. அங்கு மக்களுக்கு வேதனைதரும் விஷயங்கள் நடந்தன. அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன், அரசாங்க சிப்பந்திகள், அரசியல் கட்சி சுலோகங்களைப் போட்டு கூச்சலிட்டார்கள். சகிப்பதற்கு முடியாததாக இருந்தது. இத்தகைய நிலையை அரசாங்க சிப்பந்திகள் அஸோஸியேஷன் அடைவது முறையா என்று கேட்கிறேன். இதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும், அதற்கான ஆலோசனையைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு குறைந்த பட்ச தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஊதியமாவது வேண்டும் என்பது கோரிக்கை. மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதுபோல், டியர்னஸ் அலவன்ஸை சம்பளத்தோடு சேர்க்கலாம்; இந்த ராஜ்ய சிப்பந்திகளுக்கு கால தாமதமில்லாமலும், ஏதாவது செய்ய வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த சிப்பந்திகளைப் போலவே ஆசிரியர் குழாங்களுக்கும், அவர்கள் குறைகளுக்கு பரிகாரம் கிடைக்கும் என்று பெரிதும் நம்புகிறேன்.



10th December 1959] [Sri M. S. Selvarajan]

தலைவர் அவர்களே, சமீப காலத்தில் அரசாங்கம் அமுல் செய்த ஆரம்ப இலவசக் கல்வி திட்டம் காரணமாக ஆசிரியர்களுடைய வேலைக்கு நிச்சயம் பந்தோபஸ்து இருக்கிறது என்று எல்லா ஆசிரியர்களுக்கும் அபயம் கொடுத்த இந்த ராஜ்ய சர்க்கார், பெரும்பாலான ஆசிரியர்களுக்கு கார்பொரேஷன் பள்ளிக் கூடங்களில் வேலை வாய்ப்பு கொடுத்தது. இதற்கு முன்பு அவர்களுக்கு சர்விஸ் ரெஜிஸ்டர்படி என்ன ஊதியம் நிர்ணயிக்கப் பட்டிருந்ததோ, அதைப் பெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அதை சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அதைப்போல், செகண்டரி பள்ளி ஆசிரியர்களில் சிலர் ஹையர் கிரேடு ஆசிரியர் சம்பளம் பற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தத் துறையில், எந்தப் பள்ளிக் கூடத்தில் இருந்தாலும், அவர்கள் தகுதிக்கு ஏற்ப ஊதியம் பெறும் வாய்ப்பையும் அரசாங்கம் தேடித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அரசாங்கம் மற்ற துறைகளில் நற்பெயரை அடைந்திருக்கிறதோ, அதே மாதிரி, ரஸ்தா விஷயத்தில் எய்திருக்கிறது. கன்யாகுமரி முதல், சென்னை வரை கடலோரமாக அமைக்கப் பட்டிருக்கும் ரஸ்தாவை மத்திய அரசின் கைக்கு மாற்ற வேண்டும். தேசப் பாதுகாப்பு முக்கியத்துவமுள்ள இந்த ரோட்டை நாஷனல் ஹைவேஸ் ஆக்க நியமிக்க வேண்டும். ரோடு பராமரிப்பு செலவைச் செய்ய முடியாது பல பெரிய ஜில்லா போர்டுகள் இருக்கின்றன. எல்லா மேஜர் ஜில்லா போர்டு ரோடுகளையும், சர்க்கார் பராமரிப்பில் ஏற்றுள்ளது. அவசியத்தைக் கருதி வேறு சில ரஸ்தாக்களையும் ராஜ்ய சர்க்காரே ஏற்றுக் கொள்ளும் விஷயம் பல மாதங்களாக பரிசீலனையில் இருந்து வருகிறது. துரிதமாக ஒரு முடிவுக்கு வந்து ஹைவேஸ் இலாகாவிடம் கொடுத்து, விசேஷ மானியம் கொடுத்து, இந்த ராஜ்யத்தின் ரஸ்தாக்களை செம்மையாக பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். விலை ஏற்றத்தை பேசும்போது, விலையைக் குறைக்க வேண்டும் என்கிறோம். உணவுப் பொருள்களை வெவ்வேறு இடங்களுக்குத் துரிதமாகக் கொண்டு போகக்கூடிய

கிராம ரஸ்தாக்களையும் செம்மை படுத்துவதும், இந்த விஷயத்தில் நலமாக அமையும் என்று பணிவாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சில காலத்திற்கு முன்னதாக தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற திட்டம் இருந்தது. சேது சமுத்திர திட்டத்தை இதிலிருந்து பிரித்து தூத்துக்குடி துறைமுகத்தை விருத்தி செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொண்டால் அது முடியும் என்று அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தூத்துக்குடி துறைமுக அபிவிருத்திக்கு சில கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியதாக இருந்தது. அதற்கு வேண்டிய உதவியை மத்திய சர்க்காரிடமிருந்து பெறுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தத் துறைமுக அவசியத்தைப்பற்றி நேரில் காண்பதற்காக நமது நாட்டின் தலை சிறந்த தலைவர் பண்டித நேரு அவர்களே அங்கு நேரில் வந்து அந்தத் துறைமுகத்தைப் பார்வையிட்டார். அதைப்பார்த்து விட்டு அதைப் பற்றி பரிசீலனை செய்வதற்காக அங்கே வந்தார். அப்படி வந்து பார்வையிட்டபோது அது அவசியம் தான் என்று உணர்ந்தார். அதன் பிறகு அதை அபிவிருத்தி செய்ய வேண்டிய முயற்சிகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டு வந்தது. இதுவரையிலும் நடைபெறவில்லை. ஆகவே நம்முடைய இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசி வருஷத்திலாவது இது சம்பந்தமான ப்ரிலிமினரி வேலைகளை நிறை வேற்றி துரிதமாக வேலை செய்ய முன் வர வேண்டும். இதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசி வருஷத்திலாவது எடுத்து வேலை செய்ய வேண்டும் என்றும், மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேதுசமுத்திரம் துறைமுக அபிவிருத்தியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி சேதுசமுத்திரம் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிறைவேற்றிக்கொள்ளவும் முடியும். அதற்கு வேண்டிய காரியங்களை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக மனப்பாடு, உவரி, திருச்செந்தூர், தனுஷ்கோடி கடல் ஓரங்களில் கடலரிப்பு ஏற்பட்டிருக்கிறது. கடலோரப் பகுதிகள் அதனால் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கடலரிப்பைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். கடலோரங்களில் சுவர்களை எழுப்பியாவது கடல் அரிப்பைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த அரசாங்கத்திற்கு தனிமையில் முடியா விட்டாலும் மத்திய அரசாங்கத்தைக் கேட்டு அவர்களுடைய உதவி பெற்று சீக்கிரத்தில் அந்த வேலையையும் எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ரயில் பாதை. திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் வரையில் ரயில் பாதை 34 மைல்கள் தான் இருக்கிறது. இந்த தூரத்தை ரயில் வண்டிகள் கடப்பதற்கு ஐந்து மணி பத்து நிமிஷம் ஆகின்றது. சுமார் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் குழந்தைகள் அந்தப் பகுதியிலிருந்து பாடசாலைக்கு வந்து படிக்கவேண்டியதாக இருக்கிறது. அவர்கள் பூராவும் ரயில் பாதையாக வரவேண்டியதாக இருக்கிறது. இப்படி ரயில்கள்



தாமதமாக ஓடினால் அந்த பிள்ளைகள் எவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதாக இருக்கும் என்பதை கவனித்துப் பார்க்க வேண்டும். இந்தக் கஷ்டத்தைப்பற்றி ரயில்வே அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு அழுத்தமான தண்டவாளங்கள் போடப்படாமல் இருப்பதால் ரயில்கள் எல்லாம் தாமதமாக வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த இடத்தில் ரயில் பாதையை அழுத்தமாகப் போட்டு ரயில் வண்டிகளை துரிதமாக ஓட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள கஷ்டத்தை சமீப காலத்தில் இந்த அரசாங்கத்தினிடமும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. திருச்செந்தூரிலிருந்து திருநெல்வேலி வரையில் துரிதமாகப் போகக்கூடிய அளவில் ரயில் பாதைகள் அழுத்தமாகப் போடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். 1958-59-ம் வருஷம் இதை அனுமதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அதை துரிதமாக எடுத்து நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இதைச் செய்து கொடுத்தால் சுமார் ஆயிரம் குழந்தைகளுக்கு வெளியூர்களுக்கு சென்று படிக்க வசதியாக இருக்கும். அதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பை ராஜ்ய அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

திருநெல்வேலி ஜில்லா டெவலப்மெண்ட் காரியங்களுக்குகாக அந்த ஜில்லாவை பிரித்து இப்பொழுது சங்கரன் கோவில், ஸ்ரீவைகுண்டம், கோவில்பட்டி, திருச்செந்தூர் இந்த நான்கு தாலூகாக்களை சேர்த்து வடக்கு ஜில்லாவாகவும் மீதிப் பகுதிகளை தெற்கு என்றும் இரண்டு ஜில்லாக்களாக பிரித்திருக்கிறார்கள். அந்த முறை சரியல்ல. அப்படி இல்லாமல் அந்த ஜில்லாவை கிழக்கு, மேற்கு என்று பிரித்து அவைகளுக்கு திருநெல்வேலியில் தலைமை காரியாலயத்தை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கவர்னர் அவர்கள் ராஜ்ய நிலைமையைப்பற்றி கண்ணாடிபோல் எடுத்துக்காட்டியிருக்கிறார். அப்படி எடுத்துக்காட்டி சபைக்குக் கொடுத்திருக்கிறார். அதற்கு அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI T. P. ELUMALAI :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் இந்த சபையில் ஆற்றிய உரையை வரவேற்றும், அந்த உரைக்கு நன்றி செலுத்தும் தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகளைச் சொல்லப் பிரியப்படுகிறேன். தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி இந்நாட்டில் துவங்கி அதன் சார்பில் ஏற்பட்ட எண்ணற்ற போராட்டங்களில் ஈடுபட்டு நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக்கொடுத்திருக்கிறது. அப்படி சுதந்திரம் வாங்கிக்கொடுத்த பிறகு இந்த நாட்டில் ஓர் அளவு கணிசமான முன்னேற்றத்தை மக்கள் அடைந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதை யாரும் மறுப்பதற்கு முடியாது. அப்படி அடைந்த சுதந்திரத்தால் நாட்டில், அதைப்பற்றி நன்கு

[Sri T. P. Elumalai] [10th December 1959

அறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் வேண்டிய சுதந்திரத்தை அள்ளிக்கொடுத்து அவர்களும் சட்டசபையில் வந்து உட்கார்ந்து கொண்டு, மக்களிடத்தில் இருக்கிற குறைகளை எடுத்துப் பேசுகிற வாய்ப்பையும் கொடுத்திருக்கின்றது காங்கிரஸ், என்பதையும் யாரும் மறுக்க முடியாது. மேலும் காங்கிரஸ்காரர்கள் இந்நாட்டில் நல்ல வேலைகளையும் செய்திருக்கிறார்கள். இன்னும் செய்துவந்த வேலைகளில் குறுக்கீடு இல்லாமலும் குதர்க்கமான வார்த்தைகளைப் பேசாமலும் இருந்திருந்தால் மேலும் வேலைகளைச் செய்து நல்ல முன்னேற்றத்தையும் கண்டிருக்கலாம். கிராமங்கள் முன்னேற்றமடைவதற்கு பலர் உதவியாக இருந்தார்கள். காங்கிரஸ் ஊழியர்களுடைய ஒத்துழைப்பை அதிகம் பெற்று நல்ல காரியங்களையும் செய்திருக்கின்றது. குறிப்பாகப் பார்க்கப் போனால் கிராமங்களில் நல்ல வேலைகள் நடத்திருக்கின்றன. கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் ஏழை மக்களுக்கு நல்ல வேலைகள் செய்திருப்பதைப் பார்க்கலாம். வேலைகள் நடந்திருப்பதை கிராமங்களில் சிலர் உணர்ந்து கொள்வதற்கு முடியாமல் இருக்கிறார்கள். செய்ய வேண்டிய பல வேலைகள் கிராமங்களில் செய்திருப்பதோடு இன்னும் எவ்வளவோ வேலைகள் செய்ய வேண்டியதாக இருக்கிறது. பல கிராமங்களில் ரோடுகள் போட வேண்டியதாக இருக்கிறது; பல கிராமங்களில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. சில கிராமங்களில் குடிமனை வாங்கிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் கொடுக்க வேண்டும். இப்படி திட்டங்களைப் போட்டு பல காரியங்களைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இப்படி நிறைவேற்றும் காலத்தில், திட்டங்களுக்கு விரோதமான பிரசாரமும், வேலைக்கு ஒத்துழையாமையும் இல்லாமல் இருந்தால், தமிழ் நாட்டில் எவ்வளவோ முன்னேற்றத்தைக் கண்டிருக்கலாம். குறுக்கிடுவதும் சட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தடை செய்வதுமாக இருந்தால் அது இந்த நாட்டிற்குச் சரியல்ல என்பதை நான் இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தமிழ் நாடு முன்னேற்றமடையவில்லை என்று சொல்லுகிறார்கள். எந்த வகையில் முன்னேற்றமடைவில்லை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்றைக்கு என்னைப்போன்ற சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இந்த சட்டசபைக்கு வந்து பேசக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்நாட்டிலுள்ள பாதி மக்களுக்கு மேல் எந்த அளவு முன்னேற்றமடைய வேண்டுமோ அந்த அளவு முன்னேற்றமடைந்துதான் இருக்கிறார்கள். உண்மையாகப் பார்க்கப்போனால் இன்றைக்கு நமது நண்பர்கள் கனம் அன்பழகன், கனம் ஆசைத்தம்பி அவர்கள் இந்த சட்டசபையில் வந்து உட்கார்ந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை இங்கே சொல்லக்கூடிய வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அதற்குக் காரணம் நாம் பெற்ற சுதந்தரம் தான். மேலும் இந்நாட்டில் துவங்கிய காங்கிரஸ் தானே இதற்குக் காரணம். இதை எல்லோரும் கொஞ்சம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இந்நாட்டிற்கு வேண்டிய சுதந்தரத்தை இந்தக் காங்கிரஸ் வாங்கிக் கொடுத்திருக்கிறது.



10th December 1959]

**Sri A. V. P. ASAITHAMBI :** வெள்ளைக்கார ஆட்சியில் கூட இந்த உரிமையை எல்லோரும் பெற்றிருந்தார்கள், நாங்களும் பெற்றிருந்தோம்.

*** Sri T. P. ELUMALAI :** அப்பொழுது பெரிய பணக்காரர்களும் ஜமீந்தார்களும்தான் பதவியில் இருந்தார்கள். அதைப் பார்த்தால் இன்றைய தினம் முன்னேற்றமடைந்திருக்கிறோம் என்று தான் சொல்லலாம். அந்த காலத்தில் எவ்வளவோ ஏழை மக்கள் தங்களுடைய குடும்பங்களைக் கூட சுயமரியாதையோடு நடத்த முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நிலைமை இப்பொழுது எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் இந்த அரசாங்கம் எவ்வளவோ நன்மைகளைச் செய்து கொடுத்திருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது உண்மையிலேயே இந்நாட்டில் நல்ல சுதந்திரத்தால் முன்னேற்றம் பெற்றிருக்கிறோம் என்பதைப் பார்க்கலாம். ஆகவே, நாம் பெற்றிருக்கக்கூடிய சுதந்திரத்தை நல்ல அளவில் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. மனிதன் இவ்வளவுதான் சாப்பிடவேண்டும், இவ்வளவு தான் வேலை செய்ய வேண்டும் என்று இப்படியெல்லாம் பல சட்ட திட்டங்களைப் போட்டுக்கொண்டிருந்தால், அந்த முறையில்தான் இந்த ராஜ்யத்தை நடத்த வேண்டும் என்று சொன்னால், அது சுதந்திரம் என்று நினைத்துக்கொள்ள முடியாது. அவரவர்கள் தங்களுடைய வாழ்க்கையை எப்படி நடத்திக்கொள்ள வேண்டும் என்ற அளவில் நாம் இப்பொழுது அவர்களுக்கு சுதந்திரம் கொடுத்திருக்கிறோம். இந்த நிலைமையில் இந்த சுதந்திர நாட்டில் எல்லாவற்றையும் உடனே தேசீய மயமாக்கிவிட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். உதாரணமாக, பஸ் போக்குவரத்தை தேசீய மயமாக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படி உடனே செய்து விட முடியாது. அதற்கு தொழிலாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். அதன் மேற்பார்வையில் இருக்கக்கூடிய அத்தனை சிப்பந்திகளும் அதில் ஒத்துழைக்க வேண்டும். அப்படி இல்லாமல் அவசரமாக, தமிழ் நாடு பூராவும் தேசீய மயமாக்கினால் நாட்டிற்கு எந்தவித பயனையும் கொடுக்காது. இப்பொழுது சிட்டியில் பஸ் போக்குவரத்தை தேசீய மயமாக்கி அதைப்பற்றிய அனுபவம் ஓரளவு கற்றுக்கொண்டு வருகிறோம். அது இப்பொழுது சிறு குழந்தைப் பருவத்தில்தான் இருக்கிறது. குழந்தை பருவத்திலிருந்து அது வளர்ந்துகொண்டு வருகிறது. நண்பர் கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சொன்ன மாதிரி எல்லாவற்றையும் தேசீய மயமாக்கி விட வேண்டும் என்று சொன்னால் காங்கிரஸ் கட்சியை நெருக்கடியான நிலைமைக்குக் கொண்டு போய்விடும், அதற்குத் தான் எதிர்கட்சி முயற்சி செய்கிறார்கள். இப்பொழுது தான் தேசீயத்தில் அனுபவத்தை நாம் பெற்றுக்கொண்டு வருகிறோம். அது இப்பொழுது குழந்தைப் பருவத்தில்தான் இருக்கிறது. எல்லாவற்றையும் உடனே தேசீய மயமாக்கிவிட்டால் நாம் பெற்ற சுதந்தரத்தை சரியான முறையில் அனுபவிக்க முடியாது. நாம் பெற்ற சுதந்தரத்தை மக்கள் அனுபவிக்க வேண்டும் என்று

இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ளப் பிரியப்படுகிறேன். மேலும் கவர்னர் பெருமான் அவர்கள் நல்ல உரையாற்றியிருக்கிறார்கள். பேசும்போது சில அங்கத்தினர்கள் சொன்னார்கள், ஹரிஜனங்களையும், பிற்பட்ட மக்களையும் பற்றி எதுவும் கவர்னர் உரையில் சொல்லவில்லை என்பதாக. "சொல்லாமல் செய்வார் பெரியோர், சொல்லியும் செய்யார் சிறியோர்" என்று சொல்வது உண்டு. நமது கவர்னர் பெருமான் சார்பில் ஹரிஜன மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் இந்தச் சர்க்கார் செய்து வருகிற நன்மைகளைப் பற்றி உரையில் சொல்லாவிட்டாலும் இந்த சர்க்காரால் செய்து வரப்படுகிற நன்மைகள் கொஞ்சநஞ்சமல்ல. இவற்றைப்பற்றி வார்த்தைகளால் சொல்ல வேண்டும் என்பது இல்லை. இனியும் தொடர்ந்து செய்து வரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக கனம், ஆசைதம்பி சொன்னமாதிரி தேசியமயமாக்கவேண்டும் என்பதற்காக, பஸ் போக்குவரத்தை தேசியமாக்கக் கூடாது. இந்த நிர்வாகத்தில் பலருடைய ஒத்துழைப்பு வேண்டியதாக இருக்கிறது. பலருடைய நல்லெண்ணம் வேண்டியதாக இருக்கிறது. சினிமாத் துறையை தேசியமாக்கிவிடலாம் என்று நான் யோசனை கூற விரும்புகிறேன். சென்னையிலும் அதற்குத்தான் மார்க்கெட் இருக்கிறது. திடீரென்று ஒருவர் லட்சாதிபதியாகவும் பணக்காரராகவும் ஆகிவிட முடிகிறது. ஒரு சிலர் பரம ஏழையாகவும் போய் விடுகிறார்கள். ஆனால் இன்றைய தினம் அதிகப் பேர் பணக்காரர்களாகத்தான் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்—அவர்கள்தான் கண்ணுக்குத் தெரிகிறார்கள்) சினிமாத் துறையை தேசிய மாக்கிவிட்டால் சர்க்காருக்கு நிறைய வருமானம் வரும். சர்க்கார் அந்த வகையில் வருமானத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. சுதந்தர சர்க்காரிலே எல்லா மக்களும் ஓரளவு நல்ல முறையில் சுகாதாரத்தோடுதான் வாழவேண்டும் என்பதற்கு எல்லா மக்களும் வழி காட்டியாக இருக்க வேண்டும். குறிப்பாக சென்னை நகரத்தைப் பார்க்கிறபோது இன்னமும் பெருவாரியான ஜனங்கள் நடைபாதையில் வாழ்கிற அவல நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். நடைபாதை ஓரங்களில் வாழ்கிறவர்களும் இந்திய மக்கள்தான். சுதந்திர நாட்டுப் பிரஜைகள்தான். அவர்களுக்கு இருக்கக்கூடிய அவல நிலைக்கு நாம் எல்லாம் வெட்கப்பட வேண்டியதாக இருக்கிறது. நாம் எல்லோரும் அவமானப்படுகிற அளவுக்கு அந்த காட்சி அளிக்கிறது. ஆகையால் நடைபாதையில் வசிக்கக்கூடிய மக்களுக்கு நாம்தான் அதிக வசதிகளைச் செய்து கொடுத்து அவர்கள் விரும்பாவிட்டாலும் கூட அவர்களை நல்லதொரு இடத்திற்குக் குடியேற்ற வேண்டும். அதற்குத் தக்க நடவடிக்கைகளை இந்தச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் எல்லாம் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.





நமது ஜனநாயக சர்க்கார் நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு உச்ச வரம்பு சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது. உச்ச வரம்பு சட்டத்தைக் கொண்டு வருவதற்குள்ளாகவே அதற்கு உச்சமான எதிர்ப்பு இருப்பதையும் பார்க்கிறோம். நல்ல காரியம் செய்ய வேண்டுமென்றால் அதற்கும் ஏராளமான எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்கின்றன. அதற்கென்றும் சில கட்சிகள் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. நல்லது எது, கெட்டது எது என்று பிரித்துப் பார்க்கிற அவகாசம் இந்த நாட்டு மக்களுக்கு இன்னமும் ஏற்படவில்லை. ஆகவே, அந்த மாதிரி இல்லாமல் இந்த நாட்டு மக்களின் நலனுக்காக செய்யப்படுகிற அத்தனை காரியங்களையும் கட்சிப் பாகுபாடு இல்லாமல் எல்லோரும் ஆதரிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*SRI S. R. MUNUSWAMY: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கவர்னர் பெருமானின் உரை மீது ஏழைகளின் கட்சியாக இருக்கிற எங்கள் குடியரசு கட்சியின் சார்பாக என் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது இங்கே கவர்னர் உரையின் மீது பல அங்கத்தினர்கள் பேசியபோது எல்லோரும் யுத்தத்தை எதிர்நோக்கிப் பேசுவது போல இருந்தது. கவர்னர் உரையும் அந்தத் திசையை நோக்கிச் சென்றிருக்கிறது. யுத்தம் வரும், யுத்தம் வந்தால் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து நாட்டைக் காக்கவேண்டியது அவசியம் என்கிற போக்கு ஒரு பக்கம் இருப்பது போல, யுத்தம் வரும், யுத்தம் வந்தால் நம் பணப்பெட்டி நிரம்பும் என்று பணக்காரர்கள் தங்கள் கஜானாவைக் கடைக்கண்ணால் பார்த்து சிரிப்பது போலவும் இருக்கிறது. ஆனால் யுத்தம் என்று வந்தால் யாரை பாதிக்கும்? சென்ற யுத்த காலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் யார்? ஏழைகள்தான், எண்ணற்ற ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள்தான் சொல்லொணா துயருக்கு உள்ளாவார்கள். இந்த நாட்டிலே எந்த போராட்டம் எழுந்தாலும் சரி, எத்தகைய யுத்தம் வந்தாலும் சரி, ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்கள்தான் முதலில் பலி கொடுக்கப்படுகிறார்கள். சென்ற யுத்த காலத்தில் மாண்டவர்களை கணக்கெடுத்துப் பார்த்தாலும் இவர்களது எண்ணிக்கைதான் அதிகம். ஆகவே, கடைக்கண்ணால் பணப்பெட்டியைப் பார்க்கிறவர்களுக்கு யுத்தம் வராதா, யுத்தம் வராதா என்ற எண்ணம் இருந்தாலும் கூட யுத்தம் வந்தால் அழிந்து போவோம் என்கிற எண்ணம் ஏழைகளுக்கு இல்லாமல் இல்லை. யுத்தம் வராது தவிர்க்கவேண்டும் என்கிற துடிப்பு இல்லாமல் இல்லை. ஆகவே, ஏழை மக்களை பலியிடுவதற்குக் களமாக, தங்கள் கஜானாவை நிரப்பிக்கொள்வதற்கு சந்தர்ப்பமாக யுத்தத்தை உண்டு பண்ணாமல் இருக்கவேண்டும் என்பதாகத்தான் நான் எல்லோரையும் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

[Sri S. R. Munuswamy] [10th December 1959

அடுத்தபடியாக, கவர்னர் பெருமான் உரையை எடுத்துப் பார்ப்போம். அவர் யார்? இந்த நாட்டுக்குத் தலைவன், பாதுகாவலன், மத்திய சர்க்காரால் அனுப்பப்பட்ட பாதுகாவலன், அதாவது மைனாரிடி சமூகத்தை காப்பாற்றுவதற்குக் கடமைப்பட்டவன் என்றெல்லாம் நினைக்கிறோம். ஆனால் அவர் இந்தப் பேரவையில் தம்முடைய உரையை நிகழ்த்துகிறபோது மைனாரிடி மக்களாகிய தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்போக்கு மக்கள் எந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எந்த நன்மை செய்யப்பட்டிருக்கிறது? அவர்களுடைய நிலை என்ன என்பதைப்பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. இந்த அரசாங்கத்தை அந்த ஏழை எளிய மக்கள் எப்படி நம்பி வாழ்ந்து கொண்டிருக்க முடியும் என்று நான் கேட்கிறேன். வார்த்தைகளிலே கூட அனுகூலமாகப் பேச முடியாதவர்களால் என்ன நன்மை செயலிலே விளைந்துவிடப் போகிறது என்றுதான் வருந்துகிறார்கள்.

அடுத்தாற்போல உணவுப் பிரச்சனையைப் பற்றி கவர்னர் அவர்கள் சொல்லி மிகுந்த கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு நம் நாடு எந்த நிலையில் இருக்கிறது. விவசாயத்திற்கு வேண்டிய உரங்கள், கருவிகள் எல்லாம் அந்நிய நாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. இன்றைக்கு விவசாயத்திற்கு வேண்டிய டீசல் ஆயில் வெளி நாட்டிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. இப்படி நம் நாட்டு விவசாய வருமானம் பூராவும் அந்நிய நாட்டுக்குப் போய்ச் சேர்ந்துகொண்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் பிறநாட்டை எதிர்பார்த்துக்கொண்டு நாம் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதைப்பற்றி கவலைகொள்ளாமல் எப்படி இருக்க முடியும்? ஏன் நம் நாட்டிலேயே உரத்தை உற்பத்தி செய்துகொள்ளக்கூடாது? ஏற்கனவேயே ஸ்தல-ஸ்தாபன அமைப்புத் திட்டத்தில் உரத்தை உற்பத்தி செய்வதற்காக ஒரு திட்டம் இருக்கிறது. அரசாங்கத்தில் இருந்தும் கடன் கொடுத்து உதவுகிறார்கள். இத்தகைய ஒரு திட்டம் இருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்ளலாமே தவிர நடைமுறையில் எது எவ்வாறு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஓர் ஆண்டு காலமாக நான் தலைமை வகிக்கிற பஞ்சாயத்தின் மூலமாகத் தீர்மானம் போட்டு அதற்கு வேண்டிய உதவிகளை எங்களுக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இன்றுவரை எங்களுக்கு எவ்வித உதவியும் அளிக்கப்படவில்லை. நம் சர்க்கார் கொஞ்சம் நிதானமாக ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. சர்க்கார் நிர்வாகம் அத்தனை மெள்ளமாகப் போவதனால்தான் எல்லாவிதமான கஷ்டமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுபோலவே டீசல் ஆயில் கஷ்டத்தைப் போக்க மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டும். மின்சாரத்தை எங்கள் பகுதியில் விஸ்தரிக்க வேண்டும் என்பதற்காக இரண்டாண்டு காலமாகப் போராடுகிறோம். ஆனால் அங்கே உள்ள கார்ப்பரேஷன் சொல்லுகிறது என்ன, நாங்கள் லோன் கேட்டிருக்



10th December 1959] [Sri S. R. Munuswamy]

கிறோம், இன்னும் கிடைக்கவில்லை, அது வந்தால்தான் விஸ்தரிக்கலாம் என்று சொல்லக்கூடிய நிலைமை இன்று நேற்று அல்ல, இரண்டாண்டு காலமாக இருக்கிறது. அப்படி இருந்தால், விவசாயம் எந்த முறையில் வளர்ச்சி அடையும்? நம் நாட்டுச் செல்வம் தான் உரம் வாங்குவதற்காகவும், விவசாயக் கருவிகள் வாங்குவதற்காகவும், டீசல் எண்ணெய்க்காகவும் அந்நிய நாட்டுக்குத்தான் போய் சேருகிறது. நம்முடைய கச்சாப் பொருள்களை நாமே பயன்படுத்தத் தெரியாமல் பிற நாட்டை இன்றைக்கு எல்லாச் சாமான்களுக்காகவும் கையேந்தியிருக்கிறோம்.

அந்த நிலையில் நாமே நம்மை தயார் செய்து கொள்வதற்கு தகுதியிருக்கிறது. அதை உண்டாக்கிக் கொடுக்க சர்க்கார் வசதி செய்து கொடுக்கவில்லை. இன்றைக்கு சொல்லப்படுகிறது, 2,000-க்கு மேல் நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன என்று. எங்கு இருக்கிறது? நகரப்புறங்களில் இருக்கின்றன. பணக்காரர்கள் வாழும் பட்டிணங்களில்தான் அவை இருக்கின்றன. ஏழை மக்களாகிய விவசாயிகள் வாழும் இடங்களில் அவைகள் கிடையாது. ஒரு படி

3 30 p.m.

அரிசிக்கு காலை 4 மணிக்கு எழுந்து க்யூவில் போய் நிற்கவேண்டியிருக்கிறது. அதனால் அந்த ஏழைக்கு பாதி நாள் வேலை போய் விடுகிறது அப்படியாக பாதி நாள் உழைப்பினால்தான் அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். நியாயவிலைக் கடைகள் மூடப்பட்டு விடுமென்று சொல்லுகிறார்கள். நாட்டுப் புறங்களில் அவைகள் திறக்கப்படவேண்டுமென்று அடிக்கடி நாங்கள் கலெக்டரிடம் சொல்கிறோம். ஆனால் அவை கவனிக்கப்படுவதில்லை. கூட்டுறவு சங்கங்கள் வழி அவை கொடுக்கப்படுகின்றன. ஆனால் கூட்டுறவு சங்கங்கள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் கிடையாது, பிற்பட்ட மக்கள் வசிக்கும் இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் கிடையாது. பணக்காரர்கள்தான் கூட்டுறவு சங்கங்களில் இருக்கிறார்கள். கூட்டுறவு சங்கத்தினால் ஏற்படுகிற சலுகைகளையெல்லாம் பணக்காரர்கள்தான் அனுபவிக்கிறார்களே தவிர அது ஏழை மக்களுக்கு கிடைப்பதில்லை. ஆகவே தனியார் துறையில் நியாயவிலை கடைகளை கிராமங்களில் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியில்லாவிட்டால் நம் நாட்டில் பஞ்சம் பெருகிக்கொண்டேதான் போகும். நாம் நம்மை தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமானால் அதை சர்க்கார் உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் உலகத்தையே அழித்து விடுவோம் என்று பாரதி சொன்னபடியா சர்க்கார் நடக்கிறது. எதற்கும் சர்க்கார்தான் காரணம் ஒருவன் பட்டினி கிடக்கிறான் என்றால் அதற்குக் காரணம் சர்க்கார்தான். வேலையில்லாத் திண்டாட்டம், உணவு இல்லாத் திண்டாட்டம் எல்லாம் சர்க்கார் கையில்தான் இருக்கிறது. ஆக, இதைப் பற்றி நான் அதிகமாக பேசப் போவதில்லை. நான் பேசுவதை மாற்றுக் கட்சியினர் வித்தியாசமாக எடுத்துக் கொள்ளலாம். எஸ். ஆர். முனிசுவாமி என்றால் எள்ளி நகையாட எத்தனையோ ஏடுகள் இருக்கின்றன. நான் மந்திரிகளை சுற்றி வருகிறேன் என்கிறார்கள். எனக்கு ஒரு மந்திரியும் பழக்கம் கிடையாது, ஒருவரும் எனக்கு

சொந்தக்காரரும் அல்ல. இப்படிச் சொல்வதற்கு என்று ஒரு ஏடு இருக்கிறது. எங்கள் இயக்கத்தை ஒழிக்க வேண்டும், தாழ்த்தப்பட்டவர்கள் தனிப்பட்ட ஒரு உணர்ச்சியைக் கொண்டு விட்டால் போட்டி போடவோ அல்லது போராட்டம் தொடக்கவோ ஆள் கிடையாது. ஆதிக்கத்தின் பெயரால் தப்பான காரியங்களை சொல்லி மக்களிடையே எங்கள் இயக்கம் பரவாமல் தடுத்து வருகிறது. ஆகவே நான் சொன்ன ஒன்றிரண்டு விஷயங்களைச் சர்க்கார் கவனித்து நியாயவிலைக் கடைகளை கிராமங்களில் திறந்து கொடுத்து அடுத்தாற்போல் உரங்களை கிராமவாசிகளுக்கு பஞ்சாயத்து மூலம் அதை தயார் செய்ய வாய்ப்பு அளித்தும், அடுத்தபடியாக மக்களின் எல்லா கஷ்டங்களையும் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **SRI K. B. S. MANI** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரையையொட்டி அவரது உரைக்கு நன்றி கூறும் முகத்தால் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக சபையில் பேசப்படுகிற பேச்சுகள் ஏதோ சபைக்காக வேண்டிய அலங்கார பேச்சுக்களாகவே 99 சதவீதம் இருந்து வருகிறது. இருப்பினும் கடமை என்ற முறையில் அவரவர்கள் உள்ளத்தில் எழும்புகிற எழுச்சிகளை இம்மன்றத்தில் தெரிவிக்க வேண்டுமென்ற முறையில் ஒரு சில நிமிட நேரத்தை பயன்படுத்த நான் நினைக்கிறேன். பொதுவாக ராஜ்யத்தின் பொதுவான நிலையையும், கவர்னரது பேருரையையும் ஒத்திட்டுப் பார்க்கும்போது இந்த ராஜ்யம் எந்தளவிற்கு முன்னேறியிருக்கிறது என்றால் 60 சதவீதம் முன்னேறியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படியில்லையென்று எதிர்கட்சித் தோழர்களும், மற்றைய பேரறிஞர்களும் கூற முடியாது. உண்மையிலேயே முன்னேற்றம் இருக்கிறது. ஆனால் இன்னும் முன்னேற்றம் தேவைப்படுகிறது என்றுதான் அர்த்தப்படுகிறது. ஆனால் வளர்ச்சிக்கு தகுந்த அளவிற்கு கொடுத்துவிடுவதற்கு போதுமான ஆகார வசதி, மற்றைய சௌகரியங்களும் நமக்கு இல்லாததின் காரணமாக அந்த அளவிற்கு இங்குள்ள எதிர்க்கட்சி பிரதிநிதிகளோ அல்லது ஆளும் கட்சி பிரதிநிதிகளோ, அவர்களின் மன வேகத்தின் அளவிற்கு நாட்டின் முன்னேற்றத்தை கொண்டு போக நம்மிடத்தில் சகல துறைகளிலும் பொருளாதாரத்திலிருந்து உணவுப்பொருள்கள் வரையில் பற்றுக்குறை இருக்கிறது. நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு போகக் கூடாது என்ற எண்ணத்தினால் அல்ல. உதாரணமாக ஒரு சிறு குறிப்பு சொல்ல வேண்டுமானால் நமது உணவைப் பொறுத்த வரையில் தனி மண்டலம் வேண்டுமென்று கேட்டபோது மத்திய அரசாங்கம் அதைக் கொடுத்திருந்தால் உணவுப் பற்றுக்குறை இந்த நிலையில் இன்று வந்திருக்காது, மூட்டை ஒன்று 48 ரூபாய்க்கு விற்கும் அளவிற்கு வந்திருக்க முடியாது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அதை எடுத்துச் சொல்வதற்குத்தான் சில இடையூறுகள் இருக்கின்றன. மேலே இருக்கிறவர்களின் தலையீட்டால் முன்னேற்றக் காரியங்களுக்கு தடை ஏற்படுகிறது. போனது





போகட்டும் வருவதைப் பார்ப்போம் என்றால் வர இருக்கிற நில உச்சவரம்பு பற்றி பேசும்போது, அதற்கு பொறுப்புள்ளவர்களாக இருப்பவர்கள், இன்னும் அதில் மிக முக்கிய பங்கு எடுத்து நடத்துகிறவர்கள், நாட்டின் நலன் குறித்து இரவும் பகலும் வாதம் செய்து வெற்றி காணவேண்டுமென்று எண்ணுகிறவர்கள் இவர்கள் தான் அதற்கு தடையாக நிற்கிறார்கள். நமது மாகாணத்தை எடுத்துக் கொண்டால் உள்ள நிலத்தின் மூன்றில் ஒரு பாக நிலம் கோவில்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும்தான் சொந்தமாகயிருக்கிறது. அவைகளின் வரலாற்றை திரையிட்டு மறைத்து அரசாங்கத்தின் கண்ணில் மண்ணைப் போட்டு மறைக்கப் பார்க்கிறார்கள், தர்ம ஸ்தாபனங்களின் பெயரில் நிலத்தை வைத்துக் கொண்டு லட்சக்கணக்கான ரூபாய்கள் கொள்ளையடிக்கப்படுகிறது. இந்த நாட்டில் என்பதை எடுத்துக் காட்ட முடியும். இப்பொழுது ஒரு வருடத்திற்குள்ளாக ஏற்பட்டிருக்கிற பாலிடெக்னிக், காலேஜ்கள், ஹைஸ்கூல்கள் இவைகளுக்கு எவ்வளவு நிலங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அதன் டாகுமெண்டஸ் எப்படியிருக்கிறது என்று பார்க்கவேண்டும். ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு தொகை அல்லது எவ்வளவு ஏக்கர் நிலம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஒரு ஹைஸ்கூலை நிர்வகிக்க 2,000 அல்லது 3,000 ரூபாய்கள் வருடம் ஒன்றுக்குக் கொடுப்பதென்ற முறையில் அதற்கு 200 ஏக்கர் நிலம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், 200 ஏக்கர் நிலத்தின் வருமானம் ரூபாய் 2,000-மா? இவ்வளவு நிலம் இதற்காக எழுதி வைக்க என்ன அவசியம் இருக்கிறது? இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். அரசாங்கத்தை ஏமாற்றி லாண்ட் ஸீலிங்கை தவிர்க்க வேண்டுமென்று நினைக்கிற தஞ்சை ஜில்லாவிலுள்ள பணக்காரர்களின் பட்டியலை நான் கொடுக்க முடியும், ஒவ்வொருவரும் இப்படி எவ்வளவு எழுதி வைத்திருக்கிறார்கள் என்று. இதில் காங்கிரஸ் மஹாசபையிலிருந்து சாதாரண கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ளவர்கள் வரை எல்லோரும் இருக்கிறார்கள். ஆகவே, இதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். தண்ணீர்ப் பந்தலுக்காக பத்து வேலி எழுதி வைத்திருக்கிறார்கள். தண்ணீர்ப் பந்தல் வைப்பதற்கு பத்து வேலி அவசியமா? ஒரு பிள்ளையார் கோவிலிற்காக பத்து வேலி எழுதி வைத்திருக்கிறார்கள். ஒரு பிள்ளையார் கோவிலை வைத்து நடத்த பத்து வேலி நிலம் அவசியமா? ஒரு எலிமெண்டரி ஸ்கூல் நடத்துவதற்கு 20 வேலி எழுதி வைத்திருக்கிறார்கள், அதற்கு 20 வேலி அவசியமா? ஆனால் ரிக்கார்டுபடி அந்த ஸ்கூலுக்காக எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். இப்படியெல்லாம் அரசாங்கத்தை ஏமாற்றி வருகிறார்கள். இப்படி அரசாங்கம் ஏமாற்றப்படுமானால் இந்த லாண்ட் ஸீலிங் வருவதும், வராமல் இருப்பதும் ஒன்றுதான். இதைப்பற்றிச் சொல்லும்போது, ஆண்டவனின் தலைமேல் கை வைக்காதே என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், அசைய முடியாத ஆண்டவனுக்கு 20 வேலி நிலத்திலுள்ள வருமானம் தேவையா, அப்படி அசைய முடியாத ஆண்டவனுக்கு 20 வேலி நிலம் வேண்டுமென்றால் ஓடி ஆடி உழைக்கிற மனிதனுக்கு எவ்வளவு வேண்டும்? ஓடி ஆடி

[Sri K. B. S. Mani] [10th December 1959

உழைத்து பாடு பட்டு உழைப்பவனுக்கு கஞ்சிக்குக் கூட போக்கில்லாமல் இருக்கும்போது ஆண்டவனுக்கு என்ன வேண்டிக் கிடக்கிறது? பாடு பட்டு உழைத்தும் கூட ஒன்றும் கிடைக்காமல் மனிதன் அழிந்து போவது நல்லதா அல்லது ஒன்றும் செய்யாமல் ஆடாமல் அசையாமல் இருக்கும் ஆண்டவன் அழிந்து போவது நல்லதா என்று ஆலோசிக்க வேண்டும். இதை நான் சொல்லவில்லை, பல பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆண்டவனுக்கு அவசியமற்ற பொருள்கள் தேவையா? கிறிஸ்தவ மதத்தை எடுத்துப் பார்த்தால் ஆண்டவனே சொல்லியிருக்கிறார், "மகனே, உன் நெஞ்சை எனக்குத் தாராயோ" என்று. ஆண்டவன் தனக்கிருப்பதற்காக சிதம்பரத்தில் தங்கக் கூரையும், ஸ்ரீரங்கத்தில் தான் அணிந்து கொள்வதற்கு வைர மாலைகளும் கேட்கவில்லை. ஆண்டவனின் பெயரைச் சொல்லிக் கொண்டு மனிதர்கள் மனிதர்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டவன் பெயரைச் சொல்லிக் கொண்டு மக்களை இதுவரை ஏமாற்றியது போதும். இனியாவது மனிதனே கடவுள் என்றும் எவன் ஒருவன் உழைக்கிறானோ அவனே இந்த நாட்டின் கடவுள் என்ற எண்ணத்தில் லாண்ட் ஸீலிங்கைக் கொண்டு வர வேண்டும்.

இந்த நிலைமையில், இன்றைக்குத் தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக் கொண்டால் இரண்டு மூன்று மிராசுதார்கள்தான் தங்களுடைய நிலங்களை எல்லாம் பிரித்துக்கொடுக்காமல், சர்க்கார் என்ன முடிவு செய்கிறதோ அதே போல் செய்யலாம், வருவது வரட்டும் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பாக்கியுள்ளவர்கள் எல்லாம் தங்கள் சொத்துக்களைப் பலவிதத்தில் பிரித்துக் கொடுத்து விட்டார்கள். சமீபத்தில் கூட சீர்காழியில் புருஷனும் மனைவியும் தங்களுக்குள் ஒற்றுமையில்லை என்று காட்டி "டைவர்ஸ்" செய்திருக்கிறார்கள்,—ஜி. டி. நாயுடு முறை—இவ்விதம் டைவர்ஸ் செய்து கொடுத்துவிட்டு அவர்களுக்கும் தனியாக நிலங்கள் இருக்கவேண்டும் என்று பிரித்துக்கொடுத்துவிட்டு அவர்கள் எல்லோருமே சேர்ந்துதான் இருக்கிறார்கள். பாகப்பிரிவினை செய்ய வேண்டும் என்று பல விதங்களிலும் நிலங்களை எல்லாம் பிரித்துக்கொடுத்துவிட்டார்கள். இவ்விதம் தகப்பன் வேறு மகன் வேறு என்றும், கணவன் வேறு மனைவி வேறு என்றும், கூறி நிலங்களை எல்லாம் பங்கிட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் சீர்காழியில் நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் அரசாங்கம் நன்றாக கவனிக்கவேண்டும். இல்லையென்றால் அரசாங்கத்தை எந்த விதத்திலாவது ஏமாற்றி விடலாம் என்ற இறுமாப்புடன் இருந்து வருவார்கள். அதுமட்டுமல்ல, தன்னுடைய அந்தரங்க காரியதரிசி என்றிருப்பவர்களின் பெயரில் தங்கள் நிலங்களை ரீ-ரெஜிஸ்ட்ரேஷன் செய்து விடுகிறார்கள். இவ்விதம் தவறான காரியங்களை எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். கீழ்த்தரத்தில் இருக்கின்றவர்கள்தான் இம்மாதிரியான காரியங்களை எல்லாம் செய்வார்கள் என்று ஜெயில் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆனால் இம்மாதிரி அரசாங்கத்தை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றவர்களை—அரசாங்கத்தை மட்டுமல்ல—இந்த நாட்டிலுள்ள தொழிலாளிகளையும் ஏமாற்றிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு எந்த தண்டனை கொடுத்தாலும் போதாது. அவர்களுக்கு



10th December 1959] [Sri K. B. S. Mani]

தூக்குதண்டனை ஒன்றுதான் கொடுக்க வேண்டும் அதல்லாமல் அவர்களுக்கு வேறு வழியே கிடையாது அதோடு அரசாங்கம் செய்கின்ற இம்மாதிரியான காரியங்களுக்கு எதிர்கட்சியிலுள்ளவர்கள் யார் யார் அரசாங்கம் செய்யப்போகின்ற காரியத்திற்கு எதிராக ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்களோ அவர்களை எல்லாம் சுட்டிக் காட்டி அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அரசாங்கம் என்றால் யாரோ நடத்துகிறார்கள் என்ற நினைப்புடன் இருந்து கொண்டிருக்கக் கூடாது, நாம் எல்லோரும்தான் அரசாங்கத்தை நடத்துகிறோம். எல்லோருமே அந்த பொறுப்பை ஏற்று நடத்துவதற்கு தயாராக வேண்டும். எல்லோருக்கும் இதில் பங்கு பெற உரிமை இருக்கிறது, அதற்காக போராடவும் உரிமையிருக்கிறது. இருப்பதை எல்லாம் வெளிப்படையாக உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக சொல்லிவிட வேண்டும், அதல்லாமல் அமைச்சர்களை மட்டும் குறை சொல்லிக்கொண்டிருப்பது சிறுமதியாளர்களுடைய செயல்தானே தவிர பெருமதியாளர்களுடைய் செயல் என்று கூற முடியாது. யார் தவறு செய்திருந்தாலும் சரி—ஆண்டவனே தவறு செய்திருந்தாலும் சரி—நீ செய்தது குற்றம் என்று சொல்லுவதற்குள்ள தைரியம் இந்த நாட்டிலுள்ள எல்லோருக்கும் வரும்போது எல்லோரும் சேர்ந்து இந்த நாட்டில் பெரிய காரியங்களை எல்லாம் சாதிக்க முடியும். அதற்காக இந்த நாட்டிலுள்ள எல்லா கட்சிகளும் முயற்சி செய்ய இறங்கிவிட்டால் இந்த நாடு சீக்கிரத்திலேயே முன்னேறிவிட முடியும். ஆகவேதான் இந்த நிலச்சீர்த்திருத்தச்சட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் ஏதோ அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் ஆண்டவனுக்காக நிலங்களை எழுதி வைத்திருக்கிறார்கள் என்று அவர்கள்மேல் அனுதாபம் காட்டி அவர்களை எல்லாம் விட்டு விடக் கூடாது. அவர்கள் இவற்றுக்கு எல்லாம் நிலங்களை விட்டுக் கொடுத்திருந்தாலும் அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதையெல்லாம் அங்குள்ள ஏட்டைப் புரட்டிப்பார்த்தால் தெரியும் அவர்களின் யோக்கியதாம்சங்கள் என்னவென்று. அதோடு மிராசுதார்கள் செய்து கொண்டிருக்கின்ற இன்னொரு காரியத்தையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும். அதாவது அரசாங்கம் சட்டம் கொண்டு வரப்போகிறது என்று சொல்லி மாவுக்கு ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய் என்று கொடுத்து விவசாயிகளை வெளியேற்றி விட்டார்கள். இவ்விதம் வெளியேற்றினது போகட்டும், இனி மேலாவது வெளியேற்றாவண்ணம் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதோடு மொத்த குத்தகைதார்கள் எல்லாம் இப்போது 100 ஏக்கர்கள், 50 ஏக்கர்கள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு வரையறை செய்யவேண்டும். இல்லாவிட்டால் இந்தச் சட்டம் கொண்டு வருவதினால் எந்த விதமான பயனும் கிடைக்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக சுயமரியாதை திருமணத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

(மணியடிக்கப்பட்டு பேச்சு முடிவுற்றது.)

*Sri A. A. RASHEED: Mr. Speaker, Sir, the Governor's Address to the Legislature had a mixed reception. It was hailed and applauded as being short and to the point by one section.

[Sri A. A. Rasheed] [10th December 1959

It was at the same time criticised and attacked as being too vague and also for measures of omissions and commissions by another section.

Sir, in the Address homage had been paid first for the welcome rains. In no other part of the world is so much importance paid to climate or nature.

THE HON. SRI C. SUBRAMANIAM: The hon. Member is completely wrong. If you would permit me, I hope you will permit me, I would interrupt the hon. Member and say this. Last time the representatives of the World Banks were in India and it was raining heavily here and I said to those members that it might have caused a bit of inconvenience to them. But the representatives said: 'We call this a hundred million dollar rain and we are glad you are having that rain'. Even in America, in that advanced country, they have to depend on the rains for their agricultural operations.

SRI A. A. RASHEED: Well, if the rains fail, let the Government use their brains by getting rains by artificial means. They in the other parts of the world are trying to get artificial rains. But we have not attached so much importance to that aspect of the matter.

SRI S. NAGARAJA MONIGAR: On a point of order, Sir. To say that the Government should use their brains as they do in other countries, is it not a sort of attack on the Government?

MR. SPEAKER: He said that Governments were using brains to get artificial rains in other countries. There is nothing wrong in it.

SRI A. A. RASHEED: I am sorry, Sir, I have come to that stage where my own party men are attacking me. (Laughter.)

MR. SPEAKER: That sometimes happens everywhere.

SRI A. A. RASHEED: Sir, more importance should have been given to tackle the rise in price of foodgrains. In the Governor's address only a passing reference has been made about it. It has also been stated that this is unavoidable due to the developing economy. The public are not interested in the causes for the rise in price of foodgrains. They want to know how the Government are going to solve this problem. They want to know the steps taken by the Government or the steps they propose to take to bring down the prices so that they may be within the reach of the masses. Conflicting statements have been made by not only members on our side but also by members on the other side that the price rise in respect of certain articles such as tamarind and sugar were due to felling of trees and due to exports of these articles. I would like to know specifically to what this is due to. Some others said that it was due to felling of tamarind trees. If it is due to felling of the trees, can we hope that the prices will come down in the near future. It cannot come down until the new trees



10th December 1959] [Sri A. A. Rasheed]

planted bear fruit. And should we wait till then for the price of tamarind to come down? If it is due to export the prices should come down as soon as we ban all exports. Therefore apparently the rise in prices is due to neither. I think the cause should be found somewhere else. I fear hoarding is the real cause for the rise in price of these articles of food. Let the Government ban the hoarding of foodgrains by interested parties so that the poor people may get these necessaries of life at reasonable prices.

Sir, our beloved Prime Minister recently said that in spite of the Rs. 900 crores that we spent on irrigation and agriculture we have not achieved self-sufficiency in food. What is this due to? I think as he has also correctly said, the poor agriculturists did not get much benefit out of it. It shows that although we have spent Rs. 9 crores, the person who should ultimately get the benefit has not really got it. We should remember this and see that whatever we intend doing to the poor, really reaches them. As regards the package deal, I understand from a report in the newspapers that Tanjore has been selected for the purpose. I cannot understand why the Government should select Tanjore. It is already producing enough and more. This scheme should have been introduced in places where food production is low, in places like North Arcot district and others. (An hon. Member why not Kanyakumari district.) In places where the production is low, we must introduce better seeds, better cultivation methods and show to the people that production could be increased with the same irrigation facilities. If that is done, definitely the food problem in that part of the State could be solved.

Sir, the Hon. Minister for Public Works said last year that a barrage would be constructed somewhere near Wallajah either before the end of the Second Five-Year Plan period or early in the Third Plan period. But no mention has been made in the Address regarding the barrage and our North Arcot district remains as it has been ever a dry and forgotten district.

In the address hope has been expressed that the aluminium and the paper factories would be started. But nothing has been stated definitely when they will be started. Only pious hopes have been expressed in the Address. About the Neyveli Lignite Project also they have only expressed the hope but they have not stated when it will be established. Is it because they are sceptical about the outcome of it that they have not made any definite statement as to when it would be started? They could have said that it will be started in the first year of the Third Five Year Plan.

In regard to land ceiling the Governor has said that the Government are at it. Although I do not own any lands, I would like to say that the ceiling of 30 acres would be enough for a family. But I would like to know what the Government are going to do with the surplus lands after enforcing the ceiling. Are they going to hand over these to the landless poor or are they going to run them on a co-operative basis? If it is to be run

[Sri A. A. Rasheed] [10th December 1959

on a co-operative basis, I am afraid, Government cannot get contiguous areas of 50 to 100 acres, at one place. The Government should therefore look into this matter also. Let the public also be informed that the dragon of land ceiling is after all not a harmful creature with claws and teeth, but that it is a harmless creature with no teeth and no clafs.

Mention has been made in the Governor's Address that steps have been taken to explore the mineral possibilities in this State. It is high time we do it because all the other States are boasting that they have establishhed oil refineries and all that. Let us also tap the natural resources available in our State. If there are natural resources in our State let us also start oil refineries so that the supply may be perennial.

Sir, as regards electricity I am afraid the Electricity Board has failed to keep up the promise they made that the Kundah power house would be put into commission somewhere in October this year. We are now in December. I do not know the reason why it has not yet been put into commission. While discussing the Electricity Budget in our Ootacamund sittings, we were definitely told and promised that the power house would be put into commission in October of this year. We have yet to electrify 8,000 more villages. I do not know whether it could be done before the end of the Second Five Year Plan period or whether it would take more time.

Sir, I represent the tanning industry, yet nothing has been said in the Address about that industry. Year after year it has been the burden of my song to say something and yet the Government think it fit to ignore it completely although that industry earns for India Rs. 30 crores worth of foreign exchange every year. There are about 10,000 people employed directly and indirectly in the industry in the State. Yet loans are not granted to them without sufficient security. The security demanded is about double the amount of the loan asked for by them. This discrimination must go and Government should come forward to help the people in the industry in times of crisis.

Sir, let not the opposition party be complacent that they have done well by being in a majority in the Corporation. The condition of the roads in the city seems to indicate that they have failed in their duty to maintain them in good condition. I would request the Government to take over all these roads immediately and maintain them properly.

One word more and I will finish, Sir. A rebate on sales of Khadi is given only during the Deepavali season. I would request the Government to extend the rebate for the sales during Ramzan and Christmas seasons and not restrict it only to Deepavali. I would request the Government to consider the matter and see that the rebate is enjoyed by all the citizens of the State and not only by one section of the community. Thank you, Sir.



10th December 1959]

* SRI M. ANANDAN: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின்பேரில் எனது கருத்துக்களைத் தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். நமது ராஜ்யத்தில் காலாகாலங்களில் நல்ல மழை பெய்து ராஜ்ய மக்கள் க்ஷேமமாக இருப்பதாக கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார். வடகிழக்குப் பருவக்காற்று மழை காலத்தில் வந்துவிட்டதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். வடகிழக்குப் பருவக்காற்று மழையைக் குறிப்பிட்ட அவர் தென்மேற்குப் பருவக்காற்று மழையைப் பற்றி ஏன் குறிப்பிடவில்லை என்று நான் கேட்கிறேன். (சிரிப்பு). தென்மேற்குப் பருவக்காற்று மழை காலாகாலங்களில் பெய்வதில்லை. அதனால் எங்கள் கள்ளக்குறிச்சி பகுதியில் 1957-முதல் 1959-ம் ஆண்டுவரையிலும் மழை கிடையாது. பருவ மழை இல்லாததால் பயிர்களெல்லாம் காய்ந்து போயிருந்தன. பிறகு விளைச்சல் சமயத்தில் பெய்த பேய் மழை எங்கள் பகுதியில் 500 ஏக்கருக்கு நிலங்களை மண் மேடாகவும் மணல் மேடாகவும் ஆக்கிவிட்டது. கனம் அமைச்சர் நாளதுவரை 'இந்த இடங்களுக்கு வந்து இவைகளைப் பார்க்கவில்லை. சென்ற மாதம் 28-ம் தேதி பெய்த மழையில் கள்ளக்குறிச்சி தொகுதியில் சுமார் 500 வீடுகள் இடிந்து விழுந்து விட்டன. இவ்வாறு வீடு இடிந்ததால் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் வீடு ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம், சர்க்கார் உடனடியாக நிவாரணமாவது கொடுக்க வேண்டும். அப்படி பணம் கொடுத்தால்தான் அவர்கள் மீண்டும் வீடு கட்டி வாழ்க்கை நடத்த முடியும். இல்லாவிட்டால், ஏற்கனவே காலத்தில் மழை இல்லாததால் பயிர்களும் காய்ந்து போய்விட்டதால் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 500 அல்லது 1,000 பேர்கள் வெளியேறிவிட்டார்கள். சர்க்கார் இந்த நிவாரணத்தை உடனடியாக அவர்களுக்குக் கொடுக்கத் தவறினால் அங்குள்ள பாட்டாளிகளும், விவசாயிகளும், தொழிலாளர்களும் கிராமங்களை விட்டு வெளியேறத் தயாராயிருப்பார்கள் என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் விவசாயம் செய்யப்பட்டிருந்த நிலங்கள் மண்மேடு மணல் மேடாகப் பழுதடைந்திருக்கின்றன. பயிர்கள் கதிர் - சாவியாக இருக்கின்றன. கதிரில் ஒரு மணி உணவுகூட இல்லை. அவை அப்படி சாவியாக இருக்கின்றன. மூன்று, நான்கு நாட்கள் பட்டினியாக இருந்தவன் பிறகு சாப்பிட்டால் அஜீரணத்தால் வாந்தியெடுப்பது போல நெடுநாட்களாகக் காய்ந்திருந்த பயிர்கள் மழைக்குப்பின் சாவியாகப் போயிருக்கின்றன. பாய்ந்த வாய்க்காலாலே வடிந்துவிட்டது என்றதுபோல் ஏரியும் கால்வாயும் உடைந்து தண்ணீர் வெளியே போய்விட்டது. சர்க்கார் உடனடியாக ஏரிகளை கட்டிக் கொடுக்க வேண்டும்.

(Sri P. S. Santhanam in the Chair.)

கள்ளக்குறிச்சி வட்டத்தில் சாதாரணமாக ரஸ்தாக்களைப் பார்த்தாலும் பஸ் போக முடியாது. போக்குவர்த்து விஷயத்தில் ஜனங்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. பத்து அல்லது 12 வருஷங்களுக்கு முன்னால் அடித்த மழை மாதிரி, அப்போது அடித்த பேய் மழையினால் ஜாகீர் மலைப் பகுதியிலுள்ள ரஸ்தாக்களும் மற்ற நதிக்

[Sri M. Anandan] [10th December 1959

கரைகளும் உடைந்த மாதிரி இந்த ஆண்டிலும் அதே இடங்களில் உடைந்திருக்கின்றன. அரசாங்கம் தக்க வேலைகளைச் செய்து அங்குள்ள மக்களுக்கு நல்ல பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் மக்கள் நல்ல முறையில் வாழ முடியும் என்று அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்துகிறேன். மேலும் எங்கள் கள்ளக்குறிச்சி தொகுதியில் ஜாகீர் மலையடிவாரமாக ஆறுகள் வந்து கொண்டிருக்கின்றன. அங்கே ஏதாவது ஒரு பெரிய அணை கட்டினால் பேய் மழை அடித்தாலும் சேதம் இருக்காது. இதைப் பற்றி நான் பல தடவைகள் இந்தச் சட்ட மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். அந்த இடத்தில் ஐந்து அல்லது ஆறு ஆறுகள் வந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் இது விஷயத்தில் கவனம் செலுத்தி தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நமது மதிப்பிற்குரிய மின்சார அமைச்சர் அவர்கள் எங்கள் கள்ளக்குறிச்சி தொகுதிக்கு வந்தபோது ராமாராஜபுரம் கால்வாயை சீர்படுத்திக் கொடுக்கும்படி அங்கு இருந்த அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். அதிகாரிகள் உடனடியாகச் செய்து கொடுப்பதாகச் சொல்லியும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். இப்போது இவ்வளவு மழை அடித்தும் கால்வாயில் தண்ணீர் போகவில்லை. ராமாராஜபுரம் கால்வாயில் தண்ணீர் போகாமல் தூர்ந்துவிட்டது. உடனடியாகச் சீர் செய்யவும்.

எங்கள் தொகுதியில் ஹரிஜன மக்களும், விவசாயிகளும் ரொம்பவும் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். ஏன் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள் என்று கேட்டால் அவர்களுடைய பயிர்களெல்லாம் பூச்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பூச்சி மருந்துக்காக க்யூ வரிசையில் நின்றாலும் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் அந்த மருந்து பூச்சிகளைச் சரியாகக் கொல்லக்கூடியதாக இல்லை. பயிர்கள் பூச்சியினால் அழிந்துவிட்டாலும் இப்போது சர்க்கார் லோன் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மத்தளத்திற்கு இரண்டு பக்கங்களிலும் இடி என்ற மாதிரி விவசாயிகள் இரண்டு பக்கங்களிலும் இடி படுகிறார்கள். கிராமத்தில் இருந்தால் பஞ்சத்தால் வாடுகிறார்கள், அங்கு அதிகாரிகளிடம் சென்றால் லஞ்சத்தால் வாடுகிறார்கள். ஆகையால் அரசாங்கம் லஞ்ச ஊழலை முக்காலும் ஒழித்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், ஏழை விவசாயிகள் விவசாயம் செய்து வரி கட்ட முடியவில்லை, வாங்கிய கடனுக்கும் வட்டி கொடுக்க முடியவில்லை; மருந்து வாங்க முடியவில்லை; உரம் வாங்க முடியவில்லை; இப்படித் திண்டாடுகிற இந்த நேரத்தில் அங்கு சென்றால் அவர்கள் லஞ்சத்தினால் பாதிக்கப்படுகிறார்கள். அரசாங்கம் விவசாயிகளுக்கு தக்க பாதுகாப்பு கொடுக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ளவர்களுக்கு இந்த லஞ்ச ஊழலை ஒழித்து, அதோடு உடனடியாக உரம், புண்ணாக்கு, பூச்சி மருந்து இவைகளைக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



10th December 1959] [Sri M. Anandan]

அதோடுகூட ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் வகையில் தரிசு, புறம்போக்கு நிலங்களை அட்மானம் செய்ய வசதி செய்திருக்கிறார்கள். இருந்தாலும் இது உடனடியாக நடைபெறவில்லை. ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. அதை அரசாங்கம் உடனடியாக கவனித்து நிலங்களை வாங்கி ஹரிஜனங்களுக்கும், ஹரிஜனங்களல்லாத ஏழைகளுக்கும் கொடுத்து வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கூட எங்கள் தொகுதியில் விரியூர், ராமாராஜபுரம், பழவணூர், வடசிரலூர் என்ற ஊரைச் சுற்றிலும் 10 அல்லது 12 கிராமங்கள் இருக்கின்றன. பாண்டாலம் வழியாக சங்கராபுரம் போலீஸ் ஸ்டேஷன் வரவேண்டும், பஸ் ஸ்டாண்ட்டுக்கு வர வேண்டும் என்றால் ரோடு இல்லை. மேற்படி இடத்திற்கு ரோடு போடவேண்டும். இதை யெல்லாம் செய்தால் இந்த கிராமங்களிலுள்ள விவசாய மக்களுக்குப் போக்குவரத்து வசதியும் மற்ற வசதிகளும் கிடைக்கும். ஆகவே, இவைகள் விஷயத்திலும் கவனம் செலுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri P. G. KARUTHIRUMAN**: அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையைப் பற்றி விவாதிக்கும்படியான இந்த சமயத்தில், இதுவரையில் கவர்னர் பெருமான் ஆற்றியுள்ள பல உரைகளிலிருந்தும் நாம் படிப்படியாக எல்லா விஷயங்களிலும் முன்னேறியிருக்கிறோம் என்பதை எதிர் கட்சியில் இருப்பவர்கள்கூட எடுத்துக் கூறியது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். எனது நண்பர் திரு. என். ஆர். தியாகராஜன் அவர்கள் சொன்ன மாதிரி இதிலே இரண்டு விஷயங்கள் மிக முக்கியமான விஷயங்கள். இதுவரையில் யாரும் குறிப்பிடாத விஷயம் என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயம், சர்க்கார் எதற்காக இருக்கிறதோ அதற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய விஷயங்கள்.

முதலாவது உணவுப் பொருள்களின் விலையேற்றம் நமது மக்களில் பெரும் பகுதியினரான விவசாயிகளுக்கு நன்மை பயப்பதாக இருக்கலாம் என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கும் நிலையில், நான் ஒரு விவசாயி என்ற நிலையில் பேசுகிறேன். புள்ளிவிவரங்கள் கொடுத்துப் பேசிய நேரத்தில் கம்யூனிஸ்ட் நண்பர்கள் விவசாயப் பொருள்களின் விலை ஏற்றத்தினால் மக்களுடைய வாழ்க்கைச் செலவு ஏறியிருக்கிறது என்றும், விவசாயப் பொருள்களின் விலையைக் குறைக்கவேண்டும் என்று சொன்னார்கள். புள்ளிவிவரக் கணக்குக் கொடுத்துப் பேசும் போது 450 புள்ளியிலிருந்து 490 புள்ளிகளாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களும் மற்றவர்களும் சாப்பிடக் கூடியவர்களுடைய நிலையைப்பற்றித்தான் சொன்னார்கள். பொருள்களை உற்பத்தி செய்யும்படியான விவசாயிகளுடைய புள்ளிவிவரங்களை அவர்கள் கவனித்தார்களா என்று கேட்கிறேன். இதுவரையில் இந்தச் சட்டசபையில் யாரும் இதைப்பற்றி கவனிக்கவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1939-ம் வருஷத்தில் இருக்கும்படியான விலை எண் 100

[Sri P. G. Karuthiruman] [10th December 1959

என்று வைத்துக்கொண்டு, யுத்தத்திற்குப் பின்னர் இருக்கக்கூடிய விலைவாசிகளை வைத்துக் கணக்குப் பார்க்கவேண்டும். 1939-ம் வருஷத்தில் உற்பத்திக்கு ஆகின்ற செலவை வைத்துக்கொண்டு இப்போது எவ்வளவு புள்ளி அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் கணக்கிட்டுப் பார்த்தார்களா என்றால், நிச்சயமாக இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்போது ஒரு ஏக்கர் நஞ்சைக்கு "காஸ்ட் ஆப் கல்ட்டிவேஷன்" 50 ரூபாயாக இருந்தது. இப்போது அதே அளவுள்ள நிலத்தைச் சாகுபடி செய்ய நீங்கள் ஒரு ஆராய்ச்சிப் பண்ணை வைத்து, அதற்கு ஆகக்கூடிய சாகுபடிச் செலவை வைத்துப் பார்த்தால் அது இப்போது 300 ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வீர்கள்.

(Mr. Speaker in the Chair.)

அப்போது 50 ரூபாயாக இருந்தது இப்போது 300 ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்றால் அப்போது இருந்த நிலையை 100 புள்ளிகள் என்று வைத்துக்கொண்டால் இப்போது 600 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. இதை நண்பர்கள் உணர்ந்தார்களா என்று கேட்கிறேன். அப்போது இருக்கும்படியான நிலையில் மூட்டை 5 ரூபாயாக விற்றது. அப்போது உற்பத்திக்கு ஆகக்கூடிய செலவு 50 ரூபாய். இப்போது 300 ரூபாய் உற்பத்திச் செலவு ஆகும் போது, அதைப் போல 6 பங்கு விற்றாலும் விவசாயி செய்வது நியாயமா அல்லது அநியாயமா என்று இந்தச் சபையின் முன்பு சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன். எல்லாம் அதிகமாகப் போய் விட்டது என்று மட்டும் பேசிக்கொண்டு போனால் மட்டும் சரியாகப் போய் விடுமா? நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசியபோது இதனால் ஏழை மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். சொன்னபோது ஒரு அழகான பாய்ண்டாக இருக்கலாம். அப்போது—அந்தக் காலத்தில்—இருந்த கூலி நிலவரமே இப்போதும் இருந்து கொண்டிருந்தால், விலை அதிகமாகி விட்டது என்று சொன்னால் நியாயமாக இருக்கும். அப்போது 4 அணாவிற்கு கூலியாட்கள் ஊக்கத்துடன் உழைத்த நேரத்தில், இப்போது 1½ ரூபாய் கொடுத்தாலும் அவர்கள் செய்யக்கூடிய வேலையானது பாதிதான் இருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் இந்தத் தோழர்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. ஒரு பக்கத்தில் இந்தத் தோழர் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் வேண்டுமென்று கிளப்பி விட்டுவிட்டு, இன்னொரு பக்கத்தில் போஸ்டரில் 12 அணாவிற்கு அரிசி வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி 1½ ரூபாய் கூலி கொடுத்து சாகுபடி செய்து படி அரிசி 12 அணாவிற்கு எந்தக் கடையில் விற்றார்கள் என்று கேட்கிறேன். உதாரணமாகவாவது ஒரு ஆராய்ச்சிப் பண்ணை நடத்தி, 1½ ரூபாய் விதம் கூலி கொடுத்து, சாகுபடி செய்து, அங்கிருந்து கிடைத்த பொருளை 12 அணாவிற்கு இந்த இடத்தில் விற்கிறேன் என்று விற்றுக் காட்டினால் அது நிச்சயமாக வரவேற்கத் தகுந்த அம்சம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் இதுவரையில் எந்த இடத்திலும் செய்யவில்லை. விவசாயிகள் காலை முதல் மாலைவரையில் நிலத்தில் வேலை செய்து கொண்டிருக்கவேண்டும். சங்கம் அமைத்தும்



10th December 1959] [Sri P. G. Karuthiruman]

கொண்டால் சாதம் போட முடியாது. மேலே மழை பெய்து கொண்டிருக்கும்போது நிலத்தில் வேலை செய்தாக வேண்டும். விலைவாசி ஏறி விட்டது, விஷம் போல் ஏறி விட்டது, இதை உடனடியாகத் தடுக்க வேண்டும், நியாயமான விலை இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நியாயமான விலை என்றால் எந்த விலை? ஆராய்ச்சி செய்து பார்த்தால் இன்றைய தினம் பணக்காரர்களிடத்தில் இந்த பூமி சிக்குண்டு இருக்கிறது, அவர்கள் பணத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். 1939-ம் வருஷத்தில் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸிலும், பாங்கிலும் பார்த்தால் புரோ நோட்டாகத்தான் இருந்தது. அப்போது சில பேர்கள் ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். சில பேர்கள் புரோ நோட்டிற்காக பூமியை விற்றிருக்கிறார்கள். இப்போதுதான் சுபிட்சம் இருக்கிறது, குடியானவன் நல்ல நிலையில் இருக்கிறான் என்றால் இந்த விலைவாசி இருப்பதால்தான். உற்பத்தி பெருகிய காரணத்தினாலும் விலைவாசி ஏறி இருக்கிறது. திட்டத்தினால் உற்பத்தி ஓரளவு பெருகியிருக்கிறது, விலைவாசிகளும் இரண்டு பங்கு பெருகியிருக்கிறது. விவசாயிகளுக்குக் கட்டுபடியாக இருக்க வேண்டிய விலையில்தான் விற்கிறது. உற்பத்திக்கு ஆகக் கூடிய செலவை வைத்துக்கொண்டு பார்த்தால் 15 ரூபாய்க்குக் கம்மியாக விற்றால் நிச்சயம் லாபம் கிடைக்காது. இதில் சந்தேகமே கிடையாது. ஆங்கிலத்தில் "பாரிடி" என்று சொல்வார்கள். 1939-ம் ஆண்டில் 100 ரூபாய் சம்பளம் வாங்கக் கூடியவர்கள் சந்தோஷமாக இருந்தார்கள். அப்போது குடியானவர்கள் அல்லல் பட்டுக் கொண்டிருந்தார்கள். உழவன் உணவு கொடுப்பவன் என்ற பெருமை இருந்ததே தவிர அப்போது 10 ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருந்த விவசாயி நல்ல நிலையில் இல்லை. இப்போது அவர்களுடைய துரதிர்ஷ்டம் போய், பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு காலமாகக் கஷ்டப் பட்டது கொஞ்சம் மாறி அவர்கள் இப்போது கொஞ்சம் சௌகரியமாக இருக்கிறார்கள். இம்மாதிரி 50 வருடங்களுக்கு ஒரு முறை அல்லது 100 வருடங்களுக்கு ஒரு முறை தான் பொற்காலம் கிடைக்கிறது. பொற்காலம் கிடைக்கிறது என்றால் ஏமாற்றுவது என்பதல்ல. இப்போது இந்த நன்மையை அனுபவிப்பவர்கள் யார்? அனுபவிக்கும் நிலையில் இருப்பவர்கள் யார் என்றால் விவசாயத் தொழிலாளிதான். பணக்காரர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் இங்கு இருக்கும்படியான பணக்காரர்களைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. இப்போது இருக்கும்படியான நிலையில் பார்த்தால் புள்ளி விவரம் ஏறி விட்டது என்றால் இருக்கலாம், இருக்கிறது; அதை மறுக்கவில்லை. உற்பத்திக்கு ஆகும் செலவு விஷயத்தில் விவசாயிகளுடைய நிலையைக் காப்பாற்றாத வரையில் நம் திட்டங்கள் வெற்றிகரமாக முடியாது என்று அதற்கேற்றவாறு, குடியானவர்களைக் காப்பாற்றும் வகையில் திட்டங்களைப் போடவேண்டும். இதற்கு கவர்னர் பெருமான் உரையில் ஒன்று இருக்கிறது. அதற்கு வழி வகை இருக்கிறது என்று இப்போது பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். வழி நிச்சயமாக இருக்கிறது என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

[Sri P. G. Karuthiruman] [10th December 1959

வடக்கு வளர்கிறது என்று சொல்லும் தோழர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம், இந்தியாவிலேயே மிகப் பெரிய மாகாணமான உத்திரப் பிரதேசத்தில் 1,000 கிராமங்களுக்குத்தான் மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் நமது மாகாணத்தில் 8,000-திலிருந்து இப்போது 10,000 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுத்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல. எதை வேண்டுமானாலும் பேசி விடலாம். சத்தம் போட்டுப் பேசினால் ஜயித்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரக். கட்டணம் கூடப் போய் விட்டது என்று கூச்சல் போடுகிறார்கள். உலகத்திலேயே விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் குறைந்த கட்டணத்தில் கொடுப்பது சென்னை மாகாணத்தில்தான் என்று நான் உறுதிப் படுத்த ஆசைப்படுகிறேன்.

அந்த சமயத்தில், கவர்னர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்; சேலத்திலும் அல்யூமினியம் தொழிற்சாலை வர வாய்ப்பு இருக்கிறது. இதனால் எல்லாம், விவசாய உர உற்பத்திப் பெருகும். நைட்ரஜன், யூரியர் போன்ற உரங்கள் கிடைக்கும். அதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதிகமாக உரத்தைப் பெருக்க வேண்டும். இதனால் தான் எல்லா விலைவாசி யும் குறையுமே தவிர, மற்றதால் அல்ல. உற்பத்தியைப் பெருக் காத வரையில் விலைவாசி குறைவதற்கு நியாயம் இல்லை. இது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

கவர்னர் உரையில் நிலச் சீர்திருத்தம் பற்றி சொல்லப்பட்டி ருக்கிறது. அதைப் பற்றி பல அபிப்பிராயங்கள் இருக்கலாம். சர்க்கார் கொண்டு வருவார்கள். அதில் ஒன்றும் சந்தேகம் வேண்டாம். நிச்சயமாக வரும். படேல் அவர்கள், 1946-ம் வருஷத்திலே, அரசியல் நிர்ணய சட்டசபை கூட இருந்த போது, இங்கிலாந்து தேசத்திற்குச் சென்றிருந்தார். ஆகஸ்ட் 9-ம் தேதி கூடுவதாக இருந்த அரசியல் நிர்ணய சட்டசபை, கூடுமா, கூடாதா என்று இருந்தது. அப்பொழுது அவர்கள் சொன்னார்கள் "உலகமே புரண்டாலும், இடியே விழுந்தாலும், குறிப்பிட்ட தேதியில் கூடும்." என்று. அதே போல், நிலச் சீர்திருத்தச் சட்டம் நிச்சயமாக வந்தே தீரும், வந்தே தீரவேண்டும்; அது வருவதை எந்த சக்தியும் நிறுத்த முடியாது. நிச்சயமாக வரும். ஆகவே, எந்த முறையில் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று பார்க்க வேண்டும். வரவிருக்கும் முறையிலே, சென்னை ராஜ்யத்தில் மொத்தம் 1,80,000 ஏக்கர் சாகுபடியில் இருக்கின்றன. ஜனத் தொகையோ மூன்று கோடி இருக்கிறது. சிறு சிறு துண்டாகப் போட்டாலும், ஒருவருக்கு ஒரு ஏக்கர் கூட வராது, வருவது சந்தேகம். அதிகமான நிலம் கொஞ்சம்தான் இருக்கும். ஆகவே, விவசாயம் லாபகரமான தொழிலாக இருக்கமுடியாது. விவசாயத்தையே எல்லோரும் நம்ப வேண்டாம். வேறு தொழிலில் ஊக்கம் காட்ட வேண்டும். அதிகமாகக் கிடைக்கும் நிலத்தை விநியோகம் செய்வது முக்கியமான நோக்கம் அல்ல. அது தவறு. உணவு உற்பத்தி ஏற்படாது. விவசாயம்



10th December 1959] [Sri P. G. Karuthiruman]

.....................................

.......... ..............................

வையக முழுவதும் வறிஞ னோம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கிறான்

என்று தசரதன் நாட்டை எப்படி ஆள்கிறான் என்று கம்பன் கூறுகிறான். இதன் கருத்து, பொருளில்லாத ஒருவன் தனக்கு உள்ள சிறு கழனியை காப்பது போல், உலகம் முழுதையும் காத்தான் என்பது. அம்மாதிரி அரசாட்சி செய்தான். ஆகவே தான், அகல உழுவதை விட, ஆழ உழவேண்டும் என்கிறோம். அது தான் இண்டென்ஸிவ் கல்டிவேஷன். அதற்குத்தான் நிலச் சீர் திருத்தம். இந்தக் கண்ணோக்கோடு பார்த்தால், கவர்னர் உரை விவசாயிகள் பெருமைக்கும் எவ்வாறு பொருந்தும் என்பதைப் பாராட்டி, என் சிற்றுரையை முடிக்கிறேன்.

* **Sri G. ANNAMALAI MUTHURAJA**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது, நமது கட்சிக் கொரடா அவர்கள் கவர்னர் உரை மீது பேசி, கோடையிடிபோல் முழக்கமாக முழங்கிப் பேசி விட்டார்கள். எல்லா விஷயங்கள் பற்றியும் பேசி ஆகிவிட்டது. ஜாஸ்தி விரிவாகப் பேச வேண்டியிராது.

எல்லாக் கட்சிகளும் சேர்ந்து விவசாயப் பொருள், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கூக்குரலாகச் சொல்லு கிறார்கள். முக்கியமான விஷயம் அதுதான். சர்க்காரில் எவ்வளவு தூரம் விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் ஒத்தாசை செய்ய வேண்டுமோ அப்படியெல்லாம் செய்து வருகிறார்கள்.

முக்கியமாக விவசாயிகள் உணவு உற்பத்தி செய்யவேண்டு மானால் அவர்களுக்கு முக்கியமாக உரம் வேண்டியதாக இருக்கிறது இப்பொழுது சர்க்காரில் ரசாயன உரம் சப்ளை செய்கிறார்கள். அப் படி சப்ளை செய்வது விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கே அநேகமாக ரசாயன உரங்களைப் போடுவதில்லை. திருச்சி ஜில்லாவில் சில இடங்களில்தான் போடுகிறார்கள். அங்கேயெல்லாம் அதிகமாகப் போட்டு உணவு உற்பத்தி செய்கிறார்கள். இப்படிப் பட்ட இடங்களுக்கு ரசாயன உரம் கிடைப்பதற்கு சர்க்கார் உதவி செய்யவேண்டும். அங்கே உரத்தைக் கொடுக்கக்கூடிய வியாபாரி கள் அதை மார்க்கெட் விலைக்குக் கொடுக்காமல் ப்ளாக் மார்க்கெட் விலைக்குக் கொடுக்கிறார்கள். வெளியர்களிலிருந்து கொண்டு வந்து அங்கே ப்ளாக் மார்க்கெட்டில் விற்கிறார்கள். சர்க்கார் சப்ளை செய்யக்கூடிய உரத்தை வாங்கி வந்தி திருட்டுத்தனமாக திருச்சி ஜில்லாவில் சில இடங்களுக்குக் கொண்டு போய் வியாபாரிகள் ப்ளாக் மார்க்கெட்டில் விற்கிறார்கள். முப்பது ரூபாய்க்கு விற்க வேண்டிய மூட்டையை அறுபது ரூபாய்க்கு விற்கிறார்கள். இதைப் பற்றி சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சில சமயங்களில் அப்படி நட வடிக்கை எடுக்கும்போது அவர்களையும் ரசாயன உர மூட்டைகளை யும் பிடித்து வந்து தாலுகா ஆபீசில் வைத்து விடுகிறார்கள். மூட்டைகளை 400 அல்லது 500 என்று பிடித்து வந்து மாதக்

கணக்கில் ஆபீசில் வைத்து விடுகிறார்கள். அதனால் வியாபாரிகளுக்கும் கஷ்டமாக இருக்கிறது. விவசாயிகளுக்கும் உரம் கிடைக்காமல் கடஷ்ப்படுகிறார்கள். அப்படி பிடிபடுகிற உரமும் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படாமல் வீணாகக் கிடக்கிறது. ஆகவே வியாபாரிகள் மீது உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுத்து உரத்தை விவசாயிகளுக்கு காலாகாலத்தில் சப்ளை செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி சப்ளை செய்யும்போது கண்ட்ரோல் விலைக்கு அந்த மூட்டைகளை சப்ளை செய்தால் விவசாயிகளுக்கு நலமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த முறையில் திருச்சி கலெக்டருக்கு உத்தரவு கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். காலா காலத்தில் கொடுத்தால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். இதைப்பற்றி நான் ஏற்கனவே கலெக்டரிடம் சொல்லியும் அவர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே திருச்சியிலுள்ள கலெக்டருக்கு உடனேயே அந்த உர மூட்டைகளை விற்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு உத்தரவு போடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்துடன் பூச்சி மருந்துகள் கிடைப்பதும் ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. பூச்சி மருந்துகளை கொஞ்ச நாளைக்கு முன் பாதி விலைக்குக் கொடுத்து வந்தார்கள். அதுவும் விவசாய இலாகா மூலமாகக் கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது கொடுக்கும்போது அதிகப்படியாக விலை வைத்து கொடுப்பதோடு அந்தப் பாதி விலையையும் சர் சார்ஜாக வசூல் செய்து வருகிறார்கள். விவசாய இலாகா மூலமாக அதைக் கொடுக்கும்போது இப்படி அதிகப்படியான விலை வைத்துக் கொடுக்கக்கூடாது. அதிகப்படியாக பாதி விலையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அது விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கிறது. இதை அரசாங்கம் கவனித்து விவசாயிகளுக்கு சாதாரண விலைக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிவாரணக் கடைகளை அமைக்கும்போது கூடுமான வரையில் நகரங்களில்தான் அமைக்கப்படுகின்றன. கிராமங்களில் அமைப்பதாகவே இல்லை. திருச்சி ஜில்லா அந்தநல்லூரில் அநேகம் கூலி வேலை செய்யக்கூடிய ஆள்கள் இருக்கிறார்கள். அங்கு நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தாமல் இருப்பதால் அங்குள்ள கூலியாட்கள் விலைக்கு உணவு தானியங்களை வாங்கிச் சாப்பிட வேண்டியதாக இருக்கிறது. கூலி வேலை செய்துவிட்டு வந்து அரிசி வாங்குவதாக இருந்தால் அவர்களால் முடியவில்லை. கிராமத்தில் அரிசி கிடைக்காமல் இருப்பதால் 15 அல்லது 20 மைல்கள் சென்று அரிசி வாங்கி வரவேண்டியதாக இருக்கிறது. அதனால் பலர் கஷ்டப்படுகிறார்கள். அப்பேர்ப்பட்ட இடங்களில், கிராமங்களிலும் பஞ்சாயத்து ஏரியாக்களிலும் நியாயவிலைக் கடைகளை அமைக்கும்படியாக சர்க்காரைக் கேட்டுக்கொள்வதோடு அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.



அடுத்தபடியாக உச்ச வரம்பு கட்டுவது சம்பந்தமாக பேச வேண்டியதாக இருக்கிறது. பெரிய மிராசுதார்கள்தான் ஏராளமான நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சென்னையிலிருந்துக்கொண்டு உச்ச வரம்பு கட்டுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்கிறார்கள். நஞ்சையாக இருந்தால் 30 ஏக்கரும் புஞ்சையாக இருந்தால் 100 ஏக்கரும் என்று வரம்பு கட்டப்போவதாகத் தெரிய வருகிறது. இந்த முறையிலேயே பல பல கூட்டங்களிலும் பேசி வருகிறார்கள். சட்டசபையிலும் கூட இம்மாதிரியாக பேசிக்கொண்டு வருகிறார்கள். இதைப்பற்றியே ரொம்பவும் விரிவாகவும் ஆதாரமாகவும் பேசிவருகிறார்கள். நில உச்ச வரம்பு கட்டும்போது அந்த நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் அந்த நிலங்களை எப்படி சம்பாதித்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். எவ்வளவு கஷ்டப்பட்டு எவ்வளவு பிரயாசைப்பட்டு அந்த நிலங்களை அவர்கள் சம்பாதித்தார்கள் என்பதையும் கணக்கில் எடுத்து கொள்ளவேண்டும். ஜமீந்தார்கள் மாதிரி அவர்களுக்கு நிலங்கள் கிடைக்கவில்லை. கஷ்டப்படாமல் இனாமாக அவர்களுக்கு அவைகள் வந்தது அல்ல. பெரிய மிராசுதார்களுடன் சிறிய மிராசுதார்களையும் சேர்த்து அம்மாதிரி செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அது நியாயமாக இருக்காது. ஆகவே நில உச்ச வரம்பு கட்டும்போது நஞ்சைக்கும் புஞ்சைக்கும் வித்தியாசம் காட்ட வேண்டும். 100 ஏக்கருக்குக் குறைந்த நடுத்தர மிராசுதார்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி ஒருவரும் பேசவில்லை. அதன் காரணம் என்ன என்பது தெரியவில்லை. அவைகளைத்தவிர சிறிய நில சொந்தக்காரர்களைப்பற்றியும் பெரிய நிலச் சொந்தக்காரர்களைப்பற்றியும்தான் பேசி இருக்கிறார்கள். நஞ்சைக்கும் புஞ்சைக்கும் இடையில் இருக்கக்கூடிய ஒரு வித நிலத்தைப்பற்றி ஒருவரும் பேசவில்லை. அதாவது அவைகளுக்கு இரவை நிலங்கள் என்று சொல்வது. கையேறு, மாட்டுவாரம் என்று சொல்லக்கூடிய மாதிரி இரவை நிலங்கள் என்று சொல்லக்கூடிய ஒரு வகை நிலம் இருக்கின்றன. அவைகளில் சாதாரணமாக எல்லா விதமான தானியங்களையும் பயிர் செய்யலாம். நஞ்சை நிலத்தை விட அந்த நிலங்களுக்கு மதிப்பு ஜாஸ்தியாக இருக்கிறது. சாதாரணமாக அவற்றிற்கு ஏற்றுப்போட்டு இறைத்து விவசாயம் செய்வார்கள். அப்படிப்பட்ட நிலம் பெரும் அளவில் இருக்கின்றன. அவைகள் எல்லாம் ஆற்றுக்குப் பக்கத்தில் இருக்கும், ஆற்றில் ஏற்றுப் போட்டு தண்ணீர் இறைத்து சாகுபடி செய்வது வழக்கம். அதனால் வருஷம் 365 நாளும் அந்த நிலங்களில் பயிர் செய்யலாம். உச்ச வரம்பு கட்டும்போது அந்த நிலங்களைப்பற்றி ஒருவரும் சொல்லவில்லை. அந்த நிலங்களை என்ன செய்யப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. ஆற்றில் தண்ணீர் இல்லாத காலங்களில் கிணறுகளை வெட்டி வெள்ளாமை செய்யலாம். அவைகளைப்பற்றி இதுவரையிலும் யாராவது முயற்சி எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. உச்ச வரம்பு கட்டும்போது அவைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

[10th December 1959

**Sri C. N. ANNADURAI** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் இந்த சபையில் ஆற்றிய உரையின் மூலம் இந்த மாநிலத்திலுள்ள மக்களுக்குத் தெரிவித்தக் கருத்துக்களைப் பற்றி இரண்டு நாட்களாக நடைபெற்ற கருத்துரை வழங்குகையில் நான் இன்றைய தினம் கலந்துகொள்ளுகிறேன். நான் கலந்து கொள்வதையே ஒரு நிகழ்ச்சியாக ஏன் குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது என்றால் நேற்று, அதற்கு முன் தினம், அப்பொழுது இல்லாமல் இன்றைய தினம் பேசுவதைப்பற்றி, இன்றைய தினம் பேசிய இரண்டு கனம் அங்கத்தினர்கள் இது சரிதானா என்ற முறையில் அவர்களுடைய ஐயப்பாட்டை எழுப்பினார்கள். அதுவும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூட ஜாடையாக அதைப்பற்றி எடுத்துச் சொன்னவுடன் "கவர்னர் அவர்கள்" உரை ஆற்றிய நேரத்தில் வராமல் இருந்தவர்கள், ஒன்று கடைசி வரையில் வராமலிருந்திருக்க வேண்டும் அல்லது முழுவதும் வந்திருக்கவேண்டும் என்று அவர்கள் சொன்னார். அதிலும் எனது நண்பரும், திருப்பூர் தொகுதி உறுப்பினருமான கனம் பழனிசாமி கௌண்டர் அவர்கள், கவர்னர் உரையைப்பற்றி மட்டுமல்ல, அன்று மாலையில் நடந்த விருந்தைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அதில் எல்லாம் கலந்து கொள்வது நாங்கள் மேற்கொண்டிருக்கிற கொள்கைக்கு உகந்தது அல்ல என்ற முறையில், நாங்கள் இந்த தடவையில் மட்டுமல்ல இதற்கு முன்பெல்லாமே கலந்து கொள்ளாமலிருந்திருக்கிறோம். நண்பர் அவர்கள் சொல்வதும் ஒரு முக்கியமான கருத்துதான். கவர்னர் பெருமான் இங்கே வருகிறார், உரை ஆற்றுகிறார், அப்பொழுது வராமல் உரை ஆற்றிய பிறகு ஏன் வந்து கருத்துரை சொல்லுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். கவர்னர் அவர்கள் இந்த மன்றத்தில் உரை ஆற்றுவதன் மூலம் இந்த மாநில மக்களுக்கு சில செய்திகளைச் சொல்லுகிறார். இந்த மாநில மக்கள், வெளியிலேயும் சரி, சட்டசபையிலேயும் சரி தங்களுக்கு சரி என்று தோன்றுகிற கருத்துக்களை எடுத்துச்சொல்ல கடமைப் பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் கவர்னர் அவர்களுடைய உரையின் மீது நானும் என்னைச் சார்ந்த எங்கள் கழகத்தினரும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்திருக்கிறோம். கவர்னர் உரையின்போது கலந்து கொள்ளாதவர்கள் விவாதத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று தங்களுக்கு இருக்கிற எண்ணிக்கை பலத்தை வைத்துக்கொண்டு புதிய விதிகளை ஏற்படுத்தி விட்டால் அதனால் யாருக்கும் சங்கடம் இருக்காது. சில குறிப்பிட்ட அபிப்பிராயத்தை கருத்தில் கொண்டு ஓரிரு அங்கத்தினர்கள் அதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் கவர்னர் பெருமான் உரை ஆற்றிய விழாவில் கலந்துக் கொண்டவர்கள், மாலை விருந்திலே மிக்க விருப்போடு கலந்து கொண்டவர்கள் அந்த உரையின் மீது நடைபெறுகிற விவாதத்தில் அனைவருமாவது பரிபூரணமான திருப்தியைத் தெரிவித்தார்களா என்றால், கவர்னர் பெருமான் உரையில் நல்ல கருத்துக்கள் காணப்படுகின்றன என்று முதலில் துவக்கிவிட்டு அந்த உரையில் இல்லாத கருத்துக்களைப் பற்றியும், நாட்டை ஆளுகின்றவர்கள் செய்த தவறுகளைப் பற்றியும், செய்யத் தவறிய கருத்துக்களைப் பற்றியும் தம் தமக்கு



10th December 1959] [Sri C. N. Annadurai]

என்ன தேவை என்பதைப் பற்றியும், எத்தனை முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதைப் பற்றியும்தான் விரிவாகப் பேசினார்கள். ஆகவே விழாவில் கலந்து கொண்டவர்கள், விருந்துக்குச் சென்று உண்டவர்கள் கவர்னர் பெருமானின் உரையை பூர்ணமாக ஆதரித்துப் பேசத்தான் வேண்டும் என்பது இல்லாதது போலவே விழாவில் கலந்து கொள்ளாதவர்கள் இந்த உரையின் மீது கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடாது என்பது ஜனநாயக முறையில் கிடையாது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் பெருமானின் பதவியை எப்படி அதிகமான சில அதிகாரங்களையும், பொறுப்புகளையும் அவர்களிடத்தில் ஒப்படைக்காமல் பெருந்தன்மையானதாக நாம் எப்படி வைத்துக்கொண்டிருக்கிறோமோ அப்படியே அவர்கள் உரையிலும் சில பெருந்தன்மையான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும், நாட்டுக்குப் பெரும் ஆபத்து வர இருக்கிற காலத்தில் எல்லாக் கட்சிகளும் நாட்டு நன்மையைக் கருத்தில் கொண்டு ஒற்றுமையாக நடந்து கொள்ள வேண்டும் என்கிற பெருந்தன்மையான கருத்து அதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நாட்டு நன்மையில் அக்கறையுள்ள யாரும் அந்தப் பெருந்தன்மையான கருத்துக்கு இதயபூர்வமான ஒப்புதலை அளிக்காமல் இருக்க முடியாது. நாட்டுக்கு பெரிய ஆபத்து ஏற்படக்கூடும் என்ற கருத்துப்பட இருப்பதால் அப்படிப்பட்ட ஆபத்து எதுவும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அப்படி ஏற்படக்கூடுமானால் அந்தச் சமயத்தில் கட்சியின் பாகுபாட்டை எல்லாம் மறந்து நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிராளியைச் சமாளிக்க வேண்டிய பெரும் பொறுப்பை நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் எனக்குத் துளிக்கூட ஐயப்பாடு இல்லை. ஆனால் அப்படி ஒத்துழைக்க அழைக்கும்போது ஒரு கட்சியைக் குத்தலாகப் பேசுவதன்மூலம் ஒற்றுமையைக் குலைப்பதற்கு ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் வெகு பிரயாசை பட்டு அந்த முயற்சியை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் நான் ஒன்று சொல்வேன். ஆபத்துக் காலத்தில் எங்கே சில கட்சிகள் துரோகிகளாக மாறிவிடுவார்களோ என்று ஐயப்பட்டுக் கொண்டிருப்பதைவிட, யுத்தம் ஏற்படக்கூடும் என்ற சூழ்நிலையை வைத்துக்கொண்டு முதலாளிகள் ஏழைகளின் வயற்றில் அடிக்கப் போகிறார்கள் என்ற பயம் இல்லாமல் போகவில்லை. எப்படி எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அவர்களுக்கு தேசத்துரோகியாகத் தோற்றுகிறார்களோ அப்படியே தேசபக்தி என்ற போர்வையினால் சுரண்டல் காரியத்தில் ஈடுபடப்போகிறவர்கள் அவர்களால் நாட்டுக்கு உண்டாகப் போகிற கேடுகள் எல்லாவற்றையும் என்னால் எடுத்துக் காட்டி வாதாட முடியும் ஆகவே இன்றைய தினம் கவர்னர் பெருமான் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைத்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிற மனப்பான்மையை நாம் அனைவரும் மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[Sri C. N. Annadurai] [10th December 1959

கவர்னர் உரையில் இந்த ஆட்சி எடுத்துக்கொள்ளவேண்டிய முறைகளைப் பற்றியோ புதியதான கொள்கை விளக்கங்களைப் பற்றியோ ஒன்றும் குறிப்பிடவில்லை. பொதுவாகவே நான் விவாதத்தைக் கவனித்துக்கொண்டு வந்ததில் இருந்து இந்த ஆட்சியாளருக்குத் தனியான நடைமுறைக் கொள்கை எதுவும் இல்லையென்பதை நான் உணர்கிறேன். அவர்களுக்கு ஏதாவது நல்ல கொள்கை என்று இருக்குமானால் நம்முடைய நாட்டுக்கு நல்லாட்சி அமையவேண்டும் என்கிற நினைப்பு ஒன்றுதான் என்பதை மதித்துப் பாராட்டுகிறேன். இந்திய துணைக் கண்டத்திலேயே இந்த ராஜ்ய அமைச்சர்கள் எடுத்துக்கொள்வது போல அதிக அக்கறை மற்றவர்கள் எடுத்துக்கொள்கிறார்களா என்பது உண்மையில் விவாதத்திற்குரியதாகும். அந்த முறையில் நல்ல அநுபவமும் அக்கறையும் இருக்கிற நம் மாநில அமைச்சர்களுக்கு போதுமான அதிகாரமும், சுதந்திரமும் இல்லாத காரணத்தினால்தான் பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை என்று சொன்னால் அது பலருக்கு வேதனையாகத்தான் இருக்கச் செய்யும். ஆனால் போதுமான அதிகாரம் இல்லாத காரணத்தினால்தான் நமக்குப் பல குறைபாடுகள் ஏற்படுகின்றன என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருப்பதற்கில்லை. ஏனென்றால் என்னுடைய மாநில அமைச்சர்கள் திறமைக் குறைவானவர்கள் என்று சொல்லிவிட்டு இவர்களிடத்திலே மத்திய சர்க்கார் அதிகமான அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று வாதிடுவது தத்துவ முறைக்குப் பொருந்தாது. ஆகவேதான் நான் நம்முடைய மாநில அமைச்சர்களது அநுபவத்தையும், திறமையையும் குறைத்து மதிப்பிடவில்லை. இவர்கள் மிகுந்த திறமைசாலிகள். ஆனால் இவர்களிடத்தில் உண்மையாகவே போதுமான அதிகாரம் தரப்படவில்லை என்று குறிப்பிடுகிறேன். அதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன. நான் இங்கே பேசுவதற்கு முன்னால்தான் சில குறிப்புகளை எழுதினேன். உச்ச வரம்புச் சட்டம் ஏன் இன்னமும் கொண்டுவந்து இயற்றப்படவில்லை என்றால் மத்திய சர்க்காரிடத்தில் அதைப்பற்றி கலந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. உணவுப் பிரச்சனையைப் பொறுத்த வரையில் தென் மண்டலத்தில் இருப்பதனால் நமக்கும் பெரும் பாதகம் ஏற்படுகின்றது, ஆகவே நாம் தனி மண்டலமாக ஆகவேண்டுமென்று நமக்கெல்லாம் அறிவு விளக்கம் ஆற்றின பிறகு ஏன் அந்த முறை இன்னும் ஏற்படவில்லை என்று கேட்டால் மத்திய சர்க்காரின் அனுமதியைக் கேட்டிருக்கிறோம், அவர்கள் இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை என்ற பதில் தரப்படுகிறது.

ஸ்டேட் ட்ரேடிங் என்ற தான்ய வியாபாரத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்வார்களேயானால் இந்த பஞ்ச நிலைமை நீங்கிவிடுமென்று அமைச்சர்கள் நமக்கு அறிவுறுத்தினார்கள். ஏன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை? என்று கேட்டால் மத்திய அரசாங்கத்தை அணுகியிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். உற்பத்தி பெருக வேண்டுமானால் ரசாயன உரங்கள் தேவை என்று அனைவரும் அமைச்சர்களுக்கு அறிவுறுத்தி வருகிறார்கள். அது ஏன் கிடைக்கவில்லை என்றால் மத்திய அரசாங்கம் கொடுப்பது போதுமானதாகயில்லை, கூடுதல் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்று



10th December 1959] [Sri C. N. Annadurai]

சொல்லியிருக்கிறார்கள். சாதாரண புளி, மிளகாய் இவைகளுக்கு ஏன் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது என்று கேட்டால் அமைச்சர்கள், இது வெளியே ஏற்றி அனுப்பப்படுகிறது. அதனால் விலை ஏறி விட்டது என்று சொல்கிறார்கள். அப்படி ஏற்றுமதி செய்வதை தடுப்பதுதானே என்று கேட்டால் சொல்கிறார்கள், அதுபற்றி மத்திய அரசாங்கத்தினிடம் வலியுறுத்தப் பட்டிருக்கிறது, என்று. நெய்வேலியில் எப்பொழுது நல்ல நிலைமை ஏற்படும் என்று கேட்டால் அதைப்பற்றி மத்திய அரசாங்கம் ஆலோசித்து வருவதாகச் சொல்கிறார்கள். சேலத்தில் உள்ள இரும்புக்கனியை தோண்டி எடுத்து நல்ல தொழில்களை எப்பொழுது நடத்தப் போகிறீர்கள் என்று கேட்டால் மத்திய அரசாங்கம் அதைப் பற்றி தீவிரமாக ஆலோசித்து வருகிறது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது எடுக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கிறார்கள். சேலத்தில் ஒரு அலுமினியம் தொழிற்சாலையை ஏற்படுத்த இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டதா என்று கேட்டால் மத்திய அரசாங்கத்தின், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட நிபுணர்களிடம் கருத்துரை கேட்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். சர்க்கரை ஆலைகளை ஏன் அதிகம் ஏற்படுத்தக்கூடாது என்று கேட்டால் மத்திய அரசாங்கத்தினிடம் அதற்காக அனுமதி கேட்டுக் கொண்டிருக்கிறோம், அனுமதி கிடைத்ததும் ஆரம்பிப்போம் என்று சொல்கிறார்கள். நமது மாகாணத்திலிருக்கிற மண் வளத்தை ஆராய்ச்சி செய்வது, கனிப்பொருள்களை தோண்டி எடுப்பது, அல்லது பூமிக்கு அடியிலிருக்கும் எண்ணைக் கிணறுகளை தோண்டுவது ஆகியவை பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டால் அதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறார்கள் அது வேலை செய்கிறது என்று சொல்கிறார்கள். காகித ஆலையை ஆரம்பித்திருக்கிறீர்களா என்று கேட்டால் மத்திய அரசாங்கம் அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். சினிமாத் தொழிலை, கனம் அங்கத்தினர் ஏழுமலை அவர்கள் அதிலிருக்கிற சுவையையும் அதிலுள்ள லாபத்தையும் ரசித்துச் சொன்னார்கள், அதை சர்க்கார் ஏற்று நடத்த வேண்டுமென்று. அதற்காக ரா பிலிம் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பீர்களா என்று கேட்டதற்கு உதகமண்டலத்தில் அப்படி ஒன்று ஆரம்பிக்க மத்திய அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஸ்பின்னிங் மில்ஸ், ஆலைகள் அதிகப்படுத்துவதற்காக முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டால் அதற்காக மத்திய அரசாங்கத்தினிடம் கேட்கப் பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்குள்ள ரிபேட்டை ஏன் குறைத்தீர்கள் அதிகமாக கொடுக்கக் கூடாதா என்று கேட்டால் நம் மாநில தொழில் அமைச்சர் அவர்கள், எனது இதயம் பூராவும் கைத்தறி நெசவாளர்களிடம்தான் இருக்கிறது, ஆனால் இதற்கான பணம் டெல்லியில் இருக்கிறது, கேட்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். சிங்களத் தீவில் இருக்கும் நமது தோழர்கள் சீர்குலைவாக நடத்தப்பட்டு திரும்பி வருகிறார்களே அவர்களுக்காக என்ன செய்கிறீர்கள்? செய்ய வேண்டிய வேலைகள் பல இருக்க, ஒரு அங்கத்தினர் பேசும்போது அவர் சொல்வதைக் கேட்காது அவசியமில்லாத காரியங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், பைலை பார்க்கிறார்கள். . . .

[10th December 1959

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று தெரியாமல் எப்படி ஊகித்துச் சொல்கிறார்களோ அதே போல் மற்றவைகளையும் ஊகித்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

SRI C. N. ANNADURAI : அவர்கள், சர்க்கார் பைல்கள் எங்கள் கண்களுக்கு படாது என்று நினைத்துச் சொன்னார்கள். ஆனால் அது என் கண்களுக்கு பட்டு விட்டது. இங்கு நடக்கும் காரியங்களைப் பார்த்தால், இவர்கள் இந்த நாட்டில் செய்கிற ஆட்சி போலீ ராஜ்யமே தவிர அது உண்மையில் க்ஷேமநல சர்க்கார் அல்ல என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : On a point of order சர்க்கார் நடக்கும் முறை, ராஜ்ய அரசாங்கங்களுக்கு என சில விஷயங்களும் மத்திய அரசாங்கத்திற்கென சில விஷயங்களும் ஒதுக்கப்பட்டு அரசியல் நிர்ணயச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு சட்டதிட்டத்தின் கீழ் நடக்கிறது. அப்படியிருக்க அதற்கு உட்பட்டு நடக்கிறோம் என்று பிரமாணம் எடுத்துக்கொண்டு, அதைத் தெரிந்து கொண்டு இந்த சபையில் வந்திருந்து இப்படியெல்லாம் பேசுவது எந்தளவிற்கு சட்டப்படி ஒழுங்கானது என்பதை சபாநாயகர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இதில் ஒழுங்குப் பிரச்னை ஒன்றுமில்லை. அமைச்சர் பதில் சொல்லும்போது கனம் அங்கத்தினர் சொன்னதற்கு பதில் சொல்வார்.

SRI C. N. ANNADURAI : நான் இப்பொழுது குறிப்பிட்ட துறைகளை எல்லாம் நம்முடைய மாநில சர்க்கார் ஏற்றெடுத்து நடத்துவதற்கு திறமையில்லை என்று குறிப்பிடவில்லை. நமது மாநில சர்க்கார் நடத்துகிற ராஜ்யம் ஒரு போலீஸ் ராஜ்யமாக இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு பொருத்தமாக இருக்கின்ற வகையில் நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையில் உணவுத் துறையையும், போலீஸ் துறையையும் ஒரு அமைச்சர் அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ஊரில் எல்லாம் உணவு விலை அதிகமாகிவிட்டது என்று எல்லோரிடத்திலும் கூறிக் கொண்டிருக்கின்ற மக்களை ஏன் அமைச்சர் அவர்களிடத்தில் போய் சொல்லியிருக்கக் கூடாது என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு, அவர்கள் கையில்தான் போலீஸ் துறையும் இருக்கிறது என்ற காரணத்தினால்தான் போய் சொல்லவில்லையோ என்று கருத வேண்டியிருக்கிறது. ஆகவே உணவும் போலீஸும் கனம் பக்தவத்சலம் அவர்களிடத்தில் இருப்பதை மாற்றி உணவுத்துறையை மட்டும் கனம் பக்தவத்சலம் அவர்களிடத்தில் ஒப்படைத்துவிட்டு, போலீஸ் துறையை உங்களிடத்தில் விரலையும் கையையும் காலையும் ஒடிக்கக்கூடிய திறமையான ஆட்கள் இருக்கின்றார்கள்—அவர்களிடத்தில் இந்தத் துறையை ஒப்படைத்தால் போலீஸ் இலாகா மிகவும் சுறுசுறுப்புடன் நடந்து கொள்ளும் என்று கருதுகிறேன். . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : சமீபத்தில் போலீஸ் நூற்றாண்டு விழா நடந்ததின் பின்னாலாவது போலீஸ்காரர்கள் "உங்கள் நண்பன்" என்று ஏற்றுக்கொண்டிருப்பீர்கள் என்று



10th December 1959] [Sri C. Subramaniam]

நம்பினேன். ஆனால் இப்போதும் பழைய மனப்பான்மையிலேயே இருக்கின்ற திரு. அண்ணாதுரை அவர்களைப் பார்த்து நான் பரிதாபப்படுகிறேன்.

SRI C. N. ANNADURAI : எனக்கும் போலீசுக்கும் முன் காலத்திலிருந்தே நட்பு உண்டு. மக்களுடைய கருத்து என்ன என்பதைத்தான் நான் இப்போது குறிப்பிடுகிறேன். இந்த நிலையில் இங்கு நடந்து கொண்டிருப்பது போலீஸ் ஆட்சியாகத்தான் இருக்கின்றது என்பதை இங்கு போலீஸ் அமைச்சர் அவர்கள் இல்லாவிட்டாலும் கூட சொல்லிக்கொள்கிறேன். இந்த ராஜ்யம் க்ஷேம நல சர்க்கார் என்ற முறையில் ஆட்சியை நடத்துவதற்கு லட்சியம் என்னவாக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் . . .

. . . A Welfare State is not the product of a peper Constitution. There can be no welfare without economic welfare. Now one of the most unfortunate features of the present Indian Constitution is that the position during last few years in respect of even the basic necessities has been worse than at any time during the period of the war. So far, therefore, from an improvement in the economic welbeing after the transfer of power there has been a distinct deterioration.'

என்பது க்ஷேமநல சர்க்கார் என்று குறிப்பிட்டிருப்பது, நாம் சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு நாம் சுதந்திரம் வாங்குவதற்கு முன்னால் இருந்ததைவிட இப்போது நல்ல நிலையில் வாழுகிறோம் என்பதை தவிர வேறு எதுவும் இல்லை. கனம் அங்கத்தினர் ஏழுமலை அவர்கள் "நாங்கள் சுதந்திரம் வாங்கினதினால் தானே, உங்களுக்கு எல்லாம் இங்கு உள்ளே நுழைய முடிந்தது" என்று பெரிய மனது வைத்து எங்களுக்கு வழி செய்து தந்திருப்பது போல் கூறினார், அதற்காக நான் நன்றி செலுத்துகிறேன். இருந்தாலும் அதற்குப் பிறகு அனைவரும் கூடி அரிசி கிடைக்கவில்லை, கிடைக்கிற அரிசியும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது, என்று இங்கேயுள்ள ஒவ்வொருவரும் அழுது கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில்கூட, இதையெல்லாம் போக்குவதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அது மட்டுமல்ல, இந்த நிலையை போக்குவதற்காக எல்லாக் கட்சிகளையும் அழைத்து இதைப்பற்றி ஆலோசிக்கப்படவில்லை. முக்கியமாக சொல்லப் போனால் எந்த விஷயத்திலும் இந்த சர்க்கார் திட்டவட்டமான கொள்கையை இதுவரை அனுசரிக்கவில்லை. சர்க்காரின் இந்த நிலைக்கு காரணமே எல்லா விஷயத்திலும் திட்டவட்டமான கொள்கையை நிர்ணயிக்காததுதான். அதுமட்டுமல்ல அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்களுக்குள்கூட திட்டவட்டமான அபிப்பிராயம் கிடையாது. பல்வேறு மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் மடாலயங்களிலுள்ள சொத்துக்களை எடுத்து /புறிமுதல் செய்து மக்களுக்கு பங்கிட்டு கொடுக்கவேண்டும் என்று பகுத்தறிவு பேசுகின்ற மனப்பான்மை ஒரு பக்கம் இருக்கிறது, இன்னொரு பக்கத்தில் ஆலயங்களின் பக்கத்தில் போய் கை வைத்தால் அஷ்டமத்தில் சனி பிடித்துவிடும்

என்ற தாழ்வான கருத்தைக் கொண்டவர்கள் ஒரு பக்கம், விலைவாசிகள் எல்லாம் குறைய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற வெகுஜனக்குரலை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பவர்கள் ஒரு பக்கம், ஊருக்குள்ளேயே நுழையக் கூடாது என்ற பழங்கால எண்ணத்துடன் இருப்பவர்கள் ஒரு பக்கம், இத்தனை மாறுபட்ட கருத்துள்ளவர்கள் இருக்கிறார்கள் ஒரே அமைச்சரவையில். எங்கள் பக்கத்தில் வேண்டுமென்றால் எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கலாம், ஏனென்றால் நாங்கள் நாலைந்து கட்சிகளாக இங்கே இருக்கிறோம். எங்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். அதைப்பற்றி யாரும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆனால் ஒரே கட்சியிலிருக்கின்றவர்களிடத்தில் முரண்பட்ட கருத்து இருப்பதை பார்க்கின்ற நேரத்தில் இந்த ஆட்சியாளர்களுக்கும் ஒரே விதமான கருத்து இருக்காது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. இவர்களுக்குள்ளேயே எந்த விஷயத்திலும் ஒருமித்த கருத்தே இருப்பதாகத் தெரியவில்லை என்பதை நான் நிச்சயமாக கருதுகிறேன். ஆகையினால்தான் நிலங்களுக்கு உச்ச வரம்பு கட்டவேண்டும் என்பதைப்பற்றி இப்போது பேசிய கனம் காங்கிரஸ் கட்சி கொரடா அவர்கள், நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டவேண்டியது அவசியந்தானா என்பதைப்பற்றி இனி மேலும் ஆலோசனை செய்ய வேண்டியதுதான் என்று சொன்னார்கள். ஆனால் கட்சிக்கு கட்டுப்பட்டிருக்கும் இவர்கள் இவ்விதம் சொல்லுகின்ற நேரத்தில், காங்கிரஸ் கட்சி விடுத்த தேர்தல் விக்ஞாபனத்தில் சொல்லியிருக்கிறார்கள் . . .

'On the land, all intermediaries must be progressively removed so that the land is owned by the cultivator himself. The principle of ceilings on land has been accepted and should be progressively introduced so as to bring about a better *distribution* of land.'

Better production அல்ல better distribution.

அந்தக் காலத்திலேயே நீங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'பெட்டர் ப்ரொடக்ஷன்' என்ற வார்த்தைகளைப் போடவில்லை. 'பெட்டர் டிஸ்ட்ரிப்யூஷன்' என்ற வார்த்தைகளைத்தான் போட்டிருக்கிறீர்கள். 'நிலங்களை ஒரே இடத்தில் குவித்து வைக்காமல் பரவலாக பல பேர்களிடத்தில் பங்கிட்டுத் தருவோம்' என்று தேர்தலின் போது குறிப்பிட்டு ஓட்டு வாங்கித் தான் சட்டசபைக்குள்ளே நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். இப்போது 'உற்பத்தி பெருக வேண்டுமே' என்ற எண்ணம் உங்களுக்கு வந்திருக்கிறது. இப்போது இருக்கும் முறையை மாற்றினால் உற்பத்தி இன்னும் கெட்டுவிடும் என்பது போல, நிலத்தைப் பிரிப்பதால் உற்பத்தி பாதிக்கப்பட்டு விடும் என்பது போல, நீங்கள் இப்போது பேசுகிறீர்கள். உற்பத்திப் பெருக்கிற்கும் நிலச் சீர்திருத்தத்திற்கும் சம்பந்தம் ஏற்படுத்தியதே கனம் நிதி அமைச்சரின் சாமர்த்தியத்தால் ஏற்பட்ட கொள்கைதான் என்று நான் நம்புகிறேன். இரண்டும் இரண்டு துறைகளாகவும், இரண்டுமே ஏககாலத்தில் இருக்கக்கூடிய வெவ்வேறு துறைகளாகவும் இருக்கும்படி செய்யமுடியும். நிலத்தைப் பிரிப்பதால்





உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்பட்டு விடும் என்று இவர்கள் சொல்வதையும், உற்பத்திப் பெருக்கம் வேண்டுமானால் நிலத்தில் கை வைக்கக்கூடாது என்ற சுதந்திரக் கட்சியின் கொள்கையையும் பார்க்கும்போது, ஒருவர் 'தியரெடிகலாகவும்' மற்றொருவர் 'ப்ராக்டிகலாகவும்' இருப்பது போலத் தோன்றுகிறது. ஒருவர் பேசிக் கொண்டிருக்கிறார். வேறு சிலர் அவ்வாறு நடந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்சிக்காரரிடம் கனம் நிதி அமைச்சருக்கு நெடுங்காலமாக இருந்த பாசத்தை நினைக்கும்போது எனக்கு ஒரு சந்தேகம் கூடத் தோன்றுகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் யாரைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்று எனக்குத் தெரிகிறது. எனக்கும் கூட ஒரு சந்தேகம் தோன்றுகிறது. கனம் அங்கத்தினர் யாரைப்பற்றிப் பேசுகிறாரோ அவரே 'எனக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த நாட்டின் பிரிவினை விஷயத்தைத் தவிர, கொள்கை வேறுபாடே இல்லை' என்று சொன்னார்; அவர் உண்மையைத் தான் சொல்வது வழக்கம். அவர் அவ்வாறு சொன்ன பிற்பாடு, நிலச் சீர்திருத்தம் வேண்டும் என்று சட்டசபையில் பேசும் கனம் அங்கத்தினர் அங்கே அவரிடம் வேறுவிதமாகப் பேசியிருக்கிறாரோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

SRI C. N. ANNADURAI: கனம் நிதி அமைச்சரின் சந்தேகத்தைப் போக்க வேண்டியது என் கடமை. நான் அங்கே அப்படிப் பேசவில்லை. 'சுதந்திராக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், நாடு பிரிவினை விஷயத்தைத் தவிர, வேறு எதிலும் கொள்கை வேறுபாடே இல்லை' என்று பேசிய அவர் மறுநாள் திருச்சினாப்பள்ளியில் 'காங்கிரசும் இதர கட்சிகளும் ஒன்றாகப் போய்விடும், கடைசியில் நான் மட்டும்தான் தனியாக இருப்பேன்' என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, 'கொள்கையில், நாடு பிரிவினை தவிர, சுதந்திராக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வேறுபாடு இல்லை' என்று அவர் பேசியிருப்பது அவருடைய அரசியல் தத்துவத்திற்கு உகந்த பேச்சாக இருக்குமே தவிர அதில் வேறொன்றும் இல்லை. ரகசியப் பேச்சு எதுவும் நடந்திருக்குமானால், கனம் நிதி அமைச்சருக்கும் அவருக்கும் இடையே ரகசியப் பேச்சு நடந்திருக்கக்கூடுமே தவிர எனக்கும் அவருக்குமிடையே ரகசியப் பேச்சு நடந்திருக்க முடியாது. ஆகவே கனம் அமைச்சருக்கு அப்படிப்பட்ட சந்தேகமும் இருக்க வேண்டியதில்லை.

நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு, நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கு, சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியத்தை மறுக்கும் வகையில் சில வேடிக்கையான காரணங்களும் யத்தை மறுக்கும் வகையில் சில வேடிக்கையான காரணங்களும் இங்கே வலியுறுத்தப்பட்டன. "நிலத்தைப் பிரிக்கத் தானே சட்டம்? அதற்குச் சட்டம் எதற்கு? சட்டம் வராதபோதே மக்கள் நிலத்தைப் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். ஸ்ரீ அண்ணாமலை முத்து ராஜா அவர்களுடைய தொகுதியின் பெயர் எனக்கு இப்போது

ஞாபகம் இல்லை. அவர் வாதாடியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர் கூறிய வார்த்தைகள் அவருடைய உள்ளத்திலிருந்து வந்த வார்த்தைகள். "யாருடைய நிலத்தை யார் பிரிக்கச் சொல்வது? கஷ்டப்பட்டு சம்பாதித்திருந்தால் தானே இது தெரியும்?" என்று அவர் சொன்னார். யாருக்கும் அப்படிச் சொல்லத்தான் தோன்றும். ஆனால் வேறு சிலர் "எங்களிடம் எங்கே நிலம் இருக்கிறது. இருக்கிற நிலம் எங்கள் வயிற்றுப் பாட்டுக்கே போதாது" என்று கூறினார்கள். அவ்வாறு கூறியவர்கள் கம்பனிலிருந்து காளமேகம் வரை அழைத்து 'கழனியைக் கொடுத்துவிடு. அதற்குப் பிறகு நாங்கள் செய்ய வேண்டிய பூஜைகளைச் செய்கிறோம்' என்று சொன்னார்கள். நாம் விவசாய வருமான வரி போட்டிருக்கிறோம். வாழ்க்கைச் செலவிற்கு ஆனது போக அதற்கு மேல் இருக்கக்கூடிய விவசாய வருமானத்திற்கு வரி விதிக்கப்படும் வகையில் தான் நிலக்காரர்களுக்கு விவசாய வருமான வரி போட்டிருக்கிறோம். அந்த வரி கறவைப் பசுவாக இருக்கிறதே தவிர மலட்டு மாடாக இல்லை. அந்த வரியின் மூலம் அரசாங்கத்திற்கு கொஞ்சம் வருவாய் கிடைத்துக் கொண்டுதான் இருக்கிறது. எனவே மாநிலத்தில் நிலம் இருக்கத்தான் செய்கிறது. அதைப் பிரித்துக் கொடுப்பதானால் அதை நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கலாமா அல்லது அதை கூட்டுப் பண்ணையாக வைத்து நடத்தலாமா என்று விவாதங்கள் நடக்கின்றன. இப்படிப்பட்ட தத்துவ விவாதங்கள் நடக்கும்போது பல கட்சிகள் கூடிப் பேச வேண்டும். அப்படி பல கட்சிகள் கூடிப் பேசும்போது புள்ளி விவரங்களைக் காட்டி என்னென்ன செய்யலாம் என்று கேட்காமல், "இன்னின்ன தத்துவங்களின்படி காரியங்கள் செய்ய எண்ணுகிறோம். இந்தத் தத்துவங்கள் குறித்து உங்கள் கருத்து என்ன" என்று கேட்க வேண்டும். சர்வ கட்சிக் கூட்டங்கள் அந்த முறையில் நடக்க வேண்டும் என்ற கருத்தை இந்த சமயத்தில் நான் வலியுறுத்த விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவுப் பண்ணை விஷயத்திலேகூட ஆளும் கட்சியில் இருக்கிற அந்த முக்கியமானவர்களுக்குள்ளேயே ஒருமித்த கருத்து இருப்பதாக என்னால் உணர்ந்து பார்க்க முடியவில்லை. அதைப்பற்றி நமது அமைச்சர் அவர்களுக்கே ஐயப்பாடு இருக்கும் என்று நான் நினைக்கிறேன். கூட்டுறவுப் பண்ணை சரிவர நடைபெறவில்லை என்றும், ஐந்து அல்லது ஆறு ஆண்டு காலத்தில் பல பண்ணைகள் போய்விட்டது என்றும், இப்போது ஓரிரு பண்ணைகள்தான் உயிர் பிழைத்துக் கொண்டிருக்கின்றன என்றும் இந்த மாமன்றத்திலே ஒரு முறை பேசியிருக்கிறார்கள். இப்போது பொது மக்கள் என்ன எண்ணிப் பார்ப்பார்கள் என்று நாம் ஒருமுகமாக, நாம் சார்ந்திருக்கிற கட்சிகளை மறந்து எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் மக்களுக்குச் சொல்லுகிறோம் உற்பத்தி பெருகியிருக்கிறது என்று. நாம் மக்களுக்குச் சொல்லி வந்திருக்கிறோம் நிலத்தைப் பிரிக்கப் போகிறோம் என்று. மறுபடியும் நாமே நிலத்தைப் பிரிப்பதில் சங்கடம் இருக்கிறது என்று சொல்லுகிறோம். பிறகு நிலத்தைப் பிரிப்பதில் கூட சங்கடம் இல்லை, அப்படிப் பிரித்தவுடன் யாருக்குக் கொடுப்பது என்பதில் தான் சந்தேகம் இருக்கிறது என்று சொல்லுகிறோம். அதிகப்படியாக உள்ள நிலங்களை கூட்டுப் பண்ணைக்குக் கொடுக்கலாமே என்று ஒரு இடத்தில் சொல்லுகிறோம். வேறொரு இடத்தில்



கூட்டுறவுத் துறை சரியான முறையில் இயங்கவில்லை என்ற ஐயப்பாட்டை நாமே கிளப்புகிறோம். வியாபாரிகள் கொடுமை செய்கிறார்கள் என்று சொல்லுகிறோம். விவசாயிகள் நெல்லைப் பதுக்கி விட்டார்கள் என்று நாமே சொல்லுகிறோம். உற்பத்தி போதுமான அளவு பெருகவில்லை என்றும் நாமே சொல்லுகிறோம். உற்பத்தி பெருகி விட்டது என்றும் நாமே சொல்லுகிறோம். இப்படி நீங்கள் கொள்கையில் தெளிவில்லாமல் எடுத்துச் சொல்லுகிற கருத்துக்கள் பொது மக்களுடைய மனதில் எந்த விதமான குழப்பத்தை ஏற்படுத்தும் என்று எண்ணிப் பார்த்தால், திட்டவட்டமான கொள்கை இல்லாத காரணத்தினால், சமயத்திற்குத் தகுந்தபடி பதிலளித்துக்கொண்டு வருகிறோம் என்பது தெரியும். இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னால் நடைபெற்ற உணவு விவாதங்களில் வியாபாரிகளைப்பற்றி வெகு பலமாகக் கண்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. உணவு அமைச்சர் முதல் வேறு அங்கத்தினர் ஈராக அத்தனை பேர்களும் வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கி வைத்து கொள்ளை லாபம் அடிக்கும் நோக்கம் கொண்டிருக்கிறார்கள், இந்த வியாபாரிகளை நம்பியிருக்கும் வரையில் காரியம் உருப்படாது, ஆகையால் நாங்களே நெல்லை கொள் முதல் செய்யப் போகிறோம் என்று இதே மாமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த நேரத்தில் வியாபாரிகளைப் பற்றிய கவனமே ஏற்படாமல் அனைவரும் வேறு விதத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் தயவு செய்து திட்ட வட்டமாகக் கூறவேண்டும். வியாபாரிகளைப் பற்றி நீங்கள் வைத்துக் கொண்டிருந்த கருத்து அப்படியே இருக்கிறதா அல்லது வேறு விதமாக மாறியிருக்கிறதா? அதே போல "ஸ்டேட் டிரேடிங்"—அதாவது தானிய வியாபாரத்தை சர்க்காரே மேற்கொள்ளுவது—என்ற கொள்கை அப்படியே இருக்கிறதா அல்லது அதை மாற்றிக்கொள்ளப் போகிறீர்களா? இந்திய சர்க்காருடைய துணையில் வாழுகிற சர்க்கார் என்ற முறையில், இந்திய சர்க்கார் உணவு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள், அதனால் ஏதாவது உணவுத் தட்டுப்பாடு ஏற்படுமானால் வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் என்ற கொள்கை இருக்கிறதா அல்லது கைவிடப்பட்டு விட்டதா? இதற்கெல்லாம் விளக்கம் தெரிந்தால் அல்லவா நாங்கள் யோசனைகளைச் சொல்ல முடியும்? இதற்கு விளக்கம் ஏதும் தராத நிலையில் "உங்களுக்கு தோன்றிய யோசனைகளைச் சொல்லுங்கள், உங்களுக்குத் தோன்றிய யோசனைகளைச் சொல்லுங்கள்" என்று எதிர்க் கட்சியிலுள்ள எங்களைக் கேட்டால் எப்படிச் சொல்ல முடியும்? இப்படி விளக்கம் தராத நிலையில் கூட, "லெவி" வையுங்கள் என்று சொன்னால், அதற்கு அமைச்சர் அவர்கள் சாவதானமாக "அது நல்லதுதான், ஆனாலும் இதில் இருக்கக்கூடிய சங்கடங்கள் ஒன்று, இரண்டு, மூன்று" என்று அவருடைய கஷ்டங்களைச் சொல்வார்கள். கடைசியில் எதிர்க் கட்சிகள் யோசனை சொல்லவில்லை, சொன்ன யோசனைகள் சரியில்லை என்றுகூறி அவர்களுடைய மேதா விலாசத்தில் நம்பிக்கைவைத்து இப்படி பொழுது போக்காகப் பேசிக்கொண்டிருந்தால் பிரச்னைகள் காத்துக்கொண்டு இருக்காது. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அவைகளை தயவுசெய்து சொல்லுங்கள். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை

எடுத்துச் சொன்னால், செய்ய இருக்கிற காரியம் சரிதானா அல்லவா என்பதை எதிர்க் கட்சியில் இருக்கும் நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். நீங்கள் நாட்டு மக்களுக்குப் பதிலளிக்கக் கடமைப் பட்டிருக்கிறீர்கள். நீங்கள் நாட்டு மக்களுக்குச் சோறு போடக் கடமைப் பட்டிருக்கிறீர்கள். பல அங்கத்தினர்கள்—எங்கள் தரப்பு அங்கத்தினர்கள்—இந்த உரையிலே உப்பு இல்லை, சப்பு இல்லை, காரம் இல்லை என்று சொன்னார்கள். இதிலே உப்பு இல்லாதது மட்டுமல்ல, காரமில்லாதது மட்டுமல்ல, சாரம் இல்லாதது மட்டுமல்ல, வெறும் சோறு கூட இல்லை. இன்று சோறுகூட இல்லை என்று கவர்னர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கு மட்டுமல்ல, சில திங்களுக்கு முன்னால் நடந்த கவர்னர்கள் மாநாட்டில், நம் மாநில கவர்னர் உட்பட எல்லா கவர்னர்களும்கூடி நம் நாட்டில் இரண்டு வித ஆபத்துக்கள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். ஒன்று எல்லைப் பிரச்னை, மற்றொன்று வயிற்றுப் பிரச்னை. இந்த இரண்டு பிரச்னைகளும் சீரான, சரியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். இப்படி அனைவருக்கும் இருக்கிற இந்தப் பிரச்னைக்கு என்ன பரிகாரம் என்று கவனிக்கும்போது, இதற்குப் பரிகாரம் "உற்பத்தியைப் பெருக்குங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்று மட்டும் சொல்வதில் என்ன பிரயோசனம் இருக்கிறது?

நான் சர்க்காரின் வருமானத்தைப் பெருக்குவதற்காக, கசாப்புக் கடை வையுங்கள், கோழிப் பண்ணை வையுங்கள் என்று சொன்ன நேரத்தில், நிதியமைச்சர் சாமர்த்தியமாக, "ஐயையோ, கோழி முட்டை யிடுமா, பத்து வருடம் காத்துக் கொண்டு இருக்கலாம்" என்று அழகாகச் சொன்னார்கள். அதே விதத்தில், உற்பத்தியைப் பெருக்குங்கள், பெருக்குங்கள் என்று நீங்கள் சொல்லும் நேரத்தில், "வாருங்கள், அனைவரும் வாய்க்கால் வெட்டுவோம், அனைவரும் உழுவோம், நாற்று நடுவோம்—தெரியாவிட்டால், காங்கிரஸ் கட்சி கொரடா மறந்து விட்டிருக்க மாட்டார்கள் சிறு வயதில் செய்த உழவை; இதோ பார் காட்டுகிறேன் என்று சொல்வார்கள், அதுகூட நமக்குத் தெரியாது—இப்படித்தான், அப்படித்தான் உழுது, வளர்ந்து அறுவடையாகி அதற்குப் பிறகு சாப்பாடு என்று சொல்கிறார்களா? அல்லது, சில மாய மந்திரங்கள் சொல்வது போல் உணவு உற்பத்தி ஆகும் வரை எல்லா மக்களும் மயங்கிக் கடக்கக் கடவது, அடுத்த தேர்தலின்போது எழுந்து வரக்கடவது என்று சாபம் கொடுக்கலாம். (சிரிப்பு.)

திருப்பித் திருப்பி எங்களை, திட்டம் கொடுங்கள், திட்டம் கொடுங்கள், என்றால், எங்களிடத்திலே நீங்கள் என்ன தகவலைத் தந்தீர்கள்? உங்கள், புள்ளி விவரங்களைச் சந்தேகிக்கிறேன். நீங்கள் சேகரித்திற்கும் புள்ளி விவரங்கள் உண்மை நிலையைக் காட்டவில்லை என்ற ஐயப்பாடு பரவலாக ஏற்பட்டிருக்கிறது. இந்திய சர்க்காரே, இராஜ்யங்களிலிருந்து வரும் உணவு உற்பத்தி புள்ளி விவரங்கள் ஐயந்திரிபர அமையவில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் அடிப்படைக்குப் போனால், உங்கள் புள்ளி விவர சாத்திரமே, பரிபூரணமானதாயில்லை. உங்கள் புள்ளி விவரம் அந்தந்த நேரத்தில், மக்களை அடக்க, இந்த மாமன்றத்திலே கேள்விக்குப் பதில் சொல்ல, பயன் படுகிறதே



தவிர, சரியாகச் சீராக இல்லை. ஆனால், என்ன செய்திருக்கிறீர்கள் என்று அறிந்து கொள்ளலாம் என்றால், இந்தப் பிரச்னையை கவர்னரவர்கள் குறிப்பிட்டிருக்க வேண்டாமா. கவலையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். யாருக்குத்தான் கவலை இல்லை? குழந்தைக்குப் பால் இல்லையென்று தாய்க்குக் கவலை; கொண்டைக்குப் பூவில்லை யென்று அவளுக்குக் கவலை யென்று வேடிக்கையாகப் பாடுவார்கள். கவலை இருக்கத்தான் செய்யும். கவலை இருக்கும் நேரத்தில் கவலையைப் போக்க செய்யப்பட்டது என்ன? ஒரு கட்சிக்காரர்கள், இன்னொரு கட்சிக்காரர்களோடு வார்த்தை யாடுகிறோம். கனம் ஏழுமலை சினிமாவுக்கு உச்ச வரம்பு கட்டு என்று சொல்வதும், நான் மோட்டாருக்கு உச்ச வரம்பு கட்டு என்று சொல்வதுமாக இப்படி நலங்கு விளையாடிக் கொண்டிருந்தால் என்ன பயன்? கொள்கையில் உறுதி இருக்க வேண்டும். திட்டம் போட்டுக்கொண்டே இருந்தால் போதாது. உணவு உற்பத்தி பெருகுவதற்கு, உரம் தேவை என்று சொல்லி விட்டு, உரம் எங்களிடம் இல்லையென்றால் என்ன பயன். உணவு உற்பத்தி எப்படிப் பெருக முடியும்?

பல அங்கத்தினர்கள் உணவு விலையை இறக்க வேண்டாம், அது விவசாயத்தைப் பாதிக்கும் என்று அவர்கள் உணர்ந்து பேசினார்கள். அவர்களுடைய உணர்ச்சியை மதிக்கிறேன். ஏனென்றால், விவசாயிக்குக் கொடுக்கவேண்டிய பணம் கொடுக்காவிட்டால், நம் நாட்டுப் பொருளாதாரம் இன்று இருக்கும் நிலையில், மிக முக்கியமான ஒரு பகுதி சமுதாயத்தில் ஒடிந்துபோகும். விவசாயிக்கு, விவசாயத்திற்கு வந்து இருக்கும் கஷ்டம் என்ன? விவசாயியின் கஷ்டம். ரூ. 50 முட்டு வழிக்குச் செலவிட்டு ரூ. 100 கிடைத்தால், ரூ. 50 லாபம் கிடைக்கும். முட்டு வழிக்கு ரூ. 250 ஆகி, ரூ. 300-க்கு விற்றால், அப்பவும் லாபம் ரூ. 50 தான். இதில் முக்கியமானது, (Ratio of profit) செலவுக்கும் விற்பனைக்கும் இடையிலே, கணிசமான லாபம் வருகிறதா என்பதுதான் அவர்களுக்குக் கவலை, முக்கியமானது. ஐம்பது ரூபாயில் முடிந்தாலும் ஒன்றுதான், முன்னூறு ரூபாயில் முடிந்தாலும் ஒன்றுதான். ஆட்சியாளர்கள் உற்பத்திச் செலவைக் குறைக்க என்ன வழி சொல்லி நாங்கள் வேண்டாம் என்றோம்? எப்போதாவது, விவசாயிக்கு நீங்கள் உரத்தை ரூ. 5-க்குக் கொடுக்கிறோம் என்று சொன்னால், இல்லை, இல்லை, ரூ. 5-க்குக் கொடுக்கக்கூடாது, ரூ. 17¾-க்குத்தான் கொடுக்கவேண்டும் என்று வாதாடினோமா? எங்கே நீங்கள் திட்டங்களைக் காட்டினீர்கள்? எங்கே உங்களைத் திட்டம் போட விடுகிறார்கள்? திட்டத்தைக் கொடுப்பதற்கு மேலே சொல்ல வேண்டியிருக்கிறதே தவிர, திட்டம் போடுவது உங்கள் இடத்தில் எங்கே இருக்கிறது? எந்தத் துறையை உங்களிடம் விடுகிறார்கள் என்று கேட்கிறேன்.

டில்லியில் உணவு மந்திரி எதற்காக? சென்னையிலே உணவு மந்திரி இருக்கிறார், சென்னை ராஜ்ய மக்களுக்கு உணவு அளிக்க; ஆந்திர ராஜ்யத்திலே உணவு மந்திரி இருக்கிறார், ஆந்திர மக்களுக்கு உணவு அளிக்க; கேரள ராஜ்யத்திலே உணவு மந்திரி இருந்தார், அந்த மக்களுக்கு உணவு கொடுக்க. டில்லி மந்திரி எந்த ராஜ்ய மக்களுக்கு உணவு அளிக்கிறார்? எந்த ராஜ்யம்

அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது? மாநிலத்தில் உள்ள மந்திரிகள் கொடுப்பதை தொகுத்து அனுப்பவும், அப்படி அவர்கள் ஏதாவது திட்டம் கொண்டு வந்தால், அது சரியில்லையென்று சொல்வதற்கும், அவர்கள் போட்டிருக்கும் திட்டங்களைச் சேர்த்து இணைப்பதற்கும், இதற்கு ஒரு உணவு மந்திரி இருப்பானேன்? அரசியல் சட்டத்தின்படி ராஜ்யமே செய்துகொள்ளக் கூடிய காரியம் என்று ஏன் வலியுறுத்தக்கூடாது? ஒரு **Minister for co-ordination** என்று, இதையெல்லாம் இணைப்பதற்கு மட்டும் ஒரு பெரிய மந்திரி இருக்கட்டும். ஒவ்வொரு துறைக்கும் தேவையில்லையென்று ஏன் வலியுறுத்தக்கூடாது? எதற்கெடுத்தாலும் நேஷனல் டெவலப்மெண்ட் கௌன்சிலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. நமது மாநிலத்தின் நல்ல காலம், நம்முடைய கருத்தை
5 p.m. வலியுறுத்த ஒரு சாமர்த்தியசாலி நமக்குக் கிடைத்திருக்கிறார்—நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்கள். அங்கு போவதால் அவர் வாதாட வேண்டியதாக இருக்கிறது. எத்தனை நாட்களுக்குத்தான் ஒரு வக்கீலை நம்பி வாழ முடியும். எந்த நாளில் எந்தக் கட்சியைச் சேரப் போகிறார்களோ நமக்குத் தெரியாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது வரைக்கும் நான் எந்தக் கட்சியிலிருந்தும் மாறியது இல்லை. கட்சியைவிட்டு வேறு கட்சிக்கு மாறுவது என்பது எனக்குக் கிடையாது.

SRI C. N. ANNADURAI : அப்படி அவர் மாறாமல் இருப்பதால் அவருக்கு லாபகரமாக இருக்கலாம். லாபகரமாக இருப்பதால் தான் ஒரே கட்சியில் இருக்கிறீர்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : லாபத்தை நான் எதிர்பார்க்கவில்லை. லாபத்தை எதிர்பார்த்தும் நஷ்டத்தை எதிர்பார்த்தும் நான் கட்சி மாறுவது இல்லை.

SRI C. N. ANNADURAI : எதிர் பார்க்காமலேதான் லாபம் வருகிறதே. நம்முடைய நாட்டில் இங்கே ஒரு உணவு அமைச்சரும் அங்கே ஒரு உணவு அமைச்சரும் எதற்கு? இங்கு உள்ள உணவு அமைச்சர் சொல்வதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களா? உணவு அளிக்கவேண்டும் என்று கேட்டு தென் மண்டலத்தை கலைக்க வேண்டும் என்று சொன்னால் அதை கலைக்க முடியாது உங்களுக்குத் தேவையான உணவைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் உணவு மண்டலத்தைக் கலைக்க முடியாது என்று மத்திய அரசாங்கம் சொல்லக்கூடிய காரணம் என்னவென்றால் கேரளாவுக்கும், மைசூருக்கும், மற்ற இடங்களுக்கும் நாங்கள் அரிசி அனுப்பிக்க வேண்டியதாக இருக்கிறது, 9½ லட்சம் டன் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி தென் மண்டலத்தைக் கலைக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்களுடைய பொறுப்பை மறந்துவிடுகிறார்கள். அங்கே இருக்கிற உணவு அமைச்சர் பதவி எவ்வளவோ ஆபத்தானது என்பது தெரியவருகிறது. அவர்களுடைய ஆயுள் காலத்திற்குள் அந்தப் பதவி ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இந்தப் பனிரெண்டு ஆண்டில் ஐந்து உணவு அமைச்சர்கள் டில்லியில் மாறியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் இந்த உணவுப் பிரச்னையை எப்படி தீர்க்கப் போகிறோம் என்பதுதான்





தெரியவில்லை. அதைப்போலவேதான் இப்பொழுது நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது என்பதும். இது பத்து ஆண்டு காலமாகவே அனைவருடைய மனதிலும் இருந்துகொண்டு வந்தது. பலர் பலவிதமாக இம்மாதிரி பிரித்து விடுவார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியாதா? அப்படி தெரிந்துக்கொள்ளக்கூடிய ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்களுக்கு அதைத் தெரிந்துகொள்வதற்கு ஆதாரங்கள் கிடைக்காமலா போய்விட்டது. அவர்களுடைய சுற்றுப் பிரயாணத்தில் அவர்கள் நிலச் சொந்தக்காரர்களை சந்திக்கவில்லையா? அப்படிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் கதர் அணிந்த கனவான்களாக இன்றையதினம் இல்லையா? இப்படி நிலத்தை எல்லாம் அவர்கள் பிரித்துவிடப் போகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியாதா? அதைத் தெரிந்துக்கொண்டு அதைத் தடுப்பதற்கு என்ன? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்? இன்ஷூரென்சு கம்பெனி, பாங்குகள் முதலியவைகளை தேசீய மயமாக்குவதாக இருந்தால் உடனே அங்கே இருக்கக்கூடியவைகளையெல்லாம் ப்ரீஸ் அதாவது முடக்கி வைக்கிறார்கள் அல்லவா? அதைப்போலவே இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவர்களுடைய நிலத்தை முடக்கி வைப்பதற்கு என்ன? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள ஏன் தயங்குகிறார்கள்? அப்படி முடக்கி வைத்தால் கட்சியே கலகலத்துப்போய்விடும் என்ற அச்சம் உடையவர்களாக இருக்கிறார்களா? அந்த அச்சத்தின் காரணமாகத்தான் அப்படி நிலங்களை முடக்கி வைக்காமல் இருக்கிறார்களா? அதே நேரத்தில் பஸ்களை தேசீய மயமாக்க வேண்டும் என்று சொன்னால் காங்கிரஸ் கட்சியைக் கெடுக்கத்தானே அப்படிச் சொல்லுகிறார்கள் என்று சொல்லுகிறீர்கள். தாங்கள் பெரிய தேசீயவாதிகளாக வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கேட்டாலும் பரவாயில்லை. நாடு வாழ்ந்தால் போதும் என்ற கொள்கையை உடையவர்களாக இருக்க வேண்டும். நாடு கெட்டாலும் சரி காங்கிரஸ் கட்சி வாழவேண்டும் என்று நினைப்பது அறம் கலந்த அரசியல் ஆகாது. ஆகவே நான் சொல்லுகிறேன், இப்படி நில உச்ச வரம்பு கட்டுவதைப்பற்றி மக்களுக்கு எவ்வளவு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். உழவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்று பேசிய காங்கிரஸ் பெரும் தலைவர்கள் யார்? பேசாது இருந்து நிலத்தைக் கேட்காத உழவன் யார்? அதை வாங்கித் தருவதற்கு காங்கிரஸ் கட்சியினால் முடியுமா? அதை வாங்கித் தருவதற்கு காங்கிரஸ் கட்சியினால் முடியாது என்பதை உணர்ந்து புரட்சிகரமான திட்டத்தையுடைய கம்யூனிஸ்ட் கட்சியால்தான் கொண்டுவர முடியும் என்று கூறியதால்தான் உழவர்கள், பெருங்குடி மக்கள் பெருவாரியாக சென்ற தடவை அவர்களை ஆதரித்தார்கள். மறுபடியும் அந்த உழவர் பெருங்குடி மக்களை தங்கள் பக்கத்தில் இழுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே 60—40 என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது உங்களுக்குத்தான் நிலம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அவர்களை தங்கள் பக்கத்தில் இழுத்துக்கொள்வதற்கு சில கருத்துக்களை இங்கே பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். பள்ளிக்கூடங்களுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள் என்றும் ஆலயங்களுக்கு எழுதி வைத்திருக்கின்றார்கள் என்றும் பேசியிருக்

[Sri C. N. Annadurai] [10th December 1959

கிறார்கள். நீங்கள் எல்லோரும் ஒரே முகாமில் இருப்பதால் அவ்வப்போது உங்களுக்கு இந்தச் செய்திகள் எல்லாம் கிடைத்திருக்கின்றன. ஆனால் நான் தொலைவில் இருப்பதால் எனக்கு இந்தப் பிரச்னைகள் எல்லாம் அவ்வளவாகத் தெரியாது. ஆனால் இன்றைக்கு நிலத்தைப் பிரித்து விடுகிறார்கள் என்று தோன்றுகிற நேரத்தில் அவர்களுடைய நிலத்தையெல்லாம் முடக்கி இருக்கலாம். ராஜஸ்தானத்தில் அதைப்போலவேதான் இடைக்காலத்தில் நிலத்தை பகிர்ந்து கொடுக்காமல் இருக்க வேண்டும் என்று முயற்சி செய்த நேரத்தில் ப்ளானிங் கமிஷன் குறுக்கிட்டு சட்டத்தில் அவ்வாறு இடம் இல்லை அப்படிப்பட்ட ஒரு சட்டம் போடக்கூடாது என்று சொன்னார்கள். நாங்கள் சொல்லக்கூடிய வாதங்களை வலியுறுத்தினால் உங்களுடைய கரங்கள் கட்டுப்பட்டிருக்கின்றன. டில்லியிலுள்ள எதாச்சிகாரத்திற்கு நீங்கள் பதில் சொல்லிவிட்டுத்தான் திரும்ப வேண்டுமே தவிர ஒரு துறையிலாவது உங்களுக்கு சுதந்திரம் அளிக்கப்படவில்லை. உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற சுதந்திரம் எல்லாம் உங்கள் பக்கத்து எண்ணிக்கை குறைந்துவிடாமல் பார்த்துக்கொண்டு மகிழ்ந்திருப்பதற்குத்தான் தரப்பட்டிருக்கிறது. மக்களுடைய கோபதாபம் எங்கே தங்கள் பக்கம் திரும்பிவிடப் போகிறதோ என்று மோட்டாருக்கு முன்னால் வைக்கிற ஷாக் அப்சர்வரைப்போல் தங்களுக்கு முன்னே உங்களை அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வருகிற கோபம் எல்லாம் உங்கள் பேரில் பாயட்டும், நாம் தொலைவில் இருந்து வேடிக்கை பார்ப்போம் என்கிற ரீதியில் தான் உங்களை இங்கே முன்னணியில் நிறுத்தி வைத்திருக்கிறார்களே தவிர உண்மையான அதிகாரத்தை, பிரச்சனையைத் தீர்க்கக்கூடிய அதிகாரத்தை உங்களிடம் அவர்கள் ஒப்படைக்கவில்லை.

புதிதாக வந்த மத்திய உணவு மந்திரி சொன்னார், "நான் அமெரிக்காவுடன் பேசி இந்த நாட்டில் உணவு பாங்க் வைக்கப் போகிறேன். அமெரிக்க நாட்டார்கள் இன்றையதினம் தங்கள் நாட்டில் உற்பத்தியாகின்ற அதிகமான உணவை பத்திரமாகச் சேமித்து வைப்பதற்காக மட்டும் 500 கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். அங்கே அப்படிச் சேமிப்புக் கிடங்குகளை வைப்பதற்குப் பதிலாக இந்தியாவில் கொண்டுவந்து புட் பாங்கை வைத்து இங்கு உள்ள மக்களுக்கு பஞ்சம் வருகிற நேரத்தில் அந்த உணவைப் பங்கிட்டுக் கொடுக்கும்படியாகச் செய்யப்போகிறேன்" என்று சொன்னார்கள். இப்போது அந்த அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர் டெல்லிக்கு வந்திருக்கிறார். நம்முடைய நிதி மந்திரி அவர்களும், உணவு மந்திரி அவர்களும் டெல்லிக்கு முன்பு அடிக்கடி போன காலத்தில் எல்லாம் இப்படி அவர்களது ஆணைக்கு அடிபணிந்து போய்க்கொண்டிருக்கிறார்களே என்று நான் வருத்தப்பட்டிருக்கிறேன். அப்படி இன்றுவரை அவர்கள் கூப்பிட்ட போதெல்லாம் போய்க்கொண்டிருந்தவர்கள் இன்று நாட்டு மக்களுடைய சார்பில் டெல்லிக்குச் சென்று ஐசன்ஹோவரைச் சந்தித்து இந்தியாவில் புட் பாங்க் ஏற்படுத்துவது என்றால் அதைச் சென்னையில் வைக்கச் சொல்லுங்கள். வடக்கே வைத்தால் கோதுமை பாங்காகத்தான் வைப்பார்கள். இங்கு அதைக் கொண்டுவந்தால் அரிசி பாங்காகவாவது வைக்கலாம். (ஒரு



10th December 1959] [Sri C. N. Annadurai]

குரல்—அமெரிக்காவில் அரிசி ஏது?) தென் அமெரிக்க நாட்டில் இருந்து, அர்ஜெண்டைனா நாட்டில் இருந்து அரிசி கொண்டு வரலாம். (கனம் ஸ்ரீ ஸி. சுப்ரமணியம்:—அதற்கு ஐசன்ஹோவரைச் சந்தித்துப் பயன் இல்லை) அப்படி கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்வது ஐசன்ஹோவரின் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட்டிருக்கிறார்கள் என்றல்ல. அவர்களுக்கு இருக்கிற செல்வாக்கை இப்படி உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்வது அரசியல் நாகரீகம் அல்ல என்பதற்காகப் பேசுகின்றார்கள். ஐசன்ஹோவர் பார்த்தால் அரிசியை வாங்கித்தரவா முடியாது.

இன்னொன்று. ப்ரொக்யூர்மெண்டு அல்லது லெவி இந்த இரண்டிலே எதை வெற்றிகரமாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறதோ அதை தைரியமாகக் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்வதற்கு முன்னால் தாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்ற கருத்தை இந்த மன்றத்தில் சொல்லுங்கள். அதன்பேரில் பல அங்கத்தினர்களும் தங்கள் கருத்துக்களைச் சொல்லக்கூடும். அதைவிட்டுவிட்டு நாங்கள் எதைச் செய்தாலும் குற்றம் சொல்லுகிறார்கள் . எதிர்க்கட்சிக்காரர்கள் என்று சொன்னால் அது சரியானதாக ஆகாது. ரூபாய்க்கு இரண்டு படி அரிசி விற்கிறது என்றால் நாங்கள் குற்றம் சொல்ல முடியுமா? கேட்கக்கூடியவர்களுக்கு புளி, சர்க்கரை எல்லாம் கிடைக்கிறது என்று சொன்னால் நாங்கள் குற்றம் சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னாலும் யார் காதுக்காவது அது ஏறுமா? குற்றம் சொல்லுகிறார்கள் என்றால் இருக்கக்கூடிய குற்றங்களை எடுத்துச் சொல்கிறோமே தவிர இல்லாததை எடுத்துக் கற்பனையாகச் சொல்லவில்லை. இருப்பதை எடுத்துச் சொல்வதற்கே நாங்கள் திண்டாடுகிறோம். அதையும் நிதி அமைச்சர் அவர்கள் ஒட்டியும், வெட்டியும் தகர்த்து பேசி குறைகள் என்று எடுத்துக் காட்டியவற்றைக்கூட இல்லையென்று வாதமிடுகிற திறன் படைத்தவர். இன்னும் இல்லாததைக் கொண்டு வந்து நாங்கள் எப்படி ஸ்தாபிக்க முடியும்?

ஆகையால் நாட்டில் பஞ்சம் இருக்கிறது. உணவுப் பொருள் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் விலை இப்படி ஏறிவிட்டால் விவசாயிகளுக்குத் துன்பம் வந்துவிடுமோ என்று அவர்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் எனக்குத் தெரிந்தவரையில் உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க சில லட்சம் டன் உணவுப் பொருள்களாவது நமது சர்க்காரிடத்தில் பப்பர் ஸ்டாக்காக இருக்கவேண்டும். அதைப் போலவே விவசாயிகளுடைய அடக்கவிலையைப் பார்த்து அவர்கள் கணக்குப்படி அவர்களுக்கு நஷ்டம் ஏற்படாதிருக்க சப்ஸிடி கொடுப்பதற்கும் இந்தச் சர்க்கார் முன் வர வேண்டும். புரட்சிகரமான திட்டங்களை வைத்திருக்கிற சீன நாட்டில் கூட விவசாயிகளுக்கு அம்மாதிரி பணம் கொடுப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். ஆனால் இன்று இருக்கக்கூடிய நிலைமையில் அதுவும் அந்தச் சீனச் செய்தியை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம் என்பது எனக்குத் தெரியாது. ஆனாலும் விவசாயிகளுக்கு தொல்லை உண்டாகாதிருக்க அவர்களைக் காப்பாற்றவேண்டியது நம் அரசாங்கத்தின் கடமை. அவர்களுடைய நிலை, மக்களுடைய நிலை ஆகிய இரண்டையும் சேர்த்து இணைத்துப் பார்த்தால் பப்பர்

ஸ்டாக்கும் கையில் எப்போதும் வைத்திருக்கவேண்டும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் சப்ஸிடி கொடுப்பதற்கும் பணம் ஒதுக்கி வைத்திருக்கவேண்டும்.

அதற்கு ஏது எங்களிடம் பணம்? எப்படி ஒதுக்குவது? அதற்கு முன்னால்தான் டெல்லியில் உள்ளவர்கள் இன்ன இன்ன திட்டங்களுக்கான இன்ன இன்ன தொகை ஒதுக்கிவிடுங்கள் என்று சொல்லிவிடுகிறார்களே?

ஆகையால் தான்—நான் திருப்பித் திருப்பி பழைய பாட்டையே பாடுகின்றேன் என்று சிலர் என்னிடத்தில் வருத்தம் அடைந்தாலும் கூட நான் சொல்லுகிறேன். இவர்களுக்குப் போதுமான அதிகாரம் இல்லாத காரணத்தினால் தான் இந்தப் பிரச்சினை நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை நீடிக்காமல் இருக்க வேண்டுமானால் உணவுப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் நமது அமைச்சர் அவர்கள் நாளையதினம் இந்த மன்றத்தில் திட்டவட்டமாக இது தான் எங்கள் கொள்கை என்று சொல்லி அதையும் விவாதத்திற்கு கொண்டு வந்து, மன்றத்தின் முடிவு இது, இந்த வகையில் தான் நாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறோம் என்று கண்டிப்பாக அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அப்போது நிச்சயமாக உணவுப் பிரச்சினை வெற்றிகரமாக தீர்க்கப்படுவதற்கு வழியாவது ஏற்படும்.

உணவுப் பிரச்சினை தீர்க்கப் படாவிட்டால் திட்டங்கள் எவ்வளவு தீவிரமாக போடப்பட்டாலும் நிச்சயமாக அவைகள் வெற்றி பெறாது என்பதை அவர்களே உணர்ந்திருக்கிறார்கள். அதைச் சொல்லும்போது திட்டங்களைப் பற்றி நான் ஓரிரு வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும், ஒத்துழைக்க வேண்டுமென்று பல தடவை அன்பழைப்புகள் நம் அமைச்சர்களால் தரப்படுகிறது. நான் அந்த அன்பழைப்புகளைப் பெரிதும் மதிக்கிறேன். ஆனால் அந்த அன்பழைப்புகளைத் தரும் அதே சமயத்தில் வெளியேயுள்ள அவர்களது அதிகார வர்க்கமும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் எந்த வழியில் நடந்து கொள்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல எனக்குச் சந்தர்ப்பம் வந்ததில்லை. ஆனால் இன்றையதினம் அதுபற்றி குறிப்பிட விரும்புகிறேன். நிதியமைச்சர் அவர்கள் காஞ்சிபுரத்திற்கு ஒரு கல்விக் கூடத்தை திறக்க வந்தார்கள். இங்கேயிருந்து புறப்படுகிறபோது அவர் என்னிடம் சொன்னார், உங்கள் ஊருக்கு நான் போகிறேன், நீங்கள் வரவில்லையா என்று கேட்டார்கள். நான் அன்றையதினம் அதற்கு பதில் சொல்ல வெட்கப் பட்டேன். ஆனால் இன்றையதினம் நான் வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன், எனக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்பதை. நேற்றைய தினம் உணவு அமைச்சர் பக்தவத்ஸலம் அவர்கள் எனது தொகுதியிலுள்ள சிங்கடிவாக்கம் என்றயிடத்தில் ஒரு மருத்துவ மனையைத் திறக்கச் சென்றார்கள். அதற்கும் எனக்கு அழைப்பு அனுப்பவில்லை. அப்படி அழைப்பு அனுப்பாவிட்டாலும், அதோடு அவர்கள் விட்டு விடுவார்களா? அந்தயிடத்தில் போடப்படும் காங்கிரஸ் கூட்டத்தில் மக்களிடம் கேட்பார்கள், உங்கள் தொகுதி எம். எல். ஏ. இங்கு நடக்கிற நடவடிக்கையில் கலந்து கொண்டாரா? என்று. என்னென்ன செய்து எதிர்கட்சிகளை அழிக்கலாம் என்றே மனப்





பால் குடிக்கிறார்கள், ஆளும் கட்சிக்காரர்கள். இப்படிச் சொல்லி விட்டு உயரே இருந்து கொண்டு எங்களோடு ஒத்துழையுங்கள், ஒத்துழையுங்கள் என்று சொன்னால் நாங்கள் அவர்களிடம் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்? சமுதாய நலத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படுகிற முறையும், அவை நிறைவேற்றப்படுகிற தன்மையும் கட்சி அடிப்படையில்தான் நடத்தப்படுகிறது. இதை, ஒளிவு மறைவு இல்லாமல் எந்தயிடத்திலும் ஆதாரங்கள் காட்டி நிரூபிக்க முடியும், என்னால். என்னோடு அமைச்சர்கள் இரண்டு நாட்கள் இந்தப் பகுதிகளுக்கு வந்தால் எந்தெந்தயிடங்களில் திட்டங்கள் போடப்பட்டு நடத்தப்படுகிறது, அவைகள் அரசியல் லாபத்திற்காகத்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது, கட்சி லாபத்திற்காகத்தான் அவைகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அவர்களே நேரில் பார்க்க முடியும். கட்சிக்காக இந்தத் திட்டங்கள் பயன்படுத்தக் கூடாதென்று பெருந்தன்மை குணம் அவர்களுக்கு இருக்குமென்ற நம்பிக்கையுடன் சொல்கிறேன். அவர்களும் அவர்களது கட்சிக்காரர்களைப்போல் அவைகள் கட்சி லாபத்திற்காகத்தான் நடத்தப்படுகிறது என்று சொன்னால், காலம் வரட்டும் என்றுதான் காத்திருக்கவேண்டும். ஆக, கோடிக்கணக்கில் செலவு செய்யப்படும் பணம், சமுதாயநலத் திட்டங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணம், எப்படிச் செய்தால் தங்கள் கட்சிக்கு வலு ஏற்படும், எப்படிச் செய்தால் தங்கள் கட்சிக்கு செல்வாக்கு கிடைக்கும் என்று தேடி நடத்தப்படும் காரியங்களாக இருக்கிறதே தவிர இத்திட்டங்கள் மக்களுக்கு எங்கே மனமகிழ்ச்சியைத் தருகிறது? இந்த திட்டங்கள் பற்றி மக்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்பட்டதாக நீங்கள் மனப்பூர்வமாக நம்புகிறீர்களா? சமுதாயநலத்திட்டங்கள் பற்றி டெல்லியில் உள்ளவர்கள் அமைத்திருக்கிற ஸ்டடி டீம் சொல்லியிருக்கிறது, எல்லாம் சரி; ஆனால் மக்களின் ஒத்துழைப்பு இருக்கிறதா? எல்லாம் இருக்கிறது; ஆனால் மக்களுக்கு ஆர்வம் இல்லையே என்றுதான் சொல்கிறார்கள். இப்படி மக்களுக்கு ஆர்வம் இல்லாமல் போவதற்கு காரணம் என்ன? கட்டிடங்கள் கட்டுகிறார்கள். அதனால் காண்ட்ராக்டர்கள் தான் பிழைக்கிறார்கள் என்பது மக்களுக்குத் தெரிகிறது. மருத்துவ விடுதிகள் திறக்கிறீர்கள் ஆனால் அங்கு மருந்து சரியானபடி வருவதில்லையென்று மக்கள் சொல்கிறார்கள். போன திங்கள் எங்கள் தொகுதியில் ஒரு மருத்துவ மனை திறக்கப்பட்டது. அது சோஷியல் வெல்பெயர் போர்டால் கட்டப்பட்டது. இன்றைய தினம் எப்படியோ தெரியாது, ஆனால் நேற்றையதினம் வரை அங்கு மருந்துகள் போகவில்லை. அந்த மருத்துவ மனை சோஷியல் வெல்பெர் போர்டால் கட்டப்பட்டது. அதற்கு இந்திய அரசாங்கம் தாராளமாக மான்யம் தருகிறார்கள். ஆனால் இதுவரை அங்கே மருந்துகள் செல்லவில்லை. ஏனெனில் ஏற்கெனவே வாங்கிய மருந்துகளுக்காக ஸ்பென்ஸர் கம்பனியில் 10,000 ரூபாய்க்கு கடன் இருக்கிறது. அதை அந்த போர்ட் கட்டவில்லை. அந்தக் கடனை அடைத்த பிறகு மருந்துகள் வாங்கித் தருகிறோம் என்கிறார்கள். இப்படியிருந்தால் உங்கள் திட்டங்களைப் பற்றி மக்கள் பல்லாண்டு பாடுவார்கள் என்று கருதுகிறீர்களா? மக்களிடையே ஆர்வம் எழவில்லை, எழவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? அதற்கு காரணம் மக்களோடு தொடர்பு கொண்டு அந்தத் திட்டங்கள்

அமைவதில்லை. ஆளும் கட்சியின் செல்வாக்கிற்காகவும், அதிகார வர்க்கத்தின் செல்வாக்கிற்காகவும் தான் திட்டங்கள் இருக்கின்றனவே தவிர மக்களிடையே புது விழிப்பை ஏற்படுத்துவதற்கு மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கு அந்தத் திட்டங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. இன்னொன்று சொல்வேன், இதைவிட அதிகம் பணம் எந்த கட்சியும் செலவழிக்க முடியாது. ஆறு கோடி, எட்டு கோடி, பத்து கோடி என்று கோடிக்கணக்கில் தாராளமாக பேசுகிறோம், அந்தக் கடன்களை எப்பொழுது கேட்கப்போகிறார்களோ, எவ்வளவு அதிக வட்டி கொடுக்கப் போகிறார்களோ, தெரியாது. எவ்வளவு கோடி செலவழித்தபோதிலும் இந்த நாட்டு மக்களுக்கு போதுமான அளவிற்கு ஊதியம் கிடைப்பதில்லை. தொழிலாளர்களுக்கு போதுமான ஊதியம் கிடைப்பதில்லை. என். ஜி. ஓ- க்களின் மனதில் திருப்தியில்லை. இவைகளுக்காக இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் நாம் செலவு செய்த பணம் இதற்காகத்தான் என்றால் இதைவிட அதிகப்பணம் நாம் எப்பொழுது செலவழிக்கப்போகிறோம்? எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் போடுகிறோம். பண்டித நேருவின் கணக்குப்படி ஐந்து ஐந்தாண்டுத்திட்டங்கள் போடலாம் என்ற கருத்து இருப்பதாகச் சொல்கிறார்கள்.

இந்த நிலையில் இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்திற்கு வந்திருக்கிறோம். இதற்காக இவ்வளவு பணம் செலவு செய்தாலும் கூட நாட்டு மக்கள் அனைவரும் ஒரு வேளை சாப்பாட்டுக்காவது வழி கிடைக்குமா என்பதை நாம் பார்க்கவேண்டும். நகரத்திலுள்ள மக்கள் பண்டங்களுக்காக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், கிராமத்திலுள்ள மக்கள் பணத்திற்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நாம் எவ்வளவு செலவு செய்தாலும் என்ன பயன்? நாமோ நம்முடைய தகுதிக்கு மீறி எவ்வளவோ பணம் செலவு செய்யப்போகிறோம், இப்போதும் செலவு செய்து கொண்டிருக்கிறோம், இந்தப்பணங்கள் எல்லாம் மக்களுக்கு சரியாகப் போய் சேருகிறதா என்பதை யாராவது கண்காணிக்கிறீர்களா? எதிர் தரப்பிலிருந்து இவைகள் எல்லாம் சொல்லப்படுகின்றன என்கின்ற கண்ணோட்டத்தோடு பார்க்காமல் ஏற்படுகின்ற கஷ்டங்களை எண்ணிப்பார்த்து, இந்தவிதமான நஷ்டங்கள் எல்லாம் ஏற்படாமல் நஷ்டங்கள் ஏற்படுவது என்றால் எல்லோருக்கும்தான்—நமக்கும் இனிமேல் உள்ளவர்களுக்கும் எங்களுக்கும் உங்களுக்கும்—ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை எல்லாம் உணர்ந்து செயலாற்றவேண்டும். நாம் எவ்வளவோ கடன்களை வாங்கி செலவு செய்தாலும் கூட இதனால் கஷ்டமடையக்கூடியவர்கள்—நாம் மட்டுமல்ல நமது பிற்கால சந்ததியார்கள் இந்த கடன் சுமையை தீர்க்கவேண்டிய நிலைமை வந்து சேரும் என்பதையும் நாம் ஞாபகத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். நாம் எவ்வளவோ முயற்சிகள் எல்லாம் செய்திருக்கிறோம், தேசீய வளர்ச்சித் திட்டம் என்று போட்டிருக்கிறோம்—சமுதாய நல வளர்ச்சித்திட்டம் என்று போட்டிருக்கிறோம். இவைகள் எல்லாம் சரியான முறையில் நடைபெறுகின்றனவா என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்தீர்களா? இதன் மூலம் ஏற்படுகின்ற பயன் என்ன நிலைமையில் இருக்கின்றது என்பதை ஆராய்ந்து பார்த்தீர்களா? இவைகளை எல்லாம் நேரில் போய் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும். நீங்கள் எல்லாம் அமைச்சர்களாக போனால் இந்த கஷ்டங்கள் எல்லாம் இதில்



இருக்கின்ற கஷ்டங்கள் எல்லாம் புரியாது, மாறு வேடம் பூண்டு போவதாக சொல்லப்படுகிறதே—கனம் அமைச்சர் ராமையா அவர்கள் கூட சமீபத்தில் மாறு வேடம் தரித்து போனார்கள் என்று கேள்விப்பட்டேன். அது பத்திரிகை வேடமா அல்லது நிஜ வேடமா என்பது எனக்குத் தெரியாது. அம்மாதிரி மாறு வேடம் போட்டுக் கொண்டு போய்ப் பார்த்தார்தான் இவற்றையெல்லாம் பார்க்க முடியும். சமுதாய நலத்திட்டத்தின்கீழ் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வாங்கப்பட்டிருக்கும் புது ஜீப்பில் அதிகாரிகளுக்கு மீன் வாங்கிக்கொண்டு போகிற காட்சிகளை நான் என் கூட அமைச்சர் அவர்கள் வருவதாக இருந்தால் காட்டுகிறேன், சமுதாய நலத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டிருக்கின்ற கட்டிடங்களை கட்டினவர்கள் மட்டுமல்ல, மேலும் கட்டுவதற்கும் அதன் மூலம் லாபம் சம்பாதிப்பதற்கும் வேண்டி அமைச்சர்களுக்கு விருந்து நடத்துவதற்காக காங்கிரஸ் தொண்டர்களின் பின்னால் சுற்றிக்கொண்டிருக்கின்ற கண்ட்ராக்டர்களைக் காட்டுகிறேன், மாடுகளை வாங்கி எஜமான் வீட்டுக்கு உடனே கொடுத்துவிடுகிற காட்சிகளைக் காட்டுகிறேன், கட்ட வேண்டிய பள்ளிக்கூடங்கள் எல்லாம் கட்டியாகிவிட்டது என்று ஏட்டில் இருந்தும் உண்மையாகவே கட்டப்படாத காட்சிகளைக் காட்டுகிறேன், போட்டிருப்பதாகக் கூறும் ரோடுகள் எல்லாம் போடப்படாதிருப்பதை நான் காட்டுகிறேன். இவைகளை எல்லாம் நான் நிரூபித்துக் காட்ட முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களேயானால், இப்போது நான் பேசியதை எல்லாம் வாபஸ் பெற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். சமுதாய நலத்திட்டத்தின் மூலமாக நீங்கள் நாட்டுமக்களுக்கு செய்யவேண்டும் என்று கருதுகிற காரியங்களை எதிர்பார்த்து, ஆளும் கட்சியாக இருந்து கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சியில் இருக்கின்ற உங்களுக்கு மக்கள் காட்டுகின்ற பயத்தை நீங்கள் பக்தி என்று நம்பிக்கொண்டிருக்கிறீர்கள், மக்கள் உங்களை நம்பி வாழ வேண்டியிருப்பதின் காரணமாக போட்ட் வோட்டுகளை எல்லாம் உங்களுடைய உண்மையான பலம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்—இவ்விதம் எல்லா விதத்திலும் நீங்கள் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள்—மக்களுடைய உள்ளங்கள் எல்லாம்—எண்ணங்கள் எல்லாம் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள முயல வேண்டும்—இன்றைக்கு ஆட்சியில் இருந்து கொண்டிருக்கின்ற காங்கிரஸ் மக்களுடைய பணத்தை எல்லாம் செலவு செய்வதைப் பார்த்து மக்களுடைய பணம் எல்லாம் "கடலில் கரைத்த பெருங்காயமாகத்" தான் போய்க்கொண்டிருக்கிறது என்று கிராமப்புரத்திலுள்ள மக்கள் எல்லாம், நகரப்புறங்களிலுள்ள மக்கள் பரவலாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அளவுக்கு ஏன் நீங்கள் கெட்ட பெயர் வாங்கவேண்டும் என்று கேட்கிறேன். இவ்விதம் கெட்ட பெயர் வாங்க வேண்டுமென்றால் நீங்கள் எல்லாம் எதற்காக இங்கே இவ்விதம் ஆட்சி செய்து கொண்டிருக்கவேண்டும்? இந்த அமைச்சரவையே தேவையில்லை, இந்த மாமன்றமே தேவையில்லை என்றுதான்—சமீபத்தில் ஆச்சாரிய கிருபளானி அவர்கள் "யூனிட்டரி பார்ம் ஆப் கவர்மெண்ட்" என்று குறிப்பிட்டது போல்—இவையெல்லாம் ஒன்றும் வேண்டாம் என்றாவது சொல்லித் தொலையுங்கள் என்றுதான் நான்

[Sri C. N. Annadurai] [10th December 1959

குறிப்பிட விரும்புகிறேன். இந்த கஷ்டங்களுக்கெல்லாம் யாரோ பொறுப்பு என்ற எண்ணந்தான் சாதரண மக்களுக்கு தோன்றும், மந்திரிகளுக்கும் இவையெல்லாம் தோன்றுவதில்லை. அமைச்சர்கள் மாலை வேளைகளில் மந்தகாசமான நேரத்தில்—மக்கள் போடும் மாலைகளை கழுத்தில் வாங்கிக்கொண்டு மக்களைப்பார்த்து புன்சிரிப்போடு "சௌக்கியமா" என்று கேட்டுவிட்டு, மக்கள் எல்லாம் பரிபூரண அன்போடு தங்களை வரவேற்றார்கள் என்ற எண்ணத்துடன், அவர்கள் கேட்கும் கோரிக்கைகளுக்கெல்லாம் "ஆகட்டும் பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு அமைச்சர்களாகிய நீங்கள் வந்து விடுகிறீர்கள், வந்து விட்டு இங்கே வந்து உட்கார்ந்து விட்டு 1,488 மைல் ரோட் போட்டிருக்கிறோம் என்று சொல்லிவிடுகிறீர்கள். ஆனால் போடப்பட்டிருக்கிற ரோடுகள் எல்லாம், எவ்விதம் இருக்கின்றன என்று பார்ப்பதற்கு வேண்டியாவது சில கிராமங்களுக்கு நமது நிதி அமைச்சர் அவர்கள் போவார்களானால், அந்த கிராமத்திற்குப் போன பின்னால் மழை பெய்து விட்டது என்றால், கிராமத்திற்கு போன அமைச்சர் அவர்கள் திரும்ப வர முடியாமல், நெப்போலியன் எல்பா தீவில் சிறை வைக்கப்பட்டது போல, சிறை வைக்கப்படுவார்கள் என்பதோடு மட்டுமல்ல—பின்னால் ரோட்டில் வந்தால் கூட அங்கேயிருக்கின்ற மண்ணில் அமைச்சர் அவர்களுடைய கார் அமிழ்ந்து, அதை வெளியே எடுத்து விடுவதற்கு அந்த கிராமத்திலுள்ள காங்கிரஸ் தொண்டர்கள் போதாது என்று வெளியூரிலிருந்து காங்கிரஸ் தொண்டர்களை கொண்டு வந்தாலும் கூட (சிரிப்பு) வெளியே கொண்டு வர முடியாது. இந்த நிலையில் மின் சாரத்தை மட்டும் 8,000 கிராமங்களுக்கு கொடுத்துவிட்டோம் என்று சொல்லுவதில் எந்தவித பயனும் இல்லை. இந்த விதமாக இருக்கின்ற நிலையை—இந்த கன்றாவியைப் பார்ப்பதற்கா வெளிச்சம் வேண்டும் என்று கிராமத்திலுள்ளவர்கள் பேசிக் கொள்கிறார்கள். ஏரிக்கரை உடைந்து போகிறது, அதையெல்லாம் கவனிக்காமல். விளக்கு எதற்கு என்று பேசிக்கொள்கிறார்கள், தமிழ் நாட்டில்கூட ஆடம்பரமாக இருக்கின்றவர்களைப் பார்த்து வெளிச்சம் போடுகிறார் என்று சொல்வதுண்டு. அதைப்போல வெறும் வெளிச்சம் மட்டும் போட்டு என்ன பிரயோசனம்? இதனால் சாதாரண கிராம மக்களுக்கு எந்தவிதமான நன்மையுமில்லை. உள்ளத்திற்கு அந்த ஒளி வர வேண்டுமானால் அவர்கள் உட்கார்ந்து சாப்பிடுகிற சமயத்தில் அவர்களுக்கு திருப்தி இருக்க வேண்டும். நான் ஏற்கெனவே இந்த சபையில், அவர்கள் சாப்பிடும்போது ஒவ்வொரு கவளத்தை உட்கொள்ளும்போது கனம் நிதி அமைச்சரை அவர்கள் வாழ்த்த வேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறேன். ஆனால், இப்போது, அவர்கள் தாங்கள் சாப்பிடும்போது மதிப்பிற்குரிய நிதி அமைச்சரை நினைக்கக்கூடாது என்று, அவர் என் நண்பர் என்ற முறையில், நான் விரும்புகிறேன். ஏனென்றால், இன்றுள்ள நிலைமையில், அவர்கள் சாப்பிடும்போது அவரை நினைத்தால் அவர்கள் அவரை வாழ்த்துவதற்குப் பதிலாக என்ன சொல்லுவார்கள் என்று சொல்லவும் எனக்கு வாய் கூசுகிறது; சாப்பிடும்போது அவரை நினைத்தால் அந்த அளவிற்குச் சொல்லிவிட்டுத்தான் அவர்கள் சாப்பிடுவார்கள். நீங்கள் ஏன் இந்த அளவிற்குக் கெட்ட பெயர் எடுக்கிறீர்கள். நீங்கள் டெல்லியில் சொல்லிவிடுங்கள்:



10th December 1959] Sri C. N. Annadurai]

"எப்படியோ நாங்கள் சாமர்த்தியத்தால் தள்ளிக்கொண்டு போகிறோம்." பம்பாயைப் பிரிக்க வேண்டுமென்று ஒரு கட்சியார் சொன்னபோது அந்த ராஜ்ய அமைச்சர்கள் மத்திய சர்க்காரிடம் ஆரம்பத்தில் "இவ்வளவு இருந்தும் பம்பாயைப் பிரிக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை" என்று சொல்லவில்லையா? அதைப்போல் நீங்களும் படிப்படியாகக் கேளுங்களேன் "மத்திய சர்க்காரின் அதிகாரத்தை எங்களுக்கு மாற்றுங்கள்" என்று நீங்கள் டெல்லியில் கேளுங்களேன். உங்கள் விருப்பமெல்லாம் "மத்திய சர்க்காராக நாமே ஆகிவிடலாம்" என்பதுதான். ஆகவே, இந்நிலையில் கவர்னர் அவர்களுடைய உரை பொம்மைக் கல்யாணம் போல்தான் இருக்கிறது. பொம்மைக் கல்யாணத்தில் நலுங்கு பாடுவார்கள். பெண் நன்றாக இருக்கிறது என்று சிலர் சொல்லுவர்கள். பிள்ளை நன்றாக இருக்கிறது என்று வேறு சிலர் சொல்வார்கள். அதே போல, சில கனம் அங்கத்தினர்கள் கவர்னர் அவர்கள் கூறிய விஷயங்களைக் குறிப்பிட்டு "அவர் எவ்வளவு பெருந்தன்மையாக இவைகளைத் தெரிவித்திருக்கிறார்" என்று கூறினார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏழுமலை அவர் சொல்லாததைக் குறிப்பிட்டு "சொல்லாமலே செய்வர் பெரியோர்" என்று, அவரிடம் தமக்குள்ள நெருங்கிய நட்பு காரணமாகச் சொன்னார். இது உபசாரத்திற்காகப் பேசப்படும் பேச்சு. அவரது உரையில் "கடந்த ஆண்டிலிருந்து இந்த ஆண்டிற்குள் எத்தனை பெரிய தொழிற்சாலைகளைத் துவக்கியிருக்கிறோம், எத்தனை லட்சம் பேருக்கு வேலை கொடுத்திருக்கிறோம். விலைவாசி ஏற்றத்தை எவ்வளவு தூரம் தடுத்திருக்கிறோம்" என்ற விவரங்கள் தரப்பட்டிருக்கின்றனவா? இல்லை. அடுத்து வரும் பட்ஜெட்டில் நமது கனம் நிதி அமைச்சர் அந்த விவரங்களைச் சொல்வார். அந்த உரையில் சேலம் அலுமினியத் தொழில் இருக்காது, இரும்பு தெர்மல் ஸ்டேஷன் இருக்காது, அடாமிக் ஸ்டேஷன் இருக்காது. அவர் குறிப்பிடக்கூடியவை 'நட்'களும் மறைகளும்தான். "நட் தொழிற்சாலையை விருத்தாசலத்தில் ஆரம்பித்திருக்கிறோம். மண்பாண்டத் தொழிற்சாலையை பன்ருட்டில் ஆரம்பித்திருக்கிறோம். பனைமரத் தொழிற்சாலையை பத்தமடையில் ஆரம்பித்திருக்கிறோம்" என்று அவர் சொல்லப் போகிறார். அவ்வாறு, இவர்களுக்கென பிரத்யேகமாக ஒதுக்கப்பட்ட இலாகாக்களைக் காட்டப்போகிறார். நான் மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களையும் ஆளும் கட்சி அங்கத்தினர்களையும் கேட்கிறேன் "உங்கள் திறமை இதுதானா?" நான் உங்களை மதிக்கிறேன். உங்கள் சொந்தக் கட்சிக்காரர்கள் உங்களை மதித்து உங்களுக்கு ஏன் அதிகாரங்களைத் தரக்கூடாது? இப்படியே போனால், கவர்னர் உரையும் கனம் அமைச்சர்களின் சொற்பொழிவுகளும் நடைபெற்றுக்கொண்டே போகும்; நிலைமை இப்படியே இருக்கும்; மக்களுக்கு அதிருப்தி இருந்துகொண்டே இருக்கும்.

ஒன்றை கவனத்தில் வைத்துக்கொண்டு கனம் உணவு அமைச்சர் நாளை பதிலளிப்பார் என்று நம்புகிறேன். வியாபாரிகளைப்பற்றி அவர் பேசியிருப்பதைப்பற்றி இங்கே நான் அப்படியே குறிப்பிட வேண்டாம் என்று நினைக்கிறேன். அதை நான் குறிப்பிட்டால் வியாபாரிகள் மிகவும் வருத்தமடையக் கூடும். ஒரு சமயம் வியாபாரிகளை மிகவும் கண்டித்துப் பேசியுள்ள அவர்

[Sri C. N. Annadurai] [10th December 1959

வியாபாரிகளிடம் சென்றிருக்கும்போது "உங்களிடம் எனக்கு அவ்வளவு அசூயை இல்லை. தர்மத்திற்குப் பொதுவாக நடந்து கொள்ளுங்கள்" என்றும் அவர்களிடம் பேசியிருக்கிறார். தர்மத்தையே போதித்துக்கொண்டிருந்தால் எல்லாம் நடந்து விடுமா? தர்மத்தை போதித்துக் கொண்டிருக்க இவர் என்ன சங்கராச்சாரியாரா? "நீங்கள் எவ்வளவு தர்மத்தோடு நடக்கிறீர்கள்" என்று அவர்கள் இவரிடம் திருப்பிக் கேட்க மாட்டார்களா? (குறுக்கீடு) கனம் நிதி அமைச்சர், என்னை இந்தப் பக்கத்தில் மோதவிடப் பார்க்கிறார். நாங்கள் 'மோதிக் கொள்வதில்லை' என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைத்தான் நான் முன்பே சொன்னேன்.

SRI C. N. ANNADURAI : மோதிக் கொள்ளாமல் இருப்பது ஒன்று; ஆலிங்கனம் செய்துகொள்வது வேறொன்று. கோளத்தில் நீங்கள் செய்துகொண்டிருப்பதுபோல நாங்கள் அவசர ஆலிங்கனம் செய்துகொள்ள மாட்டோம்.

வியாபாரிகளால் உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதா அல்லது விவசாயிகளால் அது ஏற்பட்டதா என்று ஆராய்ந்த மத்திய சர்க்கார் ஆய்வுக் குழுவினர் "வியாபாரிகளால்கூட உணவு நெருக்கடி வரவில்லை; விவசாயிகள்தான் உணவுப் பொருள்களை அதிகமாகப் பதுக்கிவைக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கின்றனர். 'அக்ரோ-இகனாமிக் ஸ்கீம்' என்ற ஒரு திட்டத்தைக் குறிப்பிடுகிறார்கள். அதை வங்காளத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். நோய் இன்னது என்றே கண்டு பிடிக்கவில்லை, ஆளுக்கு ஒரு மருந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மருந்தை எந்த நோயாளி சாப்பிடுவான். ஆகையால்தான். இந்தப் பிரச்னைபற்றி திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

அதோடு தொழில் பிரச்னை பற்றியும் திட்ட வட்டமாகச் சொல்லவேண்டும். தேசீய மயமாக்கும் பிரச்னை பற்றியும் திட்ட-வட்டமாக அறிவித்துவிட வேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் பேசும்போது தேசீயமயமாக்குவது நமது கொள்கை என்று சொன்னார்கள். அவருடைய கட்சியைச் சேர்ந்த மற்றொரு அங்கத்தினர் "தேசீயமயமா? அது இப்போது வேண்டாம்" என்று சொன்னார்கள். யார், யாரைக் கேட்டுக் கொண்டு எப்படி நடக்கிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் அமைச்சரவை கொண்டுள்ள கருத்துக்களுக்கு மாறாகப் பேசுவதை நான் குறிப்பிடுகிறேன். ஒரு கனம் அங்கத்தினர் இங்கே பேசுகிற நேரத்தில், நிலத்தைப் பிரித்து நிலம் இல்லாத உழவர்களுக்குத் தரப்போகிறோம் என்று சொன்னார்கள். அப்போது இந்தக் கருத்தை எனக்கு எதிரிலிருந்து உணவு அமைச்சர் அவர்களிடம் சுட்டிக் காட்டி இப்படித்தான் செய்யப் போகிறீர்களா என்று நான் கேட்டேன். நான் கடைசியில் விவாதத்திற்கு பதிலளித்துப் பேசும்போது இதைப் பற்றிச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர்களில் பலர் விலைவாசிகளைக் குறைக்கவேண்டும்



10th December 1959] [Sri C. N. Annadurai]

MR. SPEAKER : When a Member raises a point of privilege, I may decide it straightway whether there is a *prima facie* case or not. Or, I may ask the Hon. Leader of the House and the Leaders of other Parties to give me the benefit of their views on the point raised. In this particular case, I propose to ask the Hon. Leader of the House and other Leaders of Parties to give me the benefits of their views. Even then, I may not give a decision immediately. Anyway, I want to know their views. If they are prepared to give their views just now, they may do so. Or, if they want a couple of days' time to consider this matter before expressing their views here, I have no objection. It is for them to decide. As I said, even after hearing them I may take some time to decide. Now, let me hear the views of the Hon. Leader of the House.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, you were good enough to speak to me about this matter just before I came to the House. It raises a very complicated issue and I am not in a position to immediately throw any light on it. Therefore, I request you to give not only to me but also to the other Party Leaders, some time so that we could study this matter and if necessary, also take other learned opinion and then place our points of view before you so that you may take a correct decision.



11th December 1959]

MR. SPEAKER : Will Tuesday be all right?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. I have no objection.

SRI M. KALYANASUNDARAM : I agree with the suggestion of the Hon. Leader of the House.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Tuesday will be all right, Sir.

MR. SPEAKER : Well, I shall take up this matter on Tuesday. Though I am not bound to hear and accept your views, I should like to hear what the views of the Leaders of Parties are before giving my decision in the matter. So, I shall take up this matter after the question-hour on Tuesday, the 15th December 1959.

SRI P. U. SHANMUGAM : Sir, I request that copies of the speech of the hon. Member Sri Lazar may be supplied to us.

SRI T. L. SASIVARNA THEVAR : Sir, copies of the same may be supplied at least to the Party Leaders.

MR. SPEAKER : This Privilege Motion has been submitted to me. I am not bound to give it to you. However, if anybody wants, he could ask the Secretary for copies of the same.

III.—CALLING ATTENTION NOTICE.

MR. SPEAKER : The hon. Member Sri Govindasamy who has given notice under Rule 41 is not in his seat. Uptill now, the custom has been that when a Member who has given notice under Rule 41 was absent, I would take it that he did not want to call the attention of the Minister and that he did not want to have a statement from the Minister concerned on the subject-matter raised in his notice. Therefore, normally in such cases, I used to say, ' The hon. Member is not in his seat and his notice is not pressed.' But, the hon. Member Sri Anbazhagan met me and requested me that this notice may be taken on another day and I have told him that I shall think over his request. If we set up this precedent, it will land me in trouble in future. Because, we have already enunciated and followed the principle that when a Member who has given notice under Rule 41 is absent, it would not be considered. Therefore, I shall give my decision on this point on another day.

IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : Now, let us proceed with the discussion on the Governor's Address. Hon. Member Sri Anbazhagan had given notice of an amendment, but he has not moved it. If he wants to move it, he may do so. I shall allow him as a special case.

THE HON. SRI C. SUBRAMANIAM : How can he move it now, at the end of the discussion? Members should have had an opportunity to know what it is.

MR. SPEAKER : He had given notice of the amendment in time. But, he could not move his amendment on the first day, as it could not be printed and circulated.

SRI P. G. KARUTHIRUMAN : He has already spoken, Sir.

MR. SPEAKER : Yes, I know that. That is why I said that he may formally move his amendment without making any speech.

THE HON. SRI C. SUBRAMANIAM : At least the next day, he should have moved his amendment.

MR. SPEAKER : It was not his fault.

THE HON. SRI C. SUBRAMANIAM : I must say this. I do not want to find fault with anybody or blame anybody. I only want to state that for the convenience of the House, the Members should have had an opportunity to know what the amendment was and also should have had an opportunity to express their views on the same. Already amendments have been moved and the Members have also expressed their views on them. Now, if at the fag end of the discussion, just when the hon. Leader of the Opposition is to speak now, if hon. Member Sri Anbazhagan is allowed to move his amendment, I am afraid the other hon. Members of the House will have no opportunity to speak about that amendment and express their views on the same. I therefore request the Hon. Speaker to consider that aspect also. After all, we should not set up a bad precedent in regard to these matters. By allowing an amendment to be moved at the fag end of the discussion, we wil be depriving the other Members an opportunity to express their views on the same. Nobody should be allowed to move an amendment at the end of the discussion. If they allowed this, they would be creating a bad precedent even if it is in the case of Sri Anbazhagan.

MR. SPEAKER : I may tell the House that Sri Anbazhagan gave notice of his amendment in time, i.e., within the time-limit fixed. There was some delay in circulating it. That is why I said I was allowing him as a special case to move it just now.

THE HON. SRI C. SUBRAMANIAM : He could have pressed his case the next day and could have moved it the next day.

MR. SPEAKER : He raised this question the next day. But we could not allow that on account of some preoccupations. The fault is not his. The fault is elsewhere and perhaps it is that of the Speaker. That is why I am allowing him now.

THE HON. SRI C. SUBRAMANIAM : Apart from whose fault it is even if it is the fault of the Speaker—he should not punish the Legislature, the House as such. The Members should have had an opportunity to express their views on the amendment. If



Sri Anbazhagan is allowed to move his amendment now, this opportunity would be denied to them. Therefore, the Speaker should take this aspect also into consideration even if it is not his fault.

MR. SPEAKER : As the amendment could not be printed and circulated, he did not move his amendment on the first day. That is why I am allowing him to move it as a special case. Let him formally move it without any speech.

SRI P. G. KARUTHIRUMAN : He has already spoken, Sir.

MR. SPEAKER : Yes, I know that. That is why I said that he may fomally move his amendment without making any speech.

SRI P. S. CHINNADURAI : *மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நான் ஒழுங்குப் பிரச்னை எதுவும் எழுப்பவில்லை. தங்களுக்கு ஒரு விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான்கூட எட்டு திருத்தங்கள் கொடுத்திருந்தேன். அந்தத் திருத்தங்களைக் கொடுத்துவிட்டுத்தான் நான் இங்கே பேசினேன். ஆனால் அவை இங்கே 'சர்குலேட்' பண்ணப்படவில்லை. கனம் சபாநாயகர் அவைகளை இங்கே பிரஸ்தாபித்தார். அப்போது நான் சபையில் இல்லை. நான் அதற்கு ஒரு நிமிஷம் தாழ்ந்து சபைக்கு வந்தேன். எனவே என்னுடைய திருத்தங்களும் இந்த சபையின் மதிப்பிற்குரிய அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அவைகளையும் மதிப்பிற்குரிய அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக எனக்கும் இத்தகைய சந்தர்ப்பத்தை அளிக்கவேண்டும் என்று தங்களிடம் நான் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.*

MR. SPEAKER : *கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை மாத்திரமன்றி, கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோதண்டராமன்கூட பத்து திருத்தங்களை என்னிடம் கொடுத்தார். ஆனால் அவை என்னிடம் காலத்திற்குள் வரவில்லை, காலம் ஆனபிறகு அவைகளை என்னிடம் அவர் கொடுத்தார். ஆகவே அதற்கெல்லாம் அனுமதி தர முடியாது. ஸ்ரீ அன்பழகன் ஒருவருக்குத்தான் நான் அனுமதி தர முடியும்.*

SRI P. S. CHINNADURAI : I too gave my amendments in time, Sir.

MR. SPEAKER : In that case, if the hon. Member wants, he can also move his amendments without making any speech.

SRI K. ANBAZHAGAN : Sir, as the Hon. Leader of the House has got some moral objections . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, it is not a question of morality or moral objection.

SRI K. ANBAZHAGAN : Sir, as the Hon. Leader of the House feels in a different way, though the mistake was not committed wilfully, I feel that it is not necessary to press my amendment. So, I request you to allow me to withdraw it.

[11th December 1959

MR. SPEAKER : Is the hon. Member not pressing the amendment? All right. The hon. Leader of the Opposition may now speak.

### V.—CLARIFICATION *RE* POSITION OF THE LEADER OF THE OPPOSITION.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் தாம் பேசுவதற்கு முன்பு ஒரு விளக்கம் கொடுத்தால் எனக்கும் மற்ற கனம் அங்கத்தினர்களுக்கும் சௌகரியமாக இருக்கும். ஏனென்றால், அவர் இந்த சபையில் இந்திய தேசீய ஜனநாயகக் கட்சியின் தலைவராக உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இந்த சபைக்கு வெளியில் அவர் சுதந்திராக் கட்சியில் ஒரு பெரிய பிரதிநிதியாக இருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. இங்கே பேசும்போது அவர் இந்திய தேசீய ஜனநாயகக் கட்சியின் தலைவர் என்ற ஹோதாவில் பேசப்போகிறாரா அல்லது சுதந்திராக் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் பேசப்போகிறாரா என்று எங்களுக்குத் தெரிந்தால், அவருடைய பேச்சைப் புரிந்துகொள்ள எங்களுக்கு சௌகரியமாக இருக்கும். எனவே, அவர் பேசுவதற்கு முன், விரும்பினால், இந்த விளக்கத்தைக் கொடுக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

* SRI K. ANBAZHAGAN : Sir, on a point of order. I want to know whether, when a particular Party is functioning in this House under the name 'Indian National Democratic Congress', is it in order for the Hon. Leader of the House to ask the Leader of that Party whether he, as leader represents that Party or whether he belongs to a different Party. I want to know whether such a question can be raised in this House and whether it is morally in keeping with the dignity of the House.

MR. SPEAKER : So far as the Speaker is concerned, Mr. V. K. Ramaswamy Mudaliyar intimated to me two years ago that he was the Leader of the Indian National Democratic Congress. That intimation still stands and has not been altered. I am not aware of his connection with any other party outside this House. It is not my job. So far as I am concerned, he is here as the Leader of the Indian National Democratic Congress. If the Hon. Minister wants any further clarification, he may ask Mr. V. K. Ramaswamy Mudaliyar. This House has no information.

THE HON. SRI C. SUBRAMANIAM : That is the real difficulty. It is not as if we are not aware of the things happening in the State and in the country. It is because some confusion has arisen, I want this clarification. If he chooses to remove that confusion, we will be able to follow his speech. If he speaks on behalf of the Indian National Democratic Congress, we can understand it. If he speaks on behalf of the Swatantra Party, let us know it beforehand because certainly the policies of the Democratic Congress and the programme and policy of the Swatantra Party are completely different, as far as I can see. I am sure, the Members are entitled to know for what principles and programmes, he is making his speech.



11th December 1959] [Sri C. Subramaniam]

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, before I commence my speech on the Governor's Address, let me clarify this point, just now raised by the Hon. Minister. Even now we continue to be designated as the Indian National Democratic Congress. After we had formally agreed outside to join the Swatantra Party, I had to leave the country and was abroad for two and a half months. Ever since my return, I could not find time to convene a meeting of the Party members since some of them have been absent. I mean convening a meeting shortly and conveying our decision to the Speaker. Till then, we will continue to be known as the Indian National Democratic Congress.

THE HON. SRI C. SUBRAMANIAM : The matter is not so easy as that. I can understand if the hon. Member had not joined the Swatantra Party and had delayed action in that respect. I can very well understand his point of view if that is the case. But he is one of the prominent members of the Executive of the Swatantra Party. He has agreed to be on the Executive. Therefore, can we have two loyalties, one inside this House and one outside this House? That is the real issue that arises. I am not worried about it. But he should not have conflicting loyalties here. Therefore, let him kindly make up his mind and say whether he continues to have his old loyalty or advocates the new loyalties which he has developed.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : We will convey our decision before the close of this session, if possible.

SRI K. ANBAZHAGAN : May I know from the Hon. Speaker whether it is proper to put the question whether a particular leader of a party belongs to another party when such parties are not recognised in the Legislature and by the Election Commission and in the all-India atmosphere and in Parliament? Is it proper to ask whether one belongs to an unrecognized party?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am afraid, he is creating another difficulty (laughter) for the party. I hope that is not his intention. According to the Hon. Leader of the Opposition, he proposes to apply to the Speaker for recognition of the new party. But according to Mr. Anbazhagan, it should not be recognised since it has not been recognised by the Election Commission or by anybody else. My intention is not that. I want that it should be made clear which party the hon. Leader of the Opposition is going to represent in participating in this debate.

MR. SPEAKER : The only answer to the point of order raised by Mr. Anbazhagan is, so far as I am concerned, Mr. Ramaswamy Mudaliyar is the leader of the Indian National Democratic Congress. But any Member of the House is entitled to ask him any question

and he may reply to it or not. That is not my responsibility. So far as I am concerned, the Leader of the Opposition, leader of the Indian National Democratic Congress will speak. (Laughter.)

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: The Election Commission has nothing to do with this. We have got an official majority and we continue to be the official Opposition.

IV. DISSSCUION ON THE GENFRALS' ADDRESS—*cont.*

**Sri V K. RAMASWAMY MUDALIYAR**: கனம் சட்ட மன்றத் தலைவரவர்களே, கவர்னர் பெருமான் உரையின் பேரில் அநேகம் உறுப்பினர்கள் பேசினார்கள். முக்கியமாக எதிர்க் கட்சியிலிருந்து அநேகம் பேர் பேசி, அதற்கு ஆட்சேபங்கள் தெரிவித்தார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், முதலிலே உரையைப் பாராட்டி விட்டு, பின்னிட்டு அநேகக் குறைகளைச் சொல்லி, கடைசியில் வரவேற்கிறோம் என்று சொன்னார்கள். பொதுவாகப் பார்த்தால் இப்பொழுது நம் நாட்டில் எவ்வளவோ காரியங்கள் செய்யவேண்டி இருக்கின்றன. ஆகவே உரையில் குறைகள் பல இருக்கின்றன. அப்படியிருந்த போதிலும், கவர்னர் சர்க்காருடன் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவேண்டும் என்று முதல் பாராவிலேயே வேண்டுகோள் விடுத்து இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தமட்டில், மக்கள் சுபிக்ஷத்திற்காகவும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் செய்யப் படும் காரியங்களில் நாங்கள் ஒத்துழைக்கத் தயார் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

இப்பொழுது, மாநில ரீதியிலும் சரி, ஜில்லா ரீதியிலும் சரி, தாலூக்கா ரீதியிலும் சரி, தமிழ் நாட்டில், கமிட்டிகள் போடுவதில், எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் கூட சேர்க்கப்படுவதில்லை. முக்கியமாக ஆளும் கட்சிக்காரர்களே இந்த ஒவ்வொரு கமிட்டி யிலும் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். இதிலிருந்து அவர்கள் மூலமாக நிர்வாகத்தை நடத்தி, கட்சி சார்பாக எவ்வளவு தூரம் மக்களிடம் தங்கள் கட்சிக்கு ஆதரவு தேடமுடியுமோ அப்படிச் செய்கிறார்கள். உண்மையாக எங்கள் மாவட்டத்தில், ஒரு கமிட்டி யிலேயும், எதிர்க்கட்சி அங்கத்தினர் கிடையாது. எல்லோரும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள். அப்படியாகிலும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நல்லவர்களைப் போட்டால் தேவலை. அநேகம் பேர் ஒரு கமிட்டியிலும் இருக்கத் தகுதியற்றவர்களாக இருந்து வருகிறார்கள். ஆகையால் ஆங்காங்கே ஊழல்கள் ஏற்பட்டு மக்கள் ரொம்பவும் அதிருப்திப்பட்டு வருகிறார்கள். சர்க்கார் இதை ஆலோசித்து, ஒவ்வொரு கமிட்டியிலும், எதிர்க் கட்சி அங்கத்தினர்களையும் சேர்க்க ஏற்பாடு செய்யவேண்டும். ஆளும் கட்சி அங்கத்தினர்களும் பொறுப்புள்ளவர்களாகவும், தகுதியுள்ளவர்களாகவும் போடவேண்டும். அப்படியில்லை யென்றால், எதிர்க் கட்சிகள் ஒத்துழைக்க முடியாது என்று திட்ட வட்டமாகச் சொல்லுகிறேன். உண்மையாக எடுத்துக் கொண் டால், எங்கள் பிராந்தியத்தில், ஏரியா கமிட்டி இருக்கிறது. அந்த கமிட்டியிலே அநேகம்பேர் தகுதியில்லாதவர்களாக இருக் கிறார்கள். எதிர்க் கட்சிக்காக வேலை செய்தார் என்று தர்ம கர்த்தாவை நீக்குவது போன்ற அட்டூழியங்கள் செய்கிறார்கள்.





ஒரு கிராமத்தில், ஒரு தர்மகர்த்தா முன்பு ஒரு சமயம் ஒரு உற்சவ விக்ரஹத்தை பக்கத்து கிராம ஆலயத்துக்குக் கொடுத்தார். வாங்கிப் போனவர்கள் மறுபடியும் அதைத் திருப்பிக் கொடுக்க வில்லை. திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று தர்மகர்த்தா கேட்டும் வருஷக் கணக்காக ஆகியும், கொடுக்கவில்லை. இப்பொழுது விக்கிரகத்தைக் கடன் கொடுத்த தர்மகர்த்தாவின் வேலையே போகும் தருணத்தில் இருக்கிறது. அவரை நீக்கிவிட்டு வேறொரு வரைப் போட முயற்சிக்கிறார்கள். இம்மாதிரியெல்லாம் செய்யும் போது, மேல் அதிகாரிகளுக்கு இது அநேகமாகத் தெரிந்திருக்காது; அமைச்சர்களுக்கும் தெரிந்திருக்காது. அப்படி அவர்களுக் கெல்லாம் தெரியாமலேயே இந்த விஷயங்கள் நடப்பதைப் பார்க்க வருத்தமாக இருக்கிறது.

அதேமாதிரி ப்ளாக் ஏரியாவில் முக்கியமான இடங்களில், எடுத்துக்கொண்டால், கட்சி சார்பாக நடக்கிறது. இது இப்படி கட்சி சார்பில் நிறுத்தி வைப்பது நல்லது அல்ல என்று வருத்தத் துடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தவிர அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். ஒவ் 10–30 a.m.
வொரு ஜில்லாவிற்கும் அமைச்சர்கள் போகிறார்கள். அதன் காரணமாக அங்கேயுள்ள உத்தியோகஸ்தர்களும் அமைச்சர்க ளுடன் போகிறார்கள். இப்பொழுது சமீபத்தில் கேள்விப்பட் டேன்—சூபரிண்டிங் என்ஜினீயர்களும் தன்னுடன் வரவேண்டும் என்று கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு போட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

THE HON. SRI P. KAKKAN: அப்படி எந்தவிதமான உத்தரவை யும் நான் போடவில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: அப்படிப் போடப் பட்ட உத்தரவை என்னிடம் கொண்டுவந்து காண்பித்தார்கள். அதை நான் பார்த்தேன். இங்கு கொண்டுவந்து காட்டவும் தயா ராக இருக்கிறேன். தாம்பரத்தில் அமைச்சர் முகாம் செய்வதாக இருந்தால் பட்டுக்கோட்டையில் இருக்கக்கூடிய சூபரிண்டிங் இன்ஜினீயரை இங்கே வரும்படியாக உத்தரவு போடுகிறார்கள். இங்கேயுள்ள எக்சிக்யூட்டிவ் இஞ்சினீயரையோ அல்லது அசிஸ் டெண்ட் இஞ்ஜினீயரையோ வைத்துக்கொண்டு அமைச்சர் அந்த வேலைகளைப் பார்க்கக் கூடாதா என்று கேட்கிறேன். இம்மாதிரி அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் போவதால் அநேகம் வேலைகள் செய்ய முடியாமல் இடையூறாக இருக்கின்றன. பேப்பர்கள் அநா வசியமாக டிலே ஆகின்றன. பொருள் நஷ்டமும் அதிகமாக ஏற் படுகிறது என்பதை தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். அமைச்சர்கள் போவதோடல்லாமல் அவர்களுடன் இலாகா தலைவர்களும் போகிறார்கள், காரியதரிசிகளும் போகி றார்கள். இம்மாதிரி போவதன் காரணமாக எல்லா பேப்பர்களும் டிலேயாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அமைச்சர்கள் தங்களுடைய சுற்றுப் பிரயாணத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளும்படியாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

தவிர மாகாணத்திலுள்ள செலவுகளைக் குறைக்கவும் சிக்கன முறைகள் என்ன என்பதைக் கண்டுபிடிக்கவும் உடனடியாக ஒரு நிபுணர் குழுவை அமைக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th December 1959

சில இலாக்காக்களில் தேவைக்கு அதிகப்படியான உத்தியோகஸ்தர்களும், சில இலாகாக்களில் தேவைக்குக் குறைவான உத்தியோகஸ்தர்களும், சில இலாகாக்களில் தேவைக்குக் குறைவான உத்தியோகஸ்தர்களும் இப்பொழுது இருக்கிறார்கள். இதன் காரணமாக பல இப்படிப்பட்ட ஒரு குழுவை ஆந்திர மாகாணத்திலும் மற்றும் இதர மாகாணங்களிலும் போட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அம்மாதிரி ஒரு குழுவை இங்கேயும் போடும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி அமைக்கும்போது சட்டசபை அங்கத்தினர்களையும் அதில் சேர்த்துக்கொள்ளவேண்டும். அதைச் சீக்கிரம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். உதாரணமாக நமது மாகாணத்தை எடுத்துப் பார்த்தால் சிப்பந்திகளின் செலவு மொத்த வருமானத்தில் 30 சத விகிதமாக இருக்கிறது. 1947-48-ல் 37 சத விகிதமாக இருந்தது; அப்பொழுது சுமார் 59 கோடி ரூபாய் வருமானம் வந்தது. இப்பொழுது 73 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. சம்பள விகிதத்தில் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கும் வித்யாசம் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. ப்யூன்களை எடுத்துக் கொண்டால் இதர மாகாணங்களில் மாதம் ஒன்றுக்கு 92 ரூபாயும் நமது மாகாணத்தில் 60 ரூபாயுமாக சம்பளம் இருக்கிறது. லோயர் டிவிஷன் கிளார்க்குக்கு இந்த மாகாணத்தில் 93 ரூபாய் மற்ற மாகாணங்களில் 136 ரூபாய், அப்பர் டிவிஷன் கிளார்க்குக்கு இங்கே 132 ரூபாய் மற்ற மாகாணங்களில் 162 ரூபாய். இப்படி மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பள வித்யாசம் இருக்கிறது. ஆனால் சர்க்கார் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள், அதாவது ப்ரைவேட் கம்பெனிகளின் ஊழியர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று லேபர் கமிஷனர் மூலமாக உத்தரவு போட்டு அவர்களுடைய சம்பளம் எல்லாம் மாற்றப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அங்குள்ள ஊழியர்களுக்கெல்லாம் சம்பளத்தை அதிகமாக மாற்றி அமைத்திருக்கிறார்கள். ஆகவே சம்பள விகிதத்தில் வித்தியாசம் இருக்கக்கூடாது என்பதைத் தெரியப்படுத்துகிறேன். அரசியல் சட்டம் 19-ஆவது விதியின்படி சம்பள விகிதத்தில் வித்தியாசம் இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் வித்தியாசம் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. எல்லோருக்கும் ஒரே விதமான சம்பளம் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஏற்றத் தாழ்வு இருப்பதால்தான் அவர்களிடையே அதிருப்தி ஏற்பட்டு அதன் காரணமாக லஞ்ச ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதைக் கண்டு நாம் ரொம்பவும் வருத்தப்படவேண்டியதாக இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு கூடிய சீக்கிரம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக சென்னையில் இருக்கக்கூடிய பே அண்ட் அக்கௌண்ட்ஸ் ஆபீசை எடுத்துக் கொண்டால் ஒரே ஆபீசில் ஒரே மாதிரியான உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். மாகாண சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள். ஒரே இடத்தில் வேலை செய்யக்கூடிய மத்திய சர்க்கார் ஊழியருக்கும் ஒருவித சம்பளமும் மாகாண



11th December 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

சர்க்கார் ஊழியருக்கு ஒரு வித சம்பளமும் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய வேலை நேரங்களிலும் வித்தியாசம் இருக்கிறது. மத்திய சர்க்கார் ஊழியர்கள் மாலை 4½ மணிக்கு வீட்டுக்குப் போய் விடுகிறார்கள். மாகாண சர்க்கார் ஊழியர்கள் 5 மணி வரையில் இருந்து வேலை செய்கிறார்கள். இவற்றையெல்லாம் சர்க்கார் யோசித்துப் பார்த்து உடனடியாக அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ப்ராஜெக்ட் பிராந்தியங்களில் கம்யூனிட்டி டெவலப்மென்ட், நாஷனல் எக்ஸ்டென்ஷன் (சமுதாய நல திட்டம்), இந்தப் பிரதேசங்களில் வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளங்களை சரிவர மத்திய சர்க்காரிடமிருந்து நாம் வாங்குவது இல்லை. மற்ற மாகாணங்களில் வேலை செய்கிறவர்களுக்கு இம்மாகாணத்தில் வாங்கிக்கொள்ளுகிறார்கள். அப்படி வாங்காமல் இருப்பதன் காரணமாக சில சமயங்களில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய க்ராண்ட் (grant) லாப்ஸாகி விடுகிறது. இப்படி நான் கேள்விப்படுகிறேன். அம்மாதிரி மைசூரில் முன் கூட்டியே சம்பளங்களை எடுத்துக்கொண்டு அதன் பிறகுதான் மற்றவைகளுக்கு வாங்கிக்கொள்ளுகிறார்களாம். அதனால் இந்த மாகாணங்களில் எல்லாம் அதிகப்படியான தொகை மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கிக்கொள்வதாகத் தெரிய வருகிறது. ஆகவே இம்மாதிரி சம்பளத் தொகை வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த மாதிரியான வழியை நாமும் ஏற்படுத்தி வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். என்.ஜி.ஓ.க்களுக்கு தற்காலிகமாக மாதம் ஒன்றுக்கு 25 ரூபாயாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஒரு திட்டத்தை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஓட்டுக்காக எலெக்ஷன் சமயங்களில் மட்டும் அவர்களுக்கு சம்பளத்தைக் கூட்டிக்கொடுப்பதில் பிரயோஜனம் இல்லை.

அடுத்தபடியாக விலைவாசிகள் பிரச்சனை. விலைவாசிகள் நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே வருகிறது என்பதைப்பற்றி ஒருவரும் மறுக்கவே முடியாது. 1957 நவம்பரில் 390 புள்ளி இருந்தது. 1958 நவம்பர் மாதம் 425 புள்ளியாயிற்று. 1959 நவம்பர் மாதம் 449 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. இதைப் பார்த்தால் விஷம் போல் விலைவாசி ஏறிக்கொண்டு வருகிறது. ஆனால் உணவு உற்பத்தியைப்பார்த்தால் ஒவ்வொரு வருஷமும் சுமார் இரண்டு லட்சம் டன் அதிகமாக உற்பத்தியாகி வருகிறது. 1958-59-ஆவது சீசனில் 50 லட்சம் டன் உற்பத்தி செய்தோம். அதாவது 113 லட்சம் ஏக்கர். அதற்கு மூன்று வருஷங்களுக்கு முன்பு 44 லட்சம் டன் உற்பத்தி செய்தோம், பார்க்கப்போனால் உணவுப் பொருள் உற்பத்தி நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. அதற்குக் காரணம் என்ன? உணவு உற்பத்திக்காக நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் ஏழு கோடி பதினைந்து லட்சம் ரூபாய் நாம் இரண்டாவது ப்ளானில் செலவு செய்திருக்கிறோம். ஆனால் மேஜர் நீர்ப்பாசன செலவு அதில் இல்லை. அப்படி சிறிய நீர்ப்பாசனத்திற்கு இவ்வளவு செலவு செய்தும் உணவு உற்பத்தி அதிகமாக இருந்தும் விலைவாசிகள் அதிகமாக இருப்பதன் காரணம்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th December 1959

என்ன . என்பதைப்பற்றி நாம் சற்று யோசிக்கவேண்டும். விவசாயிகளுக்குப் போதுமான வசதி இன்னும் ஏற்படவில்லை. சர்க்கார் சில இடங்களில் எவ்வளவோ வசதி செய்து கொடுத்தும் சில வஸ்துக்களை விநியோகம் செய்திருந்த போதிலும் இன்னும் விஷயங்கள் திருப்திகரமாக இல்லை என்பதைத் தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவோ நல்ல விதைப் பண்ணைகளை சர்க்கார் அமைத்தும் விவசாயிகளுக்கு நல்ல விதைகளை காலத்தில் கொடுக்க முடியவில்லை. சில முக்கியமான விதைகள் அவர்களுக்கு கிடைப்பதில்லை. பூச்சி மருந்துகளும் முன்போல் இல்லாமல் தாராளமாக கொடுக்கப்படாமல், இருக்கிறது. எவ்வளவோ விநியோகிக்கப் பட்டிருந்தபோதிலும் சில இடங்களில் சரியாகக் கிடைக்கவில்லை. ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஓரிடத்தில் ஒரு டிப்போவில் கொடுக்கக் கூடாது என்று திட்டம் இருக்கிறது. மறுபடியும் எழுதி அந்த ஆயிரம் ரூபாய் வரையில் பூச்சி மருந்துகள் வாங்கப்பட்டு விநியோகம் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் பூச்சி மருந்து வேண்டும் என்று மேலே எழுதினால் அது வந்து சேருவதற்கே மிகவும் நாட்களாகி கஷ்டமாகப் போய்விடுகிறது. இதனால் மிகுந்த காலதாமதம் ஆகிறது. அப்படி இல்லாமல் ஆரம்பத்திலேயே பூச்சி மருந்து எவ்வளவு வேண்டுமோ அவ்வளவையும் வருவித்து வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்தால் காலம் தப்பாமல் விவசாயிகளுக்குத் தேவைப்படுகிறபோது இல்லை யென்பது இல்லாமல் பூச்சி மருந்து விநியோகிக்க வழியேற்படும் என்று சொல்ல விரும்புகிறேன். தேவைக்குத் தகுந்தபடி முன்பாகவே பூச்சி மருந்து ஸ்டாக் செய்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அதேமாதிரி ரசாயன உரங்கள். ரசாயன உரங்களின் கிரயம் இப்போது கறுப்பு மார்க்கெட்டில் சுமார் 65 ரூபாய், 70 ரூபாய் வரையில் மூட்டை விற்கப்பட்டு வருகிறது. ஆனால் கண்டிரோல் ரேட்டில் ரசாயன உரங்கள் கிடைப்பது இல்லை. அதற்குச் சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்? மத்திய சர்க்காரிடத்தில் இப்போது கேட்டிருப்பதாகச் சொல்கிறார்களேயொழிய சாகுபடியத்திற்கு அது உதவியாக வருமா என்று கவனிக்க வேண்டும். ரசாயன உரங்கள் கண்டிரோல் ரேட்டில் கிடைக்காத காலத்தில் கறுப்பு மார்க்கெட்டில் மட்டில் எவ்வாறு விற்பனைக்கு வருகிறது என்பதையும் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். அந்த மாதிரியாக வியாபாரிகள் ஸ்டாக் வைப்பதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ளவேண்டும்.

அதே மாதிரிதான் டீசல் எண்ணெய் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். சமீபத்தில் நான் என் தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்த போது அங்கங்கே இருந்த அரிசி விலைவாசிகளைப் பற்றி விசாரித்தேன். 32 படி கொண்ட ஒரு மணங்கு முதல் தர நெல் 9 ரூபாய் 8 அணா. ஒரு படி அரிசி பதினாலரை அணா வீதம் கிடைக்கிறது. ஓபன் மார்க்கெட்டில் அதுவே ரூ. 14-8 விலை. அந்த அரிசியும் 14½ அணா வீதம் விற்கப்படுகிறது. இரண்டாந்தரம் நெல்லை எடுத்துக் கொண்டால் 32 மணங்கு கொண்டது எட்டரை ரூபாய்க்கு விற்கப்படுவது, ஓபன் மார்க்கெட்டில் அதே நெல்



11th December 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

13 ரூபாய். ஒரு படி அரிசி பன்னிரண்டரை அணா. விலை இப்படி
வித்தியாசமாக இருக்கக் காரணம் என்ன? ஆகையால் நான்
தாழ்மையாகச் சொல்வது என்னவென்றால் விவசாயிகளுக்கு
வேண்டிய கருவிகளை எல்லாம் கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்க
ஏற்பாடு செய்து, அப்புறம் அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்
களுக்கு நியாய விலை நிர்ணயிப்பது என்றால்தான் சரியானதாக
இருக்கும். அப்படிச் செய்தால் வேண்டிய நெல் கிடைக்கும்
என்பதைப் பற்றிச் சந்தேகம் இல்லை. உணவுக் கமிட்டியிலும்
அதைப்பற்றி நான் ஒரு மனு கொடுத்திருக்கிறேன். அதை
இப்படி ஏன் டிலே செய்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.—

சர்க்காரிலே விதைப் பண்ணை வைத்திருக்கிறார்கள். ஆராய்ச்சிப்
பண்ணைகளும் இருக்கின்றன. அவைகளை எல்லாம் நன்றாகப் பரி
சீலனை செய்து ஒரு நியாயவிலை ஏற்படுத்தவேண்டும். விவசாயிகள்
நன்றாய் உற்பத்தி செய்யவேண்டும் என்று நினைக்கிறோமே
யொழிய அவர்கள் எந்த எந்த வகையில் எல்லாம் பாதிக்கப்
படுகிறார்கள் என்பதைப் பார்க்க எண்ணம் கிடையாது. அவர்
களுடைய கஷ்டத்தை உணர்ந்து அதை நீக்க முன்வர வேண்டும்.
அவனுக்கும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம்
இருக்கிறதே தவிர தாங்கள் உற்பத்தி செய்வதை எல்லாம் பதுக்கி
வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கிடையாது.
அவ்வாறு அதிக நாளும் விவசாயப் பொருள்களைப் பதுக்கி
வைத்துக்கொள்ள முடியாது. ஆகவே அவர்களுக்குக் கட்டு
ப்டியான விலையை நிர்ணயிப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்
வதற்கு நம் சர்க்கார் முன்வர வேண்டும். அப்படிச் செய்தால்
நமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கும்.
நாம் மக்களுடைய நன்மைக்காக ஒரு விலையை நிர்ணயம் செய்கிற
போது அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்றால்
சர்க்கார் சப்ஸிடி கொடுத்துத்தான் அவர்களிடம் இருந்து
தானியங்களை வாங்க வேண்டும். ஓபன் மார்க்கெட்டில் (open
market) வாங்கவேண்டும். இல்லாவிட்டால் நெல் சாகுபடி
செய்வதினால் நஷ்டம் ஏற்படுகிறது என்று விவசாயிகள் லாபம்
வரக்கூடிய பருத்தி, கரும்பு முதலிய வேறு பயிர்களை சாகுபடி
செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அதனால் உணவு உற்பத்தி பெரு
காது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆஸ்திரேலியா முதலிய
நாடுகளில் அப்படித்தான் திடீரென்று உணவு விலை குறைந்ததின்
காரணமாக உற்பத்தி குறைந்துவிட்டது. அந்தமாதிரி ஆகாமல்
இருக்க சர்க்கார் சப்ஸிடி கொடுக்க வேண்டும். சுமார் ஒரு ஏக்கர்
சாகுபடி செய்யவேண்டுமென்றால் 300 ரூபாய் செலவாகிறது.
அப்படி இருக்க விலை நிர்ணயம் செய்கிறபோது சாகுபடிக்குச்
செலவுக்காவது கட்டி வருகிறதா என்று யோசித்துப் பார்த்து
நிர்ணயிக்கவேண்டும். மத்திய சர்க்காரிடம் இருந்தும் 2 லட்சம்
டன் தானியத்தை உடனடியாக நாம் வாங்கவேண்டிய முயற்சி
களைச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன். தவிர சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சிறிய
அளவில் நடந்து கொண்டுவந்த போதிலும் இன்னும் போதிய
அளவுக்கு சரியான முறையில் அவைகளைச் செய்யவில்லை. எங்கள்
பிராந்தியத்தில் காஞ்சிபுரம் தாலுக்கா, செய்யாறு, பாலாறு, வடாற்

காடு எல்லாவற்றிற்கும் பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மனுக் கொடுத்திருக்கிறோம். சுமார் 150 கிராமங்கள்வரை இன்று நீர்ப்பாசன வசதி இல்லாமல் இருக்கின்றன. பெரிய அணைக்கட்டுத் திட்டங்களை எல்லாம் வகுத்துக் கொடுப்பதோடு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை துரிதமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயிப்பது. நில உச்ச வரம்பு அவசியமாக வேண்டியதுதான். ஆனால் நிலத்திற்கு எந்த அளவைக் கொண்டு உச்ச வரம்பு கட்டப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. நில அளவைக் கொண்டா? அல்லது அதன் தாராதரத்தைக் கொண்டா? நிலத்தின் அளவைக் கொண்டு என்றால் அதனால் எவ்வளவு பாதகம் ஏற்படும் என்பதைப்பற்றி நான் பல முறையும் சொல்லி வந்திருக்கிறேன். அதுவும் எவ்வளவு ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. முக்கியமாக நான் கேள்விப்பட்டவரையில், அவ்விடத்தில் இருந்து அங்கத்தினர்கள் பேசுவதில் இருந்துதான் கொஞ்சம் நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் சர்க்கார் எந்தக் கட்டத்தில் இருக்கிறார்கள் என்பது இன்னமும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. நான் கேள்விப்பட்டவரையில் உச்ச வரம்பு 30 ஏக்கர் என்று நிர்ணயம் செய்யப் போவதாகத் தெரிகிறது. முப்பது ஏக்கரா என்றால் தாம்பிரபரணி பாய்ச்சல் பிராந்தியத்திலும் 30 ஏக்கரா, மிகுந்த பஞ்சப் பிரதேசமாகிய ராமநாதபுரம் பகுதி, செங்கல்பட்டு பகுதி, முதலிய இடங்களுக்கும் முப்பது ஏக்கரா என்று நிர்ணயம் செய்யப் போகிறார்களா? இதைப்பற்றி அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். நல்ல செழிப்பான பூமிகளாக, ஆற்றுப் பாசன வசதியுள்ள இடங்களில் ஏக்கரா பன்னிரண்டாயிரம் கூட விலைக்குப் போகிறது. இப்போது எங்கள் பிராந்தியத்தை எடுத்துக்கொண்டால் ஆயிரம் ரூபாய்க்குக்கூட ஒரு ஏக்கரா நிலம் விலை போவதில்லை. வாங்குவதற்குக்கூட யாரும் முன் வருவது இல்லை. இந்த மாதிரி அநேக வித்தியாசங்கள் இருக்கின்றன. உச்ச வரம்பு என்று கட்டுவதன் காரணமாக கண்டிப்பாக சில வகுப்பினர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் கவலை இல்லை. எங்கு பார்த்தாலும் உச்ச வரம்பு கட்டவேண்டும் என்கிற எண்ணத்தை நாமே வளர்த்துவிட்டு, இப்போது உச்ச வரம்பு என்று கட்டாமல் இருப்பதும் சரியல்ல. கண்டிப்பாக உச்ச வரம்பு கட்டத்தான் வேண்டும். வருமானத்தின் பேரில் உச்ச வரம்பு போடப்படுகிறதா? வருமானத்தின் பேரில் போடுவது என்றால் அமைச்சர்களை எடுத்துக்கொள்வோம், மாதம் ஒன்றுக்கு இவ்வளவு என்று சம்பளம் வாங்குகிறார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களை எடுத்துக்கொண்டால் ஆயிரத்திற்குமேல் சம்பளம் வாங்கும் அநேகர் இருக்கிறார்கள். வியாபாரத் துறையை எடுத்துக்கொண்டால் அநேகம் பேர்கள் லட்சக்கணக்கில் லாபம் சம்பாதித்து வருகிறார்கள். உச்ச வரம்பு கட்டுவது என்றால் மற்ற துறைகளில் உள்ளவர்களுக்கும் உச்ச வரம்பு இல்லையா? விவசாயம் செய்கிறவர்களுக்கு மட்டும்தான் உச்ச வரம்பா என்பதை நான் கேட்க





விரும்புகிறேன். மற்றும் எல்லாக் கட்சித் தலைவர்களையும் இந்த சட்டசபை மூலம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விவசாயத் துறையில் மட்டுமில்லாது மற்ற துறைகளிலும் உச்ச வரம்பு கட்டுவதற்கு அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். அப்படிச் செய்வதானால் நியாயமான உச்ச வரம்பு என்ன என்று பார்த்துச் செய்யவேண்டும். காங்கிரஸ் ஹைகமாண்டிலிருந்து உத்தரவு வந்திருக்கிறது என்பதால் இதைச் செய்கிறார்களா? நான் சொல்வது, உச்ச வரம்பு வேண்டியதுதான். அப்படிச் செய்யும்போது எடுக்கப்போகும் அதிகப்படியான நிலங்களை எப்படி விநியோகம் செய்யப் போகிறீர்கள்? பல ஆண்டுகளுக்கு முன்னர் அதிகப்படியான நிலங்களை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப் போவதாக சர்க்கார் தரப்பில் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது கூட்டுறவு பண்ணை வைக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். எது உண்மை? என்னைப் பொறுத்தமட்டில் அதிகப்படியாக உள்ள நிலங்களை நிலம் இல்லாதவர்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமே தவிர கூட்டுப்பண்ணை வைக்கவே கூடாது. கூட்டுப்பண்ணை எப்படி நடக்கிறது என்று பார்த்தோம். அவைகள் சரியர்க நடைபெறுவதில்லை. கூட்டுப் பண்ணைகள் வைத்து ஆபீஸர்களை நியமித்து அவர்கள் மூலம் நீங்கள் வளருவதற்கு நாங்கள் சம்மதிக்கமாட்டோம் என்று தாழ்மையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: நான் எதிர்கட்சித் தலைவர் அவர்களிடமிருந்து தெளிவாக தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், இப்பொழுது நாங்கள் கொண்டு வரக்கூடிய திட்டம் நில உச்ச வரம்பைப் பொறுத்ததுதான். மற்றவைகள் பற்றி பின்னால் ஆலோசிக்கப்படும். நில உச்ச வரம்புச் சட்டத்தில் என்னென்ன முக்கியமான விவரங்கள் இருக்கவேண்டியது என்பது ஒருபுறமிருக்க, கொள்கையளவில் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்பதை அவரும் அவரது கட்சியும் ஒப்புக் கொள்கிறார்களா என்பதைத் தெளிவாகக் கூறவேண்டும். தெளிவாக உண்டு அல்லது இல்லை என்று சொன்னால் மற்றவைகளைப் பற்றி நான் ஒன்று கூடிப் பேசத் தயாராயிருக்கிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது என்பதை அவரும், அவரது கட்சியும் ஒப்புக்கொள்கிறதா என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

**SRI V. K. RAMASWAMY MUDAIYAR**: கண்டிப்பாக நான் அதற்கு ஒத்துக்கொள்கிறேன். ஆனால் மந்திரிகள் 1,500 ரூபாய் சம்பளமும் வாங்கிக் கொண்டும், அதற்கு மேல் மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் டி.ஏ.யும் வாங்கிக்கொண்டு போவதை நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம். உச்ச வரம்பு கட்டவேண்டுமென்றால், உத்தியோகஸ்தர்களுக்கும், கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரிகளுக்கும் நியூஸ் பேப்பர்காரர்களுக்கும் எல்லோருக்கும் உச்ச வரம்பு கட்டவேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன்.

[11th December 1959

THE HON. SRI C. SUBRAMANIAM: விளக்கமாகயிருக்கட்டும். இப்பொழுது நாங்கள் கொண்டுவர இருப்பது, நில உச்ச வரம்பைப் பற்றித்தான். மற்றவைகளைப்பற்றி பின்னால் ஆலோசித்து தக்க காலத்தில் எடுக்கிறோமோ அல்லது நாங்கள் எடுக்க முடியாவிட்டால் வேறு யார் எடுக்கிறார்களோ தெரியாது. (Sri P. S. Chinnadurai: நாங்கள் தயார்.) சின்னதுரை அவர்கள் எடுக்கத் தயாராயிருக்கிறார்களாம். அது நாம் முடிவு செய்யும் விஷயம் அல்ல. இன்றுள்ள காங்கிரஸ் சர்க்கார் நில உச்ச வரம்புச் சட்டத்தைத் தான் இப்பொழுது கொண்டு வரப்போகிறோம். மற்றவைகள் பற்றி அதில் ஒன்றும் இருக்காது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முக்கியமானதொரு இடத்தை இங்கு வகிக்கிறார், சட்டசபை அமைப்பில், ஜனநாயக அமைப்பில். ஆகவே, அவர்களது கருத்து தெளிவாக இருந்தால்தான் அதை நாங்களும் மனதில் வைத்துக் கொண்டு ஏதாவது மாறுதல்கள் செய்யவேண்டுமா என்று ஆலோசிக்க வேண்டும். அந்தளவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சர்க்காருக்கு வழி காட்டக்கூடிய முறையில் தெளிவாக அவரது கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அதில்லாமல் மற்ற காரியங்களைக் கொண்டு வந்து மந்திரிகளுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் இருக்கிறது, மில்கள் இருக்கிறது என்றெல்லாம் சொல்லாமல், இன்றுள்ள நிலைமையில் நாங்கள் கொண்டு வரவிருக்கும் நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு உங்கள் ஆதரவு இருக்கிறதா உங்கள் கட்சியின் ஆதரவு இருக்கிறதா என்று தெளிவாகச் சொல்ல வேண்டும்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: உச்சவரம்பிற்கு நாங்கள் தயார். இதற்கு முன்பே நான் இங்கு சொல்லியிருக்கிறேன், உச்சவரம்பு கட்டுவதுபற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்று. மற்ற துறைகளில் உள்ளவர்களுக்கும் கட்டப் போகிறீர்களா, எந்த அளவில் போடப் போகிறீர்கள் என்று நீங்கள் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாமல் எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பு வேண்டுமென்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

(Mr. Speaker in the Chair.)

நில உச்சவரம்பு நிர்ணயிக்கும்போது, "நல்ல நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களிலுள்ள நிலங்களையும் பஞ்சப் பகுதிகளில் இருக்கும் நிலங்களையும் ஒன்றாகவா கணக்கிடப் போகிறீர்கள்?" என்று சொல்ல வேண்டும். மேலும் அதிகப்படியாகவுள்ள நிலங்களை, அதாவது எடுக்கப்போகும் நிலங்களை நீங்கள் எப்படி விநியோகிக்கப் போகிறீர்கள் என்றும் சொல்ல வேண்டும். கூட்டுறவு பார்மிங் (co-operative farming கொண்டு வரப் போகிறோம் என்கிறீர்கள். அதனால் இப்பொழுது ஒவ்வொரு டிப்பார்ட்மெண்டிலும் எவ்வளவு அக்கிரமங்கள் நடக்கிறது என்பது நமக்குத் தெரியும். கூட்டுறவுப் பண்ணைகள் ஏற்படுத்தி உங்களுக்கு வேண்டியவர்களுக்கு நிலமும் வேலையும் கொடுக்கப் போகிறீர்களா? அதிகமாகவுள்ள நிலங்களை எப்படி விநியோ-



11th December 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

கிக்கப் போகிறீர்கள். யார் மூலம் அதைச் செய்யப் போகிறீர்கள் என்றெல்லாம் சொல்ல வேண்டாமா? எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்புடன் சொல்லவேண்டுமென்று சொன்னால், நான் சொல்கிறேன், உச்சவரம்பு நியாயமாக வருவதுபற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. பார்ட்டி ஸ்பிரிட்டுடன் (Party spirit) ஒரு கட்சியைப் பலப்படுத்த இதை நீங்கள் செய்யப் போகிறீர்களா என்று சொல்ல வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: மற்றவைகளுக்கு உச்ச வரம்பு கொண்டுவராமல் இருந்து, தற்போது கொண்டு வரப்படுவது நிலத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்று மட்டும் இருந்தால் அதை நீங்கள் ஆதரிக்கத் தயாரா? மற்ற துறைகளுக்குக் கொண்டுவராமல் நிலத்திற்கு மட்டும் உச்சவரம்பு கொண்டு வரும்போது அதைக் கொள்கையளவில் நீங்கள் ஒப்புக் கொள்ளத் தயாரா? அது எந்தெந்த முறையில் அமைக்கப்படவேண்டுமென்பது பற்றி உங்களுடன் விவாதிக்கத் தயார்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: என்வரையில் நியாயமான உச்சவரம்பு வேண்டியதுதான். நான் அதற்குத் தயார்.

THE HON. SRI C. SUBRAMANIAM: சில பேர்களுக்கு ஆச்சரியமாகயிருக்கிறது, சுதந்திரா கட்சிக்கு இது விநோதமாகயிருக்கிறதே என்று. அதற்காகத்தான் சுதந்திரா கட்சி என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALI AR: நிதி அமைச்சர் ரொம்ப சாமர்த்தியமாக பேசுவதாக நினைக்கிறார்.

MR. SPEAKER: இது முக்கியமான பிரச்னை. 'இதைத் தீர்ப்பதில் யாருக்கும் கோபம் வரக்கூடாது. கோபப்படாமல் பேசவேண்டுமென்று இரண்டு பக்கத்தினரையும் கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் அமைதியாக நடந்துகொள்ள வேண்டும்.

SRI T. L. SASIVARNA THEVAR: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நிதியமைச்சர் அவர்களுக்கு சுதந்திராக் கட்சியின் பேரில் கோபம் இருக்கும்போல் தெரிகிறது. சுதந்திரா கட்சியில் சம்பந்தப்பட்ட ஆட்கள் இந்த சபையில் இல்லை என்று தெரிந்தும் அதைப் பற்றி ஜாஸ்தியான அளவுக்கு விவாதம் செய்வது சரியா?

THE HON. SRI C. SUBRAMANIAM: எனக்கு ஒன்றும் கோபம் இல்லை.

MR. SPEAKER: எந்த அங்கத்தினரும் எந்தக் கேள்வியை வேண்டுமானாலும் கேட்கலாம். பதில் அளிப்பது உங்கள் கையில் இருக்கிறது. வேண்டுமானால் பதில் அளிக்கலாம், இல்லாவிடில் பதில் சொல்லாமல் இருங்கள்.

SRI A. CHIDAMBARA BHARATHI: சுதந்திரா கட்சியைச் சார்ந்தவர்கள் யாரும் இங்கே இல்லை என்று சொன்னார்களே. அதை இங்கேயே உறுதிப்படுத்தலாமா?

[11th December 1959

**MR. SPEAKER :** அந்தக் கேள்வியே எழவில்லை. இங்கு ஐ.என்.டி.ஸி., தேசிய ஜனநாயக காங்கிரஸ் கட்சிக்காரர்கள்தான் மெம்பர்களாக இருக்கிறார்கள். அதுதான் எனக்குத் தெரியும். ஸ்ரீ ராமஸ்வாமி முதலியார் பேசலாம்.

11 a.m. **SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** முக்கியமாக சாகுபடியானவர்களுக்கு கிடைக்கவேண்டிய சாமான்களுடைய விலைவாசிகள் எல்லாம் அதிகமாக இருக்கிறதினால் அவர்களுக்கும் பெரிய கஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதோடு விவசாய வருமான வரி (Agri-Income-tax) கொடுப்பதில் அவர்களுக்குப் பெரிய தொல்லைகள் எல்லாம் ஏற்படுகின்றன. சர்க்காருடைய உத்தரவும், அதிகாரிகளுடைய உத்தரவும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருக்கின்றது. நிலங்களை விலைக்குக் கொடுக்கிறவர்களிடத்திலும் டாக்ஸ் கேட்கிறார்கள். அதே போன்று நிலங்களை வாங்குகிறவர்களிடமும் ஒரே டயத்தில் இரண்டு டாக்ஸ் கேட்கிறார்கள். இவ்விதம் காம்பௌன்ட் ரேட் என்ற முறையில் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். பசுமாடுகள் இருக்கின்றன, அவற்றுக்கு எல்லாம் இத்தனை ரூபாய் தீனிச் செலவுக்காக கணக்காக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை என்ற புகார்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் விவசாயிகள் எல்லாம் தங்கள் நிலத்தை விட்டு விட்டு வேறு ஏதாவது தொழில் செய்யப் போய் விடலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். கடைசியாக நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், பட்ஜெட் பதிவில்லாத உத்யோகஸ்தர்களுக்கு எல்லாம் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும், அதே போன்று சர்க்காருடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக போடக்கூடிய கமிட்டிகளில் எல்லாம் எல்லாக் கட்சிக்காரர்களையும் சேர்த்து அவர்களுடைய ஆலோசனைகளையும் அறிந்து நல்ல முறையிலும், சிக்கனமான முறையிலும் பணத்தை செலவு செய்தும், அமைச்சர்களுடைய சுற்றுப்பிரயாணங்களைக் குறைத்துக்கொண்டும், ஆபீஸ்களில் உட்கார்ந்து என்ன நடக்கிறது என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்து—நல்ல ஆட்சி நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரைமீது நடைபெற்ற இந்த விவாதத்தில் கலந்துகொண்டவர்களில், சமீபத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்து முதல் முதலாக பேசிய அருப்புக்கோட்டை தொகுதி அங்கத்தினர் அவர்களும் ஒருவர். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் குறிப்பிட்ட யோசனைகளில், அவர்களுடைய தொகுதியில் முக்கியமாக ரயில்வே வசதியில்லாமல் அங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றும் அதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். நமது அரசாங்கம் இந்த விஷயத்தில் ஏற்கனவே கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. மானா மதுரையிலிருந்து விருதுநகருக்கும், விருதுநகரத்திலிருந்து தூத்துக்குடிக்கும் ரயில்வே வசதி ஏற்படுத்தவேண்டும் என்று முதன்மை கவனம் செலுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்



11th December 1959] [Sri M. Bhaktavatsalam]

தினிடத்தில் இந்த சர்க்கார் வற்புறுத்தித்தான் வருகிறது என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில பிரச்னைகளைப் பற்றி இங்கு குறிப்பிட்டார்கள். அவர்கள் பேசுவதற்கு முன்பாகவே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எந்த கட்சியின் பிரதிநிதியாக—ஜனநாயக காங்கிரஸின் பிரதிநிதியாகவா அல்லது சுதந்திரா கட்சியின் பிரதிநிதியாகவா—பேசப்போகிறார்கள் என்று தெரிந்து கொள்ளவேண்டும் என்ற முறையில் ஒரு பிரச்னையை நமது சபை முதல்வர் அவர்கள் எழுப்பினார்கள். அதற்கு விளக்கமும் தெரிவிக்கப்பட்டது. சுதந்திரா கட்சி என்று ஒரு கட்சி இந்த சபையில் இருப்பதாக இப்போது யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் வெளியில் சுதந்திரா கட்சி என்ற ஒரு புது கட்சி அமைந்திருக்கிறது. அது அகில இந்தியக் கட்சியாக தோற்றம் அளிக்கிறது. மதிப்பிற்குரிய, அனுபவம் வாய்ந்த ஒரு தலைவர் அதற்குத் தலைமை வகிக்கிறார்கள். அந்தக் கட்சியைப்பற்றி பத்திரிகையில் செய்திகளை பக்கம் பக்கமாகப் பார்க்கிறோம். வேறு செய்திகளுக்கு இரண்டாவது இடம் தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்தக்கட்சி இந்த மன்றத்தில் இல்லை என்று இன்று தெளிவாக ஏற்பட்டுவிட்டது. ஆனால் வெளியில் மட்டும் அல்ல, வெளி நாடுகளில் கூட—முக்கியமாக அமெரிக்காவில் இந்தக் கட்சியைப்பற்றி பல செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு சுதந்திரா கட்சியோடு தொடர்பு இருக்கலாம். எனினும் அவர்கள் நில உச்சவரம்பு கொள்கையைப்பற்றி விளக்கம் தெரிவித்ததற்குப் பின்னால் அந்தக் கட்சியினுடைய பிரதிநிதிகள் யாருமே இங்கு இல்லையென்பது மட்டுமல்ல, இந்த மன்றத்தில் அந்தக் கட்சியினுடைய எந்த அம்சமும் இல்லை என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி கொள்ளுகிறேன். (கைதட்டல்.) ஏனென்றால் சுதந்திரா கட்சியின் கொள்கைகள் மிகவும் பிற்போக்கானவை, எங்களுக்குமட்டுமல்ல, எதிர்க்கட்சியில் இருக்கின்ற கம்யூனிஸ்டு தலைவர்களுக்கும் பிடிக்கவில்லை என்று அவர்களே குறிப்பிட்டார்கள். அதற்கு ஏற்ற முறையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் நில உச்சவரம்பு கொள்கையைப் பொறுத்த அளவில், கொள்கை அளவில்தான் ஒப்புக்கொள்ளுவதாகவும்—ஆனால் மற்றவர்களுக்கும் உச்சவரம்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இதிலிருந்து நன்றாக விளக்கமாக எதிர்கட்சித் தலைவர் அவர்களின் நிலை தெரிந்தது. இருந்தாலும்கூட வெளியில் சுதந்திராக்கட்சி காங்கிரஸைப்பற்றி, காங்கிரஸ் அரசாங்கம் கொண்டு வரவேண்டும் என்று நினைக்கின்ற நில உச்சவரம்பு கொள்கையைப்பற்றி, வெளியில் இந்த அரசாங்கம் அக்கிரமமாக, பிறருடைய நிலங்களை எல்லாம் பறித்துக் கொள்கிறார்கள், என்ற முறையில், மிகவும் கேவலமான முறையில், கடுமையான நடையில், கடுமையான மொழியிலும் கூட—பிறருடைய மனைவியை அபகரித்துக்கொள்வதற்கு ஒப்பிட்டு நிலத்திற்கு உச்சவரம்பு பற்றி, மதிப்பிற்குரிய சுதந்திராக்கட்சித் தலைவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையால்தான் இதைக் குறிப்பிடுகிறேன். இவ்விதம் பிற்பட்ட கொள்கைகளை வைத்துக்

[Sri M. Bhaktavatsalam] [11th December 1959

கொண்டிருக்கும் ஒரு கட்சி இந்த மன்றத்தில் இல்லை என்பதைக் குறிப்பிட்டது, அவ்விதம் இருப்பது இந்த மன்றத்திற்கும் பெருமையளிக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். (கைதட்டல்.)

இந்த விவாதத்தில் கலந்துகொண்டவர்களில், திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த அங்கத்தினர்களும்—அவர்கள் கட்சியின் தலைவர் அவர்களும்—மற்ற கட்சி அங்கத்தினர்களும் இருந்தார்கள் என்பதை அறிந்து திருப்தி அடைகிறேன். அதிலும் குறிப்பாக நான் மகிழ்ச்சி கொள்வது, இதில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள், கவர்னர் அவர்களுடைய உரையைக் காதால் கேட்கக்கூடாது என்று ஒரு முறையை வகுத்துக்கொண்டிருக்கிறார்கள், ஒவ்வொரு வருடமும் அவர்கள் இவ்விதம் ஒரு கோட்பாட்டை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பின்னால் கவர்னர் அவர்களுடைய உரையின்மீது அவர்கள் பேசியதைப்பற்றி ப்ரிவிலேஜ் மோஷன் எல்லாம் எழுப்பப்பட்டது, அது வேறு விஷயம், அதைப்பற்றி நான் இப்போது குறிப்பிடவில்லை. கவர்னர் அவர்களுடைய உரையை காதால் கேட்பதில்லை என்று சொன்னதோடு நின்று விட்டார்கள். அவர்கள் உரை, அச்சில் வந்திருக்கிறது. அதையும் நாங்கள் கவனிக்கப் போவதில்லை, அதையும் நாங்கள் படித்துப்பார்க்கப் போவதில்லை என்று அவர்கள் சொல்லவில்லை. அதுவரையில் திருப்தி வேண்டுமென்றால் இதை சுலபமாக சொல்லிவிடலாம், கவர்னர் அவர்களுடைய உரையை நாங்கள் படிக்கப்போவதில்லை—அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பது போல நாங்கள் இதைப்பற்றி என்ன சொல்வது—என்று சாக்குப்போக்கு சொல்லிவிடலாம். அப்படி இப்பொழுது சொல்லவில்லை. சமீபத்தில்கூட, சட்டமன்றத்திலுள்ள எல்லாக்கட்சி உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழு, மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்களைப்பற்றி ஆலோசனை சொல்வதற்காகவும், இதில் எல்லாருடைய அபிப்பிராயங்களை அறிந்துகொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது. அதனுடைய முதல் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவரும் வரவில்லை, அவர்களுக்கு எல்லாம் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. எதிர்கட்சித் தலைவர்களுக்கு நாங்கள் வர முடியவில்லை என்றால், அவர்களுடைய பிரதிநிதிகளையாவது அனுப்பலாம் என்று அழைப்பில் சொல்லப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் யாரும் வரவில்லை . . .

**Sri M. KALYANASUNDARAM**: முதல் கூட்டத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிற அழைப்பில் பிரதிநிதிகளை அனுப்பலாம் என்று குறிப்பிடவில்லை. . .

**Mr. SPEAKER**: He has referred to the Leader of the Opposition and not the hon. Member.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அவ்விதம் அனுப்பப்பட்டிருந்தது. . .



11th December 1959]

**Sri M. KALYANASUNDARAM**: அப்படியானால், மற்றக் கட்சித் தலைவர்களுக்கும் ஏன் அவ்விதம் அனுப்பப்படவில்லை. ஏன் இந்த பாரபட்சம் காண்பிக்கப்பட்டது?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆஸ்டிரேலியாவுக்குப் போகப்போவதாகத் தெரிந்தது. அதனால்தான் அவர்களுக்கு மட்டும் அவ்விதம் அனுப்பப்பட்டது. கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் அப்போது தேக அசௌக்கியமாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை, அவ்விதம் இருக்கக் கூடாது என்பது என்னுடைய ஆவல். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளி நாட்டுக்குப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து தான் அவர்களுக்கு இவ்வாறு எழுத வேண்டிய நிலைமை வந்து சேர்ந்தது, அதல்லாமல் வேறு ஒன்றுமில்லை.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR**: இவ்வாறு எழுதப்பட்ட லெட்டரை நான் ஆஸ்டிரேலியாவுக்குப் போய்விட்டு வந்த பிறகுதான் பார்த்தேன். நான் போவதற்கு முன்னால் கிடைத்திருந்தால் வேறு யாரையாவது அனுப்பியிருக்கக்கூடும்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: நான் இதை குறையாகச் சொல்லவில்லை. நான் இதைச் சொல்ல வந்தது, முன்னால் வராமல் இருந்ததை நான் பகிஷ்கரித்துவிட்டதாக எடுத்துக் கொள்ளவில்லை. முன்னால் எந்தக் காரணத்திற்காக வராமல் இருந்தாலும், இப்போது அடுத்த கூட்டத்திற்கு எல்லாத் தலைவர்களும் வரவிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள், அது எனக்கு மிகுந்த திருப்தியை அளித்திருக்கிறது என்பதைச் சொல்லுவதற்காகத்தான் இதை இங்கு சொன்னேனே தவிர குறை சொல்லுவதற்காக அல்ல. அவர்கள் கவர்னருடைய உரையை, அந்த உரை இந்த சபையில் நிகழ்த்தப்பட்டபோது இங்கே வந்திருந்து கேட்காமல் அச்சடிக்கப்பட்ட உரையைப் படித்துவிட்டு வந்து இங்கே அதன் பேரில் விமரிசனங்கள் செய்தார்கள். அவ்வாறே தி.மு.க. தலைவர் அவர்களின் உரையை நேரில் கேட்க முடியாத துரதிர்ஷ்டமான நிலைமை எனக்கும் ஏற்பட்டது. அதாவது, நேற்று மாலை கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இந்த சபையில் பேசியபோது நான் இங்கே இருக்க முடியவில்லை. அப்போது எனக்கு மேல் சபையில் வேலை இருந்தது. இருந்தாலும், அந்தப் பேச்சு பூராவையும் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலுடன், அந்தப் பேச்சை எடுத்த சுருக்கெழுத்தாளர்களிடம், அதை உடனே டைப் அடித்து எனக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவர்கள் நேற்று இரவே எனக்கு அந்தப் பேச்சைப் பூராவையும் டைப் செய்து அனுப்பினார்கள். சட்ட மன்றத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்கள் இவ்வளவு திறமையுடன் பணியாற்றுகிறார்கள் என்பது நம் எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது. நேற்று இரவே எனக்கு அவருடைய பேச்சு பூராவும் கிடைத்தது. அதை நான் படித்ததனால், அதை நேராகக் கேட்டிருந்தால் எவ்வளவு புரிந்துகொண்டிருக்க முடியுமோ அதைவிட அதிகமாக நான் தெரிந்துகொள்ள முடிந்தது. அவ்வளவு தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக எனக்கு அது இருந்தது. ஏனென்றால், அதை நான் ஒரு முறையோ இரண்டு முறையோ இல்லாமல் மூன்று

முறை படித்துப் பார்த்தேன். இரவில் சுமார் 11½ மணி வரை அதைப் படித்துப் பார்த்தேன். உரையை நேராகக் கேட்டே விஷயங்களைத் தெரிந்துகொள்ள முயற்சிக்கும்போது இந்த அனுகூலம் இருக்காது. அதனால்தான், ஒரு வேளை, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்தும் போது சபைக்கு வருவதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்களோ, என்னமோ தெரியவில்லை. கனம் தி.மு.க. தலைவருடைய உரையை நான் மூன்று முறை படித்துப் பார்த்தாலும், அதில் பழைய பல்லவிதான் இருந்தது. கவர்னர் உரையில் புதிதாக ஒன்றும் இல்லை என்று சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள், புதியது எப்போதும் வந்துகொண்டிருக்காது. புதியதுவரத்தான் வேண்டும். பழையதையும் புறக்கணிப்பதற்கில்லை. பழையதைப் புறக்கணிக்காமல் புதியதையும் தேடிப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். கனம் தி.மு.க. தலைவரின் பேச்சு எல்லாம் பழைய பல்லவியாகத்தான் இருந்தது. ஆனால் அதில் இதற்கு முன்பு கேட்கப்படாத சில புதிய கருத்துக்களும் ஒன்றிரண்டு இருந்தன. மந்திரிகள் திறமைசாலிகள் என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர், மந்திரிகளைப்பற்றி தாம் என்ன நினைத்தாலும் ‘ மந்திரிகள் திறமைசாலிகள் ’ என்று பகிரங்கமாகச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணி அவ்வாறு சொல்லியிருக்கிறார். எப்படி இருந்தாலும், ஒரு அறிஞரின் வாக்கால் திறமைசாலி என்று பெயர் வாங்கினால், உண்மையில் திறமைசாலியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி என்று பெயர் வாங்கியதுபோல் அதற்கு ஒரு தனி விசேஷம் தான். எனினும் எங்களுக்கு அவ்வளவு பரிபூரணமான திறமை இருக்கிறதென்று நான் சொல்லவில்லை. ஆனால் நாங்கள் சார்ந்திருக்கும் ஸ்தாபனம் மகத்தான ஸ்தாபனம். அரும் பாடு பட்டு மக்களுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த ஸ்தாபனம் அது. நாங்கள் அனுஷ்டிக்கும் உயர்ந்த கொள்கை, மக்கள் எல்லோருடைய நல்வாழ்க்கைக்கு உகந்த கொள்கை. நாங்கள் சரிவரப் பணியாற்றுவதற்கு அதுதான் எங்களுக்குப் பக்க பலமாக இருக்கிறதேயொழிய திறமை ஒன்றும் பிரமாதமாக இல்லை என்று சொல்வேன்.

இன்னொரு புதிய கருத்தை கனம் தி.மு.க. தலைவரின் நேற்றையப் பேச்சிலிருந்து நான் தெரிந்துகொண்டேன். எனக்கு அது ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் உண்டு பண்ணியது. இது வரையில் விவாதத்தில் கலந்துகொண்ட கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் மின்சாரத்தின் அருமையை நன்றாக உணர்ந்தவர்கள். மின்சார வசதி பெருக வேண்டும், மின்சாரக் கட்டணம் குறைய வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கூறினார்கள். மின்சாரக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றி பின்னர் பேசுகிறேன். இன்று, நகர மக்கள் மட்டுமின்றி கிராம மக்களும் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள மின்சாரம் இன்றியமையாத சாதனம் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அவ்வாறு உணர்ந்துதான் அவர்கள் இன்றும் மின்சாரம் கேட்கிறார்கள். அதனால்தான் அரசாங்கம் மின்சார வினியோகத்தை வியாபார ரீதியில் நடத்தாமல் கிராமங்களுக்கு



அதிகமாக விஸ்தரித்து வருகிறது. அரசாங்கம் மின்சார வினியோகத்தை வியாபார ரீதியில் நடத்துவது சரியல்ல என்ற கருத்தோடு கவனம் செலுத்தி வருகிறது. அரசாங்கம் மின்சார வினியோகத்தை கிராமங்களுக்கு வேகமாக விஸ்தரித்து வருகிறது. இன்று, கிராம மின்சாரத் திட்டத்தில் தமிழ் நாடு நம் தேசத்திலேயே முன்னணியில் நிற்கிறது. அந்த அளவிற்கு இங்கே கிராமங்களுக்கு மின்சார வினியோகம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிக் குறை கூறுவதென்றால் குறை கூறுபவர்களுக்கு வேறு ஏதாவது குறைகள் இருக்கலாம். அம்மாதிரி குறைகளை மனதில் வைத்துக்கொண்டிருப்பவர்கள் ‘ ஒன்றுமே இல்லை ’ என்று சொல்வதை, நான் பழங் காலத்தில் வீடுகளில் பார்த்ததுண்டு. கிராமங்களுக்கு ஏராளமான மின்சார வசதி அளித்திருப்பதானது ‘ வெறும் வெளிச்சம்தான் ’ என்றும், கிராமங்களில் நல்ல ரோடுகளை அமைக்காதபோது அங்கே வெளிச்சம் எதற்கு என்றும் கனம் தி.மு.க. தலைவர் குறிப்பிட்டார். யார் மின்சாரம் கிராமங்களுக்கு வேண்டாம் என்று சொல்லுவார்கள்? கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டியதுதான். ரோடுகளும் வேண்டியதுதான். ஒன்று முதலில் வேண்டும், மற்றொன்று பிற்பாடு வேண்டும் என்று சொல்வதற்கில்லை. இப்போது கிராமங்களில் ரோடுகள் போடாமல் இல்லை. இந்த ராஜ்யத்தில் எவ்வளவோ நல்ல ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. மற்ற ராஜ்யங்களிலிருந்து இங்கு வருபவர்கள் இங்குள்ள ரோடுகளைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள். தமிழ் நாட்டில் அதிகமான ரோடுகள் இருக்கின்றன. இங்கே கிராமப் பாதைகள் செப்பனிடப்படுகின்றன. இன்னும் எத்தனையோ ரோடுகள் போட வேண்டியிருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் ரோடுகள் போடும் வேலை துரிதமாக நடத்தப்படுகிறது. ரோடு போடும்போது, முதலில் மண் பாதை போட்டுவிட்டு அதற்குப் பிறகு அங்கு மெடல் போட வேண்டும். ரோடுகள் போடும்போது ரோடுகளுக்கு தார், சிமெண்டு முதலியவை போட வேண்டியிருந்தாலும் ரோடுகள் போடும் வேலைகளை துரிதமாகச் செய்துவருகிறோம். ரோடுகள் போடாத கிராமங்களில் மின்சாரம் எதற்கு, வெளிச்சம் எதற்கு என்று கிராம மக்கள் கூறுகிறார்கள் என்று குறிப்பிடுவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கண்ணில் கோளாறு உள்ளவர்கள்தான் வெளிச்சத்தை வெறுப்பார்கள். எனக்கு வெளிச்சம் ரொம்பப் பிரியம். கிராமத்தில் இரவு பூராவும் விளக்கு வெளிச்சம் இருந்தால் அதுவே ஒரு சோபையாக இருக்கும். எனவே வெறும் வெளிச்சம் கூடத்தான் வேண்டும். கண்ணில் கோளாறு உள்ளவர்கள்தான் ‘ விளக்கு வேண்டாம், விளக்கை நிறுத்திவிடுங்கள் ’ என்று சொல்வார்கள். மின்சாரம் எல்லா விதமான வெளிச்சத்தையும் தருகிறது. முக்கியமாக விவசாயிகளுக்கு அது பெரிதும் பயன்படுகிறது. விவசாயிகளின் சார்பில் வெளிச்சத்தைப் பெருக்க வேண்டும்—மின்சார வினியோகத்தைப் பெருக்க வேண்டும்—மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்றெல்லாம் பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். ஆனால் கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு ஏதோ ஒன்று பேசினார். ஒரு வேளை தமிழ் நாடு மின்சார வினியோகத்தில் இந்நாட்டிலேயே

முன்னணியில் இருப்பது அவருடைய வாதத்திற்கு அனுகூலமாக இல்லாததால் அவ்வாறு பேசினார் போலும். இந்தியாவில் மொத்தம் எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக் கிறதோ அதில் பாதித் தொகை தமிழ் நாட்டில் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கும் கிராமங்கள். இது அவருடைய 'வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது' என்ற வாதத்திற்கு முரண் பாடாக இருந்ததால், அவர் அவ்வாறு பேசியிருக்கிறார் போலும். அவர் உண்மையில் மின்சார விஸ்தரிப்பை எதிர்க்கவில்லை என்று தான் நான் கருதுகிறேன்.

கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருடைய பேச்சு பழைய பல்லவியாகத்தான் இருந்தது என்று நான் சொன்னேன். "எதற்கும் நீங்கள் மத்திய அரசாங்கத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிச் சொல்வதுகூடத் தவறு. அவர்கள் கொடுத்தால்தான் உங்களுக்கு உண்டு. நீங்கள் அவர்களுக்கு அடிமைகளாக இருக்கிறீர்கள். அவர்களை நாடி இருக்கிறீர்கள். நீங்கள் சுயமாக என்ன செய்கிறீர்கள்" என்று அவர் வாதாடினார். தமது வாதத்திற்கு அவர் பல திருஷ்டாந்தங்களை எடுத்துச் சொன்னார். அவர் நெய்வேலித் திட்டத்தை ஒரு திருஷ்டாந்த மாகச் சொன்னார். நமக்கு வேண்டிய ரசாயன உரத்திற்கு நாம் மத்திய அரசாங்கத்தையே எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக அவர் சொன்னார். உணவு மண்டல விஷயத்தில், இந்த ராஜ்யம் தனி உணவு மண்டலமாக ஆகிவிட வேண்டும் என்று நாம் விரும்பி னாலும் மத்திய சர்க்கார் தீர்மானிப்பதற்கிணங்க நாம் நடக்க வேண்டியிருக்கிறது என்று அவர் சொன்னார். கனம் அங்கத் தினர்கள் ஒரு விஷயத்தை உணர வேண்டும். இந்த வேண்டுகோளை தான் கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருக்கும் மிகத் தாழ்மையுடன் விடுக்கிறேன். நான் கூறவிருக்கும் விஷயம் இந்தப் பிரச்னையுடன் சம்பந்தமுள்ளதாக இருக்கிறது. நான் கூற விருக்கும் விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டதாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபிப்பிராயத்தை வேறு யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். சிற்சில விஷயங்களில் எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்துகொள்வார்கள். காங்கிரஸ்கூட பிறருடன் சேர்ந்து கொள்கிறது என்று நேற்று குறிப்பிடப்பட்டது. ஆனால் நான் குறிப்பிடவிருக்கும் விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபிப்பிராயத்தை வேறு எந்தக் கட்சியும் ஒப்புக்கொள்ளாது—கண்டிப்பாக மறுக்கும்—என்பதில் ஐயமில்லை. நான் குறிப்பிடும் பிரச்னை, நமது ராஜ்யம்—தமிழ்நாடு—தனி அரசு புரிய வேண்டுமா அல்லது இது இந்தியா தேசத்தின் ஒரு பாகமாக இருக்க வேண்டுமா என்பதுதான். இந்தியா ஒரு நாடா அல்லது துணைக் கண்டமா என்பதுதான் இந்தப் பிரச்னை. இப்போது இது இந்திய யூனியனாக இருக்கிறது. இந்தியாவை பாரத நாடு என்று சொல் கிறார்கள். இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றோம். இந்த இந்தியாவில் பல ராஜ்யங்கள் இருக்கின்றன. இதற்கேற்ற அரசிய லமைப்புச் சட்டத்தையும் வகுத்திருக்கிறோம். இந்தியாவைப்போல் அமெரிக்காவும் இருக்கிறது. அமெரிக்காவின் தலைவர் இப்போது





நமது நாட்டிற்கு வந்திருக்கிறார். அவர் டெல்லியில் பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கிறார். அவர் நம் நாட்டில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கிறார் என்பதை அறிந்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். அந்த நாடும் இந்தியாவைப்போல்தான் இருக்கிறது. அங்கேயும் பல ராஜ்யங்கள் இருக்கின்றன; அந்த ராஜ்யங்கள் எல்லாவற்றிற்குமாக ஒரு அரசாங்கம் இருக்கிறது; அங்கும் ராஜ்யங்களுக்கு கவர்னர்கள் இருக்கிறார்கள். இந்திய யூனியனின் அரசியலமைப்புச் சட்டத்தில் மத்திய அரசாங்கத் திற்குச் சில அதிகாரங்களும் ராஜ்ய அரசாங்கங்களுக்குச் சில அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. நமது அரசியல் சட்டத்தை அமைத்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் மட்டும் அல்ல. சட்ட நிபுணர்கள், ஜூரிஸ்டுகள், ராஜ்யங்களின் பிரதிநிதிகள் ஆகிய எல்லோருமாகச் சேர்ந்து அதை அமைத்தார்கள். அதில், இன்னின்ன அதிகாரங்கள், இன்னின்ன பங்ஷன்ஸ் மத்திய அரசாங் கத்திற்கு இருக்கவேண்டும், இன்னின்ன அதிகாரங்கள், இன்னின்ன பங்ஷன்ஸ் ராஜ்ய அரசாங்கங்களுக்கு இருக்கவேண்டும் என்று வகுத்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான் இன்றைக்கு அரசாங்கம் நடக்கிறது. ஆகையினாலே ராஜ்ய அரசாங் கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும், தொடர்பு இல்லா மல் இருக்க முடியாது. அரசியல் அமைப்புச் சட்டப்படி சிற்சில அதிகாரங்கள் மத்திய சர்க்காருக்கு இருக்கிறது என்றால், அதற்கேற்றவாறு மத்திய அரசாங்கத்தினுடைய உடன்பாடு, மத்திய அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பு, மத்திய அரசாங்கத்தினுடைய அங்கீகாரம் கூட அவசியம் வேண்டியிருக் கிறது. இதைத்தான் நாம் புரிந்து கொள்ளவேண்டும். அதைத் தவிர நமக்குள்ள அதிகாரத்தை விட்டுக்கொடுப்பது என்பதோ நாங்கள் போய் அவர்களுக்கு அடிமையாக இருப்பது போன்ற விஷயமோ ஒன்றுமில்லை. அதற்கு இடமே இல்லை. சில கனம் அங் கத்தினர்களுக்கு ஒரு பிரமை இருக்கிறது. எதற்கும் மத்திய அரசாங்கத்தை கேட்கிறார்கள், மத்திய அரசாங்கம் நம் தலையிலே சுமத்துகிறார்கள் திட்டத்தை மத்திய அரசாங்கம் போடுகிறார்கள். திட்டக் குழு சொல்லுகிறது, நாங்கள் சுயமாக ஒன்றும் செய்வதற் கில்லை, தனியாக சிந்திப்பதற்கு இல்லை, முடிவு செய்வதற்கில்லை, என்ற பிரமை சில அங்கத்தினர்களுக்கு இருக்கிறது. அது முற்றிலும் தவறு என்றுதான் நான் சொல்லுவேன். திட்டம் தயாரிப்பது என்றால், அகில இந்திய ரீதியிலே தயாரிக்கப்படு கிறது. இந்த ராஜ்யத்திற்கு எந்தத் திட்டம் வேண்டுமென்பதை நாம் சொல்லுகிறோம். அதைத்தான் வைத்துக்கொள்ளவேண்டும், இதைத்தான் வைத்துக்கொள்ளவேண்டும் என்று யாரும் எதையும் நம் ராஜ்யத்தின்மீது சுமத்த முடியாது. நாங்கள் எல்லோரும் கலந்து ஆலோசிக்கிறோம். இந்த ராஜ்யத்தின் நன்மையில் முதல் கவனம், இந்திய யூனியன் நன்மையிலும் கவனம், இவை இரண்டை யும் வைத்துக்கொண்டுதான் திட்டம் உருவாக்கப்படுகிறது, திட்டம் நிறைவேற்றப்படுகிறது, நிர்வாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். சிலருக்கு மாறுபட்ட அபிப்பிராயம் இருந் தால், இந்திய யூனியனில் நம்பிக்கை இல்லை என்று கருதுபவர் களுக்கு இதைப் புரிந்துகொள்ள முடியாது. அவர்கள் வேறு

[Sri M. Bhaktavatsalam] [11th December 1959

வகையிலேதான் புரிந்துகொள்ளுவார்கள். வேறு ஒரு கோணத்திலிருந்து அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். அதற்குமேல் நான் ஒன்றும் கூறுவதற்கு இல்லை.

அதே மாதிரிதான் சில ஆண்டுகளுக்கு முன்பு நாம் அரும்பாடுபட்டு நமக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திர தினத்தை ஆண்டு தோறும் கொண்டாடுகிறோம். எந்த நாடும் கொண்டாடுகிறது. சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகளுக்குப் பிறகு கூட மிகுந்த குதூகலத்துடன், முன் ஆண்டைவிட நிகழும் ஆண்டு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. எல்லா நாடுகளும் சுதந்திர தினத்தைக் கொண்டாடிக்கொண்டு வருகின்றன. ஆனால் என்ன? ஒரு கட்சியினர் சுதந்திர தினக்கொண்டாட்டத்தில் ஈடுபடுவதில்லை. ஏன் என்று கேட்பவர்களுக்கு அவர்கள் ஒரு சமாதானம் சொல்லுகிறார்கள். 'சுதந்திர தினம் கொண்டாடுவதில் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளுகிறார்கள், ஆகவே சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் நாங்கள் கலந்து கொள்ளத் தயாராக இல்லை' என்று சொல்லுகிறார்கள். காங்கிரஸ்காரர்கள்தான் பாடுபட்டு சுதந்திரம் பெற்றார்கள் என்பது மறுக்க முடியாதது. அத்தகைய சுதந்திரத்தில் நம்பிக்கை இல்லை என்ற மனப்பான்மை ஏற்பட்டு விடுகிறது.

SRI C. N. ANNADURAI: அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தை நாங்கள் கொடுத்ததில்லை. சுதந்திரதின விழா காங்கிரஸ் பிரசார விழாவாக மாற்றப்படுகிறது என்றுதான் கருதுகிறோம்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: கார்பரேஷன் சபை ஆண்டு தோறும் சுதந்திர தினவிழா கொண்டாடும் வழக்கம். எல்லாக் கட்சியினரும் சேர்ந்து நகரசபைக் காரியாலயத்தில் நாட்டுக் கொடிக்கு வணக்கம் தெரிவித்து சுதந்திர தின விழா கொண்டாடப்படும். ஆனால், சென்ற ஆகஸ்டு 15-ம் தேதி நடத்திய சென்னை நகர சபைக் கொண்டாட்டத்தில் இந்தக் கட்சியினர் கலந்துகொள்ளவில்லை என்பதைத்தான் எடுத்துச் சொல்ல வந்தேன். இதுபற்றி பேச்சு வந்தபொழுது ஒரு பத்திரிகையிலே பார்த்தேன், காங்கிரஸ்காரர்கள் இதில் கலந்துகொண்டிருக்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் தங்கள் கட்சிக்காக என்று சொல்லப்பட்டிருந்தது. மக்கள் காங்கிரஸ்காரர்கள்தான் சுதந்தியத்தை தங்களுக்கு வாங்கித் தந்தவர்கள் என்று நினைக்கலாம். அதற்கு நாங்கள் என்ன செய்வது? எப்படியும் சென்னை நகரசபைக் கொண்டாட்டத்தைப் பொறுத்த மட்டில் அதை ஏற்பாடு செய்தது காங்கிரசல்ல.

SRI C. N. ANNADURAI: கார்பரேஷன் மேயர் கொடுத்த விளக்கம் அதுவல்ல. இப்பொழுது அதைப்பற்றிப் பேசுவது உகந்தது அல்ல. அவர்கள் வேறு அலுவல் இருந்ததால் கலந்து கொள்ள முடியவில்லை என்று தெரிவித்திருந்தார்கள். (சிரிப்பு.)

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: கார்பரேஷன் மேயர் மட்டுமல்ல. உதவி மேயரும் கலந்து கொள்ளவில்லை. அந்தக்கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் யாரும் கலந்து



11th December, 1959.] [Sri M. Bhaktavatsalam]

கொள்ளவில்லை. (சிரிப்பு.) மேயர் அவர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று இரண்டு நாட்களுக்கு முன்பே நான் கேள்விப் பட்டேன். அது போகட்டும்.

திட்டத்தைப்பற்றி கனம் அங்கத்தினர் ஷண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். எதற்காக இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். நாம் பெற்ற சுதந்திரம் மக்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்குப் பயன் பட வேண்டும். நீண்ட காலமாக குறைகள் குவிந்து கிடக்கின்றன. குறைகளை அகற்றவும், வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் திட்டம் போட்டுத்தான் செய்யவேண்டும். திட்டம் இல்லாமல் ஏதோ தோன்றியவாறு செய்துகொண்டு போனால் பயன் இல்லை. ஆகவே, திட்டம் போடுவது மிகவும் அவசியம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிவிட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. இருந்தாலும், இப்பொழுதே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வேண்டிய திட்டங்களை ஆராயவேண்டியிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர்களின் அபிப்பிராயங்களும் கோரப்பட்டிருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் என்னென்ன நடைபெற்றிருக்கிறது என்பதற்கு வேண்டிய விவரங்களைக் கொடுத்துத்தான் அபிப்பிராயங்கள் கேட்டிருக்கிறோம். சில கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஏன் கொஞ்ச நாட்களுக்கு ஓய்வு எடுத்துக் கொள்ளக்கூடாது, கொஞ்ச நாட்களுக்கு பார்த்துக் கொண்டு அப்புறம் செய்யலாமே என்றெல்லாம் சொல்லலாம். சில பேர்கள் அம்மாதிரி சாவதானமாக இருக்கலாம். ஆனால், நாங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. மக்களுக்கு இன்னும் அநேக வசதிகள் செய்து தரவேண்டும். அவர்களுக்கு இருக்கும் குறைகளை நிவர்த்திக்கவேண்டும். அவர்கள் நம்மிடம் எவ்வளவோ எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதிகளாக இருக்கும் நாம் அவர்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு திட்டங்கள் தீட்ட வேண்டியிருக்கிறது. பெரிய திட்டங்களை உருவாக்கி நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதற்கு கடன் தேவையாக இருந்தாலும் கடன் வாங்குகிறோம். ஓரளவுக்கு கடன் வாங்கவேண்டியதுதான். இதனால் ஓரளவு 'டெபிஸிட் பினான்ஸிங்' நோட் அடிக்கவேண்டிய நிமித்தம் ஏற்படுகிறது. ஆனால் பரவாயில்லை. திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றுவதிலே வரி போட வேண்டியிருக்கிறது. நோட் அடிக்கவேண்டியிருக்கிறது. விலை அதிகமாகப் போகிறது. இவைகளையெல்லாம் நாம் எவ்வளவு தூரம் தவிர்க்க முடியுமோ தவிர்க்கத்தான் வேண்டும். அரசாங்கம் அதில் தீவிர கவனம் எடுத்துக்கொண்டுதான் வருகிறது. வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதான் வருகிறது. ஓரளவுக்கு இதில் அசௌகரியம் ஏற்படத்தான் செய்கிறது. எதிர்காலத்து மக்களின் நிமித்தம் நாம் செய்யவேண்டிய ஒரு தியாகம் என்று நாம் இதைக் கொள்ளவேண்டும். எப்படி முன்பு நாம் சுதந்திரம் பெறுவதற்கு பாடுபட்டவர்கள், தாங்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, தங்கள் குடும்பம் சின்னாபின்னமாக ஆகிவிட்டாலும் பரவாயில்லை, பிற்கால சந்ததிகள் சுதந்திர புருஷர்களாக வாழட்டும், விளங்கட்டும் என்று தியாகம் செய்தார்களோ, அதே மாதிரி திட்டங்களை

உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் நாம் எல்லோரும் அதனால் சில அசௌகரியம் ஏற்பட்டாலும், எதிர் காலத்து மக்கள் சுபிட்சமாக வாழவேண்டும், குறைவின்றி வாழ்க்கை நடத்தவேண்டும் என்று நினைத்து ஓரளவுக்கு நாம் தியாகம் செயவோம், உறுதியுடன் நடந்துக்கொள்ளுவோம் என்று அந்த வகையிலேதான் திட்டங்களை உருவாக்கி கவனம் செலுத்திக் கொண்டு வ்ருகிறோம்.

கவர்னர் அவர்கள் உரையிலே இரண்டு முக்கியமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. விவாதத்தில் கலந்துகொண்ட அங்கத்தினர்களும் பெரும்பாலும் அவற்றைப் பற்றித்தான் குறிப்பிட்டார்கள். ஒன்று விலைவாசியைப் பற்றியது. மற்றொன்று நிலச்சீர்திருத்தச் சட்டம் பற்றியது. இந்த முறை டிசம்பரிலேயே கவர்னர் அவர்கள் ஒரு உரை . நிகழ்த்தி அதன் பேரில் விவாதம் நடந்தது வரவேற்கத்தக்கது என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு சற்று முன்பு கவர்னர் நிகழ்த்திய உரையின்மீது விவாதம் நடப்பது நல்ல பலனைத் தரும். ஏனென்றால் வரவு செலவுத் திட்டம் இப்பொழுது தான் தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் தயாரிக்கப்பட வேண்டும். வருகிற ஆண்டுக்கு திட்டம் தயாரிப்பதற்குமுன் இம்மாதிரி கவர்னர் அவர்களின் உரையின்மீது விவாதம் நடந்து கனம் அங்கத்தினர்கள் பல கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் மனதில் கொண்டு எந்த வகையிலே வரவு செலவுத் திட்டத்தை உருவாக்குவது, ஏற்கெனவே உருவாக்கியதை எந்த விதத்தில் மாற்றுவது என்பதையெல்லாம் சிந்திப்பதற்கு அரசாங்கத்திற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது.

அதே மாதிரி நிலச்சீர்திருத்த சட்டத்தைப்பற்றி சில அங்கத்தினர்கள் குறைப்பட்டார்கள். அதிக தாமதம் ஆகிறது, வேண்டுமென்றே தாமதம் செய்யப்படுகிறது, ஏன் இத்தனை காலம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றெல்லாம் பேசினார்கள். நான் சொல்லுவேன். தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றுமில்லை. வேண்டுமென்றே தாமதம் செய்யவேண்டுமென்ற எண்ணமும் அரசாங்கத்திற்கு இல்லை. அரசாங்கமேதான் இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறது. இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்திலே, பல அம்சங்கள், படிகள் இருக்கின்றன. உச்ச வரம்பு வரை உள்ள படிகளைத் தாண்டி விட்டோம். ஒன்று நியாயவார சட்டம், மற்றொன்று குடியானவர்களை அப்புறப் படுத்துவதைத் தடுக்கும் சட்டம், ஆகிய சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். இப்பொழுது கடைசிக் கட்டத்திலே இருக்கிறோம். உச்ச வரம்பு கட்டம் ஒரு முக்கியமான கட்டம். இந்த சட்டத்தை நிறைவேற்றுவதில், முக்கியமாக மக்களுக்கு நிரந்தரமான நன்மையைத் தருமாறு செய்யவேண்டும். சிலருக்குப் பாதகமாக இருக்கலாம், ஆனால் பலருக்கு நன்மையை அளிக்கும். நிரந்தரமாக ஒரு சட்டம் செய்யும்போது, நன்றாகப் பரிசீலனை செய்து எல்லா யோசனைகளையும் கருத்தில் கொண்டு, இந்த சட்டத்தை நாம் உருவாக்க வேண்டும். இந்த மன்றத்திலே சமர்ப்பித்து, மன்றத்தின் ஆதரவு பெற்று, சட்டம் ஆகவேண்டும். அவசரப்பட்டுச் செய்வதற்கில்லை. அரசியல்



சட்டமும், இதர சட்டங்களும் இருக்கின்றன. நீதி மன்றங்கள் இருக்கின்றன. எப்படி நல்ல முறையிலே செய்யலாமோ கூடிய வரையில் எல்லோருக்கும் நன்மை பயக்கும், பலருக்கு நன்மையளிக்கும் வகையில் செய்யவேண்டியிருக்கிறது. அரசியல் சட்டம் முதலிய எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு தெரிந்தவர்களிடம் கேட்டு ஆலோசித்துச் செய்யவேண்டும். இதையெல்லாம் பரிசீலனை செய்வதில், தாமதம் தவிர்க்கக் கூடியதன்று. தாமதம் ஆனாலும், சீக்கிரத்தில் உருவாகிவிடும். அநேகமாக இந்த மசோதா உருவாக்கப்பட்டு விட்டது என்றே சொல்லலாம். மேற்கொண்டு பரிசீலனை செய்து நிறைவேற்றுவதற்கு இன்னும் கொஞ்ச காலம் ஆகலாம். இன்னும் இரண்டு மாதங்களில் இந்த சட்ட மன்றத்திலே சமர்ப்பிக்கக் கூடும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்த நில உச்ச வரம்பு சட்டத்திற்கும், மற்றெல்லாவற்றிற்கும், மத்திய சர்க்காரையே "நாடுகிறீர்கள்" என்று குறிப்பிட்டார்கள். பல கனம் அங்கத்தினர்களும் இந்த அபிப்பிராயத்தைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் குறிப்பிட்டதைச் சொல்லுகிறேன். நாம் என்ன என்ன கொடுக்கிறோமோ, அதை ப்ளானிங் கமிஷன் அகில இந்திய அடிப்படையில் செய்கிறார்கள் என்று நாம் என்னென்ன சட்டங்களை இயற்றுகிறோமோ, அதற்கெல்லாம் இந்த சபை "சாவரின் அதாரிடி" தான். இருந்தாலும்கூட, பிரசிடென்டின் அங்கீகாரம் வேண்டியிருக்கிறது, சட்டம் நிறைவேற்றிய பிறகு. நாம் பார்க்கிறோம், கவர்னர் அங்கீகாரத்தைச் சபாநாயகர் அவர்கள் தெரிவிப்பதை. அதே மாதிரி சில சட்டங்கள் சம்பந்தப்பட்டவரையில் அம்மாதிரி அங்கீகாரம் அவசியப்படுகிறது. அந்த வகையிலே, மத்திய சர்க்காரை நாடுகிறோமே ஒழிய, வேறு வகையில் இல்லை. திட்டக்குழு பொதுவாக கொள்கைகளை வகுக்கிறது. அது அவர்கள் அறிக்கையை வாசித்தாலே தெரியும். அந்தந்த ராஜ்யத்தின் நிலைக்குத் தக்கவாறு, எப்படி நிறைவேற்றுவது என்ற வகையிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று சொல்லுவேன்.

ஆகவே, இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தைப் பற்றியும் இச்சமயத்தில் கனம் அங்கத்தினர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அது இந்த விஷயத்தில் ஒரு சீரான முடிவு எடுத்து மசோதாவை உருவாக்கப் பயன்படும் என்றுதான், அவர்கள் அபிப்பிராயங்கள் அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும் என்றுதான், இந்த டிசம்பரிலேயே கவர்னர் உரை அமைந்தது வரவேற்கத் தக்கது என்று குறிப்பிட்டேன்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றி கவர்னர் அவர்களே விலைவாசி நிலை கவலை அளிக்கக்கூடிய விஷயம், "டார்க் ஸ்பாட்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கவர்னர் சொல்லியிருக்கிறார் என்றால், எங்கள் அபிப்பிராயம் இல்லாமலா அவ்வாறு கூறியிருக்கின்றார்கள். கவர்னர் எந்த அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார்களோ, அதேதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். அதில் யாருக்கும் ஐயம் இராது. ஆகவே, "விலைவாசி எப்படியாவது இருக்கட்டும்

[Sri M. Bhaktavatsalam] [11th December 1959

என்று இருக்கிறார்கள், அரசாங்கத்திற்குக் கவலையே இல்லை" என்று சொல்லுவது சரியாகாது. அரசாங்கம் விலைவாசியைப் பற்றி கவலைப்படுகிறது என்றால், அதற்கு வழிகாண்பதில், இந்த அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்து வருகிறது என்றுதான் சொல்லுவேன். இப்பொழுது கனம் கல்யாணசுந்தரம் சொன்னார்கள், "விலை குறைகிறது" என்று நான் சொன்னால் என் வாக்கு கெட்ட வாக்கு, உடனே விலை ஏறிவிடுகிறது என்று. என் வாக்கைப் பற்றி எனக்கு தெரியாது, நல்லதோ, கெட்டதோ; நானே புகழ்ந்து பேச முடியாது. ஆனால் நானும் விலைவாசிகளைத் தெரிந்து கொள்ள சுற்றிக்கொண்டுதான் இருக்கிறேன். சுற்றுப் பிரயாணம் செய்வதைப் பற்றிச் சொன்னார்கள். சுற்றுப் பிரயாணம் செய்கிறோம் என்றால், அது வேடிக்கை பார்ப்பதற்கில்லை, உல்லாசப் பிரயாணம் இல்லை. புள்ளி விவரங்களை, விலைவாசி நிலைமையை, நேரிடையாகப் பிரச்னைகளைத் தெரிந்து கொள்வதற்குத்தான். இங்கே மற்றவர்கள், என்னென்ன எழுதுந்த இடத்திலே பார்க்கலாம், இனனும் இதைப் பார்க்கவேண்டும், அதைப் பார்க்கவேண்டும் என்று போடுவது போன்றதல்ல எங்கள் திட்டம். நானே சென்ற இடங்களில் விசாரிக்கிறேன; கலெக்டரை விசாரிக்கிறேன்; பததாரகைக் காரர்களை விசாரிககிறேன்; மற்றவர்களையும் விசாரிக்கிறேன், பேர் பிரைஸ் ஷாப்பில் ஆப்டேக் எவ்வளவு, மார்கெட் விலை என்ன, போன மாதத்திற்கு இந்த மாதம் எப்படி இருக்கிறது என்றெல்லாம் விசாரிக்கிறேன. அப்படி விசாரிப்பதில நனமைகள் இருக்கின்றன. நியாயவிலைக் கடைகள் தொடங்கினோம். நாம் இப்பொழுது விநியோகிக்கிறோமே அதே தர அரிசி, இதற்கு முனபு சென்னை படி ஒன்று ரூ. 1-2-0 ஆக இருந்தது; நான் குறிப்பிடுவது சாதாரண ஏழைகள் சாப்பிடும அரிசி. நல்ல பாசங்கி, கிச்சிலி சம்பா இவற்றைச் சொல்லவில்லை. நியாய விலைக் கடைகள் வைத்து, கொள்முதல் செய்த பிறகு கொஞ்சம் கொஞ்சம் விலை குறைய ஆரம்பிததது. ஏழை மக்களுக்கு அன்றாட முதல் கவலை, அவர்கள் சாப்பிடும் அரிசி விலை சரசமாக இருககவேண்டும் என்பதே. பச்சரிசி விலையும் உயர்ந்திருக்கிறது. ஆனால், இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் குறைகிறது. ஏழைகள் சாப்பிடும் அரிசியைப் பற்றி குறிப்பாக விசாரித்தேன். அப்படி விசாரித்ததில் முன்னால் ரூ. 1-2-0 படி விற்றது, நியாய விலைக் கடைகள் வைத்த பிறகு, ரூ. 0-15-0 வாகக் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். கலெக்டர் குறைந்து வருகிறது என்று சொல்வதை மாத்திரம் நான் எடுத்துக் கொள்ளவில்லை. பத்திரிகைக்காரர்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

அது மாத்திரம் அல்ல, இப்பொழுது நவம்பர் 25-ம் தேதியிலிருந்து டிசம்பர் 9-ம் தேதி வரை—இன்றைக்கு 11-ம் தேதி—அவ்வப்பொழுது தகவல் வந்திருக்கிறது, ஒவ்வொரு ஊராக வருகிறது, அந்தத் தகவல்கள்படி விலை குறைந்து கொண்டே வருகிறது. கடலூரில் 0.5 பர் செண்ட் குறைந்திருக்கிறது; வேலூரில் 0.25 பர் சென்ட் குறைந்திருக்கிறது, இந்தப் பத்து நாளில். இதற்கு முன்னே 15 அணாவாக இருந்தது, இப்பொழுது 14½ அணா என்று கூடச் சொல்லுகிறார்கள். கும்பகோணத்தில்



11th December 1959] [Sri M. Bhaktavatsalam]

குறைவு 0.30 பர் சன்ட்; திருச்சி 0.66 பர் சன்ட். எனக்கு வந்த தகவல்களை கனம் அங்கத்தினர்களுக்குத் தருகிறேன். கோயம்புத்தூரில் 1.08 பர் சன்ட் குறைந்திருக்கிறது. மதுரையில் 0.20 பர் சன்ட் குறைந்திருக்கிறது. இப்படி கடைசியாக வந்த தகவல்களிலிருந்து தெரிவது விலை கொஞ்சம் குறைந்திருக்கிறது என்பதுதான்; அதிகமாகவில்லை. குறைந்திருக்கிறது என்பது உண்மைதான், அதை வைத்துக்கொண்டுதான் நான் சொன்னேன்.

SRI N. K. PALANISAMI: சென்னையில் நெல்லூர் அரிசியைப் பற்றி?

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப் பற்றிச் சொல்லவில்லை. சாதாரண ஏழைகள் சாப்பிடும் அரிசியைப் பற்றிச் சொன்னேன். இந்த விலைகளை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ராஜ்யத்தில் குறைந்திருக்கிறது என்பது தெரியும். நான் அதிகப் புள்ளி விவரங்களைக் கொடுத்து தங்கள் காலத்தை எடுத்துக் கொள்ளப்போவதில்லை. குறைந்திருக்கிறது என்பதைச் சொல்ல வந்தேன். நாளை இல்லாததைச் சொல்லவில்லை. இப்பொழுது ஆங்காங்கே தெரிகிறது. சில இடங்களில் ஏறலாம். ஆனால் குறைவதைக் கொண்டே திருப்திப்பட்டு எல்லாம் சரியாகப் போய்விட்டது என்பதில்லை அரசாங்கத்தாருக்கு. இப்பொழுது குறைவது போதாது. நிரந்தரமாகக் குறைய வேண்டும். எப்படிக் குறைகிறது என்பதில் கவனம் செலுத்தி வருகிறோம்.

குறைவதில், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள்; மற்றபல கனம் அங்கத்தினர்களும் சொன்னார்கள்.

ஆனால் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு கட்டுபடியாக வேண்டும். அத்துடன் விவசாயிகளுடைய விவசாயச் செலவு வேறு இருக்கிறது. விலைவாசியை கட்டுப்படுத்தினால் விவசாயிகளுக்கு அவர்களுடைய செலவு கட்டுபடியாக வேண்டியதாக இருக்கிறது. இதையே பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இதுவும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்தான். விவசாயிகளுக்கு வேண்டிய வசதியைக் கொடுத்தால்தான் அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுவார்கள். விலைவாசிகளை குறைக்க வேண்டும் என்று கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் கூட குறிப்பிட்டிருக்கிறார். அதனால்தான் அதிலும் நாங்கள் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறோம். இதில் தவறான கருத்துக் கொள்ளக்கூடாது. இவற்றையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் உணர வேண்டும். யுத்தத்திற்கு முன் இருந்த விலைவாசிகளைப்பற்றிக் குறிப்பிட்டு அதைப்பற்றி சொல்லுகிறார்கள். யுத்தத்திற்கு முன் ரூபாய்க்கு எவ்வளவு மதிப்பு இருந்தது, இப்பொழுது எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பதை கவனிக்கவேண்டும். நூற்றுக்கு இருபது பங்கு அதிகரித்திருக்கிறது. இப்படிப்பட்ட மாறுபட்ட மதிப்பு இந்நாட்டில் மாத்திரம் அல்ல. வெளி நாடுகளில் சுற்றிவிட்டு வருகிறவர்களைக் கேட்டால் இதைப்பற்றிச் சொல்லுவார்கள். வெளி நாடுகளில்கூட ரூபாயின் மதிப்பு குறைந்திருக்கிறது. நூற்றுக்கு இருபது பங்கு

குறைந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதைப்போலவே விவசாயக் கூலிகளுடைய கூலியைப்பற்றியும் கவனிக்க வேண்டும். யுத்தத்திற்கு முன்பு ஆட்கள் எவ்வளவு கூலி வாங்கி வந்தார்கள் என்பதையும் இப்பொழுது எவ்வளவு வாங்குகிறார்கள் என்பதையும் கொஞ்சம் கவனித்துப் பார்க்கவேண்டும். யுத்தத்திற்கு முன்னதாக இரண்டு அல்லது மூன்று அணா கூலி கொடுத்தாலும் வாங்கிக்கொண்டு வேலை செய்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் எல்லோரும் ஒரு ரூபாய்க்கு மேல் கூலி கேட்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய சட்டத்தையும் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டியதாக இருந்தது. விவசாயிகள் சம்பந்தமாக கூலி நிர்ணயச் சட்டம் அமுலில் இல்லை. அதைக் கொண்டுவந்தால் அதனால் விவசாயம் பாதிக்கப்படுமோ என்று இருந்தது. இப்பொழுது அமுலுக்கு அதைக் கொண்டு வரவேண்டியதாக இருந்தது. நேற்றைய தினம்தான் அவர்களுடைய கூலியை நிர்ணயம் செய்து அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி என்ன கொடுக்க வேண்டும் என்ற முடிவு அறிவிக்கப்பட்டது. ஆகவே விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும்போது விவசாயிகளுக்கும் கட்டுபடியாக வேண்டியதாக இருக்கிறது. விலைவாசிகள் அதிகமாக இருந்தால் அதனால் விவசாயிகளுக்கு சௌகர்யமாக இருந்தாலும் நகரங்களிலுள்ளவர்களுக்கு அது கஷ்டமாக இருக்கிறது. கிராமங்களில் அதிகமான விலைக்கு உணவு தானியங்களை வாங்குவது இல்லை. நகரங்களில் வாழ்கின்றவர்கள்தான் அதிகமாக விலைக்கு வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அதனால் கிராமங்களில் வாழ்கிறவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதோடு நகரங்களில் இருக்கக் கூடியவர்களுடைய வாழ்க்கைத்தரமும் உயர வேண்டியதாக இருக்கிறது. இதற்கு என்ன செய்வது என்பதை நாம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் நீண்டகால நடவடிக்கை எடுத்துக் கொள்வதா அல்லது தற்காலிக நடவடிக்கை எடுத்துக் கொள்வதா என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. தற்காலிக நடவடிக்கை எடுத்துக் கொள்வதாக இருந்தால் ஓரளவு கொள்முதல் செய்து அதை நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுத்து வருவதால் ஓரளவு பயன் ஏற்பட்டிருக்கிறது. ஓரளவு விலைகூட குறைந்திருக்கிறது என்று ஏற்கெனவே குறிப்பிட்டேன். சமீபத்தில் சம்பா அறுவடையாகப் போகிறது. அது அறுவடையான பிறகு மறுபடியும் விலைவாசிகள் உயராமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை இப்பொழுதே எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அப்படி விலைவாசிகள் உயர்ந்தால் மறுபடியும் நியாய விலைக்கடைகளை வைத்துத்தான் குறைந்த விலைக்குக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கும். அதையும் நாங்கள் உணராமல் இல்லை. அதனால் அரசாங்கம் கொள்முதல் செய்யவேண்டும் என்று முடிவு எடுக்கவேண்டி இருக்கலாம். இதற்கு முன்பு நாம் காலம் தப்பி கொள்முதல் செய்ததால்தான் அதில் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டது. அந்தத் தவறுதலை மேற்கொண்டு செய்யாமல் தகுந்த காலத்திலேயே கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நமக்கும் ஓரளவு உணவு தானியம்





கொடுக்க மத்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டார்கள். லட்சம் டன் கொடுக்கிறோம் என்று ஒப்புக்கொண்டு 35 ஆயிரம் டன் ஏற்கெனவே கொடுத்துவிட்டார்கள். பாக்கியை இனிமேல் கொடுப்பார்கள். நேற்று கனம் கலியாணசுந்தரம் ஒரு யோசனை குறிப்பிட்டார், இன்னும் தீவிரமாக கொள்முதல் செய்யலாமே என்று. அப்படிச் செய்து சிறு நிலச்சுவான்தார்களுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டார். அவர் அப்படிச் சொன்னதற்கு நான் அவரைப் பாராட்டுகிறேன். அவர் நிலைமையை உணர்ந்துதான் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் எங்களுடைய கொள்கையும். சிறு நிலக்காரர்களுக்கு தொல்லை கொடுக்காமல் பெரிய நிலக்காரர்களிடமிருந்து வாங்குவதாகத்தான் உத்தேசம். அதனால்தான் வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்வது என்று ஆரம்பித்தோம். அதனால் வியாபாரிகளுக்குக் கொஞ்சம் கோபம் ஏற்பட்டது. வியாபாரிகள் இதை எதிர்த்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேசும்போது வியாபாரிகளுக்கு பயந்து கொண்டிருந்தோம் என்று குறிப்பிட்டார். வியாபாரிகளை அடியோடு ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. வியாபாரிகள் வர்க்கமும் வாழவேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். ஒருக்கால் அவருக்கு அப்படிப்பட்ட எண்ணம் இருக்கலாமோ என்னமோ. எங்களுடைய எண்ணம் அந்த வர்க்கமும் வளர வேண்டும் என்பதுதான்.

SRI C. N. ANNADURAI : காங்கிரஸ்காரர்களுக்கு பண உதவி தேவையாக இருக்கிறது. அதனால் அவர்களுக்கு இங்கே பரிந்து பேசுகிறாரோ என்னமோ.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களிடமிருந்து எங்களுக்குப் பணம் தேவை இல்லை. சுதந்திரத்திற்குப் பாடுபட்ட போதுகூட அவர்களிடமிருந்து நாங்கள் பணத்தை எதிர்பார்க்கவில்லை. அப்பொழுது கனம் கலியாணசுந்தரம் காங்கிரஸில் இருந்தார், அவருக்கு அதைப்பற்றி தெரியும். ஆனால் தி.மு.க. தலைவருக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. யாரிடமிருந்து காங்கிரசுக்கு உதவி கிடைத்தது என்பது அவருக்குத் தெரியாது. அன்று ஜஸ்டிஸ் கட்சி இருந்த காலத்தில் யார் உதவியை நாடி நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டோம்? அப்பொழுதே நாங்கள் வெள்ளைக்காரரை எதிர்த்து சுதந்தரம் வாங்கி இருக்கிறோம். அதனால் வேறு யாரையும் நாங்கள் எதிர் பார்க்க வேண்டியதில்லை. காங்கிரஸிற்கு மக்களின் பலம் இருக்கிறது.

விலைவாசிகள் குறைந்திருப்பதைப்பற்றி சற்று முன்புதான் சொன்னேன். இதற்கு முன்னதாக படி ஒன்றே அரைக்கால் ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்தார்கள் என்று குறிப்பிட்டேன். நியாயவிலைக் கடைகள் வைத்த பிறகு படி ஒன்று 15 அணாவுக்கு விற்கப்பட்டது. அதனால்தான் வியாபாரிகளுக்கு, கொள்முதல் செய்தால் கோபம் வருகிறது, ஆத்திரம் வருகிறது. எப்படியாவது அதைக் கெடுக்கப் பார்க்கிறார்கள். தங்களுக்கு லாபம் வருவதைத்தான் பார்க்கிறார்கள். வியாபாரிகள் ஜனங்களுக்கா

அல்லது ஜனங்கள் வியாபாரத்திற்கா என்பதைப் பார்க்க வேண்டும். இதை வியாபாரிகளும் உணரவேண்டும். வியாபாரத்தைப் பெருக்குவதற்கும் லாபம் அடைவதற்கும்தான் வியாபாரிகள் இருக்கிறார்களா? இதை அவர்கள் உணரவேண்டும். ஜனங்கள் அதிருப்தி அடையக்கூடாது. வியாபாரத்தில் கொள்ளை லாபம் அடிக்க விடக்கூடாது. அதனால்தான் வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்வதாக ஆரம்பித்தோம். அதற்கு பலர் ஆட்சேபித்தார்கள். இனி நடைபெறவேண்டியதைப்பற்றி யோசிப்பதற்காகத்தான் எதிர் கட்சி அங்கத்தினர்களையும் கொண்ட ஒரு கட்சியை அமைத்து உணவு அட்வைசரி கமிட்டி என்று ஏற்படுத்தினோம். அவர்கள் சென்ற மாதம் 4-ம் தேதி கூடியபோது அவர்களுக்கு இருக்கக்கூடிய நிலைமை எடுத்துக்கூறப்பட்டது. அவர்களுடைய யோசனை கோரப்பட்டது. விலைவாசி நிலைமையை அவர்களுக்கு விளக்கினேன். இதைப்பற்றி யோசனை சொல்லுங்கள் என்றுகூட கேட்டோம். இது இக்கட்டான பிரச்னை, கொஞ்சம் அவகாசம் வேண்டும் என்று சொன்னார்கள். டிசம்பர் மாதம் 26-தேதி மறுபடியும் கூட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது என்ன முடிவாகிறதோ அதன்படி முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அந்த முடிவு வரப்போகும் அறுவடைக்குள் எடுக்க வேண்டியதாக இருக்கிறது. கால தாமதம் செய்வதற்கில்லை. மத்திய அரசாங்கத்தை நாட வேண்டியதைப்பற்றியும் கனம் கலியாணசுந்தரம் குறிப்பிட்டார். முப்பது ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்களை விட்டு விட்டு மற்றவர்களிடமிருந்து லெவி முறையில் கொள்முதல் செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டது.

SRI M. KALYANASUNDARAM : ப்ளானிங் போர்ட் கணக்குப்படி முப்பது ஏக்கராகும்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கணக்குப் பார்க்கும்போது கிடைக்கக்கூடியது மிகவும் குறைவாக இருக்கிறது. முப்பது ஏக்கர் என்று வைத்துக்கொண்டாலும் அதற்கு மேல் தஞ்சை ஜில்லாவில் லட்சத்து ஆயிரத்து அறுபத்தி எட்டு ஏக்கர்தான் இருக்கிறது. நியாய வாரப்படி நாற்பது வீதம் கிடைக்கும். குடியானவர்களிடம் லெவி வாங்குவது சரியல்ல. இப்பொழுது பார்த்தால் சராசரி உற்பத்தி எக்கருக்கு 20 மூட்டையாகிறது. இந்த இருபது மூட்டையில் எட்டு மூட்டை கிடைக்கும். நில சொந்தக்காரருக்கு எட்டு மூட்டை. ஆறு மூட்டை அதிகமாக இருக்கலாம். அந்த முறையில் லெவி முறைப்படி கொள்முதல் செய்தால் 29 ஆயிரம் டன் அரிசி வருகிறது. இது தஞ்சை ஜில்லாவில் மட்டும். மற்ற ஜில்லாக்களையும் சேர்த்துப் பார்த்தால் 36 ஆயிரம் டன் அரிசிதான் கிடைக்கும். அதில் நாங்கள் கவனம் செலுத்திக்கொண்டு தான் வருகிறோம். எந்த முறையைக் கடைப்பிடிப்பது என்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக மண்டலத்தைப்பற்றி சொன்னார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக்கழக தலைவர் குறிப்பிட்டார். நாம் மத்திய அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டவர்களாக இருக்கிறோம் என்று அவர்கள் அனுதாபப்படுகிறார்கள். இது ஒரு தனி அரசு



அல்ல, தனி சாவரினிட்டி அல்ல. தமிழ் நாடு என்பது இந்திய யூனியனில் ஒரு பகுதி, ஒரு ராஜ்யமாக இருக்கிறது. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு உணவு போவதாக இருந்தால் அதை நாம் தடை செய்ய முடியாது. இந்தியாவிலிருந்து வெளி நாட்டிற்குப் போவதாக இருந்தால் மத்திய அரசாங்கம் அதை அங்கீகரிக்க வேண்டும். ஆனால் இந்தியாவிற்குள்ளேயே எங்கே போக வேண்டுமானாலும் அது ஒழுங்காகப் போக வேண்டும். சாதாரணமாக அது இது வரையிலும் அப்படிப் போவது வழக்கமாக இருந்தது. பிறகு மத்திய அரசாங்கம் அதில் தலையிட வேண்டியதாக இருந்தது. இதற்கு முன் பம்பாய், கல்கத்தா, கேரளம் முதலிய இடங்களுக்கு சாதாரணமாகப் போகலாம் என்று இருந்தது. அதனால் விலைவாசிகள் அதிகமாகிக் கொண்டிருந்தால் மத்திய அரசாங்கம் தலையிட வேண்டியதாக இருந்தது. அப்படி தலையிட்டு உணவு சம்பந்தமாக தென் மண்டலம் என்று பிரித்து வைத்தார்கள். அதன் பிறகு தென் மண்டலத்திற்குள் தான் போகலாம். அந்தத் தென் மண்டலம் என்பதுதான் திராவிடஸ்தான்.

SRI C. N. ANNADURAI : தென் மண்டலத்தைப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லையே என்று சொன்னேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய அரசாங்கம் தலையிடாமல் இருந்தால் தென் மண்டலம் என்று இல்லாமல் இருந்தால் உணவுப் பொருள்கள் எங்கு வேண்டுமானாலும் போவதற்கு வசதி ஏற்பட்டுவிடும். அதன் பிறகு இங்கு பற்றாக்குறை ஏற்பட்டு விடும். கள்ளத்தனமாகப் போவதற்கும் வழி ஏற்பட்டுவிடும். பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதற்கு இப்படி தென் மண்டலத்தை அமைத்திருப்பது நன்மையை உத்தேசித்துதான். இதைத் தெண்மண்டலம் என்றுதான் போட்டார்கள். அப்படி இருக்க இதிலிருந்து நாம் மாத்திரம் எப்படி தனித்துக் போக முடியும்? இதற்குள்தான் தானியம் போக முடியுமே தவிர பஞ்சாபுக்குப் போக முடியாது.

SRI M. KALYANASUNDARAM : அப்படியானால் ஆந்திராவுக்கும் வடக்கே போகாமல் தடுக்க நடவடிக்கை ஜரூராக எடுக்கப்பட்டதா? ஏன் ஆந்திராவில் இருந்து நமக்கு வரவேண்டிய அரிசி வரவில்லை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆந்திராவில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்று நான் சொல்வதற்கில்லை. எனக்கு அது பற்றி ஏதாவது குறை இருந்தாலும் இங்கே நான் அதைத் தெரிவிப்பதும் லாயக்கில்லை. நமக்குத் தெரியாமல் எவ்வளவோ திருட்டுத்தனம் நடக்கலாம். ஆனால் உத்திரவைப் பொறுத்த வரையில் ஆந்திராவுக்கு அப்பாலே போகக்கூடாது என்று தான் இருக்கிறது. அதனால் ஓரளவு பலன் இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே நான் சொல்லிக் கொள்கிறேன்.

இதற்கு அப்புறம் பார்த்தால் நாம் கொள்முதல் செய்ய வேண்டிய நிமித்தம் ஏற்பட்டது. கொள்முதல் செய்யும்போது வியாபாரியாக இருந்தாலும், சாகுபடி செய்கிற விவசாயியாக இருந்தாலும் கண்டிரோல் என்று கொண்டுவந்து விட்டால் அது

கஷ்டம்தான். அதைச் செய்ய யாரும் விரும்ப மாட்டார்கள். அரசாங்கம் கூடியவரையில் அதைத் தவிர்க்க நினைத்தது. வேறு மாற்று முறையை எப்படிக் கையாளலாம் என்றும் யோசித்தோம். கனம் அங்கத்தினர்கள் ஸ்டேட் டிரேடிங்கைப் பற்றிச் சொன்னார்கள். அதை வைத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் நினைக்கவில்லை. ஆனால் என்ன வழி? ஓரளவு அதுவும் கண்டிரோல் மாதிரி தான். எந்த அளவுக்கு ஸ்டேட் டிரேடிங்கை வைத்துக் கொள்ள வேண்டுமோ அதைத்தான் வைக்கவேண்டும். முழு கண்டிரோல் முறையில் அதை வைக்க வேண்டுமென்றால் அரசியல் அமைப்புச் சட்டத்தை யொட்டியும், விவகாரத்தை ஒட்டியும் அப்படிச் செய்ய முடியாது. ஆகவேதான் இப்போது அதிகமாகக் கொள்முதல் செய்ய முடியவில்லை. அதைத்தான் நான் உணர்கிறேன். இதிலே போட்டி இருக்கிறது. கேரள ராஜ்யம் என்றால் அங்கே உணவு டெபிசிட்டாக இருக்கிறது. அங்கே வியாபாரம் செய்தால் அதிக விலைக்கு விற்கலாம், லாபம் கிடைக்கும் என்று பலர் நினைக்கிறார்கள். அந்த வியாபாரிகளும் நம்மோடு போட்டி போடுவதால் நாம் கொள்முதல் செய்கிற வேலை பாதிக்கப்படுகிறது. இதைத் தனி மண்டலம் ஆக்கிவிட்டால் நமக்கு தான்யம் மிச்சம் இருக்கும். அந்த மிச்சத்தை கண்டிரோல் ப்ரைசுக்கே அவர்களுக்குக் கொடுப்பதாக நான் சொன்னேன். ஆனால் ஏன் அதற்கு அவர்கள் இணங்கவில்லையென்றால் நான் எப்படிச் சொல்வது? தென் மண்டலம் என்றால் அதில் நாம் மாத்திரம் இல்லை. நான்கு ராஜ்யங்கள் சேர்ந்து இருக்கின்றன. நான் சொன்ன யோசனையை ஆந்திர ராஜ்யமும் ஒப்புக்கொண்டது. ஆக இரண்டு ராஜ்யங்கள் இந்த யோசனையைச் சொல்லிற்று. இதைக் கேரள ராஜ்யமும், மைசூர் ராஜ்யமும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆக ஆதரவு இரண்டு, எதிர்ப்பு இரண்டு. நான்கு ராஜ்யங்களும் ஏகமனதாக தென் மண்டலம் வேண்டாம் எனச் சொல்லியிருந்தால், மத்திய சர்க்கார் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களை நாம் குறை சொல்லலாம். அப்போது அது மத்திய அரசாங்கத்தின் தவறு. ஆனால் தென்மண்டலத்தில் உள்ள இரண்டு ராஜ்யம் வேண்டாம் என்கிற போது வேறு இரண்டு ராஜ்யங்கள் வேண்டும் என்கிறார்களே. நாம் தனி மண்டலமாக பிரித்துக்கொள்வதனால் நமக்குப் பொறுப்பு அதிகமாக இருக்கும். அப்போது நியாயவிலைக் கடைக்கு வேண்டிய தானியத்தை மாத்திரம் கொள்முதல் செய்வது போதாது. கேரளாவுக்கு நாம் கொடுப்பதாகச் சொன்ன 2 லட்சம் டன் தானியத்தையும் கொள்முதல் செய்ய வேண்டிய பொறுப்பு இருக்கும். இருந்தாலும் கூட பாதகம் இல்லை. நாம் தயாராக இருக்கிறோம் என்றுதான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் மற்ற இரண்டு ராஜ்யங்களும் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

கனம் அங்கத்தினர்கள் நேற்றும் முன் தினங்களும் குறிப்பிட்டதுபோல மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து அதிகமாகக் கேட்கிறார்கள். அந்த அளவுக்கு விலையேறுகிறது. அதற்கு மேல் அந்நிய நாட்டுச் செலாவணி அதிகமாக விரயம் ஆகிறது. பணம் போனாலும் பரவாயில்லை, இன்னும் கொஞ்சம் வெளி நாட்டிலிருந்துதான் உணவு தானியங்களை இறக்குமதி செய்யுங்கள் அப்போது விலை குறைந்துவிடும் என்று சொன்னார்கள். இறக்குமதியை எப்படி விரிவாக்குவது? நமக்கு மாத்திரம் தான் அதிகத் தேவையா?



எல்லா ராஜ்யங்களுக்கும் உணவு தேவைப்படுகிறது. அண்டை ராஜ்யங்கள் எப்படியாவது பட்டினி கிடக்கட்டும், மத்திய சர்க்காரிடம் இருந்து நாம் அதிகமான தானியத்தைப் பெறவேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். இதில் எந்த அரசாங்கமும் குறுக்கே நிற்கவில்லை. மத்திய அரசாங்கத்தைக் குற்றம் சாட்ட இடம் இல்லையென்று நான் சொல்கிறேன்.

இருந்தாலும் இனிமேற்கொண்டு இந்த மண்டலம் என்ன ஆகிறது மண்டலம் இப்படியே நீடிப்பதாய் இருந்தால் நியாய விலைக் கடைக்கு என்ன ஏற்பாடு செய்வது? மத்திய அரசாங்கம் நமக்குக் கொடுக்கக்கூடியது எவ்வளவு? நாம் எப்படி கொள்முதல் செய்வது? அவர்கள் கொடுப்பார்கள் என்று எண்ணி கொள்முதல் செய்யாதுவிடுவதா? இவற்றையெல்லாம் நன்றாக யோசித்துப் பார்க்கத்தான் வேண்டும்.

உணவு தானியங்களுக்கு விலை நிர்ணயம் செய்யவேண்டும். அப்படி விலை நிர்ணயம் செய்வதனாலும் சில சங்கடம் உண்டாகிறது. நாம் கொள்முதல் செய்கிறபோது மாத்திரம் விலை நிர்ணயித்துவிட்டு, மற்றவற்றை என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளட்டும் என்று விடுவதா? அப்படிச் செய்தால் குறைந்த விலைக்கு இங்கே கொடுக்கமாட்டார்கள். நம் கொள்முதல் பாதிக்கப்படுகிறது. அவர்களும் குற்றம் செய்கிறவர்கள் ஆகிறார்கள். இவற்றையெல்லாம் கவனித்துப் பார்க்கிறபோது பொதுவாக ப்ரைஸ் கண்டிரோல் இல்லாமல் எல்லாப் பொருள்களும் இருக்கிறபோது இதற்கு மாத்திரம் விலை நிர்ணயிப்பது சட்டப்படி சரியா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டியதும் அவசியமாகிறது. அதையும் பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறோம். ஆகவே இது எல்லாம் நீண்ட கால நடவடிக்கைகள் அல்ல. நம்முடைய முதல் திட்டம் உற்பத்தியைப் பெருக்குவது தான். அதற்கு என்ன வழி, இருக்கக்கூடிய கஷ்டங்கள் என்ன, அவற்றையெல்லாம் எப்படிப் போக்கலாம், என்ன காரியங்களை உடனடியாக உற்பத்தியைப் பெருக்கும் வகையில் செய்ய முடியும் என்பதைப்பற்றித்தான் நான் யோசிக்கிறேன். அதற்காகத்தான் சட்டமன்றப் பிரதிநிதிகள், அதிகாரிகள் இவர்களை எல்லாம் கலந்து ஆலோசனை செய்துகொண்டிருக்கிறேன். இப்போது அநேகமாக இரண்டு மூன்று மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களோடு எல்லாம் பேசியாகிவிட்டது.

உரத்தைப் பற்றிச் சொன்னார்கள். உரம் நம்முடைய நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது என்றாலும் இது போதாது. தேவைக்குப் போதவில்லையென்றால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யத்தான் வேண்டியிருக்கிறது. அப்படி இறக்குமதி செய்கிறபோதும் இந்திய சர்க்கார் நம்முடைய பொருளாதார நிலைமையும் கவனிக்கவேண்டியிருக்கிறது. இன்றையதினம் அவர்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் நல்லமுறையில் எடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். அதிக விலைக்கு வெளிநாடுகளில் இருந்து உரத்தை இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு— எப்படியாவது உற்பத்தியைப் பெருக்கினால் சரி—என்றுதான் விநியோகமும் செய்துகொண்டிருக்கிறார்கள். நாமும் நம்முடைய

ராஜ்யத்திற்கு எவ்வளவு தேவையோ அதைப் பெறுவதற்கு முயற்சி செய்துகொண்டுதான் இருக்கிறோம். அதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறேன். அதேமாதிரியாகவே கனரகத் தொழில்கள், பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் இங்கே ஏற்படவேண்டும், மத்திய சர்க்கார் நம்மைப் புறக்கணிக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படியெல்லாம் சொல்லிவிடுவது சுலபம். நெய்வேலியில் கனரகத் தொழிற்சாலையை அமைப்பதற்கு வேண்டிய காரியங்கள் எல்லாம்தான் நடந்துகொண்டிருக்கின்றன. நம் ராஜ்யத்திலும் பெரிய தொழில்கள் வருகின்றன. அவர்கள் அதற்காக ஏராளமான பணத்தைச் செலவிடுகிறார்கள். லாபத்தில் நமக்கும் பங்கு உண்டு. இதில் என்ன தவறு? அதே மாதிரிதான் உருக்குத் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை எல்லாம் இங்கே ஏற்படுத்துவதற்கு வேண்டிய காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. நாங்கள் ஒன்றும் இதைப்பற்றி கவனிக்காமல் இருந்துவிடவில்லை. தமிழ்நாடு வளம் உள்ளதாக ஆகவேண்டும் என்பதற்காக எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். இன்று காலையில் கேள்வி நேரத்தின்போதுகூட ஒரு கேள்விக்கு விடை சொன்னேன். மிக நுட்பமான, நுண்ணிய தொழில் திறனை எல்லாம் கற்று வருவதற்கு நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று தொழில் இலாகா டைரெக்டர் தலைமையில் வெளிநாடு சென்றிருக்கிறது என்று சொன்னேன்.

12 noon குந்தாத் திட்டத்திற்கு கானடாவின் உதவி கிடைக்கிறது. அந்த உதவியை வைத்துக்கொண்டு குந்தாத் திட்டத்தை நடத்துகிறோம். ஜர்மனியிலிருந்து உதவி கிடைக்கிறது, அதையும் பயன்படுத்திக் கொள்கிறோம. மத்திய அரசாங்கத்தின் உதவியை நாம் பரிபூர்ணமாக பெற்று வருகிறோம். உச்சவரம்பு பொறுத்தமட்டில் சட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. அநேகமாக உருவாக்கப்பட்டு விட்டதென்று சொன்னேன். இதன் நோக்கம் என்னவென்றால், நிலத்திலுள்ள உற்பத்தியைப் பெருக்குவதுதான் இதன் நோக்கம். ஏராளமான நிலத்தை ஒருவன் வைத்திருந்தால் எப்படி அவனுக்கு அதில் அக்கறையிருக்கும்? அதுதான் அடிப்படை. மாஜி சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி அவர்கள் நேற்றையதினம் தெரிவித்தார்கள். அதற்கு பாகவதத்திலிருந்துகூட ஒரு ஸ்லோகம் சொன்னார்கள். உணவை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். அதை ரெகுலேட் செய்யலாம். அரசியல் அமைப்புச் சட்டப்படி நிலத்திற்கு உச்சவரம்பு கட்டலாம். எவ்வளவு, எப்படிச் செய்ய வேண்டும் என்பதெல்லாம் வேறு விஷயம். உச்சவரம்பு கட்டும் ஒரு சட்டம் காண்ஸ்டிட்யூஷனுக்கு உட்பட்டதே என்றும், அதில் தவறு ஒன்றும் இல்லையென்றும் மாஜி சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி அவர்கள் சொன்னார்கள். நல்ல உத்தேசத்தில், இது எல்லோருக்கும் நல்ல பலனைத் தரும் என்ற நோக்கத்தோடுதான் செய்கிறோம். கவர்னர் உரை சுருக்கமாகத்தான் இருக்கும். சென்ற ஆண்டு நடந்த நடவடிக்கைகள் பற்றி சுருக்கமாக விமர்சனம் செய்துவிட்டு இந்த மன்றத்தில் வரவிருக்கும் சட்டங்கள், இதுதான் இருப்பது வழக்கம். பிரிட்டிஷ் பார்லிமென்டில் இதை





விடச் சுருக்கமாகயிருக்கும், க்வீன்ஸ் அட்ரஸ். கவர்னர் எதை எதைச் சொல்லவில்லையோ அவைகளை விட்டு விட்டார்கள் என்று சொல்வது கவர்னர் உரையின் தன்மையை உணராமல் சொல்வது தான். திரு. கருணாநிதி அவர்கள் சுயமரியாதைக் கல்யாணம் பற்றி உரையில் ஒன்றுமே சொல்லவில்லையே என்றார்கள். அதற்கு ஒரு சட்டம் கொண்டுவருவது பற்றி சொல்லவில்லையே என்றார்கள். சுயமரியாதைக் கல்யாணங்களை செல்லுபடியாக்க சட்டம் ஒன்று இயற்ற வேண்டுமென்று பலர் அபிப்பிராயப் படுகிறார்கள், பலர் வற்புறுத்துகிறார்கள். நில உச்சவரம்பு பற்றி சட்டம் செய்து விட்டோம், அவ்வளவு கஷ்டம் ஒன்றுமில்லை. சட்டம் உருவாகி விட்டது. ஆனால் சுயமரியாதைக் கல்யாணம் என்றால், எது சுயமரியாதைக் கல்யாணம் என்று தெரியவில்லை. சிலர் தாலி கட்டுகிறார்கள், சிலர் மாலை போடுகிறார்கள், சிலர் விளக்கு வைத்து செய்கிறார்கள், சிலர் விளக்கு வைக்காமல் செய்கிறார்கள், இப்படியெல்லாம் நடக்கிறது. எப்படி சுயமரியாதைக் கல்யாணத்தை "டிபைன்" செய்வது. "ப்ரிஸைஸ்ஸாக ஸ்டாட்யூட்டில் டிபைன்" செய்யவேண்டும். எப்படி வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளட்டும், யாரை வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளட்டும். ஆனால் அவைகளை ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் பதிவு செய்தால் போதும்.

**Sri M. KALYANASUNDARAM:** இனி நடக்கப்போகும் திருமணத்தைப் பற்றியல்ல சொல்வது. இப்பொழுது ரிஜிஸ்தர் செய்து கொள்ளலாம் ஸ்பெஷல் மாரியேஜஸ் ஆக்ட் படி. ஆனால் ஏற்கனவே நடந்த திருமணங்களை செல்லுபடியாக்க வேண்டும். அப்படி கல்யாணம் செய்துகொண்டவர்களில் சிலர் இறந்தே விட்டார்கள். அந்தத் திருமணம் செல்லுபடியாக்கப் படாததால் அவர்களின் வாரிசுகளுக்கு சொத்து பாத்தியதை இல்லாமல் போகிறது.

* **The Hon. Sri M. BHAKTAVATSALAM:** சுயமரியாதைக் கல்யாணத்தை எப்படி டிபைன் செய்வது என்பதில்தான் கஷ்டமிருக்கிறது. முன்பே கல்யாணம் செய்துகொண்டவர்கள் இப்பொழுது வேண்டுமானாலும் ரெஜிஸ்தர் செய்துகொள்ளலாம். இதை பரிசீலனை செய்து பார்த்தோம். வேண்டாமென்றில்லை. அடுத்தபடியாக கெஸட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களின் நிலையைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே என்று சொல்லப்பட்டது. எல்லோருக்கும் அவர்கள் பேரில் அக்கறையிருக்கிறது. அரசாங்க நிர்வாகத்திற்கே அவர்கள் தூண்கள் அல்லவா? அவர்களின் காரியத்தைப் பற்றி ஒன்றுமே கவர்னர் சொல்லவில்லையே என்றால் அவர்களுக்காக ஒரு பே கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இன்று காலையில்கூட அதுபற்றி கேள்வி ஒன்றுக்கு நிதியமைச்சர் அவர்கள் விடை அளித்தார்கள். அவர்களின் ரிப்போர்ட்டை நாங்கள் சீக்கிரத்தில் எதிர்பார்க்கிறோம் என்றார்கள். அது வந்ததும் அதை எடுத்துக்கொண்டு அநேகமாக வருகிற வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கிறபோது ஒருக்கால் இதுபற்றி தெரிவிக்கப்படலாம். பே கமிஷன் பரிசீலனை செய்து வருகிறார்கள். எந்தளவிற்கு பரிகாரம் அளிக்கப்படுமோ அந்த அளவிற்கு

